ஆணையர்
ஆவணக்காப்பகம் மற்றும்
வரலாற்று ஆராய்ச்சி
11 APR 19
தமிழ்நாடு ஆவணக்காப்பகம்
எழும்பூர் சென்னை-8.
2442/25/1/85
2768

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

# தமிழ் நாடு
# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்

# TAMIL NADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES

## பணித்துறை வெளியீடு—OFFICIAL REPORT

திங்கட்கிழமை, மார்ச் 12, 1984—தொகுதி LX எண் 3

Monday, 12th March 1984—Volume LX No. 3

சட்டமன்றப் பேரவைச் செயலகம், சென்னை-600 009

**Legislative Assembly Secretariat, Fort St. George**
**Madras-600 009**

விலை ரூ. 3-50 காசுகள்] [Price Rs. 3-50 Paise

T. N. L. A. Debates

OFFICIAL REPORT

VOL: LX NO: 3 and 4, 5

March 12 and 13 and 14

1984

V211, 31 N84

N84.60.3-5

136229

தமிழ்நாடு ஆவணக்காப்பக நூலகம்
136229
சென்னை-600 008

# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

## 1984 மார்ச் 12, திங்கட்கிழமை

## மாசி 29, ருத்ரோத்காரி திருவள்ளுவர் ஆண்டு 2015

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9.00 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. க. இராசாராம் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :**

''வகையறிந்து வல்லவை வாய்சோரார் சொல்லின்
தொகையறிந்த தூய்மை யவர்''.

சொற்களைத் தொகுத்து உரைக்கும் முறையினை அறிந்த தூய்மை உள்ளம் வாய்ந்தவர்கள், அவையோரின் இயல்புகளை முதலில் நன்கு அறிந்து கொள்ளுவர். அவையில் பேசும்போது வலியுறுத்திப் பேச வேண்டியவற்றை, அச்சம் காரணமாக வாய் தவறிப் பிழை உண்டாகுமாறு அவர்கள் பேச மாட்டார்கள்.

### 1, வினாக்கள் விடைகள்.

### உடுக்குறியிட்ட வினாக்கள்.

**நீதித்துறையில் அனைத்திந்திய ஊழியம் ஏற்படுத்தும் திட்டம்.**

265 (* வினா எண். 16214) திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம் : மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நீதித் துறையில் அகில இந்திய சர்வீஸ் ஒன்று ஏற்படுத்த வேண்டுமென்று மத்திய அரசு மாநில அரசை வற்புறுத்தியுள்ளதா ?

(ஆ) ஆம் எனில் இது பற்றிய விவரம் என்ன ?

(இ) தமிழக அரசின் நிலை என்ன ?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :**

(அ) மற்றும் (ஆ) : அனைத்திந்திய நீதித் துறை உருவாக்குவது பற்றியும் அதன் மீது மாநில அரசின் கருத்தை அனுப்புமாறு மத்திய அரசு கோரியிருந்தது.

(இ) அனைத்திந்திய நீதித் துறை அமைப்பதை மாநில அரசு கொள்கையளவில் ஏற்றுக் கொள்ளவில்லையென்று முடிவெடுக்கப்பட்டு, மத்திய அரசிற்குத் தெரிவிக்கப்பட்

## உள்ளடக்கம்.

12—3—1984


| | பக்கங்கள். |
|---|---|
| 1. வினாக்கள்—விடைகள்— | |
| உடுக்குறியிட்ட வினாக்கள் .. .. | 245—271 |
| 2. தகவல் கோரல்— | |
| (அ) ஓர் உறுப்பினரின் மாமனார் மோசடி செய்துள்ளதாகப் பத்திரிகையில் வந்துள்ள செய்தி .. .. .. .. | 271—272 |
| (ஆ) கருநாடக மாநிலம், பெங்களூரில் நிலவும் கலவரத் தன்மை .. .. . | 272—274 |
| 3. ஒத்திவைப்புத் தீர்மானம்— | |
| ஸ்ரீலங்கா கடற் படையினர் இராமேசுவரம் பகுதி மீனவர் சில்லரை அவர்களது விசைப் படகுடன் கைது செய்துள்ளது .. | 274—281 |
| 4. கவன ஈர்ப்பு— | |
| சலவைத் தொழிலாளர்களுக்கென திருவண்ணாமலையில் ஒதுக்கப் பெற்ற இடங்கள் ஆக்கிரமிக்கப் பெறுவது .. .. | 281—284 |
| 5. அரசினர் சட்ட முன்வடிவு— | |
| மதுவிலக்கு (திருத்த) சட்டமுன்வடிவு, 1984 | 284 |
| 6. வரவு - செலவுத் திட்டம் 1984-85 பொது விவாதம்—தொடர்ச்சி. | 284—318, 325—360 |
| திரு. ப. பொன்னுரங்கம் .. .. | 284—294 |
| திரு. செ. செம்மலை .. .. .. | 294—301 |
| திரு. ரா. உமாநாத் .. .. . | 301—317 |
| திரு. குமரி அனந்தன் .. .. . | 325—338 |
| திரு. பொ. உத்திராபதி . | 339—346 |
| திரு. எம். எஸ். மாணிக்கம் .. .. | 346—352 |
| திரு. க. பாரமலை .. .. .. | 352—357 |
| திரு. கெ. சொக்கலிங்கம் .. . | 357—360 |
| 7 அறிக்கை அளித்தல்— | |
| விதி 106-ன் கீழ் வெள்ள-பாதிப்பு-நிவாரண அறிக்கை .. .. .. | 319—375 |
| 8. பேரவை முன் வைக்கப்பெற்ற ஏடுகள் .. | 360 |


D 2 A 337—1

**திரு. என். வரதராஜன் :** பேரவைத் தலைவர் அவர்களே,
நம்மைப் பொறுத்த வரையிலும் பிராந்திய மொழிகளை மைய
மாகக் கொண்டு, மக்களுடைய உணர்வுகளைப் புரிந்து கொண்டு,
சட்டங்களை, நீதிகளை அமுல் நடத்த வேண்டிய மிகப் பெரிய
பொறுப்பிலே இன்றைய நீதி மன்றங்கள் இருக்கின்றன. ஆகவே,
ஏற்கனவே தமிழக அரசால் தமிழகத்தினுடைய உயர் நீதி
மன்றத்திலே தமிழ் தெரிந்த ஒருவர்தான் நீதிபதியாக இருக்க
வேண்டுமென்று இந்த அவையிலே அறிவிக்கப்பட்டதே, அது
சம்பந்தமாக மத்திய அரசுக்குக் கடிதங்கள் எழுதப்பட்டனவா?
அது பற்றி மத்திய அரசிடமிருந்து என்ன பதில் கிடைத்தது?
அது பற்றி மேலும் எடுக்க இருக்கும் நடவடிக்கைகள் என்ன
என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** மத்திய சட்டத்
துறை அனைத்திந்திய நீதித் துறை அமைப்பு ஒன்றினை உரு
வாக்குவது பற்றி மாநில அரசின் கருத்துக்களையும் கேட்டார்
கள், இங்குள்ள உயர் நீதிமன்றத்தின் கருத்துக்களையும் கேட்
டார்கள். இங்கே இருக்கிற உயர் நீதிமன்றமும் மாநில அரசும்
அந்தக் கருத்து ஏற்றுக் கொள்ளப்படுவதற்கில்லையென்று—இரு
சாராரும்—வலியுறுத்தி இருக்கின்றோம். பல காரணங்களை
உயர் நீதிமன்றமும் மாநில அரசும் தெரிவித்து இருக்கிறது என்
றாலும் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டது போன்று
மிக முக்கியமான ஒன்று, இந்த மாநில ஆட்சி மொழியைப்
பற்றியதாகும். அதனைப் பற்றி உயர் நீதிமன்றம் தந்திருக்கிற
குறிப்புகளில் தமிழ் நாட்டில் வட்டார மொழி நீதிமன்ற மொழி
யாகச் செயல் பட்டு வருகிறது; மாநிலத்தினுடைய நீதித்
துறை அலுவலர்கள் வட்டார மொழியில் முழுமையான
தேர்ச்சி பெற்றிருக்கிறார்கள். மேலும் அவர்கள் வட்டார
மொழியில் வாக்கு மூலங்களைப் பதிவு செய்வதிலும், சம்பந்தப்
பட்ட ஆவணங்களை மதிப்பிடுவதிலும் தீர்ப்புகளை எழுதுவதி
லும் எவ்வித இடர்ப்பாடும் இல்லை. ஆனால், அனைத்திந்திய
நீதித் துறை உருவாக்கப்பட்டால் அலுவலர்களுக்கு மேற் குறிப்
பிட்டிருக்கிற அனுகூலம் கிடைக்காது என்பதைத் திட்டவட்ட
மான அளவுக்கு உயர் நீதிமன்றம் எழுதி இருக்கிறது. அது
போன்று மாநில அரசின் சார்பாக எழுதப்பட்டிருக்கிற குறிப்பு
களிலே தமிழ் மொழி நீதிமன்ற மொழியாக ஆக்கப்பட்டிருப்பதை
அமுல் படுத்த இயலாமல் போய்விடும் இந்த மத்திய அமைப்பு
ஏற்படுத்தப்பட்டால். ஆகவே, மாநில மொழியே நீதிமன்ற
மொழியாக ஆக்கப்பட்டிருப்பதன் காரணமாக, இந்தத் தமிழ்
மொழியை ஆட்சி மொழியாகக் கொண்டு இருக்கும்போது
நீதி மன்றத்திலும் ஆட்சி மொழியாக வைப்பதற்கு இந்த முறை
இடையூறாக இருக்கும். ஆகவே, ஏற்றுக் கொள்வதற்கில்லை
என்பதைத் திட்டவட்டமாக நாம் தெரிவித்து இருக்கிறோம்.

**திரு. ரா. உமாநாத் :** மாண்புமிகு தலைவர் அவர்களே,
பல்வேறு துறைகளில் இந்த மாதிரி ஆல் இந்தியா சர்வீஸ்
(All India Service) என்று ஆக்குவதிலே மத்திய அரசு





முயற்சித்துக்கொண்டு இருப்பது நமக்குத் தெரியும். ஆனாலும்
அதை நாம் ஏற்றுக்கொள்வது இல்லை. இந்த நீதித்துறையை
ஆல் இந்தியா சர்வீசாக ஆக்குவதற்கு மத்திய அரசு நம்முடைய
மாநில அரசை கன்சல்ட் செய்கிறபோது, அந்த அமைப்பை
ஆக்குவதற்காக அவர்கள் கொடுத்து இருக்கும் காரணங்கள்
என்ன என்பதை அறிவிக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள்
முன்வருவார்களா ?

(முற்பகல் 9-10)

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** மாண்புமிகு
பேரவைத் தலைவர் அவர்களே, அவர்கள் நம் கருத்தைத்தான்
கேட்டு இருக்கிறார்கள். அவர்கள் இன்னும் காரணங்களைச்
சொல்லவில்லை. நாம் தான் பல்வேறு காரணங்களையும் அவர்
களுக்கு எடுத்துத் தெரிவித்து இருக்கிறோம். இதிலே முதலிலே
நான் குறிப்பிட்டதைப்போல, உயர்நீதிமன்ற நீதிபதிகளைப்
பொறுத்த வரையில் தமிழ் அறியாத நீதிபதிகளைக் கூட
சென்னை நீதிமன்றத்திற்கு மாற்றம் செய்வதைக் கூட இந்த
அரசு ஒப்புக்கொள்வதற்கு இல்லை என்று சொல்லியிருக்கிறோம்.
அந்த முறையைக்கொண்டு வந்தால் சில இடர்ப்பாடுகள் ஏற்படும்
என்றும் சொல்லியிருக்கிறோம். நம்முடைய மாநிலத்தில் அரசுப்
பதவிகளில் 50 சதவீதம் பிற்பட்ட வகுப்பினருக்கும், 18 சதவீதம்
தாழ்த்தப்பட்ட, பழங்குடியினருக்கும் என்பதை நடைமுறைப்
படுத்தி கடைப்பிடித்து வருகிறோம். அகில இந்திய ஏற்பாடு
வருகிறபோது இந்த முறைகள் சீர்கெட்டுப்போய்விடும். ஆகவே,
தமிழக அரசு சமுதாய நீதி வழங்கும் தன்மை கெட்டுவிடும்
என்ற காரணத்தையும் எடுத்துச் சொல்லியிருக்கிறோம். அது
மட்டுமல்லாமல், அரசியல் சட்டத்தின் பிரிவு 234-ல் குறிப்பிட்
டுள்ளதுபோல் மாவட்ட நீதிபதிகளை உயர்நீதிமன்றத்தின்
ஆலோசனையைக் கலந்து, மாநில அரசு நியமனம் செய்ய வேண்டு
மென்று அந்த அதிகாரமும் இதன் மூலம் பறிக்கப்படுகிறது.
ஏற்கனவே தரப்பட்டு இருக்கிற அந்த அதிகாரம் பறிக்கப்படும்
நிலை வருகிறது. இதையெல்லாம் சுட்டிக்காட்டி, இதை ஏற்றுக்
கொள்வதற்கு இல்லை என்று தமிழக அரசு திட்டவட்டமாகத்
தெரிவித்து இருக்கிறது.

**திரு. மி. வின்சென்ட் :** தலைவர் அவர்களே, நீதித்துறை
நிர்வாகத்தில் தலையிடும்போது, உரிமை என்ற ஒன்றை மட்டும்
கணக்கில் எடுக்காது சமுதாயத்திற்கு நல்லதா கெட்டதா என்
பதைப் பார்த்து தீர்ப்பளிக்க வேண்டும் என்ற அறிவுரை வழங்க
மத்திய அரசை மாநில அரசு வற்புறுத்துமா ?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** மாண்புமிகு
தலைவர் அவர்களே, இது எடுத்துக்கொண்டு இருக்கும் பிரச்
சினைக்கும், அவர்கள் கூறுகின்ற யோசனைக்கும் பொருத்தமாக
இல்லை. ஜனநாயக அமைப்பின்படி, அரசியல் அமைப்புச்
சட்டத்தின் படி, சட்டங்கள் நிறைவேற்றுவது சட்டமன்றம்.
சட்டமன்றம் அந்தத் தனி உரிமையைப் பெற்ற ஒன்றாகும்.
நிர்வாகத் துறை தனியாகவும், நீதித்துறை தனியாகவும் இயங்கு

கிறது. நீதிமன்றத் துறையில் தலையிடுகின்ற எத்தகைய தன்மை
யும் இருக்கக் கூடாது என்பதுதான் இன்றைக்கு இருக்கும் அரசியல்
சட்டத்தின் நோக்கமாகும். அதைப்போன்றே சட்டமன்றத்தின்
உரிமைகளில் நீதிமன்றமும் தலையிடக் கூடாது. அது காப்பாற்றப்
படவேண்டும் என்ற முறையில் பல்வேறு முறைகளில் இந்த
அவையின் மூலம் நாம் அதைத் தெரிவித்து இருக்கிறோம்.

திரு. அ. வெள்ளைச்சாமி : தலைவர் அவர்களே, நீதித்
துறையில் அகில இந்திய சர்வீஸ் ஏற்படுத்துவதற்கு மத்திய அரசு
கூறும் காரணங்கள் என்ன ? ஆல் இந்தியா சர்வீஸ் என்று
கொண்டு வருவதன் மூலம் இந்தியைப் புகுத்தவேண்டும் என்ற
அடிப்படை நோக்கம் உண்டா என்பதை மாநில அரசு உணரு
கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு
பேரவைத் தலைவர் அவர்களே, நான் முதலிலேயே தெரிவித்
தேன். அதற்கான காரணங்களை அவர்கள் குறிப்பிட்டுக் கேட்க
வில்லை. ஆல் இந்தியா அமைப்பாக அதை ஆக்குவதற்கு மத்திய
அரசு, மாநில அரசு மற்றும் உயர்நீதிமன்றத்தின் கருத்துக்களைக்
கேட்டு இருக்கிறார்கள். ஐ.ஏ.எஸ். என்ற அமைப்பின் கீழ்
அகில இந்திய முறையில் தேர்ந்தெடுக்கப்பட்டு, பிற மாநிலத்
தவர்கள் இங்கே வருவதும், நம்முடைய மாநிலத்தில் இருந்து
தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் அங்கே போவதும் என்பது
தற்போது இருக்கிறது. அம்மாதிரி இருப்பதால் நடைமுறை
யில் பல்வேறு இடைப்பாடுகளை நாம் காண்கிறோம். எவ்வளவுக்
கெவ்வளவு அதிகமான துறைகளில் ஆல் இந்தியா சர்வீஸ்
கொண்டு வர முடியும் என்பதை மத்திய அரசு முயற்சித்துக்
கொண்டு இருக்கிறது. இருப்பினும் அப்படிப்பட்ட நேரங்களில்
எல்லாம் நாம் நம்முடைய கருத்தை வலியுறுத்திக் கொண்டு வரு
கிறோம். மாநிலங்கள் சுயாட்சி பெற வேண்டும், மாநிலங்கள்
அதிக அதிகாரங்கள் பெறவேண்டும் என்று வற்புறுத்தி வருகின்ற
நோக்கத்திற்கும் இது மாறுபாடாக இருக்கிற காரணத்தால்
ஒவ்வொரு கட்டத்திலும் இதற்கு இடம் அளிக்க நாம் தயாராக
இல்லை என்பதை அழுத்தம் திருத்தமாக வலியுறுத்தி வரு
கிறோம்.

**திரு. வி. க. நினைவு அஞ்சல் தலை வெளியிடுவதற்கான கோரிக்கை.**

266—(*வினா எண். 17215)—**திரு. து. புருஷோத்தமன் :**
மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்
பாரா—

திரு. வி. க. நூற்றாண்டை முன்னிட்டு திரு. வி. க. நினைவு
அஞ்சல் தலை வெளியிட மாநில அரசு, மத்திய அரசைக்
கேட்டுள்ளதா ?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** ஆம்.





**முன்னாள் இராணுவத்தினருக்கு வங்கிகளில் வேலைக்காகப் பயிற்சி அளிக்கும் திட்டம்.**

267—(*வினா எண். 20708) **திரு. சி. கணேசன் :** மாண்பு
மிகு நிதி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்
பாரா—

(அ) முன்னாள் ராணுவத்தினருக்கு பாங்க் வேலைக்காக
பயிற்சி அளிக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அந்த பயிற்சி முகாம்கள் எப்போது
செயல்படத் தொடங்கும் ?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** (அ) முன்னாள்
இராணுவத்தினருக்கு வங்கிகளில் வேலைக்காகப் பயிற்சி
அளிக்கும் திட்டம் தமிழ் நாட்டில் செயல் படுத்த
மத்திய அரசு இசைவளித்து, 1983 ஆம் ஆண்டில், மூன்றாம்
வகுப்புப் பணிகளுக்குப் பயிற்சி வகுப்புகள் நடத்தப்பட்டன.
1984 ஆம் ஆண்டிலும் இப்பயிற்சித் திட்டத்தினைச் செயல்படுத்து
வது குறித்த செயற்குறிப்பு மத்திய அரசின் பரிசீலனைக்கு
அனுப்பப்பட்டுள்ளது.

(ஆ) வங்கிப் பணித் தேர்வுக் குழுவினரால் மூன்றாம்
வகுப்புப் பணிகளுக்குக் காலியிடங்கள் குறித்து செய்தித்தாள்
களில் விளம்பரம் செய்யப்படுவதைப் பொறுத்துப் பயிற்சி வகுப்பு
கள் தொடங்கப்படும்.

**திரு. க. பரமலை :** மாண்புமிகு பேரவைத் தலைவர்
அவர்களே, அப்படி பயிற்சி கொடுக்கப்பட்டவர்களில் எத்தனை
பேர்கள் தேர்வு செய்யப்பட்டிருக்கிறார்கள்? இந்தத்
திட்டத்தை வெற்றிகரமாக நடத்துவதற்கு உரிய வழிவகைகள்
ஏதாவது இருக்கின்றதா ? இதில் அரசின் கருத்து என்ன
என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தலைவர்
அவர்களே, பயிற்சி பெற்றவர்களிலே எவ்வளவு பேர்கள் வேலை
வாய்ப்பு பெற்றிருக்கிறார்கள் என்ற விவரக் குறிப்புகள் இல்லை.
ஆனால் மத்திய அரசினால் தேர்வு செய்யப்பட்டு, பல்வேறு
தொழில் பிரிவுகளில், வங்கி முன்தேர்வு பயிற்சி வகுப்புகள்,
வங்கிப் பணிகளில் முன்னாள் படை வீரர்கள் தேர்வு பெற
உறுதுணையாக அமையும் என்ற கருத்தை வங்கிப் பணிகளிலே
மூன்றாம் வகுப்புப் பணிகளுக்கு, தேர்வு விண்ணப்பத்திலேயிருந்த,
60 முன்னாள் படை வீரர்களுக்குப் பயிற்சி அளிக்க வேண்டும்
என்பதற்காக, தமிழக அரசை மத்திய அரசு தேர்ந்தெடுத்து
தமிழகத்திலே அந்தப் பயிற்சியைத் தரலாம் என்று அவர்கள்
சொன்னார்கள். தமிழக அரசும் அதை ஏற்றுக்கொண்டு அந்தப்
பயிற்சிக்கு ஒப்புதல் அளித்தது. 1 மாதகாலத்திற்கு, வேலூர்,
திருச்சி போன்ற 2 மையங்களில் அந்தப் பயிற்சி வகுப்புகள்

நடத்தப்பட்டன. அவர்களுக்கு ஊக்கத் தொகையாக ரூபாய் 300-ம் வழங்கப்பட்டது. ஆக, இதிலே நல்லதொரு நிலைமை வரும் என்று அடுத்த ஆண்டும் இந்த முறையை நடைமுறைப் படுத்தலாம் என்றும், அதன் மூலமாக ஓரளவிற்கு முன்னாள் படை வீரர்களுக்கு வேலை வாய்ப்பு கிடைக்கக்கூடும் என்ற காரணத்தால் நாம் இந்தத் திட்டத்தை செயல்படுத்த முடியும் என்றும், அதற்கான விளம்பரங்கள் வருகின்றபோது நாம் மேற் கொண்டு 150 பேர்களுக்கு மொத்தத்திலே முன்னாள் ராணுவத் தினருக்கு இந்தப் பயிற்சி அளிக்கலாம் என்றும், அதற்காக 4, 5 மையங்களைத் தேர்ந்தெடுக்கலாம் என்றும் மத்திய அரசுக்குத் தெரிவித்திருக்கிறோம். மத்திய அரசினுடைய பதிலை நாம் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறோம்.

**திரு. செ. இராமலிங்கம்:** பேரவைத் தலைவர் அவர்களே; மாநில கூட்டுறவு வங்கி, மத்திய கூட்டுறவு வங்கி ஆகியவை களிலே பணியாளர்களைத் தேர்வு செய்யும்போது முன்னாள் ராணுவத்தினருக்கு ஏதேனும் ஒதுக்கீடு செய்யப்படுகிறதா? அப்படியானால் எத்தனை சதவீதம் ஒதுக்கீடு செய்யப்படுகிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதற்கான பர்சன்டேஜ் என்ற அளவில் ஒதுக்கீடு செய்யப்படவில்லை. முன்னாள் ராணுவத்தினர் கழகத்தின் சார்பாகவும், அரசின் சார்பாகவும், தனியார் துறைகளிலேயும் சரி, பொதுத்துறைகளிலேயும் சரி, அவற்றிலே அவர்களுக்கு முன்னுரிமை அளிக்கவேண்டும் என்ற அளவிற்கு ஒரு தாக்கீது அனுப்பப்பட்டு இருக்கிறது. அதற்குத் தகுதி படைத்தவர்கள், திறமை படைத்தவர்கள் என்று வருகின்றபோது, முன்னாள் ராணுவத்தினராக இருந்தால், அவர்களுக்கு முன்னுரிமை அளித்து எடுத்துக்கொள்ள வேண்டும் என்று வற்புறுத்தப்பட்டு வருகிறது.

**திரு. தி. கா. நல்லப்பன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த வங்கிகளிலே பயிற்சி அளிக்கின்ற திட்டத்திற்கு எவ்வளவு காலத்திற்கு முன்பாக ஓய்வு பெற்ற ராணுவத்தினரை அந்தப் பயிற்சிக்கு அழைக்கிறார்கள்? அதே சமயத்தில் படித் திருந்தவர்களையும் அந்தப் பயிற்சிக்கு அழைக்கிறார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** தலைவர் அவர்களே, அதுபற்றிய விவரக் குறிப்புகள் இல்லை. கூடுமான வரையில் அதற்கேற்ற அளவிற்கு படிப்புத் தகுதிகள் இருக்க வேண்டும். வங்கிகளிலே வேலை பார்க்கின்ற மூன்றாம் தரத்தின ருக்கான பணிகளுக்காக பயிற்சி பெறுவதும், நான்காம் தரத்தின ருக்கான பணிகளுக்காகப் பயிற்சி பெறுவதற்கான அளவிலே அவைகள் இருக்கின்றபோது, அந்தப்பணிகளுக்காக என்ன கல்வித்



தகுதிகள் வகுக்கப்பட்டு இருக்கிறதோ, அந்தத் தகுதி பெற்றவர் கள் எல்லாம் அதிலே ஈடுபடலாம் என்ற வகையில்தான் இருக்கிறது. வயது பற்றிய குறிப்பீடுகள் இல்லை. ஆகவே அநேக ராணுவத்தினர் 35, 40 வயதிற்குள்ளே ஓய்வு பெற்று விடுகிறார்கள். அப்படியானால் இதிலே சேருவதற்கு நல்ல வாய்ப்புகள் இருக்கின்றன.

**ஆறாவது திட்டத்தின்கீழ் மாநில அரசுக்கு மத்திய அரசு வழங்கும் நிதி.**

266—(*வினா எண். 20819)—திரு. பெ. சு. திருவேங்கடம்; மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை யளிப்பாரா—

*(அ) பண வீக்கத்தினால் ஆறாவது திட்டத்திற்குரிய நிதி வசதிகள் பாதிக்கப்பட்டுள்ளதால் இதைப் போக்க மாநில அரசுக்கு மத்திய அரசு நிதியை உயர்த்தித் தருகிறதா?*

*(ஆ) ஆம் எனில் அதன் விவரமென்ன?*

*(இ) தமிழ் நாடு பெறும் நிதி உதவி எவ்வளவு?*

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** (அ) இல்லை.

(ஆ) எழவில்லை.

(இ) எழவில்லை.

**திரு. பெ. சு. திருவேங்கடம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பணவீக்கத்தினால் ஆறாவது திட்டத்திற் குரிய நிதி வசதிகள் பாதிக்கப்பட்டு உள்ளதால், மாநில அரசி னுடைய பல்வேறு வளர்ச்சிப் பணிகள் செம்மையாக நடை பெறுவதற்கு மத்திய அரசு தடையாக இருப்பதாக இந்த அவையிலே பல நேரங்களில் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டுப் பேசியிருக்கிறார்கள். அதனால் இப்போது நம் முடைய நிதி அமைச்சர் அவர்கள் டெல்லி சென்றபோது மாநில அரசாங்கம் கோரிய அந்த நிதி ஒதுக்கீட்டினுடைய அனுமதி மத்திய அரசால் வழங்கப்பட்டு உள்ளதா என்பதை நா அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 9-20)

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** தலைவரவர் களே, இந்த ஐந்தாண்டுத் திட்டத்திற்கான நிதி ஒதுக்கீடு செய்வதைப் பொறுத்த வரையில் 1980-81 முதல் 1984-85ம் வரையில் உள்ள காலம் ஐந்தாண்டு முடிவடையும் காலமாகும்

நாம் திட்டமிடுகிற 1980–81ஆம் ஆண்டின்போதும் 1984–85 ஆம் ஆண்டின்போதும் ஏற்படுகின்ற நிலைமைகளைப் பார்த்தால், விலைவாசி ஏறும்போது நாம் போடுகின்ற திட்டச் செலவும் உயருகிறது என்பதால் போட்டத் திட்டத்தினுடைய அளவுகூடக் குறையும் என்று எடுத்துச் சொல்லியதுண்டு ; மத்திய அரசை நாம் வற்புறுத்தியது உண்டு. ஆறாவது ஐந்தாண்டுத் திட்டத்திற்கு நமக்கு ஒதுக்கிய நிதியின் அளவு 3,150 கோடி ரூபாயாகும். ஆறாவது ஐந்தாண்டுத் திட்ட மதிப்பீட்டில் மத்திய அரசினுடைய நிதி உதவி 664,80,00,000 ரூபாய் கிடைக்கும். நமக்கு இருக்கின்ற சங்கடங்களை எடுத்துச் சொல்லி, விலைவாசி ஏற்றத்தால் ஏற்படுகின்ற விளைவுகளை எடுத்துச் சொல்லி வற்புறுத்திய பிறகு 1983–84ஆம் ஆண்டில் இந்த 664,80,00,000 ரூபாயோடு கூடுதலாக 67,33,00,000 சேர்த்து தர மத்திய அரசு ஒப்புக்கொண்டது. ஜனவரியில் மீண்டும் இருக்கிற நிலைமைகளை எடுத்துச்சொல்லி மத்திய அரசை நிதி உதவியைக் கூட்ட வேண்டுமென்று கேட்ட பிறகு 53,08,00,000 ரூபாய் கூட்டித் தந்திருக்கிறார்கள். முதலில் 664,80,00,000 ரூபாய் மத்திய அரசு உதவி அளிக்கப்படும் என்று கூறியிருந்தாலும் இப்போது 785,21,00,000 ரூபாய் அவர்களுடைய பங்காக நமக்குக் கிடைக்கிறது. திட்ட மதிப்பீடு 3,150 கோடி ரூபாயாகும்.

திரு. பெ. சு. திருவேங்கடம் : தலைவரவர்களே, இப்போது 785 கோடி ரூபாய் மத்திய அரசு உதவியாகக் கிடைக்கிறது என்று இங்கே சொன்னார்கள். இந்த 785 கோடி ரூபாயில் மதிய உணவுத் திட்டத்திற்காக மத்திய அரசை வலியுறுத்திப் பெற்ற தொகை எவ்வளவு ? அதற்காக ஏதோ டோக்கன் அமவுண்ட் ஒதுக்கப்பட்டது என்றுகூட பத்திரிகையிலே பார்த்தோம். அவர்கள் ஒப்புக்கொண்ட தொகை எவ்வளவு ? ஒதுக்கீடு செய்த தொகை எவ்வளவு என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, முதலிலே இந்தத் திட்டத்திலே சேர்க்காமல் தனித் திட்டமாக வைத்திருந்தோம். தனியாக நிதி உதவி செய்ய வேண்டுமென்று மத்திய அரசைக் கேட்டோம். இதுபற்றி பிரதமர் இந்திராகாந்தி அம்மையார் அவர்களிடம் நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் எடுத்துச் சொன்னார்கள். நிதியமைச்சர் அவர்களிடமும் இதுபற்றி தனியாக எடுத்துச் சொன்னோம். திட்டத்தில் சேராத ஒரு இனமாக கருதி, ஒரு சமுதாய நலத் திட்டமாக இதைக் கருதி, இதற்கு தனியாக நிதி ஒதுக்க வேண்டுமென்று வற்புறுத்திச் சொன்னோம். பாராளுமன்றத்திலே தமிழகத்தைச் சேர்ந்த உறுப்பினர்கள் இதுபற்றி வற்புறுத்தியபோதுகூட நிதி அமைச்சர் பரிசீலிக்கலாம் என்று சொல்லியிருக்கிறார். அதன் பிறகு நிதி உதவி வரவில்லை. மீண்டும் நாம் வற்புறுத்திய பிறகு, புதிதாக இந்த



ஆண்டு எடுக்கிற திட்டத்தில், திட்டச் செலவில் சேர்க்காமல் சுமார் 40 கோடி ரூபாய் அளவுக்காவது தரவேண்டுமென்று கேட்டபிறகு அவர்கள் ஓரளவுக்கு ஒப்புக் கொண்டிருக்கிறார்கள்.

திரு. என். வரதராஜன் : தலைவரவர்களே, திட்டங்களின் மதிப்பீடுகள் சில சமயங்களில் மத்திய அரசினால் பெட்ரோலியம், நிலக்கரி போன்ற பொருள்களின் விலையை எதிர்பாராமல் திடீரென்று உயர்த்திவிடுவதினால் சீர்குலைகின்றன. ஆலைகளுக்குத் தேவைப்படுகின்ற இத்தகைய பொருள்கள், விவசாயத்திற்குத் தேவையான மூலப்பொருள்கள் போன்றவற்றின் விலையை ஏற்றும்போது மாநில அரசுகளைக் கலந்துகொள்ளாமலேயே உயர்த்துகிறார்களே, அப்படி மாநில அரசுகளைக் கலந்து சொள்ளாமல் உயர்த்தக் கூடாது என்று ஏற்கெனவே வற்புறுத்தியிருக்கிறீர்களா ? இல்லை என்றால் இனிமேலாவது வற்புறுத்துவீர்களா ? அதோடு விவசாய உற்பத்திக் காலத்தைக் கொண்டுதான்—மாநில அரசினுடைய பட்ஜெட்டை நிச்சயிக்க வேண்டியிருக்கிற காரணத்தால்—இப்போது நாம் ஏப்ரல் முதல் மார்ச் வரையுள்ள காலத்தை நிதி ஆண்டு என்று வைத்திருக்கிறோம் ; இடையிலே ஏற்படுகின்ற இயற்கை உற்பாதங்களைக் கருத்திற்கொண்டு, மாநில அரசினுடைய பட்ஜெட் பாதிக்கப்படுகின்ற காரணத்தால் பட்ஜெட் காலத்தை மாற்றியமைக்க மத்திய அரசை மாநில அரசு வற்புறுத்துமா என்று நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறுவது போன்று இப்படிப்பட்ட சங்கடங்கள் ஏற்படும் சூழ்நிலைகளை நிதியமைச்சர்கள் மாநாட்டிலும் தேசிய வளர்ச்சி மாநாட்டிலும், சொல்லிவருகிறோம். முதலமைச்சர்கள் எல்லாம் கலந்துகொண்டு பிரதமரைச் சந்திக்கின்றபோதும், அந்த மாநாட்டிலும் நாம் இதுபற்றி வற்புறுத்தி வந்திருக்கிறோம். ஏதாவது திட்டங்களைப் போட்டு நிறைவேற்றிக் கொண்டு வருகிறபோது, மாநில அரசைக் கலந்துகொள்ளாமல் மத்திய அரசு விலையேற்றம், வரிவிதிப்பு செய்கின்றபோது மாநிலங்களுக்கு பாதிப்பு ஏறபடுகிற காரணத்தால், மாநில அரசுகளால் அந்தப் பாதிப்பை சமாளிக்க முடியாமல் இருக்கிற காரணத்தால் இப்படிப்பட்ட காரியங்களை மாநில அரசுகளை கலந்துகொண்டு செய்ய வேண்டும், அப்படியானால் ஓரளவுக்கு சமாளிக்க முடியும் என்று தேசிய வளர்ச்சி மன்றக் கூட்டங்களிலே வற்புறுத்தி வந்திருக்கிறோம். இப்படி இருந்தாலும் கூட 3,150 கோடி ரூபாய் என்ற அளவில் நம்முடைய திட்ட மதிப்பீடு இருந்தாலும் 3,600 கோடி ரூபாய் அளவுக்கு திட்டத்தை நிறைவேற்ற இருக்கிறோம். இருந்தாலும் நான் ஏற்கெனவே சொல்லியமாதிரி நமக்குப் பாதிப்பு இருக்கிற காரணத்தால் இன்னும் ஓரளவுக்கு நிதி ஒதுக்கீட்டை உயர்த்த வேண்டியிருக்கிறது. அதை நாம் தொடர்ந்து வற்புறுத்தி வருகிற சூழ்நிலை இருக்கிறது.

[1984 மார்ச் 12

திரு. ஆ. வெள்ளைச்சாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பண வீக்கத்தின் காரணமாக இன்றைக்கு ஒரு ரூபாயினுடைய மதிப்பு என்ன என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேர்வைத் தலைவர் அவர்களே, மூலக் கேள்விக்கும் இதற்கும் தொடர்பு இல்லை. என்றாலும் 1960லே ஒரு ரூபாய் என்று கணக்கு வைத்தால், பத்திரிகையிலே வந்திருக்கிற செய்திப்படி, மத்திய அரசு வெளியிட்டிருக்கிற எக்கனாமிக் சர்வே என்ற அளவு படி, இன்றைக்கு ஒரு ரூபாய்க்கு 17 காசுதான் மதிப்பு உடையதாக இருக்கிறது.

திரு. என். ஏ. பூங்காவனம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் 6வது ஐந்தாண்டுத் திட்டத்தைப் பற்றியும், அதை ஒட்டி பண வீக்கம் சம்பந்தப் பட்ட புள்ளி விவரங்கள் பற்றியும் இங்கே தகவல்கள் கொடுத் திருக்கிறார்கள். நம்முடைய மாநில அரசு இரண்டாவது மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டங்களை உருவாக்குகிறபோது மற்ற எதிர்க்கட்சிகளைக் கலந்து உருவாக்கியிருக்கிறார்கள். ஆனால் இந்த அவையிலே கோருகிறோம், மைய அரசு திட்டங் களை உருவாக்குகிறபோது மாநில அரசுகளைக்கலந்திட வேண்டும் என்று, இந்தஆண்டு ஐந்தாண்டுத் திட்டம் உருவாக்குகிறபோது பிற எதிர்க்கட்சிகளைக் கலந்து ஆலோசிக்கவில்லையா அல்லது அதில் என்ன நிலைமை என்பதைப் பற்றி மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவிப்பாரா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அது பற்றிய குறிப்பு இல்லை. அது பற்றிய நிலைமையை ஆராய்ந்து பின்னர் தெரிவிக்கப்படும்.

**1977-1982 வரை மைய அரசுக்கு மாநில அரசு வழங்கியுள்ள நிலம்.**

269 (*வினா எண் 4956.)—*திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பி மணியன் : மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க் கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) 1977-1982ஆம் ஆண்டு வரை தமிழகத்தில் மைய அரசுக்கு மாநில அரசு எவ்வளவு நிலம் வழங்கியுள்ளது ?

(ஆ) அதற்கு மைய அரசு மாநில அரசுக்கு வழங்கிய தொகை எவ்வளவு ?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : (அ) 5683—62 ஏக்கர்.

(ஆ) ரூபாய் 4.19 கோடி.



1984 மார்ச் 12]

திரு. ஆர். மணிமாறன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிலக்கிரயம் வாங்காமல் மத்திய அரசுக்கு மாநில அரசால் வழங்கப்பட்ட நிலத்தினுடைய அளவு என்ன ? அந்த நிலத்தினுடைய மதிப்பீடு என்ன என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா ? அதேபோல நிலக் கிரயம் வாங்கிக் கொண்டு மாநில அரசினுடைய சார்பில் மைய அரசுக்கு வழங்கப்பட்டிருக்கக்கூடிய நிலத்தினுடைய அளவு என்ன என்பதையும் அறிந்து கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : பேரவைத் தலைவர் அவர்களே, 1977 ஆம் ஆண்டிலிருந்து 1982 ஆம் ஆண்டு முடிய நிலக் கிரயம் பெற்று மாறு செய்யப்பட்ட நிலத் தினுடைய மொத்த அளவு 3,890 ஏக்கர் நிலம். அதனுடைய மதிப்பு 1 கோடியே 40 லட்சத்து, 50 ஆயிரம் ரூபாய்.

சில இடங்களில் சகாய விலையில், சகாய விலை என்றால், கொஞ்சம் விலை வாங்கிக் கொண்டு, மாற்று செய்யப்பட்ட நிலம் 64 ஏக்கர். இலவசமாக மாறு செய்யப்பட்ட நிலம் 1,728 ஏக்கர் 65 சென்ட். அதனுடைய மொத்த விலை 1 கோடியே 3 லட்சத்து 50 ஆயிரம் ரூபாய் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. சேலம் மு. ஆறுமுகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எந்தக் குறிக்கோளின் அடிப்படையில், எதற்காக வேண்டி இவ்வளவு நிலத்தை ஆர்ஜிதம் செய்து, மாநில அரசு மத்திய அரசுக்குக் கொடுத்தது என்பதற்கான காரணங்களை அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா ?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : பேரவைத் தலைவர் அவர்களே, பல்வேறு இலாக்காக்களின் மூலமாக பல்வேறு காரியங்களுக்காக மாநில அரசு அவர்களுக்கு ஆர் ஜிதம் செய்து அரசு நிலங்களைக் கொடுத்திருக்கிறது. உதாரண மாகச் சொல்லவேண்டும் என்றால், தபால் தந்தி துறை, ரயில் துறை, பாதுகாப்புத் துறை, அகில இந்திய வானொலித் துறை, மத்திய மின் ஆராய்ச்சித் துறை, சேலம் இரும்பு ஆலை, நெய்வேலி நிலக்கரிச் சுரங்கம் போன்ற பல்வேறுபட்ட துறை களின் வளர்ச்சிப் பணிகளுக்காகவும், மற்றவைகளுக்காகவும், மத்திய அரசுக்கு மாநில அரசு நில ஆர்ஜிதம் செய்து, சகாய விலையிலும், இலவசமாகவும் கொடுத்திருக்கிறது.

[1984 மார்ச் 12

**புறம்போக்கு நிலங்களில் பயிரிடப்படும் பழ மரங்களுக்கு பட்டா வழங்கும் திட்டம்.**

270—(* வினா எண். 17970)—திரு. மே. அ. இராசகுமார்: மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புறம்போக்கு நிலங்களில் பயிரிடப்படும் அனைத்து பயன்தரும் பழ மரங்களுக்கும் 2-சி பட்டா வழங்கும் திட்டம் அரசின் செயற்குறிப்பில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: (அ) ஆம்.

(ஆ) அரசு புறம்போக்கு நிலங்களில், ஆட்சேபணை இல்லாத இனங்களில் செய்யப்படும் ஆக்கிரமிப்புகளில் நடப்பட்ட பழ மரங்களில் பலனுக்கு வந்த மரங்களுக்கு அனுபவதாரரின் விண்ணப்பத்தின் பேரில், உரிய விசாரணைக்குப் பின்பு, சம்பந்தப்பட்ட ஊராட்சி மன்றத்தின் ஒப்புதலின் பேரில் கொடுக்கப்படுகிறது.

(முற்பகல் 9-30)

திரு. மே. அ. இராசகுமார்: தலைவர் அவர்களே, இந்த 2 சி பட்டா மூலம் தமிழ்நாட்டில் வசூலிக்கப்படும் மொத்த தொகை எவ்வளவு? எந்தெந்த துறைகளுக்கு எவ்வளவு எவ்வளவு பணம் பகிர்ந்தளிக்கப்படுகிறது என்பதை அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: தலைவர் அவர்களே, இந்த 2சி பட்டா மூலம் வசூல் செய்கிற பணம் பூராவும் ஊராட்சி ஒன்றியங்களுக்குக் கொடுக்கப்படுகிறது. ஊராட்சி ஒன்றியங்கள் அந்த மரங்கள் எந்தெந்த ஊராட்சிகளில் இருக்கின்றனவோ அந்தந்த ஊராட்சிகளுக்கு அவற்றைக் கொடுத்துவிடுகிறார்கள்.

திரு. மே. அ. இராசகுமார்: தலைவர் அவர்களே, இந்த 2சி பட்டா வழங்கப்படும் மரங்களுக்கு இந்த அரசு எவ்வளவு வரி விதித்து வருகிறது? இதற்கு முன்பு எவ்வளவு வரி வசூல் செய்யப்பட்டது?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: தலைவர் அவர்களே, அது மரங்களுக்கு ஏற்றவாறு செய்யப்படுகிறது. உதாரணத்திற்காகச் சொல்ல வேண்டுமென்றால் புளிய மரத்திற்கு பசலிக்கு ரூ. 3 வசூல் செய்து கொண்டிருந்தோம்.



இப்போது ரூ. 6 வசூல் செய்யப்படுகிறது. மா மரத்திற்கு முன்பு ரூ. 3 வசூல் செய்து கொண்டிருந்தோம், இப்போது ரூ. 6 பலா மரத்திற்கு முன்பு ரூ. 3 வசூல் செய்துகொண்டிருந்தோம், இப்போது ரூ. 6 வசூல் செய்யப்படுகிறது. தென்னைக்கு முன்பு ரூ. 4 வசூல் செய்து கொண்டிருந்தோம், இப்போது ரூ. 8 வசூல் செய்யப்படுகிறது. பனை *மரத்திற்கு முன்பு 50 பைசா வசூல் செய்யப்பட்டு வந்தது. இப்போது ஒரு ரூபாய் வசூலிக்கப்படுகிறது. இது ஒவ்வொரு பசலிக்கும் வசூல் செய்யப்படுகிறது.

திரு. ப. சுந்தரம்: தலைவர் அவர்களே, மரங்களுக்கு 2சி பட்டா அளிப்பதுபோல் திருப்பத்தூர், ஆலங்காயம் பகுதிகளில் இருக்கிற மலைப்பகுதிகளில் உள்ள மலைவாசி மக்கள் பல ஆண்டுக் காலமாக இத்தகைய பலன் தரும் மரங்களை நட்டு வளர்த்தும் அவர்களுக்கு பட்டா வழங்கப்படாமல் இருப்பதாகத் தெரிகிறது. அதைச் சுற்றியுள்ள இடங்களில் அவர்கள் பயிர் செய்தும் வருகிறார்கள். அவர்கள் தங்களுக்கு பட்டா வழங்க வேண்டும் என்று கோரியிருக்கிறார்கள். அவர்களுக்கெல்லாம் 2—சி பட்டா கொடுக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: தலைவர் அவர்களே, பலன் தரும் மரங்கள் அரசாங்கப் புறம்போக்கில், நத்தம் புறம்போக்கில் இருந்தால் அவை ஆக்கிரமிப்பாக இருந்தாலும் அந்த ஆக்கிரமிப்பு யாருக்கும் பாதகமாக இல்லை என்றால் அப்படி பாதகம் இல்லாத ஆக்கிரமிப்புக்கு மட்டும் 2—சி பட்டா கொடுக்கப்படுகிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன இடம், ஆக்கிரமிப்பு பாதகம் உள்ளதா இல்லையா என்பதை ஆராய்ந்து நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. செ. செம்மலை: தலைவர் அவர்களே, இப்படி 2சி பட்டா கொடுப்பதன் மூலம் வருவாய்த் துறைக்கு வருவாய் இழப்பு ஏற்படுகிறது என்பது என் கருத்து. இதைச் சொல்வதற்குக் காரணம், அமைச்சர் அவர்கள் பதில் சொல்கிறபோது புளிய மரம், புலா மரம், மா போன்ற மரங்களுக்கு இந்த 2சி பட்டா வழங்குவதன் மூலம் ரூ. 6 தான் வரியாக வசூல் செய்யப்படுகிறது என்று சொன்னார்கள். நான் கேட்க விரும்புவது, இந்த மரங்களினால் கிடைக்கக்கூடிய வசூல் ஆண்டுக்கு ஒவ்வொன்றிலிருந்தும் கிட்டத்தட்ட ரூ. 300-க்கு மேல் கிடைக்கும். இந்த 2—சி பட்டா கொடுப்பது ஒரு வேளை நிலச் சொந்தக்காரர்களுக்குப் பக்கத்தில் இருக்கக்கூடிய மரங்களாக இருந்தால் பரவாயில்லை. ஆனால் புறம்போக்கு நிலங்களில் புளிய மரம் போன்ற அதிக வருமானம் வரக்கூடிய மரங்களை, வனத்துறை பொது ஏலம் *விடுவதைப்போல் பொது ஏலத்தில் விடுகிற முறையை அரசாங்கம் பரிசீலிக்குமா?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: தலைவர் அவர்களே, சாலையோரங்களில், நதியோரங்களில் இருக்கிற மரங்களை பொது ஏலத்தில் விடுகிறார்கள். சம்பந்தப்பட்ட துறை ஏலத்தில் விட்டு பணத்தை வசூல் செய்கிறார்கள். நத்தம் புறம்போக்கு என்று வரும்போது வீடுகளுக்கு அருகாமையில் நத்தம் புறம்போக்கில் உள்ள மரங்களுக்கு, குடியிருப்புகளில் வைத்து வளர்ப்பதன் காரணமாக 2-சி பட்டா கொடுக்கப்படுகிறது.

திரு. ச. பாலகிருஷ்ணன்: தலைவர் அவர்களே, கிராமப் புறங்களில் சில செல்வாக்குள்ள பெரிய மனிதர்கள் இந்தப் புறம்போக்கு நிலங்களில் உள்ள மரங்களையெல்லாம் தங்கள் செல்வாக்கைப் பயன்படுத்தி தங்கள் பெயரில் 2-சி பட்டா பெற்றுக்கொண்டு, தவறான முறையில் அதை பயன்படுத்துகிறார்கள். உதாரணமாக பனை மரங்களை தங்கள் பெயரில் 2-சி பட்டா பெற்று மரமேறும் தொழிலாளர்களை கொத்தடிமைகளைப் போல் நடத்துகிற முறை பல பகுதிகளில் இருந்து வருகிறது. இதையெல்லாம் பரிசீலனை செய்து எந்தக் காரணத்தைக் கொண்டும் அந்தப் பகுதிகளில் உள்ள மரங்களுக்கு 2-சி பட்டா வழங்காமல் அந்த மரங்களை பொது ஏலத்தில் விடுவதற்கு அரசு ஏற்பாடு செய்யுமா ?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எந்த இடத்தில் அப்படி நடக்கிறது என்று குறிப்பிட்டுச் சொன்னால், அதற்கான தனி நடவடிக்கைகள் எடுப்பது பற்றியும், 2-சி பட்டா கொடுப்பதை ரத்து செய்வதைப் பற்றியும் அரசு மீண்டும் பரிசீலனை செய்யும்.

திரு. ப. சுந்தரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய தொகுதியிலுள்ள ஜவ்வாது மலை அடிவாரத்திலே நீண்ட நாட்களாக 2-சி பட்டா வேண்டுமென்று மலை வாசிகள் கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். நான் கூட தாலுக்கா அலுவலகத்திற்கு பலமுறை சென்று சொல்லியிருந்தேன். இதிலே சில தவறுகள் நடைபெறுகின்றன. அதைக் கவனித்து அவர்களுக்கு நியாயமான நடைமுறையில் 2-சி பட்டா வழங்க நடவடிக்கை எடுப்பார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: தலைவர் அவர்களே, இங்கே கூட மாண்புமிகு உறுப்பினர்கள் 2-சி பட்டாவை ரத்து செய்ய வேண்டுமென்றும், 2-சி பட்டா விரைவில் கொடுக்க வேண்டும் என்றும் இப்படி பல்வேறு கருத்துக்களைச் சொல்லியிருக்கிறார்கள். அதை நன்றாக ஆராய்ந்து உரிய நேரத்தில் நியாயமான நடவடிக்கை எடுக்கப்படும்.



தாலுகா அலுவலகங்களிலிருந்து பெறப்படும் சிட்டா அடங்கல்கள் மற்றும் நகல்கள்.

271—(*வினா எண் 21702)—திரு. என். பழனிவேல்: மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தாலுகா அலுவலகங்களில் சிட்டா அடங்கல்கள் மற்றும் தேவையான நகல்கள் பெற வேண்டுமானால் காலதாமதமாவது அரசுக்குத் தெரியுமா ?

(ஆ) ஆம் எனில், இந்நிலையைப் போக்கவும் உடனுக்குடன் நகல்கள் கிடைக்கவும் அரசு நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: (அ) மற்றும் (ஆ): வட்ட அலுவலகங்களிலே சிட்டா அடங்கல்கள் மற்றும் தேவையான நகல்கள் காலதாமதமாக கொடுப்பதாக அரசின் கவனத்திற்கு வரவில்லை. அப்படி வந்தால் உடனடி நடவடிக்கை எடுக்கப்படும். மாண்புமிகு உறுப்பினர்கள் எந்த இடத்தில் அப்படி காலதாமதம் என்று குறிப்பிடாத காரணத்தால் எல்லா மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கும் இப்படி காலதாமதத்தை தவிர்க்க வேண்டுமென்றும், எப்படி எப்படி கொடுக்கவேண்டுமென்றும், அறிக்கைகள் பெறப் பெற்று, அறிக்கையிலே நிம்மதி அடையாவிட்டால், அதற்குத் தக்க நடவடிக்கை எடுக்கவேண்டும் என்றும் அறிவுறுத்தியிருக்கிறோம்.

பவானி ஆற்றிலிருந்து குடிநீர் வழங்கும் திட்டம்.

272—(*வினா எண் 5522)—திரு. கு. அ. செங்கோட்டையன்: மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பவானி ஆற்றிலிருந்து கலிங்கியம், கொளப்பலூர், அயலூர், கெட்டிசெயூர், தாழ்குனி, கோசனம், சிறுவலூர், திங்களூர், ஊத்துக்குளி வரையிலும் குடிதண்ணீர் எடுப்பதற்காக ஆய்வு செய்யப்பட்டிருக்கிறதா ?

(ஆ) ஆம் எனில், அதன் மதிப்பீட்டுத் தொகை என்ன ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: (அ) ஆம்.

(ஆ) இத்திட்டம் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் ஆய்வில் உள்ளது. மதிப்பீட்டுத் தொகை இன்னும் முடிவாகவில்லை.

திரு. கு. அ. செங்கோட்டையன் : மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்கிறபோது மதிப்பீட்டுத்தொகை இன்னும் தயார் செய்யப்படவில்லை என்று சொன்னார்கள். இதைப் பல ஆண்டுகளாக சர்வே செய்துகொண்டிருக்கிறார்கள். ஆகவே இதை மிக விரைவிலே எடுப்பதற்கும், இதிலே எத்தனை கிராமங்கள் பயன் அடைகின்றன என்பதையும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விளக்குவார்களா ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : வழியோரக் கிராமங்கள் என்று இருக்கின்றனவே தவிர, எத்தனை கிராமங்கள் என்று தெரியவில்லை. வழியோர ஊராட்சிகட்கும் கூட்டுக் குடிநீர்த் திட்டம் பயனளிக்கும் வண்ணம் வரையப்பட்டுள்ளது. கோசனம் மற்றும் தாழ்குனி ஊராட்சிகள் மேற்கண்ட திட்டத்தில் சேர்க்கப்படவில்லை. உத்தேச பிரதான குழாய் அமையும் இடத்திற்கு மிக தொலைவில் உள்ளதால் தற்சமயம் ஆய்வில் இருக்கும் நம்பியூர் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தில் கூட இவ்விரு குடியிருப்புகளும் சேர்க்கப்படவில்லை. ஆனால் கோசனம் ஊராட்சியைச் சேர்ந்த மேட்டுப்பாளையம் குடியிருப்பு மட்டும் இத்திட்டத்தில் பயன்பெற வகைசெய்யப்பட்டு உள்ளது.

திரு. தி. கா. நல்லப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதே திட்டம் பற்றி ஆளும் கட்சி உறுப்பினரும் எதிர்க்கட்சி உறுப்பினரும் மாற்றி மாற்றிக் கேட்டுக்கொண்டிருக்கிற சூழ்நிலை இருக்கிறது. ஏற்கெனவே மூன்றாவது முறையாக—முதல் முறை ஆய்வில் $1\frac{1}{2}$ கோடி ரூபாய் என்றும், இரண்டாம் முறை ஆய்வில் $3\frac{1}{2}$ கோடி ரூபாய் என்றும் கடந்த இரண்டு தினங்களுக்கு முன்பாகச் சொல்கிறபோது $9\frac{1}{2}$ கோடி ரூபாயில் ஒரு ஆய்வு செய்யப்பட்டதாகவும் மாண்புமிகு அமைச்சர் அவர்களும், இது சம்பந்தப்பட்டவர்களும் குறிப்பிட்டார்கள். ஆனால் இன்றையதினம் இது சம்பந்தமாக ஆய்வு செய்துகொண்டு மட்டுமே இருப்பதாகக் கூறுகிறார்கள். ஆகவே இதை விரைவில் முடிப்பதற்கு உண்டான நடவடிக்கைகளை மேற்கொள்வார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : தலைவர் அவர்களே, இரண்டு மாண்புமிகு உறுப்பினர்கள் சொன்ன கருத்துக்களை ஏற்று விரைவில் முடிப்பதற்கு வேண்டிய நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

**கூவம் ஆற்றைச் சீரமைக்க அரசு மேற்கொண்டுள்ள சிறப்பு நடவடிக்கைகள்.**

273—(*வினா எண் 18626) —

**திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் :**
**திரு. வி. வி. சுவாமிநாதன் :**
**திரு. கே. ஆர். கணபதி :**
**திரு. ப. வெங்கடசுப்பிரமணியம் :**
**திரு. என். எஸ். வி. சித்தன் :**



மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) சென்னையில் உள்ள கூவம் ஆற்றில் சாக்கடை கலப்பதைத் தடுக்கவும், நாற்றத்தைப் போக்கவும் அரசு மேற்கொண்டுள்ள சிறப்பு நடவடிக்கைகள் என்ன ?

(ஆ) 1970-1975 ஆம் ஆண்டு அதைச் சீரமைக்கப் போடப்பட்ட திட்டத்தின் விளைவுகளை அரசு பரிசீலித்துள்ளதா?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் :

(அ), (ஆ) மற்றும் (இ) விவர அறிக்கை* அவைமுன் வைக்கப்பட்டுள்ளது.

திரு. மி. வின்சென்ட் : விவர அறிக்கையிலே இரண்டாம் நிலையில் படகுத்துறை, சிற்றுண்டிச்சாலை, மாற்றுப் பாதை ஒழுங்கு படுத்துதல் போன்றவைகளுக்காக ரூ. 108 இலட்சத்திற்கு ஒப்புதல் அளிக்கப்பட்டு, 141 இலட்சம் ரூபாய் செலவழிக்கப்பட்டிருக்கிறது. படகுத்துறை இப்போது செவ்வனே நடைபெறுகிறதா? இதிலே யார் யார் பயணம் செய்கிறார்கள்? இந்தியர் அதிகமாக பயணம் செய்கிறார்களா? வெளிநாட்டவர்கள் அதிகமாக பயணம் செய்கிறார்களா? இதிலிருந்து அரசுக்கு கிடைக்கும் அந்நியச் செலாவணி எவ்வளவு ?

(முற்பகல் 9—40)

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, படகு துறைகள் எல்லாம் ஒன்றும் இப்போது செயல்படவில்லை. எனவே மற்ற கேள்விகளுக்கு இடம் இல்லை. நாம் இப்போது முக்கியமாக செய்யவேண்டியது கூவத்தில் நாற்றம் அடிக்காமல் இருப்பதற்கு முகத் துவாரத்தில் மண் மேடிட்டுக் கொண்டு கூவத்தின் தண்ணீர் கடலில் கலக்காமல் செய்வதற்கு அந்த மண்ணை எடுப்பதற்கு இப்போது வேலைகளை செய்து விட்டாலும், பிறகு கூவத்தில் மற்ற இடங்களில் கலக்கிற சாக்கடைத் தண்ணீரை தடுத்துவிட்டாலும், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லியபடி படகுகளில் போகலாம். என்னென்ன செய்திருக்கிறோம் என்று முதல் பக்கத்தில் கொடுத்திருக்கிறோம். எனவே, படகுகளில் இப்போது போவதற்கு சாத்தியக்கூறுகள் இல்லை.

---

* 360-365-ம் பக்கங்களில் இணைப்பாக அச்சிடப்பெற்றுள்ளது.

[1984 மார்ச் 12

**திரு. க. பாலசுப்பிரமணியன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் படகுகள் இப்போது போவதற்கு சாத்தியக் கூறுகள் இல்லை என்று சொன்னார்கள். சிலநேரங்களில் அங்கே படகுகள் சென்று கொண்டிருக்கின்றன. அதற்கு துடுப்புகளை உபயோகப்படுத்துவதன் காரணமாக கூவம் நதியினுடைய துர்நாற்றம் அதிகமாகி இருக்கிறது. ஆகவே, நிரந்தரமாக அந்த இடத்தில் படகுகள் செல்லாமல் இருப்பதற்கு அரசு தடை விதிக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதுபற்றி கவனிக்கப்படும்.

**வளசரவாக்கம் பேரூராட்சிப் பகுதிக்கான நிரந்தரக் குடிநீர்த் திட்டம்.**

274—(*வினா எண். 19277)—**திரு. ஜே. சி. டி. பிரபாகரன் :** மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வில்லிவாக்கம் ஊராட்சி ஒன்றியம் வளசரவாக்கம் பேரூராட்சிக்கு நிரந்தரக் குடிநீர்த் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் :** (அ) மற்றும் (ஆ) : சென்னை நகருக்கு கிருஷ்ணா நதி நீர் கொணரும் திட்டத்தில் வளசரவாக்கம் பேருராட்சியும் இடம் பெறுகிறது.

**குடிநீர்த் திட்டங்களுக்காக ஆயுள் காப்பீட்டுக் கழகத்திடமிருந்து பெறப்பட்ட கடன் தொகை.**

275—(*வினா எண். 19834)—**திரு. த. வேணுகோபால் :** மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தமிழகத்திற்கு ஆயுள் காப்பீட்டுக் கழகத்தின் மூலம் குடிநீர்த் திட்டம் செயல்பட எவ்வளவு தொகை 1983 மார்ச் முடிய கடனாக வழங்கப்பட்டுள்ளது?



1984 மார்ச் 12]

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் :** 1969-70 முதல் மார்ச் 1983 வரை, ரூ. 5778.46 இலட்சம் குடிநீர்த் திட்டங்களை நிறைவேற்றிட ஆயுள் காப்பீட்டுக் கழகத்திடமிருந்து கடனாகப் பெறப்பட்டுள்ளது.

**திரு. பெ. சு. திருவேங்கடம் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெரும்பாலும் ஆயுள் காப்பீட்டுக் கழகத்தின் மூலம் கடன் பெற்று நகராட்சிகளிலோ அல்லது பேரூராட்சி மன்றங்களிலோதான் இப்படிப்பட்ட குடிநீர் திட்டங்களை செயல்படுத்துகிற முறை இப்போது நடைமுறையில் இருக்கிறதாக நான் அறிகிறேன். கிராமபஞ்சாயத்துகளில் தண்ணீர் கிடைக்காத கிராமங்களாக இருந்தால் 4, 5 பஞ்சாயத்துக்களை ஒன்று சேர்த்து காப்பீட்டு கழகத்திலிருந்து கடன் பெற்று தொலை தூரத்திலிருந்து வருகிற தண்ணீரை கொடுக்கிற அளவில் இந்தத் திட்டத்தை செயல்படுத்த அரசாங்கம் முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ரூரல் வாட்டர் சப்ளை பொறுத்த வரையில் அதைப் பூராவும் அரசே தன்னுடையச் சொந்தப் பணத்திலிருந்து செலவு செய்கிறது என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

**20 அம்சத் திட்டத்தின் கீழ் கிராமங்களுக்கு பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கும் திட்டம்.**

276—(* வினா எண். 20796) **திரு. சி. கணேசன் :** மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1983-84ல் 20 அம்சத் திட்டத்தின் கீழ் கிராமங்களுக்குப் 'பாதுக்காக்கப்பட்ட குடிநீர்' வழங்க தமிழக அரசுக்கு மைய அரசு உதவி செய்துள்ளதா ?

(ஆ) ஆம், எனில், அதன் விபரம் என்ன?

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் :** (அ) ஆம்.

(ஆ) 1983-84 ஆம் ஆண்டில் விரைவுபடுத்தப்பட்ட குடிநீர்த் திட்டத்திற்கென ரூ. 6.94 கோடி மத்திய அரசு வழங்கியுள்ளது. இது தவிர 1983-84ல் ஊக்குவிக்கும் திட்டத்தின் கீழ் ரூ. 4 கோடி வழங்கியுள்ளது.

[1984 மார்ச் 12

திரு. தி. அன்பழகன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பாதுக்காக்கப்பட்ட குடிதண்ணீர் வழங்கும் போது கேட்டகிரி (category) முறையிலே செயல்படுவதன் காரணமாகவும், பல ஆண்டுகளுக்கு முன்னாலே எடுத்த கணக்குகளின் அடிப் படையில் செயல்படுவதன் காரணமாவும், பல கிராமங்கள் பாதிக்கப்பட்டிருக்கின்றன. ஆகவே அந்த நிலைமையை கணக்கில் எடுக்கும் போது புதியதாக கணக்கெடுத்து, கேட்டகிரி முறையை மாற்ற அரசாங்கம் ஆவன செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதில் சிக்கல் ஏற்படுவது எல்லாம் ஆறாவது கேட்டகிரியில்தான். ஆறாவது கேட்டகிரி என்றால் ஆண்டு பூராவும் போதுமான அளவிற்கு நல்ல குடி தண்ணீர் இருக்கிறது என்று பொருள். எனவே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அப்படி ஆண்டு பூராவும் தண்ணீர் இருப்பதில்லை, நல்ல குடிதண்ணீர் இருப்பதில்லை, போதுமான தண்ணீர் இருப்பதில்லை என்று முறையீடு செய்வார்களானால் அது பரிசிலனை செய்யப்பட்டு, பல்வேறு ஹேபிடேஷன்ஸ், குடியிருப்புகள் மூன்றாவது கேட்டகிரியாக மாற்றி அவைகளுக்கு உடனடியாக தன்னிறைவுத் திட்டத்தின் மூலமாகவோ அல்லது மற்ற திட்டங்கள் மூலமாகவோ தண்ணீர் கிடைப்பதற்கு ஏற் பாடுகள் செய்யப்பட்டு வருகிறது. ஆகவே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எங்கெங்கே ஆறாவது பிரிவாக இருப்பது மூன்றாவது பிரிவாக மாற்றுவது முறையென்று நியாயமாக கருதுகிறார்களோ அதை கலெட்டருக்கோ அல்லது மற்ற தொடர்புடைய அதிகாரிகளுக்கோ முறையீடு செய்யலாம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. கூ. பாலசுப்பிரமணியன் : தலைவர் அவர்களே, 1983 —1984 ஆகிய ஆண்டுகளுக்கு மத்திய அரசு ஊக்குவிப்புத் தொகை யாக 4 கோடி ரூபாய் தருகிறது. பாதுகாக்கப்பட்ட குடிநீர்த் திட்டத்திற்காக என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். கிராமங்களிலே சிறு நகரங்களிலே இருக்கிற மக்களுக்கு எல்லாம் நீண்ட நெடுங்காலமாக பாதுகாக்கப்பட்ட குடி நீர் கிடைக்காத காரணத்தினால் 20 அம்சத் திட்டத்தின் மூலமாக பாதுகாக்கப் பட்ட குடிநீர் வழங்கவேண்டுமென்பது மத்திய அரசின் கொள்கையாக இருக்கிற காரணத்தினால் இந்த 4 கோடி ரூபாய் போதுமானது அல்ல என்பதை அமைச்சர் அவர் கள் அறிவார்கள். ஆகவே இதற்காக குறைந்தது ஒவ்வொரு நிதி யாண்டிலும் 20 அல்லது 25 கோடி ரூபாயாவது தேவை என்ற அளவிலே மாநில அரசு திட்டத்தை வைத்து மத்திய அரசிடம் அதிகமான தொகை கோருவார்களா?



1984 மார்ச் 12]

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : தலைவர் அவர் களே, எவ்வளவு தொகை வேண்டுமென்று அவ்வப்போது திட் டம் வகுத்து மத்திய அரசுக்கு அனுப்புகிறோம். அவர்களும் கொடுத்து வருகிறார்கள். வறட்சி நிவாரணப் பணிகள் என் பதன் கீழும் தருகிறார்கள். தருவது போதாது, நாங்கள் கிரா மங்களுக்கு அதிகமாகக் கொடுக்கிறோம் என்று கேட்கிறோம், அவர்கள் தருகிறார்கள். மறுபடியும் எழுதுகிறோம், தருகிறார் கள். இப்படி புராசஸ் தொடர்ந்து நடைபெற்றுக்கொண்டே இருக் கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. எம். எஸ். மாணிக்கம் : தலைவர் அவர்களே, தன்னி றைவுத் திட்டத்தின் மூலமாக பாதுகாக்கப்பட்ட குடிநீர் வசதி அளிக்கும் திட்டம் 3 கட்டங்களில் முடிந்தபிறகும் கூட இன்னும் சில கிராமங்களிலே குடி நீர் அளிக்கப்படாத நிலைமைஇருக்கிறது. மத்திய அரசு 20 அம்சத் திட்டத்தின் மூலமாக ஒதுக்குகிற பணம் இந்தத் திட்டத்திற்காகத் தருகிறது என்றால் அப்படிப்பட்ட இடங்களிலே குடிநீர் வசதி அளிக்கும் திட்டத்தை அதன் மூலமாக நிறைவேற்ற அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : தலைவர் அவர் களே, மூலக் கேள்விக்கும் இதற்கும் நேரிடைத் தொடர்பு இல்லை. ஆனால் தன்னிறைவுத் திட்டத்தின் மூலமாக நிறை வேற்றப்படவில்லை, விடப்பட்டுப்போய்விட்டது என்ற நிலை இருக்குமானால் மாண்புமிகு உறுப்பினர் முறையீடு செய்வார் களேயானால் அதைப்பற்றி அரசு கவனிக்கும்.

பாலக்கோடு வட்டத்திற்கு தனி நிலவள வங்கி ஏற்படுத்தும் திட்டம்.

277— (*வினா எண் 17416)— திரு. மு. ப. முனுசாமி : மாண்புமிகு கைத்தறி மற்றும் கூட்டுறவுத்துறை அமைச்சர்— கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பாலக்கோடு வட்டத்திற்கு ஒரு தனி நிலவள வங்கி ஏற்படுத்தும் உத்தேசம் அரசுக்கு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது ஆரம்பிக்கப்படும்?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : (அ) ஆம்.

(ஆ) தமிழ்நாடு மாநில நிலவள வங்கி மற்றும் வேளாண்மை ஊரக வளர்ச்சிக்கான தேசிய வங்கி இவற்றின் ஒப்புதல் கிடைத்த பிறகு ஆரம்பிக்கப்படும்.

திரு. மு. ப. முனுசாமி : தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறியதைப்போல் சம்மதம் கிடைத்திருந்தும் கூட சென்ற ஆண்டிலிருந்து நிலுவையில் இருப்பதற்கு என்ன காரணம் என்பதை அறிய விரும்புகிறேன்.

[1984 மார்ச் 12

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு: தலைவர் அவர்களே, நான் சொல்வதுபோல் நிலவள வங்கி வேளாண்மை ஊரக வளர்ச்சிக்கான வங்கியிடமிருந்து ஒப்புதல் இன்னும் கிடைக்கவில்லை. கிடைத்தால்— ஒவ்வொரு தாலுகாவிற்கும் ஒரு நிலவள வங்கி ஏற்படுதல் வேண்டும் என்பதுதான் அரசின் கொள்கை — அங்கே ஆரம்பிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. மு. ப. முனுசாமி: தலைவர் அவர்களே, 2 மாதங்களுக்கு முன் அலுவலர்களைச் சந்திக்கும்போது கேட்டபோது அவர்கள் அரசுக்கு அனுப்பிவிட்டோம் என்று சொன்னார்கள், அதனால்தான் நான் கேள்வியை போட்டிருக்கிறேன். நிலுவையில் இருப்பதை மாற்றி உடனடியாக ஆரம்பிக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு: தலைவர் அவர்களே, நான் ஏற்கெனவே சொன்ன பதில்தான்.

**கைத்தறிகளின் அமைப்பை மாற்றி 'பெடலிங் சிஸ்டம்' உள்ள தறிகளை அறிமுகப் படுத்தும் திட்டம்.**

278.— (*வினா எண் 21477)— திரு. செ. செம்மலை: மாண்புமிகு கைத்தறி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மனித சத்தியால் இயக்கப்படும் தற்போதைய கைத்தறிகளின் அமைப்பை மாற்றி நெசவாளர்களின் வேலைப்பளுவைக் குறைக்கும் வகையில் 'பெடலிங் சிஸ்டம்' (Pedalling system) உள்ள தறிகளை அறிமுகப்படுத்தும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் யாது?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு: (அ) 1979—80 ஆம் ஆண்டு முதல் தறிகள் நவீனப்படுத்தும் திட்டத்தின் கீழ் நெசவாளர்களுக்கு நெசவாளர் கூட்டுறவு சங்கங்கள் மூலம் ''பெடல் தறிகள்'' வழங்க வகை செய்யப்பட்டுள்ளது.

(ஆ) இதுவரை 36 நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களில் 341 பெடல் தறிகள் நிறுவப்பட்டுள்ளன.

திரு. செ. செம்மலை: தலைவர் அவர்களே, இந்த முறையை இல கூட்டுறவுச் சங்கங்களில் பரிட்சார்த்தமாக செயல்படுத்திப் பார்த்ததில் ஏதாவது பலன்கள் கிடைத்ததா? உற்பத்தி பெருக்கம் ஏற்பட்டதா? என்ற விவரத்தை அறிய விரும்புகிறேன்.



1984 மார்ச் 12]

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு: தலைவர் அவர்களே, 36 நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களில் 341 தறிகள் நிறுவப்பட்டுள்ளன. அதிலே 85 தறிகள்தான் இயங்கி வருகின்றன. ஏனென்றால் நெசவாளர்கள் மத்தியில் இந்தத் திட்டத்திற்குப் போதுமான வரவேற்பு இல்லை.

(முற்பகல் 9—50).

திரு. செ. செம்மலை: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கைத்தறிக்கு என்று ஒதுக்கப்பட்ட சில ரகங்களை இந்த பவர் லூம்-தறிகள் மூலம் நெசவு செய்து அப்படி உற்பத்தி செய்யப்பட்ட ரகங்களை கைத்தறி மூலம் உற்பத்தி செய்யபட்டதாக லேபில் ஒட்டி இப்போது விற்பனைக்கு கொண்டு வருகிற முயற்சியில் சிலர் ஈடுபட்டு இருக்கிறார்கள். இதனால் கைத்தறி துணிகள் தேக்கம் ஏற்பட்டு இருக்கிற ஒரு சூழ்நிலைக்கு தள்ளப்பட்டு இருக்கிறது. எனவே இப்படிப்பட்டவைகளை கட்டுப்படுத்துகிற வகையில், இப்படி பவர் லூம்கள் கைத்தறி துணி ரகங்களை நெய்வதை கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மூலக்கேள்விக்கும் இதற்கும் தொடர்பு இல்லை என்றாலும் கைத்தறிகளுக்கு ஒதுக்கப்பட்டு இருக்கிற ரகங்களை பவர் லூம்கள் அல்லது பெரிய ஆலைகள் அவர்கள் ஏற்றுக்கொண்டு செய்யக் கூடாது என்று ஏற்கெனவே மத்திய அரசு அறிவித்து அதை மாநில அரசும் பின்பற்றி வருகிறது. அப்படி அதை மீறுவார்களானால் அவர்கள் மீது எசன்ஷியல் கமாடிட்டிஸ் ஆக்ட்-ன் கீழ் தான் அவர்கள் மேல் நடவடிக்கை எடுக்க வாய்ப்பு இருக்கிறது. அதை கவனத்தில் கொண்டு சமீபத்தில் நடைபெற்ற ரீஜினல் கைத்தறி அமைச்சர்கள் மாநாட்டிலும் இதுபோல டெல்லியில் நடைபெற்ற மாநாட்டிலும் தமிழகத்தின் சார்பில் அதற்காக தனியாக ஒரு லெஜிஸ்லேஷன் வரவேண்டும், சட்டம் கொண்டு வரவேண்டும் என்று இது சம்பந்தமாக பார்லிமெண்டில் இருப்பவர்களை மத்திய அரசை மாநில அரசு வற்புறுத்தி இருக்கிறது. மத்திய அரசில் இருக்கும் அமைச்சர் அவர்கள் தனியாக லெஜிஸ்லேஷன் வருகிற பார்லிமெண்டில் கொண்டுவரப்போகிறேன் என்ற உத்தரவாதம் கொடுத்து இருக்கிறார்கள். மத்திய அரசு இப்படி சட்டம் கொண்டு வந்து இந்த கைத்தறிகளுக்கு ஒதுக்கிய ரகங்களை அவர்களே செம்மையாக செய்து அதில் மற்றவர்கள் தலையிடாமல் இருக்க போதுமான நடவடிக்கையை எடுக்க வேண்டும். அப்படி நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று மத்திய அரசை கேட்டுக்கொள்கிறேன்.

[1984 மார்ச் 12

**கோ-ஆப்டெக்ஸ் மூலம் நவீன அச்சு வேலை (பிரின்ட்) செய்யும் தொழிற்சாலை ஆரம்பிக்க திட்டம்.**

279—(*வினா எண் 21625)—**திரு. ஆர். ரங்கசாமி** : மாண்புமிகு கைத்தறி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தமிழகத்தில் கோ-ஆப்டெக்ஸ் மூலம் நவீன அச்சுவேலை பிரின்ட் செய்யும் தொழிற்சாலை ஆரம்பிக்கப்படுமா ?

**மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு** : இல்லை.

**திருச்சி உறையூர் தேவாங்கர் கூட்டுறவுச் சங்கத்தினால் கட்டப்பட்ட வீடுகள்.**

280—(*வினா எண் 22335)—**திரு. கே. சௌந்திரராசன்**: மாண்புமிகு கைத்தறி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1980 ஆம் ஆண்டு இறுதியில் திருச்சி உறையூர் தேவாங்கர் கூட்டுறவுச் சங்கத்தினால் கட்டப்பட்ட வீடுகள் வெள்ளத்தினால் இடிந்து விழுந்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில் எத்தனை வீடுகள் ?

(இ) அதன் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன ?

**மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு** : (அ) ஆம்.

(ஆ) 22 வீடுகள் முழுவதும் இடிந்து விழுந்துவிட்டன. மேலும் 14 வீடுகள் பெரிதும் சேதமடைந்துள்ளன

(இ) பாதிக்கப்பட்ட நெசவாளர்களுக்கு உதவித் தொகையும், கடனும் வழங்கப்பட்டுள்ளன. மேலும் இடைக்கால நிவாரணமாக ஒவ்வொருவருக்கும் சுமார் 300 ரூபாய் மானியமும், 100 ரூபாய் கடனும் மற்றும் அரிசி, மண்ணெண்ணெய், வேட்டி, புடவை போன்ற பொருட்களும் வழங்கப்பட்டுள்ளன. பழுதுஅடைந்த வீடுகளைத் திரும்ப கட்டி முடிக்கும் வரையில் தற்காலிகமாக தென்னங் கீற்று வேயப்பட்ட வீடுகள் கட்டப்பட்டுள்ளன.

**திரு. கே. சௌந்திரராசன்** : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இங்கே குறிப்பிடுகிறபோது 22 வீடுகள் முழுவதும் இடிந்து விட்டது என்றும் 14 வீடுகள் பெரிதும் சேதமடைந்துள்ளன என்றும் அதற்கு மானியமாக 300 ரூபாயும் கடனாக 100 ரூபாயும் அளிக்கப்பட்டதாக சொன்னார்கள். 300 ரூபாய் கடன் வெள்ளத்தினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு தரப்பட்டு இருக்கிற தொகை. இந்த 22 வீடுகள் முழுவதும் இடிந்து விழுந்து இருக்கிறது, 14 வீடுகள் இன்றைய தினம் மிகுந்த சேதம அடைந்து இருக்கிறது. அதிலும் குடி இருப்பதற்கு முடியாத சூழ்நிலை இருக்கிறது. இந்த வீடுகளுக்கு



1984 மார்ச் 12]

கொடுக்கப்பட்ட கடன் எவ்வளவு ? அந்தக் கடன் கொடுப்பதற்கு பொறுப்பாக இருந்தவர்கள் யார் ? யார்? நிர்வாகிகள் யார் ? யார் ? அதனுடைய ஒப்பந்தக்காரர்கள் யார் ? யார் ? அவர்கள் மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா என அறிய விரும்புகிறேன் ?

**மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு** ; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நெசவர்களுக்கு கட்டித் தரப்படுகின்ற வீடுகள் சமீபத்தில் கட்டப்பட்ட வீடுகளாக இருப்பின் ரூபாய் 10ஆயிரமும் 2, 3 ஆண்டுகளுக்கு முன்னால் கட்டப்பட்ட வீடுகளாக இருந்தால் ஏறத்தாழ 5 ஆயிரமும் தரப்பட்டு இருக்கும். அதில் ஆயிரம் ரூபாய் மானியமாக வழங்கப்பட்டு இருக்கிறது. அதேபோல் இந்த வீடுகள் அநேகமாக 3 ஆண்டுகளுக்கு முன்னால் கட்டப்பட்டு இருக்குமானால் ஏறத்தாழ 5 ஆயிரம் ரூபாய் தரப்பட்டு அதில் ஆயிரம் ரூபாய் மானியமாக இருக்கும் என்று கருதுகிறேன்.

**திரு. கே. சௌந்திரராசன்** : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறிப்பிடுகிறபோது இந்த வீடுகள் பற்றி ஹேஷ்யமாகச் சொன்னார்கள். குறிப்பாக இந்த வீடுகள் பற்றி தனியாக கேள்வி கேட்டு இருக்கிறேன். இந்த வீட்டுக்கு தொகை எவ்வளவு என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா என்று அறிவதோடு. . . .

**மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு** : மாண்புமிகு தலைவரவர்களே, இதில் ஒன்றும் ஹேஷ்யமோ அல்லது ஜோசியமோ கிடையாது. இடிந்த வீடுகள் எத்தனை என்பது மூலக் கேள்வி. எப்பொழுது கட்டப்பட்டது, எவ்வளவு ரூபாயில் கட்டப்பட்டது என்ற விவரங்களுக்கான மூலக்கோப்பு என்னிடத்தில் இப்பொழுது இல்லை. எவ்வளவு செலவிடப்படுகிறது என்று கேட்டால், மூன்றாண்டுகளுக்கு முன்பு ஐயாயிரம் ரூபாய் இப்பொழுது கட்டப்படுபவைகளுக்குப் பத்தாயிரம் ரூபாய், செலவிடப்படுகிறது. எப்பொழுது கட்டப்பட்டிருக்கிறது என்பதைப் பொறுத்த வரையில் அவருக்கே தெரியும். -ஏனென்றால் அது அவருடைய தொகுதியிலேதான் இருக்கிறது.

**திரு. இரா. கருப்பையா** : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. . . . . . . . . . . . . . . . . .

**திரு. கே. சௌந்திரராசன்** : என்னுடைய கேள்வியை நான் முடிக்கவில்லை. அதை நான் முடித்துவிடுகிறேன். மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இந்த வீடுகள் வழிவழியாக நெசவுத் தொழில் செய்யும் குடும்பங்களுக்கு, சமுதாயத்தின்

மானத்தைக் காப்பதற்காக நெசவு செய்யும் நெசவாளர் குடும்பங்களுக்குக் கட்டப்படும் வீடுகளாகும். அப்படிக் கட்டித்தரப் பட்ட வீடுகள், மண்ணால் கட்டப்பட்டதால் இன்றைக்கு வெள்ளத்தின் காரணமாக இடிந்து விழுந்திருக்கின்றன. பகல் நேரத்தில் நடந்த நிகழ்ச்சியாதலால் அந்த மக்கள் தப்பித்திருக் கிறார்கள். எனவே, அந்த மக்களுக்குக் கட்டித் தரப்படும் வீடுகளை தரமுள்ள வீடுகளாக உடனடியாகக் கட்டித் தருவதற்கு அரசு முயற்சிக்குமா? அதிலும், மானியத்திலே கட்டித் தரும் அளவிற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதை யும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, வீடு கட்டும்பொழுது வீட்டை வெறும் மண்ணால் கட்டக் கூடாது; சிமெண்ட் கலந்துதான் கட்ட வேண்டும். பழுது அடைந்திருக்கின்ற அல்லது இடிந்து இருக்கின்ற வீடுகளைப் பொறுத்தவரையில், மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் உணர்வுகளை நானும் பகிர்ந்துகொள் கிறேன். கடன் கொடுக்கப்பட்டு கட்டப்பட்ட வீடுகள் கடுமை யான வெள்ளத்தாலும், புயலாலும் பாதிக்கப்பட்டு இடிந்து விழுந்திருக்கின்றன. வீடுகளுக்குக் கடன் பெறுகிறார்கள். அந்த வீட்டை அவர்கள் இழந்துவிட்டால் கடனைத் திருப்பிக் கட்டுவது அவர்களுக்குக் கஷ்டமாகத்தான் இருக்கும், அந்த உணர்வோடு அரசு பரிசீலிக்கும்.'

திரு. இரா. சருப்பையா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த வீடுகள் கட்டப்பட்டு ஓராண்டு கூட முடிய வில்லை. அதற்குள்ளேயே இந்த வீடுகள் அனைத்தும் வெள்ளத் தினால் சேதம் அடைந்து அந்த நெசவாளர்கள் மிகவும் பாதிக்கப் பட்ட நிலையிலே இன்றைக்கு குடியிருப்பதற்குக் கூட இடம் இல்லாது அவர்கள் வேலை செய்ய முடியாத நிலையில் இருக் கிறார்கள். ஏற்கனவே அரசு அவர்களுக்கு இப்படிப்பட்ட வீடு களைக் கட்டுவதற்கு ஐயாயிரம் ரூபாயோ அல்லது பத்தாயிரம் ரூபாயோ கடனாகக் கொடுத்து இருக்கிறது. மானியமாக ஆயிரம் ரூபாய் தான் கொடுத்திருக்கிறார்கள். அவர்கள் இருப் பதற்கும் இப்பொழுது இடமில்லை. வீடுகளும் போய் விட்டன. ஆகவே, இந்த நிலையிலுள்ள கைத்தறி நெசவாளர்களுக்கு புதிய வீடுகளைக் கட்டித் தரும் பொறுப்பு அரசுக்கு இருக்கிறது. ஒருபுறத்தில் அந்தக் கடமையை நிறைவேற்றித் தருவதோடு ஏற்கனவே பெற்றிருக்கின்ற கடன்களையும் தள்ளுபடி செய் வதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதையும் அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சமீபத்தில் எதிர்பாராதவிதமாக ஏற்பட்ட கடுமையான வெள்ளத்தாலும், புயலாலும் அந்தப் பகுதியிலே கட்டப்பட்டிருந்த வீடுகள் சேதம் அடைந்து—அதை





நானும்கூட திருச்சியில் போய், சேதம் அடைந்த, பழுது அடைந்த வீடுகளைப் பார்த்தேன். நெசவாளர்களுக்காகக் கட்டப்பட்ட வீடுகள் மட்டுமல்ல, இந்தத் தடவை கடுமையாகப் பெய்த மழையின் காரணமாக தனியார்களால் கட்டப் பட்டிருந்த பெரிய மாளிகைகள் கூட பல சேதமாகி இருக்கின்றன. எனினும், சேதம் அடைந்துபோன அந்த வீடுகளின் சொந்தக்காரர்களாக இருக்கின்ற நெசவாளப் பெருமக்களுக்கு உதவும் விதத்தில் அரசு, அவர்கள் பெற்றிருக்கின்ற கடன்களை எந்த அளவிற்கு அவர்களுக்கு உதவும் விதத்திலே முடிவு செய்ய முடியும் என்பதைப் பற்றி அரசு ஆலோசிக்கும் என்று ஏற்கனவே பதில் சொன்னேன்.

திரு. பி. கந்தசாமி : மாண்புமிகு தலைவரவர்களே, ஆதி திராவிடர்களுக்கு மானிய அடிப்படையில் வீடு கட்டித் தருவதைப் போல நலிந்துள்ள நெசவாளர் குடும்பங்களுக்கும் மானிய அடிப்படையில் வீடுகள் கட்டித்தரப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இப்பொழுது கட்டப்படும் வீடு களுக்கு ஆயிரம் ரூபாய் மானியமாகக் கொடுக்கப்படுகிறது. அது தான் இப்பொழுதுள்ள திட்டம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு சத்துணவுத் திட்ட அமைச்சர் மற்றும் சமூகநலத்துறை அமைச்சர் ஆகியோரின் வேண்டுகோளுக்கிணங்க வினா எண்கள் 281, 282, 283, 284 ஆகியவை தள்ளிவைக்கப்படுகின்றன.

வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு : ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறியிடப் பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற் றது என்பதைக் குறிக்கும்.]

## 2. தகவல் கோரல்.

### (அ) ஓர் உறுப்பினரின் மாமனார் மோசடி செய்துள்ளதாக பத்திரிகையில் வந்துள்ள செய்தி.

திரு. மி. வின்சென்ட் : பேரவைத் தலைவர் அவர்களே, நேற்றைய தினம் ''எதிரொலி'' பத்திரிகையில் நாஞ்சில் வின்சென்ட்டின் மாமனார் ரூபாய் ஒரு இலட்சத்து நாற்பதாயிரம் மோசடி செய்தார் என்று அதாவது நாஞ்சில் வின்சென்ட்டின் தூண்டுதலின் பேரில் அவருடைய மாமனார் தங்கப்பன் என்பவர் 4 ஏக்கர் நிலத்தை விற்பதாக கூறி ஒரு இலட்சத்தி நாற்பதாயிரம் ரூபாயை

[திரு. மி. வின்சென்ட்] [1984 மார்ச் 12

கன்னியாகுமரி மாவட்டம் செம்பன்விளையைச் சேர்ந்த எஸ். துரைராஜ் என்பவரிடமிருந்து வாங்கி மோசடி செய்து விட்டார் என்று செய்தி வந்திருக்கின்றது...............

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இப்படிப்பட்ட செய்திகளை எல்லாம் இங்கு வந்து சொல்ல வேண்டியதில்லை. கோர்ட்களில் சென்று சொல்ல வேண்டிய பிரச்சினைகளை இங்கு வந்து சொல்வதால் பயன் இல்லை. (கூச்சல், குழப்பம்).

(முற்பகல் 10-00)

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. வின்சென்ட் அவர்கள் கூறியது சட்டமன்றத்தைப் பொறுத்த பிரச்சினை அல்ல. தனிப்பட்ட முறையில் வந்துள்ள பிரச்சினை இது. அவர் பக்கம் நியாயம் இருக்கலாம். ஆகவே இப்பிரச்சினையை நீதிமன்றத்திற்குக் கொண்டுபோய் நீதியை நிலைநாட்ட வேண்டிய முழுப் பொறுப்பும் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு உள்ளது. அவையிலே இப்படிப்பட்ட பிரச்சினைகளை எல்லாம் எழுப்புவதற்கு இடம் அளித்து விட்டால், அம்மாதிரி நிலைமைகள் வளர்ந்துவிட்டால் பின்னர் அவையைச் சமாளிக்க முடியாத நிலைமைதான் ஏற்படும். மாண்புமிகு உறுப்பினர் அவர்களே ஒரு வழக்கறிஞர். ஆகவே அவரிடத்திலே வந்து பிறர் யோசனை கேட்டால் அவர்களுக்கு யோசனை சொல்ல வேண்டிய நிலைமையிலே இருப்பவர் அவர். ஆகவே அவர் இந்தப் பிரச்சினையை இங்கு கிளப்பாமல் முறைப்படி அதற்கான நடவடிக்கை என்ன எடுக்கவேண்டுமோ அதை எடுக்க வேண்டும் என்று நான் பேரவை தலைவர் அவர்களின் மூலமாகக் கேட்டுக்கொள்கிறேன்.

## ஆ. கருநாடக மாநிலம் பெங்களூரில் நிலவும் கலவரத்தன்மை.

**திரு. துரைமுருகன் :** பேரவைத் தலைவர் அவர்களே, இரண்டு நாட்களாக பத்திரிகையில் வருகின்ற செய்திகளைப் பார்க்கிறோம். சர்நாடக மாநிலத்திலுள்ள பெங்களூரில் ஊரடங்கு உத்தரவு, போலீஸ் துப்பாக்கிப் பிரயோகம், அடிதடி, கலவரம் என்றெல்லாம் செய்திகள் வந்து கொண்டிருக்கின்றன. ஆகவே அங்கு என்ன நடக்கின்றன என்பதை இங்குள்ள அனைவரின் கவனத்திற்கும் கொண்டுவர வேண்டும். காரணம், அங்கே இலட்சக்கணக்கான தமிழர்கள் இருக்கின்றார்கள். ஆகவே அங்கே இருக்கின்ற அந்தத் தமிழர்களுக்குப் பாதுகாப்பு அளிக்கப்பட்டிருக்கின்றதா, அதுகுறித்து நம்முடைய அரசு கர்நாடக மாநில அரசோடு தொடர்பு கொண்டு இருக்கின்றதா என்பன பற்றிய செய்திகள் ஏதேனும் அரசினிடத்திலே இருக்கின்றனவா..



1984 மார்ச் 12]

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அது அடுத்த மாநிலப் பிரச்சினை. ஆகவே அதைப்பற்றி எல்லாம் பேசிக் கொண்டிருந்தால் பிரச்சினைகள் வளர்ந்துக் கொண்டே போகும்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, ஏற்கெனவே இந்த அவையிலே ஒத்திவைப்புத் தீர்மானம் கொண்டு வந்து பேசியபோது மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லாம் நிலைமைகளை விரிவாக எடுத்துத் தெரிவித்தார்கள். அதாவது அப்போதிருந்த சூழ்நிலைகளை எல்லாம் எடுத்துத் தெரிவித்தார்கள். நான் தமிழக அரசு எடுத்துக்கொண்டிருக்கின்ற நடவடிக்கைகளையும் குறிப்பிட்டேன்.

கருநாடக மாநில அரசின் முதலமைச்சர் அவர்களும், மற்றவர்களும் அங்கே அமைதியை ஏற்படுத்துவதற்கான முயற்சியில் ஈடுபட்டு வருகிறார்கள் என்று நான் எடுத்துச் சொன்னேன். ஊட்டியில் நடைபெற்ற நிகழ்ச்சியை ஒட்டி ஏற்பட்ட கலவரங்களின் பெரும்பகுதி அடக்கப்பட்டுவிட்டது. ஆகவே அமைதியை நிலைநாட்டுகின்ற பணி மேற்கொள்ளப்பட்டிருக்கின்றது. ஹோசூரில் மூன்று நாட்களாக நிறுத்தி வைக்கப்பட்டிருந்த தனியார் பஸ்கள் எல்லாம் விடப்பட்டு வருகின்றன. அவை எல்லாம் பெங்களூர் வரை சென்று வருகின்ற சூழ்நிலை ஏற்பட்டிருக்கின்றது. அரசு சம்பந்தப்பட்ட பஸ்களை மட்டும் கொஞ்சம் நிறுத்தி வைத்திருக்கிறோம். இன்றோ அல்லது நாளையோ விடலாம் என்றிருக்கிறோம். ஆனால் மற்ற தனியார் பஸ்கள் எல்லாம் போகின்றன. கர்நாடக மாநிலத்தின் தலைமைக் காவல் அதிகாரி அவர்கள் முழுப் பாதுகாப்பும் தருவதாகக் கூறியுள்ளார்.

ஆகவே நேற்று ஏற்பட்டிருக்கின்ற பிரச்சினைகளுக்கும், ஊட்டி சம்பவத்திற்கும் அதாவது திரு. ராஜ்குமார் சம்பந்தப்பட்ட பிரச்சினைக்கும் சம்பந்தம் இல்லை. இது வேறு ஒரு பிரச்சினை, வேறு ஒருவரைக் கைது செய்து அழைத்துச் சென்றார்கள் என்றும் அவர் இறந்து விட்டார் என்றும் அதன் காரணமாக கலவரம் ஏற்பட்டது என்றும் சொல்லப்படுகிறது. அங்கே இருக்கின்ற அரசியல் கட்சிகளுக்கிடையே பிரச்சினைகள் ஏற்பட்டு இருக்கின்றன. இந்திரா - காங்கிரஸ் கட்சிக்காரர்களுக்கும் மற்றவர்களுக்கும் இடையே பிரச்சினை ஏற்பட்டிருக்கின்றது. அதன் காரணமாக பெரும் விளைவுகள் எல்லாம் ஏற்பட்டு போலீஸ் அதிகாரிகள் தாக்கப்பட்டதாகவும் அங்கு ஊரடங்கு சட்டம் போடப்பட்டிருப்பதாகவும் தெரிகிறது. ஊட்டி சம்பவத்திற்கு, திரு. ராஜ்குமார் சம்பவத்திற்கு இது சம்பந்தம் உள்ளதல்ல. அது தனிப் பிரச்சினை. ஆனால் இந்தப் பிரச்சினையைப் பொறுத்தவரையில் ஓரளவு அமைதிப்படுத்துகிற சூழ்நிலைகள் ஏற்பட இரு பக்கமும் முயற்சிகள் நடைபெற்று வருகின்றன. தொடர்ந்து நடைபெறுவதற்கான முயற்சிகளை எடுத்துக் கொண்டு வருகிறார்கள். அங்கு இருக்கிற தமிழ்ப் பிரதிநிதிகளும்

மற்றவர்களும் அதிலே மிக அக்கறை காட்டி வருகிறார்கள். அதைத் தொடர்ந்து அரசு கண்காணித்து வருவதால் அமைதியை இரண்டு பக்கங்களிலும் இரண்டு இடங்களிலும் நிலைநாட்டுகின்ற எல்லா முயற்சிகளும் மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

## 3. ஒத்திவைப்புத் தீர்மானம்.

### ஸ்ரீ லங்கா கடற்படையினர் இராமேசுவரம் பகுதி மீனவர் சிலரை அவர்களது விசைப் படகுடன் கைது செய்துள்ளது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** திருவாளர்கள் பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம், ப. பொன்னுரங்கம் மற்றும் செ. சிவசாமி ஆகியோர் '' இராமேஸ்வரம் பகுதியிலே உள்ள மீனவர்கள் சிலரையும் மீன்பிடிப் படகையும் அண்மையில் இலங்கை கடற்படையினர் பலவந்தமாகக் கடத்திச் சென்றதால் மீனவர்களிடையே எழுந்துள்ள பதட்ட நிலை குறித்து விவாதிக்கப் பேரவையின் இதர அலுவல்களை ஒத்திவைக்க வேண்டும் '' என்ற தீர்மானத்தை மொழிய என் அனுமதி கேட்டு அறிவிப்புகள் கொடுத்துள்ளனர். இது எப்படி அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்தது என்பது குறித்து அவர்கள் மிகச் சுருக்கமாகக் கூறும்படி கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. ப. பொன்னுரங்கம் :** பேரவைத் தலைவர் அவர்களே, இராமேஸ்வரத்திலே மீன் பிடிக்கச் சென்ற விசைப் படகுக்காரர்களை இலங்கை இராணுவத்தினர் கடத்தினார்கள் என்ற செய்தி பத்திரிகையிலே எல்லாம் கடந்த வாரத்தில் வந்திருக்கிறது. இது முதல் முறையாக நடைபெறுகின்ற சம்பவம் அல்ல. தொடர்ந்து இராமேஸ்வரம் போன்ற பகுதிகளில் மீன் பிடிக்கச் செல்லுகின்ற தமிழ் மக்களை சிங்கள இராணுவத்தைச் சேர்ந்தவர்களோ அல்லது மற்றவர்களோ கடத்திச் சென்று காவலில் வைப்பது அல்லது சில நேரங்க்ளில் அவர்கள் காணாமல் சென்று விட்டார்கள் என்று அறிவிப்பு தருவது வாடிக்கையாகிவிட்டது. இப்பொழுது கூட இந்திய மீனவர்கள் 30 பேர்கள் இலங்கை இராணுவத்தால் கடத்தப்பட்டு அங்கே—இலங்கையிலே தங்க வைக்கப்பட்டார்கள் என்ற செய்தி பத்திரிகையிலே வந்திருக்கிறது. அந்த 30 பேர்களையும் உடனடியாக இந்தியாவுக்கு அனுப்ப வேண்டும். இந்தியாவும் அதற்குரிய முயற்சியில் ஈடுபட வேண்டுமென்று யாழ்ப்பாணத்திலிருக்கிற தமிழர்கள் வேண்டுகோள் விடுத்திருக்கிறார்கள் அதுவும் பத்திரிகையில் வந்திருக்கிறது. அதற்கு அடிப்படைக் காரணம் அவர்கள் இந்தியர்கள், குறிப்பாக தமிழர்கள் என்பதாகும். இலங்கையிலே இருக்கின்ற இராணுவத்தினரோ அல்லது அந்த அரசாங்கமோ கொன்றுவிடக்கூடும் என்ற அச்சத்தால் யாழ்ப்பாணத் தமிழர்கள் அத்தகைய வேண்டுகோளை வைத்திருக்கிறார்கள் என்பதை நான் இங்கே தெரிவிக்காமல் இருக்க முடியாது.





ஆனால் அதே நேரத்தில் கடந்த வாரம் பத்திரிகையிலும் டி, வி.யிலும் செய்தி அறிவித்தார்கள். என்ன என்று அறிவிப்பு வருகிறது தெரியுமா ? இராமேஸ்வரத்தைச் சேர்ந்த 5 மீனவர்கள் இறந்துவிட்டிருப்பார்கள் என்று கருதப்படுகிறது என்ற செய்தியை கடந்த வாரம் டி.வி.யும் பத்திரிகையும் நமக்குத் தந்திருக்கிறது. கடத்தப்பட்ட அந்த மீனவர்களை இலங்கை இராணுவத்தினர் கொன்றிருப்பார்கள் என்று கருதப்படுகிறது என்று தமிழகத்தைச் சேர்ந்த அசிஸ்டன்ட் டைரக்டர் அளவிலுள்ள அதிகாரியே டி. வி. மூலமாக செய்தியை அறிவிக்கிறார். ஆக, என்னுடைய சந்தேகமெல்லாம் கடத்தப்பட்டவர்களை உரிய நேரத்தில் மீட்பதற்கு நம்முடைய மாநில அரசோ அல்லது மத்திய அரசாங்கமோ முயற்சித்திருப்பார்களானால் நிச்சயமாக அவர்கள் காப்பாற்றப்பட்டிருக்கக்கூடும். ஆனால் மத்திய அரசும் மாநில அரசும் அதற்குரிய முயற்சியில் உரிய நேரத்தில் ஈடுபடாத காரணத்தால் அவர்கள் கொல்லப்பட்டிருக்கலாம் என்ற சந்தேகம் எனக்கு ஏற்படுகிறது. ஆக, இந்த மாநிலத்தைச் சேர்ந்த தமிழ் மக்கள் குறிப்பாக மீனவர்கள் இப்படி ஆதரவற்றவர்களாக, அநாதைகளாக நடத்தப்படுவது வன்மையான கண்டனத்திற்குரியது என்பது என்னுடைய தாழ்மையான கருத்தாகும்.

(முற்பகல் 10-10)

அது மட்டுமல்ல. நம் மீனவர்கள் காணாது போவார்களானால் அவர்களைக் கண்டுபிடிக்க பல்வேறு நடவடிக்கைகளை எடுக்க இந்த மாநில அரசு தயாராக இருக்கிறது என்று பல கட்டங்களிலே இதே மாமன்றத்திலே தெரிவிக்கப்பட்டது. உதாரணமாக, ரெஸ்கியூ போட்ஸ் நாங்கள் வாங்குகிறோம். ஒவ்வொரு போட்டும் 10 லட்சம் ரூபாய். அந்த படகுகளை வைத்துக் கொண்டு மீனவர்களை காணவில்லை என்றால் உடனடியாக நாங்கள் நடவடிக்கை எடுக்கத் தயாராக இருக்கிறோம் என்று இதே மன்றத்தில் அறிவிக்கப்பட்டது. அதுமட்டுமல்ல. நம்முடைய மாநில சர்க்காருக்குச் சொந்தமாக அண்மையில் ஒரு ஹெலிகாப்டர் வாங்கப்பட்டது. அந்த ஹெலிக்காப்டர் எதற்கெல்லாம் பயன்படுத்தப்படும் என்று நம்முடைய முதலமைச்சர் அவர்கள் சொல்கிறபோது, மீனவர்கள் காணாமல் போவார்களானால் அவர்களைத் தேடுவதற்கு இந்த ஹெலிக்காப்டர் பயன்படுத்தப்படும் என்று தெரிவித்தார். ஆனால் இந்த 30 மீனவர்கள் காணாமல் போனார்கள் என்று தெரிந்தவுடன் இத்தகைய எந்த முயற்சியையாவது இந்தச் சர்க்கார் எடுத்ததா என்பதை அறிய விரும்புகிறேன். ஆகவே நம்முடைய தமிழக அரசு உரிய முயற்சியை எடுத்திருப்பார்களானால் இந்த ஐந்து மீனவர்களை காப்பாற்றி இருக்கலாம். அதற்கு மாறாக இறந்ததை அறிவிப்பு செய்வதற்கு நம்முடைய அதிகாரியை பயன்படுத்தத்தான் இந்த சர்க்கார் இருக்கிறதே தவிர இருப்பவர்களை காப்பாற்றுவதற்காக, கொல்லப்படுபவர்களை காப்பாற்றுவதற்காக இந்த சர்க்கார் இல்லை, குறிப்பாகவும், சிறப்பாகவும் மீனவர்கள் பிரச்சினையில். ஆகவேதான் நான் மிக வேதனையோடு சொல்லிக் கொள்கிறேன். பொறுப்பற்ற

[திரு. ப. பொன்னுரங்கம்] [1984 மார்ச் 12

முறையிலே இரண்டு சர்க்கார்களும் நடந்து கொள்கிற காரணத்தாலேதான் மீனவர்கள், குறிப்பாக இராமேசுவரப் பகுதி மீனவர்கள் இத்தகைய அவல நிலைக்கு, உயிர்களை இழக்கிற நிலைக்கு ஆளாகி இருக்கிறார்கள் என்பதை நான் சுட்டிக்காட்டாமல் இருக்க முடியாது.

அதுமட்டுமல்லாமல் நம்முடைய மாநில சர்க்காரை கேட்டுக்கொள்வது, இறந்தவர்களுக்கு 5,000 ரூபாய் என்று நாம் அறிவித்து இருக்கிறோம். மாண்புமிகு நாவலர் அவர்கள் பொறுப்பிலே இருந்தபோது நான் கூட ஒன்றை சுட்டிக்காட்டினேன். 'டெத் சர்டிபிகேட்' புரட்யூஸ் பண்ணவேண்டுமென்று சொல்வார்கள். இலங்கைக்கு அழைத்துச் செல்லப்பட்டு, சொல்லப்பட்ட அந்த மீனவர்களுக்கு டெத் சர்டிபிகேட் எங்கே இருந்து வாங்குவது? ஆகவே, நான் தெரிவித்துக்கொள்வது, அந்த ஐந்து குடும்பங்களுக்கும் எந்தவிதமான நிபந்தனையும் இன்றி, உடனடியாக சர்க்கார் அந்த மானியத்தை அந்த காம்பன்சேஷனை பட்டுவாடா செய்யவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். எந்த விதமான ரெக்கார்டும் தேவையென்று கேட்க வேண்டியதில்லை. இராமேசுவரம் பகுதியில் மீன்பிடிக்கச் சென்றார்கள் என்பதற்காக அவர்களுக்கு இந்த அவலநிலை ஏற்பட்டிருக்கிறது. மத்திய சர்க்காரானாலும், மாநில சர்க்காரானாலும் நாங்கள் எல்லாம் கோஸ்டல் சர்ச் செய்திருக்கிறோம். ஏரியா நேவி வைத்திருக்கிறோம், தமிழர்களோ, இந்தியர்களோ, பாதிக்காத அளவிற்கு ஏற்பாடுகளை செய்திருக்கிறோம் என்று இரண்டு சர்க்கார்களும் அறிவிக்கிறது அல்லவா? அது உண்மையாக இருக்குமானால் இந்த அவலநிலை ஏற்பட்டிருக்குமா? இப்போது திருநெல்வேலி மாவட்டத்தில் தாமிரபரணியில் பெருத்த வெள்ளம் என்று பார்க்கிறோம். நல்ல தண்ணீர் கடலில் கலக்கிற போது அங்கே மீன் உற்பத்தி அதிகமாவதற்கு வாய்ப்பு உண்டு. ஆகவே, மழை நீர் கலக்கிற இந்த நேரத்திலே அங்கே மீன் உற்பத்தி அதிகமாகும். அதைப் பிடிக்க சிங்களவர்களே கூட வரலாம். பலமுறை அப்படி வந்திருக்கிறார்கள். மீன்பிடிக்க வந்து, நம்மோடு சர்ச்சை செய்து இராமேசுவரத்தில் உள்ள தமிழர்களை அழைத்துச் சென்று, இவர்கள் எங்கள் எல்லைக்குள் வந்து விட்டார்கள் என்றெல்லாம் சொல்வதற்கு, பிற்காலத்திலே வாய்ப்பு அதிகமாக ஏற்படக் கூடும். ஆகவே, மாநில சர்க்காரும் மத்திய சர்க்காரும் உரிய முறையிலே நடவடிக்கை எடுத்து, மீண்டும் இதுபோன்ற உயிர் சேதங்கள் ஏற்படாத வண்ணம் காப்பாற்ற வேண்டும். அதற்குரிய நடவடிக்கைகளை தமிழக அரசு எடுக்கவேண்டும். இதுபோன்ற நிகழ்ச்சிகளுக்கு முற்றுப்புள்ளி வைக்கவேண்டும். இதைக்குறித்து இன்னும் விரிவாக விவாதிப்பதற்கு இந்த அவையின் இதர அலுவல்களை ஒத்திவைக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்** : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இராமேஸ்வரம் பகுதியில் உள்ள மீனவர்கள் சிலரையும், மீன்பிடி படகையும் அண்மையில்



1984 மார்ச் 12] [டாக்டர் இரா. நெடுஞ்செழியன்]

இலங்கை கடற்படையினர் பலவந்தமாக கடத்திச் சென்றுள்ளதால் மீனவ மக்களிடையே எழுந்துள்ள பதட்ட நிலை குறித்து ஒரு ஒத்திவைப்புத் தீர்மானத்தைக் கொடுத்து, அதற்கான காரணங்களை விளக்கும்போது மாண்புமிகு உறுப்பினர் சில கருத்துக்களை இங்கே தெரிவித்து இருக்கிறார்கள்.

பெருமளவில் மீன்கள் முக்கியமாக இறால் கிடைக்கும் இடமான கச்சத்தீவு, இந்தியா-ஸ்ரீலங்கா ஆகிய இரு நாடுகளின் ஒப்பந்தப்படி ஸ்ரீலங்காவிற்கு ஒப்படைக்கப்பட்டு விட்டபடியால், இராமேசுவரத்தைச் சேர்ந்த மீனவர்களின் மீன் பிடிக்கும் கடல் பகுதி மிகவும் குறுகிவிட்டது. இரு நாடுகளின் எல்லையைக் கடலில் குறிப்பிடும் அடையாளமும் நம் மீனவர்களுக்குப் பல சமயங்களில் தென்படாமல் போய் விடுகிறது. எனவே, இவர்கள் நம் நாட்டு கடல் எல்லையைத் தாண்டி மீன் பிடிக்கச் சென்று விடுகின்றனர். அந்நேரங்களில் ஸ்ரீலங்கா கடற்படையினர் நம் மீனவர்களைத் தாக்கி விடுவதோடு, பிடித்து வைத்திருக்கும் மீன்களையும் அபகரித்துக் கொள்கிறார்கள் என்று புகார்கள் சில அரசுக்கு வந்தன. ஆனால் நமது மீனவர்களைத் தாக்கி அடித்தார்களா என்பது குறித்து நிச்சயமாக, ஆதாரப் பூர்வமான தகவல் இல்லை. இதுபோன்ற சம்பவங்களின் தகவல்கள் கிடைக்கப் பெற்றவுடன் இராமேசுவரம் மீன்துறை உதவி இயக்குநர் மண்டபத்தில் உள்ள இந்தியக் கடற்படைக் காப்பாளருடன் தொடர்பு கொண்டு இதுபோன்று அசம்பாவிதங்கள் ஏற்படாத வண்ணம் நடவடிக்கை எடுத்து வருகிறார். அதுமட்டுமல்லாமல் இலங்கைக் கப்பற்படையினரால் கைது செய்யப்படும் மீனவர்களையும், கைப்பற்றப்படும் படகுகளையும இலங்கையிலுள்ள தூதரகம் இரண்டாம் செயலருடன் தொடர்பு கொண்டு விசைப் படகுகளையும், மீனவர்களையும் மீட்டிட உடனுக்குடன் நடவடிக்கைகள் எடுத்து வந்துள்ளார்.

1983 ஆம் ஆண்டு இரண்டாம் பகுதிக்குப் பின்னர் இச்சம்பவங்கள் அதிகரித்தன. இதன்விளைவாக 1983 ஆம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 18-ம் நாளிலிருந்து இராமேஸ்வரப் பகுதியிலுள்ள மீனவர்களில் 600 பேர் மீன்பிடிக்கச் செல்வதை நிறுத்திவிட தீர்மானித்து இலங்கை கடற்படையினர் தொல்லைகள் மற்றும் ஆபத்துக்களிலிருந்து தங்களைக் காப்பாற்ற துரித நடவடிக்கை எடுக்கக் கோரினார்கள். இதை வலியுறுத்தி 22—8—1983 அன்று உண்ணாவிரதம் இருக்கவும் செய்தனர்.

மேலே கூறப்பட்ட சூழ்நிலைகள் நமது முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டது. முதலமைச்சர் அவர்கள் மத்திய வெளியுறவு அமைச்சர் அவர்களுக்கு தங்களது 4—10—83 நாளிட்ட நேர்முகக் கடிதத்தில் கீழ்க்கண்டவாறு எழுதினார்கள்;

ாதி பொருளு

[டாக்டர் இரா. நெடுஞ்செழியன்] [1984 மார்ச் 12

''சமீபத்தில் நடந்த நிகழ்ச்சிகளைக் கருத்திற்கொண்டு, இலங் கைக் கப்பற்படையினர் இந்திய மீனவர்களைத் துன்புறுத்துவதை தடுக்க மைய அரசின் வெளியுறவு அமைச்சர் அவர்கள் தம் வரம் பிற்குட்பட்ட அதிகாரத்தைப் பயன்படுத்தி அச்செயல்களை இலங்கை அரசின் கவனத்திற்குக் கொண்டுவருமாறு கேட்டுக் கொள்ளப்பட்டார்கள். கடலில் மீன்பிடிக்கும் பொழுது தவறு தலாக இந்திய கடல் எல்லையைக் கடந்து, இலங்கை கடல் எல்லைக்குள் சென்று கடலில் தவிப்பிற்குள்ளாகிய மீனவர்களை மனிதாபிமானத்துடன் நடத்தி அவர்கள் பத்திரமாக இந்தியா விற்கு திரும்புவதற்கான ஏற்பாடுகளைச் செய்யுமாறும், மீன் பிடிக்கச் சென்று இலங்கையில் கைதாகியுள்ள இந்திய மீனவர் களை விடுதலை செய்வதற்கும் அவர்களது உடைமைகளைத் திருப்பி அனுப்புவதற்கும், தயவு காட்டுமாறு இலங்கை அரசைக் கேட்டுக்கொள்ள மத்திய அரசு அமைச்சர் அவர்கள் கேட்டுக் கொள்ளப்பட்டார்கள்.'' மைய அரசின் வெளியுறவு அமைச்சர் அவர்களும் தமது அக்டோபர் திங்கள் 17-ம் நாளிட்ட கடிதத்தில் கீழ்க்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்கள்.

''மீனவர்கள் அடங்கிய ஒரு குழு இராமேசுவரத்திலிருந்து புறப்பட்டு பிரதமரின் சிறப்பு பிரதிநிதி திரு. ஜி. பார்த்தசாரதி அவர்களை சந்தித்து தங்களது குறைகளை எடுத்துக் கூறினார்கள். அதற்கேற்ப சிறப்புப் பிரதிநிதி அவர்களும இலங்கை குடியரசுத் தலைவர் திரு. ஜெயவர்த்தனே அவர்களையும மற்றும் வெளி யுறவு அமைச்சர் அவர்களையும் சந்தித்து இந்திய மீனவர்கள் பிரச்சினைகளை எடுத்துக் கூறினார்கள். அதற்குப் பிறகு இந்திய ஹைகமிஷனர் அவர்களும் இலங்கை அரசு வெளியுறவு அமைச்சர் மற்றும் கப்பற்படை தளபதி ஆகியோர்களுடன் விரிவாக இதுகுறித்து விவாதித்துள்ளார்கள். இலங்கை அரசினால் கடந்த ஜூன் திங்களில் கைப்பற்றப்பட்ட இந்திய விசைப்படகு ஒன்றி னையும் அதிலிருந்து 8 மீனவர்களையும் இலங்கை அரசு விடுவித்து இந்தியாவுக்கு திருப்பி அனுப்பியுள்ளன. மேலும் இலங்கை கடலில் தவிப்பதற்கு உள்ளாகும் மீனவர்கள் மனிதாபிமானத்துடன் நடத்தப்படுவார்கள் என்று இலங்கை அரசு உறுதியளித்து இருப்ப தாகவும் தெரிவித்துள்ளார்கள். இந்நிலையில் இந்திய மீனவர் களுக்கு தகுந்த பாதுகாப்பும் நமபிக்கையும் ஏற்படுத்தும் வகை யில் இந்திய கடலோர கப்பற்படையின் இரு கலங்கள் ரோந்து பணிக்கு விடப்பட்டுள்ளன. இந்திய கடலோர கப்பற்படை மற்றும் இலங்கை கப்பற்படையினர் இடையே 1983 அக்டோபர் திங்கள் 26 முதல் 28 வரை நடைபெறும் செயற்குழு கூட்டத்தில் இது தொடர்பான பிரச்சினைகள் பற்றியும் விவாதிக்கப்படும் என்றும் தமிழக அரசின் சார்பில் அதிகாரிகள் கலந்து கொள் வார்கள் என்றும் தெரிவித்தார்கள்.

மேலும் இந்திய-இலங்கை அரசுகளைச் சார்ந்த கடற்படை மற்றும் அரசு அலுவலர்களுக்கிடையே இருதரப்பு பேச்சு வார்த் தைகள் ஆண்டுதோறும் நடத்தி, பிரச்சினைகளை சுமுகமான முறையில் தீர்த்துக்கொள்வதற்கு வகைச் செய்யப்பட்டுள்ளது.



1984 மார்ச் 12] [டாக்டர் இரா. நெடுஞ்செழியன்]

கடைசியாக பம்பாயில் நடந்த இந்திய-இலங்கை அலுவலர் கள் பேச்சு வார்த்தையிலும் இது குறித்துப் பேசப்பட்டது. இரு தரப்பாரும் தத்தம் மீனவர்கள், வரையறுக்கப்பட்ட கடல் எல்லைகளைக் கடக்காதவாறு நடவடிக்கை எடுக்க வேண்டும். இரு நாடுகளின் கடல் எல்லைகளைக் கடக்கும் விசைப் படகுகளின் பதிவு எண்கள், இடம், தேதி அடங்கிய தகவல்களை இரு நாடு களும் பரிமாறிக் கொண்டு, அத்துமீறல்களில் வழக்கமாக ஈடு படும் மீனவர்கள்மீது உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும்.

கடலில் மீன் பிடிக்கும்பொழுது பருவக்கால கோளாறினால் கடல் எல்லையைக் கடப்பவர்கள், இறந்துவிடுபவர்கள் பற்றிய செய்திகளை உடனுக்குடன் இரு தரப்பு கப்பற்படை தலைவர் களுக்கும் உடனடியாகத் தெரிவிக்க வேண்டும். இதன் மூலம் மீட்புப் பணிகளில் விரைந்து ஈடுபட ஏதுவாக இருக்கும். அத் துடன் இரு நாடுகளின் ரோந்துப் பணிகளையும் தீவிரயாக்க வேண்டும்.

இலங்கை கப்பற்படை தலைமை தளபதி, இலங்கை கடல் எல்லையைக் கடக்கும் மீனவர்களை மனிதாபிமான அடிப்படை யில் நடத்த எல்லா முயற்சிகளும் எடுக்கப்படும் என்று உறுதி அளித்தார.

(முற்பகல் 10-20)

கடைசியாக, பிப்ரவரி 23 ஆம் நாளன்று இராமேசுவரத்தி லிருந்து மீன் பிடிக்கச்சென்ற தனியார் விசைப்படகு 'கிருஷ்ணா' காணப்படவில்லை என்று 27-2-84 அன்று தகவல் பெறப் பட்டது. உடனடியாக அந்தப் படகைத் தேடுமாறு கடலோர கடற்படை அலுவலர்கள் மற்றும் முக்கிய அதிகாரி மெர்க்கன டைல் மெரைன் துறையினரும் கேட்டுக்கொள்ளப்பட்டார் கள். மேலும் இலங்கையிலுள்ள இந்திய தூதரக இரண்டாம் செயலருக்கும் இதுபற்றி தகவல் கொடுக்கப்பட்டு சம்பந்தப் பட்ட படகு மற்றும் அதில் சென்ற நபர்களையும் தேடுமாறு கேட்டுக்கொள்ளப்பட்டார். தற்போது 'கிருஷ்ணா' என்ற படகும் அதில்சென்ற படகோட்டிகளும் இலங்கை அதிகாரிகளால் கைது செய்யப்பட்டதாகவும் படகின் தலைவர் (ஸ்கிப்பர்) நீதி மன்ற பாதுகாப்பு (ஜுடிசியல் கஸ்டடி)-ல் வைக்கப்பட்டுள்ளதா கவும மற்றைய நான்கு நபர்களும் (க்ரூ) விசாரணைக்காக சொழும்பிற்கு கொண்டு செல்லப்பட்டுள்ளதாக டெல்லியில் உள்ள வெளிவிவகார தந்தி பிரிவு தெரிவித்துள்ளது. ஆகவே, அந்த 5 பேர் இறந்து விட்டார்கள் என்ற நிலைமை இல்லை. அந்த 5 பேரும் கைது செய்யப்பட்டு, பாதுகாப்பில் தான் வைக்கப்பட் டுள்ளனர். ஆகவே, கொழும்பிவிலுள்ள இந்த ஹைகமிஷனர் இது சம்பந்தமாக மீனள இயக்குனரால் தொடர்பு கொள்ளப் பட்டார். மைய அரசுக்கும் இவ்விஷயம் தெரிவிக்கப்பட்டுள் ளது. மேலும் மைய அரசு, இலங்கையிலுள்ள இந்திய ஹை

கமிஷனரை அவருக்கு இலங்கை அரசிடம் உள்ள தனது செல்வாக்கைப் பயன்படுத்தி, படகு மற்றும் அதில் சென்றவர்களை விடுவிக்க நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

அடுத்து, 1984 ஆம் ஆண்டு சனவரித் திங்கள் 22 ஆம் நாள் இலங்கை நாட்டைச் சார்ந்த படகு 'புஷ்பராணி' அதிலிருந்த ஓட்டுநர்கள் இராமேசுவரம் காவல் துறையினரால் கைது செய்யப்பட்டார்கள். மைய அரசு படகின் தலைவரை குடியேற்ற சட்டத்தின்கீழ் (எமிகிரேஷன் ஆக்ட்) நடவடிக்கை எடுக்குமாறும், படகை நிறுத்தி வைக்குமாறும், அதிலிருந்த ஓட்டுநர்களை விடுவிக்குமாறும் 22—1—1984 நாளிட்ட தொலையச்சு மூலம் கேட்டுக்கொண்டது. அதன் படி நடவடிக்கை எடுக்குமாறு இராமநாதபுரம் மாவட்ட ஆட்சித் தலைவர் மற்றும் காவல் துறையினருக்கு தகவல் அனுப்பப்பட்டுள்ளது. குற்றஞ் சாட்டப்பட்ட படகின் தலைவர் 14—2—1984 அன்று கோர்ட்டில் ஆஜர் செய்யப்பட்டு, அபராதம் விதிக்கப்பட்டுள்ளதாக இராமநாதபுரம் மாவட்ட ஆட்சித் தலைவர் தெரிவித்துள்ளார்.

இதுபோன்று அவர்கள் எல்லைப் பகுதியைக் கடக்கும்போது அவர்கள் நடவடிக்கை எடுக்கிறார்கள். ஆகவே, அந்தப்படகில் சென்றவர்கள் இறந்து விட்டார்கள் என்ற நிலைமை இல்லை. கைது செய்யப்பட்டு காவலில் தான் வைக்கப்பட்டுள்ளனர். அவர்களை விடுதலை செய்யத்தக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. மத்திய அரசின் மூலம் அதற்கான நடவடிக்கைகளை நாம் மேற்கொண்டு வருகிறோம். மேலும், நம் மீனவர்களை இலங்கை கடல் எல்லையைக் கடக்கும்போது உடனடியாக அக்கறைகாட்டி தடுக்கும் பணியிலும், தண்டிக்கும் பணியிலும் இலங்கை கடற்படையினர் ஈடுபடுவதுபோல், நமது கடல் எல்லைப் பாதுசாப்புப் படையினரும் உடனடியாக உரிய நடவடிக்கைகள் எடுக்க வேண்டும் என்று சம்பந்தப்பட்ட கடல் எல்லை பாதுகாப்புப் படைதளபதிக்கு எடுத்துக் கூறப்பட்டுள்ளது.

இராமேஸ்வரம் மீனவர்கள் இராமேசுவரம் கடற்பகுதியில் பயமின்றி மீன்பிடி தொழில் நடத்திட மண்டபம் கடற்கரை காப்பாளரால் அவர்தம் கீழ் உள்ள படகின் மூலம் உரிய ரோந்து பணி மேற்கொள்ளப்பட்டுள்ளது. மேலும் இந்திய மீனவர்களுக்கு தகுந்த பாதுகாப்பும் நம்பிக்கையும் ஏற்படுத்தும் வகையில் இந்திய கடலோர கப்பற்படையில் இரு கலங்கள் ரோந்துப் பணிக்கு மைய அரசால் அனுப்பப்பட்டுள்ளது. தற்பொழுது இராமேஸ்வரம் பகுதியில் பதட்டநிலை எதுவும் இல்லை என்பதைக் கூறிக்கொண்டு மேலே கூறப்பட்ட காரணங்களினால் இந்தப் பிரச்சினை குறித்து விவாதிக்க பேரவையின் இதர அலுவலல்களை ஒத்திவைக்கத் தேவையில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.



மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு அவை முன்னவரின் விளக்கத்திற்குப்பின் பேரவையின் இதர அலுவல்களை ஒத்திவைத்து இத் தீர்மானம் குறித்து விவாதிக்கத் தேவை இல்லையென்பதால், இதற்கு இசைவு மறுக்கப்பெறுகிறது.

## 4. கவன ஈர்ப்பு.

### சலவைத் தொழிலாளர்களுக்கென திருவண்ணாமலையில் ஒதுக்கப் பெற்ற இடங்கள் ஆக்கிரமிக்கப்பெறுவது.

திரு. பெ. சு. திருவேங்கடம் : தலைவர் அவர்களே, ''வட ஆற்காடு மாவட்டம் திருவண்ணாமலை நகரத்தில் சலவைத் தொழிலாளர்களுக்கென்று ஒதுக்கப்பெற்ற இடங்களை தனியார் ஆக்கிரமிப்பு செய்துள்ளது குறித்த'' அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு பிற்பட்டோர் நலத்துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. எம். ஆர். கோவேந்தன் : தலைவர் அவர்களே, பேரவை முன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்.

அறிக்கை;

சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட நிலம் திருவண்ணாமலை நகரத்தில் சலவையாளர்களால் உபயோகிக்கப்பட்டு வந்த இடத்தைப் பற்றியது.

மேலே குறிப்பிட்ட இடம் சர்வே எண். டி. எஸ். 96 என்ற எண்ணுடையது. அது செட்டிக்குளம் புறம்போக்கு என்று குறிப்பிடப்பட்டுள்ளது. அது கீழ்க்கண்ட இடங்களை எல்லைகளாகக் கொண்டுள்ளது :—

| | | |
|---|---|---|
| வடக்கு | டி. எஸ். எண். 95 | கோயில் பட்டா நிலம். |
| | டி. எஸ். எண். 97 | தீர்வையில்லா தரிசு நிலம் |
| தெற்கு | டி. எஸ். எண். 521/1 | பட்டா புன்செய் நிலம். |
| கிழக்கு | டி. எஸ். எண். 95 | கோயில் பட்டா நிலம். |
| மேற்கு | டி. எஸ். எண். 95 | கோயில் பட்டா நிலம். |
| | டி. எஸ். எண். 521/1 | தீர்வையில்லா தரிசு நிலம் |

சர்வே எண். டி. எஸ். எண். 96-ல் செட்டிகுளம் என்று ஒரு பெரிய குளம் ஒன்றும், பிள்ளை குளம் என்று ஒரு சிறிய குளமும் உண்டு. அதன் விஸ்தீரணம் 5.07 ஏக்கர். இரண்டு குளங்களும் ஒரு

சிறு பகுதியில் உள்ளன. மற்றுமுள்ள இடம் காலியிடமாக உள்ளது. காலியிடங்களில் 34 வீடுகள் பல ஆண்டுகளுக்கு முன்னர் ஆக்கிரமிப்பு செய்து கட்டப்பட்டுள்ளன. காலியிடங்கள் இருப்பதினால் அதனை ஆக்கிரமிப்பதற்கு பல பேர்கள் முயன்றும் அதை சலவைத் தொழிலாளர்கள் தடுத்து இருக்கிறார்கள். அவ்விடம் சலவையாளர்கள் துணிகளை சாய வைப்பதற்கும் கழுதையை மேய்ப்பதற்கும் பயன்பட்டு வருகிறது. சலவையாளர்கள் அக்குளங்களை உபயோகிப்பதில்லை. அவர்கள் அதற்கு அருகிலுள்ள வண்ணான்குளம் (சர்வே எண். 521/1) என்பதை உபயோகிக்கிறார்கள்.

புதிய பஸ் நிலையம் கட்டுவதற்காக அங்குள்ள ஒன்பது அருந்ததியாளர்கள் எண். 96 எண்ணுள்ள நிலத்தில் தற்காலிகமாக சலவையாளர் சம்மதத்துடன் குடியேற்றப்பட்டார்கள். ஆனால், அவர்கள் சர்வே எண். 520, 95-ல் குடியேறினார்கள். அங்குள்ள எல்லாக் காலியிடங்களும் வீடு கட்டுவதற்கு ஒதுக்கப்படும் என்று கருதி மற்ற வீடு அற்றோர்கள் தங்களுக்கு வீட்டு மனை ஒதுக்கும்படி கோரினார்கள். வருவாய் கோட்ட அலுவலர் மேற்படி சர்வே எண். 96,520 குளம் புறம்போக்கு என்றும் அவைகள் வீடு கட்டுவதற்காக ஒதுக்கப்படமாட்டா என்றும் கூறியதினால் 4–2–84-ல் அங்கு குடி வந்தவர்கள் தாங்களாகவே காலி செய்து விட்டார்கள். அங்கு யாதொரு கலவரமும் ஏற்படவில்லை. வடாற்காடு மாவட்ட ஆட்சியரும் 17-2-84 அன்று அவ்விடம் சென்று பார்வையிட்டுள்ளார். சலவையாளர்கள் டி.எஸ். 521/1 என்ற எண்ணுள்ள இடத்தில் தங்களுடைய வேலைகளைக் கவனித்துக் கொண்டிருந்தார்கள். எனவே அங்கு ஏற்பட்டது ஒரு சிறிய தகராறு மட்டுமே. சலவையாளர்களுக்கு யாதொரு தொல்லையுமில்லை. அவர்கள் துன்பத்திற்காளானதாகக் கூறுவது சரியல்ல.

**திரு. பெ. சு. திருவேங்கடம்:** பேரவைத் தலைவர் அவர்களே, இந்த விவர அறிக்கையிலே சொல்லியிருப்பது பெரும்பாலும் அங்கே ஆக்கிரமிப்பு நடைபெற்று இருக்கிறது என்பதை ஒப்புக்கொள்வதாக இருக்கிறது. ஏற்கனவே திருவண்ணாமலை நகரம் வளர்ந்து வரும் ஒரு நகரம். அங்கே இருக்கின்ற சலவைத் தொழிலாளர்களுக்கு வேறு ஆறு அல்லது ஓடை கிடையாது. அந்தக் குளத்துப் பகுதியை நம்பித்தான் அவர்கள் துணியைத் துவைப்பதோ அல்லது துணியைக் காயவைப்பதோ போன்ற பணிகள் நடைபெற்றாக வேண்டும். அதிலே இப்படிப்பட்ட முறையில் வீடுகளைக் கட்டுகிறோம் என்ற பெயராலே ஆக்கிரமிப்பு நடைபெறுமானால் சலவைத் தொழிலாளர்கள் பெரிதும் பாதிக்கப்படுவார்கள். அந்தக் காரணத்தால் அவர்கள் அரசாங்கத்தின் கவனத்தை ஈர்ப்பதற்காக திருவண்ணாமலை நகரத்தில் ஒரு ஊர்வலத்தை நடத்தினார்கள்.

அதிலே அவர்களுக்கு உதவியாக இருக்கிற கழுதைகளை ஓட்டிக்கொண்டு, அதன் முதுகின் மேலே கோரிக்கைகளை எல்லாம் எழுதி, திருவண்ணாமலை கோட்டாட்சியர் அலுவலகத்திற்குச்



சென்று மனுக்களைக் கொடுத்தார்கள். ஆக்கிரமித்தவர்களை அறவே நீக்கவும் அவர்கள் இனி இப்படிப்பட்ட ஒரு பிரச்சினை எழுப்பாமல் இருக்கவும் அரசாங்கம் தக்க நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எம். ஆர். கோவேந்தன்:** மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களே, அங்குள்ள எல்லாக் காலி இடங்களும் வீடு கட்டுவதற்கு என்று கருதி, மற்ற வீடு அற்றோர்கள் தங்களுக்கு வீட்டு மனை ஒதுக்கும்படி கோரினார்கள். வருவாய் கோட்ட அலுவலர் மேற்படி சர்வே எண். 96,520 குளம் புறம்போக்கு என்றும் அவைகள் வீடு கட்டுவதற்காக ஒதுக்கப்படமாட்டா என்றும் கூறியதினால் 4—2—1984 அன்று அங்கு குடிவந்தவர்கள் தாங்களாகவே காலி செய்து விட்டார்கள். அங்கு யாதொரு கலவரமும் ஏற்பட்டதாகத் தெரியவில்லை. அதையொட்டி மாவட்ட ஆட்சித் தலைவரும் 17—2—1984 அன்று அவ்விடம் சென்று பார்வையிட்டுள்ளார். சலவையாளர்கள் டி.எஸ். எண். 521/1 என்ற இடத்தில் தங்களுடைய வேலைகளைக் கவனித்துக்கொண்டிருந்தார்கள். எனவே அங்கு ஏற்பட்டது ஒரு சிறிய தகராறு மட்டுமே. சலவையாளர்களுக்கு யாதொரு தொல்லையுமில்லை. அவர்கள் துன்பத்திற்காளானதாகக் கூறுவது சரியல்ல.

**திரு. பெ. சு. திருவேங்கடம்:** தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இங்கே அறிக்கையில் இருப்பதைத்தான் படித்தார்கள். அவர்கள் அதிகாரிகள் சொல்வதைப் படித்து இருக்கிறார்கள். அதை நான் மறுக்கவில்லை. ஆனால் நான் சொல்லியிருக்கின்ற உண்மையை அமைச்சர் அவர்கள் புரிந்துகொள்ள வேண்டும். அங்கே பிரச்சினை— ஏற்கனவே சிலர் வீடுகள் கட்டிக்கொண்டிருந்தார்கள். பிறகு அதையே பயன்படுத்திக் கொண்டு எல்லா இடங்களையும் ஆக்கிரமிப்பு செய்துகொள்வதற்கான ஏற்பாடுகள் நடைபெற்று ஆங்காங்கே, அதற்கான கம்புகள் எல்லாம் நடப்பட்டன. இதற்குத்தான் அவர்கள் ஊர்வலம் நடத்தினார்கள். பிறகு அதிகாரிகள் சென்று ஓரளவிற்கு அதைக் கட்டுப்படுத்தினார்களே தவிர, நிரந்தரமாக அவைகள் நீக்கப்படவில்லை. நான் அமைச்சரிடத்திலே இந்த இடத்திலே, இந்த நேரத்திலே கேட்டுக்கொள்ள விரும்புவது—நீங்கள் அரசாங்கத்திலிருந்து அந்த இடத்தை யாரும், எந்த தனி நபரும் வீடோ அல்லது வேறு எந்தவிதமான காரியத்திற்கோ பயன்படுத்தாமல், சலவையாளர்கள் மட்டும் பயன்படுத்துவதற்கான உரிய நடவடிக்கையை அரசாங்கம் எடுக்கும் என்ற உறுதியை அளிக்குமேயானால், அந்தப் பிரச்சினை எழாமல் இருக்கும். அந்த உறுதியை எடுக்க அமைச்சர் அவர்கள் தக்க நடவடிக்கை எடுப்பார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எம். ஆர். கோவேந்தன்:** பல ஆண்டுகளுக்கு முன்னாலே 34 வீடுகள் அங்கே கட்டி அவர்களாகவே ஆக்கிரமித்து, அங்கே உள்ள காலி இடங்களைப் பயன்படுத்தி

[திரு. எம். ஆர். கோவேந்தன்] [1984 மார்ச் 12

வருகிறார்கள். துணி துவைக்க, கழுதைகள் மேய்க்க, அந்த இடங்களைப் பயன்படுத்தி வருகிறார்கள். அவர்களை அப்புறப்படுத்துகின்ற உத்தேசம் எதுவும் இப்போது அரசிற்கு இல்லை அந்த இடம் குளமாக இருக்கிறது. பட்டா செய்து தருவதில் பிரச்சினை இருக்கிறது. எனவே பொதுப்பணித் துறை அதிகாரிகளை கலந்து கொண்டு அவர்களுக்கு செய்து கொடுக்கலாமா என்பதை இந்த அரசு ஆலோசிக்கும்.

### 5. அரசினர் சட்ட முன்வடிவு.

### மதுவிலக்கு (திருத்த) சட்ட முன்வடிவு, 1984.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்: ''தமிழ்நாடு 1984 ஆம் ஆண்டு மதுவிலக்கு (திருத்த) சட்டமுன் வடிவை பேரவை முன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்.''

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, அனுமதி வழங்கப்பெற்றது.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : இச்சட்ட முன்வடிவை பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இச்சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப்பெற்றிருக்கிறது.

### 6. வரவு-செலவுத் திட்டம், 1984-85 பொது விவாதம்—தொடர்ச்சி.

திரு. ப. பொன்னுரங்கம்: பேரவைத் தலைவர் அவர்களே, 1984–85 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையின் மீது நான் சார்ந்துள்ள திராவிட முன்னேற்றக் கழகக் கருத்தை வைத்திட விரும்புகிறேன்.

நாவலர் அவர்கள் ரூ. 2,000 கோடி சொச்சத்திற்கு வருவாய்க் கணக்கு காட்டியிருக்கிறார்கள். ஆனால் இந்த ஆண்டு அவர் சப்மிட் பண்ண பட்ஜெட்டில் கிட்டத்தட்ட ரூ. 57 கோடிக்கு வரி போட்டிருக்கிறார்கள். இப்படி உள்ள ஒரு பட்ஜெட்டை வயிற்றில் பால் வார்த்த மாதிரி என்றும், இது மற்ற மாநிலங்களுக்கு வழிகாட்டி என்றெல்லாம் இந்த மாமன்றத்திலே பேசப்பட்டது. ஆனால் நான் மெத்த மன்வருத்தத்தோடு தெரிவித்துக் கொள்கிறேன்.



1984 மார்ச் 12] [திரு. ப. பொன்னுரங்கம்]

(முற்பகல் 10-30)

ஆந்திராவிலே 'No new taxes in Andhra Pradesh Budget' பற்றாக் குறை எவ்வளவு தெரியுமா? 113 கோடியே 53 இலட்சம். 113 கோடியே 53 இலட்சம் பற்றாக்குறை இருக்கின்ற அந்த ஆந்திர மாநிலத்தில் ஒரு பைசாக் கூட வரி போடாமல் அந்தப் பட்ஜெட்டைத் தயாரித்து அந்த மக்களை வதைக்காமல் செய்து இருக்கிறார்கள். ஆனால் நீங்கள் 57 கோடி ரூபாய்க்கு 'வரி போட்டிருக்கிறீர்கள். இப்படி வரி போட்டும், டெபிசிட் என்ற அவல நிலைமை தான் இருக்கின்றது. நான் கேட்க ஆசைப் படுகிறேன். இது எப்படி நியாயம் ஆகும். வரி போடாமல் எப்படித் தொகையை சரிக்கட்ட முடியும் என்று நீங்கள் கேட்கக் கூடும். அதற்கு ஆந்திர மாநிலத்தின் நிதி அமைச்சர் பாஸ்கர ராவ் அவர்கள் அழகாக விளக்கத்தைத் தந்திருக்கிறார்கள். நான் பிளானிங், அதாவது திட்டத்தில் வராத செலவினங்களைக் குறைப்பதன் மூலமாகவும், மத்திய அரசினுடைய உதவியைப் பெறுவதன் மூலமாகவும் மேற்படி பற்றாக்குறை சரி செய்யப்படு கிறது என்று பாஸ்கரராவ் சொல்லியிருக்கிறார்கள். இது செய்தி, கேபினட் மீட்டிங் நடந்ததற்குப் பிறகு இப்படி அவர்கள் அறிவிக்கிறார்கள். ஆகவே இந்த மாநிலத்தில் உள்ள மக்கள் மீது அக்கறை உள்ள சர்க்காராக நீங்கள் இருந்திருந்தால், அந்த முறையை, அவர்கள் கையாண்ட முறையை நீங்கள் கையாண்டு இருக்கலாம். மத்திய அரசாங்கத்திலிருந்து நிதியைப் பெற்றுக் கொண்டும், நிர்வாகச் செலவை குறைப்பதன் மூலமாகவும், நான் பிளானிங்கை குறைப்பதன் மூலமாகவும் ஆந்திராவிலே செய்து இருப்பது போல் நீங்களும் இங்கே செய்திருக்கலாம். அப்படிச் செய்யாததற்குக் காரணம் என்ன?

அடுத்து, இன்னொரு மாநிலம். ஏன் இதைச் சொல்கிறேன் என்றால் இந்தியாவில் உள்ள அனைத்து மாநிலங்களுக்கும் வழி காட்டுகின்ற மாநிலம் தமிழகம் என்று இங்கே கருத்துச் சொல்லப் பட்டது. மத்திய பிரதேசத்தில், There is no tax at all டெபிசிட் இருந்த போதும் அங்கே டாக்ஸ் இல்லை.

ஆகவே இப்படி மற்ற மாநிலங்கள் தான் நமக்கு வழிகாட்டு கிறதே தவிர, நம் மாநிலம் வேறு மாநிலங்களுக்கு வழி காட்டுவதாக இல்லை என்பதை நான் வருத்தத்தோடு தெரிவித்துக் கொள்ள கடமைப்பட்டு இருக்கிறேன்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

மேலும் கவர்னர் உரையிலே அருமையான சில விளக்கங்கள் தரப்பட்டு இருக்கிறது. நாவலர் அவர்கள் பதில் சொல்வார் கள் என்று நான் கருதுகிறேன். வறட்சி வந்த போது சென்னை நகரத்திற்கு 2,52.28 இலட்சத்தில், 11,959 குழாய்க்கிணறுகளும், 1,204 இந்தியன் மார்க்-2 பம்புகளும் அமைக்கப்பட்டன என்று கவர்னர் உரையிலே சொல்லப்பட்டிருக்கிறது. நான் கூட கணக்குப் போட்டுப் பார்த்தேன். சென்னை நகரத்தில் 150

வட்டங்கள் இருக்கின்றன. 150 வட்டங்களுக்கும், எந்த அடிப்படையிலேயாவது, 1 வட்டத்திற்காகவது இந்தக் கணக்குப் பொருந்துகிறதா என்றால் நிச்சயமாக இல்லை. ஏன் என்றால் நம்முடைய நாவலர் அவர்கள் கூட கணக்குப் போட்டுப் பார்க்க லாம். அதற்காகத்தான் சொல்கிறேன். சென்னையிலே உள்ள 150 வட்டத்திற்கும்—இந்த கணக்கைப் பார்த்தால் கூட, 1 வட்டத்திற்கு 80 சிறிய பம்புகள், 8 பெரிய பம்புகள் போட்டு இருக்க வேண்டும். அதற்குரிய செலவுகளைத் தான் இதிலே காட்டியிருக்கிறார்கள். ஆனால் நான் அறிந்த வரையில் 40 பம்புகளாவது போட்டிருப்பார்களா என்றால்,—ஒவ்வொரு வட்டத்திற்கும்— இல்லை. அல்லது 8 பெரிய பம்புகள் என்று கணக்கு தரப்பட்டு இருக்கிறதே, இந்த பெரிய பம்புகள் அனைத்து வட்டத்திற்கும் கிடைத்திருக்கிறதா என்றால் இல்லை. இப்படிப் பட்ட நிலையில் இந்த கவர்னர் உரையில் காட்டப்பட்டு இருக் கின்ற தொகை உண்மையான நிலைமைக்கு மாறுபட்டு இருக் கின்றது. இதிலே ஏதோ தவறுகள் நடைபெற்றிருக்கின்றன என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அடுத்து நீங்கள் நிவாரண வேலையை எந்த அளவிற்குச் செய்திருக்கிறீர்கள் என்பதற்கு இந்த கவர்னர் உரையிலே தெளிவாக ஒன்றைச் சொல்லியிருப்பதை நான் சுட்டிக் காட்ட விரும்புகிறேன். வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட குடிசை களின் எண்ணிக்கை 7,10,000 என்று இந்த கவர்னர் உரையில் சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால் எத்தனை பேர்களுக்கு உணவு வழங்கப்பட்டிருக்கிறது என்று சொன்னால் 10 இலட்சம் மக்க ளுக்கு வழங்கப்பட்டு இருக்கிறது என்று கவர்னர் உரை யிலே சொல்லப்பட்டிருக்கிறது. பாதிக்கப்பட்ட குடிசைகளோ 7 இலட்சத்து பத்தாயிரம். உணவு வழங்கப்பட்டதோ, 10 இலட் சம் மக்களுக்கு. அப்படியானால் ஒவ்வொரு குடிசையில் 1½ மக்களுக்கா உணவு போட்டிருக்கிறீர்கள்? . என்று நான் தெரிந்து கொள்ள விரும்புகிறேன். நீங்கள் போடுகின்ற கணக்கு முன்னுக்கு பின் முரணாக இருக்கிறது என்பதை நான் சுட்டிக்காட்ட கடமைப் பட்டிருக்கிறேன். உண்மையில் நீங்கள் உணவு எத்தனை பேர் களுக்கு வழங்கியிருக்கிறீர்கள் என்று சொல்லியிருக்கின்ற கணக்கில் எல்லோருக்கும் சந்தேகம் வராமல் இருக்க முடியாது. காரணம், 7 இலட்சத்து 10 ஆயிரம் குடிசைகள் பாதிக்கப்பட்டு இருக்கின்றன என்றால், ஒரு குடிசைக்கு 2 பேர்கள் என்று வைத்துக் கொண்டாலும், ஒரு ஆண், ஒரு பெண் என்று வைத்துக் கொண்டாலும்— குழந்தைகள் கணக்கே வேண்டாம்— கிட்டத் தட்ட 14 இலட்சம் பேர்கள் என்று கணக்கு வரும். அப்படி இருக்கும்போது நீங்கள் 10 இலட்சம் பேர்களுக்கு உணவு தந்த தாக கவர்னர் உரையில் சொல்லியிருப்பது, முறைதானா? சரி தானா என்பதை நான் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

நமது நாவலர் அவர்கள் இது குறித்து புள்ளி விவரங்களை மிகக் கூர்மையாக, எடுத்துச் சொல்லுகின்ற அளவிற்கு ஆற்றல் பெற்றவர்கள். நான் இந்த ஒரு புள்ளி விவரத்தை





தங்கள் முன்னால் வைக்க விரும்புகிறேன். 6-வது ஐந்தாண்டு திட்டக் காலத்தில் அதாவது 1980–85-ல், இரண்டு லட்சம் வீடுகள் கட்ட வேண்டும் என்பது நம்முடைய குறியீடு என்று கவர்னர் உரையிலே சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால் நீங்கள் என்ன செய்திருக்கிறீர்கள். 1982-1983 ஆம் ஆண்டில் 40 ஆயிரம் வீடுகள் கட்டப்பட வேண்டும் என்பது குறியீடு. ஆனால் அதற்கு மாறாக 40 ஆயிரத்து 92 வீடுகள் கட்டப்பட்டன என்று காட்டி, It is a great achievement என்றும் கவர்னர் உரையில் சொல்லப்பட்டிருந்தது. சரி 1982–83 ஆம் ஆண்டில் 40 ஆயிரத்து 92, வீடுகள் கட்டப் பட்டன.

அடுத்து நடப்பு ஆண்டில் அக்டோபர் திங்கள் வரை கட்டி முடிக்கப்பட்ட வீடுகள் 17,894, பல்வேறு நிலைகளில் கட்டுமானத் தில் உள்ள வீடுகள் 20,759 என்று சொல்லப்பட்டிருக் கின்றது. ஆக நான் மொத்தம் கூட்டிப் பார்க்கிறேன். இது தற்போது, 6-வது ஐந்தாண்டு திட்டத்தின் 4-வது ஆண்டின் இறுதித் திங்கள் என்பதை தாங்கள் அறிவீர்கள். இந்த இறுதி திங்கள் வரையில் எவ்வளவு கட்டியிருக்கிறீர்கள் என்றால்; கட்டிய தும் அண்டர் கன்ஸ்டிரக்ஷன் என்று சட்டிக் கொண்டிருப்பதும், 78,745 வீடுகள். நான் கேட்க விரும்புகிறேன், 6-வது ஐந்தாண்டு திட்டத்திற்கு, நம் மாநிலத்தில் வீடுகட்டும் திட்டத்திற்காக ஒரு லிஸ்டை தயார்செய்து மத்திய சர்க்காருக்கு கொடுத்திருக்கிறோம் அதன்படி ஆண்டு திட்டத்திற்கு அவர்கள் பணம் ஒதுக்குகிறார்கள். இப்போது 78,000 வீடுகள் தாம் கட்டி முடிக்கப்பட்டிருக்கின்றன. அண்டர் கன்ஸ்டிரக்ஷனில் இருப்பதையும் சேர்த்து கட்டியதாக வைத்துக் கொண்டாலும், 78,745தான் வருகிறது. ஒரு ஆண் டுக்கு கட்ட வேண்டும் என்று நீங்கள் கவர்னர் உரையின் மூல மாகச் சொன்னது 40,000 வீடுகள். அதிலே ஒரு ஆண்டில் 92 வீடுகள் அதிகமாகி விட்டதினாலேயே It is a great achievement என்று சொல்லப்பட்டது. அப்படி இருக்கிறது நிலைமை.

இன்னும் ஓராண்டுதான், அதாவது 1984–85 தான், இந்த 6-வது ஐந்தாண்டுத் திட்டத்தில் உள்ள கடைசிக் காலக் கட்டம். இந்தக் காலக் கட்டத்தில் நீங்கள் 1 லட்சத்து 22 ஆயிரம் வீடு களை கட்டியாக வேண்டும். கட்ட முடியும் என்று திட்டம் இட்டு, கடந்த ஆண்டுக்கு முன் ஆண்டு எஸ்டிமேட் போடப்பட்டு, ஒரு ஆண்டுக்கு 40,000 கட்ட வேண்டும் என்று குறியீடு நிர்ண யிக்கப்பட்டது கவர்னர் உரையிலே, ஆனால் ஏன் இன்னும் இந்த இறுதி ஆண்டில் கூட அது முடிக்கப்பட்ட நிலையில் இல்லை? இந்த மாநிலத்திற்காக ஒதுக்கப்படுகிற 5 ஆண்டு திட்டப் பணம் இப்படியா விரயம் ஆகும்? 1 லட்சத்து 22 ஆயிரம், வீடுகளை ஒரே ஆண்டில் கட்ட முடியாத ஒரு அவல நிலைக்கு ஆளானால், 5 ஆண்டு திட்டத்தினுடைய வருவாயை, மத்திய சர்க்காரிட மிருந்து, மாநிலத்திற்கு வரக்கூடிய நிதி ஆதாரத்தை கெடுக்கிறீர் கள். குந்தகப்படுத்துகிறீர்கள் என்றால் அது உண்மைக்கு மாறானது?

[திரு. ப. பொன்னுரங்கம்] [1984 மார்ச் 12

ஆக இப்படித் தவறான முறையில் நிர்வாகம் இருக்குமானால் எப்படி பெஸ்ட் அட்மினிஸ்டிரேஷன் என்று ஒத்துக் கொள்ள முடியும். இதற்காக இந்த மாநில மக்களுக்கு வந்து சேரக்கூடிய மத்திய சர்க்காரிடத்திலிருந்து, இந்த மாநிலத்திற்கு வந்து சேரக்கூடிய, உரிய தொகையையே நீங்கள் பாழடிக்கிறீர்கள் என்ற குற்றச்சாட்டை நான் சொல்லாமல் இருக்க முடியாது. ஆக இப்படிப்பட்ட நிலையில் இந்த நிர்வாகம் இயங்கிக் கொண்டிருக்கிறது.

அடுத்து, நாவலர் அவர்களே கடந்த ஆண்டு ஒரு விஷயத்தை நீங்கள் அறிவித்தீர்கள். அது பற்றி நான் தெரிந்து கொள்ள விரும்புகிறேன். நம்முடைய மாண்புமிகு அமைச்சர் விசயசாரதி அவர்கள் கூட இந்த அவையில் மிகவும் கஷ்டப்பட்டார்கள், ஒரு ஒத்திவைப்புத் தீர்மானத்திற்கு பதில் அளிக்கையில். ஏன், அரிசன ஹாஸ்டல் ஒன்றிற்கு கழிப்பிடம் கேட்டார்கள். அதற்கான, இது குறித்து நீங்கள் போன ஆண்டு அறிவித்தீர்கள், 16,000 கழிப்பிடங்கள் அடுத்த, வரும் நிதி ஆண்டிற்குள் கட்டி முடிக்கப்படும் என்று. இன்றைக்கு தேதி 11. இந்த நிதி ஆண்டு முடிய இன்னும் 20 நாட்கள் தான் இருக்கின்றன. (குறுக்கீடு) இன்று தேதி 12. இன்னும் 19 நாட்கள் தான் இருக்கின்றன. இந்த 19 நாட்களில் எவ்வளவு கட்டப்போகிறீர்கள்? அல்லது இது வரையில் நீங்கள் எவ்வளவு கட்டி யிருக்கிறீர்கள். கிராமங்கள் முழுவதிலும் 16 ஆயிரம் கழிப்பிடங்கள் கட்டி முடிக்கப்படும் என்று சொன்னீர்களே, கட்டினீர்களா? குறிப்பிட்டுச் சொல்லியிருக்கிறீர்கள், வரும் நிதி ஆண்டு இறுதிக்குள் 16,000 கழிப்பிடங்கள் கிராமப்புறங்களில் கட்டி முடிக்கப்படும் என்று, உத்தேசமாக சொல்லியிருந்தால் கூட பரவாயில்லை. குறிப்பிட்டுச் சொல்லியிருக்கிறீர்கள். கட்டி முடித்துவிட்டீர்களா? நான் தெரிந்துக் கொள்ள விரும்புகிறேன்.

(முற்பகல் 10–40)

நான் கிராமவாசியில்லை. கிராமங்களிலிருந்து வரக்கூடிய சட்டமன்ற உறுப்பினர்கள் தயவு செய்து தெரிவித்தால் நல்லது. அப்படி கட்டி முடித்திருக்கிறார்களா, நான் தெரிந்துக் கொள்வதற்காக கேட்கிறேன்.

அது மட்டுமல்ல, இன்னொரு அறிவிப்பையும் தெரிவித்திருக்கிறீர்கள். என்ன என்று தெரியுமா? 1983–84-ல் வீட்டுக்கு ஒருவருக்கு வேலை என்று சொல்லி, கடந்த நிதி ஆண்டுக்கே, அதாவது இந்த திங்கள் முடியும் வரையில் 15 கோடி ரூபாய், இதற்காக நிதி ஒதுக்கியிருக்கிறீர்கள். அதாவது போன ஆண்டு. அதற்குரிய எந்த வேலையையாவது இது வரையில் செய்திருக்கிறீர்களா? எந்த அளவு அந்த வேலை திட்டம் இருக்கிறது? இந்தக் காரியத்தில் எந்த அளவுக்கு உங்கள் நிலைமையை வைத்துக் கொண்டிருக்கிறீர்கள் என்று தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.



1984 மார்ச் 12] [திரு. ப. பொன்னுரங்கம்]

ஆனால், அதே நேரத்தில் நான் ஒன்றைச் சுட்டிக் காட்ட விரும்புகிறேன். அண்மையில் ஒரு செய்தி எனக்குக் கிடைத்தது. அந்தச் செய்தியாவது :

The Tamil Nadu Government has issued an order extending the ban on creating new posts in Government Departments for one year from August 27, போன ஆகஸ்டு 27 ஆம் தேதியிலிருந்து எந்த டிபார்ட்மெண்டும் நியூ போஸ்ட் கிரியேட் பண்ணக்கூடாது என்ற ஒரு உத்திரவு போடப்பட்டிருக்கிறது. தமிழகத்தில் உள்ள அனைத்து இலாக்காகளிலேயும் நியூ போஸ்ட் கிரியேட் பண்ணக்கூடாது என்று தெரிவித்துவிட்டு நீங்கள் வீட்டுக்கு ஒருவருக்கு வேலை கொடுக்கப் போகிறோம் என்று சொல்கிறீர்களே அது உண்மைதானா? உள்ளப்பூர்வமாகத்தான் சொல்கிறீர்களா? அல்லது ஊரை ஏமாற்றுகிற வேலைதானா என்று தெரிந்துகொள்ள நான் விரும்புகிறேன்.

அடுத்து நம்முடைய நாவலர் அவர்கள் சொன்னார்கள். மிக அக்கறையோடு இந்த மாநிலத்திலே குறிப்பாகவும் சிறப்பாகவும் கல்யாணம் கட்டாதவர்களுக்காக, ஊரைவிட்டு ஊர் வந்து வேலை செய்கிறவர்களுக்கு ஒரு நல்ல கால கட்டத்தை உருவாக்கினார்கள் சில மாதங்களுக்கு முன்பு. நம்முடைய நிதி அமைச்சர் அவர்கள் சொல்கிறார்களே, ஆகவே நிச்சயமாக கவனிப்பார்கள், நிச்சயமாகக் கொண்டுவந்துவிடுவார்கள் என்று எதிர்பார்த்தார்கள்.

"Even as the Food Minister Dr. V. R. Nedunchezhian says he will force the hotel owners to bring down the prices of eatables; the price of idlis has shot up by 10 paise a plate, to 70 paise as against 60 paise four days ago" நாவலர் வாய் திறந்தாரோ என்னவோ எந்த முதலாளியையும் அவர் விடப் போவதில்லை, ஒரு கை பார்த்துவிடுகிறேன், குறைக்கிறேனா இல்லையா பார் என்று நாவலர் அவர்கள் சொன்னவுடன் 60 பைசாவுக்கு விற்றுக்கொண்டிருந்த இட்லி விலையை 70 பைசா ஆக்கிவிட்டார்கள். இந்த நிலையில்தான் ஓட்டல் ஓனர்கள் இந்த ஆட்சியைக் கண்டு நடந்துக் கொள்கிறார்கள். அது மட்டுமல்ல.

நாவலர் அவர்கள் ஒரு படி மேலே போய் இன்னொன்றையும் சுப்ரீம் கோர்ட் தீர்ப்பை உதாரணம் காட்டி ஆந்திராவிலே இது போன்று நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது என்று சொல்லியிருக்கிறார்கள்.

Only on September 3, Dr. Nedunchezhian had told newsmen that the State Government would fix the price of dishes after holding consultation with hotel owners என்று சொல்லியிருக்கிறார்கள், நீங்கள் சொன்னவுடனே நடந்ததே இல்லையே முதலாளிகள் சத்துணவுக்கு ஏதோ கொடுக்கிறார்கள். உடனே அது டிராப்பிடு.

[திரு. ப. பொன்னுரங்கம்] [1984 மார்ச் 12

(மாண்புமிகு மாற்றுத் தலைவர் தலைமை)

அதே நேரத்திலே திரு. என். டி. ராமாராவ் அவர்கள் ஆந்திர முதலமைச்சர் பிப்ரவரி 3 ஆம் தேதி அறிவிக்கிறார். கேபினட்டை அவர் கூட்டிப் பேசுகிறார். பேசிவிட்டு 3 ஆம் தேதி அறிவிக்கிறார். பிப்ரவரி 15 ஆம் தேதியிலிருந்து இட்டிலி விலையில் இவ்வளவு குறைக்கவேண்டும், அதைப்போலவே வடை, தோசை, உப்புமா, காப்பி, டீ இவைகளுக்கு எல்லாம் இப்போது இருக்கிற விலைகளைக் குறைக்கவேண்டும் என்று அதற்காக ஒரு பட்டியலைத் தயாரித்து பத்திரிகைக்குத் தந்திருக்கிறார்கள். எங்களுக்குப் பிடிக்காத பத்திரிகை என்று பலர் குறிப்பிடக்கூடிய தினத்தந்தி பத்திரிகையில் அது வெளியிடப்பட்டிருக்கிறது. இந்த நிலையில்தான் இந்த ஆட்சி நடைபெற்று கொண்டிருக்கிறது என்பதை நான் மெத்த வருத்தத்தோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

நீங்கள் வரியைப் போடுகிறீர்கள், வரியைப் போட்டு விட்டு வழிகாட்டுகிறேன் என்கிறீர்கள். விலைவாசியைக் கட்டுப்படுத்த மாட்டேன் என்கிறீர்கள், ஆனால் வழிகாட்டுகிறேன் என்கிறீர்கள். இந்தக் காலகட்டத்திலே அண்மையிலே உள்ள கர்நாடக மாநிலத்திலே ஒரு நடவடிக்கை எடுக்கப்பட்டு இருக்கிறது. அது எத்தகைய சிறிய நடவடிக்கையாக இருந்தாலும் பாராட்டாமல் இருக்கமுடியாது. உதாரணத்திற்காகச் சொல்கிறேன். கர்நாடக மாநிலத்திலே லிட்டர் பாலுக்கு 10 பைசா குறைத்திருக்கிறார்கள். நீங்கள் இங்கே ஒரு பைசா குறைத்திருக்கிறீர்களா ? அங்கே பாலுக்கு விலையைக் குறைத்தது பற்றிச் சொல்கிறபோது Milk sold by the Karnataka Dairy Corporation will cost 10 paise less per litre from next month என்று சொல்லப்பட்டிருக்கிறது.

அவர் சொல்வது 9-2-1984—

The Chief Minister Mr. Ramakrishna Hegde told the State Assembly today that the price was being reduced because of popular demand even though milk costs less in Karnataka compared to neighbouring States. என்று பக்கத்தில் இருக்கிற மாநிலமான கர்நாடகத்தில் (குறுக்கீடு) மற்ற ஸ்டேட்களை விட பாலின் விலை குறைவாக இருந்தபோதிலும் கூட 10 பைசாவை குறைக்கிறேன், காரணம், இது பொது மக்களுக்கு, பாமர மக்களுக்கு, நடுத்தர மக்களுக்கு அதிகமாக தேவைப்படுகிறது. அதிகமாக பயன்படுத்துகிறார்கள் என்ற காரணத்தினால் இந்த பாலுக்கு 10 பைசா விலையை குறைக்கிறேன் என்று அந்த மாநில முதலமைச்சர் அவர்கள் அக்கறையோடு அந்த மாநிலத்தின் மக்களின் நலத்தில் அக்கறையோடு இந்த அறிக்கையை கொடுத்து இருக்கிறார்கள். நான் கேட்கிறேன் நீங்கள் ஏதாவது இது போன்ற ஒன்றை தெரிவித்து இருக்கிறீர்களா ?



1984 மார்ச் 12] [திரு. ப. பொன்னுரங்கம்]

இன்னும் ஒன்று தொழில் வளர்ச்சி பற்றி. நீங்கள் அருமையாக தொழிலை வளர்க்கிறீர்கள். அது ரொம்பவும் ஆச்சரியப்படக்கூடிய ஒன்று. தொழில் வளர்ச்சிக்கு லோன் கொடுக்கிறீர்கள். 4 கோடி ரூபாய் 31—3—1983 வரை லோன் கொடுக்கிறார்கள். எதற்கு தெரியுமா ? சிறு தொழிலுக்கா ? குடிசை தொழிலுக்கா ? மெக்கானிசம் தொழிலுக்கா ? இல்லை ஓட்டல் இண்டஸ்டிரிஸ்க்கு 4 கோடி ரூபாய் கொடுத்து இருக்கிறார்கள். 4 கோடி ரூபாயை சிறு சிறு ஓட்டல்காரர்களுக்கு கொடுத்து பிழைத்துக் கொள்ளட்டும் என்பதற்காக கொடுத்தார்களா என்றால் அதுவும் இல்லை. எத்தனை பேருக்கு தருகிறார்கள் என்றால், 62 பேருக்கு தருகிறார்கள். 4 கோடி ரூபாயை தூக்கி 62 பேருக்கு தருகிறார்கள். கிட்டத்தட்ட ஒவ்வொருவருக்கும் 7 லட்சம் ரூபாய் வீதம் அவர்கள் லோன் பெறுகிறார்கள். நேற்று கூட பத்திரிகையில் பார்த்தேன், நம்முடைய 3 அமைச்சர்கள் கலந்து கொண்டு ஒரு பெரிய ஓட்டலை திறந்து வைத்து இருக்கிறார்கள். அந்தப் பத்திரிகையில் முழுப்பக்கம் அதற்கு விளம்பரம் தந்து இருக்கிறார்கள். மெத்த மகிழ்ச்சி. ஓட்டல் திறப்பு விழாவுக்கு அவர்கள் போய் கலந்துகொள்ளட்டும், நாங்கள் வேண்டாம் என்று சொல்லவில்லை. இது போன்ற ஓட்டல் முதலாளிகளுக்கு கடன் கொடுத்து இந்த நாட்டை வாழ வைப்பது இது தான் வறுமைக் கோட்டுக்கு கீழே இருப்பவர்களை மேலே தூக்குகின்ற காரியமா என்பதை நான் கேட்க விரும்புகிறேன்.

அது மட்டுமல்ல, நம்முடைய முதலமைச்சர் அவர்கள் ஒரு நல்ல காரியத்தைத் 1979 ஆம் ஆண்டு செய்து இருக்கிறார்கள். அருமையான காரியம், நான் இல்லை என்று சொல்லவில்லை. தொழில் வளர வேண்டும் என்று ஒரு நல்ல காரியத்தை செய்து இருக்கிறார்கள். புதுக்கோட்டை தாலுக்காவில் ஒரு உப்புத் தொழிற்சாலையை 1979-ல் திறந்து இருக்கிறார்கள். இப்போது அந்த உப்புத் தொழிற்சாலை என்ன ஆனது தெரியுமா ? 2 கோடி ரூபாய் அதில் போட்டு அதைத் தொடர்ந்து கவனிக்காததால் என்ன ஆனது தெரியுமா? அதில் ஹெவி லாஸ் வந்துவிட்டது.

The salt work unit which was established in 1979 at a cost of Rs. 2 crores at Maravakadu and Vadakadu villages in Pattukottai Taluk in 54,00 acres by the Tamil Nadu Salt Corporation had made no progress, புராகிரஸ் இல்லாவிட்டாலும் பரவாயில்லை The unit is now reportee to be incurring h avy loss நான் கேட்கிறேன் புது தொழிலை துவக்க மாட்டேன் என்று சொல்கிறீர்கள். ஆனால் துவக்கிய தொழிலை ஒழுங்காக பார்க்கிறீர்களா ? பார்க்க மாட்டேன் என்று சொல்கிறீர்கள். இது ஒரு நிர்வாகமா என்பதை நான் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

[திரு. ப. பொன்னுரங்கம்] [1984 மார்ச் 12

அது மட்டும் அல்ல, பக்கத்தில் உள்ள தாம்பரத்தில் உள்ள குவாரி அதில் 20 ஆயிரம் தொழிலாளர்கள் கடந்த அக்டோபர் மாதத்திலிருந்து அவதிப்பட்டுக் கொண்டு இருக்கிறார்கள். என்ன காரணம் தெரியுமா? அதில் ஒழுங்காக, முறையாக உரிய நேரத்தில் நடவடிக்கை எடுக்கவில்லை?

As a result of tha delay In finalising the tenders and awarding of the l ases, there have been no quarrying operation in Tambaram since October 1. இதனால் 16 ஆயிரம் கல் உடைக்கும் தொழிலாளர்கள் மற்றும் அதை லாரியில் ஏற்றும் தொழிலாளர்கள், டிரைவர்கள் ஆகியோர் 5 ஆயிரம் தொழிலாளர்கள் ஆக மொத்தம் 20 ஆயிரம் தொழிலாளர்கள் நம்முடைய பொறுப்பற்ற தனத்தால் வேலை இல்லாமல் அவதிப்படுகிறார்கள். உங்களால் வேலை கொடுக்க முடியவில்லை? வேலை பெற்று இருக்கிற தொழிலாளர்களை வீட்டுக்கு அனுப்பி அவர்களை கஷ்டப்படுத்துகிற இந்த அவல நிலையை செய்கிற இந்த அரசு தேவைதானா என்பதை நான் கேட்க விரும்புகிறேன்.

அடுத்து, சத்துணவுத் திட்டத்தைப் பொறுத்த வரையில் சொல்ல விரும்புகிறேன். அன்றைக்கு திரு. ரகுமான்கான் அவர்கள் பேசினார்கள். அப்பொழுது முதலமைச்சரவர்கள் கூட எழுந்து, நான் சொல்லவில்லை, என்னுடைய பக்கத்தில் இருந்தவர் அப்படிச் சொன்னார் என்று தெரிவித்தார்கள். நியாயம் தான். அப்பொழுதே நான் குறுக்கிட்லாம் என்று நினைத்தேன். ஆனால் சபாநாயகர் அவர்கள் அப்படிப்பட்ட நேரத்தில் குறுக்கிடக் கூடாது என்று அடிக்கடி சொல்வார்கள். அதனால் அப்பொழுது குறுக்கிட வேண்டாமென்று நினைத்து, பேசும்பொழுது சொல்லலாம் என்று இருந்து விட்டேன். ஆகவே, இப்பொழுது சொல்கிறேன்.

(முற்பகல் 10-50)

திரு. ரகுமான்கான் அவர்கள், ஊமை பேசுகிறான், நொண்டி நடக்கிறான், போலியோ நோய் நீங்குகிறது என்று சொல்கிறார்கள் என்று குறிப்பிட்ட நேரத்தில், அப்படி நான் சொல்லவில்லை, என் பக்கத்தில் இருந்தவர் ஒருவர் சொன்னார் என்று சொன்னார். நான் ஆதாரத்தோடு தெரிவிக்கிறேன்.

"....2 years old Chandran, son of Thiru Pancharathnam of Trichi was mute since his birth. After he start d taking nutritious noon-Meal daily and also due to the attention given by the noon-Meal Organiser, he has regained his pow r cf speech ...." எது போயிருந்தாலும் ரெகவர் ஆகிவிடுகிறது என்று சொல்கிறீர்கள். ஆதாரம் இல்லை என்று சொன்னால் இது ஆதாரம் இல்லையா? அரசாங்கப் பத்திரிகை இது. இந்தத் "தமிழரசு" பத்திரிகை ஆதாரம் இல்லையா? "தமிழரசு" பத்திரிகை சொல்கிறது என்றால் இந்த அரசு சொல்கிறது என்று அர்த்தம் அல்லவா?



1984 மார்ச் 12]

டாக்டர் கே. சமரசம்: மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, முதலமைச்சர் சொன்னதாக குறிப்பிட்ட நேரத்தில் அவரே அதை மறுத்தார். ஆதாரம் காட்டுவதாகச் சொன்ன உறுப்பினர் இப்போது தமிழரசுப் பத்திரிகையில் வந்துள்ளது என்கிறார். "தமிழரசு" பத்திரிகை தன்னுடைய கருத்தை வெளியிட்டிருக்கிறது. அந்தக் கருத்தை முதலமைச்சர் கருத்தாக உறுப்பினரவர்கள் சொல்லக் கூடாது.

திரு. ப. பொன்னுரங்கம்: முதலமைச்சரவர்களின் கருத்தைத் தாங்கி வருவதுதான் இந்தப் பத்திரிகை.

அடுத்து, புரமோஷன் கொடுக்கிறோம். ஜி.எச்.-லே எப்படிக் கொடுக்கிறோம் என்றால், ஏற்கனவே டெம்பரரியாக இருந்தால்......

திரு. ப. பொன்னுரங்கம்: 250 ரூபாய் பே ஸ்கேலில் 400 ரூபாய் வரையில் அவர்கள் வாங்குகிறார்கள். டெம்பரரியாக இருக்கும்பொழுது. ஆனால் அவர்களை கன்ஃபர்ம் செய்கிறார்கள். எப்படி என்றால், "...The scale of pay for the post of Sanitary Work r is indicated as 250—5—330—10—'00 in appointment ord rs 1 to 4.." இது ரெய்ஸ் ஆகிறதா? தப்பாகப் போட்டிருக்கலாம். கன்ஃபர்ம் பண்ணும்பொழுது அதே மாதிரி போடுகிறார்களா என்று கேட்டல், "..cited will be rais d as Rs- 200—5—300 from the date of th ir joining s Sanitary Workers; orders for recovery of the amount paid to them are being is;u d s parately" அதுதான் அங்கே நடக்கிறது. ஆகவே, இப்படிப்பட்ட அவல நிலையெல்லாம் இருக்கிறது.

அரசாங்க விழாக்கள் என்றாலும் கூடப் பரவாயில்லை, ஆனால் அரசியல் கட்சி விழாக்களுக்குக் கூட சர்க்காரின் லயனிலிருந்து மின்சாரத்தை எடுத்து திருட்டுத்தனமாகப் பயன்படுத்துகிறார்கள்.

அதுமட்டுமல்ல, அந்தக் குழாய் அமைத்து இருக்கின்ற இடத்தில் ஆர்ச்சுகள் அமைப்பதற்காக, மக்களால் புனிதமாகக் கருதப்படுகின்ற அரச மரத்தைக் கூட வெட்டி வீழ்த்தியிருக்கிறார்கள். அந்த இடத்தில் நடைபெற இருக்கின்ற தேர்த் திருவிழாவைக் கூட ரத்து செய்திருக்கிறார்கள். இதெல்லாம் சிதம்பரத்திலே நடக்கின்ற சிதம்பர இரகசியமாக இருக்கிறது. நான் இப்படிப்பட்ட நிலைமைகளையெல்லாம் சொல்வதற்காக வேதனைப்படுகிறேன்.

பச்சையாறு திட்டத்தை இரண்டரை மாதங்களில் நிறைவேற்றுவதாக நினைப்பது எப்படி நியாயமாகும்? அலாவுதீனின் அற்புத விளக்கா? ஒன்றரை மாதத்திலே எப்படி நிறைவேற்றுவீர்கள்? சமீபத்திலே கூட........

மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப் : மாற்றுத் தலைவர் அவர்களே, பச்சையாறு திட்டத்தை ஒன்றரை மாதத்திலே நிறைவேற்ற வில்லை என்பதல்ல குற்றச்சாட்டு. பச்சையாறு திட்டத்திற் காகக் கால்கோல் விழா நடத்துகின்றபோது, அதற்கான எந்த விதமான கோப்புகளும் இல்லாத நிலைமையில், அந்தத் திட்டத் திற்கான எந்தவிதமான சாத்தியக் கூறுகளும் வகுக்கப்படாமல் திட்டமே இல்லாத சூழ்நிலையில் அன்றைய முதலமைச்சர் விழாவை நடத்தினார் என்பதுதான் குற்றச்சாட்டு.

திரு. ப. பொன்னுரங்கம் : ஃபைலே காணவில்லை என்பது தான் தகவல். அதாவது ஃபைலே கிடைக்கவில்லை என்பது தானே தவிர ஃபைல் இல்லை என்று சொல்லவில்லை. ஆகவே நான் ஏன் இதைச் சொல்கிறேன் என்று சொன்னால் வீராணம் திட்டத்தைப் பற்றி இரண்டு நாட்களுக்கு முன்பு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மேலவையிலே சொல்லி இருக்கிறார். அது கைவிடப்பட்டுவிட்டது என்று சொல்லி இருக்கிறார். ஆனால் ஒரு காலம் வரும்; அந்த வீராணம் திட்டம் நல்ல திட்டம் என்று நீங்களே சொல்கின்ற காலம் வரும். ஆனால் இப்போது காழ்ப்புணர்ச்சியிலே அரசியல் நடத்துகிறீர்கள். ஆகவே மக்களுக்குப் பயன் உள்ள நிதிநிலை அறிக்கையைத் தயாரிக்காமல் ஏதோ வாரி இறைத்தோம் ; போனோம்; வந்தோம் என்ற அளவிலே இது கடைசியாக உள்ள பட்ஜெட் என்பதால் அந்த அளவிலே தயாரித்திருக்கிறீர்கள் என்ற குற்றச்சாட்டைச் சுமத்தி என்னுடைய உரையை முடிக்கிறேன்.

* திரு. செ. செம்மலை : மாண்புமிகு பேரவை மாற்றுத் தலைவர் அவர்களே, நிதியமைச்சர் நாவலர் அவர்கள் இந்த அவையிலே அளித்திருக்கின்ற இந்த நிதிநிலை அறிக்கையின் மீது நடைபெறுகின்ற விவாதத்திலே கலந்து கொண்டு என்னுடைய கருத்துக்கள் சிலவற்றை இங்கே எடுத்து வைக்க அனுமதி அளித்ததற்கு முதலில் என்னுடைய நன்றியினைத் தெரிவித்துக் கொள்ள நான் கடமைப்பட்டிருக்கிறேன்.

இந்த நிதிநிலை அறிக்கையைப் பொறுத்தவரையில் ஒருசில எதிர்க்கட்சியினர் தங்களுடைய கருத்துக்களைச் சொல்கிற போதும், அல்லது அவர்கள் இந்த நிதிநிலை அறிக்கையைக் கணிக்கின்ற கணிப்பைப் பார்க்கிறபோதும் எனக்கு ஒரு கதை தான் ஞாபகத்திற்கு வருகின்றது.

அதாவது யானை எப்படி இருக்கும் என்பதைப் பற்றித் தெரியாத நான்கு குருடர்கள் யானையைத் தொட்டுப்பார்த்துத் தெரிந்து கொள்ளலாம் என்று சென்றார்களாம். அப்படிச் செல்லுகின்றபோது முதல் குருடன் அதனுடைய காதைத் தொட்டுப்பார்த்துவிட்டு யானை முறம்போல் இருக்கின்றது என்று சொன்னானாம்; இன்னொரு குருடன் அதனுடைய உடலைத் தொட்டுப்பார்த்துவிட்டு யானை சுவர் போல் இருக்கின்றது என்று





சொன்னானாம்; மற்றொரு குருடன் யானையின் காலைத் தொட்டுப் பார்த்துவிட்டு யானை ஒரு தூண் போல் இருக்கின்றது என்று சொன்னானாம்; அடுத்த குருடன் யானையின் வாலைத் தொட்டுப்பார்த்துவிட்டு யானை ஒரு கயிறு போல் இருக்கின்றது என்று சொன்னானாம். இப்படித்தான் இந்த நிதிநிலை அறிக்கையைப் பற்றி எதிர்க்கட்சியினரின் கணிப்பு இருக்கின்றது என்பதை நான் தெரிவித்துக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

ஆனால் அந்தக் குருடர்களிலிருந்து இவர்கள் ஒருவிதத்தில் மாறுபடுகிறார்கள். அவர்களைப் பொறுத்தவரையில் உண்மையிலேயே தெரியாததன் காரணத்தால் அந்த முடிவுக்கு வந்தார்கள்; ஆனால் இவர்களோ தெரிந்தும் தெரியாதது போல் நடிக்கிறார்கள். எப்போதுமே தூங்குபவர்களை எழுப்பலாம், தூங்குவதுபோல் நடிப்பவர்களை எழுப்பமுடியாது. அதே போல் இந்த அரசைப் பொறுத்தவரையில் இருக்கின்ற நிதி ஆதாரங்களை வைத்துக்கொண்டு இந்த அளவுக்குத்தான் நிதிநிலை அறிக்கையைத் தயாரிக்க முடியும் என்று தெரிந்திருந்தும் கூட, ஆளும் கட்சியினர் சொல்கின்ற அல்லது போடுகின்ற திட்டங்களை எல்லாம் எதிர்க்க வேண்டும் என்பதற்காகவே எதிர்த்துக் கொண்டிருக்கிறார்கள் என்று தான் நாம் முடிவுக்கு வரவேண்டி இருக்கின்றது.

ஆனால் எதிர்க்கட்சியினர் எல்லாம் பாராட்ட வேண்டும் என்பதற்காக இந்த நிதிநிலை அறிக்கையை டாக்டர் நாவலர் அவர்கள் தயாரிக்கவில்லை. ஒரு நல்ல ஆட்சிக்கு உள்ள அளவுகோல் என்பது எதிர்க்கட்சிகளின் அங்கீகாரம் அல்ல; மக்களின் அங்கீகாரம் தான் ஆளும் கட்சிக்குத் தேவை. எதிர்க்கட்சிகள் எப்போதுமே பாராட்ட மாட்டார்கள். எதிர்க்கட்சிகளைப் பொறுத்தவரையில், நல்ல திட்டங்களை, மக்களைப் பாதுகாக்கின்ற திட்டங்களை, மக்கள் வரவேற்கக்கூடிய திட்டங்களைப் போட்டாலும் அவர்கள் அதை எதிர்ப்பார்கள் என்பது நமக்கு நன்றாகத் தெரியும். காரணம் அதனால் நல்ல பலன் கிடைக்கின்ற போது, அந்தத் திட்டத்தின் மூலம் மக்களுக்கு நல்ல பலன் கிடைக்கின்ற போது, அதன் மூலம் ஆளும் கட்சிக்கு ஆதரவு பெருகும், புகழ் சேரும், என்ற காரணத்தினால் எந்தத் திட்டத்தைப் போட்டாலும் எதிர்க்கட்சிகள் அவற்றை எதிர்ப்பதும், மறுப்பதும்தான் வாடிக்கை. இன்றைய தினம் எதிர்க்கட்சிகள் மகன் இறந்தாலும் பரவாயில்லை, மருமகளின் தாலி அறுபட வேண்டும் என்ற நிலையில்தான் இந்த ஆட்சியாளர்களை அவர்கள் சாடிக்கொண்டிருக்கிறார்கள். மக்களுக்காக எந்தவிதமான நன்மை கிடைக்காவிட்டாலும் பரவாயில்லை; ஆளும் கட்சிக்கு ஒரு சோதனையான கட்டம் வரவேண்டும், ஆளும் கட்சிக்கு சிக்கல்கள் வரவேண்டும் என்ற அடிப்படையில் தான் இன்றைக்குச் செயல்பட்டுக் கொண்டு வருகிறார்கள். இன்றையதினம் புரட்சித்தலைவர் தலைமையிலான இந்த ஆட்சிக்கு மக்களின் அங்கீகாரம் கிடைத்திருக்கின்றது. இரண்டு, உப

[திரு. செ. செம்மலை] [1984 மார்ச் 12

தேர்தல்கள் அதை நிருபித்திருக்கின்றன. ஒன்று பெரியகுளம்
நாடாளுமன்றத் தேர்தலும் மற்றொன்று திருச்செந்தூர் சட்ட
மன்றத் தேர்தலும் ஆகும்.

[முற்பகல் 11-00]

எனவே மக்களுடைய அங்கீகாரத்தைப் பெற்று ஒரு நல்
லாட்சியை இன்றையதினம் மாண்புமிகு புரட்சித் தலைவர்
அவர்கள் நடத்திக் கொண்டிருக்கிறார்கள். காக்கைக்கும் தன்
குஞ்சு பொன் குஞ்சு என்று சொல்வார்கள்; அதைப்போல எந்தக்
காலத்திலும் உமாநாத் போன்ற மாண்புமிகு உறுப்பினர்கள் ஏதா
வது உதாரணம் சொல்ல வேண்டுமென்றாலும் கூட மேற்கு
வங்கத்தை உதாரணமாகச் சொல்வார்கள். அங்கே ஏதோ
அபூர்வங்கள் நடப்பதைப் போலவும், இங்கே தமிழ்நாட்டில்
அந்த அபூர்வங்கள் நடக்காததைப் போலவும் தங்கள் கருத்துக்
களை எடுத்து வைப்பார்கள். இன்றைக்கு மேற்கு வங்கத்
தின் நிதிநிலை அறிக்கையில் 75 கோடி ரூபாய்க்கு வரி
போட்டிருக்கிறார்கள் என்பதைச் சுட்டிக்காட்ட விரும்பு
கிறேன். நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் உமாநாத் அவர்கள்
அங்கே நல்லாட்சி நடக்கிறது; ஒரு நல்ல முதலமைச்சர் இருக்
கிறார்கள்; நிதியாதாரத்தை வைத்து இன்றைய மாநில, மத்திய
அதிகாரங்களுக்கேற்ப இவ்வளவுதான் செய்ய முடியும் என்று
அவர்கள் பாராட்டுகிற அளவிற்கு மாண்புமிகு மரியாதைக்குரிய
ஜோதிபாசு அவர்கள் நிருபித்துக்கொண்டிருந்தால், அதைவிட
திறமையாக, நல்ல திட்டங்களை போட்டு தமிழக முதலமைச்சர்
அவர்கள் நிருபித்துக் கொண்டிருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்
துக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன். ஆனால் இன்றைய சூழ்
நிலையில், இன்றைக்கு இருக்கின்ற மாநில, அதிகாரங்களை
வைத்து பார்க்கிறபோது எவ்வளவு இக்கட்டான சூழ்நிலையில்
ஆட்சியை நடத்திக்கொண்டிருக்கிறோம் என்பதை நாம் உணர
வேண்டும். இதற்கு முன்னாலே காங்கிரஸ் சர்க்கார் ஆட்சி நடக்
கிறபோது மாநிலத்திலும் அதே கட்சி இருந்தது. அவர்கள்
மத்தியிலே எவ்வளவு நிதியை கொடுக்கிறார்களோ அதை
வைத்துக்கொண்டு, மேற்கொண்டு நிதி கேட்காமல், மாவிற்கு
ஏற்ற பணியாரம் என்பதைப் போல, கொடுக்கிற நிதிக்கேற்ப
திட்டங்களைத் தீட்டிக் கொண்டிருந்தார்கள். ஆனால் இன்
றைக்கு நாம் மத்திய சர்க்காரிடத்தில் அதிக நிதியாதாரங்களை
கேட்கிறோம். அதையெல்லாம் ஒப்புக்கொண்டு இன்றைக்கு
அவர்கள் சர்க்காரியா கமிஷனை அமைத்திருக்கிறார்கள் என்
பதை நாம் மறந்துவிடக் கூடாது. எனவே நமக்கு நிதியாதாரங்
கள் போதாது; அதிக அதிகாரங்கள் தேவை என்று அவர்களே
ஒப்புக்கொண்டிருக்கிறார்கள். அப்படிப்பட்ட சூழ்நிலையில்
இன்றைக்கு நாம் ஆட்சியை நடத்திக் கொண்டிருக்கிறோம்,
ஆகவே அந்த நிலையில் தார்மீக நிலையில் எண்ணிப்பார்த்தாலும்
இருக்கிற நியாயத்தின் அடிப்படையில் எண்ணிப்பார்த்தாலும்
இருக்கிற நிதியாதாரங்களையும், அதிகாரங்களையும் வைத்துக்
கொண்டு இவ்வளவு தான் செய்யமுடியும் என்பதற்கு மேலேயும்



1984 மார்ச் 12] [திரு. செ. செம்மலை]

நல்ல திட்டங்களை நம்முடைய அரசு தீட்டிக்கொண்டிருக்
கிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர்களுக்கு சுட்டிக்காட்ட
விரும்புகிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. விசுவநாதன் அவர்கள் பேசுகிற
போது ஒரு கருத்தைச் சொன்னார்கள். இன்றைக்கு மாநில,
மத்திய உறவு முறை எப்படி இருக்கிறது என்பதையும், எந்த
அளவிற்கு நிதியாதார்த்தை நாம் பெற்றிருக்கிறோம் என்ற அந்த
விவரங்களைச் சொன்னார்கள். மத்திய அரசு இப்போது அளித்
திருக்கிற நிதிநிலை அறிக்கையிலே கூட சில சலுகைகளை அவர்கள்
அளித்திருக்கிறார்கள். அப்படி சலுகைகளை அளிப்பதன் மூலம்
ஏதோ மக்களுக்கு நன்மை செய்துவிட்டதாக அவர்கள் விளம்
பரத்திற்காக சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் மாற்
றுத் தலைவர் அவர்களே உங்கள் மூலமாகச் சொல்லிக் கொள்ள
விரும்புவது, இன்றைக்கு வருமான வரியிலே மத்திய அரசு சில
சலுகைகளை அளித்திருக்கிறார்கள். அப்படி அவர்கள் சலுகை
களை அளிக்கிறபோது 5 சதவீதம் சலுகை அளித்து மக்களுக்கு
நன்மை செய்துவிட்டோம் என்று சொல்லி இருக்கிறார்கள். இதில்
என்ன சிக்கல் இருக்கிறது என்பதை ஆராய்ந்து பார்த்தால்
வருமான வரியிலே மத்திய அரசிடம் இருந்து மாநில அரசிற்கு
பங்கு வருகிறது. எனவே அவர்கள் குறைத்ததன் மூலமாக நமக்கு
வருகிற வருவாய் மறைமுகமாக குறைக்கப்பட்டிருக்கிறது என்
பதை நாம் உணர்ந்தாக வேண்டும். எனவே நாமும் வரி போடக்
கூடாது; அதே சமயத்தில் மத்திய அரசிடமிருந்து வருகிற நிதி
யாதாரமும் இப்படிப்பட்ட சலுகைகளின் மூலமாக மேலும்
குறைக்கப்பட்டிருக்கிறது. மத்திய சர்க்கார் எந்தெந்த வரிகளை
குறைத்து இருக்கிறார்கள் என்றால் மத்திய அரசிலிருந்து மாநில
அரசுகளுக்கு பங்காக வருகிற வருமான வரி, எக்சைஸ் வரி
போன்ற ,அந்த வரிகளை குறைத்து இருக்கிறார்கள். இதன்
காரணமாக நமக்கு கிடைக்க வேண்டிய பங்கு இன்றைக்கு
குறைக்கப்பட்டிருக்கிறது. எனவே மாண்புமிகு உறுப்பினர்
திரு. விசுவநாதன் அவர்கள் சொன்னதைப் போல கடைத்
தேங்காயை எடுத்து வழிப் பிள்ளையாருக்கு உடைப்பதைப்
போல, மக்களுக்கு சலுகை செய்கிறோம் என்ற அந்த நிலையில்
மாநில சர்க்காருக்கு வருகிற நிதியாதாரம் குறைக்கப்பட்டு
,நம்முடைய தலையிலே கையை வைத்திருக்கிறார்கள் என்பதை
சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

இன்னொன்றையும் மத்திய சர்க்கார் செய்து வருகிறது. இன்
றைக்கு உலக வங்கியிலிருந்து நம்முடைய வளர்ச்சித் திட்டங்
களுக்கு கடன் பெறுகிறோம். அப்படி கடன் பெறுகிறபோது திட்
டங்களைக் குறித்து நம்முடைய அதிகாரிகள் , உலக வங்கி அதி
காரிகளோடு பேசி அந்தத் திட்டங்களைத் தீட்டுகிறார்கள்.
ஆனால் பணம் வருகிறபோது மத்திய சர்க்கார் மூலம் தான்
அந்தப் பணத்தைப் பெறவேண்டுமென்றஒரு நடைமுறை காரண
மாக அவர்கள் கொடுக்கிற நிதி மத்திய அரசாங்கத்தின் மூலமாக

[திரு. செ. செம்மலை] [1984 மார்ச் 12

நமக்கு கிடைக்கிறது. ஆனால் இன்றைக்கு உலக வங்கி கடனுதவி கொடுக்கிறபோது 40 ஆண்டுகள் என்ற அளவில் நீண்டகால கடனாகத்தான் கொடுக்கிறது. அதுவும் வட்டி இல்லாத கடனாக, 3¼ சதவீதம் சர்வீஸ் சார்ஜ் என்று மட்டும் விதித்து நமக்குத் தருகிறார்கள். ஆனால் அந்தப் பணம் மத்திய அரசின் மூலமாக நமக்கு வந்து சேர்வதால், 40 ஆண்டுகாலத்தில் செலுத்த வேண்டிய தொகையை 15 அல்லது 10 ஆண்டுகாலத்திற்குள் திருப்பிச் செலுத்த வேண்டும் என்று சொல்வதோடு மட்டுமல்லாமல், அதற்கு 14 சதவீதம் வட்டியும் மத்திய அரசு நமக்கு விதித்திருக்கிறார்கள். ஒரு பக்கம் நமக்கு வரவேண்டியதைக் குறைத்து நம் தலையில் கைவைக்கிறார்கள். மற்றொருபுறத்தில் கிடைக்கின்ற பணத்திற்கு அதிக வட்டியும் நம்மிடத்தில் இருந்து வசூலிக்கிறார்கள். இந்த முறை மாற்றப்பட்ட வேண்டும். இது நம்முடைய பொருளாதார வளர்ச்சியில் ஒரு பெரிய இக்கட்டான சூழ்நிலையை உருவாக்குகிறது. இந்த முறை மாநில அரசின் பொருளாதார வளர்ச்சிக்கு நல்லதல்ல என்பதையும் நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். இப்படிப்பட்ட இக்கட்டான சூழ்நிலையில், எவ்வளவோ நிதி நெருக்கடிக்கிடையில், இந்த அரசு நல்ல பல திட்டங்களைத் தீட்டித் தந்து இருப்பதற்காகநான் பாராட்டுக்களைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பொதுவாக அரசியல்வாதிகள் அடுத்த தேர்தலைப் பற்றித் தான் நினைத்துக்கொண்டு இருப்பார்கள். ஆனால் ஒரு அரசியல் ஞானிதான் அடுத்த தலைமுறையைப்பற்றிச் சிந்திப்பான். அந்த வகையில் மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் ஒரு அரசியல் ஞானி என்பதை நான் இந்த நேரத்தில் குறிப்பிட்டுக் சொல்ல விரும்புகிறேன். இந்த அரசு எந்த ஒரு திட்டத்தைக் கொண்டுவந்தாலும், அந்தத் திட்டம் ஏழை எளிய மக்களுக்குப் போய்ச் சேரவேண்டும், அதுவும் ஒரு சாராருக்கு மட்டும் போய்ச் சேர்ந்துவிடக்கூடாது, எல்லா தரப்பு மக்களுக்கும், அனைத்துத் தரப்பினருக்கும் அந்தத் திட்டத்தின் பலன் கிடைக்க வேண்டும் என்று திட்டங்களைக் கொண்டு வந்து இருக்கிறது. பேரறிஞர் அண்ணா அவர்கள் சொன்னார்கள் வரிகள் எப்படி விதிக்கப்பட வேண்டும் என்று சொல்கிறபோது Tap the rich and pat the poor. என்று சொன்னார்கள். இந்த வரி சாமான்யர்களின் தலையில் சுமத்தக்கூடாது, ஏழை எளிய மக்கள் மீது சுமத்தக்கூடாது, தாங்குகிறவர்கள் தலையில் வரியைச் சுமத்தி, அந்தப் பணத்தைக் கொண்டு ஏழை எளிய மக்களுக்கு நன்மை செய்ய பயன்படுத்த வேண்டும் என்று சொன்னார்கள். அந்த அடிப்படையில் மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் இன்றைக்கு வரிவிதிப்பைச் செய்து இருக்கிறார்கள். இந்த வரிவிதிப்பு கூட ஏழை எளிய நடுத்தர மக்களுக்கு பாதிப்பு ஏற்படுத்தாத முறையில் இருக்கிறது. இந்த வரி விதிப்பு மூலம் கிடைக்கும் பணத்தைக்கொண்டு அந்த மக்களை சமூக நலத் திட்டங்கள் என்கிற குடையின் கீழ் கொண்டு வந்து இருக்கிறார்கள் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.



1984 மார்ச் 12] [திரு. செ. செம்மலை]

அப்படிப் பார்க்கிறபோது, இன்றைக்கு நம்முடைய நிதி அமைச்சர் அவர்கள் 10 வயதிலிருந்து 15வயது வரையுள்ளவர்களுக்கும் இந்தச் சத்துணவுத் திட்டத்தை விரிவுபடுத்தியிருக்கிறார்கள். இந்தத் திட்டத்தைப் பார்த்து சில பேர் கேலி பேசினார்கள். ஆனால் இந்தத் திட்டம் நல்ல முறையில் நடந்து வருகிறது. இந்தக் குழந்தைகள் மதிய நேரத்தில் அந்தச் சத்துணவு கூடங்களில் சத்துணவைச் சாப்பிட்டுவிட்டு மகிழ்ச்சியோடு இருக்கிறார்கள். இந்தத் திட்டத்தை உலகமே பாராட்டுகிறது. உலகமே போற்றிய அன்னை தெரிசா அவர்கள் கூட இதைக் கடவுளுக்குச் செய்யும் சேவை என்று பாராட்டினார்கள். பேரறிஞர் அண்ணா அவர்கள் ஏழையின் சிரிப்பில் இறைவனைக் காண்போம் என்று சொன்னார்கள். இன்றைக்கு இந்தச் சத்துணவுத் திட்டத்தில் சத்துணவு உட்கொண்ட மாணவர்கள் மகிழ்ச்சியோடு இருக்கிறார்கள். அவர்கள் முக மலர்ச்சியோடு இருப்பதைப் பார்த்து விட்டு அவர்களுடைய ஏழை எளிய பெற்றோர்கள் மகிழ்ச்சியுடன் இருக்கிறார்கள். அவர்களுடைய மகிழ்ச்சியான சிரிப்புதான் இந்தப் புரட்சித் தலைவரின் ஆட்சிக்கு அளிக்கும் பாராட்டுப் பத்திரம் என்பதை நான் சொல்லிக்கொள்கிறேன்.

இன்றைக்கு இந்த அரசு தொழில் கல்வியை அறிமுகப் படுத்தியிருக்கிறது. கடந்த காலத்தில் கடைப்பிடித்த கல்விக் கொள்கையின் காரணத்தால் தான் இன்றைக்கு வேலையில்லாத் திண்டாட்டம் பெருகியிருக்கிறது. இந்தத் திட்டத்தின் மூலம் மக்களுக்கு கொஞ்சம் படிப்பு அறிவு கிடைத்தால் கூட ஒரு தொழில் செய்து பிழைத்துக்கொள்ள முடியும். ஆகவே. இந்தத் திட்டத்தின் மூலம் நிச்சயமாக வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்க முடியும். திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி காலத்திலோ அல்லது காங்கிரஸ்காரர்கள் ஆட்சி காலத்திலோ இப்படிப்பட்ட கல்வி முறையை அறிமுகப்படுத்தியிருந்தால், இன்றைக்கு வேலையில்லாத் திண்டாட்டம் நிச்சயமாக இந்த அளவிற்கு இருந்து இருக்காது என்பதை எடுத்துச் சொல்ல கடமைப்பட்டு இருக்கிறேன். ஆகவே இந்தத் திட்டம் வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்கும் ஒரு பெரிய புரட்சித்திட்டமாக இருப்பதால், இந்தப் புதிய கல்வித் திட்டத்தை நான் மனதார வரவேற்றுப் பாராட்டுகிறேன்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

அரசு ஊழியர்களைப் பொறுத்தவரையில், இன்றைக்கு பே கமிஷன் அறிவிக்கப்பட்டு இருக்கிறது. இந்த நாடு சுதந்திரம் அடைந்து 25 ஆண்டுகாலம் ஆட்சியில் இருந்தவர்கள் ஆட்சி காலத்தில் இரண்டு பே கமிஷன்கள்தான் அமைக்கப்பட்டன. ஆனால் புரட்சித் தலைவர் பொறுப்பேற்றுக் கொண்ட இந்த 7 ஆண்டு காலத்தில் இரண்டு பே கமிஷன்கள் அமைக்கப்பட்டு இருக்கின்றன. ஒரு முறை பேரிவிஷனும் புதிய உயர்வும் அளிக்கப் பட்டுள்ளது. ஆகவே, அரசு ஊழியர்களைப் பொறுத்தவரையில்

[திரு. செ. செம்மலை] [1984 மார்ச் 12]

இந்த அறிவிப்பு ஒரு நல்ல அறிவிப்பாக இந்த நிதிநிலை அறிக்கையில் வந்துள்ளது என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

(முற்பகல் 11-10)

அதைப்போன்று மற்றொரு மிக முக்கியமான அறிவிப்பையும் மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் இந்த நிதிநிலை அறிக்கையில் வெளியிட்டிருக்கிறார்கள். அதாவது, ''நிலமற்ற உழவுத் தொழிலாளர்கள், சொற்ப நிலமுள்ள உழவர்கள் போன்ற சமுதாயத்தின் நலனுக்காக உழைக்கும் இந்தப் பிரிவினர்க்குப் பாதுகாப்பும் காப்புறுதி திட்டத்தின்கீழ் நன்மையும் அளிப்பது என்று நிதிநிலை அறிக்கையில் குறிப்பிட்டிருக்கிறார்கள்.

தமிழ்நாட்டில் தொழிற்சாலைகளில் வேலை செய்கின்ற தொழிலாளர்கள் தங்களுடைய கோரிக்கைகளை எடுத்து வைப்பதற்கு பல்வேறு சங்கங்களை அமைந்துக்கொண்டிருக்கிறார்கள். அவர்கள் தங்களுடைய சங்கங்களின் மூலம் போராடி வருகிறார்கள். அந்த முறையிலே அந்தச் சங்கங்களை சர்க்கார் அங்கீகரித்திருக்கிறது. இன்றைக்கு நிலமற்ற உழவர்கள், சிறு விவசாயிகள் போன்றவர்களுக்கு இப்படிப்பட்ட ஒரு அமைப்பு இல்லை. தங்களுக்கு என்று ஒரு அமைப்பு இல்லாமல் சிதறிக்கிடந்த அவர்களை ஆர்கனைஸ்ட் செக்டார் என்ற முறையிலே ஒரு அமைப்பின் கீழ் கொண்டுவரும் திட்டத்தை இந்த நிதிநிலை அறிக்கையிலே அறிவித்திருக்கிறார்கள். இதனால் மற்ற தொழிலாளர்களைப்போல இவர்களும் காப்புறுதித் திட்டத்தின் பயனைப் பெறவும், உரிமைகளுக்காகப் போராடவும் நல்ல பல் சலுகைகளைப் பெறுவதற்கும் வாய்ப்பு இருக்கும். இது ஒரு முன்னோடித் திட்டமாக, எதிர்காலத்திலே அவர்களுக்கு வெகுவாக நன்மைகள் அளிக்கும் திட்டமாக அவர்கள் வாழ்க்கையிலே விடிவெள்ளியாக இந்தத் திட்டம் உதித்திருக்கிறது என்று நான் குறிப்பிட விரும்புகிறேன்.

அடுத்ததாக என்னுடைய தொகுதி சம்பந்தப்பட்ட இரண்டொரு வேண்டுகோள்களை மட்டும் தெரிவித்து, என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன். கடந்த 4 ஆண்டுக் காலமாக என்னுடைய தொகுதியில் மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் நல்ல பல காரியங்களைச் செய்து அந்தப் பகுதி மக்களின் தேவைகளைப் பூர்த்தி செய்து வருகிறார்கள். இருந்தாலும் முக்கியமான இரண்டொரு கோரிக்கைகளை மட்டும் தெரிவிக்க விரும்புகிறேன்.

என்னுடைய தொகுதியான தாரமங்கலம் பெரும்பாலும் நெசவாளர்கள் வாழும் பகுதி. அங்கே கைத்தறி நுணித் தேக்கத்தின் காரணமாக அந்தப் பகுதி மக்கள் வேலையின்றி தவிக்கிறார்கள். அவர்களுடைய வேலைவாய்ப்பைப் பெருக்க கைத்தறி துறையில், என்னுடைய தொகுதியில் பவர் லூம்ஸ் காம்பிளெக்ஸ் ஒன்றை ஏற்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.



13229
சென்னை 600 008

1984 மார்ச் 12] [திரு. செ. செம்மலை]

அந்தப் பகுதி மிகவும் பிற்பட்ட பகுதி. எனவே கிராமப்புற மக்களுக்கு தொழில் வசதி ஏற்படுத்த காதித் துறையின் மூலம் 'வில்லேஜ் இன்டஸ்டிரியல் காம்பிளக்ஸ்' ஒன்றை அமைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, மேச்சேரி பகுதியில் நீண்ட நெடுங்காலமாக அரசு மருத்துவமனை ஒன்றை ஏற்படுத்த வேண்டுமென்ற கோரிக்கை இருந்துகொண்டிருக்கிறது. அங்கே ஒரு அரசு மருத்துவமனையை ஏற்படுத்தி, தேவையான படுக்கை வசதிகளையும் அமைத்துத் தரவேண்டுமேன்று பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

மேச்சேரி நகர பேருந்து நிலையத்தை விரிவுபடுத்தும் திட்டம் ஒன்று பரிசீலனையில் இருந்துகொண்டிருக்கிறது. ஐ.யு.டி.பி. திட்டத்தின் மூலம் கடன் பெற்று, அந்த பேருந்து நிலையத்தை விரிவுபடுத்த ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதோடு, மேச்சேரி, தாரமங்கலம் ஆகிய இரண்டு நகரப் பஞ்சாயத்துக்களையும் இந்த ஆண்டு தன்னிறைவுத் திட்டத்தின் கீழ் எடுத்துக்கொண்டு, செயல்படுத்த வேண்டுமென்று கேட்டு, என் உரையை முடித்துக்கொள்கிறேன். நன்றி நன்றி கூறி, என் உரையை முடித்துக்கொள்கிறேன். நன்றி வணக்கம்.

N211,31 N82
N84.603-5

திரு. நா. உமாநாத் : கனம் துணைச் சபாநாயகர் அவர்களே, இந்த பட்ஜெட் மோடிமஸ்தானுடைய செப்புடி வித்தை பட்ஜெட் என்று கூறினால் மிகவும் பொருத்தமாக இருக்கும். இதை ஆங்கிலத்தில் சொல்வதாக இருந்தால் 'டிரிக்கர்ஸ் பட்ஜெட்' என்று சொல்லலாம். அதனால் நான் நிதி அமைச்சர் அவர்களை டிரிக்கர்ஸ் என்றோ அல்லது மோடிமஸ்தான் என்றோ சொல்லவில்லை. சுருக்கமாக பட்ஜெட் எப்படி இருக்கிறது என்பதற்காகச் சொல்கிறேன்.

மைய நிதி அமைச்சர் திரு பிரணாப்முகர்ஜி தனது பட்ஜெட் பிரசங்கத்தில் ஒன்றைச் சொன்னார். நான் அதை கோட் பண்ணுகிறேன். ''இந்த நாடாளுமன்றத்தில் இருக்கும் நாமனைவருக்கும் முக்கியத்துவம் வாய்ந்த விரைவில் நிகழக்கூடும் நிகழ்ச்சியினை மனதில் கொள்ளாமல் முற்றிலும் விட்டுவிடவில்லை என நினைக்கிறேன்'' என்று தனது பட்ஜெட் பிரசங்கத்தில் கூறினார். அதாவது வரும் தேர்தலை கவனத்தில் கொண்டுதான் அவருடைய பட்ஜெட்டை தயார் செய்துள்ளார் என்று கூறுகிறார்.

அதேமாதிரி பட்ஜெட்தான் நமது மாநில அரசு பட்ஜெட்டும் என்று கூறுவது மிகையாகாது. ஒரே ஒரு வித்தியாசம் பிரணாப் முகர்ஜி இதை வாய்விட்டுக் கூறுகின்றார். ஆனால் நம்முடைய நிதி அமைச்சர் செய்கை மூலம் காட்டுகிறார். அவ்வளவுதான் வித்தியாசம்.

[திரு. ரா. உமாநாத்] [1984 மார்ச் 12

மத்திய சர்க்கார் பட்ஜெட்டுக்குப்பின் இங்கே சமர்ப்பிக்கப் படும் பட்ஜெட் இது. மைய பட்ஜெட் மக்களின் வாழ்க்கைத் தரத்தையும் நமது மாநிலத்திட்டங்களையும் கடுமையாகத் தாக்கும் பட்ஜெட்டாக இருப்பதை நாம் பார்க்கிறோம். ஆனால் நமது அரசுக்கு அந்த உணர்வு இருப்பதாகக்கூட, அதற்குப் பின் சமர்ப்பிக்கப்பட்ட இந்த பட்ஜெட்டில் பிரதிபலிக்கவில்லை. மத்திய சர்க்கார் பட்ஜெட் வெளிவந்தவுடனே தன்னுடைய உணர்வை பிரதிபலிக்காதது மட்டுமல்ல; நம்முடைய மாநில மக்களை பாதிக்கும் பட்ஜெட்டை பாராட்டியிருக்கிறார்கள்.

ஆனால் ஆந்திர முதல்வர் மைய பட்ஜெட் வெளியே வந்த பிறகு, முதல் தேதி, 'இந்து' பத்திரிகையிலே பகிரங்கமாக ஒரு ஸ்டேட்மெண்ட் கொடுத்தார்கள். 'மைய அரசின் பட்ஜெட் ஒரு பக்கம், மேலும் விலைவாசிகளை உயர்த்தி, சாதாரண மக்களை கடுமையாக தாக்கும். மறுபக்கத்தில் மாநிலங்களின் அபிவிருத்தி வேலைகளையும் தாக்கும். ஒரு கல்லால் இரண்டு மாங்காயை வீழ்த்துவதற்கு மைய அரசு கடைப்பிடித்த வழிதான் இது. வருமான வரி, கலால் வரி போன்ற துறைகளில் கொடுக்கப் பட்ட எவ்வளவு சில சலுகைகளை வரவேற்றாலும் மாநிலங் களின் தலையில் கை வைத்து மைய அரசு தனது தாராள மனப் பான்மையை காட்டுகிறது. At the cost of the State, th c ntr is b:coming liberal.

நல்ல வார்த்தையைப் போட்டார்கள். அவருடைய வார்த் தைகளை மீண்டும் தொடர்கிறேன். 'ஆனால் மையத்திற்கு முழுமையாக கிடைக்கும் பெரும் கம்பெனிகளின் மீது போடப் படும் வரித்துறையை சற்றும் தொடராமல் பார்த்துக்கொள் வதில் மைய அரசு மிகவும் அக்கறை காட்டியுள்ளது.'' ரொம்ப ஷார்ட்டாகச் சொன்னார்கள். ஒப்பனாகச் சொன்னார் கள். '' தனது மாநில மக்களை பாதிக்க ஒரு மைய பட்ஜெட் பற்றி நம் மாநில மக்களையும் பாதித்துள்ள பொழுது அந்த கருத்தையோ உணர்வையோ இந்த பட்ஜெட்டிலோ நமது முதல்வரின் எந்த அறிக்கையிலுமோ பிரதிபலிக்கவில்லை. மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லாம் கேட்கிறார்கள்—மைய அரசு தானே செய்கிறது, என்று. (But you are not reacting) இதுதான் என் கோரிக்கை. ஏன் இந்த மௌனம்? அங்கே ஒரு முதலமைச்சர் மக்களை பாதிக்கிறபோது, ஒப்பனாகச் சொல்லும் போது நாம் ஏன் மௌனம் சாதிக்கிறோம்? மைய பட்ஜெட் பற்றிய தமிழக அரசின் கருத்து, என் டீ. ஆர். கூறியதற்கு முற்றிலும் மாறானது என்று நான் கருதுகிறேன். அ.தி.மு.க. சார்பாக அ.தி.மு.க. கருத்தை அ.தி.மு.க. எம்.பி. கூறியதை கவனிக்கவும். இந்துப் பத்திரிகையிலே அதே தேதியில் வருகிறது. ''மைய அரசின் பட்ஜெட் துணிச்சலான பட்ஜெட்; யதார்த்த மான பட்ஜெட்'' என்று ராமகிருஷ்ணன் கூறியிருக்கிறார்கள். அவர் நிதியமைச்சரை பாராட்டினார். சாதாரண மக்கள் பாதிக்கப்படமாட்டார்கள் என்பது மட்டுமல்ல, சாதாரண மக் களுக்கு கணிசமான நிவாரணமும் அளிக்கிறது'' இங்கே இருக்கிற



1984 மார்ச் 12] [திரு. ரா. உமாநாத்]

ஆளும் கட்சி பிரதிநிதி நேர்மாறாக பேசியிருக்கிறார். இப்படி லாலி பாடுவது தான் வழக்கமாக இருக்கிறது. மக்கள் மத்தி யிலிருந்து அதையெல்லாம் மறைக்கப் பார்க்கிறார்கள் என்று சொல்ல விரும்புகிறேன். என்னிடத்திலே கேட்கிறார்கள். அங்கே அப்படிச் சொல்கிறார்கள். இதற்கு நான் ஒன்றைத்தான் சொல்ல முடியும். எனக்கு சாமியிலே நம்பிக்கையில்லை. இருந்தாலும் சொல்கிறேன். யேசு கிறிஸ்து கூறியதாக, வேண்டியதுபோல் ''பரலோகத்தில் இருக்கும் பிதாவே! அவர்கள் செய்வது என்ன என்பது தெரியாமலே செய்கிறார்கள், அவர்களை மன்னிப்பீர் களாக'' அதைச் சொல்லத்தான் முடியுமேதவிர, வேறு ஒன்றும் சொல்லமுடியாது.

அடுத்து விவசாயிகள் கடன் சம்பந்தமாக 1980 ஆம் ஆண்டு தேர்தலில் விவசாயிகளுக்கு ஒரு முக்கிய வாக்குறுதி கொடுக்கப் பட்டது ''மைய அரசு உதவினாலும், இல்லாவிட்டாலும் சுமார் 240 கோடி கடன் 5 ஆண்டுகளில் தள்ளுபடி செய்யப்படும்' என்று கூறப்பட்டிருக்கிறது. அதை 1981 ஆம் ஆண்டு பேரவைக் கூட்டத்தில் முதல்வர் ஊர்ஜிதம் செய்தார். இது அனேகமாக கடைசி பட்ஜெட் என்று நான் கருதுகிறேன். ஆகவே இதில் ஒன்றும் இல்லை. விவசாயிகளை அநேகமாக அந்த வாக்குறுதி களிலிருந்து கை கழுவி விட்டார்கள் என்று நம்புகிறேன்.

ஆளும் கட்சி உறுப்பினர்கள் சொன்னார்கள். நாங்கள் 210 கோடி ரூபாயை தள்ளுபடி செய்திருக்கிறோம் அமல் நடத்தி யிருக்கிறோம் என்று சொன்னார்கள். ரூ. 210 கோடியை எங்கே ரத்து செய்திருக்கிறார்கள்?

(மாண்புமிகு மாற்றுத்தலைவர் தலைமை)

30—5—1959 கூட்டுறவுத் துறை ஆணை நம்பர் 330— தேதிப்படி நிவாரணம் ரூ. 4 கோடி 84 இலட்சம். அடுத்து ஆர்டர் 17—10—1980, உணவு கூட்டுறவுத்துறை, அதனுடைய ஆர்டர் நெம்பர் 541, அதன்படி 73 கோடி ரூபாய் 22இலட்சம். அடுத்த உத்தரவு 2.5.1981, உணவு மற்றும் கூட்டுறவுத்துறை, எண் 366, அதன்படி 14 கோடி 60 இலட்சம். அதற்குப்பிறகு இந்த மாதிரி ஜி.ஓ. கிடையாது, ஆக டோட்டல் 92 கோடியே 67 இலட்சம்தான் தள்ளுபடி 240 கோடி எங்கே இந்த ஐந்தாண்டுக்குள்ளே தள்ளுபடி செய்யப் பட்டது? தள்ளுபடி செய்யப்பட்டது 92 கோடியே 67 இலட்சம் தான். அதனால் தான் நான் சொன்னேன். கழுவி விட்டாச்சு. வாக்குறுதி கொடுத்தும் கூட. உயர்மட்டக்குழு என்று ஒன்று அமைக்கப்பட்டது. நம்முடைய முன்னாள் ஸ்பீக்கராக இருந்த முனு ஆதி அவர்கள் தலைமையிலே இருக்கக்கூடிய அந்தக் குழுவிலே இந்தக் கணக்கு படித்துக் காட்டப்பட்டது. நீங்கள் கேன்சல் பண்ணியிருப்பது, ரிலீப் கொடுத்திருப்பது ரூபாய் 92 கோடிதான் என்று சொல்லப்பட்டிருக்கிறது. அரசாங்கத்தின்

தரப்பிலேயிருந்து அது மறுக்கப்படவில்லை. ஆகவே அந்த மாதிரி
கொடுத்த வாக்குறுதியை மீறி அவர்கள் ஏமாற்றப்பட்டார்கள்
என்று நான் சொல்ல விரும்புகிறேன்.

(முற்பகல் 11- 20)

அடுத்து மாவட்டப் பிரிவினையைப் பற்றி இந்த அவையிலே
பலரும் கூறியிருக்கிறார்கள். தஞ்சை மாவட்டத்தைப் பிரிக்க
வேண்டும் என்று நானே 1968-லே இந்த அவையிலே கூறியிருக்
கிறேன். மாவட்டங்களை திருத்தி அமைக்கவும், எல்லைகளை
நிர்ணயிக்கவும், அதன் தலைநகரை நிர்ணயிக்கவும், ஆய்வு செய்து
சிபாரிசு செய்ய அப்போதே 1978லேயிருந்து பல்வேறு அங்கத்தி
னர்கள், பல்வேறு மாவட்டங்களைப் பற்றி கேட்டுக்கொண்டி
ருக்கும் போதே, மாவட்டங்கள் திருத்தி அமைப்புக் குழு
ஒன்றை அமைக்காமல் இத்தனை மாவட்டங்களைப் பிரித்து,
தலைநகரங்களையும் திடீரென்று அறிவித்ததின் விளைவு, நாம்
பார்க்கிறோம், பத்திரிகையின் வாயிலாகவும், என் தொகுதியில்
நான் பார்க்கிறேன்-மக்களுக்கு மக்கள், இருவேறு செக்ஷன்களாக
பிரித்து அவர்களுக்குள்ளே சண்டை நடப்பதை நாம் பார்க்
கிறோம். நாம் அதை விரும்பக்கூடாது. மக்களுக்கு இடையிலே
சண்டையை நாம் விரும்பக்கூடாது. அரசு இப்படி நடந்து
கொண்ட முறை தவறு, இதற்கு மேற்கொண்டு இருக்கக்
கூடிய மெத்தெட் தவறு என்று சொல்லி நாங்கள் கண்டிக்கிறோம்.
மக்களுக்கு இடையில் சண்டையைத் தவிர்க்க தலைநகர் அறிவிப்பு
சம்பந்தமாக தாவாக்கள் எழுந்தால், நிபுணர் குழு கமிட்டிக்கு
விடவேண்டும் என்றும், அதன் மூலம் தீர்வு காண வேண்டும்
என்பது தான் எங்களுடைய யோசனை. சமீபத்திலே வள்ளி
யம்மை மாவட்டத் தலைநகர் அறிவிப்பு சம்மந்தமாக நாகை
மக்கள் எழுப்பிய தாவாவை நிபுணர் குழுவிற்கு அனுப்பி வைக்கப்
போவதாக நாகை சர்வக்கட்சி தூது கோஷ்டியிடம் மாண்புமிகு
முதல்வர் வாக்குறுதி கொடுத்திருக்கிறார்கள். அப்படி செய்ததி
னால் மக்கள் மத்தியில் சண்டையைத் தவிர்க்கவும், பிரச்சனை
சுமுகமாக தீர்வு காணவும் உதவும் என நான் நம்புகிறேன்.
ஆகவே தான் நான் சொல்கிறேன். இரண்டு சைட்களிலேயும் சரி
ஜனங்களுக்குள்ளே சண்டை வேண்டாம் இப்போது இருக்கிற
டிஸ்பியூட்டை சுமுகமான முறையிலே தீர்ப்பதுதான் சரியாக
இருக்கும். ஆகவே அந்த வாக்குறுதி சுமுகமாக தீர்ப்பதற்காக
அந்த வாக்குறுதி உதவி செய்யும் என்று நான் நம்புகிறேன்.

அடுத்து இந்த கார்ப்பரேசன் சம்பந்தமாக, பப்ளிக் செக்டார்
நிறுவனங்களிலே, பல நிறுவனங்களிலே நஷ்டம் ஏற்படுவதை
நாம் பார்க்கிறோம். இதற்குப் பல காரணங்கள் உண்டு. அதிலே ஒரு
முக்கியமான காரணம் அதிலே இருக்கக்கூடிய ஊழல்கள்தான் என்
பதை அரசாங்கம் கட்டாயமாக உணர வேண்டும். அதைவிட்டுக்
கொண்டே நீங்கள் போனால், பப்ளிக் செக்டார் பங்சன் என்று
கருதிக் கொண்டே போனால், அது நடக்காது. லேட்டஸ்ட்டாக





பார்த்தது பத்திரிகையிலே. சி. ஆர்., சி. கார்ப்பரேசன்,
சோழன் கார்ப்பரேசனில் ஒன் குரோர் அன்ட் ஆட், கிளார்க் கம்
காசியர் கம் ஆடிட்டர், எப்படிக் கொடுத்தீர்களோ பொறுப்பு?
காசியரும் அவரே, ஆடிட்டரும் அவரே. Th n what will h pp n
On Cror nd odd போச்சு என்று இத்தனை ஆண்டுக் காலத்
திற்குப் பிறகு கண்டுபிடிக்கப்பட்டது. நான் என்ன சொல்ல
வருகிறேன் என்று சொன்னால் அவர்கள் சஸ்பென்ட் செய்யப்
பட்டிருக்கிறார்கள். இதுதான் பத்திரிகையிலே வந்த செய்தி.
டிரான்ஸ்போர்ட் டிபார்ட்மென்டிலேயிருந்து, அந்த கார்ப்பரேஷ
னுடைய தலைமை அவரை சஸ்பென்ட் செய்தால் மட்டும்
போதாது, ஒரு கோடிக்குமேலே அதிலே இன்வால்வ் ஆகியி
ருப்பதால், அதை விஜிலன்சுக்கு விடவேண்டும் என்று அவர்களே
வலியுறுத்தி இருக்கிறார்கள். அவர்கள் வலியுறுத்தவில்லை
என்றால் நான் வற்புறுத்துகிறேன். Th m unt involv d
is such a h g amount அது இன்னும் விஜிலன்சுக்கு
விடவில்லை என்று நான் அறிகிறேன். ஏன் என்று தெரிய
வில்லை. மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் பதில் கூறுகிற
போது அதைப் பற்றி சொல்வார்கள் என்று நம்புகிறேன்.

அதே மாதிரி ஒவர்சீஸ் மேன் பவர் கார்ப்பரேஷன். அந்த
கார்ப்பரேஷன் நிர்வாகத்திலே பயங்கரமான ஊழல் இருக்கிறது
என்று கவர்னர் உரை விவாதத்தில் நான் சொன்னேன். வெளி
நாட்டிற்கு ஆட்களை தேர்வு செய்வதில் பணம் லஞ்சம் நட
மாடுகிறது என்பதற்கு இப்போது நான் அத்தாட்சிகள் வைத்
துள்ளேன். அவைத்தலைவர் அவர்களிடம் . காலையிலேகூட
நான் காட்டியிருக்கிறேன். முன்னவர் அவர்களிடம் நான்
சொல்லியிருக்கிறேன். அன்றைய மேனேஜிங் டைரக்டர் உமா
மகேசுவரனுடைய டிரைவர் ஏகாம்பரம் என்பவர் தான் மெயின்
ஏஜன்ட் என்று நான் சொன்னேன். அவருக்கு சப்-ஏஜென்ட்
சின்னசாமி. உலகநாதன் என்பவர் ரூபாய் 10 ஆயிரம் டிரை
வருடைய சப்-ஏஜென்டிடம் கொடுத்து, தேர்வு செய்யப்பட்டு
யேமன் என்ற நாட்டுக்கு அனுப்பப்பட்டார். டிரைவருடைய
சப்-ஏஜென்டிடம் 10 ஆயிரம் கொடுத்தார். அந்த ரூபாய்
டிரைவருக்கு போய் சேர்ந்ததோ, சேர வில்லையோ சப்
ஏஜென்ட் சாப்பிட்டுவிட்டாரோ என்ற சந்தேகம் வெளிநாட்
டுக்கு சென்ற பிறகு அந்த உலகநாதனுக்கு வந்து விட்டது.
அதை சப்-ஏஜென்டே சாப்பிட்டுவிட்டாரோ என்று. ஆகவே,
யேமனிலேயிருந்து டிரைவருக்கு இரண்டு கடிதங்களை ஒரே
கவரில் 21-7-1983 என்று தேதியிட்டு அனுப்பி இருக்கிறார்.
அந்த ஒரிஜினல் என்னிடம் இருக்கிறது. டிரைவருக்கு அட்ரஸ்
பண்ணி வந்திருக்கக்கூடிய அந்தக் கடிதத்தின் ஸ்டாம்பிலேயே
கூட ஏமன் என்று முத்திரை போடப்பட்டிருக்கிறது. அதை நான்
காலையிலேயே பேரவைத் தலைவரின் அறையில் காட்டிவிட்டு
அனுமதி பெற்றிருக்கிறேன். அதிலிருந்து படிக்கிறேன். அதில்
செர்டென் திங்க்ஸ் எல்லாம் டிஃபெனெட்டாக இருக்கிறது.
என்குயரி பண்ண வேண்டும். அந்தக் கடிதத்திலே—

[திரு. ரா. உமாநாத்] [1984 மார்ச் 12

''தெய்வம் துணை. அன்பும் பண்பும் பாசமும் என்றும் மறக்க முடியாத உயர் திரு அண்ணார் ரைவர் அவர்களுக்கு—பாவம், அதிகம் படிக்காதவர் போல் இருக்கிறது, டிரைவருக்கு ரைவர் என்று எழுதியிருக்கிறார் – உங்கள் ஆருயிர் அன்பு தம்பி பி. உலகநாதன் எழுவதும் அன்பு கடிதம்'' என்று ஆரம்பித்து எழுதியிருப்பதில் நான் ரெலவன்ட் போர்ஷனை மட்டும் படிக்றேன்.

''மேலும் தாங்கள் எனக்கு செய்த உதவியை நான் என் உயிர் உள்ள வரை மறவேன் ........இது வரையிலும் கடிதம் போடாமல் இருந்ததற்கு என்னை மன்னிக்கவும். மற்றும் அண்ணார் அறிவது என்னுடன் சென்னையில் இருந்த கே. சின்னசாமி என்பவர் என்னையும் எங்களது ஊர்க்காரர்கள் 3 பேரையும் மோசம் செய்து விட்டான். எப்படியென்றால், நான் வெளிநாடு அனுப்புகிறேன் என்றும், ஓ. எம். சி.யில் என் நண்பர் இருக்கிறார், அவரிடம் நான் கூறின ல், உங்களை உடன் அனுப்பிவிடுவார்கள் என்றும் அவர்களுக்கு பணம் 10,000 ரூபாய் தர வேண்டும் என்று கூறி எங்களையும் மற்றும் அங்கு உள்ள ஆட்களிடம் பணம் வாங்கி ஏமாற்றிக் கொண்டும் உங்கள் பெயரைக் கெடுக்கிறானாம். அவர்கள் அவனிடம் பணம் கேட்டால் பணம் உங்களிடம் கொடுத்ததாகவும் நீங்கள் அவர்களை ஏமாற்றியதாகவும் கூறிக்கொண்டு அனைவரையும் ஏமாற்றிக் கொண்டு உள்ளான். அத்துடன் எங்களையும் ஏமாற்றிவிட்டான். என்னிடம் 10,000 ரூபாய் வாங்கிக் கொண்டு அந்தப் பணத்தில் ரைவர் (அதாவது டிரைவர்) அதாவது உங்கள் கையில்—உங்களுக்கு 5,000 ரூபாய்க்கும் மேற்பட்ட ரூபாய் கொடுத்ததாகவும் மீதி தீனுக்கும் மற்றவர்களுக்கும் பணம் கொடுத்ததாகவும் கூறி—மெடிக்கல் காலேஜிலே டீன் என்று சொல்வார்களே அப்படி இவர்களுக்கும் ஒரு டீன் இருக்கிறார் போல் இருக்கிறது—தீனுக்கும் கொடுத்ததாகவும், கூறி என்னிடம் வாங்கிய ரூ. 10,000 செலவு செய்துவிட்டு மீண்டும் எனது அப்பா அம்மாவிடம் போயி நான் உலகநாதனை அனுப்பிவிட்டேன். அவனுக்கு செலவு ரூ. 5,000 ஆகிறது. டிரைவர்க்கும் ரூ. 5,000-க்கு மேல் லஞ்சம் கொடுத்துவிட்டேன். ஆகவே, நீங்கள் இன்னும் 5,000 கொடுக்கணும் என்று கேட்டுக்கொண்டு தொந்திரவு செய்துக் கொண்டு உள்ளான்''. என்று எழுதிவிட்டு பிறகு அதில் பாதியாவது வாங்கி என் பெற்றோர்களுக்கு கொடுங்கள் அவர்க்ள் சாப்பிடுவதற்கே வழியில்லை என்று சொல்லி எழுதியிருக்கிறார்.

அடுத்து வந்த கடிதம் இருக்கிறதே, அதுதான் முக்கியம். (குறுக்கீடு) அதுவும் எனனிடம் இருக்கிறது. இரண்டும் ஒரே கவரில் வந்தது. அந்த இரண்டாவது கடிதத்திலே—

'' மற்றும் அண்ணார் அறிவது எனது மைத்துனரிடம் உங்களைப் பற்றி பெருமையாக கூறிவிட்டு வந்தேன். அவரின் பாஸ்போர்ட்டையும் அவர் நண்பர் ஒருவரின் பாஸ்போர்ட்டையும்



1984 மார்ச் 12] [திரு. ரா. உமாநாத்]

ஆக 2 பேரின் பாஸ்போர்ட்டை அவன் வைத்துக் கொண்டு நீங்கள் இருவரும் 20,000 கொண்டு வாருங்கள். உங்களை வெளிநாடு அனுப்புகிறேன் என்று கேட்கிறானாம். இல்லை பணம் என்ளிடம் அவ்வளவு என்று கூறிவிட்டார்களாம். அப்படி என்றால் உங்களது பாஸ்போர்ட் இல்லை போ. தொலைந்து போய் விட்டது என்று ஏமாற்றுகிறானாம். ஆகவே, அவர்களை புதிதாக பாஸ்போர்ட்டு எடுத்து உங்களிடம் வந்து உங்கள் மூலம் ஓ. எம். சி. யில் பதிவு செய்து வையுங்கள். அண்ணார் உங்களை வெளிநாடு அனுப்பி வைப்பார் என்று லெட்டர் போட்டு உள்ளேன். அவர்கள் வந்தால் நீங்கள் அவர்களுக்கு வேண்டி உதவிகளைசெய்து அவர்களை வெளி நாடு அனுப்பி வையுங்கள். மற்றவைகளை நாம் இருவரும் பேசிக் கொள்வோம்—இதுதான் முக்கியம். மற்றவை என்ன இருக்கிறது?—உடனே அவர்களை எப்படியாவது வெளிநாடு அனுப்பி வைக்கும்படி பணிவுடனும், தாழ்மையுடனும் தாழ் பணிந்து கேட்டுக் கொள்கிறேன்.'' இவர் அந்த நிறுவனத்தின் மேனேஜிங் டைரக்டர் கூட அல்ல. சாதாரண ஒரு டிரைவர். அவருக்கு இப்படி கடிதம் எழுதுகிறார். அப்புறம் கீழே ஒரு நோட்டு. அதில் ''அவர்களை உடனே வெளிநாடு அனுப்பி வைக்கவும். மற்றவை நாம் இருவரும் பேசிக் கொள்வோம்''. ரிபீடட் செகண்ட் டைம். பிறகு கடைசியில் ''அத்துடன் என் மைத்துனர் கே. சக்கரபாணி அவர்களையும் வெளி நாடு அனுப்பி வைக்கவும். உங்கள் உதவிகளை உயிர் உள்ளவரை மறவோம்.'' என்று இது ஒரிஜினல் கடிதத்திலே எழுதப்பட்டிருக்கிறது. கடிதத்தை எழுதிய உலகநாதன் எம். டி. யினுடைய டிரைவர் மூலம்தான் சென்றார் என்பதைக் குறிப்பிட்டிருக்கிறார். அதற்காக ரூபாய் 10 ஆயிரம் டிரைவரின் சப் ஏஜன்ட் சின்னசாமியிடம் கொடுத்தார் என்பதும் ஊர்ஜிதம் ஆகிறது. அந்தப் பணம் டிரைவருக்கும் எம்.டி. க்கும் சேரவில்லை என்று போனவர் கருதுகிறார். தனது மைத்துனரையும் இன்னொருவரையும் கட்டாயமாக வெளிநாட்டுக்கு அனுப்பி வைக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறார்.

(முற்பகல் 11-30)

மூன்று தடவைகள் திரும்பத் திரும்பக் கேட்டுக் கொள்கிறார்கள். மற்றவைகளை நாம் இருவரும் பேசிக் கொள்ளலாம் என்று இரண்டு தடவைகள் சொல்கிறார். அதோடு டிரைவருடைய உறவினர் வேதகிரி இரண்டு தடவைகள் வெளிநாட்டுக்கு அனுப்பப்பட்டு இருக்கிறார். அந்த டிரைவர் அவ்வளவு பவர்புல்லா?

Mainly responsible for selection. யார் என்றால் எம்.டி. தான் டிரைவர் மூலமாக இவ்வளவு நடந்திருக்கிறது. இத்தனை பேர்கள் போய் இருக்கிறார்கள் என்கிறபோது அப்படி

டிரைவர் அவ்வளவு பவர்புல்லா? அங்கேதாம் நாம் பரிசீலிக்க வேண்டிய விஷயமாக இது இருக்கிறது. இன்னும் ஏராளமான ஊழல்கள் இருக்கின்றன. அதற்கான புரூப் இருக்கிறது.

You must go to vigilance. என்னிடம் புரூப் இருக் கிறது. விவரம் உள்ளது. பேலன்ஸ் ஷீட்டில் தொடர்ந்து நட்டம் காட்டப்படுகிறது. மக்களுடைய வரிப்பணம். அரசு மேல்மட்ட விசாரணைக்கு உத்திரவிடவேண்டும். ஒன்றை நான் தெரிவித்துக்கொள்கிறேன். சில பிரைமா-பேஸீ பேக்ட்ஸைத் தான் சொல்லியிருக்கிறேன். The driver should not be made a scap goat. இன்னும் உள்ளே போக வேண்டும். அவரை சஸ்பென்ட் பண்ணினால் போதாது. டிரைவர் மூலமாக முக்கியமான செய்தி வெளிவந்திருக்கிறது. அந்தச் செய்தியைப் பிடித்துக் கொண்டு—செலக்ஷன் பண்ணுவதற்கு ஒரு டிரைவருக்கு இன்புளுவன்ஸ் இருக்கிறது என்று சொன்னால் நிர்வாகத்திலே உள்ள எம்.டிக்கும் மற்ற ஆபீசர்களுக்கும் அதிலே என்ன இருக்கிறது என்பதை விஜிலன்ஸ் மூலமாக டீப்பராக போனால் நிச்சயமாக உண்மை வெளிவரும். நீங்கள் விஜிலன்ஸ் என்குயரி நடத்தவேண்டும். நிதியமைச்சர் அவர்கள் பதில் சொல்கிறபோது இதற்கும் பதில் அளிக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து போன தடவை வெளியிடப்பட்ட கேள்வித்தாளில் ஆளுங் கட்சி கொள்கை பரப்புச் செயலாளர் பற்றி கேள்வி கேட்டது சரியல்ல என்று எதிர்த்தரப்பிலே கேட்கப்பட்டது. அன்றைக்கு மாண்புமிகு கல்வியமைச்சர் அவர்கள் அதை நியாயப் படுத்தினார்கள். அதற்கு ஒரு வாதம் சொன்னார்கள். ஒரு அரசியல் சக்தியை மாணவர்கள் அறிய வேண்டியது அவசியம் என்று சொன்னார்கள். இன்றைய முதல்வர் அவர்களுக்கு இவ்வளவு செல்வாக்கு இருக்கிறது என்று ஜனங்கள் உணராமல் இருந்தார்கள். ஆகவே அரசியல் சக்தியை மாணவர்கள் தெரிந்து கொள்ளவேண்டியது அவசியம் என்று சொன்னார்கள். அப் போது நாங்கள் ஒன்றும் சொல்லவில்லையென்றாலும் I do not accept the argument, எங்களுடைய கருத்து, ரூலிங் பார்டியாக இருக்கிற நீங்கள் உங்களுடைய கையிலே இருக்கிற அதிகாரத்தை வைத்து உங்களுடைய பார்டி லீடர்களுடைய செல்வாக்கை மேலும் மேலும் உயர்த்தித் தூக்கிவிடுவதற்காக கவர்ன்மென்ட் மெஷினரியைப் பயன்படுத்திக்கொள்கிறீர்கள் என்பதுதான் எங்களுடைய கருத்து.

இன்னொன்று, லேட்டஸ்ட் ஒரு எக்ஸாமினேஷன். அரசுக் கல்லூரியிலே் நடந்திருக்கிறது.

Municipal High r Secondary School, Karur. Revision T st. 2nd February 1984 In Plue two English Pap r, Pap r II,





அதிலே ஒரு கேள்வி என்னவென்றால் Write an essay on any one of the following in about 200 words "Marriag celebration of the Film Director Baggiaraj-Poornima or "We can do it Mrs. Gandhi' என்று கேட்கப்பட்டிருக்கிறது. என்ன இது? எஸ்ஸே எழு துங்கள். பிலிம் டைரக்டர் பாக்கியராஜ்-பூர்ணிமா திருமணம் சம்பந்தமாக எஸ்ஸே எழுதுங்கள் அல்லது நம்மால் முடியும் என்று திருமதி காந்தி சொன்னதைப்பற்றி எஸ்ஸே எழுதுங்கள், அதைப்பற்றியோ இதைப் பற்றியோ எஸ்ஸே எழுதுங்கள் என்று கேட்டிருக்கிறார்கள். நான் என்ன சொல்கிறேன் என்றால் பாக்கியராஜ்-பூர்ணிமா பொலிட்டிக்சல்ஸ் போர்ஸா? அன்றைக்கு நான் சொன்னால் ஒத்துக்கொள்ளவில்லை. இது ஒரு பொலிட் டிக்கல் போர்ஸா?

**மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு :** மாற்றுத் தலைவர் அவர் களே, திரு. உமாநாத் அவர்களுக்கு வருகிற சந்தேகம்—இந்தக் கேள்வியைப் பொறுத்தவரையில்—எனக்கும் வருகிறது. எனக்கு வருகிற சந்தேகம் (குறுக்கீடு).

**திரு. ரா. உமாநாத் :** நிதியமைச்சர் பதில் சொல்கிறபோது ளாரிபை பண்ணட்டும். என்ன டிஸ்டர்ப் பண்ணவேண்டா மென்று கேட்டுக் கொள்கிறேன். (குறுக்கீடு).

**மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு :** ஒரு மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்த ஆசிரியரோ, தி.மு.க. வைச் சேர்ந்த ஆசிரியரோ இந்தக் கேள்வியைக் கேட்டு இந்த அரசுக்கு கெட்ட பெயர் உண்டாக்குவதற்காக செய்திருக்கிறாரோ என்ற சந்தேகம் எனக்கு இருக்கிறது. (குறுக்கீடுகள்).

**திரு. அன்பில் தருமலிங்கம் :** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, இது ஒரு பேட் பிரிசீடன்ட், அனுமதிக்கக் கூடாது.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் உமா நாத் அவர்கள் ஒரு அரசு பள்ளியிலே பிளஸ் 2 வகுப்பிலே கொடுக்கப்பட்ட ஒரு ஆங்கில கேள்வி பற்றி எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். கேள்வி இப்படி இருக்கலாமா? இதில் தவறு உண்டா? இல்லையா? இது எல்லாம் நல்லதா? இல்லையா என்று எல்லாம் எடுத்துக் கூறுவதற்கு அவர்களுக்கு முழு உரிமை இருக்கிறது. ஆனால் ஒன்றை மட்டும் நான் தெளிவுப்படுத்த விரும்புகிறேன். இப்படிப்பட்ட கேள்விகள் கேட்கப்படுவதற்கும் அரசுக்கும் எந்த சம்பந்தமும் இல்லை. அரசு இப்படிப்பட்ட கேள்விகளை தான் கேட்கவேண்டுமென்று டைரக் ஷன் கொடுக்கிற நிலையில் இல்லை. ஆக அரசுக்கும் இதற்கும் எந்த பொறுப்பும் இல்லை. ஆகவே அரசு சொல்லித்தான் இப்

[டாக்டர் திரு. இரா. நெடுஞ்செழியன்] [1984 மார்ச் 12

படிப்பட்ட கேள்விகள் கேட்கிறார்கள் என்ற முடிவுக்கு வரக் கூடாது என்ற நிலையை நான் தெளிவுபடுத்த விரும்புகிறேன். இப்படிப்பட்ட கேள்விகள் கொடுக்கலாமா? வேண்டாமா? இதில் ஏற்பட்டு இருக்கின்ற விளைவுகள் ஆகியவற்றைப் பற்றி மாண்பு மிகு உறுப்பினர் வெளியிட்டுள்ளது பற்றி எல்லாம் நடவடிக்கை எடுக்கவோ, கேள்விகள் கேட்டது சரியா? இல்லையா என்று எதிர்காலத்தில் சரியான அறிவுரை கூறவோ கல்வித்துறைக்கு முழுமையான உரிமை இருக்கிறது. அதற்குப் பயன்படுகிற வகையில் மாண்புமிகு உறுப்பினர் விளக்கம் பயன்படும். அவ் வப் போது சிலபல சமயங்களில் கேள்விகள் கேட்கின்றபோது காங்கிரஸ் ஆட்சியிலும் இது போல் உண்டு. அப்போதும் உண்டு. இப்போதும் உண்டு. அந்தக் கேள்விக்கும் இந்த ஆட்சிக்கும் தொடர்பு இல்லை. நாங்கள் சொல்லி தான் இவைகள் கேட்கப் படவில்லை. இப்படித்தான் கேட்கவேண்டும் என்று நாங்கள் டைரக்ஷன் கொடுக்கவில்லை என்ற விளக்கத்தை நாட்டுக்கு தெரிவிக்கவும், இந்த அவைக்குத் தெரிவிக்கவும் நான் கடமைப் பட்டு இருக்கிறேன். அதைமட்டும் நான் தெரிவித்துக் கொள் கிறேன். அவர் விமர்சிப்பதைப்பற்றி நான் எதுவும் சொல்ல வில்லை.

திரு. ரா. உமாநாத் : மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, அன்று எடுத்த பொஸிஷனுக்கு கல்வி அமைச்சர் அவர்கள் இப்படி சொல்லாமல் அதை டிப்பண்டு பண்ணியதால் தான் மறுபடியும் இப்படி ரிப்பிட் ஆகியிருக்கிறது.

(மாண்புமிகு பேரவைத் துணைத்தலைவர் தலைமை)

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் சொன்னது ஒரு கட்சியினுடைய கொள்கை பரப்புச் செயலாளர்............ (கூச்சல்-குழப்பம்) (குறுக்கீடு).

திரு. ரா. உமாநாத் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முன்னவர் அவர்கள் சொல்லி விட்டார். இப்போது அரசாங்கத்தினுடைய கவனத்திற்கு நான் கொண்டு வருகிறேன். This has b. n r.p.a.e.l ஆகவே தான் நான் கொண்டு வந்தேன். அது மட்டும் அல்ல. முதலில் அதை பொலிடிக்கல் போர்ஸா என்று நான் கேட்டேன் இரண்டாவது பாக்கியராஜ், பூர்ணீமா They are kept on par with Mrs. Gandhi (ஆர்) அடுத்த கேள்வி இருக்கிறது பாருங்கள். இவர்கள் மிசர்ஸ் காந்தியினுடைய சமநிலையிலா என்பது தான் என்னுடைய, கேள்வி, என்னுடைய கருத்து.

சமீபத்தில் இங்கிலாந்தில் நடைபெற்றதைப் பற்றி நான் சொல்கிறேன். ஒரு கல்லூரி இதே மாதிரி பிரின்ஸ் சார்லஸ் அண்டு டயானா. பிரின்ஸ் சார்லஸ் அங்கே அடுத்து கிங் ஆக வரவேண் டியவர். அவருடைய மேரேஜ் பற்றி ஒரு கேள்வி கல்லூரியில்



1984 மார்ச் 12] [திரு. ரா. உமாநாத்]

கேட்கப்பட்டது. கல்லூரி மாணவர்கள் புரடெஸ்ட்டு செய்தபிறகு கவர்ன்மெண்டு காலேஜில் அந்தக கேள்வியை செட் அப் செய்த புரபெஸரை எக்ஸ்பல் செய்திருக்கிறார்கள். This is more or less Maintained, நான் கவனத்திற்கு கொண்டு வருவது இவைகள் எல்லாம் இப்படி ஒரு எக்ஸ்டிரிமுக்கு போகும்போது என்ன ஒரு அபிப்பிராயம் வரக்கூடாது என்று நீங்கள் விரும்புகிறீர்களோ அந்தப் அபிப்பிராயம் வரும். அதனால் தான் நான் இந்த மாதிரி இந்த விஷயத்தை எடுத்துச் சொல்கிறேன்.

அடுத்து சத்துணவுத் திட்டம் விஷயமாக. சத்துணவுத் திட்டத்தை எதிர்க்கட்சிகள் எதிர்ப்பதாக மாநில அரசு திட்டம் போட்டு பிரச்சாரம் செய்து வருகிறார்கள் என்று நான் சொல் கிறேன். போன மாதம் மேலவையில் நம்முடைய முதலமைச்சர் அவர்கள் பேசும்போது அதை நான் கேட்டேன். அவர் அப் போது சொன்னார். சத்துணவுத் திட்டத்தை எதிர்ப்பவர்களை மக்கள் தண்டிப்பார்கள் என்று. என்னவோ எதிர்க்கட்சிகள் இதை எதிர்ப்பவர்கள் மாதிரியும், ஆளும் கட்சி அதை நடத்தியே தீருவேன் என்று நிலை எடுத்து இருக்கிற மாதிரியும் வர்ணிக் கப்படுகிறது. இந்தத் திட்டத்தின் கொள்கை முடிவு அதைப் பற்றி நான் சொல்கிறேன். இந்த திட்டத்தின் கொள்கை முடிவு 1982 ஆம் ஆண்டு பட்ஜெட் பிரசங்கத்தில் தான் மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் அறிவித்தார்கள். விவாதத்திற்குப் பதில் கூறுகையில் நிதி அமைச்சர் பேசியதை நான் புரொ. ஸீடிங்கிலிருந்து கோட் பண்ணுகிறேன்.

(முற்பகல் 11-40)

"இந்தத் திட்டத்தை எல்லோரும் வரவேற்றிருக்கிறார்கள். அந்த வகையிலே என்னுடைய மகிழ்ச்சியை நான் தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களும் இந்தத் திட்டத்தை குறை சொல்லவில்லை........ அவர்களும் வரவேற்றார்கள். ஆனால் அதை வரவேற்று, அதை நடைமுறைப்படுத்துவதிலே இருக்கிற சிக்கல்களை எடுத்து தெரி வித்தார்கள். இந்த அரசு ஆழ்ந்த கவனிப்போடு, உன்னிப் போடு அந்த சிக்கலை ஆராயத் தயாராக இருக்கிறது என்பதை நான் கூறிக்கொள்ள விரும்புகிறேன்." என்று கூறியுள்ளார். நான் கேட்கிறேன், எதிர்க்கிற பிரச்சினை எங்கே இதில் வந்திருக்கிறது? அப்படியிருக்கும்பொழுது எதிர்ப் பதாக ஏன் கூறுகிறார் என்றால், இல்லாததை இருப்பதாக வர்ணித்து, எதிர்க்கட்சிகளைத் தாக்குவதற்கு இந்த அரசாங் கத்தின் சாகசம்தான் அது என்று நான் கருதுகிறேன். ஆனால் நாங்கள் ஒன்றை எதிர்க்கிறோம் — சத்துணவை அல்ல— மேற்கு வங்கத்தைப் பற்றிக்கூடச் சொன்னார்கள். மேற்கு வங் கத்தில் 1982க்கு முன்னாலேயே, பிரைமரி ஸ்கூல் மட்டத்தில் 35 லட்சம் பள்ளிக் குழந்தைகளுக்குச் சத்துணவு உண்டு. ஆகவே, சத்துணவை அல்ல நாங்கள் எதிர்ப்பது. அதைப் பராமரிப்பதில்

[திரு. ரா. உமாநாத்] [1984 மார்ச் 12

உள்ள கடல் போன்ற ஊழல்களை எதிர்க்கிறோம். அதைச் சொல்வதில் எங்களுக்குத் தயக்கம் கிடையாது. நிர்ணயித்த உணவு குழந்தைகளுக்கு—முழு அளவு கலப்படமின்றி சேர வேண்டுமென்பதற்காக அந்த ஊழல்களை நாங்கள் கடுமையாக எதிர்க்கிறோம். அடிக்கடி அதில் பல்லியோ, மற்றவைகளோ விழுந்து பல இடங்களில் குழந்தைகளை அபாயத்திற்குள்ளாக இருக்கும் நிர்வாகக் கையாலாகத்தனத்தை எதிர்க்கிறோம். சத்துணவுத் திட்டத்தை எதிர்க்கிறோம் என்று எங்களுக்கு முத்திரை குத்தி, இதை எதிர்ப்பதால் சத்துணவுத் திட்டத்தையே எதிர்க்கிறோம் என்ற முத்திரையைக் குத்தி, அதிலிருக்கும் ஊழல் எதிர்ப்பை எங்களைக் கைவிடச் செய்ய எங்களை ப்ளாக் மெயில் பண்ண அரசாங்கம் முயற்சித்தால் அந்த ஊழல் எதிர்ப்பைக் கைவிட மாட்டோம்; கைவிட நாங்கள் தயாராக இல்லை.

இந்தக் கட்டத்தில் நான் ஒன்றைக் கூறியாக வேண்டும். சத்துணவுத் திட்டத்திற்குக் கட்டாய வசூல் நடப்பதைப் பற்றி பலர் கண்டித்தார்கள். அது மட்டுமல்ல. வசூலும் பயங்கரமான ஊழல் நடக்கிறது என்பதை அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன்.

இதோ என் கையில் ஒரு சீட்டு இருக்கிறது. அதில், நடுவிலே மாண்புமிகு முதலமைச்சரவர்கள் இரண்டு குழந்தைகளோடு உணவு உண்பது மாதிரி போடப்பட்டிருக்கிறது. முதல்வர் — பொது மக்கள் நிவாரண நிதி என்று போட்டும், சென்னை மாவட்டம் என்று ஒரு பக்கத்தில் போட்டும், 1983—84 என்று ஒரு பக்கத்தில் போட்டும் இருக்கிறது. இந்தச் சீட்டை நான் தங்களுக்கு இப்பொழுது தருகிறேன். அதில் நம்பர் இல்லை, தொகை குறிப்பிடவில்லை. இதை வைத்துக்கொண்டு கலெக்ஷன் நடத்துகிறார்கள். பல கல்லூரிகளிலேயும், ஸ்கூல்களிலேயும், இன்னும் பல்வேறு அலுவலகங்களிலேயும் இதை வைத்துக் கொண்டு வசூலிக்கிறார்கள் இதை வைத்துக்கொண்டு வசூலிப்பவர் ஒரு ரூபாயும் வசூல் பண்ணலாம்; ஆயிரம், பத்தாயிரம் ரூபாய் என்றும் வசூல் பண்ணலாம். ஆயிரம், பத்தாயிரம் ரூபாய் என்று வசூலித்து விட்டு ஒரு ரூபாய் வசூலிக்கப்பட்டது என்றும் கணக்கு கொடுக்கலாம். இந்தப் பயங்கரமான ஊழலை நாங்கள் வன்மையாகக் கண்டிக்கிறோம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்** : இது ரசீது அல்ல. இதைக் கொடுத்தார்கள் என்று எப்படிச் சொல்ல முடியும்? இது ரசீதா, இல்லையா என்று பார்க்கக்கூட முடியாத அளவிற்கு மக்கள் இல்லை. பத்துரூபாய் கொடுத்தால்கூட ரசீது கேட்பதும், ரசீது கொடுப்பவர்கள் கவுண்டர்பாயிலை வைத்துக் கொண்டு ரசீது கொடுப்பதும் வழக்கமாக உள்ளது (கூச்சல் — குழப்பம்) —



1984 மார்ச் 12]

நெடுஞ்செழியன் : தலைவர்
**மாண்புமிகு டாக்டர் இரா.**
அவர்களே, மாண்புமிகு திரு. உமாநாத் அவர்கள் இங்கே கொடுத்
திருக்கிறார்கள். அவர்கள் தெரிவித்தது போன்று இது மூன்று
வண்ணங்களில் அச்சிடப்பட்டு நடுவிலே மாண்புமிகு முதல்வர்
அவர்கள் இரண்டு குழந்தைகளோடு உட்கார்ந்து உணவு உண்
பது மாதிரி போட்டு முதல்வர் பொது மக்கள் நிவாரண நிதி,
சென்னை மாவட்டம் 1983—84 என்று போட்டிருக்கின்றது.
ஆகவே அவர்கள் சொன்னது மாதிரி இது செக்கும் அல்ல, ரசீதும்
அல்ல.

ஃப்ளேக் டே என்று நாம் போடுகிறோம். அது டிக்கெட்
ஆகாது, ஆனால் அதை வைத்து நாம் வசூல் செய்கிறோம்.
அந்த மாதிரி கொடுத்து வசூல் செய்யலாம் என்றிருந்து, அந்த
வசூலிலே ஊழல்கள், மற்றவைகள் ஏற்பட்டன என்று மாண்புமிகு
உறுப்பினர் அவர்கள் சொன்னால் அதைக் கவனித்து அரசு என்ன
நடவடிக்கை எடுக்க வேண்டுமோ அந்த நடவடிக்கையை எடுக்கும்
என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. ரா. உமாநாத்** : மாண்புமிகு முன்னவர் அவர்கள் இவ்
வாறு சொன்னதற்காக இப்பிரச்சினைக்கு இத்துடன் நான்
முற்றுப்புள்ளி வைக்கிறேன்.

அடுத்து 9 மாதங்களுக்கு மேல் இல்லாமல் தமிழ் சினிமா
காட்ட வேண்டும் என்று ஒரு சட்டம் நிறைவேற்றப்பட்டபோது
நாங்கள் எங்கள் கட்சியிலிருந்து அதை எதிர்த்தோம். ஒவ்வொரு
மாநிலமும் அப்படிச் செய்தால் நாம் பாதிக்கப்படுவோம் என்று
நாங்கள் அன்றைக்கே எச்சரித்தோம். ஆனால் அரசாங்கம் அப்
போது செவிசாய்க்கவில்லை. சமீபத்திலே பம்பாயிலிருந்து சினிமா
ப்ரட்யூசர்ஸ் அசோசியேஷன் என்ற ஒரு அமைப்பு முதல்வர்
அவர்களுக்கு ஒரு கடிதம் எழுதியதாக வந்திருக்கிறது. இதனை
அவை முன்னவர் அவர்களின் கவனத்திற்கு நான் கொண்டு
வருகிறேன். அந்தக் கடிதத்திலே அந்த அசோசியேஷன் சார்
பாக அதனுடைய பிரெசிடெண்ட் என்ன எழுதி இருக்கிறார் என்
பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். ''எங்களுடைய மாநிலம்
தமிழ்ப்படத்திற்குத் தடை விதிக்கும்; தென்னிந்தியாவில் உற்
பத்தியாகும் இந்திப் படங்களுக்கு மகாராஷ்ட்ரா தடை விதிக்கும்
தென்னிந்திய நடிகர்கள் மகாராஷ்டிராவில் நடிக்க விடமாட்
டோம் இந்தி நடிகர்களைத் தென்னகத்திலே நடிக்க விடமாட்
டோம்'' என்று சொல்லி இருக்கிறார்கள். I do not accept the
position taken by the organisation ஆனால் அவர்கள் சொல்லக்
கூடிய இந்த நடவடிக்கைகள் சரியல்ல என்பது தான் எங்களுடைய
கருத்து. ஏற்கெனவே பஞ்சாபிலே பல்வேறு நிலைமைகள் ஏற்
பட்டிருக்கின்றன. அப்படிப்பட்ட சூழ்நிலையில் இன்னும் ஃபுல்லாக
நெருக்கடிக்குத்தான் இது கொண்டுபோய் விடும் என்பதை நான்
தெரிவித்துக்கொள்கிறேன். ஆகவே அங்கே இருக்கக் கூடிய
சில சாவனிஸ்ட்டுகள் இம்மாதியான நடவடிக்கைகளை எடுப்பதற்

[திரு. ரா. உமாநாத்] [1984 மார்ச் 12

குரிய விதையை நாம் போட்டு வைத்திருக்கிறோம். அன்றைக்கே நாங்கள் எச்சரிக்கை செய்தோம். We we e very much conc rn d about i'. என்று சொன்னோம். அதை நீங்கள் கேட்கவில்லை ஆகவே அதை ரீகன்சிடர் செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து நிலக்கரி, எண்ணெய், இரயில்வே சரக்குக் கட்டணம் ஆகியவற்றின் உயர்வு எல்லாம் மின்சார வாரியத்தைப் பாதித்ததாகச் சொல்கிறார்கள். இவற்றின் விலை ஏற்றத்தால் போக்குவரத்து நிறுவனங்கள் பாதிக்கப்படுகின்றது என்று அரசு சொல்கின்றது. தாரின் விலை ஏறியதால் அதாவது அதனுடைய 75 சதவீத விலையேற்றம் ரோடு போடுவதைப் பாதித்திருக்கின்றது என்று நான் குற்றம் சாட்டுகிறேன். மாநில சர்க்காரின் மீது, அதாவது மாநில சர்க்காரின் சம்மதத்தில்தான் அந்த விலைகளை எல்லாம் மைய அரசு உயர்த்தி இருக்கிறது என்று நான் சொன்னால் நீங்கள் ஆச்சரியப்படுவீர்கள். ஆனால் நான் பொறுப்போடு சொல்கிறேன். சர்வதேச நிதி நிறுவனம், அதாவது ஐ.எம்.எஃப். மைய அரசுக்குக் கடன் தருகின்றபோது இந்தப் பொருட்களின் விலையை எல்லாம் உயர்த்த வேண்டும் என்று ஸ்பெஸிபிக்காக நிபந்தனை போட்டது. அவ்வாறு இந்தப் பொருட்களின் விலைகளை எல்லாம் ஏற்ற வேண்டும் என்று அவர்கள் நிபந்தனை போட்டபோது அந்த விலையேற்ற நிபந்தனை மாநிலங்களைப் பாதிக்கும், மக்களைப் பாதிக்கும், போக்குவரத்துத் துறை, மின்சாரத்துறை ஆகியவற்றைப் பாதிக்கும் என்று நாங்கள் எங்கள் கட்சியின் சார்பிலே எதிர்த்தோம். ஆனால் இவ்வளவு பாதிப்பு ஏற்படும் என்பதைத் தெரிந்தே அந்த விலையேற்றத்திற்குச் சம்மதம் தெரிவிக்கும் வகையில் இந்த அரசின் பிரதிநிதிகளாக அங்கே நாடாளுமன்றத்திலே இருப்பவர்கள் அந்த லோன்களின் நிபந்தனைகளை ஆதரித்துப் பேசினார்கள் என்பதை நான் உங்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

அதுமட்டுமல்ல. அதை நாங்கள் எதிர்க்கிறோம் என்று சொன்ன போது ஏ.டி.எம்.கே. உறுப்பினர் திரு. இராமகிருஷ்ணன் அவர்கள் எங்களைப் பார்த்து " Th re are som people who have got I:M.F. habia ", என்று கூறினார்கள்.

(முற்பகல் 11-50).

அதாவது, ஐ.எம்.எப். போபியா பிடித்தவர்கள் என்று, அதை எதிர்க்கக் கூடிய எங்களைப் பார்த்து, மாநிலத்தைப் பாதிக்கும் என்று சொல்லிய எங்களைப் பார்த்து கூறினார். போபியா என்றால், ஐ.எம்.எப். அச்சக் கோளாறு பிடித்தவர்கள், வெறுப்புக் கோளாறுகள் பிடித்தவர்கள் என்ற நிலையில் சிலர் இருக்கிறார்கள் என்று சொன்னார்கள். அந்தப் பயங்கரமான அளவு ஆதரித்து, நீங்களே இந்தப் பொருள்கள் விலையை உயர்த்த சம்மதித்து, பின் விலை உயர்த்தப்படுகிறபொழுது உங்கள் தலையிலே மண்ணை அள்ளிப் போட்டதாகக் கூட நான் சொல்ல



1984 மார்ச் 12] [திரு. ரா. உமாநாத்]

மாட்டேன். அதற்கு மேலே மக்கள் தலையிலே நீங்கள் மண்ணை அள்ளிப் போட்டபின் கண்ணீர் விட்டால் அது முதலைக் கண்ணீர் என்று சொன்னால் அது பாசாங்கு என்று சொன்னால் என்ன தவறு என்று நான் கேட்கிறேன்.

அடுத்தபடியாக Anna University of T chnology—M.B.A. Cours சம்பந்தமாக சில புகார்கள் பிரசுரிக்கப் பட்டுள்ளன. அதற்குள்ளே நான் போகவில்லை. நான் அதற்குத் தனியாகக் கேள்வி போட்டிருக்கிறேன். அது வருகிறபொழுது கேட்கிறேன். ஆனால் அது சம்பந்தமான அமைப்பில் சீக்கிரம் அரசாங்கம் மாறுதல் செய்ய வேண்டும். அதாவது எம்.பி.ஏ. கோர்ஸ் ஸ்ட்ரக்ச்சர் சம்பந்தமாக சீக்கிரம் மாறுதல் செய்ய வேண்டும். இல்லாவிட்டால் எம்.பி.ஏ. கோர்ஸ் படிக்கும் அந்த மாணவர்களைப் பாதித்துவிடும். Anna Univ rsity of Technology என்ற அமைப்பே ஒரு Autonomous Body. அதில் Vic -Chanc llor அவருக்குக் கீழே R gis rar அவருக்குக் கீழே, 5, 6 கல்லூரிகள் செயல்படுகின்றன. அதில் ஒரு கல்லூரி தான் Coll g of Engin ring. அந்த ஒரு கல்லூரியில் பல Departm nts உள்ளன. அதில் ஒரு டிபார்ட்மென்ட் தான் M chanical. அந்த ஒரு டிபார்ட்மென்ட்டில் 8 டிவிஷன்கள் உண்டு. அந்த டிவிஷன்களில் ஒன்றுதான் எம்.பி.ஏ. படிப்பு.. ஆனால் வேடிக்கை என்னவென்றால், Anna univ rsity Autonomous ஆக இருக்கும் பொழுது அதன் அட்டானமசுக்குள்ளே இன்னொரு அட்டானமஸ். அதாவது அட்டானமசுக்குள்ளே—கீழே இருக்கிற ஒரு யூனிட் அட்டானமசாம். அதாவது அண்ணா பல்கலைக் கழகத்தி கீழே உள்ள ஒரு கல்லூரியின் மிகவும் அடித்தட்டில் உள்ள ஒரு டிவிஷன் தனியாக அட்டானமசாம். அதாவது பல்கலைக் கழகத்தின் Vic -Chancellor-க்கும் Principal-க்கும் D an-க்கும் Board of Stu i s-க்கும் Academic Council-க்கும் Syn icat -க்கும் மேலே இருக்கிறது என்று அர்த்தம். அதன் Programm Co-ordinator-க்கு M.B.A. degree-யே கிடையாது. டிகிரியே இல்லாதவர் M.B.A. Cours Programme Coordinator. ஆகவே பிழைப்பு எப்படி இருக்கும் என்று நீங்கள் பார்க்கலாம். இந்தத் தவறான அட்டானமி பல ஊழல் களுக்கு இடம் கொடுக்கும். உதாரணத்திற்கு, Anna Univ rsity யின் Academic Council M.B.A. படிப்பிற்கு 200 கோர்ஸு களுக்கு ஒப்புதல் அளித்திருக்கிறது. That is correct. Th y ar authority fo it. அந்த 200 கோர்ஸிலிருந்துதான் அவர்கள் செலக்ட் பண்ண வேண்டும். அந்த டிபார்ட்மென்ட் தலைவர் Prof. A.M. Srinivasan. Division Head Prof. K. N. Balasubramanian. அவர்கள் தான் பாடங்களைத் தேர்ந்தெடுக்க வேண்டும். அவர்கள் ஒப்புதல் பெற்ற லிஸ்டில் இல்லாத பாடங்களை இன்றைக்கு எடுத்திருக்கிறார்கள். ஆனால் ஏமாற்றுவதற்காக, ஒப்புதல் பெற்ற லிஸ்டில் இருந்து எடுக்கவில்லையே என்று கேள்வி வருமே என்பதற்காக, —நான் பூரா ரெக்கார்டையும் பார்த்தேன்—ஒப்புதல் பெறாத பாடங்களுக்கு, ஒப்புதல் பெற்ற பாடங்களில் இருக்கிற—ஈக்கு

வலாக இருக்கிறவற்றைக் கொஞ்சம் சேர்த்து, அந்தப் பெயரைப் போட்டு விட்டார்கள். ஆனால் உண்மையிலே அவர்கள் எடுக்கும் பாடங்கள் வேறு. What will happen to th degre? யார் ரெக்ககனைஸ் பண்ணுவார்கள்? அந்த மாணவர்களுடைய எதிர்காலம் என்ன ஆகும்? ஆகவே, அதற்கு மேலே நான் போகவில்லை. உடனடியாக அந்த அமைப்பு, அட்டானமசுக்குள்ளே அட்டானமி என்கிற அந்த அமைப்பு, மாணவர்களைப் பாதிக்கும் என்பதால், அதனைச் சீக்கிரமாகத் திருத்தி அமைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இந்த பட்ஜெட் பற்றாக்குறை பட்ஜெட் என்பதற்காகவோ, அல்லது ஓவர் டிராப்ட் வாங்கியதற்காகவோ நாங்கள் குறை கூற மாட்டோம். இன்றைய மைய மாநில உறவு நிலைமையில் மாநிலங்கள் இப்படிப் போவதைத் தவிர வேறு வழியில்லை. We know it for a long time. ஆனால் நீங்கள் எடுத்த ஓவர் டிராப்ட் பற்றி நாங்கள் என்னமோ எதிர்த்தவர்கள் மாதிரியும், அதற்குப் பதில் கூறும் முறையில் ஓவர் டிராப்டின் நியாயத்தைப் பற்றி, இந்த அரசு எங்களுக்கு வகுப்பு எடுப்பது போல் இங்கே பேசுகிறபொழுது, நான் ஒன்றுதான் கூறுவேன்.

It is a bit impertinent on Government's part to do such homilies to us. தமிழில் சொல்ல வேண்டுமென்றால், ஓவர் டிராப்ட் எடுப்பதனுடைய அவசியம்......................

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: அதைப் பற்றி பல பேர்கள் விளக்கம் பெற வேண்டுமென்பதற்கும் விளக்கம் பெறாமல் பல பேர்கள் இருக்கிறார்கள் என்பதற்காகவும் சொல்லப்பட்டது. பர்டிக்குலராக கம்யூனிஸ்டுகளுக்காக சொல்லப் பட்ட ஒன்று அல்ல. அது உங்களுக்காக சொல்லப்பட்ட ஒன்று அல்ல; நீங்கள் அப்படி எடுத்துக்கொள்ள வேண்டிய அவசியம் இல்லை. மேற்கு வங்காளம் எந்த நிலையிலே இருக்கிறதோ, அந்த நிலையிலேதான் தமிழகமும் இருக்கிற காரணத்தால், அவர்கள் எதிர்க்க மாட்டார்கள் என்பது தெரியும்.

திரு. அ. ரகுமான்கான்: அப்படியானால் ஓவர்டிராப்ட் பற்றிய விளக்கம் எங்களுக்காகச் சொல்லப்பட்டதா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: திரு ரகுமான்கானுக்காகவும் அல்ல, திரு. ரகுமான்கானைச் சேர்ந்த சில பேர் வெளியே பேசியிருப்பதற்காகவும் அல்ல.

திரு. ரா. உமாநாத்: அடுத்து ஒரு ரெலவண்ட் விஷயம். அதைக் கூறி முடித்து விடுகிறேன். நான் ஒன்றை நிதியமைச்சர் அவர்களின் கவனத்திற்கு ஞாபகப்படுத்துகிறேன். ஓவர்-டிராப்ட் வாங்குவது என்பது நிதி நிலையில் நிதானமின்மைக்கும், நிதி நிலையைச் செம்மையாகவும், சிறப்பாகவும் பணியாற்றாமலிருப்ப [illegible] தான் ஓவர் டிராப்ட் ஏற்படுகிறது என்றும், இந்த





அரசு அப்படிப்பட்ட அரசு அல்ல; மற்ற அரசுகள் அப்படிப் பட்டவர்கள் என்று கூறியவர்கள் இந்த அரசு தான். 1982 மார்ச், 8 ஆம் தேதி மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் பட்ஜெட் விவாதத்தில் கூறியதை நான் படிக்கிறேன். அப்படி ஒரு பொசிஷன் நீங்கள் எடுத்து, ஓவர்-டிராப்ட் எடுப்பதே, செம்மையான நிதிநிலை இல்லாதவர்கள் தான் எடுப்பார்கள் என்று நிதியமைச்சர் அவர்கள் அன்றைக்குச சொன்னார்கள். நான் அதை கோட் செய்கிறேன். இந்த மாநிலம் ஓவர்-டிராப்ட் வாங்க வேண்டிய ஒரு நிலைக்கு ஆளாகாத அளவிற்குத் தான், தன்னுடைய நிதி நிலையில் நிதானமாகவும், நிதி நிலையைப் பொறுத்த வரையில் செம்மையாகவும், சிறப்பாகவும் பணி யாற்றி வருகிறது என்பதை அவையினருக்கு எடுத்துக் கூறிக் கொள்ள விரும்புகிறேன் என்று கூறி மற்ற மாநிலங்கள் பற்றி கூறினார்கள். அவர்கள் நிறைய ஓவர்-டிராப்ட் எடுக்கிறார்கள். அதிலும் வெஸ்ட்-பெங்கால் மேஜர் போர்ஷன் எடுத்திருக்கிறார் கள் என்று சொன்னார்கள். நிதி நிலையை செம்மையாகவும் சிறப்பாகவும் பணியாற்றுவதற்கு அறிகுறியாக சுட்டிக்காட்டுவது சரியல்ல என்று நான் அன்றைக்கே சொன்னேன். ஆனால் நீங்கள் அதே பொசிஷனில் நின்றீர்கள். ஆகவே இந்த ஓவர்-டிராப்ட் எடுக்கிறபோது ....................

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, ஒரு சிறு விளக்கம் சொல்ல விரும்புகிறேன். இருக்கிற நிலைமையில் ஓவர்-டிராப்ட் வாங்கியே தீர வேண்டு மென்ற ஒரு கட்டாயம் இல்லை. இப்போது கூட மேற்கு வங்காளத்திலே இருக்கிற அருமை நண்பர் அசோக்மித்ரா அவர் கள் நிதியமைச்சராக இருந்தாலும், அவர்கள் ஓவர்-டிராப்ட் வாங்காமலே சமாளிக்கிற சூழ்நிலையில் அது அசோக் மித்ரா விற்கும், மேற்கு வங்கத்திற்கும் மகிழ்ச்சி தருகிற ஒன்று தான். கூடுமான வரையில் பேலன்ஸ் செய்யத்தான் எந்த நிதியமைச் சரும் முயற்சி எடுக்கிறார். முடியாத கட்டம் வருகிற போது, எதிர்பாராத கட்டம் வருகிறபோது, இப்படிப்பட்ட நிலைமை வருகிறதே தவிர, அப்போதும் கூட மேற்கு வங்காளம் தன் னுடைய திறமையற்ற நிலையிலே தான் வாங்குகிறது என்று நான் சொல்லவே இல்லை; வேறு எந்த மாநிலத்தையும் சொல்ல வில்லை. இப்போதும் கூட அசோக்மித்ரா அவர்கள் கூடுமான வரையில் அந்த ஓவர்-டிராப்ட்டிற்கு போகாத அளவிற்குத் தான், கட்டுப்படுத்துகிற அளவிற்குத் தான், இப்போது ஓரளவிற்கு கட்டுப்படுத்தியிருக்கிறேன் என்று அவருடைய ஸ்பீச்சிலே சொல்லி இருக்கிறார்கள். எனவே ஏற்கனவே இருந்த நிலையை கட்டுப்படுத்திக் கொண்டு வந்திருக்கிறார்கள். கட்டுப்படுத்தத் தான் அத்தனை பேரும் நினைக்கிறோம். வாங்காத நிலையில் பேலன்ஸ் பண்ண வேண்டும் என்று தான் நினைக்கிறோம். ஆனால் எதிர்பாராத சூழ்நிலைகள், நெருக்கடிகள் வருகிறபோது வாங்க வேண்டிய நிலை வருகிறது. அது தவறல்ல. அதைத் தவறு என்று நான் சுட்டிக்காட்டவில்லை.

[1984 மார்ச் 12

திரு. ஏ. உமாநாத் : தலைவர் அவர்களே, அதைப் படித்துப் பார்த்தேன் ; நேராகக் கேட்டுக் கொண்டும் இருந்தேன். அப்போது திறமையான ஒரு பட்ஜெட்டிற்கு இது ஒரு அறிகுறி மாதிரி என்றுதான் உங்கள் ஸ்பீச் இருந்தது. இப்படி பொசிஷன் வருகிறபோது நான் உங்களை அக்யூஸ் பண்ணவில்லை. அந்த முறையில் இல்லை என்று தான் எனக்கு பட்டது. என்னுடைய ஒரே பாயிண்ட் அப்போசிஷனிலே சில விஷயங்களை நாங்கள் சொல்கிறபோது கொஞ்சம் ஹீமிலிட்டியோடு அதிலே ஏதாவது இருக்கிறதா என்று கவனிக்க வேண்டும்.

கடைசியாக ஒன்றைக் கூறி முடித்து விடுகிறேன். 80 ஆயிரம் டன் அரிசி நமக்கு வேண்டியது கிடைக்கவில்லை என்று ரிபீட்டடாகச் சொல்லப்படுகிறது. 80 ஆயிரம் டன் அரிசி கிடைக்கவில்லை என்று 5, 6 முறைகள் சொல்லப்படுகிறது. இது ஏதோ பாடுகிற மாதிரி இருக்கிறது. அன்றைக்கு முதலமைச்சர் அவர்கள் சொன்னார்கள். ஆடி கறக்கிற மாட்டை ஆடி கறக்க வேண்டும் ; பாடிக் கறக்க வேண்டிய மாட்டை பாடிக் கறக்க வேண்டும். அதுதான் புத்திசாலித்தனம் என்று, கரெக்ட், அது தமிழில் சொல்லப்படுகிற ஒன்று. ஆனால், 80 ஆயிரம், 80 ஆயிரம் என்று திரும்பச் திரும்பச் சொல்லிப் பாடுவது பாட்டு. அப்படிப் பாடி பார்த்தாகிவிட்டது ; வரமாட்டேன் என்கிறது. இனிமேல் ஆடி கறப்பது தான் பாக்கி. பிரதமருடைய தாளத்திற்கு ஆடினால் தான் முடியுமென்றால், அதற்கு தயார் என்றால் ஆடுங்களய்யா ; இல்லையென்றால் உறுதியாக நில்லுங்களய்யா ; எல்லோரு ; சேர்ந்து இங்கே வெள்ளத்திற்கும், வறட்சிக்கும் கொடுக்க வேண்டிய நஷ்ட ஈட்டிற்கும்—விவசாயிகள் தஞ்சையிலும், மற்ற இடங்களிலும் 2,000 ரூபாய் நஷ்டயீடு கேட்டிருக்கிறார்கள். ஜூன், ஜூலை வரையில் தண்ணீர் வராது. விவசாயத் தொழிலாளர்களுக்கு வேலை இல்லை ; கையில் இருந்த மூலதனமும் போயிற்று ; ஜூன், ஜூலை வரையில் காவேரியில் தண்ணீர் வரவில்லையென்றால், வீ மே ஈவன் பேஸ் ஸ்டார்வேஷன் ; பட்டினிச் சாவைக் கூட நாம் சந்திக்கலாம். அப்படி இருக்கிறபோது 5 கோடி என்று கொடுத்தால் அது கிண்டல் பண்ணுவதில்லையா ? வெந்தப் புண்ணில் வேல் குத்துவது இல்லையா ? மத்திய சர்க்காரிடத்திலிருந்து 128 கோடி கொடுக்க வேண்டிய இடத்தில் 5 கோடி கொடுக்கிறார்கள். ஆகவே, நான் சொல்கிறேன். ஆடி கறப்பது என்றால் அவர்கள் சொல்கிறதைப்போல ஆடுவது ; நான் சொல்வேன், நீங்கள் உறுதியாக நில்லுங்கள். மக்களுக்கு ஆதரவாக எல்லோரும் சேர்ந்து யூனைட்டடாக மத்திய அரசோடு பைட் பண்ணுவதற்கு நீங்கள் முன் வந்தால் நிச்சயமாக நாங்கள் ஒத்துழைப்போம். அதல்லாமல் வெறும் தாஜா பண்ணினால் காரியம் நடக்காது என்று சொல்லி, நீங்கள் கொடுத்த நேரத்திற்கு நன்றி கூறி என் உரையை முடித்துக் கொள்கிறேன்.



1984 மார்ச் 12]

(நண்பகல் 12—00)

## 7. அறிக்கை அளித்தல்.

### விதி 106-ன் கீழ் வெள்ள-பாதிப்பு-நிவாரண அறிக்கை.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்** : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, இராமநாதபுரம் மாவட்டம், மதுரை மாவட்டம், திருநெல்வேலி மாவட்டம் ஆகிய மாவட்டங்களில் வெள்ளத்தால் பாதிப்பு ஏற்பட்டபோது, அங்கே நேரில் சென்று பல்வேறு இடங்களைப் பார்வையிட்டு, அவர்களுக்கு நிவாரணம் அளிக்கின்ற வகையில் பல செயல்களில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஈடுபட்டார்கள். அவர்கள் இந்த அவைக்கு ஒரு அறிக்கையை அது குறித்து வைக்கவேண்டும் என்று உறுப்பினர்கள் அனைவரும் எடுத்துத் தெரிவித்த கருத்துக்களுக்கு இணங்க அவர்கள் இந்த 3 நாட்களில் சுற்றுப்பயணம் செய்து மேற்கொண்ட பணிகள் குறித்தும், அங்கேயுள்ள நிலைமைகளைத் தெளிவாக்கும் வகையிலும் இந்த அவையில் ஒரு அறிக்கையை வைக்க விரும்புகிறார்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் சார்பாக இந்த அறிக்கையை பேரவை விதி 106-ன் கீழ் நான் இந்த அவைமுன் வைக்க விரும்புகிறேன்.

**அறிக்கை.***

மார்ச்சு திங்கள் முதல் வாரத்தில் தமிழ்நாட்டின் தென்பகுதிகளில், குறிப்பாக, இராமநாதபுரம், மதுரை மற்றும் திருநெல்வேலி மாவட்டங்களில் கடும் மழை பெய்து, அதனால், பல இடங்களில் வெள்ளப் பெருக்கெடுத்து உயிரிழப்பும், மக்களுக்கு பெரும் பாதிப்பும், பயிர்ச்சேதமும், ஏற்பட்டுள்ளது அவையின் உறுப்பினர்கள் அறிந்ததே.

பாதிக்கப்பட்டு அல்லலுறும் மக்களின் துயர் தீர்க்க போர்க்கால அடிப்படையில் இந்த அரசு உடனடியாக நிவாரணப்பணிகளை மேற்கொண்டது.

நிவாரணப் டணிகளை துரிதப்படுத்த நேரிலும், ஹெலிகாப்டர் மூலமும் நான் 8—3—1984 முதல் 10—3—1984 வரை இராமநாதபுரம், மதுரை மற்றும் திருநெல்வேலி மாவட்டங்களில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளை பார்வையிட்டேன். என்னுடன் வேளாண்மைத்துறை அமைச்சரும், நீர்ப்பாசனத் துறை அமைச்சரும், தலைமைச் செயலரும் அந்தந்த மாவட்ட ஆட்சித் தலைவர்களும், அதிகாரிகளும் வந்திருந்தனர்.

---

*20—3—84 அன்று பேரவையில் விவாதிக்கப் பெற்றது.

இராமநாதபுரம் மாவட்டம் :

இம்மாவட்டத்தில் மார்ச்சு மாதம் இயல்பாக பெய்யவேண்டிய மழையின் அளவு 26·1 மில்லி மீட்டர். ஆனால், மார்ச்சு முதல் வாரத்தில் மட்டுமே பெய்த மழை 204.6 மில்லி மீட்டர்.

6—3—1984 அன்று காலை வைகை நீர்த்தேக்கத்தில் மஞ்சளாறு, வராக் நதி மூலம் 43,000 கன அடி தண்ணீர் திறந்துவிடப்பட்டது. மானாமதுரை, சிவகங்கை மற்றும் பரமக்குடி கண்மாய்கள் முழு அளவை எட்டியிருந்தன. வைகை ஆற்றின் தண்ணீர் வந்து விழும் இராமநாதபுரம் பெரிய கண்மாயில் சுமார் 6 அடி தண்ணீர் இருந்தது. ஆகவே, முன் நடவடிக்கையாக சத்திரக்கோட்டை கண்மாயும், இராமநாதபுரம் பெரிய கண்மாயும் வைகை நீரை எதிர்பார்த்து திறந்துவிடப்பட்டது. தொடர்ந்து பெய்த மழையின் காரணமாக வத்திராயிருப்பு, கூமாபட்டி ஆகிய ஏரிகளில் உடைப்பு ஏற்பட்டு வத்திராயிருப்பு, கூமாபட்டி, கண்சாபுரம் ஆகிய பகுதிகள் இடுப்பளவு தண்ணீரால் சூழப்பட்டன. சாலைகளில் உடைப்பு ஏற்பட்டு போக்குவரத்து பாதிக்கப்பட்டது. விருதுநகர் வட்டத்தில் மங்களபுதுக்குடியில் உள்ள குளம் நிறைந்து உடைந்தது.

இதுவரை கணிக்கப்பட்டுள்ள மதிப்பீட்டின்படி இராமநாதபுரம் மாவட்டத்தில் 86 கிராமங்கள் பாதிக்கப்பட்டன. 8,110 குடிசைகள் முழுமையாகவும், 4,322 குடிசைகள் பகுதியாகவும் பாதிக்கப்பட்டன. 41,200 மக்களுக்கு நிவாரண முகாம்களில் தங்கவைத்து உணவு வழங்கப்பட்டது. 23,465 ஏக்கரில் நெற்பயிரும், 1,235 ஏக்கரில் பருத்தியும், 11,709 ஏக்கரில் மிளகாயும் 1,235 ஏக்கரில் கரும்பும் 50 ஏக்கரில் வெற்றிலையும் சேதமடைந்தன. 1,850 ஏக்கர் நிலங்கள் மண்மேடிட்டது. தற்போது தெரியவந்துள்ள தகவல்படி 14 பேர் உயிரிழந்துள்ளனர். பாதிக்கப்பட்டவர்களுக்கு நிர்ணயிக்கப்பட்ட நிவாரணங்களான குடிசை மானியம், அரிசி, புடவை மற்றும் வேட்டி முதலியன வழங்கப்பட்டன.

மானாமதுரை வட்டத்தில் ராஜகம்பீரம், டி. வேலங்குளம், இ.பெத்தநேந்தல், மணல்மேடு, பாப்பாக்குடி, கனக்கன்குடி, ஏனாசி, வள்ளிக்கோட்டை, தேனி போன்ற பாதிக்கப்பட்ட 29 கிராமங்களையும், திருவில்லிபுத்தூர் வட்டத்தில் வத்திராயிருப்பு, கூமாப்பட்டி, கண்சாபுரம், நத்தம்பட்டி, மூவரை வென்றான், சுந்தரபாண்டியம், காடனேரி, துலுக்கப்பட்டி, புதுப்பட்டி போன்ற 18 கிராமங்கள் தண்ணீரால் சூழப்பட்டிருந்ததையும் நான் ஹெலிகாப்டர் மூலம் பார்த்தேன். இவர்களுக்கு உணவுப் பொட்டலங்கள் என்னுடன் வந்த மற்றொரு ஹெலிகாப்டர்மூலம் போடப்பட்டன. சாலைகளில் 181 இடங்களில் உடைப்பு ஏற்பட்டது. அதில் 147 இடங்களில் சாலைகள் சரிப்படுத்தப்பட்டுவிட்டன. மீதி இடங்களிலும் வேலைகள் மும்முரமாக நடந்து



வருகின்றன. நீர்ப்பாசனக் குளங்களில் 111 இடங்களில் உடைப்பு ஏற்பட்டது. அவைகளில் 22 இடங்களில் சரிசெய்யப்பட்டு விட்டன. மீதி இடங்களில் வேலைகள் மும்முரமாக நடந்து வருகின்றன.

மதுரை மாவட்டம்.

இம்மாவட்டத்தில் மார்ச்சு மாதம் முழுதும் இயல்பாக பெய்யவேண்டிய மழையின் அளவு 23.9 மில்லி மீட்டர், ஆனால் மார்ச்சு முதல் வாரத்தில் மட்டுமே 71.4 மில்லி மீட்டர் மழை பெய்தது.

வைகை நீர்த்தேக்கத்தின் உச்ச மட்டம் 71 அடி அதில் 7—3—1984 அன்று 66 அடி நிரம்பியது.

7—3—1984 இரவு 69,000 கன அடி தண்ணீர் வைகையில் விடப்பட்டது. 8—3—1984 அன்று 14,000 கன அடி அளவிற்கு தண்ணீர் விடப்பட்டது.

முன்னெச்சரிக்கை நடவடிக்கையாகவும் திடீர் வெள்ளத்தினால் ஏற்படக்கூடிய சேதங்களைத் தவிர்ப்பதற்காகவும் வைகை ஆற்றின் கரையோரப் பகுதிகளிலிருந்து மக்கள் பாதுகாப்பான இடங்களுக்கு கொண்டு செல்லப்பட்டனர். அவர்களுக்கு நிவாரண இல்லங்களில் உணவு வழங்கப்பட்டன.

இம்மாவட்டத்தில் 37 கிராமங்கள் பாதிக்கப்பட்டு உள்ளன. 4,132 குடிசைகள் முழுமையாகவும், 360 குடிசைகள் பகுதியாகவும் பாதிக்கப்பட்டன. இது வரை கிடைத்த தகவல்கள்படி 15 பேர் உயிரிழந்தனர். 656 கால்நடைகள் உயிரிழந்தன. சுமார் 10,000 ஏக்கர் நெற்பயிர் நிலங்கள் மற்றும் 13,000 ஏக்கர் சோளம், 4,750 ஏக்கர் பருப்பு வகைகள், 9,240 ஏக்கர் பருத்தி, 9,000 ஏக்கர் வெங்காயம், 8,375 ஏக்கர் வேர்க்கடலை பாதிக்கப்பட்டிருக்கிறது.

பெரும்பான்மையாக ஆதிதிராவிடர்கள் குடியிருந்த இராமச்சந்திரபுரத்தில் 200 குடிசைகளும், ஆத்தங்கரைபட்டியில் 100 குடிசைகளும், கோவிந்தநகரில் 100 குடிசைகளும், எம். கப்லாபுரம் மற்றும் மரிக்குன்று ஆகிய இடங்களில் சில குடிசைகளும் பாதிக்கப்பட்டன. இராமச்சந்திரபுரத்தில் இரவில் வைகை வெள்ளம் வந்ததால் வீடுகள் இழந்ததோடு கூட ஆடுமாடுகள் பெருமளவில் இறந்துள்ளன. இவ்வூர் மக்களுக்கு மேடான இடத்தில் வீடு கட்டிக் கொள்ள இடம் கொடுக்கப்படும்.

பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிர்ணயிக்கப்பட்ட குடிசை மானியம், அரிசி, புடவை மற்றும் வேட்டி முதலியன கொடுக்கப்பட்டது.

[டாக்டர் இரா. நெடுஞ்செழியன்] [1984 மார்க் 12

பெரியகுளம் தாலுகாவில் பாதிக்கப்பட்ட கிராமங்களை ஹெலிகாப்டர் மூலம் பார்த்தேன். ஆண்டிப்பட்டி, கண்டமானூர் கடமலைக்குண்டு, இராமச்சந்திரபுரம், வர்ஷநாடு, மயிலாடும் பாறை, வால்பாறை, தம்மக்குண்டு மற்றும் குமணன்தொழு ஆகிய கிராமங்களில் ஏற்பட்ட சேதத்தை நான் காண முடிந்தது. பல்லாயிரக்கணக்கான தென்னைகள், அடித்துச் செல்லப்பட்டதோடு அடிப்பெயர்ந்து சாய்ந்து விட்டிருந்தன. வாழை ஆயிரக் கணக்கில் வீழ்ந்துவிட்டன. மிகுதியிருந்தவை வெள்ளத்தில் அமிழ்ந்திருந்தன.

வைகைகரை ஓரமுள்ள தென்னைகள் பெரும் பாதிப்புக் குள்ளாகியதால் இங்கு தேவையான தென்னங்கன்றுகளை மான்ய விலையில் அரசு கொடுக்கும். வங்கிகள் மூலம் கடன் கொடுக்கவும் ஏற்பாடு செய்யப்படும். இங்கு நிலவரி மற்றும் செஸ் வரி ரத்து செய்யப்படும்.

இம்மாவட்டத்தில் சாலைகளில் 39 இடங்களில் உடைப்புகள் ஏற்பட்டன. அவைகளில் 37 இடங்களில் சரி செய்யப்பட்டு விட்டன. மீதி இடங்களில் வேலைகள் நடந்து வருகின்றன. மேலும் பாதிக்கப்பட்ட 10 நீர்பாசன கண்மாய்களிலும் 39 வாய்க்கால்களிலும் சீரமைப்புப் பணி துரிதமாக நடந்து வருகிறது.

திருநெல்வேலி மாவட்டம் :

இம்மாவட்டத்தில் மார்ச்சு மாதத்தில் இயல்பாக பெய்ய வேண்டிய மழையின் அளவு 41.3 மில்லி மீட்டர். ஆனால் மார்ச்சு முதல் வாரத்திலேயே 157.9 மில்லி மீட்டர் மழை பெய்தது.

பாபநாசம் நீர்த்தேக்கத்தின் உச்ச மட்டம் 148.00 அடி. அதில் 147.60 அடி அளவு தண்ணீர் நிரம்பியது. மணிமுத்தாறு நீர்த் தேக்கத்தின் உச்ச மட்டம் 118.00 அடி அதில் 117.6 அடி தண்ணீர் நிரம்பியது. மேற்படி நீர்த்தேக்கங்களிலிருந்து அதிக அளவு தண்ணீர் வெளியேற்றப்பட்டது. இதனால் தாமிரபரணி ஆற்றில் வெள்ளம் கரை புரண்டோடியது. மேற்படி நீர்த் தேக்கங்களிலிருந்து தாமிரபரணி ஆற்றில் தண்ணீர் திறந்து விடுவதற்கு முன், முன்கூட்டியே மாவட்ட அலுவலர்கள் ஆற்றங் கரையோரத்தில் வசிக்கும் மக்களை எச்சரித்து அவர்களை பாதுகாப்பான இடங்களுக்குச் செல்லுமாறு அறிவுறுத்தினார். மேலும் காவல் துறை அலுவலர்களின் உதவியுடன் அவர்களை பாதுகாப்பான இடங்களுக்குக் கொண்டு சென்று உணவு வழங்கப் பட்டது.

இம்மாவட்டத்தில் 347 கிராமங்கள் பாதிக்கப்பட்டன. 2,067 குடும்பங்களைச் சேர்ந்த பாதிக்கப்பட்ட சுமார் 10,000-க்கு மேற்பட்ட மக்கள் 41 நிவாரண இல்லங்களில் தங்க வைக்கப்பட்டு



1984 மார்ச் 12] [டாக்டா இரா. நெடுஞ்செழியன்]

உணவளிக்கப்பட்டது. 1,390 குடிசைகள் முழுமையாகவும்,
4,233 குடிசைகள் பகுதியாகவும் பாதிக்கப்பட்டுள்ளன. நிர்ண
யிக்கப்பட்ட குடிசை மானியம், அரிசி, புடவை மற்றும் வேட்டி
முதலியன பாதிக்கப்பட்ட மக்களுக்கு வழங்கப்பட்டது. இம்
மாவட்டத்தில் 17 பேர்கள் உயிரிழந்தனர்.

அறுவடைக்குத் தயாராக இருந்த நெற்பயிர் உள்ள 1.53
லட்சம் ஏக்கர் நிலங்கள் பாதிக்கப்பட்டன. 300 ஏக்கரிலுள்ள
கொத்தமல்லி பாதிக்கப்பட்டன. மேலும் பருத்தி, மிளகாய்
ஆகிய பயிர்களுக்கு பாதிப்பு ஏற்பட்டுள்ளது. 350 ஏக்கரில்
விளைந்திருந்த பயிறு வகைகள் மிகவும் கடுமையாக பாதிக்கப்
பட்டுள்ளன. வாழை மரங்கள் மூன்று நாட்கள் தொடர்ந்து
தண்ணீரில், இருந்ததால் முழுச்சேதமடைந்தன. ஆத்தூர்,
பழையகாயல், முக்காணி ஆகிய இடங்களில் முழங்கால் அளவு
தண்ணீரில் மூழ்கியிருந்த நெற்கதிர்களை அறுத்து சாலைகளில்
அடித்து கொண்டிருக்கும் போது பொன்னிறமாக இருக்க
வேண்டிய நெல்மணிகள் கருப்பாக இருந்தது.

நெல்லை மாவட்டத்தில் நெற்பயிருக்கு ஏற்பட்டுள்ள
பெரும் பாதிப்பைக் கருதி, இங்கு கோடைக் கார் நெல்பயிரிட
பாபநாசம், மணிமுத்தாறு நீர்த் தேக்கங்களிலிருந்து பாசனத்
திற்கு தண்ணீர் கொடுக்கப்படும். நெல் விதையும் மான்யமாக
கொடுக்க ஏற்பாடு செய்யப்படும், வெற்றிலைக் கொடி விவசாயி
களுக்கு நட்டத்திற்கேற்ப உதவிகள் வழங்கப்படும்.

தென்காசி, அம்பாசமுத்திரம் மற்றும் ஸ்ரீவைகுண்டம் திருச்
செந்தூர் வட்டங்களில் பாதிக்கப்பட்ட கிராமங்களையும்,
புன்னைக்காயல், கைலாசபுரம், ஆத்தூர் மற்றும் முக்காணி
முதலிய கிராமங்களையும் பார்வையிட்டேன்.

புன்னைக்காயல் என்னும் ஊர் தாமிரபரணி கடலில் கடக்கும்
இடத்தில் உள்ளது. உடனடியாக ஒரு உயர்ந்த பாலம் இவ்
ஊருக்கு அமைத்து கொடுக்கப்படும். இதற்கு அனுமதி வழங்கப்
படும். இந்த ஊர் வெள்ளத்தினால் துண்டிக்கப்பட்டு போக்கு
வரத்து பாதிக்கப்பட்டுள்ளது.

மாவட்ட ஆட்சியர்களுக்கு நிவாரணப் பணிகளை
உடனடியாக செய்ய ஆணைகள் இடப்பட்டன. கருணை மானி
யங்கள் வழங்க மாவட்ட ஆட்சியருக்கு கூடுதலாக ரூ. 10
இலட்சம் இராமநாதபுரம் மாவட்டத்திற்கும், ரூ. 8 இலட்சம்
மதுரை மாவட்டத்திற்கும், ரூ. 5 இலட்சம் திருநெல்வேலி
மாவட்டத்திற்கும் வழங்கப்பட்டது.

உடனடியாக பழுது பார்க்கும் பொருட்டு நீர்பாசனத்
துறைக்கு ரூ. 25 இலட்சமும், இராமநாதபுரம், மதுரை, திரு
நெல்வேலி மாவட்டங்களில் நெடுஞ்சாலைத் துறைக்கு ரூ. 50
இலட்சமும் அரசு அனுமதித்துள்ளது.

D 2 A 337—11

[டாக்டர் இரா. நெடுஞ்செழியன்] [1984 மார்ச் 12

இது காலந்தவறி பெய்துள்ள மழை. மாவட்ட ஆட்சியர் களும் காவல்துறை மற்றும் இதர துறை அலுவலர்களும், மக்களை உரிய காலத்தில் எச்சரித்து, பாதுகாப்பான இடங் களுக்கு அவர்களை அழைத்துச்சென்று, நிவாரணப்பணிகளை உடனடியாக செயல்படத் தொடங்கினார்கள். பாதிக்கப்பட்ட மக்கள் எல்லோருக்கும் உணவு, குடிசை மானியம், வேட்டி, புடவை, அரிசி, மண்ணெண்ணெய் போன்ற அத்தியாவசிய பண்டங்கள் வழங்கப்பட்டன.

மேற்படி மாவட்டங்களில் பாதிக்கப்பட்டுள்ள இடங்களை சிறப்பு ஆணையர் மற்றும் வருவாய் நிர்வாக ஆணையர், தலைமை பொறியாளர்கள், நீர்பாசனம் மற்றும் நெடுஞ்சாலை சாலைத்துறை, பொதுச்சுகாதாரம் மற்றும் தடுப்பு மருந்து இயக்குநர், வேளாண்மைத்துறை இயக்குநர் பார்வையிட்டு நிவாரணப் பணிகளை துரிதப்படுத்தினர். பெருமளவில்தொத்து நோய் போன்றவை பரவாமலிருக்க தடுக்கும் வகையில் விரிவான முறையில் தடுப்பு ஊசிகள் போடவும், பொதுச் சுகாதாரத்தைப் பேணவும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன.

மதுரை மாநகராட்சி உணவு தயாரிக்கும் மத்திய உணவுக் கூடத்திற்கு சென்று தரமான உணவு தயாரிக்கப்படுகிறதா என்றும் போதுமான அளவு கொடுக்கப்படுகிறதா என்றும் நேரிடையாக பார்த்தேன். இராட்சத பாத்திரங்களில் சமையல் செய்து உரிய நேரத்தில் அளித்ததையும் கண்டேன். சில நிவாரண இல்லங்களுக்குச் சென்று உணவு வழங்குவதில் குறை பாடுகள் உள்ளனவா என்பதை தனித்தனியாக விசாரித்தேன். மக்கள் தங்களுக்கு உரிய நேரத்தில் தரமான உணவு போதுமான அளவில் தரப்பட்டது என்று மன நிறைவுடன் கூறினர்.

இந்த வெள்ளத்தின்போது, வைகை அணைக்கட்டு போன்று இரண்டு அணைகளில் தேக்கி வைக்கக்கூடிய அளவிற்கு வெள்ளம் வந்தது. தேக்கி வைக்க இயலாத காரணத்தினால் இதில் பாதி தண்ணீர் கடலோடு கலந்து வீணானது மட்டுமின்றி பெருஞ் சேதத்தையும் விளைவித்துள்ளது. ஆகவே ஆண்டிபட்டியில் வைகை அணைகட்டுக்கு மேலாக ஒரு புதிய அணை கட்டி நீரை தேக்கலாம்.

இயற்கைச் சீற்றத்தை நான் அறிய முடியாது. எந்த சூழ் நிலையையும் சமாளிக்க மக்களுக்கு உறுதிவேண்டும். கடந்த வெள்ளங்களை வெகு நேர்த்தியாக மக்கள் மிக மன உறுதியாக வும் சமாளித்ததை நான் பாராட்டுகிறேன்.

கடற்படை மற்றும் விமானப்படையினர் ஹெலிகாப்டர்களை உரிய நேரத்தில் அளித்து பாதிக்கப்பட்ட இடங்களை பார்வை யிடவும் உணவுப் பொட்டலங்கள் வழங்கவும் உதவி செய்ததற் காக அரசு சார்பில் அவர்களுக்கு நன்றியையும் பாராட்டையும் தெரிவிக்கக் கடமைப்பட்டுள்ளேன்.



1984 மார்ச் 12] [டாக்டர் இரா. நெடுஞ்செழியன்]

சாதி மதம் பாராது பொதுமக்கள் தந்த ஒத்துழைப்புக்காகவும் உதவியதற்காகவும், அவர்களுக்கும் அரசின் சார்பில் நன்றி கூறிக் கொள்ளுகின்றேன்.

இந்த பெருமழையினாலும், வெள்ளத்தினாலும் ஏற்பட்ட சேதத்தை கணக்கெடுத்து பாதிப்பின் முழு விவரங்களை சேகரித்து மதிப்பீடு செய்ய சிறிது காலமாகும். அவ்வாறு மதிப்பீடு செய்த பின், வேண்டிய நிவாரணம் கோரி மத்திய அரசுக்கு ஒரு விவர அறிக்கை அனுப்பப்படும்.

(பிற்பகல் 12.10)

திரு. ரா. உமாநாத் : பேரவைத் துணைத் தலைவர் அவர் களே, நான் சஜெஸ்ட் பண்ணுவது என்ன என்று சொன்னால்— இப்போது ஏற்பட்டிருக்கக்கூடிய அந்த பயங்கரமான நஷ்டத்தை பொறுத்த வரைக்கும் அரசு தரப்பிலே இரண்டு அறிக்கைகள் வந்தாயிற்று. இது செகண்ட் டீடெய்ல்டு அறிக்கை. இப்போது அந்தத் தொகுதிகளிலே உள்ள உறுப்பினர்கள் போய் பார்வை யிட்டுள்ளார்கள். அவர்களைப் பொறுத்த வரைக்கும், பார்வை யிட்ட விஷயங்களைச் சொல்ல வேண்டியிருக்கும். அதனாலே இந்த விஷயங்களைப் பொறுத்த வரைக்கும் ஒரு டிஸ்கஷனுக்கு ஆன வாய்ப்பை எப்படியாவது ஏற்பாடு பண்ண வேண்டும்.

Some time may be allotted for discussion because the M.L.As. of the concerned constituencies and other parties may like express their views on the matter.

Thiru A. RAHMAN KHAN : I also press for such a discussion.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு உறுப்பினர் உமாநாத் அவர்கள் கூறுவது போல் மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஏற்கனவே பார்வையிட்டு இருக்கிற நிலைமை களையும், எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் பற்றியும் குறிப்பிட் டிருக்கிறார்கள். அவர்கள் கூறுவது போன்று அந்த பாதிக்கப்பட்ட பகுதிகளைச் சார்ந்த சட்டமன்ற உறுப்பினர்களும், மற்ற வர்களும் சென்று, இன்னும் அதிகமான விவரங்களையும், முழு விவரங்களையும் கூட கொண்டு வரக்கூடும். அவர்கள் கூறுவது போன்று அந்த அறிக்கையின் மீது, உறுப்பினர்கள் கருத்துக்கள் தெரிவிக்கின்ற வகையில், அலுவல் ஆய்வுக்குழுவில் வைத்து முடிவு எடுக்கலாம்.

6. வரவு–செலவுத் திட்டம் 1984–85 பொது விவாதம்—தொடர்ச்சி.

திரு. குமரி அனந்தன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 1984-85 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கை யிலே, காந்தி காமராஜ் தேசிய காங்கிரஸ் கட்சியினுடைய கருத் துக்களைச் சொல்வதற்கு உங்களுடைய அனுமதி கிடைத்ததற்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

[திரு. குமரி அனந்தன்] [1984 மார்ச் 12

(மாண்புமிகு பேரவை மாற்றுத் தலைவர் தலைமை.)

இந்த நிதிநிலை அறிக்கையில் அரசாங்கம் செய்திருக்கின்ற சில சலுகைகளை கோடிட்டுக் காட்டிவிட்டு, செய்யப் போகின்ற திட்டங்களையும் எடுத்துச் சொல்லியிருக்கிறது. இதிலே குறிப் பிடப்பட்டிருக்கின்ற பல செய்திகள் அரசாங்கத்தினுடைய நல்ல நோக்கத்தை வெளிப்படுத்துகின்றனவே தவிர, அந்த நோக் கத்தை நிறைவு படுத்துவதற்குரிய ஆக்கபூர்வமான திட்டங்களைத் தருவதாகத் தெரியவில்லை. மக்களுக்குச் சில சலுகைகளைச் செய்ய வேண்டும் என்ற வகையில் 3 கோடிக்கு மேலாக வரிக் குறைப்புச் செய்திருந்தாலும் கூட, 57 கோடிக்கு வரி போட்டி ருப்பதை நாம் மறுக்க இயலாது. அதைப் போலவே நுழைவு வரியைக் கைவிட்டால், நாங்கள் வருவாய் ஆதாரங்களை அதிகப் படுத்துவதற்குரிய வழிவகைகளை சொல்கிறோம் என்று சொன்னார்கள் என்பதற்காக வரியினுடைய விகிதத்தை ஒரு பக்கத்திலே அதிகப்படுத்திக்கொண்டு, இன்னும் நுழைவு வரி முற்றிலுமாக கைவிடப்படவில்லை என்ற அச்ச உணர்வையும் இங்கே இன்றைக்கு விளக்கமாக நம்முடைய நிதி அமைச்சர் அவர்கள் தந்திருக்கிறார்கள். இந்த வரவு-செலவு அறிக்கையைப் பொறுத்த வரையிலே சில ஏழை எளியவர்களுக்கு நன்மை செய்ய வேண்டும் என்ற நோக்கத்தோடு அவர்கள் செய்திருக்கின்ற சில சாதனைகளைச் சொல்ல வேண்டும் என்றால், சத்துணவுத் திட் டத்தை இன்னும் அதிக வயதுடையவர்களுக்கு நீட்டித்து இருப் பதும், கட்டடத் தொழிலாளர்கள் போன்றவர்களுக்கு அவர்கள் உயிரிழந்தால் 10 ஆயிரம் ரூபாய் போன்றவைகளை அறிவித்து இருப்பதும் மகிழ்ச்சிக்குரியதாக இருக்கிறது. ஆனாலும் கூட, கட்டிடத் தொழிலாளர்களுக்கும் கூட, சில நிபந்தனைகளை விதித்து இருப்பதன் மூலம் அந்தத் தொகை அவர்களுக்குக் கிடைக் குமா என்ற ஐயப்பாடு நமக்கு எழுகிறது. உதாரணமாகச் சொல் லப்போனால், ஆபத்தான கட்டிட வேலை, அபத்தில்லாத கட் டிட வேலை என்று பிரித்து, அதற்கு விளக்கம் கொடுப்பது யார் என்ற வினாக்குறி அங்கே இருந்தால் போய்ச் சேர வேண்டியவர் களுக்கு போய்ச் சேர வேண்டிய தொகை சேராதோ என்று சொல்லுகின்ற ஐயப்பாடு நமக்கு எழுகிறது.

அதைப் போலவேதான் சொந்தநிற்கு வீடுகள் கட்டுகின்ற ஒருவர் கீழே விழுந்தால் அவருக்கு உதவி கிடைக்காது என்பன போன்ற நிபந்தனைகளை எல்லாம் போடுவதன் மூலமாக ஏழை எளியவர்களுக்கு கிடைக்க வேண்டிய லாபம் கிடைக்காதோ என்ற எண்ணம் நமக்கு தோன்றுவது நியாயமாக இருக்கிறது. அடுத்தாற் போல நல்ல நோக்கத்தோடு என்று நான் முதலிலே சுட்டிக் காட்டியதைப் போல, எடுத்துக் காட்டுவதற்குரிய நல்ல எண்ணம் இருந்தாலும், அள்ள அள்ளக் குறையாத அட்சயப் பாத்திரமாக நமது வருவாய்த் துறை இல்லை. அதற்கு சில வழிவகைகளைத் தேட வேண்டியவர்களாக இருக்கிறோம். அந்த வழிவகைகளைத் தேடுவதற்கு மிகுந்த முயற்சியை நமது அரசு மேற்கொண்டு, அந்த வழிவகைகளைத் தேடுகின்ற நேரத்தில்,



1984 மார்ச் 12] [திரு. குமரி அனந்தன்]

வருவாய் ஆதாரத்தைப் பெருக்குவதற்கு முயலுகின்ற நேரத்தில், இதனால் பாதிக்கப்பட்டவர்கள் எந்த வகையிலே துன்புறுவார் கள் என்பதையும் எண்ணிப் பார்ப்பது அரசாங்கத்தினுடைய கடமையாக இருத்தல் வேண்டும். மின் கட்டணத்திலே ஒரு மாறுதலை ஏற்படுத்துகின்ற போது, இதற்கு சம்பந்தப்பட்டவர் கள் ஒத்துக் கொள்ளாமலே இதிலே சம்பந்தப்பட்டவர்கள் ஈடு பட முடியாது என்று ஒரு நிலை இருக்குமானால், எத்தனையோ பேர்கள் வெறுமனே இருந்துகொண்டு சம்பளம் வாங்குகின்ற நிலைமையிருக்கின்றது.

அதைப் போலவேதான் சீப் செக்கரட்டரி என்ற அந்தஸ்திலே பலரை நியமிப்பதன் மூலம் நமக்கு எவ்வளவு செலவாகிறது என்பதை நாம் எண்ணிப் பார்க்க வேண்டியவர்களாக இருக்கி றோம். ஐ.ஜி. என்று ஒருவர் இருந்தார் என்று சொன்னால், அவருடைய ரேங்கிலே இன்றைக்கு பலரைப் போடுவதன் மூலம் நமக்கு எவ்வளவு செலவு ஆகிறது என்பதையும் நாம் பார்க்கி றோம். நோக்கம் என்ன என்று சொன்னால் சிலருடைய உள்ளம் புண்படக் கூடாது என்று அவர்களுக்கு ஒரு ஒத்தடம் கொடுப்பது போல், சில உயர்வுகள் வேண்டும் என்ற நோக்கத்தோடு செய்யப் படுவதாக இருந்தாலும் கூட, அது எந்த வகையிலே அரசினுடைய வருவாய்த் துறையை பாதிக்கிறது என்பதையும் நாம் பார்க்க வேண்டும்.

அதைப் போலவே, இன்றைக்கு நீங்கள் எடுத்துக் கொண்டால், நமது மாண்புமிகு அமைச்சர் அவர்கள் வருவாயைப் பெருக்கு கின்ற நோக்கத்தோடு, நாட்டிலே இன்னும் பரவலாக மலிந்து கிடக்கின்ற லாட்டரிச் சீட்டுகளின் மீது ஒரு வரி விதிப்பைக் கொண்டு வந்தார்கள். அந்த வரி விதிப்பைக் கொண்டு வருகிற போது, எங்கெங்கு நோக்கினும் அவைகள் காட்சி அளிக்கின்ற காரணத்தாலே, இவைகளிலேயிருந்து வருவாய் அதிகமாக வரும் என்ற எண்ணத்தோடு 20 விழுக்காடு என்று வரி போடப் பட்டு இருக்கின்றது. ஆனால் அதனுடைய வரலாறுகளைப் பார்க்கின்ற போது, ஒரு பக்கத்திலே நன்மையைத் தேடிப் போகிறபோது இதனால் எத்தனை குடும்பங்கள் பாதிக்கப்படு கின்றன என்பதையும் நாம் பார்க்க வேண்டும். கேரளாவிலே முதன் முதலாக, இந்தியாவிலே இருக்கின்ற அத்தனை மாநிலங் களிலும் முதன் முதலாக, கேரளத்திலே இந்தத் திட்டம் கொண்டு வரப்பட்டது என்றும், அதற்குப் பின்னாலே, பேரறிஞர் அண்ணா அவர்கள் காலத்திலே இது கொண்டு வரப்பட்டது என்றும் சிலர் சொல்லுகிறார்கள். அப்படிக் கொண்டு வந்த இந்தத் திட்டத் திலே இன்று 20 சதவீதம் வரி போடுவதிலே என்ன செய்திருக் கிறார்கள் என்று சொன்னால், 28 ஆம் தேதி தமிழ்நாட்டில் எங்கெங்கு, யார் யார் அதன் மொத்த விற்பனையாளர்கள் இருக் கிறார்களோ, அவர்களுடைய கடைகளுக்கு எல்லாம் சென்று, 28 ஆம் தேதி மொத்தத்திலே அவர்களிடம் எவ்வளவு ஸ்டாக் இருக்கிறது என்று பார்த்துவிட்டுப் போய் விடுகிறார்கள். எதற்கு ஸ்டாக் எடுத்தோம் என்றுகூட சொல்லாமல் போய்விடுகிறார்கள்.

[திரு. குமரி அனந்தன்] [1984 மார்ச் 12

29-ம் கழிகிறது; 30-ம் கழிகிறது. 30 ஆம் தேதி மாலையிலே, 20 சதவீதம் வரி என்று சொல்கிறபோது, நீ 28 ஆம் தேதியிலிருந்து அந்த வரியைக் கொடு என்று சொன்னால், யார் வியாபாரம் செய்பவர்களாக இருந்தாலும் கூட அவர்கள் பாதிக்கப்படுகிறார்கள் என்பது அரசாங்கத்தினுடைய கவனத்திற்கு வரவேண்டும் என்பதற்காகத்தான் இதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். நமது நோக்கம் வருவாயை அதிகப்படுத்துவதாக இருந்தாலும் கூட, இன்னும் எத்தனையோ குடும்பங்கள் இதனால் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். ஏறக்குறைய 3 லட்சம் குடும்பங்கள் என்று சொல்கிறார்கள். அந்தக் குடும்பங்களைப் பொறுத்த வரையிலே இன்று வியாபாரம் நடக்காமல் இருக்கிறதா? அல்லது அந்த வியாபாரம் முற்றிலும் தடுக்கப்பட்டு இருக்கிறதா? அது நமது அரசாங்கத்தினுடைய கையிலே இருக்கிறதா? அல்லது எல்லா மாநிலங்களும் சேர்ந்து செய்ய வேண்டியதாக இருக்கிறதா? அல்லது மத்திய அரசு இதிலே முன்னின்று காரியம் நடத்த வேண்டியிருக்கிறதா என்பதை எல்லாம் நாம் வரிசையாகப் பார்க்க வேண்டி இருக்கிறது.

(பிற்பகல் 12.20)

இன்று பல இடங்களிலே பார்க்கிறபோது நமக்கு வந்து கொண்டிருந்த வருவாய் எல்லாம் பக்கத்திலே இருக்கிற ஆந்திர மாநிலத்திற்கும், கர்நாடக மாநிலத்திற்கும், கேரள மாநிலத்திற்கும் சென்றுக் கொண்டிருக்கிற நிலைமை நமக்கு ஏற்படுகிறது. இவைகளையெல்லாம் வைத்துப் பார்க்கிறபோது, யாராக இருந்தாலும் சரி, அந்தத் தொழிலை நடத்துபவர்களையும் அழைத்துப் பேசுகிற நேரத்திலே, அவர்களுடைய கருத்துக்களையும் கேட்டு சில நடவடிக்கைகளை செய்கிற நேரத்திலே அரசாங்கத்தினுடைய வருவாய்க்கு வருவாயும் கிடைக்கும், மற்றவர்களும் பாதிக்காமல், இருக்க முடியுமோ என்று சொல்லக் கூடிய எண்ணம் எனக்கு வருகிறது.

ஆதலாலே நம்முடைய அமைச்சரைப் பொறுத்த வரையிலும், நம்முடைய அமைச்சரவையைப் பொறுத்த வரையிலும், வருவாயைக் கொடுக்கக்கூடிய திட்டங்களை தீட்ட வேண்டியதுதான் என்று சொன்னாலும் அது வேறு யாரையும் பாதித்து விடாத அளவுக்கு,—அது நல்லதா தீயதா என்ற வாதத்திலும் கூட நான் இறங்கவில்லை. எப்படி குதிரைப் பந்தயத்தை ஒடுக்க வேண்டும் என்று பல ஆண்டுக் காலமாக நாம் சிந்தித்துக் கொண்டிருந்தாலும் கூட, இப்பொழுது முடியவில்லை என்பது மட்டும் அல்ல, குதிரை பந்தயம் நடக்காத நாளிலும் கூட—தமிழகத்திலே நடக்காத நாளிலும் கூட—இந்தியாவின் பிற பகுதியிலே நடந்தாலும் கூட, இங்கே இருப்பவர்கள் பெட் கட்டுகிறார்கள் என்று சொல்வதையெல்லாம் நாம் கேள்விப் படுகிறோம்.

அப்படி அவைகளையெல்லாம் மனதிலே வைத்துப் பார்க்கிறபோது பல திட்டங்கள் நம்மை அறியாமலே போய்க் கொண்டிருப்பதற்கு காரணம் என்ன என்பதைப் பார்த்தால், சிலவற்றை



1984 மார்ச் 12] [திரு. குமரி அனந்தன்]

நாம் முதலிலே அவிழ்த்து விட்டு விடுகிறோம். பிறகு அவைகளைக் கட்டுப்பாட்டிற்குள்ளே கொண்டு வர முடியவில்லை. ஒரு சின்ன உதாரணத்தைச் சொல்ல வேண்டும் என்று சொன்னால், ஒரு காலத்திலே கொக்கோகோலா வர வேண்டாம் என்று சொல்லி காங்கிரசிலே இருந்த பெரிய தலைவர்கள் எல்லாம் வாதாடிய போது, சிலர் அதனை மீறியே கொண்டு வந்தார்கள். ஆனால் அந்தக் கொக்கோ கோலாவை இந்த நாட்டிலிருந்து அகற்றுவதற்கே பெரிய போராட்டமே, 1977-லே ஒரு பெரிய போராட்டமே நடத்த வேண்டி வந்தது என்பதை உங்கள் நினைவுக்கு கொண்டு வருகிறேன்.

எனவே, எந்தக் காரியத்தைச் செய்தாலும் அந்தக் காரியத்தினுடைய விளைவுகளைப் பார்த்துத்தான் நாம் செய்ய வேண்டியிருக்கிறது. அணை கட்டுவது நல்லதாக இருந்தாலும் கூட, ஈக்காலஜி என்று சொல்வார்களே, அது பாதிக்கப்படாது இருக்கிற அளவுக்கு அணையை கட்ட வேண்டும் என்று சொல்கிறார்கள். உதாரணத்திற்கு நமது மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய அறிக்கை இங்கே வைக்கப்பட்டது. இந்தப் பட்ஜெட்டிலும் பார்க்கிறோம். வெள்ள நிவாரணத்திற்காகவும், வறட்சி நிவாரணத்திற்காகவும் எவ்வளவு ரூபாயை செலவழித்தோம் என்பதையெல்லாம், எவ்வளவு திட்டம் போடுகிறோம் என்பதையெல்லாம் இங்கே கொடுத்திருக்கிறார்கள்.

நான் பணிவன்போடு தெரிவித்துக் கொள்கிறேன். இன்று வெள்ளப் பெருக்கு மழையினால் மட்டுமே ஏற்படுவது அல்ல. மழை வெள்ளத்தை, ஏந்தி, தாங்கி, தேக்கி வைத்துக் கொள்கிற ஏரிகளும், கண்மாய்களும், குளங்களும் இல்லாமல் போய் விட்டன. பல இடங்களில் குளங்களே இல்லை. ஏரிக் கரைகளில் இருக்கக்கூடிய நிலங்களையெல்லாம் ஆக்கிரமித்து விட்டால், பிறகு ஏரியே தேவையில்லாமல் போய்விடுகிறது என்று கருதுகிறார்கள். 250 ஏக்கர் நிலம் பாசனத்திற்குரிய ஏரியின் பக்கத்தில் இருக்கிற நிலத்தை யெல்லாம், கரையோரப் பகுதிகளை யெல்லாம் முதலிலே வீடு கட்டுவதற்கு நாம் எப்படியோ அனுமதித்து விடுகிறோம். வீடு கட்டி முடிந்ததற்குப் பிறகு என்ன நினைக்கிறார்கள். வயல் எல்லாம் வீடாக வந்ததற்குப் பிறகு ஏரி எதற்கு என்று ஏரியை தூர்த்து விடுகிறார்கள்.

ஆனால், அந்த 250 ஏக்கரிலே வாழ்ந்துக் கொண்டிருக்கிற மக்கள், வீடு கட்டி வாழ்ந்துக் கொண்டிருக்கிற மக்கள், வீட்டை சுற்றி தோட்டம் போட்டாலும், வீட்டிலேயே குளிப்பதற்கும், குடிப்பதற்கும் தண்ணீர் எடுக்க கிணறு தோண்டினாலும், அந்த ஏரியிலே தண்ணீர் இருந்தால்தான் அங்கே வரும். ஏரி மூடி விடுகிற நேரத்தில் இந்த வீட்டுக்கும் தண்ணீர் வருவதில்லை. என்றாவது மழை பெய்தால் அங்கே வெள்ளம் தேங்கி நிற்பதற்கும் பள்ளம் இருப்பதில்லை. ஆதலாலே வெள்ளப் பெருக்கு ஓடிக்கொண்டேயிருக்கிறது.

[திரு. குமரி அனந்தன்] [1984 மார்ச் 12

இவையெல்லாம் மனத்தில் வைத்துப் பார்த்தால், இந்த வரவு-செலவுத் திட்டத்திலே இந்த ஏரி, குளங்கள், கண்மாய்கள் போன்ற இவைகளையெல்லாம் ஆழப்படுத்துவதற்கும், வாய்க்கால்களை ஆழப்படுத்தி, அகலப்படுத்துவதற்கும், உரிய பெரிய திட்டமாக எதுவும் சொல்லப்படவில்லை. சொல்லப்பட்டிருந்தாலும் கூட, கோடிட்டுக் காட்டப்படுவது போல் இருக்கிறதே தவிர, அதற்காக கோடிக்கணக்கான ரூபாய்கள் ஒதுக்கப்பட்டதாக நமக்குத் தெரியவில்லை.

ஆதலால், இவைகளை வைத்துப் பார்க்கிறபோது கோடைக் காலங்களிலே அதனை அரசாங்கமே முழு மூச்சாக எடுத்து தன்னுடைய சொந்தச் செலவில் செய்யாமல், செங்கற்சூளை செய்கிறவர்கள், மற்றவர்கள், போன்றவர்களுக்கு, இந்த ஏரிகளில் இருக்கிற மண்ணை நீங்கள் பயன்படுத்த முடியுமானால் குத்தகைக்கு எடுத்துக்கொள்ளலாம் என்று சொன்னால், அவர் களுடைய செலவிலேயே அவர்கள் எடுத்துக் கொள்வார் களேயானால், நமக்கு அதை ஆழப்படுத்தவும் ஆகிறது. ஆட் களுக்கு உதவியும் ஆகிவிடுகிறது என்று சொல்கிற முறையிலே, களி மண்ணை குத்தகைக்கு விடுவது, செம்மண்ணை குத்தகைக்கு விடுவது போன்ற பணிகளைச் செய்யலாமா என்பதையும் அரசு ஆலோசிக்க வேண்டும் என்று இந்த நேரத்திலே நான் இங்கே தெரிவித்துக்கொள்கிறேன்.

அதைப் போலவே இங்கே மிக முக்கியமான திட்டமாக என்ன செய்திருக்கிறார்கள் என்று சொன்னால், 404.76 இலட்சம் ரூபாயை கல்விக்காக ஒதுக்கியிருப்பது. அது பெருமைக்குரியது. கல்விக் கண் என்று சொல்வது போலவே, கல்வியே கண்ணாக இருக்கிற காரணத்தாலே, அதற்கு இவ்வளவு தொகை ஒதுக்கப் பட்டது நியாயம் தான். ஆனால் ஒதுக்கப்பட்டிருக்கிற இந்தப் பணத்திற்கு, ஒதுக்கப்பட்டிருக்கிற பாட திட்டங்கள் சரியாக இருக்கிறதா ? அந்தப் பாட திட்டங்களை ஏற்றுக் கொண்டு படித்து வெளியே வருபவர்கள் வேலை வாய்ப்போடு வருகிறார்களா என்று பார்ப்பதற்கு என்ன அமைப்பு அதாவது மெஷனரி என்று சொல்கிற மாதிரி என்ன அமைப்பு இங்கே இருக்கிறது ? தயவு செய்து இதிலே நாம் ஆழ்ந்து சிந்தித்துப் பார்க்கவில்லை என்று சொன்னால், இந்த நாட்டிலே வேலை யில்லாத் திண்டாட்டம் பெருகிக்கொண்டே போகும்.

குடும்பத்திற்கு ஒருவருக்கு வேலை என்று சொல்கிற திட்டம் அறிவிக்கப்பட்டதே தவிர, இந்த வரவு செலவுத் திட்டத்தில் அதற்காக நீங்கள் என்ன செய்யப் போகிறோம் என்று ஒரு வரி கூட சரியாக எழுதவில்லை. அந்த வகையில் குடும்பத்திற்கு வேலை என்ற திட்டம் ஒரு புறம் போக, மறுபுறம் 404 கோடி ரூபாய் செலவில் பட்டதாரிகளை மட்டும் நாம் வெளியே அனுப்பிக் கொண்டேயிருக்கிறோம்.



1984 மார்ச் 12] [திரு. குமரி அனந்தன்]

சில நாடுகளில் என்ன செய்கிறார்கள் ? அடுத்த 10 வருடங் களுக்கு எந்தெந்த துறையிலே யார் யார் தேவையோ அவர் களுக்கு மட்டும் இடம் ஒதுக்கப்படுகிறது. அப்படி இடம் ஒதுக் கப்படுவது என்பது அரசியலால் மட்டும் அல்ல. மக்களுடைய தொகையால் மட்டும் அல்ல, எது தேவையோ அதற்கு ஏற்ப இடம் ஒதுக்கப்படுகிறது. கல்லூரிகளிலே, மேல்நிலைப் பள்ளி களிலே, படித்து முடித்து வெளியே வருகிறவர்கள் என்ன செய்வது என்று தெரியாமல் திக்கற்று திண்டாடுகின்ற ஒரு காட்சியை தான் நாம் ஒவ்வொரு இடத்திலும் கண்டுகொண் டிருக்கிறோம். எனவே இந்த அரசு கவனத்திற்கு நான் கொண்டு வருகிறேன். மேல்நிலை, கல்விக் கூடங்கள் ஒவ் வொன்றிலும் அது எந்த நிலையிலே இருந்தாலும் சரி, அது எந்த துறையிலே இருந்தாலும் சரி, மேல்நிலை கல்விக் கூடங்கள் ஒவ்வொன்றிலும் ஒரு வாழ்வுக்கு வழி காட்டும் குழுவை ஏற்பாடு செய்யுங்கள். இந்த வாழ்வுக்கு வழி காட்டும் குழு என்று சொன்னால் அங்கே இறுதி ஆண்டு படித்துக்கொண்டு இருக்கும் மாணவனை, அந்த ஆண்டு தொடக்கத்திலிருந்து அடிக்கடி சந்தித்து சந்தித்து அவனுடைய ஆற்றல், அவனுடைய திறமை, அவனுடைய விருப்பம், அவனுடைய பெற்றோர் நிலைமை, அவன் இருக்கும் இடம், அந்த இடத்தினுடைய வளம் இவைகளைப் பார்த்து நீ வருங்காலத்திலே இன்ன இன்ன செய்யலாம் என்று அவனுக்கு வழி காட்டுகின்ற ஒரு குழு, இந்தக் குழு ஒவ்வொரு கல்விக் கூடத்திலும் இருக்கவேண்டுகிறேன். மேல்நிலை கூடத் திலும் இருக்க வேண்டும் என்று சொல்கிறேன். ஒரு இடத்தில் இருக்கிறது. அது பல்கலைக் கழகத்திலே இருக்கிறது, இப்போது அதை போய் பார்க்கிறார், இவர்களை பேட்டிக் காண்கிறார் என்பதில் எனக்கு உடன்பாடு இல்லை. அது போது மானது இல்லை. ஒவ்வொரு மேல்நிலைக் கல்விச் கூடத்திலும் அப்படி ஒரு எக்ஸ்பர்ட் கமிட்டி இருக்கவேண்டும் ; அதனுடைய வேலை என்ன என்று சொன்னால் அவன் பூயுச்சர் கேரியரை இவர்கள் கைடு பண்ணுகின்ற குழுவாக இருக்க வேண்டும். இவன் நன்றாக படிக்கிறான், இந்த இடத்தில் உனக்கு இடம் கிடைக்கும் போ. உனக்கு அந்த இடத்தில் ஸ்காலர்ஷிப் கிடைக்கும் போ. நீ இந்த காரியத்தை செய்யலாம் போ, நீ இவ்வளவு தூரத்திற்கு வந்து இருக்கிறாய், உன்னுடைய. பெற்றோர்கள் இப்படி இருக்கிறார்கள். நீ படிப்பை தொடரவேண்டியதில்லை, தொழிற் சாலையை தொடங்கு என்று எல்லாம் சொல்லுகின்ற ஒரு குழு ஒவ்வொரு கல்விக்கூடத்திலும் இறுதி ஆண்டு படித்துக்கொண் டிருக்கும் மாணவர்களுக்கு வழி காட்டுவதற்கு வேண்டும் என்று இந்த அரசை நான் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன். அரசாங்கமும் பல்கலைச் கழகமும் சேர்ந்து செய்யவேண்டிய முதல் ஏற்பாடாக, உடனடி, ஏற்பாடாக இது இருத்தல் வேண்டும்

அடுத்து, நான் சொல்ல விரும்புவது, நம்முடைய விவசாயி களுடைய துன்பத்தைப் பற்றி முதலில் பேசியவர்கள் சுட்டிக் காட்டினார்கள், இப்போது, வெள்ளப்பெருக்கு ஏற்பட்டா லும் அவன் தான் துன்பப்படுகிறான். மழை இல்லாமல் போய்

விட்டாலும் அவன் தான் துன்பப்படுகிறான். இந்தத் துன்பங்களை கொண்டு இருக்கும் விவசாயிக்கு என்று நிரந்தரமாக வாழக்கூடிய ஒரு திட்டம். நமக்கு வேண்டும். இந்த வரவுச் செலவுத் திட்டத்தைப் பொறுத்தவரையில் எடுத்துக் கொடுக்க வேண்டும் என்று முதலில் குறிப்பட்டதைப் போல ஊற்றிக் கொடுப்பதற்கான திட்டம், அதற்கு அதிகமாக இருக்கிறதே தவிர ஊற்று தோண்டுகின்ற திட்டம் அதிகமாக இருக்கிறதா என்றால் இல்லை. ஒரு வரவு செலவுத் திட்டத்தில் இரண்டும் நடக்கவேண்டும். ஊற்றிக் கொடுப்பதற்கான திட்டமும் இருக்கவேண்டும். ஊற்று தோண்டுவற்கு வேண்டி திட்டமும் இருக்கவேண்டும். ஊற்று தோண்டுவதற்கான திட்டம் இருந்தால் தான் அந்த ஊற்றைக் கொண்டு ஊற்றிக்கொண்டு இருக்க முடியும். அந்த ஊறுகின்ற திட்டத்திற்கு மத்திய அரசின் துணையும் நமக்கு கிடைக்கவில்லை. மாநில அரசும் அதில் முனைப்பாக செயல்படவில்லை என்று இங்கே நான் சுட்டிக் காட்ட விரும்புகிறேன். உதாரணமாக சொல்ல வேண்டுமானால் எத்தனை எத்தனையோ காரியங்களை நாம் செய்து கொண்டு இருக்கிறோம். இந்த நாட்டில் வாழ்ந்து கொண்டு இருக்கும் மக்களுக்கு எல்லாம் நியாய விலையில் உணவுப் பண்டங்கள் கிடைக்கவேண்டும் என்பதற்காக நாம் மேற்கொள்ளும் முயற்சிகள் ஏராளம். ஆனால் அந்த முயற்சியிலே தன்னை முழு மூச்சாக ஈடுபடுத்திக்கொண்டு இருக்கிற விவசாயிகள் இந்த நாட்டில் வாழ்ந்துகொண்டிருக்கும் மக்கள் தொகையில் 70 சதவீதம் விவசாயிகள். ஆக மண்ணை பிசைந்து நம்மை சோற்றை பிசையவைக்கின்ற ஆற்றலை தருகின்றவன். அவன் சேற்றில் காலை வைத்தால்தான் நாம் சோற்றில் கையை வைக்க முடியும் என்ற நிலையில் நமக்காக வாழ்வை கொடுத்துக்கொண்டு இருக்கும் விவசாயி, இன்றைக்கு எந்த நிலையில் இருந்துகொண்டு இருக்கின்றான். அவனுக்கு என்றும் ஏற்றம் கொடுக்கும் திட்டம் இதுவரை வைத்து இருக்கிறோமா என்று நாம் சிந்தித்துப் பார்ப்போமானால், அவர்களுக்கு உரிய திட்டத்தை இந்த அரசு உடனடியாக அறிவித்து செயல்படவேண்டும் என்பதை நான் இங்கே பணிவன்போடு தெரிவித்துக் கொள்கிறேன்.

இதற்கு சின்ன ஒரு சான்றாகச் சொல்லவேண்டும் என்றால், தமிழநாடு அரசாங்கம் மின்சாரத்தை வேளாண்மைக்கு, மற்றவைகளுக்கு விற்பனைச் செய்கிறது. மற்ற தொழில்களுக்கு மின்சாரத்தை விற்பனைச் செய்கிறது. வீடுகளுக்கு விற்பனைச் செய்கிறது. இப்படி மொத்த விற்பனைச் செய்வதிலே விவசாயத்திற்கு என்று கொடுக்கின்ற மின்சாரம் அப்படி விவசாயத்திற்கு கொடுத்து அதன் மூலம் வருகின்ற வருவாய், மொத்த மின்சார விற்பனையிலே 13 சதவீதம் மட்டுமே.. 13 சதவீதம் மட்டும் தான் விவசாயத்திலிருந்து வேளாண்மைக்கு மின்சாரம் கொடுப்பதிலிருந்து அரசாங்கத்திற்கு வருவாய் கிடைக்கிறது. இது ஒரு உத்தேசமாக எனக்கு கிடைத்து இருக்கின்ற கணக்கை வைத்து சொல்வதாக வைத்துக்கொண்டாலும், வெறும் 35 கோடி





ரூபாய் மட்டுமே விவசாயிகளிடமிருந்து நமக்கு மின்சார கட்டண மாக கிடைப்பதற்கு வாய்ப்பு இருக்கிறது. நான் 35 கோடி ரூபாயும் கிடைக்கிறது என்று சொல்லவில்லை. 35 கோடி ரூபாய் கிடைப்பதற்குள்ளே எத்தனையோ போராட்டங்கள், எத்தனையோ கசப்பு உணர்ச்சிகள், எத்தனையோ இடங்களிலே டிஸ்கனெக்ஷன், எத்தனையோ இடங்களிலே ஜப்தி, இவைகள் எல்லாம் ஒரு பக்கத்தில் இருக்கிறது.

(பிற்பகல் 12—30)

ஒட்டுமொத்தமாக அத்தனையும் வந்தாலும் கூட, 35 கோடி ரூபாய் தான் வருகிறது. 2,065 கோடி ரூபாய் வருமானம் உள்ள தமிழ்நாடு அரசாங்கத்திற்கு இந்த 35 கோடி ரூபாய் இந்த விவசாயிகளிடமிருந்து கிடைக்கிற மின்சார கட்டணம் எந்த அளவுக்கு இருக்கிறது என்று பார்த்தால், இந்த 35 கோடி ரூபாய் அளவிலான மின்சாரக் கட்டணத்தை இந்த விவசாயிக்கு கட்டணம் இன்றியே கொடுத்து விட்டாலும் கூட, கெட்டுப் போவது ஒன்றும் இல்லை. இந்த 35 கோடி ரூபாய் என்பது இலவசமாக அந்த விவசாயததிற்கு மின்சாரத்தைக் கொடுப் பதன் மூலம் நமக்கு ஒன்றும் பெரிய இழப்பு ஏற்பட்டு விடப் போவது இல்லை. அதற்காக சிறு சான்றுகள் தருகிறேன். சென்ற ஆண்டு மட்டும் வெளி மாநிலத்திலிருந்து அதிகமான விலைகொடுத்து உணவுப் பண்டங்கள் வாங்கி குறைந்த விலைக்கு தமிழ்நாட்டில் விற்றதால் ஏற்பட்டுள்ள இழப்பு 100 கோடி ரூபாய். அடுத்த மாநிலத்தில் இருக்கின்ற விவசாயிகள் உற் பத்திச் செய்த விளைப் பொருட்களுக்கு நமது அரசு அதிகப்படி பணம் கொடுத்து வாங்கி அதை இங்கே நமக்கு நியாய விலையில் கொடுக்கின்ற காரணத்தால் ஏற்பட்ட இழப்பு, ஒரு ஆண்டுக்கு மட்டும் 100 கோடி ரூபாய், இந்த 100 கோடி ரூபாய் இழப்புக்கு தயாராக இருக்கின்ற நாம், நமது விவசாயி உற்பத்தி செய்து தர மாட்டானா, இந்த மின்சாரத்தை அவனுக்கு இலவச மாகக் கொடுத்தால், என்பதை சிந்தித்துப் பார்க்கவேண்டும் என்று பணிவன்போடு கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து, பொதுத்துறையில் இயங்குகின்ற அதாவது அரசுத் துறையில் இயங்குகின்ற 33 தொழிற்சாலைகள், நமது அரசுத் துறையில் இருக்கின்ற 33 தொழிற்சாலைகளின் மூலம் இதுவரை நமக்கு கிடைத்து இருக்கின்ற இழப்பு—லாபம் அல்ல—எவ்வளவு தெரியுமா? 158 கோடி ரூபாய். ஆக இந்த அரசு நடத்துகின்ற 33 தொழிற்சாலைகள் 158 கோடி ரூபாயை நமக்கு இழப்பை செய்து இருக்கிறபோது வருடம் தோறும் 35 கோடி ரூபாய் நமக்கு உணவு அளிக்கின்ற விவசாயிகளுக்கு மின்சார கட்டணத்தை இலவசமாக கொடுப்பதன் மூலம் செய்து கொடுத் தால்தான் என்ன என்ற கேள்வியை நான் கேட்க விரும்புகிறேன்.

[திரு. குமரி அனந்தன்] [1984 மார்ச் 12

அது மட்டும் அல்ல, நெய்வேலியிலிருந்து நாம் மின்சாரம்
வாங்குகிறோம். அதிக விலை கொடுத்து வாங்குகிறோம்.
அப்படி இருக்கும்போது கட்டணத்தை இலவசமாகக் கேட்
கிறார்களே என்று இங்கே கேட்டால் அதற்கு இந்த அவையின்
மூலம் ஒரு விளக்கத்தை தெரிவிக்க அனுமதிப்பார்கள் என்று
கருதுகிறேன்: உதாரணமாக நெய்வேலியிலிருந்து இன்று
அதிகமான மின்சாரக் கட்டணத்தைக் கொடுத்து நாம் மின்சாரம்
வாங்குகிறோம். ஆனால் அந்த நெய்வேலியிலிருந்து 3 ஆண்டு
களாக ஒரு யூனிட்டு 24 பைசா என்று நமக்கு விற்றுக் கொண்டு
இருந்தது. 24 பைசாவாக 3 ஆண்டுகளாக விற்றுக் கொண்டு
இருந்த நெய்வேலியில் திடீர் என்று இப்போது என்ன செய்கிறது
தெரியுமா ? ஒரு யூனிட்டு மின்சாரம் விலை 39 பைசா என்று
விலையை உயர்த்தியதோடு மட்டும் அல்ல, அங்கே மத்திய அரசு
நிர்வாகம் விலையை உயர்த்தியதோடு மட்டும் அல்ல, கடந்த
3 ஆண்டு காலத்திற்கும் 39 பைசா என்று கணக்கு வைத்து
பணம் கொடுக்க வேண்டும் என்று வற்புறுத்தி தமிழக அரசிட
மிருந்து பணத்தையும் பெற்றுக் கொண்டது. ரெட்ராஸ்பேக்டிவ்
எபக்ட் என்று சொல்லுகின்ற வகையில் முன் தேதியிட்டே அந்த
பணம் எங்களுக்குக் கொடுக்க வேண்டும் என்று சொல்லிவிட்டது.
இந்த மத்திய அரசு நிறுவனம் அங்கே வருவதற்கு அந்தக் காலத்
தில் பாடுபட்ட பெரும் தலைவர் காமராஜ் அவர்கள், டி. டி.
கிருஷ்ணமாச்சாரி அவர்கள் எவ்வளவு முயற்சித்தார்கள் என்பது
தெரியும். அந்த நேரத்தில் மரியாதைக்குரிய டி. டி. கே. அவர்கள்
இந்த நிறுவனத்தைக் கொண்டு வருகிற நேரத்தில் பேசிய பேச்
சுக்கள் என்ன தெரியுமா ? இந்த நிலக்கரிச் சுரங்கத்தில் தோண்டி
எடுக்கின்ற நிலக்கரி ஒவ்வொரு டன்னுக்கும் 10 ரூபாய் என்று
வைத்து விற்க வேண்டும். அப்படி 10 ரூபாய் வைத்து விற்கப்
பட்டால் இந்த 10 ரூபாயில் ஒரு ரூபாய் தமிழ்நாடு அரசுக்கு
ராயலிட்டி கொடுக்க வேண்டும். தமிழக அரசுக்கு ஒரு ரூபாய்
ராயலிட்டி கொடுக்க வேண்டும் என்று 1955–56 இல் பேசப்
பட்டது. இன்று 700 லட்சம் டன் நிலக்கரி தோண்டி எடுக்கப்
பட்டுவிட்டது. இன்று ஒரு டன் விலை 10 ரூபாய் அல்ல ஒரு
ரூபாய் கமிஷன் பெறுவதற்கு. ஒரு டன் நிலக்கரியினுடைய
விலை 200 ரூபாய். 200 ரூபாய் என்று சொன்னால் ஒரு டன்
நிலக்கரி தோண்டி எடுக்கின்றபோது மத்திய அரசு தமிழக அர
சுக்கு 20 ரூபாய் கொடுப்பதற்கு கடமைப்பட்டிருக்கிறது. அப்படி
கொடுக்க வேண்டிய கால கட்டத்தில் இப்போது இதுவரை 700
லட்சம் டன்கள் தோண்டி எடுக்கப்பட்டு விட்டது. இப்போது
நவீன இயந்திரங்கள் எல்லாம் கொண்டு ஆண்டுக்கு 60 லட்சம்
டன்கள் நிலக்கரி தோண்டி எடுத்துக் கொண்டே இருக்கிறார்கள்.
இந்த 60 லட்சம் டன் நிலக்கரியை மட்டும் வைத்து கணக்குப்
பார்த்தால், ஆண்டு ஒன்றுக்கு நியாயமாக தமிழ்நாடு அரசுக்கு
சேரவேண்டிய ராயலிட்டி 12 கோடி ரூபாய். தமிழ்நாடு அரசுக்கு
ஆண்டுக்கு 12 கோடி ரூபாய் ராயலிட்டியாக நிலக்கரியில் மட்டும்
கொடுக்க வேண்டும்.



1984 மார்ச் 12] [திரு. குமரி அனந்தன்]

இன்னும் ஒன்று. இந்த நிலக்கரி சுரங்கம் இதனை ஒட்டி
இருக்கின்ற யூரியா தொழிற்சாலையானாலும் சரி இதனை ஒட்டி
இன்னும் மதிய அரசு வைத்து இருக்கின்ற பல்வேறு நிறுவனங்
களாக இருந்தாலும் சரி, அவைகளுக்குத் தண்ணீர் வேண்டும்.
அந்தத் தண்ணீரை இந்த பூமியிலிருந்து தான் எடுத்துக் கொள்
கிறார்கள். நமது தமிழ் மண்ணிலிருந்து தான் எடுத்துக் கொள்
கிறார்கள். எவ்வளவு எடுத்துக் கொள்கிறார்கள். ஒரு நாளைக்கு
400 லட்சம் காலன் எடுத்துக் கொள்கிறார்கள்: ஒரு நாளைக்கு
400 லட்சம் காலன் என்று சொன்னால் எவ்வளவு ஆகிறது
என்றால் சென்னை நகர மக்கள் அனைவருக்கும் குடிப்பதற்கு
எவ்வளவு கொடுக்கிறோமோ அந்த அளவுக்கு நீரை இந்த
மத்தியதுறையைச் சார்ந்த நிறுவனங்கள் ஒரு நாளைக்கு
தமிழ் மண்ணிலிருந்து உறிஞ்சி எடுத்துக் கொள்கிறார்கள்.
400 இலட்சம் கேலனை எடுத்துக் கொள்கிறார்கள். இந்த
400 இலட்சம் கேலனை எடுத்துக் கொள்கின்ற நேரத்திலே,
சாதாரணமாகத் தண்ணீர் வரி எவ்வளவு வாங்கப்படுகிறது
என்று சொன்னால், அதைப்பற்றி உத்தேசமாகச் சொல்கிறேன்.
200 கேலன் தண்ணீருக்கு ஒரு ரூபாய் வாங்கப்படுகிறது. அப்படி
யென்றால் ஒரு நாளைக்கு 400 இலட்சம் என்றால் ஒரு வருஷத்
திற்கு ஏழு கோடியே முப்பது இலட்சம் ரூபாய் நமது தண்ணீருக்கு
மட்டுமே அவர்கள் பணம் கொடுக்க வேண்டும். இப்படி ஏழு
கோடியே முப்பது இலட்சம் ரூபாயை வருடந்தோறும் கொடுக்க
வேண்டிய மத்திய அரசாங்கம் இன்று வரையில் காலணா கூட—
கால்பைசா கூடக்—கொடுக்கவில்லை. ஒரு வருஷத்தில் 12 கோடி
ரூபாயை நிலத்தில் தோண்டி எடுக்க வேண்டியதற்கு ஆயத் தீர்வை
கொடுக்கவில்லை. இப்படி 19 கோடியே 30 இலட்சம் ரூபாய்
இந்த ஆண்டும் வர வேண்டும். போன வருஷமும் வர வேண்டும்.
இதைக் கணக்குப் பார்த்து, 24 பைசாவிலிருந்து 39, பைசாவாக
மாற்றி, உயர்த்தி, உடனடியாக இதற்குப் பணத்தைக் கொடு
என்கிறார்களே, அவர்களுக்கு இன்றைக்கு நாம் நினைவுபடுத்த
வேண்டும். இந்தப் பணத்தையெல்லாம் நீங்கள் எங்களுக்குக்
கொடுத்தால் விவசாயிகளுக்கு இலவசமாகவே மின்சாரம்
கொடுக்க முடியும்.

இந்தியா-நேப்பாள எல்லையிலே இருக்கின்ற கங்கை நதியின்
உப நதிகளைப் பொறுத்த வரையில் இந்திய அரசாங்கத்திற்கு
இதில் கடப்பாடு இருக்கிறது என்பதால் சொல்கிறேன், அவை
களை மட்டும், உலகத்தில் இருக்கின்ற பணம் கொடுக்கின்ற
நிறுவனங்களின் உதவியோடு நீர் வீழ்ச்சிகளாக மாற்றி அந்த
இடத்தில் நீர் மின்சாரத்தை உற்பத்தி செய்தால் 83,000
மெகாவாட் உற்பத்தி செய்யலாம் என்று சொல்கிறார்கள்.
83,000 மெகாவாட் மின்சாரம் என்று சொன்னால் எவ்வளவு
என்று பார்த்தால், இந்தியாவில் இதுவரையில் அனைத்துப் புனல்,
அனல், அணு அத்தனையையும் சேர்த்து மொத்தமாக, பிரிட்டிஷ்
காரன் காலத்திலிருந்து இன்று வரையில் எடுத்திருக்கின்ற
மின்சாரத்தின் அளவு 35,000 மெகாவாட்தான். இந்தியா

[திரு. குமரி அனந்தன்] [1984 மார்ச் 12

முழுவதும் இதுவரையில் உற்பத்தி செய்த மின்சாரத்தின் அளவு 35,000 மெகாவாட். ஆனால் இந்திய-நேப்பாள எல்லையில் இருக்கின்ற கங்கை நதியின் உப நதிகளிலேயிருந்து மட்டும் நாம் பெற வேண்டிய, பெறக் கூடிய, பெற முடியக் கூடிய மொத்த மின்சாரம் எவ்வளவு என்றால் 83,000 மெகாவாட்.

இவைகளையெல்லாம் கணக்கிட்டுப் பார்க்கின்றபொழுது மத்திய அரசாங்கம் இந்தத் திட்டங்களை நிறைவேற்றாமல் போட்டிருப்பதால்தான் இங்கே நீர்ப்பாசன வசதியில்லாமல், நிலத்தைத் தோண்டி கிணற்றிலிருந்து தண்ணீரை மேலே கொண்டு வருகின்ற விவசாயிகள் துன்பப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள்.

ஆனால், ஆற்றுப் பாசனத்தின் மூலம் கிடைக்கின்ற அந்த நெல்லுக்கும், ஊற்றுப் பாசனத்தின் மூலம் கிடைக்கின்ற அந்த நெல்லுக்கும் விலையில் வித்தியாசம் உண்டா என்று கேட்டால் கிடையாது. இப்படிப்பட்ட வறண்ட பூமிகளிலேயிருந்து ஆழமாகத் தோண்டி, கிணறுகளை . எடுத்து, குழாய்களின் மூலமாகத் தண்ணீரை மேலே கொண்டு வந்து விவசாயத்திற்குப் பயன்படுத்துகிறார்களே, அவர்களுக்கெல்லாம் இலவசமாக மின்சாரத்தைக் கொடுப்பதற்கு இந்த அரசாங்கம் செயல்படுவது என்பது இயலாத காரியம் அல்ல.

இன்னும் சொல்லப் போனால், அவ்வாறு செயல்படுத்துவதன் மூலமாக, இந்த நாட்டுக்கு அவன் உணவு தருவான், அதன் காரணமாக, வெளிநாடுகளிலேயிருந்து உணவுப் பொருட்களை வாங்குவதற்குப் பதிலாக, வெளி மாநிலங்களுக்கு உணவுப் பொருட்களை ஏற்றுமதி செய்யக் கூடிய அளவிற்கு இங்கே விவசாய உற்பத்தியை விவசாயி செய்து தருவான் என்பதை மனத்தில் கொள்ள வேண்டும்.

அதுமட்டுமல்ல, நிலக்கரியின் விலையேற்றத்தைப் பற்றி இங்கே பேசினார்கள். நிலக்கரியின் வில்லை இப்படி ஏறக் காரணம் என்ன ? அதை நினைத்துப் பாருங்கள். சிமெண்டைப் பொறுத்த வரையில், எவ்வளவு விலையானாலும், எங்கேயானாலும் இந்தியாவில் எந்தப் பகுதியில் வாங்கினாலும் ஒரே விலை ; அதைப் போல இரும்பைப் பொறுத்த வரையில், எவ்வளவு விலையானாலும், எங்கேயானாலும் இந்தியாவில் எந்தப் பகுதியில் வாங்கினாலும் மொத்தத்திலே ஒரே சீரான விலை. ஃபிக்சட் பிரைஸ். எந்த இடத்திலே வாங்கினாலும் அதே விலைதான் கொடுக்க வேண்டும்.

ஆனால் நிலக்கரியின் நிலைமை அப்படியா ? நிலக்கரியின் விலை உற்பத்தியாகின்ற இடத்தில் டன் ஒன்றுக்கு 270 கோடி ரூபாய். இப்படி ஒரு டன்னுக்கு 270 கோடி ரூபாய் ஆகிறது என்றால்,—அந்தப் பழுப்பு நிலக்கரியைப் பற்றி நான் சொல்லவில்லை. அனல் மின் நிலையத்திற்குப் போடும் நிலக்கரியைப் பற்றிச் சொல்கிறேன். அதே நிலக்கரியை தூத்துக்குடி அனல் மின் நிலையத்திற்குக் கொண்டு வர வேண்டுமென்றால்,



1984 மார்ச் 12] [திரு. குமரி அனந்தன்]

போக்குவரத்துச் செலவு மட்டும் 350 ரூபாய் ஆகிறது. ஒரு டன் நிலக்கரியின் விலை 270 ரூபாய்தான். ஆனால், அதைத் தூத்துக்குடிக்குக் கொண்டு வர வேண்டுமென்றால் 350 ரூபாய் ஆகிறது. அதற்குப் பதிலாக எப்படி சிமெண்டுக்கு இந்தியா முழுவதும் ஒரே விலையோ, எப்படி இரும்புக்கு இந்தியா முழுவதும் ஒரே விலையோ அதைப்போல, மத்திய அரசாங்கம் இந்த நிலக்கரிக்கும் ஒரே .விலையை நிர்ணயித்தால் நம்முடைய உற்பத்திச் செலவு அதிகரிக்காது. அதன் காரணமாக விவசாயிகளுக்கு இலவசமாகக் கூட மின்சாரம் கொடுக்க முடியும். ஆகவே, மத்திய அரசாங்கத்தை இதற்கு, இதுகுறித்து நீங்கள் வலியுறுத்துங்கள். வலியுறுத்துவதோடு மட்டும் நீங்கள் நின்று விடக்கூடாது. இதுகுறித்து நீங்கள் உறுதியோடு நின்று, போராட வேண்டும்.

ரூர்கேலாவிற்குப் பக்கத்தில் இருந்தாலும் சரி, இராமகுண்டத்திற்குப் பக்கத்தில் இருந்தாலும் சரி, தூத்துக்குடிக்குப் பக்கத்தில் இருந்தாலும் சரி, சிங்கரேணிக்குப் பக்கத்தில் இருந்தாலும் சரி, எல்லா இடங்களிலேயும் ஒரே விலைக்கு நிலக்கரியைக் கொடுக்க வேண்டுமென்று சொல்லி மத்திய அரசாங்கத்தை வற்புறுத்திப் பெறவேண்டும். அப்படிப் பெறுவதால் உற்பத்தி செலவு எவ்வளவோ குறையும்.

(பிற்பகல் 12–40)

அதைப்போலவே இரண்டு இலட்சத்து . எழுபதாயிரம் டன் நிலக்கரி தேவை என்று நமது அமைச்சர் அவர்கள் சுட்டிக்காட்டி இருக்கிறார். ஆனால், அவர்கள் ஒரு இலட்சத்து ஐம்பதாயிரம் டன் நிலக்கரிதான் தருகிறார்கள் என்றும் கூறினார். ஏன் ? உற்பத்திக்கு இவ்வளவு தேவைப்படுகின்றது என்று சொன்னால் அத்தனையையும் தருவதற்கு அவர்கள் கடமைப்பட்டவர்கள் தான், அதைப் பெற நாம் கடமைப்பட்டவர்கள்தான் என்பதை மறக்கக்கூடாது.

அதற்கிடையிலே நாமும் நமது மின்சாரத்தை நல்ல முறை யில் பயன்படுத்த ஒரு திட்டத்தைக் கொண்டுவரவேண்டும். இன்று நீங்கள் கணக்குப் பார்த்தால் நாற்பதரை இலட்சம் மின்சார இணைப்புக்கள் இருப்பதாகத் தெரிகின்றது. அவற்றிலே ஒன்றே கால் இலட்சம் இணைப்புக்கள் தவறுடையதாக, குறைவுடைய தாக, ஃபால்ட்டியாக இருக்கின்றன. அப்படி ஃபால்ட்டியாக இருக்கின்ற காரணத்தால் என்ன ஆகின்றது ? ஏராளமான மின் சாரம் வீணாகப் போகின்றது. அது மட்டுமல்ல. 522 இணைப் புக்களிலே ஏராளமான அளவிலே மின் திருட்டு நடைபெற்றிருக் கின்றது. ஆகவே $40\frac{1}{2}$ இலட்சம் இணைப்புக்களில் ஒன்றரை இலட்சம் இணைப்புக்களில் குறைபாடு ; 522 மின் இணைப்புக் களில் ஏராளமான திருட்டுக்கள் நடந்து இருக்கின்றன என்று சொன்னால் இந்த ஓட்டைகளை எல்லாம் அடைத்துச் செம்மைப்

படுத்திவிட்டால் மின்சாரம் இன்னும் சற்று அதிகமாகக் கிடைக்கும். அப்போது விவசாயிகளுக்கும் இலவசமாக மின்சாரத்தைக் கொடுக்க முடியும்.

அடுத்து, இன்னும் எங்கெங்கு நீர்த்துறைகள் இருக்கின்றனவோ அங்கங்கெல்லாம் மின்சாரத்தைக் கொண்டு வந்துவிட்டோம் என்றுமட்டும் சொல்லாமல், இன்னும் அங்கே ஓடும் ஆற்றின் வேகத்திலும், அடித்துக்கொண்டிருக்கின்ற காற்றின் வேகத்திலும், எழும் அலைகளின் உஷ்ணத்திலும் மின்சாரத்தைத் தயாரிக்கின்ற எத்தனையோ திட்டங்களை நிறைவேற்றலாம். அத்தனைத் திட்டங்களையும் நிறைவேற்றுவதற்கு முனைந்து பாடுபடுங்கள். ஆகவே, இவற்றை எல்லாம் ஒட்டு மொத்தமாகச் சிந்திக்க வேண்டும். நமக்கெல்லாம் உணவு தந்து நம்மை எல்லாம் உயிர் வாழ வைக்கின்ற விவசாயிக்காக இலவசமாக மின்சாரம் கொடுப்பதிலே 35 கோடி ரூபாய் செலவு என்பது பெரிதல்ல என்று சொல்லி இலவசமாக அவனுக்கு மின்சாரம் கொடுக்க ஒரு திட்டத்தை வகுத்தால் அவன் நிரந்தர வாழ்வு பெறுவான் என்று சொல்லி, அவ்வாறு அவன் நிரந்தர வாழ்வு பெறவேண்டிய முயற்சியில் இந்த அரசு ஈடுபட வேண்டும் என்று வலியுறுத்தி காந்தி, காமராஜ் தேசிய காங்கிரஸ் கட்சியின் சார்பிலே என் கருத்துக்களை நிறைவு செய்கிறேன்.

*திரு. பொ. உத்திராபதி : மாண்புமிகு பேரவை மாற்றுத் தலைவர் அவர்களே, 1984–85 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையின் மீது இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாக நான் சில கருத்துக்களைச் சொல்ல விழைகிறேன்.

இந்த ஆண்டு 2,065 கோடியே 43 இலட்சத்துக்கு நிதி அமைச்சர் அவர்கள் இந்த நிதிநிலை அறிக்கையைத் தாக்கல் செய்து இருக்கிறார்கள். 57 கோடியே 25 இலட்சத்திற்குப் புதிய வரிகளைப் போட்டிருக்கிறார்கள். 167 கோடியே 50 இலட்சம் ரூபாய் பற்றாக்குறை ஏற்பட்டிருக்கின்றது. இது தமிழக அரசினுடைய பட்ஜெட். ஆகவே, கூடுதலாக 224 கோடியே 75 இலட்சம் இன்றைக்கு தமிழகத்து மக்களின் தலையில் விழக்கூடிய வகையில் ஒரு சுமையை சுமத்தி இருக்கிறீர்கள். அதே போல் மத்திய சர்க்கார் 2,000 கோடி ரூபாய்க்கு பற்றாக்குறை பட்ஜெட்டைப் போட்டு 270 கோடி ரூபாய்க்கு வரி போட்டிருக்கின்றது. ஆக. இன்றைக்கு இந்திய நாட்டில் இப்படி ஒரு வரியும், பற்றாக்குறையும் சுமந்திருக்கக்கூடிய சூழ்நிலையில், இந்தியா முழுவதிலும் கடுமையான பொருளாதார நெருக்கடி ஏற்பட்டு இருக்கின்றது.

குறிப்பாக, தமிழகத்தில் டிசம்பர் மாதம் தஞ்சை, புதுக்கோட்டை, திருச்சி ஆகிய மாவட்டங்கள் பாதிக்கப்பட்டன. இரண்டாவதாக இப்போது மதுரை, திருநெல்வேலி, இராமநாதபுரம் ஆகியவை பாதிக்கப்பட்டிருக்கின்றன. அடுத்து, வடாற்காடு, தென்னாற்காடு விவசாயிகளின் விவசாயம் முழுமையாகப்





பாதித்துவிட்டது. இப்படி தமிழகத்தினுடைய நெல் உற்பத்தி முழுமையும் பாதிக்கப்பட்டு விவசாயிகள் அவல நிலைக்கு ஆளாக்கப்பட்டிருக்கிறார்கள். அதே போல் கடலை, கரும்பு, மிளகாய் போன்ற மனிதர்களுக்குத் தேவையான பல பொருட்கள் இயற்கையின் சீற்றத்தால் பாதிக்கப்பட்டிருக்கின்றது. ஆகவே, இனிமேல் தமிழகத்தில் வருகின்ற ஆண்டு 5 கோடி மக்களின் உயிர் பிரச்சினை ஒரு எரிமலையாகக் கூட வெடிக்கலாம் என்று தமிழக அரசுக்கு எச்சரிக்கையாக நான் சொல்ல விரும்புகிறேன். ஆகவே இவ்வளவு நிலைமை ஏற்பட்டதற்குப் பிறகு, இவற்றைத் தடுப்பதற்கும், இதற்கு இறுதியான தீர்வு காண்பதற்கும் என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறோம் என்பதைப் பற்றிச் சிந்திக்க வேண்டும்.

தஞ்சை மாவட்டத்தில் இதுவரையிலும் கண்டிராத, யாரும்
கேட்டிராத அளவுக்கு வெள்ளம் பாதித்திருக்கின்றது. இவ்வளவு
பாதிப்புக்கள் ஏற்பட்டதற்குப் பிறகு அம் மாவட்டங்களில் இனி
எதிர்காலத்தில் அப்படிப்பட்ட வெள்ளமோ, மழையோ ஏற்
பட்டால் அந்த பாதிப்புக்களைத் தடுப்பதற்கான நிரந்தரமான
தீர்வு காண நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கின்றதா அல்லது
அதற்கான திட்டங்கள் தீட்டப்பட்டிருக்கின்றனவா இந்த பட்
ஜெட்டிலே என்று பார்த்தால், கொஞ்சம் கூட கிடையாது. அல்
லது அதற்கான திட்டங்கள் வகுக்கப்பட்டிருக்கிறதா இந்த பட்
ஜெட்டில் என்று பார்த்தால் கொஞ்சம்கூட கிடையாது. இந்த
பட்ஜெட்டில் பெரும் பகுதி இடம் பெற்றிருப்பது சத்துணவுத்
திட்டம்தான். பாதிக்கப்படுபவைகளைத் தடுப்பதற்குத் திட்டங்
கள் இருக்கின்றனவா—அந்தத் திட்டங்களைப் பார்க்க நமது
தமிழக சர்க்கார் தவறிவிட்டது. தஞ்சைக்கு மேற்கே சிங்கப்
பட்டிக்கு அருகாமையில் புதுக்கோட்டையிலிருந்தும் திருச்சியி
லிருந்தும் வரக்கூடிய தண்ணீரைத் தடுப்பதற்கு 1921 ஆம் ஆண்டு
ஒரு திட்டம் தீட்டப்பட்டிருக்கிறது. சோளன்பட்டி வாரித் திட்
டம், முதலை முத்து வாரித் திட்டம் ஆகியவற்றை உருவாக்கு
வதற்கு காவிரி கமிட்டி ஒன்று அமைக்கப்பட்டிருக்கிறது. இது
வரையில் அந்த கமிட்டியினர் என்ன செய்து கொண்டிருந்தார்
கள்? இப்படி ஒவ்வொரு ஆண்டும் இயற்கையால் தஞ்சை மா
வட்டம் பாதிக்கப்பட்டு வருகிறது. அதைத் தடுப்பதற்கு நிரந்
தரமான தீர்வு காண்பதற்கு, இது தொடர்பான ஒரு திட்டம்
உருவாக்கப்பட்டிருந்தால், ஒரு தடுப்புச் சுவர் கட்டி வரக்கூடிய
தண்ணீரை எல்லாம் தேக்கி பற்றாக்குறை ஏற்படக்கூடிய காலத்
தில் தண்ணீர் விடுவதற்கும் தண்ணீர் வரக்கூடிய காலத்தில் வெள்
ளத்தைத் தடுத்து, தண்ணீரை சேமிக்கவும் நடவடிக்கை எடுத்
திருக்கலாம். இந்த நடவடிக்கையை எடுப்பதற்கு, இதனைப்
பார்க்க, கவனிக்க, தொடர்ந்து வந்த ஆட்சியாளர்கள் தவறி
இருக்கிறார்கள். இப்போதாவது, அதைப்பார்த்து, அந்தத் திட்
டத்தை நிறைவேற்ற தமிழக சர்க்கார் நடவடிக்கை எடுக்க
வேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

[திரு. பொ. உத்திராபதி] [1984 மார்ச் 12

தஞ்சை மாவட்டத்தில் வெள்ளம் வந்து, தண்ணீர் அத்தனையும் வடிய சரியான வடிகால் இல்லாமல், கடலில் செல்வதற்கு வழியில்லாத அளவு இருப்பதால், தஞ்சை முழுவதும் வெள்ளக் காடாக ஆகி, இன்றைக்கு விவசாயம் பாதிக்கப்பட்டிருக்கிறது. மதுரையும், இராமநாதபுரமும், திருநெல்வேலியும் கொஞ்சம் பாதுகாக்கும் என்று நினைத்திருந்தோம். இன்றைக்கு அவையும் பெரிதாகப் பாதிககப்பட்டிருக்கின்றன. ஆகவே, தஞ்சைக்கு மேற்கே உள்ள சிங்கப்பட்டிக்கு அருகில் ஒரு தடுப்புச் சுவர் கட்டவும், தஞ்சை மாவட்ட விவசாயிகளை எதிர்காலத்தில் பாதுகாக்கவும் அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்தில் நான் தமிழக அரசைக் கேட்டுக்கொள்கிறேன்.

அதைப் போல், இன்றைக்கு எங்கே பாதிப்பு ஏற்பட்டாலும் முதலமைச்சர் இங்கேயிருந்து ஓடோடிச் செல்கிறார்கள், ஹெலிகாப்டரில் சுற்றிப் பார்க்கிறார்கள். பாதிக்கப்பட்டவர்களுக்கு வேட்டி, சேலை அரசின் சார்பிலே கொடுக்கிறார்கள். ஒரு ஆட்சி செய்ய வேண்டிய கடமையைச் செய்கிறார்கள். ஆனால், இதிலே நிரந்தரமாகத் தீர்வு காண்பதற்கு, அடிப்படை தேவைகளை நிறைவேற்றுவதற்கு, மத்திய சர்க்காரை வலியுறுத்தி நிதியைப் பெறுவதற்கு, அரசினுடைய கவனம் இருக்கிறதா் என்று பார்த்தால் இல்லை. நான் உங்களிடத்தில் கேட்டுக்கொள்வதெல்லாம் இந்த வேட்டி, சேலை, அரிசி வழங்கல் மூலமாக நீங்கள் நிரந்தரமாகத் தீர்வு காண முடியும் என்று நினைத்துச் செயல்பட்டால், நிச்சயமாக இப்படிப்பட்ட பாதிப்பைப் போக்க முடியாது.

அதே போல் இன்னொன்று. சென்ற ஆண்டு பட்ஜெட் கூட்டத்தில் நிதி அமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள், தஞ்சை மாவட்டம்—இப்பெ ழுது கடுமையாகப் பாதிக்கப்பட்டிருப்பதைப் போல்—வறட்சியால் பாதிக்கப்பட்டுள்ளது. இம்மா நிலத்தில் தொடர்ந்து பல ஆண்டுகள் வறட்சி ஏற்படுவதால், பல தடவைகள் வேண்டுகோள் விடுத்திருந்தும் அவ்வகையில், கர்நாடக மாநிலம் தண்ணீர் கொடுத்து உதவியிருந்தால் இந்தப் பிரச்சினையைத் தீர்த்திருக்க முடியும் என்று சொல்லியிருக்கிறார்கள். 1974 ஆம் ஆண்டு ஒப்பந்தம் ரத்து ஆனது முதல் இந்த 1984 ஆம் ஆண்டு வரையிலும், தொடர்ந்து தஞ்சை மாவட்டத்தில் தண்ணீர் இல்லாமல், காவிரி பிரச்சினை தஞ்சையைத் தொடர்ந்து பாதித்து வருகிறது. ஆட்சியாளர்களும் தொடர்ந்து மத்திய சர்க்காரை வலியுறுத்தி இந்தப்பிரச்சினையைத் தீர்க்கத் தவறி இருக்கிறார்கள். இந்த பட்ஜெட்டிலே பார்த்தால், காவேரி பிரச்சினையைப் பற்றி ஒரு வரி கூட எழுதவில்லை.

[பிற்பகல் 12-50]

**திரு. துரைமுருகன் :** மாற்றுத்தலைவர் அவர்களே, பாயிண்ட் ஆப் ஆர்டர். அவையில் கோரம் இல்லை என்பதை தங்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.



1984 மார்ச் 12]

**திரு. மி. வின்சென்ட் :** தலைவர் அவர்களே, கோரம் இருக்கிற போதே, இல்லையென்று சொல்லி அவையின் நடவடிக்கைகளை திசைத் திருப்பலாமா ? கோரம் இருக்கிறது.

**திரு. பொ. உத்திராபதி :** மத்திய அரசிற்கு தமிழகத்தைப். பற்றி கவலை இல்லை. கவலை இருந்திருந்தால் இந்த 10 ஆண்டு காலத்திலே கர்நாடக அரசை அழைத்து, தமிழக அரசை அழைத்து, ஒரு இடத்தில் வைத்து பேசி, இந்தக் காவேரி பிரச்சினையை தீர்த்திருக்க முடியும். தஞ்சை மாவட்டத்தில் விவசாயம் இந்த அளவிற்கு பாதிக்காமல் பாதுசாத்திருக்க முடியும். தமிழக அரசு இப்போது மத்திய அரசோடு தேர்தலுக்காக நெருங்கிய உறவு வைத்திருக்கிறது. இதனை பயன்படுத்தி இந்தக் காவேரி பிரச்னையைத் தீர்ப்பதற்கும், எதிர்க்காலத்தில் தஞ்சை மாவட்டத்தில் விவசாயிகளுக்கு ஜூன் மாதத்தில் காலத்தோடு தண்ணீர் கிடைப்பதற்கும், தமிழகத்தின் உணவு உற்பத்தி பாதிக்காத வகையில் பிரச்னையை தீர்ப்பதற்கு தமிழக அரசு நடவடிக்கையை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல நிலச்சீர்திருத்தம். இந்த பட்ஜெட்டிலே அதைப் பற்றி ஒன்றும் கிடையாது. 1958—60 ஆம் ஆண்டுகளுக்கிடையே தமிழகத்திலே அன்றைக்கு இருந்த ஆட்சி காலத்தில் பினாமியாக எழுதி வைத்த நிலத்தை எடுப்பதில் ஒரு சட்டத்தை இயற்றினோம். அந்தச் சட்டம் மத்திய அரசுக்கு அனுப்பப் பட்டது. அதற்கு மத்திய சர்க்கார் அனுமதி அளித்தார்களா ? அந்த மூன்று ஆண்டுக்காலத்திலே தமிழகத்திலே, காங்கிரசிலே இருந்த பெரிய நிலப்பிரபுக்கள், நிலத்தை பினாமியா எழுதிவைத்து அரசாங்கத்தையும், தமிழ் நாட்டு பொதுமக்களையும் ஏமாற்றினார்கள். அதை எடுப்பதற்கு நல்ல சட்டத்தை நீங்கள் கொண்டு வந்தீர்கள். எதிர்க்கட்சியிலே உள்ள நாங்களும் ஆதரித்தோம். ஆனால் மத்திய அரசு தமிழகத்திலே இருக்கிற நிலப் பிரபுக்களை பாதுகாக்க அந்தச் சட்டத்தை திருப்பி அனுப்பினார்கள். இதுவரைக்கும் தமிழக சர்க்கார் அவர்களை தட்டிக் கேட்டதுண்டா ? மத்திய சர்க்காரை கடிந்து பேசியது உண்டா ? சட்டமன்றத்திலே ஆதரித்த கட்சிகளை அழைத்து வைத்து பேசி இந்தச் சட்டத்தை மேலும் வலியுறுத்தி பெறுவதற்கு நீங்கள் தவறி விட்டீர்கள்.

தமிழ் நாட்டிலே வறுமைக்கோட்டிற்கு கீழே வாழ்கிற விவசாயத் தொழிலாளர்களின் வறுமையைப் போக்குவதற்கு, மோசடியாக மறைத்து வைத்திருக்கிற நிலத்தையெல்லாம் எடுத்து இதில் ஒரு முடிவு காண்பதற்கு தமிழக அரசு நிலச்சீர் திருத்தச் சட்டத்தை கொண்டு வரவேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

[திரு. பொ. உத்திராபதி] [1984 மார்ச் 12

அதே போல கிராமங்களில் கழிப்பிடங்கள் கட்டவேண்டு மென்று சொன்னீர்கள். இன்றைக்கு கிராமங்கள் தோறும் கழிப்பிடங்கள் கட்டி இருக்கிறீர்கள். அவை எதற்காக இருக் கின்றன? அதற்கு பதிலாக ஒரு பள்ளிக்கூடம் கட்டியிருக்கலாம்: பஞ்சாயத்து அலுவலகம் கட்டி இருக்கலாம். அல்லது ரேடியோ நிலையம் கட்டி இருக்கலாம். இன்றைக்கு கிராமத்திலே இருக் கிற தாய்மார்களின் வாக்குகளைப் பெறவேண்டும் என்பதற்காக கழிப்பிடங்கள் கட்டவேண்டுமென்று நீங்கள் சொன்னீர்கள். ஆளும்கட்சி சட்டமன்ற உறுப்பினர்கள் சொல்லட்டும். எங்கே யாவது கட்டிய கழிப்பிடம் உருப்படியாக இருக்கிறதா ? அது ஒரு கழுதை அடைவதற்கு கூட வாய்ப்பாக இருக்கிறதா? அதுவும் இல்லை. மக்களுக்கு தேவையில்லாமல் இந்தக் கட்டிடங்கள் வீணாக இருக்கின்றன.

அதைப் போல இருந்தால் 50 ரூபாய் கொடுப்போம் என்று சொன்னீர்கள். நல்லது தான். கிடைக்கிறதா, சொல்லுங்கள். செத்துவிட்டார்கள் என்று குடும்பத்தினர் போனால் இந்தாருங்கள் 50 ரூபாய் என்று பஞ்சாயத்திலே கொடுக்கிறார்களா ? அல்லது யூனியனிலேகொடுக்கிறார்களா ? அதை வாங்குவதற்கு 50 ரூபாய் செலவாகிறது. இது என்ன திட்டம் ?

அதேபோல வீட்டிற்கு ஒருவருக்கு வேலை திட்டம். கொடுத்து விட்டீர்களா ? தயவு செய்து சொல்லுங்கள். எங்கே கொடுத் திருக்கிறீர்கள் ? அதேபோல படித்தவர்களுக்கு 50 ரூபாய். எத்தனை பேர்களுக்கு கொடுத்திருக்கிறீர்கள் ? சொல்ல முடி யுமா ? ஏதோ ஊருக்கு ஒன்றிரண்டு பேர்களுக்கு கொடுத்திருக்க லாம். இங்கே குடிதண்ணீர் தொழிலாளர் நலத்துறை அமைச்சர் அவர்கள் இருக்கிறார்கள். சுதந்திரம் பெற்று 36 ஆண்டுகள் ஆகியும் திருத்துறைப்பூண்டியில் நல்ல தண்ணீர் கிடைக்க வில்லை. நானும் வந்ததிலிருந்து கேட்டுக்கொண்டே இருக் கிறேன். உலக வங்கியிலே கடன் வாங்கி செய்யவேண்டுமென்று சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். கொடுக்க முடிந்ததா ? தன் னிறைவுத் திட்டத்திலே போட்ட ரோடு என்னாயிற்று ? என்னுடைய தொகுதியிலே மாங்குடியிலே வருவாய்த்துறை அமைச்சர் அவர்கள் ஒரு பள்ளிக்கூடத்தைத் திறந்து வைத்தார் கள். இப்போது போய்ப் பாருங்கள். பல இடங்களிலே ஓட்டை விழுந்து தொரதொரவென்று ஒழுகுகிறது. பிள்ளைகள் என்ன கதி ஆயினவோ தெரியவில்லை. அதே போல் கிராமத் தெருவிளக்குகள். மற்றும் வேலை வாய்ப்புத் திட்டம் ; இந்தத் திட்டங்கள் எல்லாம் உண்மையிலேயே அமுலா கிறதா ? நீங்கள் கொடுக்கிற பணம் அந்தத் திட்டங்களுக்குப் போய்ச் சேருகிறதா ? சேரவில்லை என்று நாங்கள் சொன்னால் கோபிக்கிறீர்கள் இடையிலே காண்ட்ராக்ட்காரர்கள் சாப்பிட்டுவிடு கிறார்கள். ஆளுங்கட்சிக்காரர்கள் உடந்தையாக இருக்கிறார்கள் என்று சொன்னால் கோபித்துக்கொள்கிறீர்கள். அதிலே ஏதா வது விவகாரம் செய்து. அந்த இடத்தில் இருந்து அவர்களை



1984 மார்ச் 12] [திரு. பொ. உத்திராபதி]

மாற்ற முயற்சித்தால் ஆளும்கட்சிக்காரர்கள் வந்து அந்த முயற் சியைத் தடுத்து நிறுத்திவிடுகிறார்கள். இப்படிப்பட்ட நிலைமை கள் இருக்கிற போது எப்படி நீங்கள் ஊழலை ஒழிக்கப்போகிறீர் கள் என்று நான் கேட்க விரும்புகிறேன். ஊழலுக்கு உடந்தை யாக இருக்கிறீர்கள் என்று நான் சொன்னால் கோபித்துக் கொள்வீர்கள். ஆனால் காரியங்கள் இப்படிப்பட்ட நிலைமையில் தான் நடந்துகொண்டு இருக்கின்றன என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

முத்துப்பேட்டை, திருத்துறைப்பூண்டி ஆகிய இடங்களில் பேருந்து நிலையங்கள் இல்லை. திருத்துறைப்பூண்டியில் தீயணைப்பு நிலையம் வேண்டும் என்று பல ஆண்டு காலமாகக் கேட்டுக்கொண்டு வருகிறேன். 7-வது இடத்தில் இருந்து இப் போது 4-வது இடத்திற்குஅது வந்துஇருக்கிறது என்று நினைக் கிறேன். ஆகவே, அந்தத் தீயணைப்பு நிலையத்தை இந்த ஆண்டு கண்டிப்பாக ஏற்படுத்தித்தர வேண்டும் என்று கேட்டுக்கொள்கி றேன். அதைப்போலவே அங்கே பெண்களுக்கான உயர்நிலைப் பள்ளி இல்லை அதையும் ஏற்படுத்தித் தரவேண்டும் திருத்துறைப் பூண்டி ஊராட்சி ஒன்றியத்தில் ஆங்காங்கு ரோடு போடப் போகிறோம். பேருந்துகள் ஓடும் மக்கள் ஆங்காங்கு ஏறிக்கொள் ளலாம் என்று சொன்னார்கள் ஆனால் பொன்னியில் இருந்து ஆலத்துறை வரை 7 கிலோ மீட்டர் தூரம் இருக்கிறது. அதைச் சுற்றி 50 கிராமங்கள் இருக்கின்றன. இந்தப் பகுதியில் ஒரு பெண்ணுக்கு பிரசவம் என்று வந்துவிட்டால் 7 கிலோ மீட்டர் கட்டிலில் வைத்துக்கொண்டு நடந்து சென்றுதான் பிரசவம் பார்க்கவேண்டும். ஆகவே அந்தப் பகுதியில் போக்குவரத்து வசதி செய்ய வேண்டும் அரிச்சந்திரா ஆற்றங்கரையில் இருந்து ரோடு இல்லாததால் இந்த நிலைமை இருக்கிறது. ஆகவே, ஆலத்தூர் பாலம்வரை ரோடு மேம்பாடு செய்ய வேண்டும்.

வடபாதிமங்கலம் சர்க்கரை ஆலையில் இருந்து வரும் கழிவு நீர் குடமுருட்டி ஆற்றில் வந்து கலந்து இருப்பதால் கிட்டத்தட்ட 50 கிராமங்களில் காலரா நோய் பரவி, நூற்றுக்கணக்கான பேர் சாவை எதிர்நோக்குகிற அபாயம் இருக்கிறது. இந்த சுற்றுப் புறச் சூழலைக் கட்டுப்படுத்துவதற்காக ஒரு அமைச்சரை கூட இந்த அரசாங்கம் போட்டு இருக்கிறது. ஆகவே, உடனடி யாக அந்த சர்க்கரை ஆலையில் இருந்து வெளிவந்து அந்த ஆற்றில் கலக்கும் கழிவு நீரைத் தடுக்காவிட்டால் பல்லாயிரக் கணக்கான கால்நடைகள் பாதிக்கப்படும் சூழ்நிலை இருக்கிறது. நான் நேரடியாக அந்த நிலைமைகளைக் கண்டுவந்து இதை இங்கே சொல்கிறேன். ஆகவே, மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் இதற்கு தகுந்த நடவடிக்கையை விரைவில் எடுத்து அந்த காலரா நோய் அங்கே பரவாமல் இருப்பதற்கும் நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

[திரு. பொ. உத்திராபதி] [1984 மார்ச் 12

வேதாரண்யம் பகுதியில் 200 கோடி ரூபாய் செலவில் ரசாயன உப்புத்தொழிற்சாலை தொடங்கப்படும் என்று சொல்லப்பட்டது. ஆனால் பட்டுக்கோட்டை மரவாப்பட்டியில் அதை 5 ஏக்கர் நிலத்தில் அமைப்பது என்பதற்காக அமைச்சர் அவர்கள் கூட வந்து அடிக்கல் நாட்டிவிட்டுச் சென்றார்கள். ஆனால் பம்பாயில் இருந்து வந்த ஒரு நிபுணர் அதை திருத்துறைப்பூண்டியில் அமைப்பது பொருத்தமாக இருக்கும் என்று சொல்லிச் சென்று இருக்கிறார்கள். எங்கள் மாவட்டத்தைச் சேர்ந்த 5 அமைச்சர்கள் இருக்கிறார்கள், சுயநலம்கருதிகூட எங்கள் மாவட்டத்திற்கு ஆலை வரவேண்டும் என்பதற்காக யாரும் நடவடிக்கை எடுக்கவில்லை. அந்தத் தொழிற்சாலையை அங்கே விரைவில் கொண்டு வர முயற்சிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். தஞ்சை மாவட்டம் விவசாயத்தை நம்பியிருக்கும் மாவட்டம். ஆகவே, அங்கே ஒரு தொழிற்சாலை வந்தால் நல்லது. ஆகவே, அந்த ரசாயனத் தொழிற்சாலையை தஞ்சை மாவட்டத்தில் ஏற்படுத்த அரசு முன்வரவேண்டும என்று கேட்டுக்கொள்கிறேன்.

நிலமற்ற உழவுத் தொழிலாளர்கள் சொற்ப நிலமுள்ள உழவர்கள் சிறு உழவர்கள் ஆகியோருக்கு தொழில் செய்யும்போது ஏற்படும் உயிர் இழப்புக்கு குடும்ப நிலைக்கு ஏற்ப குறைந்தது ரூ. 5,000 முதல் 10,000 வரை உதவி அளிக்கப்படும் என்று சொல்லி, அதற்காக முதலமைச்சர் நிவாரண நிதியில் இருந்து உதவி அளிக்கப்படும் என்று சொல்லப்பட்டுள்ளது. இதை வரவேற்கிறோம். இருந்தாலும் இதற்காக பட்ஜெட்டில் நிதி ஒதுக்கீடு செய்து கொண்டு வந்தால்தான் அது சரியாக நடக்கும். முதலமைச்சர் நிதியில் இருந்து கொடுத்தால் எவ்வளவு நாளைக்கு இந்தத் திட்டம் நிலைக்கும் என்று சொல்ல முடியாது. விவசாயத் தொழிலாளிகளுக்கு தனியாக லேபர் கோர்ட்டுக்கும் போக வழி ஏற்படுத்த வேண்டும்.

கரும்பு விவசாயிகள் 5,000 பேர் ஊர்வலமாக வந்தார்கள். வருவாய்த்துறை அமைச்சரிடத்தில் மனு கொடுத்துள்ளார்கள். அவர்கள் டன் ஒன்றுக்கு ரூ. 300 கேட்டார்கள். தற்போது கொடுக்கும் விலைபோதாது. ஆகவே, அதை உயர்த்திக் கொடுக்க அரசு முன்வரவேண்டும்.

மன்னார்குடியில் இருந்த எஸ்.டி.எம். கோர்ட்டை பட்டுக்கோட்டைக்கு கொண்டுபோய்விட்டார்கள். மன்னார்குடியில் உள்ள ஏழை விவசாயிகள் இதனால் பட்டுக்கோட்டைக்குச் சென்று வரவேண்டிய துர்பாக்கிய நிலை ஏற்பட்டுள்ளது. திருத்துறைப்பூண்டியில் இருப்பவர்கள் நாகப்பட்டினத்திற்கு போக வேண்டியிருக்கிறது. ஆகவே, எஸ். ம. எம். கோர்ட்டை மன்னார்குடியில் அமைத்து, திருத்துறைப்பூண்டி மக்களுக்கும் வசதியாக இருக்கும்படி செய்து கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.



1984 மார்ச் 12] [திரு. பொ. உத்திராபதி]

தஞ்சை மாவட்டத்தில் உள்ள காட்டுத் தோட்டத்தில் உள்ள பண்ணையில் விவசாயக் கல்லூரி ஆரம்பிப்பதாகச் சொல்லப்பட்டது. அதைப்பற்றி டி. டி. சி. கூட்டத்தில் கூட சொல்லியிருக்கிறேன். அதற்கு தீர்மானம் கூட போடப்பட்டு இருக்கிறது. தஞ்சை மாவட்டம விவசாயிகள் மாவட்டம். ஆகவே, அந்தச் சமுதாயத்திற்கு வசதி வாய்ப்பு ஏற்படுத்தித் தருகிற வகையில் அந்த விவசாயக் கல்லூரியை விரைவில் அமைத்துத் தரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்றைக்கு தஞ்சை மாவட்டத்தின் பொருளாதாரம் மிகவும் சீரழிந்து விட்டது. தேங்காய் எண்ணெய் விலை கிலோ 36 ரூபாய், தேங்காய் விலை 5 ரூபாய். மிளகாய் அழிந்து விட்டது. அதன் விலையும் ஏறிப்போய்விட்டது.

(பிற்பகல் 1-00)

நெல்லுக்குக்கூட மத்திய சர்க்கார் விலையைக் கூட்டிக் கொடுக்கத் தயாராக இல்லை. மாநில சர்க்கார் கூடுதல் கொடுத்தால் தடுக்கிறார்கள். ஆக, தமிழ்நாட்டுக்குக் கொடுக்க வேண்டிய நிதியில் அல்லது தமிழ்நாட்டுக்குக் கிடைக்கவேண்டிய பல்வேறு நடவடிக்கைகளில் மத்திய சர்க்கார் பாரபட்சமாக இருக்கிறது. (மணியடிக்கப்பெற்றது)

மொத்தத்தில் இந்த பட்ஜெட்டில் விலைவாசியைக் குறைப்பதற்கு ஒரு திட்டமும் இல்லை; வேலையில்லாத் திண்டாட்டத்தை அகற்றுவதற்கு எந்தவிதமான திட்டமும் இல்லை; வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு 2000 ரூபாய் வீதம் நஷ்டஈடு வழங்க நிதி ஒதுக்கப்படவில்லை. இப்படிப்பட்ட பல்வேறு பிரச்சனைகளினால் நாம் எந்த மக்களுக்கு வாக்குறுதிகளைக் கொடுத்து வாக்குகளைப் பெற்றோமோ, அந்த மக்களை இது வாழவைக்காது. அந்த மக்களை வாழவைக்க உரிய முறையிலே மத்திய அரசை வலியுறுத்தி நாம் பல திட்டங்களை நிறைவேற்ற முயற்சி எடுக்க வேண்டும்; வசதிகளைப் பெற முயற்சிக்க வேண்டும். இந்த பட்ஜெட்டிலே கூறப்பட்டிருக்கிற அம்சங்களைப் பார்க்கிறபோது இதை நிதி அமைச்சர் பட்ஜெட்டாக கருத முடியாது. இது தமிழக முதலமைச்சர் சத்துணவுப் பட்ஜெட்டாக இருக்கிறது. இந்த பட்ஜெட் தமிழகத்தின் பொருளாதாரத்தை சீர்திருத்தும் பட்ஜெட்டாக இல்லை. நிதி அமைச்சர் இதை எல்லாம் சீர் தூக்கிப் பார்த்து, தமிழ்நாட்டின் வளத்தைப் பெருக்கவும், பொருளாதாரத்தை வளர்க்கவும், தொழிற்சாலைகளை அமைக்கவும், விவசாய உற்பத்தியைப் பெருக்கவும் முயற்சி எடுக்க வேண்டும்; மத்திய சர்க்காரிலிருந்து பெறவேண்டியதை உரிய காலத்திலே பெற நடவடிக்கை எடுக்க வேண்டும்.

[திரு. பொ. உத்திராபதி] [1984 மார்ச் 12

அண்ணா தி.மு.க.வும் கம்யூனிஸ்ட் கட்சியும் இணைந்த
கூட்டணியில் 1980 ஆம் ஆண்டு நாம் என்ன சொன்னோம்?
எதேச்சாதிகார ஆட்சியின் போக்கால் விலைவாசி ஏறிவிட்டது;
தமிழகத்தை அவர்கள் புறக்கணித்துவிட்டார்கள் விலைவாசியைக்
குறைக்க, ஏற்றத்தாழ்வைப் போக்க தமிழக மக்களே எங்களுக்கு
வாக்களியுங்கள்'' என்று கேட்டோம். காங்கிரஸ் கட்சியை
வெற்றிபெறச் செய்யாத மக்கள் 1980-ல் அண்ணா தி.மு.க
கம்யூனிஸ்ட் கட்சி கூட்டணிக்கு நம்பிக்கையோடு வாக்களித்தார்
கள். எந்த மக்கள் நமக்கு நம்பிக்கையோடு வாக்களித்தார்களோ
அந்த மக்களுக்கு நீங்கள் பெருத்த துரோகம் செய்திருக்கிறீர்கள்
எனவே இந்த பட்ஜெட்டை கண்டித்து அமர்கிறேன். வணக்கம்.

திரு. எம். எஸ். மாணிக்கம் : மாண்புமிகு மாற்றுத் தலை
ரவர்களே, மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களுடைய
அரசு சார்பிலே மாண்புமிகு டாக்டர் நாவலர் அவர்கள் இங்கே
வைத்திருக்கிற நிதிநிலை அறிக்கைமீது பேசுகின்ற வாய்ப்பினை
அளித்தமைக்காக நன்றிதெரிவித்து, என்னுடைய ஒருசில கருத்
துக்களை கூற விரும்புகிறேன்.

இங்கே இந்த ஆண்டு டாக்டர் நாவலர் அவர்கள் ஒரு பற்றாக்
குறை பட்ஜெட்டை சமர்ப்பித்திருக்கிறார்கள். இருக்கக்கூடிய
சூழ்நிலையை அனுசரித்து, அதை சரிகட்ட இருக்கிற நிதியை
வைத்து, எது அவசியமோ தேவையோ அதற்கு ஒதுக்கீடு
செய்து, மக்களுக்குத் தொண்டாற்றக் கூடிய பணியில் இந்த
வரவு-செலவுத் திட்டத்தை அவர்கள் கொண்டுவந்திருக்கிறார்கள்.
இன்னும் சொல்லப்போனால் எப்போதுமே ஒரு 'சர்ப்பிளஸ்
பட்ஜெட்டை'க் கொண்டு வந்து, அரசாங்கம் திட்டங்களை,
நிறைவேற்றுகிறது என்றால் கூட அதில் பெருமை இல்லை
என்றுதான் சொல்ல வேண்டும். வளர்ந்து வருகின்ற சமுதாயத்
திலே கொஞ்சம் பற்றாக்குறையோடு கூடிய பட்ஜெட் வருவது
புதிய தொழிற்சாலைகளை அமைப்பதில், பொருளாதாரத்
திட்டங்களை நிறைவேற்றி வைப்பதில் நல்லதொரு சூழ்நிலை
உருவாக்கும் என்று பொருளாதார நிபுனர்கள் கருதுகிறார்கள்.
அந்த அளவுக்கு இல்லை என்றாலும் கடந்த 2, 3 ஆண்டு கால
வறட்சியால் இந்த நாடு பெரிதும் பாதிக்கப்பட்டிருக்கிறது.
இந்த ஆண்டு காலம் தவறிய பெருமழையாலும் பாதிப்பு ஏற்
பட்டிருக்கிறது. இப்படிப்பட்ட ஒரு சூழ்நிலையில் இருக்கக்
கூடிய ஆதாரங்களை வைத்துக்கொண்டு நாட்டு மக்களுக்கு
அளித்த உறுதிமொழியை நிறைவேற்றுகின்ற வகையிலும் அதைத்
தொடர்ந்து நாட்டு மக்கள் நலனைப் பேணுகின்ற வகையிலும்
இந்த நிதிநிலை அறிக்கை அளிக்கப்பட்டிருக்கிறது.

அது மட்டுமல்ல, இப்போது பற்றாக்குறைபட்ஜெட் இருக்கிறது
என்றாலும் இங்கே புதிய வரியாக 57 கோடி ரூபாய்க்கு போட்டி
ருக்கிறார்கள். அந்த வரியும் ஏழை எளிய மக்களை பாதிக்கக்
கூடிய வகையில் இல்லை என்றுதான் கூறவேண்டும். இந்த



1984 மார்ச் 12] [திரு. எம். எஸ். மாணிக்கம்]

வரியின் மூலம் சாதாரண மக்கள் பாதிக்கப்படாமல் இந்த
வரியினுடைய சுமையை அவர்கள் அறியாமல், அவர்களுக்கு
தொல்லைகள் தராமல் வரிவிதித்து அதன் மூலம் புதிய நிதி
ஆதாரத்தைத் திரட்டுவதற்கு அரசு முயற்சி செய்திருக்கிறது.
அந்தவகையில் இந்தத் திட்டம் தொடர்ந்து நீடிக்கவும் அரசாங்
கம் முடிவெடுத்திருக்கிறது; தொடர்ந்து இருக்கிற திட்டங்களை
விரிவாக்கவும் நடவடிக்கைகளை இந்த அரசு எடுத்திருக்கிறது.

கடந்த 2, 3 ஆண்டுகளில் தன்னிறைவுத் திட்டத்திற்கு 250
கோடி ரூபாயை தமிழக அரசு செலவிட்டிருக்கிறது என்றால்
இந்த நாட்டிலே வரியாக பெற்ற பணம் அந்தக்கிராம மக்களுக்
கேப் போய்ச் சேர புரட்சித் தலைவர் அவர்கள் நடவடிக்கை
எடுத்து, அந்தத் கிராம மக்களுடைய மேம்பாட்டிற்கு அந்தப்
பணத்தைச் செலவிட்டிருக்கிறார்கள்.

அது மட்டுமல்ல. சுதந்திரம் அடைந்து 35 ஆண்டுகளுக்கு
மேலாகியும் இதுவரையில் இந்தத் திட்டங்கள் எல்லாம் நிறை
வேறாமல் இருக்கின்றன என்று மாண்புமிகு உறுப்பினர்கள்
எடுத்துச் சொன்னார்கள். இப்படிப்பட்ட ஒரு நிலையை
உருவாக்கியது மாண்புமிகு புரட்சித்தலைவரா, அண்ணா திராவிட
முன்னேற்றக் கழக அரசா என்பதை நீங்கள் எண்ணிப்பார்க்க
வேண்டும். சுதந்திரம் அடைந்தபொழுது இருந்த நிலைமையை
எண்ணிப்பார்க்கவேண்டும். அந்த அளவிற்கு சமூகநலத் திட்டங்
கள் நிறைவேற்றப்பட்டு, எவ்வளவு கோடி ரூபாய்கள் செல
வழிக்கப்பட்டன என்பதை எண்ணிப்பார்க்கவேண்டும்.

அப்போது காவல்துறைக்காகவும், மற்றும் நிர்வாக செலவு
களுக்காகவும் செலவு செய்து ஒரு சில தொழிற்சாலைகளை
உருவாக்கினார்களே தவிர, ஏழை எளிய மக்களுடைய வாழ்க்கைத்
தரத்தை உயர்த்துவதற்காகவும், வாடிக்கொண்டிருக்கின்ற
விவசாயிகளுக்காகவும், பட்டினியால் வாடிக் கொண்டிருக்கிற
பாட்டாளிகளின் துயர்களையும், துன்பங்களையும் போக்கி
இருக்கிறார்களா என்றால் இல்லை. அவர்களுடைய துயரத்
தைப் போக்குவதற்கு எதுவுமே செய்யாமல், சீர்திருத்தமே
செய்யாமல், வயலை மட்டுமே நம்பி வாழ்ந்து கொண்டிருக்கிற
தொழிலாளர்களுக்காக, இன்றைய தினம் எந்த அளவிற்கு
சமூக நலத்திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டு நிறைவேற்றப்
பட்டிருக்கின்றன என்பதை எண்ணிப் பார்க்கவேண்டும். எந்த
அளவிற்கு மக்களுக்கு உதவி செய்கிறார்கள் என்று சொன்னால்
பெண்களுக்காகவும், விதவைகளுக்காகவும், படிக்காதவர்
களுக்காகவும், படித்துவிட்டு வேலையில்லாதவர்களுக்காகவும்,
எந்த அளவிற்கு சமூகநலத்திட்டங்கள் கடந்த ஆட்சிக் காலத்தில்
ஆரம்பிக்கப்பட்டன, அல்லது துவங்கப்பட்டன என்பதையும்
அவைகள் எவ்வாறு இருந்தன என்பதையும் எண்ணிப்பார்க்க
வேண்டும். மாண்புமிகு புரட்சித் தலைவர் ஆட்சியில் பெண்

களுக்காகவும், விதவைகளுக்காகவும், ஏழை எளியவர்களுக்காக
வும் விவசாயப் பாட்டாளிகளுக்காகவும் பல்வேறு சமூகநலத்
திட்டங்களை நிறைவேற்றி வருகிறார்கள்.

அதிலே இங்கே சத்துணவுத்திட்டத்தைப் பற்றி இந்த
பட்ஜெட்டிலே சொன்னார்கள். ஒரு வேளை உணவுக்கு
கூட வழி இல்லாத ஏழைஎளிய மக்கள், ஒரு வேளை சோற்றைக்
கூட பார்க்காத மக்கள், அவர்களுடைய குழந்தைகள் வாரத்
திற்கு 7 நாட்களுக்கு அரிசி சோற்றை உண்ணக்கூடிய சூழ்
நிலையை உருவாக்கியிருக்கிறார்கள் நம்முடைய புரட்சித்
தலைவர் அவர்கள். இப்படி பிஞ்சு உள்ளம் உள்ள குழந்தை
களின் மேல் எந்த அளவிற்கு அக்கறை கொண்டிருக்கிறார்கள்
என்பதை எடுத்துக்காட்டுகிறது. இந்த குழந்தைகள் தான்
நாளைய எதிர்காலத்தில், வரக்கூடிய அறிஞர்களாக, விஞ்ஞானி
களாக உருவாகிக்கொண்டிருக்கிறார்கள்.

அதுமட்டுமல்ல, பணக்கர்ரர்கள் மட்டுமே நகரங்களிலே
வசதியாக வாழக்கூடியவர்களாக இருக்கிறார்கள். ஆனால்
கிராமத்திலே இருக்கிற மக்கள் வேலைக்குச் செல்லும்போது
தங்களுடைய குழந்தைகளை கவனிக்கக் கூடிய ஒரு வழி இல்லா
மல், வேலைக்கும் செல்ல முடியாமல் இருந்த நிலைமையை
மாற்றி, இன்றைக்கு தாய்மார்கள் வேலைக்குச் செல்லும்போது
தங்களுடைய குழந்தைகளை பாதுகாப்பாக விட்டு விட்டுச்
சென்று, அந்தப் பாதுகாப்பை நம்பி மேலும் இன்னொருவர்
வேலை செய்கின்ற ஒரு சூழ்நிலையை உருவாக்கித் தந்து, அதன்
மூலம் வருவாயைப் பெறக் கூடிய சூழ்நிலையை உருவாக்கித்
தந்திருக்கிறார்கள் என்பதை எண்ணிப் பார்க்கவேண்டுமென்று
கேட்டுக்கொள்கிறேன். இங்கே எனக்கு முன்னால் பேசிய
மாண்புமிகு உறுப்பினர் சொன்னார்கள். அவர்களிடம் ஒன்றை
கேட்டுக்கொள்கிறேன். தஞ்சை மாவட்டத்தை எடுத்துக்கொண்
டால் அன்றைய நிலைமையில் விவசாயத் தொழிலாளர்கள்
எத்தனை முறை காங்கிரஸ் ஆட்சிக் காலத்தில் போராட்டம்
நடத்தியிருக்கிறார்கள்? கம்யூனிஸ்டு கட்சி எத்தனை முறை போ
ராட்டம் நடத்தியிருக்கிறது? விவசாயத்தொழிலாளர்கள் உரிமை
களைப் பெறக் கூடிய நிலைமை இருந்ததா ? முதலாளிகளிடத்
திலே அடிபட்டுக்கொண்டு, அவதிபட்டுக்கொண்டிருக்கிற
நிலைமை இன்று இருக்கிறதா? கம்யூனிஸ்டு கட்சியினாலே கூட
அங்கே ஏழை எளிய விவசாயத்தொழிலாளர்கள் எந்தப் பலனை
யும் பெற முடியாத நிலைமை இருந்தது. ஏனென்றால், கம்
யூனிஸ்டு கட்சி தான் அதைச் செய்யமுடியும் என்ற ஒரு நிலைமை
இருந்தது. ஆனால் புரட்சித் தலைவர் அவர்கள் ஆட்சிக்கு
வந்த பிறகு; போராட்டத்தின் மூலம் தங்களுக்கு சம்பள
உயர்வு கிடைக்கும் என்ற நிலைமையை மாற்றி, எந்தவிதமான
போராட்டத்திற்கும் இடம் இல்லாமல், அவர்களுக்கு பாது
காப்பை அளித்து, வேண்டிய அளவு கூலி உயர்வை அளித்திருக்





கிறார்கள். அந்த அளவிற்கு அவர்கள் இன்று வாழ்ந்துகொண்டிருக்கிறார்கள். எனக்கு முன்னால் பேசிய உத்திராபதி வேட்டி, சேலையைப்பற்றி குறிப்பிட்டார்கள். இதன்மூலம் ஏழை எளியவர்கள் பஞ்சம் தீர்ந்துவிடுமா என்று சொன்னார்கள். பஞ்சம் தீர்ந்துவிடும் என்று சொல்லவில்லை. ஆனால் அவர்களுக்கு வேட்டி, சேலை வழங்கப்பட்டது என்று சொன்னால், அவர்கள் கேட்காமலே புரட்சித் தலைவர் அவர்கள் இந்த ஏழை எளியவர்களுக்கு ஆதரவு காட்டி, அவர்களுக்கு உதவி அளித்திருக்கிறார்கள். அதுதான் உங்களுக்கு ஒரு குறையாக இருக்கிறது. நாங்கள் வாங்கிக் கொடுத்தோம், எங்களுடைய கட்சியிலே சேருங்கள் என்ற நிலை இல்லாது, அவர்களுடைய கோரிக்கைகளை கேட்காமலேயே அளித்திருக்கிறார்கள். ஏழை எளியவர்களுக்கு உதவி செய்திருக்கிறார்கள் என்பதிலே உங்களுக்கு கோபமாக இருக்கிறது. உங்கள் கட்சிப்பிடியிலிருந்து விலகி விட்டு, அவர்கள் எங்கள் இயக்கத்தில் வந்து சேர்ந்துகொண்டிருக்கிறார்கள். அதைப்பற்றி உங்களுக்குக் கோபமாக இருக்கிறது அதை நீங்கள் பொறுத்துக்கொள்ளவேண்டும். புரட்சித் தலைவர் ஆட்சியிலே ஏழை எளிய பாட்டாளி மக்கள், விவசாய மக்கள் பலனைப் பெற்றுக்கொண்டிருக்கிறார்கள். அதனால் தான் உங்களுக்கு வேதனையாக இருக்கிறது.

இன்னும் சொல்லப்போனால் தஞ்சை மாவட்டத்திலே வெள்ளம் வந்ததற்குக் காரணம், இந்த ஆட்சியா என்பதை நீங்கள் எண்ணிப்பார்க்கவேண்டும். ஆற்று ஓரங்களில் பள்ளமான இடங்களிலே வீடுகளைக் கட்டிக்கொண்டிருக்கிறார்கள். வெள்ளத்தின் காரணமாக அவர்களை வெளியேற்றப் போராட்டம் நடக்கிறது.

(பிற்பகல் 1.10)

இன்னும் சொல்லப் போனால், கடந்த 7, 8 ஆண்டுகளுக்கு முன்னாலே 1974-லே 7 லட்சம் ரூபாய் செலவிட்டு ஒரு வடிகால் வெட்டுவதற்கு முத்துப்பேட்டைக்குப் பக்கத்திலே ஒரு திட்டம் நிறைவேற்றினார்கள். ஆனால் அந்தத் திட்டத்தை நிறைவேற்றுவதற்கு அரசால் முடியவில்லை. ஏன் என்று சொன்னால், ஐந்தே 5 பேர்கள் அங்கே ஆக்கிரமிப்பு செய்து கொண்டு அவர்கள் ஆக்கிரமிப்பு செய்து கொண்டது மட்டுமல்லாமல், அரசாங்கத்தினுடைய புறம்போக்கு நிலத்திலே கூட ஆக்கிரமிப்பு செய்து கொண்டு அந்த இடத்தைவிட்டு அகல மறுத்துவிட்டார்கள், அவர்களை அகற்ற வேண்டும் என்று சொன்னபோது, அங்கே ஒரு கட்சியிலே சேர்ந்து கொண்டு அதன் மூலமாக அந்தக் கட்சியினுடைய ஆதரவைப் பெற்று அவர்கள் வெளியேற மறுத்தார்கள். அதனாலே 7 லட்சம் ரூபாய் வரையிலே திட்டமிட்டுச் செய்யப்பட்ட அந்த திட்டத்திற்கு இன்று 27 லட்ச ரூபாய் செலவு செய்தாலும் அந்த வடிகால் வெட்டப்படாமல் இருந்துகொண்டிருக்கிறது. இன்னும், 3, 4 லட்சம் ரூபாய் செலவு செய்து.

அந்தக் குடிசைகளை அப்புறப்படுத்த வேண்டும் என்று சொன்னால் - இன்றைக்கு அங்கே 40 குடிசைகள் இருக்கின்றன - அவர்களுக்கு மாற்று இடங்களைக் கொடுத்தால் கூட அவர்கள் போகக் கூடாது என்று சொன்னார்கள். இப்போது அந்தக் கட்சியினரே நீங்கள் செய்து கொண்டிருப்பது தவறு, அரசாங்கம் கொடுக்கக் கூடிய மாற்று இடத்திற்கு போங்கள் என்று சொன்னவுடன் அவர்கள் வேறு ஒரு கட்சிக்குப் போய்விட்டார்கள். இப்படி இருக்கக்கூடிய நிலைமையிலே இங்கே நல்ல திட்டங்களை நிறைவேற்றுவதற்கு நாம் பொறுப்புள்ளவர்களாக இருக்கக்கூடியவர்கள், இந்த திட்டம் - அரசாங்கத்தினுடைய திட்டம் - நிறைவேற்றுவதற்கு உறுதுணையாக இருக்க வேண்டும். நாம் உறுதுணையாக இருந்து இருந்தால் இன்றைக்கு 27 லட்ச ரூபாய் செலவிட வேண்டிய நிலைமை வந்திருக்காது. இன்று இன்னும், 3, 4 லட்ச ரூபாய் செலவு செய்தாலும் அந்த திட்டம் நிறைவேற்றப்படுமா என்று எண்ணிக் கொண்டு இருக்கக்கூடிய நிலைமை வராது. எனவே, அப்படிப்பட்ட நிலைமைகளில் ஈடுபட்டு, நாம் அதைத் தடுத்து விட்டால், நிச்சயமாக அரசாங்கம் போடக் கூடிய நல்ல திட்டங்களை நிறைவேற்ற முடியாது. இதற்கு நாம் கட்சி மாச்சரியங்களை விட்டு விட்டு, அரசின் திட்டம் நிறைவேற நடவடிக்கை எடுக்க வேண்டும். இன்றுகூட ஒரு வடிகால் வெட்டுவதற்கு நடவடிக்கை எடுக்கிறபோது அங்கே இருக்கக்கூடிய கம்யூனிஸ்ட் கட்சியில் உள்ள சில பேர்கள் அந்த திட்டம் நிறைவேறக் கூடாது என்று ஒரு ஊரிலே இருப்பவர்கள் சொல்கிறார்கள். இப்படிப்பட்ட நிலைமை இருந்தால் எந்த அளவிற்கு நாம் திட்டங்களை நிறைவேற்ற முடியும் என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். ஆகவேதான், அப்படிப்பட்ட நிலைமை இல்லாமல், புரட்சித் தலைவர் ஏழை எளியவர்களுக்காக போடப்படும், தொழிலாளர்களுக்காக கொண்டு வரப்படும் நல்ல திட்டங்களை நிறைவேற்ற உறுதுணையாக இருக்க வேண்டும்.

அதுமட்டுமல்லாமல், மாண்புமிகு திரு. உத்திராபதி அவர்கள் இங்கே ஒரு கருத்தைக் குறிப்பிட்டார்கள். இங்கே மறவாக் காட்டிலே ஒரு உப்புத் தொழிற்சாலை ஆரம்பிக்கப்பட்டது எந்த அளவிலே இருக்கிறது என்று சொன்னார்கள். மாண்புமிகு உறுப்பினர் பொன்னுரங்கம் அவர்கள் அது புதுக்கோட்டை ஜில்லாவிலே இருக்கிறது என்று சொன்னார்கள். அவர்கள் தவறான தகவல்களை சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். 'ஏன் என்றால், அவர்கள் எது உண்மை என்று அறிந்து பேசுவதில்லை. திருத்துறைப்பூண்டிக்குப் பக்கத்திலே இருக்கின்ற மறவாக்காட்டை, புதுக்கோட்டை ஜில்லாவிலே இருப்பதாகச் சொல்லுகிறார்கள். இப்படி பல தவறான தகவல்களை இந்தச் சபைக்கு அவர்கள் தருகிறார்கள் என்று நான் கருதுகிறேன். எனவே, அப்படி மறவாக்காட்டிலே 5 ஆயிரம் ஏக்கர் நிலத்தில் உப்பளத் தொழிற்சாலை ஆரம்பிப்பதற்காக அரசு நடவடிக்கை எடுத்து இருக்கிறது என்று சொன்னால் இன்று பல வெளிச் சக்திகள் அதைத் தடுக்க முயற்சிகள் எடுத்துக் கொண்டிருக்கின்றன. ஏன் என்று சொன்





னால் இன்று குஜராத் மாநிலத்திலேதான் உப்புத் தொழிற்சாலை சிறந்த முறையிலே இயங்கிக் கொண்டிருக்கிறது. எனவே, குஜராத்திலே இருக்கக்கூடிய உப்புத் தொழிற்சாலைக்குப் போட்டியாக இங்கே தஞ்சையிலே உப்பு உற்பத்தி அதிகமாகிவிடக் கூடாது என்று சில வட நாட்டுக்காரர்கள், இங்கே உப்பு உற்பத்திச் செய்தால், இயற்கை சூழ்நிலை பாதிக்கப்படும் என்று சொல்லியிருக்கிறார்கள். அதையும் மீறி புரட்சித் தலைவர் அவர்கள், தமிழ்நாட்டிலே, தஞ்சையிலே ஒரு தொழிற்சாலை துவக்க வேண்டும் என்று மறவாக்காட்டிலே அதை ஆரம்பித்திருக்கிறார்கள். அது ஆரம்பிக்கப்பட்டவுடனேயே ஒரு தொழிற்சாலையில் லாபம் வந்துவிடும் என்று எண்ண முடியாது. எனவே அந்தத் தொழிற்சாலை, படிப்படியாக திருத்துறைப்பூண்டியிலே வேதாரண்யத்திலே வரவேண்டும் என்று புரட்சித் தலைவர் அவர்கள் விரும்பிக் கொண்டிருக்கிறார்கள்.

ஆனால் அதைத்தடுப்பதற்கு வட நாட்டிலே இருக்கக்கூடிய சில சுயநலச் சக்திகள் உறுதுணையாக இருக்கின்றன. அதையும் மீறி புரட்சித் தலைவர் அவர்கள் அந்தத் தொழிற்சாலையை உருவாக்க வேண்டும் என்று முனைந்திருக்கிறார்கள். ஏன் என்று சொன்னால் வனத்துறையின் மூலமாக தடுத்து நிறுத்த வேண்டும் என்று வடநாட்டிலே இருப்பவர்கள் சிலர் கருதுகிறார்கள். எனவே, அந்த முயற்சியைத் தடுத்து, புரட்சித் தலைவர் அவர்கள் உப்புத் தொழிற்சாலை உருவாக்கப்படும் என்று சொல்லியிருக்கிறார்கள். அதற்காக பல மாவட்டங்களைப் பிரிக்க வேண்டும் என்று சொல்லியிருக்கிறார்கள். இங்கே கடந்த 2 ஆண்டுகளுக்கு முன்னாலே இன்னும் பெரிய மாவட்டங்கள் சிலவற்றை சிறிய மாவட்டங்களாக பிரிக்க வேண்டும் என்றும் அதன் மூலமாக புதிய தொழிற்சாலைகளை உருவாக்க முடியும் என்றும், புதிய மாவட்டங்களை உருவாக்குகிறபோது, அதன் அடிப்படையிலேதான் நாம் பின்தங்கிய பகுதியாகப்பிரித்து தொழிற்சாலைகளைக்கொண்டு வரமுடியும் என்றும் சொன்னபோது, திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்தவர்கள் ஒன்றுகுறிப்பிட்டார்கள். கொட்டு தலையிலே வெண்ணெய் வைப்பது, சாமியார் பூனை வளர்ப்பது போல் பல புதிய மாவட்டங்களை உருவாக்க வேண்டுமா ? என்று 2 ஆண்டுகளுக்கு முன்னாலே கிண்டல் செய்தார்கள். ஆனால் புரட்சித் தலைவர் அவர்கள் புதிய தொழிற்சாலைகளை உருவாக்குவதற்காக, இன்று பல பெரிய மாவட்டங்களை பிரித்து அறிவித்திருக்கிறார்கள். அந்த வகையிலே புரட்சித் தலைவருடைய அரசு அளித்த இந்த பட்ஜெட்டை வரவேற்று அமைகிறேன்.

திரு. பொ. உத்திராபதி : மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, ஒரு பாயினட் ஆப் ஆர்டர். அவர் பேசியதற்கு ஒரு விளக்கம்.

[திரு. பொ. உத்திராபதி] [1984 மார்ச் 12

வேட்டி, புடவைகள் கொடுப்பதை நாங்கள் நிராகரிக்க வில்லை. வேண்டாம் என்று கூட அந்த திட்டத்தை நாங்கள் சொல்லவில்லை. இவையெல்லாம் அடிப்படைப் பிரச்சினைகளைத் தீர்க்காது. அடிப்படை பிரச்சினைகளுக்கு திட்டம் வேண்டும் என்று சொல்லியிருக்கிறோம். ஆகவே, கொடுத்ததினால்தான், கம்யூனிஸ்ட் கட்சிக்கு ஆள் சேர்ப்பதற்கு கிடைக்காமல் போய் விட்டதோ என்று சொல்லக் கூடாது. நீங்கள் எல்லோரும் தான் வெள்ள நிவாரணப் பணியின் போது பல கட்சி ஆட்களையும் சேர்த்துக் கொண்டு கொடியேற்ற முயற்சி பண்ணினீர்களே தவிர, நாங்கள் எந்தக் கட்சி ஆட்களையும் கூப்பிடவில்லை. இதை உறுப்பினர் அவர்களின் கவனத்திற்கு தெரிவித்துக் கொள்கிறேன்.

*திரு. க. பாரமலை : மாண்புமிகு பேரவையின் மாற்றுத் தலைவர் அவர்களே, 1984-85 ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையின் மீது நான் சார்ந்திருக்கின்ற தமிழ்நாடு காமராஜ் காங்கிரஸ் கட்சியின் சார்பில் பேசுவதற்கு வாய்ப்பளித்தமைக் காக நன்றியை முதலில் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த அறிக்கையிலே சில நல்ல அம்சங்கள் இருக்கின்றன. குறிப்பாக கொடைக்கானலில் அன்னை தெரசா பெயரில் பல் கலைக் கழகம் அமைந்தது. நிலமற்ற உழவுத் தொழிலாளர்கள் மற்றும் சிறிய விவசாயிகள், சொற்ப நிலம் உள்ள உழவர்கள் ஆகியோர்களுக்கு வெள்ளத்தால், வறட்சியால் ஏற்பட்ட இழப் பை ஈடுகட்ட அரசு முன்வந்திருப்பது. அவர்கள் தொழில் செய் யும்போது உயிரிழந்தால், அவர்களுக்கு 5 ஆயிரம் முதல் 10 ஆயி ரம் வரை நிதி உதவி அளிக்க அரசு முன் வந்திருப்பது. அது போல அரசுப் பணியாளர்களுக்கு ஒய்வு ஊதியப் பயன் என்ற வகையில் ஒய்வு ஊதியத்தை அரசின் பங்காக 5 ஆயிரம் ரூபாய் வழங்க முடிவு செய்திருப்பது. அரசு ஊழியர்களுக்கு 4-வது ஊதியக் கமிஷன், இந்த ஜூன் மாதம் 1 ஆம் தேதி முதல் செயல் படும் என்று அறிவித்திருப்பது இப்படிப்பட்ட நல்ல அம்சங்கள் இந்த நிதிநிலை அறிக்கையிலே இருக்கின்றன.

அதே நேரத்தில் வரிகள் ஏறக்குறைய 57 கோடி ரூபாய்க்கு போட்டிருக்கிறார்கள். இப்படி வரி விகிதத்தை மாற்றி அமைப் பதன் மூலமாக, அதாவது அப்படி வரிகள் போடப்படுவதால், அவை அவ்வளவாக வணிக சமுதாயத்தை பாதிக்காது, அவர் களுக்கு அதிகமான சுமை இருக்காது என்றும் இந்த அறிக்கையில் சொல்லப்பட்டிருக்கிறது. அது உண்மைதான் வணிகர்கள் இதனால் நிச்சயமாக பாதிக்கப்படப் போவதில்லை. அவர்கள் சாதாரண கிராமமக்கள், பொது மக்கள் மீதுதான் இந்தச் சுமையை சுமத்துவார்கள். ஆகவே, அந்த வரி விகிதத்தை மாற்றி கொடுப்பது குறித்து அரசு மறு பரிசீலனை செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.



1984 மார்ச் 12] [திரு க. பாரமலை]

இன்றைக்கு, மதுரை, இராமநாதபுரம் மாவட்டங்களில் ஏற்பட்ட பெரும் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டிருக்கிற பகுதி களில் மானாமதுரை பகுதிதான் மிக அதிகமாக பாதிக்கப்பட் டிருக்கிறது. கொடுமையான அந்தப் பாதிப்பால் இன்றைக்கு மக்கள் மிகவும் துயரத்திற்கு உள்ளாகியிருக்கிறார்கள். குறிப் பாக, திருப்புவனம் வட்டாரத்தில், பெத்தானேந்தல், மணல் மேடு, சடங்கி, வெங்கட்டி, கருங்குளம், கணக்கன்குடி, தேனி, மஞ்சள்குடி, மடப்புரம், மணலூர், கழுக்கோர்கடை, தட்டாங் குளம், பாப்பாகுடி, திருப்புவனம், வாடனேந்தல், பாப்பாங்குளம் கொத்தங்குளம், வன்னிக்கோட்டை, வாவியாரேந்தல், வில்லி யாரேந்தல், பனையனேந்தல், மழவராயனேந்தல். மார்நாடு ஆகிய 23 கிராமங்கள் மிகக் கடுமையாகப் பாதிக்கப்பட்டிருக் கின்றன.

அதைப் போலவே, மானாமதுரை பகுதியிலே அன்னியேந்தல் இடைக்காட்டூர், சிறுகுடி, முறியம்பாஞ்சான், வி. புதுச்குளம், வேலூர் ஆகிய கிராமங்கள் மிகவும் கடுமையாக பாதிக்கப்பட் பட்டிருக்கின்றன. பாதிக்கப்பட்ட அந்தப் பகுதியில் இருக்கிற மக்கள், சில இடங்களிலிருந்து வெளியேற முடியாமல் கூட அடை பட்டுப் போகிற சூழ்நிலை இருக்கிறது. நேற்று நான் சென்னை க்கு புறப்படுவதற்கு முன்னால் கூட, பெத்தானேந்தல், மணல் மேடு, போன்ற கிராமங்களில் இன்னும் போக்குவரத்து சரிசெய்ய முடியவில்லை அங்கு ஹெலிகாப்டர் மூலமாகத்தான் உணவு நேற்றும் கூட வழங்கப்பட்டது. அந்த அளவுக்கு மிகக் கடுமை யான பாதிப்பு இருக்கிறது.

இந்த திடீர் வெள்ளத்தின் காரணமாக, கொடிக்கால், கரும்பு வாழை, மிளகாய், நெல் போன்ற பயிர்கள் விளைகின்ற ஆயிரக் கணக்கான ஏக்கர் நிலங்கள் பாதிக்கப்பட்டு இருக்கிறது. கையில் இருக்கிற விதையை எல்லாம் போட்டு விவசாயம் செய்து விட்டு, அறுவடைக்கு தயாராக இருக்கின்ற ஆயிரக் கணக்கான ஏக்கர் நிலங்கள் பாதிக்கப்பட்டிருப்பதாலே, விவசாயிகள் பெரிதும் கவலைப் பட்டுக் கொண்டிருக்கிறார்கள். அப்படி பாதிக்கப் பட்ட விவசாயிகளுக்கு இழப்புக்கான நஷ்டஈட்டை விரைவாக வழங்குவதற்கான நடவடிக்கைகளில் இந்த அரசு ஈடுபட வேண் டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

இன்றைக்கு கண்மாயில் இருக்கிற தண்ணீரை வைத்துக் கொண்டு விவசாயம் செய்ய விவசாயிகளுக்கு விதை உரம் போன்ற பொருள்களை இனாமாக வழங்க அரசு முயற்சிக்க வேண்டும். இந்த வெள்ளத்தின் காரணமாக தன்னிறைவுத் திட்டத்தின் மூலமாகவும், தேசிய கிராமப்புற வேலை வாய்ப்பு திட்டத்தின் மூலமாகவும், செய்து முடிக்கப்பட்ட பல்வேறு வேலைகள் முற்றிலு மாக சீர் குலைந்து போயிருக்கின்றன. பல்வேறு ரோடுகள் உடைந்திருக்கின்றன, பாலங்கள் உடைந்திக்கின்றன, அல்லது தண்ணீரில் அடித்துச் செல்லப்பட்டிருக்கின்றன.

[திரு. க பாரமலை] [1984 மார்ச் 12

என்னுடைய பகுதியிலே ஏறக்குறைய 10, 15 ரோடுகள் இன்றைக்கு போக்குவரத்திற்கே லாயக்கில்லாத நிலைமையில் இருக்கின்றன.

என்னுடைய தொகுதியில், திருப்புவனத்திலிருந்து முக்குளம் செல்லும் சாலை, திருப்புவனத்திலிருந்து பூவந்தி செல்லும் சாலை திருப்புவனத்திலிருந்து ஏனாதி செல்லும் சாலை, திருப்பாஞ் சேத்தியிலிருந்து கட்டனூர் செல்லும் சாலை, முத்தனேந்தலிலிருந்து பெரியகோட்டை, திருப்பாச்சேத்தியிலிருந்து படமாத்தூர் சாலை, முத்தனேந்தலிலிருந்து கட்டிக்குளம் செல்லும் சாலை,

(பிற்பகல் 1-20)

சிலைமான்-கொந்தகை சாலை போன்ற பல்வேறு சாலைகள் போக்குவரத்திற்கு லாயக்கில்லாத அளவுக்கு அவைகளையெல்லாம் சீர்திருத்துவதற்குக் கோடிக்கணக்கான ரூபாய் செலவழிக்கக் கூடிய அளவுக்கு மோசமாகப் பாதிக்கப்பட்டிருக்கக் கூடிய நிலைமை ஏற்பட்டிருக்கிறது. வெள்ளத்தால் பாதிக்கப்பட்டச் செய்தியை அறிந்து முதலமைச்சர் அவர்கள், வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள், தலைமைச் செயலாளர், வருவாய் நிர்வாக ஆணையர் போன்றவர்கள் எல்லாம் அங்கே வந்திருந்து நிவாரணப் பணிகளையெல்லாம் கவனித்தது மட்டும் அல்லாமல் பாதிக்கப்பட்ட மக்களுக்கு ஆறுதல் சொன்னதற்காக நான் அந்தப் பகுதி மக்களின் சார்பாக நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அது மட்டுமல்லாமல் எதிர்பாராமல் ஏற்பட்ட பெரிய வெள்ளத்தால் மக்கள் பெரிய துயரத்திற்கு ஆளாகியிருந்தாலும் அரசாங்கம் எடுத்துக்கொண்ட சீரிய முயற்சியின் காரணமாக, எங்களுடைய மாவட்ட ஆட்சித் தலைவர் எடுத்துக் கொண்ட முன்னெச்சரிக்கை நடவடிக்கை காரணமாக உயிர்ச்சேதம் ஏதும் இல்லாமல் தடுக்கப்பட்டுவிட்டது. அதற்காக நான் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். கிட்டத்தட்ட 43 ஆயிரம் கன அடித் தண்ணீர் அணையிலிருந்து வெளியே வருகிறபோது தாழ்வான பகுதிகளிலே இருக்கின்ற வீடுகளிலிருந்து மக்களையெல்லாம் முன்னெச்சரிக்கையாக வெளியேற்றுவதற்கு முயற்சி எடுத்துக்கொண்டது மிகவும் பாராட்டுக்குரியது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதைப்போலவே இராமநாதபுரம் பெரிய கண்மாய் சர்க்கரை கோட்டை கண்மாயிலிருந்து தண்ணீரை வெளியேற்றி புதிய வெள்ளத்தின் காரணமாக உடைப்பு ஏற்படாமல் பாதுகாத்து இராமநாதபுரம் நகரம் அழிவிலிருந்து காப்பாற்றப்பட்டதற்காக அந்த மாவட்ட நிர்வாகத்தை குறிப்பாக மாவட்ட ஆட்சித் தலைவரைப் பராட்டித்தான் ஆக வேண்டும்.



1984 மார்ச் 12] [திரு. க. பாரமலை]

அதைப்போலவே பல்வேறு துறைகளைச் சேர்ந்த தலைமை பொறியாளர்கள் மற்றும் அதிகாரிகள் அங்கே முகாமிட்டு நிவாரண வேலை செய்து கொண்டிருக்கிறார்கள். இதைப்பொறுத்த வரையில் வெள்ளக்கட்டுப்பாடு என்ற முறையிலேயும் வெள்ளத் தடுப்பு என்ற முறையிலேயும் 2 வகையாகப் பிரித்து நிவாரண வேலைகளைச் செய்ய வேண்டும். குறிப்பாக, வெள்ளக் கட்டு பாடு என்ற வகையிலே புதிய அணை கட்டப்படும் என்று முதலமைச்சர் அவர்கள் அறிவித்திருப்பதைப் பாராட்டுகிறேன். ஆனால் அந்த அணை கட்டப்படுகிறபோது ஏற்கெனவே வைகை அணை கட்டியதன் காரணமாக பாதிக்கப்பட்டிருக்கின்ற இராம நாதபுரம் மாவட்டத்து மக்கள் மேலும் பாதிக்கப்படாமல் பார்த்துக்கொள்ளவேண்டியது அரசாங்கத்தின் கடமை என்று கருதுகிறேன்.

வடிகால் அமைப்புகள் சீராக அமைக்கப்பட வேண்டும்.
ஏனென்றால், வெள்ளம் ஓடும் காலங்களில் எந்தப் பகுதிக்குத்
தண்ணீர் எடுத்துக் கொண்டு போனாலும் கடைசியாக வைகையி
லேயே வந்து சேர்ந்து அதன் கடைசிப் பகுதிதான் கடுமையான
பாதிப்புக்கு ஆளாகி வருகிறது. அது வழக்கமாக இருந்து
கொண்டு வருகிறது. ஆகவே, வடிமுனைகளை பல்வேறு திசை
களிலே திருப்பிவிடுவதற்குரிய மார்க்கங்களை சீராகச் செய்ய
வேண்டும். அந்த வகையிலே எங்களுடைய பகுதியிலே உள்ள
நாட்டாண்டி ஓடை, சீமைக் கால்வாய் ஆகியவற்றை அமைத்து
விட்டால் அந்தத் தண்ணீர் மீண்டும் வைகைக்கு வராமல் பல்
வேறு பகுதிகளுக்கு எடுத்துச் செல்கிற வாய்ப்பு ஏற்படும் என்ப
தால் அதைச் செய்ய வேண்டுமென்று நான் பணிவன்போடு
கேட்டுக் கொள்கிறேன்.

(மாண்புமிகு பேரவைத் துணைத்தலைவர் தலைமை)

அதைப்போலவே கண்மாய்களை ஆழப்படுத்துதல், கால்வா
களை சீரமைத்தல், கலுங்களை ( surplus weir ) என்று சொல்
கிறார்களே அவற்றை சீராக அனுப்புவதன் மூலமாக கண்மாய்
களின் கொள்ளளவை அதிகப் படுத்துவதன் மூலமாக இந்த
மாதிரி வேகமாக ஏற்படுகிற வெள்ளத்திலிருந்து மக்களைப் பாது
காப்பதற்கு பெருமளவு உதவியாக இருக்கும் என்று நினைக்
கிறேன்.

வைகையின் இருபுறங்களிலும் தாழ்வான பகுதிகளிலே தண்
ணீர் உடைப்பு ஏற்பட்டு மக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டு இருக்கி
றார்கள். வைகையிலே எந்த எந்த இடங்களிலே நேஷனல்
ஹைவேஸ் ரோடுக்கு சமமான நிலையில் வைகை செல்கிறதோ
அந்த இடங்களில் எல்லாம் கல்லால் ஆன தடுப்புச் சுவர்களைக்
கட்ட வேண்டும். குறிப்பாக வைகைக்கு தென் கரையிலே இருக்
கிற லாடனேந்தல் பகுதியிலே ரீடெய்னிங் வால் தடுப்புச் சுவர்
கட்டுவதற்கு அரசு முயற்சி செய்ய வேண்டும் அதைப்போலவே

வைகையின் வட கரையில் உள்ள சடங்கிக்கு அருகில்—ஏற்கெனவே உடைப்பின் காரணமாக பல ஆயிரக் கணக்கான ஏக்கர் நிலங்கள் பாதிக்கப்பட்டிருக்கின்றன. கடந்த 3 வெள்ளங்களில் அதே இடத்தில் உடைப்பு ஏற்பட்டுக்கொண்டிருக்கிறது —அந்த இடத்திலும் கல்லால் ஆன நிலையான தடுப்புச் சுவரை அங்கே கட்டவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதைப்போலவே ஆறு ஓடை அல்லது சிறிய கால்வாய் பக்கத்திலே இருக்கிற கிராமங்களிலிருந்து திடீரென வெள்ளம் ஏற்படுகிறபோது மக்கள் வெளியே செல்வதற்குரிய பாலங்கள் அமைப்பது அவசியம் என்று கருதுகிறேன். வேலூர் என்ற இடத்திலே ஒரு தரைப்பாலம் கட்டப்படுகிறது. பல இலட்சக் கணக்கான ரூபாய் அதற்காக செலவழிக்கப்படுகிறது. ஆனால், திடீரென்று ஏற்பட்ட வெள்ளத்தின்போது அந்தப் பாலத்தைப் பயன்படுத்த இயலாமல் போய்விட்டது. நான் அரசாங்கத்தைக் கேட்டுக்கொள்கிறேன், தரைப்பாலம் இனிமேல் கட்டவேண்டாம், கட்டுவதற்கு நிதி வசதி இருந்தால் மேம்பாலம் கட்ட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அதைப்போலவே தட்டான் குளம் என்ற கிராமத்திலே உள்ள மக்கள் வைகை ஆற்றாலும், கால்வாயினாலும் பாதிக்கப்பட்டு வெளியேற முடியாமல் 48 மணி நேரம் இருந்திருக்கிறார்கள். அவர்களுக்கு ஆகாய விமானம் மூலமாகத்தான் உணவு போட வேண்டியிருந்தது. ஆகவே தட்டான் குளத்திலும் பாப்பான் குளம் அருகிலுள்ள இந்திரா நகரிலும் கால்வாயின் மீது மேம்பாலங்கள் கட்டவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தஞ்சை மாவட்டத்திலே வெள்ளப் பகுதிகளுக்கு விரைவாக மத்தியக் குழு வந்தது. பாரத பிரதம அமைச்சரும் சொந்த நிவாரண நிதியிலிருந்து அதற்கு பணம் அனுப்பிவைத்தார்கள். ஆனால், இராமநாதபுரம், மதுரை மாவட்டங்களிலே ஏற்பட்ட வெள்ளம் காரணமாக ஏற்பட்ட பாதிப்புக்கு சென்டரிலிருந்து ரீ ஆக்ஷன் வரவில்லை. ஆகவே, அவர்களுக்கு இந்தச் செய்தி எட்டவில்லையா அல்லது நாம் கொடுக்கவில்லையா என்பது நமக்குத் தெரியாது. நான் கேட்டுக் கொள்வது மத்திய நிதியுதவி பெற்று நிறைவேற்றுகிற தேசிய கிராமப்புற வேலைவாய்ப்புத் திட்டமானாலும் சரி, தமிழ்நாடு அரசாங்கம் நிறைவேற்றுகிற தன்னிறைவுத் திட்டமானாலும் சரி, அனைத்து வேலைகளும் மீண்டும் புதுப்பித்துக் கட்டக்கூடிய அளவிலே சிதையுண்டு போய் இருக்கின்றன. ஆகவே மத்திய அரசை அணுகி நிதியுதவி பெற்று சீர்திருத்தம் விரைவாகச் செய்ய நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென்று பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

பெரியாறு வைகை பாசன ஏற்பாட்டை நவீனப்படுத்துகின்ற திட்டத்தின் மூலமாகக் கிடைக்கின்ற தண்ணீரை வைகை பாசன விவசாயத்தை உறுதிப்படுத்துவதற்கு நீங்கள் நடவடிக்கை எடுக்க



வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இன்றைக்கு இந்த வேலைகளையெல்லாம் அரசு விரைவாக செய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

ஒன்றைச் சொல்லி முடித்துக் கொள்கிறேன். அரிசனங்களுக்கு வீடுகட்டுவதற்காக 6 ஆயிரம் ரூபாய் வழங்குகிறோம். அந்த 6 ஆயிரம் ரூபாயை ஏற்கனவே கடன்பெற்று வீடுகட்ட முடியாமல் இருக்கிறவர்களுக்கும் நீட்டித்துக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டு இந்த அளவில் பேச வாய்ப்பு அளித்தமைக்காக நன்றி கூறி முடிக்கிறேன். வணக்கம்.

திரு. கெ. சொக்கலிங்கம் மாண்புமிகு பேரவையின் துணைத் தலைவர் அவர்களே, இன்றைய தினம் மாண்புமிகு மதிப்பிற்குரிய நம்முடைய நாவலர் அவர்கள் 1984-85 ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையை கொண்டுவந்து இருக்கிறார்கள். அதன் மீது நான் சார்ந்திருக்கிற திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக சில கருத்துக்களைச் சொல்லவிழைகிறேன். இந்த நிதிநிலை அறிக்கை மிக அதிகமான பக்கங்களை கொண்டதாக 66 பக்கங்களைக் கொண்டதாக இருக்கிறது. ஆனால் வரிசையாக வார்த்தைகள் அழகாக இருக்கிறதே தவிர அதில் அடங்கிய கருத்துக்கள் அதிகமாக இல்லை என்று நான் குற்றஞ்சாட்ட விரும்புகிறேன்.

மத்திய நிதியமைச்சர் ஒரு நிதிநிலை அறிக்கையை பாராளுமன்றத்திலே சமர்ப்பித்தார். இந்தியா பூராவிற்கும் இருக்கிற நிதிநிலை அறிக்கையை மத்திய நிதியமைச்சர் 35 அல்லது 40 பக்கங்களைக் கொண்டதாகச் சமர்ப்பித்தார். நம்முடைய மாநில அரசாங்கம் இந்த நிதிநிலை அறிக்கையைச் சமர்ப்பித்து இருக்கிற நேரத்தில் வெள்ளம் பெருக்கெடுத்து காலந்தாழ்ந்த மழை பெய்து பல மாவட்டங்கள் பாதிக்கப்பட்டிருக்கின்றன என்று சொன்னார்கள். குறிப்பாக செங்கற்பட்டு மாவட்டத்தை நான் சொல்வதற்குக் காரணம் அங்கே மழை அதிகமாகப் பெய்து மிகவும் மோசமாகப் பாதிக்கப்பட்டது. குறிப்பாக செங்கற்பட்டு மாவட்டம் அண்மையில் பெய்த மழையின் காரணமாக — ஏற்கெனவே மழை பெய்தபோது செங்கற்பட்டு மாவட்டம் பாதிக்கப்படவில்லை — பயிர்கள், தாள் பயிர்கள் தண்ணீரில் முழுகி அதனால் விவசாயிகள் இன்றைய தினம் பாதிக்கப்படும் நிலையில் இருக்கிறார்கள். தாள் பயிர்கள் மட்டும் அல்ல, சாலைகள் முழுமையாக இன்றைய தினம் பாதிக்கப்பட்டுள்ளது. எங்கு பார்த்தாலும் பயிர்கள் தண்ணீரில் முழுகி அந்த நெல் நாற்றம் அடிக்கும் நிலையில் இன்றைய தினம் இந்த மழை செடுத்துவிட்டது.

அது மட்டும் அல்ல. இந்த நிதிநிலை அறிக்கையில் நமது நாவலர் அவர்கள் அவர்களுக்கே உரித்தான பாணியிலே கொண்டு வந்து இருக்கிறார்கள். நீங்கள் மத்திய அரசிடமிருந்து நிதியை கேட்கிறீர்கள். நீங்கள் மத்திய அரசிடமிருந்து 128 கோடி ரூபாய் நிதி கேட்டு அவர்கள் 5 கோடி ரூபாய் தான் கொடுத்து

[திரு. கெ. சொக்கலிங்கம்] [1984 மார்ச் 12

இருப்பதாகவும், கொடுப்பதாகவும் இங்கே நிதிநிலை அறிக்
கையிலே கூறியிருக்கிறீர்கள். ஒரு பக்கத்தில் நீங்கள் நிதியை
பெற்றுக்கொண்டு மத்திய அரசுக்கு நீங்கள் துதி பாடுகிறீர்களா ?
இல்லையா ? அது வேறு விஷயம். ஆனால் மத்திய நிதி
அமைச்சர் என்ன சொல்கிறார் என்றால் நாங்கள் மாநிலங்களுக்கு
நிதியைத் தருகிறோம். குறிப்பாக தமிழகத்திற்கு நிதியும்
கொடுக்கிறோம். ஆனால் தமிழகத்தில் இருக்கின்ற மாண்புமிகு
எம்.ஜி.ஆர். சர்க்கார் அந்த நிதியை ஒழுங்காக செலவு செய்ய
வில்லை, ஊதாரித்தனம் படுத்துகிறது என்று பம்பாயில் நடந்த
காங்கிரஸ் மாநாட்டில் விரிவாக நமது மத்திய நிதியமைச்சர்
பிரணாப் முகர்ஜி அவர்கள் கூறியிருக்கிறார்கள். நமது மாண்பு
மிகு முதலமைச்சர் அவர்கள் காஷ்மீரில் நடந்த எதிர்க்கட்சிகள்
மாநாட்டுக்குப் போகவில்லை என்றாலும் கூட, அவர்கள் மத்திய
அரசுக்கு துதி பாடினாலும் கூட, மத்திய அரசில் இருக்கும்
அமைச்சர்கள் வன்மையாக இந்த சர்க்காரை கண்டித்து இருக்
கிறார்கள். நீங்கள் நிதியை ஒழுங்காக செலவு செய்யவில்லை
என்று பகிரங்கமாக மாநாட்டில் கூறப்படுகிறது. இதை நான்
சொல்வதற்குக் காரணம் நிதியை நீங்கள் பெறுகிறீர்கள். அதிலே
எங்களுக்கு எந்தவிதமான ஆட்சேபணையும் இல்லை.

[பிற்பகல் 1-30]

இங்கே நமது உமாநாத் அவர்கள் கூறியதைப்போல, ஒரு
சர்க்கார் வரி போடுவதில் நியாயம் இருக்கிறது. வரி போடலாம்.
எந்தச் சர்க்கார் வந்தாலும் வரி போட்டுத்தான் தீர வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : அவையின்
அனுமதியோடு அலுவல் நேரம் சிறிது நேரம் நீட்டிக்கப்படுகிறது.

திரு. கெ. சொக்கலிங்கம் : இதற்காக மாண்புமிகு பேர
வைத் துணைத் தலைவரவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்
கொள்கிறேன்.

குறிப்பாக இன்றைக்கு 57 கோடி ரூபாய்க்கு உபரி வரியை
இந்தச் சர்க்கார் போட்டுள்ளது. ஆனால் இந்த வரி குறிப்பாக
நடுத்தர ஏழை மக்களைப் பாதிக்கின்ற வரியாக இருக்கிறது.

ஆனால், ஆளுங்கட்சியைச் சேர்ந்த உறுப்பினர்கள் சொல்
கிறார்கள், இதுவொரு பெரிய தீர்க்கதரிசனம் என்றும், வரியே
போடவில்லை என்றும் சொல்கிறார்கள். வரியே போடாமல்
இருக்க முடியாது. இருந்தாலும், 57 கோடி ரூபாய்க்கு உபரி
வரியாகப் போட்டிருக்கிறார்கள்.

டீசலுக்கு விற்பனை வரியை உயர்த்தியிருக்கிறீர்கள். இ
றைக்கு இருக்கின்ற மின்சாரத் தட்டுப்பாட்டின் காரணமாக,
மின்சாரம் கிடைக்காத சூழ்நிலையில், பல ஆண்டுகளாகத் தங்க
ளுக்கு மின்சாரம் கிடைக்கவில்லை என்ற நிலையில், டீசல் ஆயில்



1984 மார்ச் 12] [திரு. கெ. சொக்கலிங்கம்]

என்ஜின்களைப் பயன்படுத்தி விவசாயம் செய்கிறார்கள்.
டீசலுக்கு விற்பனை வரியை உயர்த்திவிட்டால் அவர்கள் எப்படி
இந்த விவசாயத்தைச் செய்ய முடியும் ? ஆகவே, டீசல் விலைகளை
உயர்த்துவதால் விவசாயிகள் பாதிக்கப்படுவார்கள். அதிலும்
குறிப்பாக நடுத்தர விவசாயிகள் பெரிதும் பாதிக்கப்படுகிறார்கள்.

இங்கே பேசும்பொழுது அருமைச் சகோதரர் திரு. பழனிவேல்
அவர்கள் ஒன்றைச் சொன்னார்கள். இந்தச் சர்க்காரின் பெரிய
திட்டம் என்னவென்று சொன்னால், சத்துணவுத் திட்டம்தான்.
சத்துணவுத் திட்டம் பற்றியெல்லாம் பேசியாகி விட்டது. இருந்
தாலும் ஒரு சில சம்பவங்களைப் பற்றிச் சொல்கிறேன். இந்தச்
சத்துணவுத் திட்டத்தைப் பெரிய கொள்கை என்று ஏற்றுக்
கொண்டிருக்கிறீர்கள். அதில் எங்களுக்கு ஆட்சேபணை ஒன்று
மில்லை. ஆனால், எந்த இலாக்காவிற்குச் சென்றாலும்,
மின்சார இலாக்காவிற்கு விளக்கு எரியவில்லை என்று
சென்றாலும், சத்துணவுத் திட்டம்; ஏரிகளை ஆழப்படுத்த
வேண்டுமென்று பொதுப்பணித் துறைக்குச் சென்றாலும் சத்துண
வுத் திட்டம் என்று சொல்கிறார்கள். சாலைகள் பழுதடைந்து
விட்டது என்று சொல்லப்போனாலும் சத்துணவுத் திட்டம் என்று
சொல்கிறார்கள். திரு. பழனிவேல் அவர்கள் நேற்று அழகாகச்
சொன்னார்கள். இதைத்தான் நானும் சொல்ல விரும்புகிறேன்.
காலையிலே திரு. மாணிக்கம் அவர்கள்கூடச் சொன்னார்கள்.
தன்னிறைவுத் திட்டத்திற்காகப் பலகோடிக்கணக்கான ரூபாய்கள்
செலவழிக்கப்பட்டன என்று சொன்னார்கள். உண்மை
யிலேயே நான் அதை வரவேற்கிறேன். ஆனால் இந்தத் திட்டத்
தின் கீழ் செய்யப்பட்ட சாலை வேலைகளையெல்லாம், சமீபத்தில்
பெய்த மழையின் காரணமாக கற்களெல்லாம் பெயர்ந்து, குழி
குழியாக நிற்கிறது. அதற்காக நான் சென்ற ஒருமுறை பேசும்
பொழுதுகூடச் சொன்னேன். எனவே, மெயின்டனென்ஸ் —
பராமரிப்புச் செலவுக்காக நிதி ஒதுக்க வேண்டுமென்று கேட்டுக்
கொள்கிறேன்.

குறிப்பாக ஹவுசிங் ஸ்கீமில், தேசிய ஊரக வீடு கட்டும் திட்
டத்தின் கீழ் பல லட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டிருப்ப
தாகச் சொல்கிறீர்கள். ஆனால் என்னுடைய தொகுதியில்
செங்கற்பட்டு தாலூக்காவில் உள்ள திருப்போரூர் தொகுதியில்
கிராம வீடு கட்டும் திட்டம் முழுவதும் செயல்படவில்லை.
காரணம் என்ன என்று கேட்டால், மத்திய உயிர்க் காப்பீட்டுக்
கழகத்திலிருந்து — எல்.ஐ.சி.-யிலிருந்து பணம் வரவில்லை என்று
காரணம் சொல்கிறார்கள். ஆகவே, மதிப்பீட்டு பே டப்பட்ட
சிலயிடங்களில்கூட அந்தத் திட்டம் அமலாகவில்லை. குறிப்
பாக மப்பேடு, அதைச் சேர்ந்த பாலூர், குருவன்மேடு, மாம்பாக்
கம் போன்ற கிராமங்களில் இந்தத் திட்டம் செயல்படுத்தப்பட
வில்லை.

குறிப்பாக எனக்கு முன் பேசிய அருமை மாண்புமிகு உறுப்பி னரவர்கள் சொன்னார்கள். தாம்பரம் போன்ற பகுதிகளில் கல் குவாரி இருக்கின்றது. நெடுங்குன்றம், இரத்தினமங்கலம் போன்ற இடங்களில் கிட்டத்தட்ட கல் உடைக்கும் தொழிலாளர் கள் ஐயாயிரம் பேர்கள் தற்பொழுது வேலையின்றித் தவிக் கிறார்கள். இவ்வளவுதான் கல் உடைக்க வேண்டுமென்று இந்தச் சர்க்கார் ஒரு வரம்பைக் கொண்டு வந்த காரணத்தினால் கல் உடைக்கும் தொழிலாளர்களும், உற்பத்தியாளர்களும் பாதிக்கப்பட்டு, பட்டினிச் சாவு ஏற்படுகின்ற அளவிற்குக் கஷ்டப் படுகிறார்கள். (மணியடிக்கப்பெற்றது).

மாண்புமிகு பேரவைத் துணைத்தலைவர் : பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, 13—3—1984 காலை 9·00 மணிக்கு பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை பிற்பகல் 1-34 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது.

## 8. பேரவை முன் வைக்கப்பெற்ற ஏடுகள்

### அ. சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்

120. தமிழ்நாடு மின் அணு நிறுவனத்தின் 1981-82 ஆம் ஆண்டிற்கான ஐந்தாம் ஆண்டு அறிக்கை (தமிழ், ஆங்கிலம்) (1956-ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது).

### ஆ. அறிக்கைகள், அறிவிப்புகள், ஏனையதாள்கள்

எதுவுமில்லை

## இணைப்பு.

( 26 ம் பக்கத்திலுள்ள உடுக்குறியிட்ட வினா எண் 273-க்கான விடையைக் காண்க.)

(அ) சென்னையில் உள்ள கூவம் ஆற்றில் சாக்கடை கலப்ப தைத் தடுக்கவும் துர்நாற்றத்தைப் போக்கவும் கீழ்க்கண்ட இலாக்காவினால் சிறப்பு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வரு கின்றன—

(1) சென்னை பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீர் அகற்று வாரியம்.

(2) பொதுப்பணித்துறை.

(3) தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியம்.

(4) தமிழ்நாடு மின்வாரியம்.





### சென்னை பெருநகர் குடிநீர் வாரியம் மற்றும் கழிவு நீர் அகற்றும் வாரியம் மேற்கொண்டுள்ள நடவடிக்கைகள்.

மிகப் பழமையானதும் அத்தியாவசியமானதுமான 15 கழிவு நீரேற்று நிலையங்களில் போதிய திறன் உள்ள நீரேற்று இயந்தி ரங்கள் இல்லாததாலும் மேலும் அவை 30, 40 ஆண்டுகள் பழமையானவாறு இருப்பதாலும், மின்சார தடங்கல்கள் பொது வாக ஏற்படுவதாலும் அவை சரிவர இயங்காததால் அந்நிலையங்க ளிலிருந்து கழிவுநீர் வழிந்து நீரோடைகளில் சேரும் நிலை இருந்து வருகிறது. இதை நீக்க உலக வங்கி உதவியுடன் இந்நிலையங் களில் அதிக திறன் உள்ள இயந்திரங்கள் வைத்தும், தானே இயங்கி கழிவு நீரை வெளியேற்றும் அமைப்பு கொண்டதாகவும் அமைக்கப்பட்டு 14 நிலையங்களில் பணிகள் முடியும் நிலையில் உள்ளன. மின்சார தடங்கல் ஏற்படும் காலத்தில் இயக்க டீசல் ஜெனரேட்டர்களும் அமைக்கப்படுகின்றன. மனிதர்களால் இயக்கப்படும் நிலையில் ஏற்படக்கூடிய சில குறைகளை தவிர்த்து தானே இயங்கி கருவிகள் வேலை செய்யும்.

2. இதுவரை கழிவு நீர்க்குழாய்களில் ஏற்படும் தடைகளை அடைப்புகள் நுழைவாயில்களில் இறங்கி மூங்கில் பத்திகளை கொண்டு பணியாளர்கள் குத்தி கலைத்து விடுகிறார்கள். இத னால் ஓரளவுக்கு அடைப்புகள் நீக்கப்படுகின்றன. ஆனால் மனிதக்கழிவுப் பொருட்களுடன் பணியாளர்கள் நேரடி தொடர்பு கொள்ளும் நிலை இருந்து வருகிறது. ஆனால் தற்போது பலதரப்பட்ட இயந்திரங்கள் உலக வங்கியின் உதவியுடன் வாங் கப்பட்டு உபயோகப்படுத்தப்பட்டு வருகின்றன. இந்த நவீன இயந்திரங்கள் அடைப்புகளை துரிதமாக நீக்கி கசடுகள் விரைவில் வெளியேற்றப்படுவதால் கழிவு நீர்க் குழாய்களில் நீரோட்டம் சுலபமாக ஏற்பட்டு கழிவு நீர் சாலைகளில் வழிந்து ஓடி சாக்கடை களில் கலந்து நீரோடைகளில் கலப்பது தவிர்க்கப்படுகிறது. இம் மாதிரி கருவிகளின் உபயோகத்திறனைப் பார்த்ததின் பேரில் மேலும் சில இயந்திரங்கள் வாங்கப்பட உள்ளன.

3. அடிக்கடி அடைப்புகள் ஏற்படும் பகுதிகளிலுள்ள கழிவு நீர்க்குழாய்களை தீவிரமாக சுத்திகரிப்பு (பந்து செலுத்தி சுத்தி கரிப்பு முறை) செய்வதற்காக தனிப்பட்ட பிரத்தியேகத் தொழி லாளர் குழு அமைக்கப்பட்டு, தொடர்ச்சியாக நகரின் பல தெருக்களிலும் சுத்திகரிப்பு செய்யப்பட்டு வருகிறது; இதனால் கழிவு நீர்க் குழாய்களில் தடையின்றி நீரோட்டம் ஏற்பட்டு கழிவு நீர் வழிந்தோடுவது தவிர்க்கப்படுகிறது.

4. சென்னை நகரிலுள்ள கழிவு நீரேற்று நிலையங்களி லிருக்கும் நீரேற்று இயந்திரங்களின் திறன் இப்போது அதி கரித்துள்ள மக்கட் தொகையினால் ஏற்படும் அதிகப்படியான கழிவு நீரை வெளியேற்றுவதற்கு போதுமானதாக இல்லை. இதனை உத்தேசித்து ஐஸ் ஹவுஸ், வடக்கு மைலாப்பூர் மற்றும்

காந்தி நகர் நீரேற்று நிலையங்களில் அதிக அளவு திறன்கொண்ட நீரேற்று இயந்திரங்கள் அமைத்து அவைகள் ஏற்கனவே இயங்கி வைக்கப்பட்டுள்ளன. இதன் மூலம் கழிவு நீர் வழிந்தோடி பல இடங்களில் நீர் நிலைகளில் கலப்பது ஓரளவு தடுக்கப்பட்டுள்ளது.

5. நேசப்பாக்கம் அருகிலுள்ள பகுதியான சைதாப்பேட்டை, கே.கே. நகர், ஜாபர்கான் பேட்டை மற்றும் அசோக் நகர் பகுதிகளிலிருந்து வரும் கழிவு நீர் அடையாற்றில் வழிந்தோடுவதை தடுப்பதற்கான திட்டம் எடுத்துக்கொள்ளப்பட்டு நடைபெற்று வருகிறது. இப்பணியில் ஒரு பகுதியான விசைக் குழாய் போடுவது நடைபெற்று வருகிறது. கழிவு நீரேற்று நிலையங்களை மாற்றி அமைக்கும் பணி தொடங்கப் பட்டுள்ளது.

6. நந்தனம் அருகிலுள்ள அடையாற்றில் கழிவுநீர் வழிந்தோடுவதை தடுப்பதற்கான திட்டம் எடுத்துக் கொள்ளப்பட்டு விசைக் குழாய் போடும் பணி நடந்து வருகிறது.

7. கழிவு நீர் அகற்றும் வசதிஅற்ற இடங்களுக்கு வாரியத்தின் மூலமாக கழிவு நீர் அகற்றும் குழாய்கள் போடப்பட்டு வருகின்றன. இதுவரை அரும்பாக்கம், அமைந்தகரை, கிண்டி வேளச்சேரி ஆகிய பகுதிகளுக்கு இவ்வசதிகள் செய்து கொடுக்கப் பட்டுள்ளன.

8. இது தவிர மற்ற கழிவுநீர் ஏற்று நிலையங்களில் சேகரிப்பு கிணறுகளில் ஓரளவு குறைவாக இருக்குமாறு நீரேற்று இயந்திரங்கள் இயங்குவதற்காக அவற்றின் செயல்முறை உன்னிப்பாக கண்காணிக்கப்படுகின்றன.

சென்னை பெருநகர் குடிநீர், கழிவு நீர் அகற்று வாரியம் மற்றும் பொதுப்பணித்துறைகள் மேற்கொண்டுள்ள நடவடிக்கைகள்.

பொது மருத்துவமனையில் இருந்து கழிவு நீர் அகற்றும் ஏற்பாடுகளை தற்போது பொதுப்பணித் துறையிடமிருந்து சென்னை பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீர் அகற்றும் வாரியமே மேற்கொண்டு பராமரித்துக் கொண்டு வருகிறது. இதன் விளைவாக கழிவு நீர் நீரோடையில் கலப்பது முற்றிலும் தடுக்கப்பட்டு வாரிய கழிவு நீர் குழாய்கள் சேர்க்கப்படுகிறது. சிறைச்சாலை போன்ற இடங்களில் வரும் கழிவுநீரை இந்த இரண்டு துறைகளும் ஒருங்கிணைந்து செயல்பட்டு கழிவு நீர் நீரோடையில் கலப்பது தவிர்க்கப்படுகிறது.

மெரினா கடற்கரை ஓரத்தில் அமைந்துள்ள அரசு அலுவலகங்கள், கல்லூரிகள் ஆகியவற்றிலிருந்து வெளியேற்றப்பட்ட கழிவு நீர் பக்கிங்காம் கால்வாயில் சேராமல் வாரியத்தின் குழாயில் நேரே வந்தடைய வேண்டிய திட்டங்களை பொதுப் பணித்துறை வாரிய ஆலோசனையுடன் தீட்டி வருகிறது.



தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியம் மேற்கொண்டுள்ள நடவடிக்கைகள்.

கூவம் நதி ஓரத்தில் பல இடங்களில் உள்ள குடிசைப் பகுதிகளை வேறு இடங்களுக்கு மாற்றுவதற்கு வேண்டிய தீவிர ஏற்பாடுகளை தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியம் எடுத்துக் கொண்டு வருகிறது.

தமிழ்நாடு மின்சார வாரியமும், தமிழ்நாடு பொதுப்பணித்துறையும் மேற்கொண்டுள்ள நடவடிக்கைகள்.

கூவம நதியில் நீரோட்டம் தடைப்படாமல் செயல்பட பொது பணித்துறை கடல் அருகில் ஏற்படும் மணல் திட்டை தூர் வாரும் இயந்திரங்களைக் ( Dredger ) கொண்டு அகற்றி வருகிறது. ஒரு இயந்திரம் போதாத காரணத்தால் மற்றும் ஒரு இயந்திரத்தை வாங்குவதற்கு வேண்டிய ஏற்பாடுகளை செய்து வருகிறது.

அடையாற்றில் இதே விதமாக ஏற்படும் மணல் திட்டை மனிதர்களைக்கொண்டு அகற்றும் வேலை தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

இதைத் தவிர எண்ணூரில் உள்ள அனல் மின் நிலையத்திலிருந்து நாள்தோறும் வெளியேற்றப்பட்டு குளிர்ச்சி செய்வதற்கான கடல் நீரில் ஒரு பகுதியை (சுமார் விநாடிக்கு 150 கன அடி) வட பக்கிங்காம் கால்வாய் மூலமாக கூவம் ஆற்றில் திருப்பி விட்டால் கூவம் ஆற்றில் இருந்து கடல்நோக்கி நீரோட்டத்தை ஏற்படுத்தலாம் என்ற கருத்தின்படி நாள்தோறும் மேலே குறிப்பிட்ட அளவின்படி நிலையத்திலிருந்து மின்சார வாரியம் நீர் வழங்கிவருகிறது. பொதுப்பணித்துறை இம்மாதிரி பக்கிங்காம் கால்வாய் மூலம் கூவத்தில் கலந்து வரும் நீரினை கடல்நோக்கி பாய்வதை பார்த்துக்கொள்கிறது. இவ்வேற்பாட்டின்படி கூவத்தில் இருக்கும் அசுத்தம் அடைந்த நீர் கடலுக்கு வெளியேற்றப்படுகிறது.

(ஆ) மற்றும் (இ) : ஆம்.

சென்னை மாநகரின் வழியாக கூவமாறு ஓடுகிறது. மாநகர் எல்லைக்குள் கூவம் ஆற்றினைத் தூய்மையாக வைத்துக் கொள்ளவும் அதனுள் கடல்நீர் போகவர வழி வகுக்கவும் ஓர் உயர்மட்ட தொழில் நுட்பக் குழுவின் பரிந்துரையின் பேரில் கூவம் ஆற்றை சேத்துப்பட்டு இரயில் பாலத்திலிருந்து கூவம் முகத்துவாரம் வரை சீர் செய்யும் திட்டம் மூன்று நிலைகளில் மேற்கொள்ளப்பட்டது.

[1984 மார்ச் 12

இந்த திட்டம் முன்னால் முதலமைச்சர் மாண்புமிகு டாக்டர் சி. என். அண்ணாத்துரை அவர்களால் 19—1—1967-ல் துவக்கி வைக்கப்பட்டது.

நிலை : 1 முதலாம் நிலையில் மதகுகளும் அதைச்சார்ந்த வேலைகளும் கூவம் ஆற்று தமிழகம் அருகே கட்டி முடிக்கப்பட்டன. இத்துடன் மணல்வாரும் இயந்திரத்தை ஏற்றி வைக்க ஜெட்டி ஒன்றும் முகத்துவாரத்தில் கட்டி முடிக்கப் பட்டது.

கூவம், ஆற்றின் வலது இடது கரைகளில் நேப்பியர் பாலத் திலிருந்து மதுகரை வரை கரை அமைத்தாலும் இதர பாது காப்பு வேலைகளும் முடிக்கப்பட்டன.

என்னூர் அனல் மின்நிலையத்திலிருந்து வரும் 150 கன அடி குளிர் படுத்தப்படன் படுத்திய நீரை கூவத்திற்குச் கொணர உள்வாய் அமைக்கப்பட்டது.

மேற்கண்ட முதல் நிலை வேலைகளுக்கு முதலில் ரூ. 32 இலட்சமும், இதற்குண்டான திருத்திய மதிப்பீட்டிற்கு ரூ. 70 லட்சமும் ஒப்புதல் அளிக்கப்பட்டது.

நிலை : 2 கூவம் அபிவிருத்தித் திட்டத்திற்கு இரண்டாம் நிலைக்கு ரூபாய் 62 இலட்சத்திற்கு ஒப்புதல் அளிக்கப்பட்டது.

இரண்டாம் நிலையில் கீழ்கண்ட வேலைகள் செய்யப் பட்டன.

நேப்பியர் பாலத்திலிருந்து சேத்துப்பட்டுப் பாலம் வரை கூவம் ஆற்றுப் பாதையை ஒழுங்கு படுத்துதல்.

கூவம் வடக்கு கிளை ஆற்றுப் பாதைகளை ஒழுங்குப்படுத்து தல், நீச்சல் குளம், படகுத்துறை சிற்றுண்டிச்சாலை மற்றும் பூந்தோட்டம், சலவைத்துறை கட்டிடம் ஆகியவைகள் அமைத் தல், இப்பணிக்கான ரூ. 108 இலட்சத்திற்கு ஒப்புதல் அளிக்கப் பட்டது.

நிலை 3. இத்திட்டத்தின் இறுதி நிலையில் அதாவது மூன் றாவது நிலையில் குடிசை வாசிகளுக்கு 941 தீப்பிடிக்காத குடி யிருப்புகள் கட்டும் வேலை எடுத்துக் கொள்ளப்பட்டது. இந்த வேலைக்காக 16.45 லட்சத்திற்கு ஒப்புதல் அளிக்கப்பட்டது. பின் திருத்திய மதிப்பீட்டிற்கு ரூ. 11.27 இலட்சத்திற்கு ஒப்புதல் அளிக்கப்பட்டது.



1984 மார்ச் 12]

13. மேற்கண்ட மூன்று நிலைகளுக்கும் சேர்ந்து உள்ளபடி செலவு ரூ. 2,28,97,133 ஆகும். இச் செலவுக்கான விபரம் வருமாறு :—

| | | | |
|---|---|---|---|
| முதல் நிலைக்கான தொகை .. | .. | .. | 77,61,000 |
| இரண்டாம் நிலைக்கான தொகை | .. | .. | 1,41,76,133 |
| மூன்றாம் நிலைக்கான தொகை | .. | .. | 9,60,000 |
| ஆக மொத்தச் செலவு .. | .. | .. | 2,28,97,133 |

14. மேற்கண்ட அனைத்து வேலைகளும் முடிக்கப்பட்டு விட்டன.

15. இதைத் தவிர சேத்துப்பட்டு இரயில் பாலத்திலிருந்து நகர எல்லைக்குள் கூவம் ஆற்றை மேம்பாடு செய்வதற்கான திட்டமொன்றும் அரசின் பரிசீலனையில் இருந்து வருகிறது.

16. மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் தலைமையில் இப்பொருள்பற்றி சம்பந்தப்பட்ட சென்னை பெருநகர் குடிநீர் மற்றும் வடிகால் வாரியம், சென்னை மாநகராட்சி தமிழ்நாடு குடிசை மாற்று வாரியம், தமிழ்நாடு வீட்டுவசதி வாரியம், பொதுப்பணித் துறை அலுவலர் களுடன் அடிக்கடி விவாதம் நடைபெறுகிறது. மேற்கண்ட விவாதத்தின்போது, பொதுப்பணித்துறையால் நட வடிக்கை எடுக்கப்பட வேண்டுமென நிர்மானிக்கப்பட்டபடி புதிய டிரெட்ஜர் மற்றும் ஹைட்ராலிக் எக்ஸ்கேவேட்டர் வாங்கு வதற்காக ரூ. 112 இலட்சத்தில் மதிப்பீடுகள் அரசின் பரிசீலனை யில் உள்ளன.

17. மேலும் நீண்ட நாட்களாக ஆற்று நீர் படுகையில் தங்கி அழுகிய பொருட்களில் இருந்து வெளிப்படும் துர்நாற்றத் தைப் போக்க மேலை நாடுகளில் ''மிதக்கும் ஏரேட்டர்'' ( Floating A rotors ) என்ற முறையைப் பயன் படுத்தி நல்ல பலன் கண்டுள்ளார்கள் என்றும் மேலும் மேற்கண்ட சாதனங்கள் தற்போது இந்தியாவிலே தயாராகி விற்பனை செய்து வருவதால் கூவம் ஆற்றில் ஏற்படும் துர்நாற்றத்தைப் போக்க மேற்கூறிய முறையை பரீட்சார்த்தமாக பயன்படுத்த குடிநீர் மற்றும் வடிகால் வாரியம் நடவடிக்கை எடுத்து வருகிறது.

## உள்ளடக்கம்.

13—3—1984


பக்கங்கள்.

1. வினாக்கள்-விடைகள்—

உடுக்குறியிட்ட வினாக்கள் .. .. 367—397

2. கவன ஈர்ப்புக்கள் —

(அ) நெய்வேலி இரண்டாவது மின்நிலைய கட்டுமானப்பணித் தொழிலாளர்கள் விபத்துக்குள்ளாகி இருப்பது .. .. .. 397—404

(ஆ) வியாசர்பாடி சத்தியமூர்த்தி நகர் குடிசைமாற்று வாரிய வீடுகளின் நிலைமை.. 407—408

3. வரவு-செலவுத் திட்டம் 1984–85 பொதுவிவாதம் (தொடர்ச்சி) .. .. .. .. .. 409—464, 466—488

திரு. ஜி. கே. சுப்பிரமணியன் .. .. 409—414

திரு. அன்பில் தர்மலிங்கம். .. ..414—429

மாண்புமிகு டாக்டர் எம். ஜி. இராமச்சந்திரன் 421, 422, 422, 425, 434, 435, 438, 439,

திரு. ப. நெடுமாறன். .. .. .. 430—438

திரு. ஆர். நவநீதகிருஷ்ணபாண்டியன். .. 440—445

திரு. பு. கோ. ஆனூர் ஜெகதீசன். .. .. 445—451

திரு. இரா. கருப்பையா. .. .. .. 451—464

திரு. என். சங்கரய்யா. .. .. .. 466—488

4. அறிவிப்பு.

பேரவை அலுவல் ... .. .. 465

5. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள் .. 488


டி 2 A 338—1

## தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

1984, மார்ச் 13, செவ்வாய்க்கிழமை

மாசி 30, ருத்ரோத்காரி—திருவள்ளுவர் ஆண்டு 2015

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றம் பேரவை மண்டபத்தில் காலை 9–00 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. க. இராசாராம் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் :

" பகையகத்துச் சாவார் எளியர் அரியர்
அவையகத்து அஞ்சா தவர் "

போர்க்களத்தில் சாவதற்குத் துணிந்தவர் பலராக இருக்க லாம். ஆனால் அவையிலே அஞ்சாது பேச வல்லவர் சிலரே யாவர்.

### 1. வினாக்கள் விடைகள்

#### உடுக்குறியிட்ட வினாக்கள்

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் கள் 285, 286, 287 ஆகியவை மாண்புமிகு அமைச்சர் அவர் களின் வேண்டுகோளுக்கிணங்க தள்ளிவைக்கப்பெறுகின்றன.

பாஞ்சாலங்குறிச்சியிலுள்ள கட்டபொம்மன் கோட்டையைச் சீர்திருத்தம் செய்யும் திட்டம்

288—(*வினா எண் 10118)—திரு. இரா. தாமரைக் கனி : மாண்புமிகு செய்தி, அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நெல்லை மாவட்டம் பாஞ்சாலங்குறிச்சியில் உள்ள கட்டபொம்மன் கோட்டையைச் சீர்திருத்தம் செய்யும் செய்தி குறிப்பு அரசு பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் யாது ?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : (அ) மற்றும் (ஆ). மாநில அரசின் மேற்பார்வையிலுள்ள கட்டபொம்மன் நினைவுக் கோட்டை தற்போது நல்ல முறையில் பராமரிக்கப்பட்டு வரு கிறது. அங்குள்ள ஓய்வு இல்லத்தில் வசதிகளை அதிகரிக்கும் பொருட்டு ரூ. 5,942-80-ம், வரவேற்பு வளைவில் வாசகங்கள்

எழுதுவதற்கும், மின்சார மோட்டாரை செப்பனிடவும், ரூ 467ம் 1980–81 ஆம் ஆண்டு செலவு செய்யப்பட்டுள்ளது. மேலும், வீரபாண்டிய கட்டபொம்மன் கோட்டையில் ஏற்கெனவே உள்ள கிணறை ஆழப்படுத்துவதற்கு ரூ. 2,500 அரசு ஒப்புதல் அளித்துள்ளது.

**கீரிப்பாறை அரசு இரப்பர் தோட்டத்திலுள்ள தொழிலாளர் இல்லங்கள்**

289—(*வினா எண் 18276)—திரு. டி. மணி ; மாண்புமிகு செய்தி, அறநிலையத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரசு ரப்பர் தோட்டத்தின் கீரிப்பாறை தோட்டத்தில் கட்டிமுடிக்கப்பட்டுள்ள தொழிலாளர் இல்லங்களுக்கு மின விளக்கு வசதி, குடிநீர்வசதி செய்யப்பட்டுள்ளதா ?

(ஆ) இல்லையெனில், எப்போது இவ்வசதிகள் செய்துதரப்படும் ?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : (அ) ஆம்.

(ஆ) இவ்வினா எழ இடமில்லை.

திரு. டி. மணி : தலைவர் அவர்களே, கீரிப்பாறை மற்றும் பல்வேறு தொழிலாளர்கள் தங்குகின்ற விடுதிகளில்—ஏற்கெனவே கடந்த வருடம் ஆரம்பத்திலே அந்த விடுதிகள் கட்டப்பட்டன—நான் சென்று பார்த்தபோது பல மாதங்களாக அவர்களுக்கு மின்சார இணைப்பும், தண்ணீர் இணைப்பும் கொடுக்கப்படாமல் இருந்தது. ஆகவேதான், நான் இந்தக் கேள்வியைப் போட்டிருந்தேன். அது இப்போது வழங்கப்பட்டு வருகின்றதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : தலைவர் அவர்களே, ஏற்கெனவே 154 வீடுகள் அடங்கிய 22 வரிசைகளை கொண்ட தொழிலாளர்கள் குடியிருப்புகள கட்டி முடிக்கப்பட்டுவிட்டன. அவற்றுக்கு மின வசதியும், குடிநீர் வசதியும் கொடுக்கப்பட்டு விட்டன. தற்சமயம் 105 வீடுகள் அடங்கிய 15 வரிசை கொண்ட தொழிலாளர் குடியிருப்புக்கள் கட்டி முடிக்கப்படும் நிலையில் உள்ளன.

திரு. டி. மணி : தலைவர் அவர்களே, ஏற்கெனவே கட்டி முடிக்கப்பட்ட பல்வேறு வடுதிகளில் இம்மாதிரி மின்சார இணைப்பும், பாதுகாக்கப்பட்ட குடிநீரும் கொடுக்காத நிலைமை இருக்கின்றது. இந்நிலை கீரிப்பாறையில் மட்டுமல்ல. வாகின் பல்



2768



வேறு டிவிஷன்களில் அதாவது குறிப்பாக பரலியாறு டிவிஷனில் நீர்த்தேக்கத்தின் அருகாமையில், மலைப்பாங்கான பகுதியில் இம் மாதிரி பல மாதங்கள் ஆகியும் இன்னும் மின்சார இணைப்பு கொடுக்கப்படவில்லை. ஆகவே, தொழிலாளர்கள் தங்குவதற்கு லாயக்கான வீடுகள் கட்டி முடிக்கப்பட்டவுடன் அவசரமாக மின் இணைப்பும், பாதுகாக்கப்பட்ட குடிநீரும் கொடுக்க அரசு துரித மான நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : தலைவர் அவர் களே, என்னிடத்திலே இருக்கின்ற குறிப்பு கீரிப்பாறை தோட் டத்திலுள்ள கட்டி முடிக்கப்பட்ட குடியிருப்புக்கள் பற்றித்தான். ஆனால், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ரப்பர் தோட்டத்திலே கட்டி முடிக்கப்பெற்றிருக்கின்ற வீடுகள் அனைத்தையும் பற்றிக் கேட்கிறார்கள். அந்த வீடுகள் அனைத்திற்கும் உடனடியாக வேண்டிய மின் வசதியும், தண்ணீர் வசதியும் செய்யப்பட்டு சப்ளையும் வந்திருக்கும் அல்லது வந்துகொண்டிருக்கும் என்று நான் நம்புகிறேன். ஆனால் குறை இருக்குமானால் உடனடி யாக அத்தகைய இணைப்பு வசதிகளைச் செய்து தருவதற்கு அரசு ஏற்பாடுகள் செய்யும் என்பதைத் தெரிவித்துக்கொள் கிறேன்.

**சாத்தனூர் அணையிலுள்ள விடுதிகளை விரிவுபடுத்தும் திட்டம்**

290—(*வினா எண். 21771)—திரு. த. வேணுகோபால் : மாண்புமிகு செய்தி, அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தண்டராம்பட்டுத் தொகுதியில் உள்ள சாத்தனூர் அணையில் உள்ள விடுதிகளைத் தமிழ்நாடு சுற்றுலா வாரியம் எடுத்து விரிவு படுத்த அரசிடம் திட்டம் உள்ளதா ?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : இல்லை.

திரு. த. வேணுகோபால் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இல்லையென்று சொன்னார்கள். சாத்தனூர் அணையில் ஏ. பி. சி. டி. என்று 3, 4 பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டு, அங்கே பகுதி, பகுதியாக, கிட்டத்தட்ட 50, 60 விடுதிகள் கட்டப்பட்டு உள்ளன. அங்கு பயணிகள் தங்குவதற்கேற்ற வசதிகள் இல்லாத நிலையில் பயன் படுத்தப்படாமல் இருக்கின்றன. இந்த நிலையில், சுற்றுலாப் பகுதியாக அது உள்ளதால், சுற்றுலா வாரியம் அந்த விடுதிகளை எடுத்து நிர்வகிக்க அரசு ஏற்பாடு செய்யுமா என்று அறிய விரும்பு கிறேன்.

[1984 மார்ச் 13

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : தலைவர் அவர்களே, அந்த விடுதிகள் இப்பொழுது பொதுப்பணித்துறை பராமரிப்பிலே இருந்து வருகின்றன. ஆகவே, அதைப் பற்றிய விவரங்கள் சுற்றுலாத் துறைக்குத் தெரியாது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இந்தக் கருத்தைப் பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்களிடத்திலே கேட்டால் அவர்கள் விரும்பி அந்த விடுதிகளை சுற்றுலாத் துறைக்கு மாற்றிட அனுமதிப்பார்களானால் பிறகு சுற்றுலாத் துறை அதை நிர்வகிப்பதைப் பற்றி பரிசீலிக்கும்.

திரு. த. வேணுகோபால் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த விடுதிகளை சுற்றுலாத் துறையின் மூலம் எடுத்துக் கொள்ளவில்லையென்றாலும் வட ஆற்காடு மாவட்டத்திலே சாத்தனூர் அணை தமிழ்நாட்டில் சுற்றுலாப் பயணிகளைக் கவரக்கூடிய பகுதியாக இருக்கிற காரணத்தால் அங்கு சுற்றுலா மையத்தின் மூலமாக, சுற்றுலா விடுதிகள் கட்ட ஏற்பாடு செய்ய அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, ஏற்கனவே வசதிகள் இருக்கிற இடங்களில் புதிதாக சுற்றுலாத் துறையின் மூலம் விடுதிகள் கட்டுகிற திட்டம் இப்பொழுது இல்லை.

## திருவரம்பூர் பி.எச்.இ.எல். நிறுவனம்

*291—(*வினா எண் 13982)* திரு. எம். அண்ணாதாசன் : மாண்புமிகு சட்டம் மற்றும் தொழில்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) திருவரம்பூர் பி.எச்.இ.எல். நிறுவனத்திற்காக நிலம் கொடுத்தவர்களில் எத்தனை பேருக்கு வேலை அளிக்கப்பட்டுள்ளது ?

(ஆ) நிலம் கொடுத்த குடும்பத்தைச் சேர்ந்த ஒருவருக்கு வேலை அளிக்க அந்நிறுவனத்தை அரசு வற்புறுத்துமா ?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : (அ) மற்றும் (ஆ) மத்திய அரசு, உள்துறை நிலமிழந்தவர்களுக்கு வேலை அளிப்பது பற்றி ஏற்கனவே பொதுவான ஒரு அறிக்கையினை வெளியிட்டுள்ளது. அதன் அடிப்படையில் நிலமிழந்தோருக்கு வேலை வாய்ப்பு அளிக்கப்படுகிறது. இதுவரை 56 நபர்களுக்கு இந்நிறுவனத்தில் வேலைவாய்ப்பு அளிக்கப்பட்டுள்ளது.



1984 மார்ச் 13]

திரு. தி. கா. நல்லப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொழிற்சாலைகளுக்கு இடம் தருகின்ற பொழுது திருவரம்பூரில் மட்டுமல்லாமல் பல்வேறு இடங்களில் தொழிற்சாலைகளுக்கு நிலத்தை எடுக்கும் போது, அந்த நிலத்தை கொடுத்தவர்களுடைய குடும்பங்களுக்கு வேலை கிடைக்காமல் இருக்கிறது. நிலத்தை எடுக்கும் போது அந்தக் குடும்பத்தைச் சேர்ந்த ஒருவருக்கு வேலை கொடுப்பதாகக் கூறி நிலத்தை எடுக்கிறார்கள். நிலத்தை எடுத்த பிறகு அந்த வாக்குறுதி புறக்கணிக்கப்படுகிறது. ஆகவே, நிலத்தை இழந்த குடும்பத்தைச் சேர்ந்த ஒருவருக்கு வேலை கொடுக்க நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறியுள்ளவாறு தொழிற்சாலைகளை அமைக்க தனியார் நிறுவனமோ, பப்ளிக் செக்டார் அமைப்புகளோ, முன்வருகின்றபொழுது-அது மைய அரசு, மாநில அரசு, தனியார் எதுவாக இருந்தாலும் —நிலத்தைக் கையகப்படுத்துகிறபோது அந்த நிலத்திற்குச் சொந்தக்காரர்களுக்கு—அவர்கள் குடும்பத்தைச் சேர்ந்தவர்களுக்கு, குறிப்பாக அன்ஸ்கில்ட் லேபர் என்ற முறையிலே வேலைவாய்ப்பு தர வேண்டுமென்று ஏற்கனவே ஆணை இருக்கிறது. பரவலாக அது நடைமுறையில் கடைபிடிக்கப்படாத தகவலும் அரசுக்கு வந்திருக்கிறது. இது உண்மையிலேயே வேதனை அளிக்கக்கூடிய ஒன்றாக இருக்கிறது. மாநில அரசைப் பொறுத்த வரையிலும் எதிர்காலத்தில் கடுமையான நடவடிக்கைகள் எடுத்து, மைய அரசிடம் அதுகுறித்து தொடர்பு கொண்டு, நிலத்தைக் கையகப்படுத்தும்போது, நிலம் இழந்தோருக்கு, அந்தக் குடும்பத்தினருக்கு வேலைவாய்ப்புத் தர முன்னுரிமையை, ஏற்கனவே அறிவித்துள்ளவாறு நடைமுறையில் கொண்டு வர வேண்டுமென இந்த அரசு முயற்சிகளை மேற்கொள்ளும்.

திரு. கே. சௌந்திரராசன் : பேரவைத் தலைவர் அவர்களே, திருவரும்பூரிலுள்ள பெல் நிறுவனத்திற்கு எத்தனை குடும்பங்களிடமிருந்து நிலத்தை எடுத்திருக்கிறார்கள் ? எவ்வளவு ஏக்கர் நிலம் தனியாரிடத்திலேயிருந்து கையகப்படுத்தப்பட்டிருக்கிறது ? அப்படி எடுக்கப்பட்ட நிலச் சொந்தக்காரர்கள் குடும்பங்களில் ஒவ்வொருவருக்கும் வேலை கொடுப்பதாக உத்தரவாதம் கொடுத்துவிட்டு பின்னாலே 56 பேர்களுக்கு மட்டுமே கொடுத்திருக்கிறார்கள் என்றால், அதற்குச் சரியான நடவடிக்கைகள் எடுத்து, மற்றவர்களுக்கு வேலைவாய்ப்புத் தர உத்தரவாதம் தர மாநில அரசு முயற்சிகளை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

[1984 மார்ச் 13

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு பேரவைத்
தலைவர் அவர்களே, 2,908 ஏக்கர் நிலம் கையகப்படுத்தப்பட்
டிருக்கிறது. இதனால் 271 நிலத்தை இழந்த குடும்பத்தினருக்கு
வேலை தர வேண்டுமென்று ஒப்புதல் அளிக்கப்பட்டது. அவர்
களுள் 56 பேர்களுக்கு மட்டுமே அன்ஸ்கில்ட் லேபர் என்ற
முறையிலே இதுகாறும் வேலை தரப்பட்டுள்ளது. ஆனால்,
அதே நேரத்தில் அந்தப் பகுதிக்கு சம்பந்தமில்லாதவர்களுக்கு
அன்ஸ்கில்ட் லேபரர்ஸ்ஸாக பெல் நிறுவனம் வேலை தந்து,
அந்தப் பகுதியைச் சேர்ந்த நிலத்தை இழந்தவர்களுக்கு வேலை
தராத ஒரு தவறான நிலையை பெல் நிறுவனம் கடைபிடித்
திருக்கிறது. இதுவும் அவர்களுக்கு சுட்டிக்காட்டப்பட்டிருக்கிறது.
அரசு மேலும் இதுகுறித்து மைய அரசோடு தொடர்பு கொண்டு
நடவடிக்கை எடுத்து இந்தக் குறைகளை களைய வேண்டுமென்று
பெல் நிறுவனம் கேட்டுக் கொள்ளப்படும்.

(முற்பகல் 9-10)

திரு. இரா. கருப்பையா : மாண்புமிகு தலைவர் அவர்களே,
இந்த பெல் நிறுவனத்தை அமைப்பதற்காக தங்களுடைய நிலங்
களைக் கொடுத்திருக்கிற விவசாயிகள் 271 பேர்கள் என்று
அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். அதில் 56 பேர்களுக்கு
மட்டுமே வேலை கொடுத்திருக்கிறார்கள். கடந்த 20 ஆண்டு
களுக்கு மேலாக அந்தத் தொழிற்சாலை நல்ல முறையில் இயங்கி
செயல்பட்டு வருகிறது. ஆண்டுதோறும் ஆயிரக்கணக்கான புதிய
தொழிலாளர்களை வேலைக்கு அந்த நிறுவனத்தில் எடுத்துக்
கொண்டிருக்கிறார்கள். இந்த நிலையில் நிலம் இழந்து மீத
மிருக்கிற குடும்பத்தினருக்கு கட்டாயமாக வேலை பெற்றுத்
தருவதற்கு மாநில அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும். வெறும்
பேச்சு வார்த்தைகளின் மூலம் அல்லது கடிதங்களை எழுதுவதன்
மூலம் மட்டுமே அவர்களுக்கு வேலையைப் பெற்றுத் தந்துவிட
முடியுமென்று இந்த அரசு கருதுகிறதா என்பதை அறிய விரும்பு
கிறேன். ஆகவே, கடுமையான நடவடிக்கை மூலம் அவர்களுக்கு
வேலை வாய்ப்பைப் பெற்றுத் தருவதற்கு உரிய நடவடிக்கையை
அமைச்சர் அவர்கள் எடுப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு பேரவைத்
தலைவர் அவர்களே, நான் ஏற்கனவே சொன்னேன். 271
பேர்களுக்கு வேலை தருவதாக, நிலத்தை கையகப்படுத்துகிற
போதே வந்த உடன்பாட்டில் அவர்கள் ஒத்துக் கொண்டார்கள்.
ஆனால் கடந்த 15 ஆண்டுகளாக மாநில அரசு முயற்சிகளை
மேற்கொண்டும், மாவட்ட ஆட்சித் தலைவர் அவ்வப்போது
அந்த நிறுவனத்தோடு தொடர்பு கொண்ட போதிலும், பெல்
நிறுவனம் பல துறைகளில் பல ஆண்டுகளாக விரிவாக்கப்பட்
டிருந்தாலும் கூட அந்தப் பகுதியிலே இருக்கிற மக்களுக்கு வேலை
கொடுக்காமல், வெளியிலே இருந்து பிற பகுதியிலே இருப்பவர்



1984 மார்ச் 13]

களுக்கு அன்ஸ்கில்ட் லேபரர் பதவிகளைக் கொடுத்திருக்கிறார்
கள். அந்தப் பகுதியைச் சேர்ந்த நிலத்தை இழந்த குறிப்பாக
விவசாயிகள், உழவர்கள் குடும்பத்திற்கு வேலை தரவில்லை
என்ற குற்றச்சாட்டு அரசிற்கு தரப்பட்டிருக்கிறது. அரசாங்க
மும் அதை அவர்களுக்கு தெரிவித்திருக்கிறது. மீதம் 215 பேர்
களுக்கு வேலை தருவதில் நடவடிக்கை எடுப்போம் என்று கடந்த
15 ஆண்டுகளாக சொல்லிக் கொண்டே, மற்றவர்களுக்கு கொடுத்து
விடுவதை விவசாயச் சங்கத்தைச் சேர்ந்தவர்களும் சுட்டிக்
காட்டி இருக்கிறார்கள். மீண்டும் மாநில அரசு மத்திய அர
சோடும், பெல் (B.H.E.L.) நிறுவனத்தோடும் நேரடியாகத்
தொடர்பு கொண்டு இந்தக் குறைகளைக் களைவதற்கு உரிய
நடவடிக்கையை எடுக்கும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. என். வரதராஜன் : மாண்புமிகு பேரவைத் தலைவர்
அவர்களே, பெல் நிறுவனம் என்பது இந்தியாவிலும், தமிழ்
நாட்டிலும் ஒரு பெரிய நிறுவனம் ஆகும். நிலத்தை அந்த நிறு
வனத்திற்காக இழந்த குடும்பத்தைச் சேர்ந்தவர்களுக்கு வேலை
அளிப்பதிலே சங்கடங்கள் ஏற்பட்டிருக்கின்றன. சமீபத்திலே
சுப்ரீம் கோர்ட் ஒரு தீர்ப்பை அளித்திருக்கிறது. இவ்வாறு,
தொழில்களுக்கு நிலத்தை எடுக்கிறபோது அந்த நிலத்திற்கு நஷ்ட
யீடு என்று அதை பார்க்கக்கூடாது. அதிலே ஏற்கெனவே
வாழ்க்கை நடத்தி வந்த மக்களுக்கு ஒரு மறுவாழ்வு என்று அந்தப்
பிரச்சினையைப் பார்க்க வேண்டுமென்று சுப்ரீம் கோர்ட் தீர்ப்பு
அளித்திருக்கிறது. அப்படிப்பட்ட சூழ்நிலையில் மத்திய சர்க்கார்
நிறுவனமான பெல் நிறுவனம் விவசாயிகளைப் புறக்கணித்து
வந்திருப்பதைப் பற்றிக் கடுமையான கண்டனத்தைத் தெரிவித்து,
இந்தச் சட்டமன்றத்தின் உணர்வுகளை மத்திய அரசிற்கு நமது
அரசு உணர்த்துமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு பேரவைத்
தலைவர் அவர்களே, தொழிற்சாலைகளுக்காக நிலத்தைக்
கையகப்படுத்துகிற போது அந்தத் தொழில் நிறுவனங்கள் நல்ல
இலாபத்தைப் பெறுகின்றன. ஆனால் விவசாயிகள், உழவர்களைப்
பொறுத்தவரையில் அவர்களுக்கு உரிய காம்பன்சேஷன் கொடுக்க
வேண்டுமென்ற நிலை இல்லாமல், சில நேரங்களில் மார்க்கெட்
வேல்யூ கூட கிடைக்காமல் போய்விடுகிறது. கிடைக்கிற
தொகையை வைத்து நிலத்தை இழந்தவர்கள் தங்கள் குடும்
பத்தைக் கூட நடத்த முடியாத நிலைமைக்கு பாதிக்கப்படு
கிறார்கள் என்பதை அரசு அறியும். சுப்ரீம் கோர்ட்டின் தீர்ப்பும்
அரசினுடைய கவனத்திற்கு வந்திருக்கிறது. எனவே எதிர் காலத்
தில் உழவர்களுக்கு இதுபோன்ற பாதிப்புகள் இல்லாமல் நட
வடிக்கை எடுப்பது, தங்கள் நிலத்தை இழந்தவர்களுக்கு உதவி
கரமாக அமையும் என்பதை அரசு உணர்கிறது. பெல் நிறு
வனத்தினுடைய நிகழ்ச்சி குறித்து மத்திய அரசோடு மாநில அரசு
அவையினுடைய உணர்வுகளைத் தெரிவித்துத் தொடர்பு கொள்
ளும்.

பழனி தாலுக்காவை பின்தங்கிய பகுதியாக அறிவிக்கும் திட்டம்.

292—(*வினா எண் 16241) திரு. என். பழனிவேல் : மாண்புமிகு சட்டம் மற்றும் தொழில் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பழனி தாலுகாவை தொழில் ரீதியாகப் பின்தங்கிய பகுதியாக அறிவிக்க கோரி வேண்டுகோள் ஏதேனும் வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் மீது எடுத்துள்ள நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : (அ) ஆம்.

(ஆ) பழனி வட்டம் தற்போது மாநில அரசின் 15 சதவீத மூலதன மானியத் திட்டத்தின் கீழ் பின்தங்கிய வட்டமாக அறிவிக்கப்பட்டுள்ளது. இப்பகுதியில் துவங்கப்படும் தொழில்கள், அவைகளின் நிலையான மூலதனத்தில் 15 சதவீதம் அல்லது ரூ. 15 இலட்சம் இதில் எந்தத் தொகை குறைவோ அத் தொகையை மான்யமாகப் பெற தகுதி பெறும்.

திரு. என். பழனிவேல் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பழனி தொகுதியை பின்தங்கிய பகுதியாக அறிவித்து ஓராண்டு காலம் ஆகிவிட்டது. ஆனால் இதுவரையில் அந்த வட்டாரத்தில் புதிதாக எந்தத் தொழிலும் ஆரம்பிக்கப்பட்டதாக தெரியவில்லை. அதற்கான காரணம் என்ன என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா ? இதேபோல் சென்ற ஆண்டு தமிழகத்தில் தொழில் துறையின் பின்தங்கிய பகுதி எவையெவை ? அவற்றிற்கு அரசின் மூலம் எந்த அளவிற்கு உதவிகள் செய்யப்படுகின்றன என்பதை அறிவிக்க இயலுமா ?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பழனி தொகுதி பின்தங்கிய பகுதியாக அறிவிக்கப்பட்ட பின்னாலே புதிய தொழில்கள் எதுவும் ஆரம்பிக்கப்படவில்லையே என்று கேட்டார்கள். கண்டிப்பாக புதிய தொழில்கள் அந்தப் பகுதிக்கு வரும். மாண்புமிகு உறுப்பினர் கூட அந்தப் பகுதிக்கு புதிய தொழில்கள் வர வேண்டும் என்பதற்கு முயற்சிகளை மேற் கொள்ள வேண்டும். அந்தப் பகுதி மக்களும் அதற்கு உறுதுணையாக இருப்பார்கள் என்ற வகையில் முயற்சிகள் மேற் கொள்ளப்பட வேண்டும். சென்ற ஆண்டு இத்தகைய அறிவிப்பு வெளியிட்டபோது, கன்னியாகுமரி மாவட்டத்தில் தோவாளை, சேலம் மாவட்டத்தில் ராசிபுரம், மதுரையில் பழனி, கோவையில் அவினாசி, நீலகிரியில் குன்னூர், பெரியார் மாவட்டத்தில் தாராபுரம், நெல்லையில் ராதாபுரம், தென்னாற்காடு மாவட்டத்தில் வானூர், புதுக்கோட்டையில் கந்தர்வ கோட்டை ஆகிய பகுதிகளை பின்தங்கிய பகுதிகளாக அறிவித்து இருக்கிறோம். நான் ஏற்கெனவே குறிப்பிட்டதைப் போல, அந்தப் பின் தங்கிய பகுதிகளுக்கான சலுகை, அத் தொழில்களின் நிலையான மூலதனத்தில் 15 சதவீதம் அல்லது ரூ. 15 இலட்சம் இதில் எந்தத்தொகை குறைவோ அத்தொகையை மானியமாகத் தரப்படுகிறது.



திரு. என். பழனிவேல் ; தலைவர் அவர்களே, சலுகை அளிப்பதைப் பொறுத்தவரையில் 15 சதவீதம் அல்லது 15 லட்சம் இதில் எந்தத் தொகை குறைவோ அது தரப்படும் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவித்தார்கள். நான் ஏற்கெனவே கேட்டுக் கொண்டதைப்போல, அங்கே விரைவாகப் புதிய தொழில்களை தமிழக அரசு சார்பாகவே துவக்க முயற்சிகள் மேற்கொள்ளப்படுமா ? அப்படி பின்தங்கிய பகுதி என்று அறிவிக்கப்பட்ட பின்னாலே, அதற்கு மத்திய அரசிடமிருந்து ஏதாவது சலுகை கிடைக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தப் பகுதிகளுக்கு மாநில அரசின் சலுகைகள் தான் கிடைக்கின்றன. எந்தெந்தப் பகுதிகளில் அரசு சார்பாக தொழில்கள் துவங்க முடியுமோ அந்தந்தப் பகுதிகளில் தொழில் துவங்க அரசு முயற்சிகளை எடுத்துக் கொண்டு வருகிறது. அப்படி தொழில்கள் துவங்குகிறபோது, ஜாயின்ட் செக்டார் மூலமாகவும், பப்ளிக் செக்டார் மூலமாகவும் தொழில்கள் துவங்கப்படுகின்றன. பின் தங்கிய பகுதிகளில் உள்ள சலுகைகளைப் பயன்படுத்தி புதிய தொழில்களைத் துவங்க தனியார் துறையினரும், பிரைவேட் செக்டாரும் முன் வர வேண்டும் என்பது அரசின் கொள்கை. அந்தப் பகுதிக்கு மத்திய அரசின் சலுகை எதுவும் கிடைப்பது இல்லை.

வேலூர் கூட்டுறவு சர்க்கரை ஆலை.

293—(*வினா எண் 18930) திரு. இல. பலராமன் : மாண்புமிகு சட்டம் மற்றும் தொழில் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வடாற்காடு வேலூர் கூட்டுறவு சர்க்கரை ஆலைக்காக 1981-82, 1982-83, 1983-84 ஆம் ஆண்டுகளில் பதிவு செய்த நிலத்தின் விஸ்தீரணம் எவ்வளவு ?

(ஆ) ஆலைக்கு வந்த கரும்பு, உற்பத்தி செய்யப்பட்ட சர்க்கரை அளவு யாது ?

[1984 மார்ச் 13

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :**

(அ) பதிவு செய்த கரும்பு பகுதி—

| | | |
|---|---|---|
| 1981-82 | .. | 11,595 ஏக்கர். |
| 1982-83 | .. | 12,428 ஏக்கர். |
| 1983-84 (மதிப்பீடு). | .. | 8,990 ஏக்கர். |

(ஆ) ஆலைக்கு வந்த கரும்பு.

| | | |
|---|---|---|
| 1981-82 | .. | 3,14 இலட்சம் டன்கள். |
| 1982-83 | .. | 2.68 இலட்சம் டன்கள். |
| 1983-84 (மதிப்பீடு). | .. | 2.00 இலட்சம் டன்கள். |

ஆலையில் உற்பத்தியான சர்க்கரை அளவு.

| | | |
|---|---|---|
| 1981-82 | .. | 27.4 ஆயிரம் டன்கள். |
| 1982-83 | .. | 22.6 ஆயிரம் டன்கள். |
| 1983-84 (மதிப்பீடு) | .. | 17.5 ஆயிரம் டன்கள். |

**திரு. இரா. கருப்பையா :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த வடாற்காடு மாவட்டத்தில் உள்ள வேலூர் கூட்டுறவு சர்க்கரை ஆலை, கடந்த மூன்றாண்டுகளில் உள்ள நிலைமைகளைப் பார்க்கும் நேரத்தில், படிப்படியாக அந்த ஆலையில் பதிவு செய்யக்கூடிய கரும்பின் அளவு குறைந்து வருவது தெரிகிறது. குறிப்பாக 1983-84 ஆம் ஆண்டில் 8,990 ஏக்கர் நிலத்தில் பயிரிடுபவர்கள்தான் பதிவு செய்து இருக்கிறார்கள். சுமார் 2 இலட்சம் டன்தான் அரவை செய்யப்பட்டதாகத் தெரிகிறது. இதே நிலையில் அந்த ஆலையின் சர்க்கரை உற்பத்தி போனால், அது கழுதை தேய்ந்து கட்டெறும்பு ஆனதுபோல் ஆகிவிடும். இப்படிப்பட்ட நிலைமைக்கு அந்த ஆலையின் தனி அதிகாரி, நிர்வாகப் பொறுப்பில் உள்ளவரின் திறமையற்ற செயல் தான் காரணம் என்று சொல்லப்படுகிறது. இதன் காரணமாகத் தான் இப்படிப்பட்ட நிலைமை அங்கே இருக்கிறது என்னும் புகாரும் அரசுக்கு அனுப்பப்பட்டு இருப்பதாகக் கூறப்படுகிறது. ஆகவே, அதைத் தடுத்து நிறுத்தி, அந்த ஆலை, முறையாக நல்ல முறையில் நடப்பதற்குத் தேவையான நடவடிக்கைகளை அரசு எடுக்குமா ?



1984 மார்ச் 13]

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :** தலைவரவர்களே, அங்கே இருக்கிற அதிகாரிகளின் திறமை குறைவு என்பதுபற்றி அரசின் கவனத்திற்கு இதுவரை எதுவும் வரவில்லை. அந்த ஆலையைப் பொறுத்தவரையில் 1978-79-ல் 85 இலட்சம் ரூபாய் நஷ்டம் 1979-80-ல் அந்த நஷ்டம் 6 இலட்சம் என்ற அளவுக்குக் குறைக்கப்பட்டு, 1981-82-ல் சுமார் 52 இலட்சம் ரூபாய் இலாபம் அடைந்திருக்கிறது. 1982-83 ஆம் ஆண்டில் அந்த இலாபம் 148 இலட்சமாக உயர்ந்திருக்கிறது. சென்ற ஆண்டிலே பாதி காலம் வரையில் 4,18,000 ரூபாய் இலாபம் ஈட்டியிருக்கிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். சர்க்கரையைப் பொறுத்த வரையில் அரைவையின் அளவு குறையக் காரணம் அவர்களுக்கே நன்றாகத் தெரியும். நிர்வாகத்தின் திறமைக் குறைவு என்று சொல்ல முடியாது. காரணம் இயற்கை பொய்த்து விட்ட காரணத்தால் கரும்பு உற்பத்தி போதுமான அளவுக்கு இல்லை. அதோடு ரெக்கவரி அளவும் குறைந்துவிட்டது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(முற்பகல் 9-20)

**திரு. கு. அன்பழகன் :** தலைவரவர்களே, கரும்பை பதிவு செய்யும் போது அந்த ஆண்டு கரும்பு விலை விவசாயிகளுக்குத் தெரியவருவதில்லை. அரைவை தொடங்கும்போதுதான் விலை அறிவிக்கப்படுகிறது. ஆகவே விவசாயிகள் அதிக அளவில் கரும்பை பதிவு செய்ய ஊக்கமளிக்கின்ற வகையில் விலையை முன்னதாகவே நிர்ணயம் செய்து, அறிவிக்க ஏற்பாடு செய்யப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :** தலைவரவர்களே, மத்திய அரசு இன்றையதினம் கரும்பு விலை 135 ரூபாய் என்று அறிவித்திருக்கிறது. மாநில அரசைப் பொறுத்தவரையில் மேற்கொண்டு 25 ரூபாய் சேர்த்து 160 ரூபாயாகத் தருகிறது. அதைப்பொறுத்த வரையில் மேலும் That is linked to the local recovery at the rate of 8.5 per cent. என்று கணக்கிடுகிறார்கள். அதை எல்லாம் சேர்த்து 186 ரூபாய் சராசரியாக கரும்பு விவசாயிகளுக்கு கொடுக்கப்பட்டு வருகிறது. இப்படி சராசரியாக 186 ரூபாய் தரப்படுகிறது என்பது விவசாயிகளுக்குத் தெரியும்; முன்கூட்டி அறிவிக்க வேண்டியதில்லை. ஆனால் மத்திய அரசை 200 ரூபாய் விலை நிர்ணயிக்கும்படி மாநில அரசு கேட்டுக்கொண்டிருக்கிறது. லெவி சர்க்கரையின் விலையை நிர்ணயம் செய்கிறபோது, 135 ரூபாய் என்று மத்திய அரசு கரும்பு விலையை இப்போது நிர்ணயிப்பதை ஒட்டி நிர்ணயம் செய்யாமல் மாநில அரசு கேட்டிருக்கிற 200 ரூபாய் என்ற அளவுக்கு உயர்த்த வேண்டுமென்று கேட்டிருக்கிறது. விலை உயர்ந்தால் யாருக்கும் பாதிப்பு ஏற்படாது.

திரு. பெ. சு. திருவேங்கடம் : தலைவரவர்களே, வேலூர்
சர்க்கரை ஆலை நஷ்டத்தில் அல்லது குறைந்த இலாபத்தில்
தான் இயங்கிக் கொண்டிருக்கிறது என்று அறிவித்தார்கள்.
காரணம், ஏற்கனவே சொல்லியதுபோல அங்கே இருக்கிற
அதிகாரிகள் ஊக்கமாகச் செயல்படவில்லை என்பது ஒன்று.
இரண்டாவதாக போளூர் பகுதியிலிருந்து கூட கரும்பு செல்
கின்ற ஒரு சூழ்நிலை இருக்கிறது. ஆனால் உரிய முறையிலே
நடவடிக்கை எடுத்து, அந்த கரும்பை பதிவு செய்ய அதிகாரிகள்
இல்லை. மாண்புமிகு உறுப்பினர் அன்பழகன் கூறியதுபோல
கரும்பை பதிவு செய்யும்போது விவசாயிகளுக்கு என்ன விலை
என்பது தெரியாததும் ஒரு காரணம். ஆகவே, முன்கூட்டியே
விலையை அறிவிக்கவும் அரசாங்கம் தக்க நடவடிக்கை எடுக்
குமா என்று நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : தலைவரவர்களே,
முன்னாலேயே விலையை நிர்ணயம் செய்து அறிவிப்பார்களா
என்பதற்கு நான் ஏற்கனவே பதில் சொன்னேன். 186 ரூபாய்
சராசரியாகத் தரப்படுகிறது. கடந்த ஆண்டுகளில் கடும்
வறட்சியின் காரணமாக கரும்பு உற்பத்தி குறைந்து விட்டது
என்பது மாண்புமிகு உறுப்பினர் திரு. திருவேங்கடம் அவர்
களுக்குத் தெரியும். காரணம், அவரும் ஒரு உழவர். வெல்லத்
தின் விலை அதிகமாக இருக்கிற காரணத்தால், விவசாயிகளைப்
பொறுத்தவரையில் வெல்லத்திற்கு கரும்பைக் கொடுப்பது
இலாபமாக இருப்பதால், சென்ற ஆண்டு இழப்பைப் ஈடு
செய்ய அரைவைக்குத் தருவதை குறைத்து, வெல்லத்திற்கு
கொடுத்து விடுகிறார்கள். ஆலைக்கு கரும்பு போதுமான அள
வுக்கு வராததால் ஆலைக்கு நஷ்டம் ஏற்படுகிறது. வெல்லத்
திற்கு கரும்பை கொடுப்பதால் விவசாயிகளுக்கு இலாபம்
வருகிறது. உழவர்களுக்கு எதிரான ஒரு யோசனையை மாண்பு
மிகு உறுப்பினர் அவர்கள் கூறமாட்டார்கள் என்று கருதுகிறேன்.
ஆக, மழை பொய்த்ததால் கரும்பு உற்பத்தி குறைந்து ஆலைக்கு
நஷ்டம் ; வெல்லத்திற்குக் கொடுப்பதால் விவசாயிகளுக்கு
இலாபம். இதுதான் இருக்கிற பிரச்சினை.

திரு. என். ஏ. பூங்காவனம் : தலைவரவர்களே வேலூர்
கூட்டுறவு சர்க்கரை ஆலை என்பது என்னுடைய தொகுதியில்
உள்ளது. இந்த ஆலை 1980-81, 1981-82, 1982-83 ஆகிய
இந்த ஆண்டுகளில் உற்பத்தி விகிதம் படிப்படியாக குறைந்து
8,000-க்கு வந்திருக்கிறது என்று அமைச்சரவர்கள் சொன்
னார்கள். கரும்பை பதிவு செய்த நிலங்களிலிருந்து முறையாக
கரும்பை எடுப்பதில்லை என்ற புகார் அரசுக்குத் தெரியுமா
என்பது ஒன்று.

இரண்டாவதாக, பதிவு செய்யப்படாத பலரிடமிருந்து
1981-82 ஆம் ஆண்டுகளில் நிறையக் கரும்பு வாங்கப்பட்டிருக்
கிறது என்ற தகவலை அரசு அறியுமா ? இந்த ஆலையில்





தனிப்பட்டவர்களிடமிருந்து வாங்கப்பட்ட கரும்புக்கு காலா
காலத்தில் முறையாகப் பணம் கொடுப்பதில்லை என்பதை
அரசு அறியுமா ? ஆலைக்குள் பணியாற்றுகிற ஊழியர்
களுக்கிடையே நல்ல சுமுகமான சூழ்நிலை இல்லாததால்
11,000 டன் உற்பத்தி என்பது 8,000 டன்னாகக் குறைந்
திருப்பதை அரசு அறியுமா ? அங்குள்ள அதிகாரிகள் முறை
யாக நடவடிக்கை எடுக்காததால்தான் இந்தக் குறைவு
ஏற்பட்டிருக்கிறது என்பதை அரசு அறியுமா, அப்படியானால்
அதைத் தவிப்பதற்கு அரசு என்னென்ன நடவடிக்கைகள்
எடுக்க இருக்கிறது ?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : துணைக் கேள்வி கேட்
கும்போது அதில் ஒரு கேள்விதான் இருக்க வேண்டும் ;
பலவற்றை ஒன்றாக இணைக்க முடியாது.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : தலைவர் அவர்களே,
இந்த ஆலையில் பதிவு செய்யப்பட்ட உழவர்களிடமிருந்து
கரும்பு எடுக்கவில்லையென்று உறுப்பினர் அவர்கள் சொன்
னார்கள், அது தவறு. நல்ல விளைச்சல் இருந்து அதிகப்படியான
கரும்பு உற்பத்தியாகிற நேரத்தில் வெல்லம் அடித்து, நான்
ஏற்கனவே சொன்னதைப்போல, உழவர்கள் பலன் பெற
முடியாத காரணத்தால் எல்லோரும் கரும்பாலைக்கு கரும்பை
அனுப்ப முனைகிறார்கள். 10, 11 மாதம் கரும்பை அறுவடை
செய்து வைத்திருந்தால் பூ பூத்து நாளுக்கு நாள் ரிக்கவரி
குறைந்துவிடும். எல்லா விவசாயிகளுக்கும் ஒரே நாளில் கரும்பை
எடுத்து வெட்டி ஆலை அரைக்கவேண்டுமென்றால் அது
முடியாது. ஷெட்யூல், இந்த அளவிற்குத்தான் செய்யமுடியும்
என்றிருக்கிறது. பதிவு செய்யாதவர்கள் கரும்பை அடுத்த
ஆண்டு எடுத்ததாகச் சொன்னார்கள். அது உண்மைதான்.
அதற்குக் காரணம் இருக்கிறது.. பதிவு செய்யப்பட்டவர்
களுடைய கரும்பை எடுத்துவிட்டு பிறகு உழவர்கள் வந்து
வெல்லம் அடித்தால் லாபம் இல்லை என்பதால் 11 மாதம்,
14 மாதங்கள் ஆகியும் கரும்பை வெட்டி விற்கமுடியாமல்
நஷ்டம் ஏற்பட்டு அரசை அணுகி, அரசு ஆலோசனையைப்பெற்று
மேற்கொண்டு ஆலைப்பணியை நீட்டிப்புச் செய்து அந்த உழவர்க
ளின் நலன் கருதி அந்தக் கரும்பு எடுக்கப்பட்டு அரைக்கப்பட்டது
பணம் தரப்பட்டிருக்கிறது. உழவர்களுக்குள் ஒற்றுமை இல்லை
என்ற தகவலைச் சொல்லியிருக்கிறார்கள். உழவர்களுக்
கிடையே ஒற்றுமை இல்லை என்றால் அந்த ஒற்றுமையை
ஏற்படுத்துவது உங்கள் கடமை, எங்கள் கடமை, நம் கடமை.
அதிகாரிகள் தக்க நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று
சொல்கிறார்கள். உழவர்களிடையே ஒற்றுமை ஏற்பட அதி
காரிகள் நடவடிக்கை எடுப்பார்கள், உழவர்கள் நலனுக்காக
நடவடிக்கை எடுப்பார்கள். எந்த அதிகாரி தவறு செய்தாலும்
அரசாங்கம் தக்க நடவடிக்கை எடுக்கும்.

1984 மார்ச் 13]

## கோவை மாவட்ட நீதிமன்றத்திற்கான கூடுதல் கட்டிடம் கட்டும் திட்டம்

294—(*வினா எண் 2 1523) திரு. மா. சின்னராசு : மாண்புமிகு சட்டம் மற்றும் தொழில் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) கோவை மாவட்ட நீதிமன்றத்திற்கான கூடுதல் கட்டிடம் கட்டும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) இப்பணி எப்போது துவக்கப்படும்?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : (அ) ஆம்.

(ஆ) கோவை மாவட்ட நீதிமன்றத்திற்கு கூடுதல் கட்டிடம் கட்டுவது குறித்த திட்டம் மற்றும் மதிப்பீடு சென்னை உயர்நீதி மன்றத்திடமிருந்து இன்னும் பெறப்படவில்லை. இது குறித்து திட்டம் மற்றும் மதிப்பீடு பெறப்பட்ட உடனே அரசின் நிதிநிலைக்கேற்ப நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. மா. சின்னராசு : தலைவரீ அவர்களே, கோவையில் தொழிலாளர் நீதி மன்றம் மற்றும் குற்றவியல் நீதிமன்றங்கள் நகரின் நான்கு பகுதிகளில் வெவ்வேறு இடங்களில் அமைக்கப்பட்டிருப்பதால் வழக்கறிஞர்களும் வழக்காட வருகிற பொது மக்களும் மிகுந்த பாதிப்புக்கு ஆளாகிறார்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நேரில் கவனம் செலுத்தி இந்த நீதிமன்றத்திற்கான ஆக்க நடவடிக்கைகளை எடுத்து வந்தார்கள். நீதிமன்றத்திலிருந்து அதற்கான திட்ட மதிப்பீடுகள் கொடுக்கப்படாமல் இருப்பதாக அமைச்சர் அவர்கள் பதிலில் தெரிவித்தார்கள். ஆகவே இதன் அவசரத்தைக் கருதி வெகு விரைவில் அதற்கான திட்ட மதிப்பீட்டினை உயர்நீதிமன்றத்திலிருந்து பெற்று அரசாங்கம் அதற்கான அங்கீகாரத்தை இந்த ஆண்டு வழங்குமா?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : தலைவர் அவர்களே, அந்தப் பகுதிக்கு ஒருங்கிணைந்த நீதிமன்றத்தின் கட்டிட அமைப்பு தேவை என்பதை அரசாங்கம் உணர்ந்து மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதுபோல் அரசாங்கம் நடவடிக்கைகளை மேற்கொண்டது. கிட்டத்தட்ட 141 லட்சம ரூபாய் அதற்குச் செலவாகும் என்று கணிக்கப்பட்டது. உயர்நீதி மன்றத்தைப் பொறுத்தவரையில் அந்தப் ப்ளானைப் பொறுத்து, டிஸைன் அண்ட் ப்ளான்-ல் சில மாற்றம் செய்து அது குறித்து தங்கள் கருத்தை அறிவிப்பதாகச் சொன்னார்கள். மாநில அரசு உயர் நீதிமன்றத்தினிடமிருந்து விரைவில் அவர்கள் கருத்தைப் பெற்று, தக்க நடவடிக்கைகள் எடுக்கும்.

1984 மார்ச் 13]

திரு. மா. சின்னராசு : தலைவர் அவர்களே, கட்ட இருக்கும் அந்தக் கட்டிடத்தில் வழக்கறிஞர்கள் சேம்பரும் சேர்க்கப்பட் ருக்கிறதா ?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : தலைவர் அவர்களே, வழக்கறிஞர்களுக்கு அதில் இடம் தாமதத்திற்கு ஒரு காரணம், திருத்தம் செய்யவேண்டும் வேண்டும் என்று அந்தத் திட்டத்தில் கேட்டுக் கொண்டிருக்கிறது. என்று உயர்நீதிமன்றத்தை அரசு ஒத்துக்கொண்டிருக்கிறது. அவர்கள் கருத்து உயர்நீதிமன்றமும எடுக்கப்படும். தெரிந்தவுடன் நடவடிக்கைகள்

(முற்பகல் 9-30)

திரு. கு. ரமணி : தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் இந்தக்கட்டிட வேலைகளை அதற்கான ஒப்புதலைப் பெற்று, குறிப்பிட்டார்கள். ஆனால் சீக்கிரமாக முடிக்கப் போவதாகக் அநேகமாக எல்லாக் கட்டிடம், கோயமபுத்தூரில் நீதிமன்றங்கள் செஷன்ஸ் கோர்ட் கட்டிடம் களும் பாழாகி இருக்கின்றன. மற்றக் கட்டிடங்கள் ஒன்றுதான் புதிய கட்டிடமாக இருக்கிறது. முடியாத அளவுக்கு, பார்ப்பதற்கே ரொம்ப பழைய, பயன்படுத்த அப்படிப்பட்ட ஒரு நிலை இருக்கிறது. கஷ்டமாக இருக்கிறது. அதைப்பற்றி ஒரு சரியான கவனம் ஆனால், இதுவரையில் செலுத்தாமல் இருந்ததற்கு என்ன காரணம் ? சென்ட்ரல் ஜெயில் காம்பவுண்டில் ஏராளமான புதிய கட்டிடங்களைக் கட்டிக் கொண்டு வருகிறார்கள். அங்கே ஒரு பெரிய பரப்பளவில், தொழில் கோர்ட் உள்பட மற்ற எல்லா நீதிமன்றங்களின் கட்டிடங்களையும் கட்ட இடம் இருக்கிறது. அது அரசினுடைய சொந்த இடமாக இருக்கிறது. அதை அரசு எடுத்து, அங்கே கட்டிடங்கள் கட்டுவற்குப் பதிலாக வேறு பல இலாக்காக்களுக்கு ஒதுக்கிவிட்டு, இதற்கு இப்போது ஒப்புதலுக்காக காத்திருக்க வேண்டிய காரணம் என்ன ? எந்தக் காலத்திற்குள் கட்டி முடிக்கப்படும் ?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோவையிலே சிறைச்சாலைக்கு அருகே காலி இடங்கள் அரசுக்குச் சொந்தமாக இருப்பது உண்மைதான். நீதிமன்றங்கள் கட்டுவதற்கு இடமில்லை என்ற பிரச்னையில்லை; இடம் தாராளமாக இருக்கிறது ; கிடைக்கிறது. சிறைச்சாலை அருகே பல கட்டிடங்கள் எழுப்புவதாக மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னார்கள். அது ஏழாவது திட்டத்தின் கீழ் சிறைச்சாலைகள் கட்டிடங்கள் கட்டுவதற்காக 6, 7 கோடி ரூபாய் மத்திய அரசால் ஒதுக்கப்பட்டிருக்கிறது. ஆனால், மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கவனத்திற்கு கொண்டுவர விரும்புவது, இந்த அரசைப் பொறுத்த வரைக்கும் நீதிமன்றங் களிலே பணியாற்றும் நீதிபதிகளுக்கு எல்லா வசதிகளையும் செய்து கொடுக்க வேண்டுமென்பதாகும். இந்த அடிப்படையில்

[1984 மார்ச் 13

நீதிபதிகளுக்கு வாகன வசதிகள், சிராக்ஸ் காப்பி எடுக்கும் எந்திரங்கள் தருவது., டேப் ரிக்கார்டர் தருவது, டெலிபோன் வசதிகள் செய்து தருவது போன்ற பல பணிகளைச் செய்திருக்கிறோம். ஆனால், கட்டிடங்களைப் பொறுத்த வரைக்கும் இன்றல்ல, நேற்றல்ல, கடந்த 35 ஆண்டுகளாக நீதிமன்றங்களுக்கு நிதி ஒதுக்கும் முறையில் மத்திய அரசு ஏதோ இதை கவனத்தில் கொள்ளாமல் நான்-பிரையாரிடி என்ற முறையில் ஒதுக்கிவிட்டது. அப்படி கூடாது, அதிகப்படியான நிதியை ஒதுக்க வேண்டுமென்று மத்திய அரசை, மாநில அரசு வற்புறுத்தி, இந்த அடிப்படையில் பல இடங்களில் இடிந்து விழக்கூடிய கட்டிடங்களைக் கட்டுவதற்கு மத்திய அரசிடமிருந்து மாநில அரசிற்கு பணம் கிடைக்கவில்லை யென்றாலும், மாநில அரசு 3 கோடி ரூபாய் ஒதுக்கி, இந்தப் பணியை மேற்கொண்டிருக்கிறோம். இந்த அடிப்படையில் இந்தப் பிரச்னையை அணுகி, இந்தக் கட்டிடத்தைப் பொறுத்தவரைக்கும் விரைவில் கட்டி முடிக்க தக்க நடவடிக்கையை அரசு மேற்கொள்ளுமு.

**சுருளிப்புட்டியில் ஆரம்ப் சுகாதார நிலையம் அமைக்கும் திட்டம்.**

295 (*வினா எண். 14172)—திரு. ஆர். டி. கோபாலன் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கம்பம் ஊராட்சி ஒன்றியத்தைச் சேர்ந்த சுருளிப் பட்டியில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கும் திட்டம் அரசு பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

**மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே :** (அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

**மருத்துவக் கல்வியை தமிழில் போதிக்கும் திட்டம்**

296 (*வினா எண். 14479)—திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தமிழகத்தில் மருத்துவக் கல்வியைத் தமிழில் போதிக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

**மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே :** ஆம்.

**திரு. என். வரதராஜன் ;** பேரவைத் தலைவர் அவர்களே, இன்று மருத்துவத் துறையில் தாய் மொழியிலே பயிற்சி பெறுவதால், மிக துரிதமாக வளர்ச்சி அடையவும், நுண்ணியமாக கல்வியைக் கற்றுக்கொள்ள முடியும் என்று, உலகத்திலுள்ள பல நாடுகள் அப்படி முன்னேறி வருகிறது. அண்டை மாநிலத்திலேகூட அவ்வாறு தாய் மொழியிலே பயிற்சி நடத்திக்



1984 மார்ச் 13]

கொண்டு வருவதாகத் தெரிகிறது. அமைச்சர் அவர்களும் 'ஆம்' என்று சொன்னார்கள். அதற்கான முயற்சி என்ன எடுக்கப்பட்டிருக்கிறது ? எவ்வளவு காலத்தில் இது அமுலுக்கு வரும் என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதற்கான குறிப்பு ஆங்கிலத்தில் இருக்கிறது. நான் அதை அப்படியே படித்து விடுகிறேன். ஏனென்றால், அது தெளிவாக இருக்கிறது.

"The Government of India called for the views of the State Government in April 1978 on the proposal to replace English as the medium of instruction in the different medical colleges in the country by the regional languages of the State Government in keeping with the policy of giving importance to the regional language in technical and professional elucation including medical education. A reply was given to the Government of India in August 1978 saying that a Committee consisting of Medical Educationists was proposed to be contituted to chalk out a programme for change of medium of instruction in Medical Colleges from English to Regional Languages and to lay lown guidelines therefor"

என்ற கடிதத்தை நாம் அவர்களுக்கு எழுதியிருக்கிறோம். ஆகவே இந்த முயற்சியிலே தமிழக அரசு ஈடுபட்டுக் கொண்டிருக்கிறது. ஆனால், இதிலே சிக்கல் என்னவென்றால், மத்திய அரசாங்கத்தைப் பொறுத்த வரையில் அவர்கள் எல்லா மாநிலங்களுக்குமு தங்கள் தாய்மொழியிலே இந்தப் பயிற்சியைத் தருவதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும் என்று கருதுகிறார்கள். அப்படி கொஞ்சம் மறைமுகமாக வற்புறுத்திக் கொண்டிருக்கிறார்கள். நாமு அப்படி செய்துவிடலாம். ஆனால், இறுதியில் அவர்களுடைய நோக்கமு — நான் நினைக்கின்றேன், அங்கே அவர்கள் இந்தியைக் கொண்டு வந்து, இங்கே ஒவ்வொரு மாநிலத்திலும் தாய் மொழியைக் கொண்டுவந்து, பிறகு அறவே ஆங்கிலத்தை எடுத்து விட்டு, இந்தியில் படித்தவர்கள் தான் டாக்டர்களாக வரக்கூடிய ஒரு அச்சமு இருக்கிறது. மிக ஜாக்கிரதையாக இருக்க வேண்டும் ஆகவே உறுப்பினர்கள் சொன்ன கருத்துகளுக்கும் நாம் மதிப்பு தரயிருக்கிறோம் ; அதையும் நாம் பார்க்கிறோம் என்று மாண்புமிகு உறுப்பினர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. பெ. சு. திருவேங்கடம் :** தலைவர் அவர்களே, மருத்துவக் கல்லூரியில் தமிழிலே சொல்லித் தரப்படுமா என்பதற்கு அமைச்சர் அவர்கள் ஆம் என்றார். தமிழிலே பேசுவதற்கே தெரியவில்லை. அப்படி அவர்களைத் தேர்ந்தெடுக்கிறபோது தமிழிலே எப்படி பாடம் போதிக்க முடியும் ?

[1984 மார்ச் 13

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மருத்துவக் கல்லூரியிலே படிக்கக்கூடியவர்களுக்கு தமிழ் தெரிந்திருப்பது மிக அவசியம். நோயாளிகளோடு பழகுவதற்கு தமிழ் தெரிந்திருக்க வேண்டும். தமிழ் தெரியாதவர்களுக்கு அப்படிப்பட்ட வாய்ப்பு இல்லாமல் போய்விடும. அண்மையில் நீங்கள் பத்திரிகையில் பார்த்திருக்கலாம்—தமிழ் தெரியாத ஒருவருக்கு வாய்ப்பு மறுக்கப்பட்டு இருப்பதால் அவர் ஹைகோர்ட் சென்று இருக்கிறார்கள். பத்திரிகைக் குறிப்புகளிலிருந்து படித்துத் தெரிந்திருப்பீர்கள் என்று நம்புகிறேன். நம்மால் எந்த அளவிற்கு செய்யமுடியுமோ அந்த அளவிற்கு தான் செய்திருக்கிறோம். நம்மையும் மீறி ஹைகோர்ட்டுக்குப் போகும்போது, அரசாங்கம இப்படிச் சொல்லியிருக்கிறது என்ற போது கூட, அதையும் மீறிச் செய்கிறார்கள். அதையும நாம் பார்க்க வேண்டும் ஹைகோர்ட்டுக்கும் நமக்கும் வெவ்வேறு பிரச்சினை இருந்தாலும், வெவ்வேறு ஒபீனியன் இருந்தாலும கூட, அவர்களுடைய உத்தரவிற்கு கட்டுப்பட்டாக வேண்டும். அந்த நேரத்திலே அரசாங்கத்தினுடைய நல்லெண்ணத்தை மதிக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறோம். பிரிஸ்கிரிப்ஷன் லேபில்லே கூட தமிழிலே இருக்க வேண்டுமென்று சொல்லியிருக்கிறோம். தமிழ் தெரிந்திருக்கவேண்டுமென்பது மிகவும் அவசியம். எல்லா சப்ஜெக்ட்டுகளும் ஆங்கிலத்திலே கிடையாது. லத்தின் மொழியிலே இருக்கிறது. லத்தீன் மொழியிலிருந்து தமிழிலே சொல்லிக் கொடுக்க முடியும். அப்படிச் செய்தால் நன்றாக இருக்கும். நாம் மிகவும் எச்சரிக்கையாகவும் படிப்படியாகவும் முன்னேற வேண்டும்.

With great caution we must move. not hastily but slowly. அதைப்போலவே செய்யவேண்டும்.

திரு. ரா. உமாநாத் : மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் கூறுகிறபோது, இப்படி தமிழ் மொழியிலே அதை மாற்றினால் இந்தி மொழி ஆதிக்கம் வருமோ என்ற அச்சம் இருக்கிறது என்று சொன்னார்கள். நம்முடைய கமிட்டெட் பாலிசி, அந்தந்த மொழியிலே, நீதித்துறையிலே, கல்வித் துறையிலே, அரசுத் துறையிலே எல்லாம் அந்தந்த ரீஜினல் லேங்வேஜ்-லே, கம்ப்ளீட்டாக கன்வர்ட் பண்ணவேண்டுமென்பதை குறிப்பாக நம்முடைய அரசு நம்முடைய மாநிலத்தில் கவர்ன்மெண்ட் பாலிசி ஸ்டேட்மெண்டில், எல்லாத் துறைகளிலும் நம்முடைய ரிஜினல் லேங்வேஜ் உடைய ஆதிக்கம் கொண்டுவரவேண்டுமென்பது. அதிலே ஆந்திராவிலேகூட படிப்படியாக மெடிகல் எஜுகேஷனிலே மாற்றிகொண்டிருக்கின்றார்கள். இந்த பதிலை நாம் ஏற்றுக்கொண்டால், நிச்சயமாக மாநில மொழியிலே நாம் எதையும் செய்ய முடியாது. கமிடெட் பாலிசிக்கு மாறாக இருக்குமோ என்ற அச்சம் எனக்கு இருக்கிறது. ஆகவே மாண்புமிகு அமைச்சர்



1984 மார்ச் 13]

அவர்கள் மருத்துவக் கல்வித்துறையில் ரிஜினல் லேங்வேஜில் மாற்றுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : மாண்புமிகு உறுப்பினர் உமாநாத் அவர்கள் தன்னை அறியாமல் இங்கே ஒரு வார்த்தையைப் பயன்படுத்தியிருக்கிறார்கள். ரீஜினல் லேங்வேஜ் உடைய ஆதிக்கம் என்று—ரீஜினல் லேங்வேஜ் ஆதிக்கம் கிடையாது (குறுக்கீடு) நீங்கள் சொன்னதைத்தான் சொல்கிறேன். ரீஜினல் லேங்வேஜ் தான். தாய்மொழிதான் தேவை என்பதிலே எந்தவிதமான கருத்துவேறுபாடும் யாருக்கும் கிடையாது. இத்தகைய மாற்றத்திற்காக கீழ்க்கண்ட அரசாணை மூலம் ஒரு குழுவைப் போட்டிருக்கிறோம்.

அரசு ஆணை எண். 1859, ஹெல்த், தேதி 22—10—1979-ல் டாக்டர் லலிதா காமேஸ்வரன், டீன் (முன்பு) இப்போது டி. எம். ஈ. ஆக இருக்கிறார். டாக்டர் எம். முத்து, டிபார்ட்மெண்ட் ஆப் அனாடமி, மதுரை மெடிகல் காலேஜ் டாக்டர் ஏ. கதிரேசன், காசநோய் மருத்துவமனை, டாக்டர் கே. லோகமுத்துகிருஷ்ணன், இன்ஸ்டிடீயூட் ஆப் நியூராலஜி, மெட்ராஸ் மெடிகல் காலேஜ், ஆகியோர்களைக் கொண்ட ஒரு குழு அமைக்கப்பட்டிருக்கின்றது.

அதற்கான டர்ம்ஸ் ஆப் ரெபெரன்ஸ்.

"To select Medical Educationists, proficient in Tamil, from the specialities, for the subject of undergraduate study. A period of five years will be given for the preparation of text books in Tamil.

(முற்பகல் 9.40)

நாம் டெர்ம்ஸ் ஆப் ரெபரன்ஸ் அந்தக் கமிட்டிக்கு கொடுத்து இருக்கிறோம். அவர்கள் 3 மீட்டிங் போட்டிருக்கிறார்கள். இன்னும் ரிப்போர்ட் கொடுக்கவில்லை. அந்த கமிட்டி விரைவில் ரிப்போர்ட் கொடுக்கும் என்று எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறோம். படிப்படியாக முன்னேற வேண்டும் என்பது தமிழக சர்க்காருடைய திட்டவட்டமான ஒரு கருத்து. அதே நேரத்தில் நாம் எச்சரிக்கையாக இருக்க வேண்டும். அவர்கள் நம்மை ஏமாற்றாமல் நாம் பார்த்துக் கொள்ள வேண்டும். இதைத்தான் நம்முடைய உறுப்பினர்கள் ஏற்றுக் கொள்ள வேண்டும் என்று சொன்னேன்.

Otherwise we will be swept away in the all Indi awave.

திரு. ப. நெடுமாறன் : மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களே, மருத்துவ படிப்பினை தமிழிலே புதுப்பிப்பதற்கான வழிமுறைகளை அமைப்பதற்காக ஒரு குழு அமைக்கப்பட்டிருப்பதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். இந்தக் குழு அதனுடைய அறிக்கையை கொடுக்கவேண்டும் அதற்குப் பின்னால் மெடிக்கல் டெர்ம்ஸ் அதை தமிழிலே ஆக்குவதற்கு இன்னொரு குழு அமைக்

கப்பட்டு அது அந்தச் சொற்களை உருவாக்கிக் கொடுக்கவேண்
டும். அதற்குப் பின்னால், அந்தச் சொற்களை வைத்துக்கொண்டு
மருத்துவ நூல்கள் எல்லாம் தமிழிலே ஆக்கப்பட வேண்டும்.
இதற்குக் குறைந்தபட்சம் 10 ஆண்டுகளாவது ஆகும். எனவே
அரசாங்கம் ஆமை வேகத்தில் செயல்பட்டால் அதை 10 ஆண்
டுகளுக்குள் கூட முடிக்க முடியாது. ஆகவே, இவைகளை சீக்கிர
மாக முடிப்பதற்கு என்ன நடவடிக்கைகளை அரசாங்கம் எடுத்து
இருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : பேரவைத் தலை
வர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் நெடுமாறன் அவர்கள்
கேட்டதற்கு நான் பதில் வைத்துக் கொண்டு இருக்கிறேன்.
ஆமை வேகத்தில் நாம் செல்லவில்லை என்பதற்காகச் சில
குறிப்புகள் இருக்கின்றன. நம்முடைய தஞ்சையில் இருக்கக்கூடிய
தமிழ்ப்பல்கலைக் கழகத்தில் அந்தப் பொறுப்பை நாம் ஒப்படைத்
திருக்கிறோம். அந்தப் பொறுப்பை ஒப்படைத்து
First y ar M.B.B.S.—Anatomy, Physiology, and Bio;Chemistry
என்று 3 நூல்களை அவர்கள் எழுத ஆரம்பித்திருக்கிறார்கள்.
தயார் செய்துக் கொண்டிருக்கிறார்கள். அதற்காக, டாக்டர்
முத்து, டாக்டர் லோகமுத்துகிருஷ்ணன், திரு. கிருஷ்ணமூர்த்தி
ஆகியவர்களை நியமித்திருக்கிறோம். வெகு விரைவில் அந்த
நூல்கள் வரும் என்று நாம் எதிர்பார்க்கிறோம்.

டாக்டர் கே. சமரசம் : தலைவர் அவர்களே, ஒரு நாட்டு
மக்களை அடிமைப்படுத்துவதற்கும், நாட்டை அடிமைப்படுத்து
வதற்கும், நாட்டு மக்களைப் பிரிப்பதற்கும் தாய்மொழியைச்
சிதைத்துவிடு என்று சொல்வார்கள். அந்த அடிப்படையிலேதான்
ஆங்கிலம் மருத்துவக் கல்லூரிகளிலே கொண்டு வரப்பட்டது.
எனவே, அந்த ஆங்கில நூல்களை தமிழ்மொழியில் மொழி
பெயர்க்கும் விஷயத்தில் ஏதேனும் திட்டமிடப்பட்டு உள்ளதா?
எல்லாம் தமிழ் என்று சொல்லக்கூடிய வகையில் இந்தப் பிரச்சி
னைகளைப் போக்குவதற்கு ஏதேனும் திட்டமிடப்பட்டு உள்ளதா?
பல ஆங்கில நூல்கள் தமிழில் மொழிபெயர்க்கப்பட்டும் அவை
கள் முழுவதுமாகப் பயன்படுத்தப்படவில்லை. இதற்காக எவ்
வளவு தொகை செலவிடப்பட்டு இருக்கிறது ? வேறு என்னென்ன
முயற்சிகளை அரசாங்கம் மேற்கொண்டிருக்கிறது என்பதை நான்
அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : மாண்புமிகு
பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய உறுப்பினர்
நெடுமாறன் அவர்கள் கேட்ட கேள்வியை இவர்கள் இன்னும்
விரிவுபடுத்திக் கேட்டிருக்கிறார்கள். நான் ஏற்கெனவே சொன்ன
மாதிரி, நாம் நியமித்த அந்தக் குழு, நூல்கள் எழுத ஆரம்பித்து
இருக்கிறது. தயார் செய்து கொண்டு இருக்கிறார்கள். அதில்
இன்னும் ஒரு சிக்கல் இருக்கிறது. ஏராளமான நூல்கள் ஆங்கிலத்
திலே மிக வேகமாக வந்துகொண்டே இருக்கிறனன். At a very
rapid rate technology books are coming all over the world.



இவ்வளவு வேகத்தில் வரக்கூடிய அந்த நேரத்தில் நாமும் புத்த
கங்களை தயார் செய்யும் முயற்சியில் இறங்கியுள்ளோம். தயார்
செய்கிறோம். அந்த முயற்சியை நாம் எடுத்துக் கொண்டிருக்கி
றோம். அந்த வேகத்தோடு நாமும், காம்பெடிஷன் என்ற
அளவிலே இருக்கவேண்டும் என்பதையும் நாம் ஒரு கணம் சிந்தித்
தாகவேண்டும் என்பதை நான் மாண்புமிகு உறுப்பினர் அவர்
களுக்கு தெரிவித்துக் கொள்கிறேன்.

### ஓமியோபதி மருத்துவத்தை விஸ்தரிக்கும் திட்டம்

297—(*வினா எண் 19338) திரு. ஆர். சுந்தரமூர்த்தி :
மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட
வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஓமியோபதி மருத்துவத்தை எல்லா வட்டங்களிலும்
உள்ள அரசினர் மருத்துவ மனைகளில் விஸ்தரிக்க அரசுக்கு
ஏதேனும் திட்டம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது நடைமுறைப்படுத்தப்படும்?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : (அ) தற்போது ஏதும்
இல்லை.

(ஆ) வினாவிற்கு இடமில்லை.

திரு. என். எஸ். வி. சித்தன் : மாண்புமிகு பேரவைத்
தலைவர் அவர்களே, இந்த ஹோமியோபதி மருத்துவக் கல்லூரி
களை தமிழகத்திலே பிற வட்டங்களிலேயும் பரவலாக்கவேண்டும்
என்ற எண்ணத்தின் அடிப்படையிலே, தமிழகத்தில் ஹோமி
யோபதி கல்லூரி அதிகமாக தொடங்கப்பட இருக்கிறது என்ற
எண்ணம் இருந்து கொண்டு இருக்கிறது. தற்போது திருமங்
கலத்தில் உள்ள ஹோமியோபதி மருத்துவக் கல்லூரியை ராம
நாதபுரத்திற்கு மாற்றுவதாக ஒரு பீதி மக்களிடத்திலே இருக்
கிறது. (குறுக்கீடு). எனவே, அரசாங்கம் இராமநாதபுரத்திலே
ஹோமியோபதி மருத்துவக் கல்லூரி ஆரம்பிக்க வேண்டும் என்று
இருந்தால், மேல் பட்டப்படிப்பை அங்கே வைத்துக் கொண்டு,
திருமங்கலத்தில் இருக்கின்ற கல்லூரியை அங்கேயே இருக்கிற
அளவிற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா என நான் அறிய
விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : மாண்புமிகு
பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் பீதியை 2, 3 முறை
இங்கே எழுப்பியிருக்கிறார்கள். இப்போது அந்தக் கல்லூரி அங்கே
நடந்து கொண்டிருக்கின்றது. நன்றாக நடந்துக் கொண்டிருக்
கின்றது என்ற நம்பிக்கை இருக்கிறது. ஏனென்றால் அங்கே
மாண்புமிகு உறுப்பினர் சித்தன் அவர்கள் இருக்கிறார்கள்.
ஆகவே, அவர்கள் கேட்டதைப் பற்றி, 22-ஆம் தேதியன்று
இந்தத் துறைக்கான மானியக் கோரிக்கை வருகின்ற நேரத்திலே,
தீர யோசனை செய்து சொல்கிறேன்.

[1984 மார்ச் 13

## இராயப்பேட்டை மருத்துவ மனையிலுள்ள இருதய சிகிச்சைப் பிரிவினை அபிவிருத்தி செய்யும் திட்டம்

298—(*வினா எண் 20612) திரு. செ. சிவசாமி : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

சென்னை இராயப்பேட்டை மருத்துவ மனையின் இருதய நோயாளிகள் பிரிவை மேலும் அபிவிருத்தி செய்யும் செயற் குறிப்பு அரசிடம் உள்ளதா ?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : இல்லை.

## திருநாகேசுவரம் நவீன அரிசி ஆலையிலிருந்து வெளிவரும் கழிவு நீர்.

299—(*வினா எண் 21575) திரு. செ. இராமலிங்கம் : மாண்புமிகு சுற்றுப்புறச் சூழல் கட்டுப்பாட்டுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவிடைமருதூர் தொகுதி திருநாகேசுவரம் நவீன அரிசி ஆலையின் கழிவுநீர் வெளியேறித் துர்நாற்றம் ஏற்படுவது அரசுக்குத் தெரியுமா ?

(ஆ) அருகாமையில் உள்ள நிலங்களில் இந்நீர் பாய்வதால் நிலம் களர் நிலமாக மாறுவதைத் தடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. எஸ். என். இராசேந்திரன் : (அ) ஆம்.

(ஆ) தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் மூலம் நடவடிக்கை எடுக்கப்படுகிறது.

திரு. செ. இராமலிங்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, திருநாகேசுவரம் நவீன அரிசி ஆலையின் கழிவு நீர் பாய்ந்து அருகாமையில் இருக்கிற சன்னாபுரம், ஆண்டலான் பேட்டை ஆகிய கிராமங்களைச் சேர்ந்த விவசாய நிலங்களையெல்லாம் களர் நிலங்களாக மாற்றி, தற்போது விவசாயத்திற்கே லாயக்கில்லை என்று அவைச் சொல்லப்படுகிற நிலைமை ஏற்பட்டிருக்கிறது. அதைப் போக்குவதற்காக அந்த ஆலைக்குள்ளேயே செப்டிங் டாங்க் கட்டி, அந்தக் கழிவு நீரை வெளியே வராமல் பாதுகாக்க அரசு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். என். இராசேந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கழிவு நீரால் விவசாயம் பாதிக்கப்பட்டதாக என்னிடத்தில் குறிப்புகள் இல்லை. கழிவு நீரால் துர்நாற்றம் வீசப்படுதாகக் கூறப்பட்டிருக்கிறது. ஆகவே, அந்தக் கழிவு நீரை சுத்திகரித்து வெளியேற்றும்படி தொழிற்சாலயை வாரியம் வற்புறுத்தி உள்ளது.



1984 மார்ச் 13]

திரு. செ. இராமலிங்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, அந்தக் கழிவு நீரால் விவசாய நிலங்கள் களர் நிலங்களாக மாற்றப்படுகிறது என்பது உண்மை. அது தடுக்கப்பட வேண்டும். அத்தோடு அந்த ஆலையிலிருந்து வெளியே வருகிற தூசி அருகாமையில் இருக்கிற குடியிருப்புப் பகுதிகளில் பரவி காச நோய் ஏற்படுத்துவதாகச் சொல்லப்படுகிறது. எனவே. நவீன முறைகளைக் கையாண்டு, அந்த ஆலையிலிருந்து தூசி வெளியே வராமல் தடுக்க அரசு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். என். இராசேந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது சம்பந்தமான சட்டம் 1974 ஆம் ஆண்டு கொண்டு வரப்பட்டு, அது சீர்திருத்தம் செய்யப்பட்டு, நமது மாநிலத்தில் அமலுக்கு கொண்டு வரப்பட்டிருக்கிறது இது சம்பந்தமாக அந்தக் கழிவு நீரையும், ஏர் பொல்லூஷன் ஆவதையும் பரிசோதனை செய்து தக்க நடவடிக்கை எடுப்பதற்கான முயற்சிகளை வாரியம் எடுத்து வருகிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு தெரிவித்துக் கொள்கிறேன்.

## சென்னை பீட்டர்ஸ் காலனியில் குடியிருக்கும் பத்திரிகையாளர்கள்.

300—(*வினா எண். 20538)—திரு. கு. ரமணி : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை பீட்டர்ஸ் காலனியில் வாடகைக் கொடுத்து குடியிருந்துவரும் 40 பத்திரிகை நிருபர்களுக்கு அந்த வீடுகளைச் சொந்தமாக்கிக் கொடுக்கும் செயற் குறிப்பு அரசுக்கு உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதுபற்றி எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு திரு. எஸ். ஆர். இராதா : (அ) இல்லை.

(ஆ) பீட்டர்ஸ் காலனியில் 35 குடியிருப்புகள் பத்திரிகையாளர்களுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன. இக்குடியிருப்புகள் அரசு ஊழியர் வாடகைக் குடியிருப்புத் திட்டத்தின்கீழ் கட்டப்பட்டுள்ளன. எனவே, இக்குடியிருப்புகளை பத்திரிகையாளர்களுக்கு சொந்தமாக்கி கொடுக்கும் செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

[1984 மார்ச் 13

**திரு. கு. ரமணி :** தலைவர் அவர்களே, அந்த வாடகை கட்டிடத்தல் பத்திரிகை நிருபர்கள், பத்திரிகையாளர்கள் குடியிருந்து வருவதை, அவர்களுக்கே சொந்தமாக்க அரசு கருதவில்லை என்று சொல்லியிருக்கிறார்கள். சட்டமன்ற உறுப்பினர்களுக்கே வீடு இல்லாதவர்களுக்கு வீடு கட்டிக் கொடுப்பதாக சொன்னார்கள் அமைச்சர் அவர்கள். பத்திரிகை நிருபர்களின் பணி, சமுதாயத்திற்கு ஒரு முக்கியமான தொண்டு. அப்படி தொண்டு செய்யக்கூடிய அவர்கள் இருக்கிற வீட்டை அவர்களுக்கே சொந்தம் ஆக்குவதில் என்ன சட்ட தடையோ, அல்லது வேறு விதமான கஷ்டங்களோ, என்ன உள்ளது என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். ஆர். இராதா :** மாண்புமிகு மன்றத்தினுடைய தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் ரமணி அவர்கள் சட்டமன்ற உறுப்பினர்களுக்கே வீடு கட்டிக் கொடுக்கப்படும்போது, ஏன் பத்திரிகையாளர்களுக்கு இல்லை என்று சொன்னார்கள். ஆனால், சட்டமன்ற உறுப்பினர்களுக்கு வீடு வேண்டும் என்று அன்றைக்கு வற்புறுத்தப் பட்டது. அந்த வற்புறுத்தலின் அடிப்படையில் வீட்டு வசதி வாரியத்திலிருந்து கட்டப்படுகிற வீடுகள் சட்டமன்ற உறுப்பினர்களுக்கு தரப்படுமா என்பது பரிசீலிப்பதாக தெரிவிக்கப் பட்டது. அந்த இடம் பீட்டர்ஸ் காலனியில் கட்டப்பட்டிருக்கிற குடியிருப்புகள். அரசாங்க ஊழியர்களுக்காக, அரசாங்கத்தின் பணத்திலே கட்டப்பட்டிருக்கிற வீடுகள். வாடகைக்கென்றே கட்டப்பட்டிருக்கிற வீடுகள். வாடகைக்காக கட்டப்பட்டிருக்கிற இடத்தை, நிரந்தரமாக்குவது என்பது இல்லாத காரியம். அவர்களுக்கு மட்டும் சொந்தமாக்குவது என்று வந்தால், அங்கே குடியிருக்கின்ற அரசு ஊழியர்களும் தங்களுக்கும் சொந்தமாக்க வேண்டுமென்று கேட்பார்கள். பிறகு வாடகைக்கு குடியிருப்பவர்களுக்கு வீடு இல்லாத நிலை வந்து விடும்.

(முற்பகல் 9-50)

**திரு. கு. ரமணி :** தலைவர் அவர்களே, நம்முடைய புதிய அமைச்சருக்கு முன்னே இருந்த அமைச்சர் வீட்டு வசதி வாரியம் சம்பந்தமாக சொல்கிற காலத்திலே குடிசை மாற்று வாரியத்தின் சார்பில் கட்டப்பட்டு உள்ள வீடுகள் அங்கு குடியிருப்பவர்களுக்கே செந்தமாக்குவதற்கான ஆலோசனை இருக்கிறது என்று அன்றைக்கு குறிப்பிட்டார். அப்படியானால் அரசு வைத்திருக்கிற கொள்கை மாற்ற முடியாதது அல்ல. அது ஒரு புறம் இருக்கட்டும். பத்திரிகை நிருபர்களுக்கு சென்னை நகரம், கோவை, மதுரை போன்ற மாநகரங்களிலே வீடு கிடைக்காமல் மிகுந்த கஷ்டப்பட்டு அவர்கள் பெறவேண்டியிருக்கிறது. பல நிருபர்களுக்கு வீடுகள் கிடைப்பதில்லை. ஆகவே பத்திரிகை நிருபர்களுக்கு சொந்தமாகக் கொடுப்பதற்கு அரசு புதிய திட்டத்தை ஆராயுமா ?



1984 மார்ச் 13]

**மாண்புமிகு திரு. எஸ். ஆர். இராதா :** தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. ரமணி அவர்கள் அரசினுடைய கொள்கையிலே சந்தேகப்படுவதாகத் தெரிகிறது. நான் பணிவன்போடு தெரிவித்துக் கொள்கிறேன். இப்படி அடிக்கடி சந்தேகங்கள் வரக்கூடாது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** திரு. ரமணி அப்படிச் சொல்லவில்லை. கொள்கை மாற்றிக்கொள்ளக்கூடியது என்று தான் சொன்னார்.

**மாண்புமிகு திரு. எஸ். ஆர். இராதா :** தமிழ்நாட்டிலே சென்னை நகரத்திலே பீட்டர்ஸ் காலனியில் 35 வீடுகளும், பட்டினப்பாக்கத்தில் 15 வீடுகளும், கோவையிலே 7 வீடுகளும், மதுரையிலே 7 வீடுகளும், திருச்சியிலே 6 வீடுகளும், சேலத்திலே 4 வீடுகளும், உதகமண்டலத்திலே 3 வீடுகளும், திருநெல்வேலியிலே 2 வீடுகளும், இப்படி கொடுத்திருக்கிறோம். பத்திரிகையாளர்கள் எங்கெங்கே கேட்கிறார்களோ, அங்கெல்லாம் உடனடியாகத் தரப்படுகிறது. அவர்களுக்குத்தர வேண்டுமென்பதற்காக வீட்டு வசதி வாரியத்திலிருந்து கட்டப்படுகிற வீடுகள் அவர்களுக்கு ஒதுக்கப்படுகிறது. குடிசை மாற்று வாரியத்திலிருந்து கட்டப்படுகிற வீடுகள் குடியிருப்பவர்களுக்கே சொந்தமாக்கப் படும் என்பது இன்றைக்கும் இருக்கிற நடைமுறைக் கொள்கைதான். இன்றைக்கும் பத்திரிகையாளர்கள் விரும்பினால் ஹவுஸிங் போர்டிலே அவர்களுக்கு வைக்கப்பட்டிருக்கின்ற 3 ஒதுக்கீடுகள் இருக்கின்றன, அந்த ஒதுக்கீடுகளுக்கு சொந்த வீடுவேண்டுமென்று அவர்கள் விண்ணப்பித்தால் நிச்சயமாகத் தரப்படும்.

**திரு. ப. பொன்னுரங்கம் :** தலைவர் அவர்களே, இரண்டு இலாக்காக்களுக்கும் அவர்கள் அமைச்சராக இருக்கிறார்கள். Slum Clearance Board as well as Housing Board ஹவுசிங் போர்டிலே கட்டப்பட்ட வ. உ. சி. நகர், ஆர். கே. நகரில் கட்டிய வீடுகள் முதலில் வாடகை தான், பின்னர் தான். It has beem converted as Hire Purchase Scheme. அதைப்போலவே பீட்டர்ஸ் காலனியில் கட்டப்பட்ட வீடுகளும் வாடகைக்காகக் கட்டப்பட்டிருக்கலாம். ஏற்கனவே கன்வெர்ஷன் நடந்திருக்கிறது. ஏற்கனவே கலைஞர் பீரியடில் நடந்திருக்கிறது. பல்வேறு பகுதியினர், அங்கே பத்திரிகையாளர்கள், அரசாங்க உத்தோகஸ்தர்கள் இருக்கிறார்கள். பீட்டர்ஸ் காலனியிலே பத்திரிகையாளர்களுக்கு அவர்கள் விரும்பினால், ஹயர் பர்ச்சேஸ் ஸ்கீம் நடைமுறைப்படுத்தப்படுமா ? ஏற்கெனவே இதற்கு முன்மாதிரி இருப்பதால் நான் இதை வற்புறுத்திக் கேட்க விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** கலைஞர் காலத்திலே அப்படி நடக்கவில்லை, நான் அமைச்சராக அப்போது இருந்தேன்.

**திரு. ப. பொன்னுரங்கம் :** நடந்திருக்கிறது, செய்தவனே நான், திரு அரங்கண்ணல் செய்திருக்கிறார்.

**மாண்புமிகு திரு. எஸ். ஆர். இராதா :** வீட்டு வசதி வாரியத்திலிருந்து கட்டப்படுகிற குடியிருப்புகளாக இருந்தால் வாடகைக்கு இருப்பதை சொந்தமாக்கி விடலாம். ஆனால் அரசாங்கப் பணத்திலேயிருந்து அரசாங்க ஊழியர்களுக்சாகக் கட்டப்பட்ட வீடுகள் இவை. அரசாங்கப் பணத்திலிருந்து அரசாங்க ஊழியர்களுக்காகக் கட்டப்பட்ட வீடுகளை மாற்றுவது என்பது இயலாத நிலையில் இருக்கிறது.

**மறைமலை நகரில் குடியிருப்போரிடமிருந்து வசூலிக்கப்படும் தொகை**

*301—(*வினா எண். 21650)*— **திரு. எஸ். ஜகத்ரட்சகன் :** மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னைக்கருகில் ஏற்படுத்தப்பட்டுள்ள புதிய நகரமான மறைமலை நகரில் உள்ள வீட்டுச் சொந்தக்காரர்களிடம் பராமரிப்புக்காக மாதம் ரூ. 20 சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தால் வசூலிக்கப்படுவதை அரசு அறியுமா ?

(ஆ) ஆம் எனில், எவ்வித பராமரிப்பு மேற்கொள்ளப்படுகிறது?

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் :** (அ) ஆம்.

(ஆ) இந்த பராமரிப்புத் தொகையைக் கொண்டு கீழ்க்கண்ட பராமரிப்புப் பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(1) தெரு விளக்கு வசதிகள்.

(2) சாலைகள் பராமரிப்பு.

(3) குப்பை கூளங்கள் அகற்றுதல்.

(4) கழிவு நீர் அகற்றுதல்.

**திருச்சி கூட்டுறவு வீடுகட்டும் சங்கத்தின் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை**

*302—(*வினா எண். 22337)*— **திரு. கே. சௌந்திரராசன் :** மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருச்சி கூட்டுறவு வீடுகட்டும் சங்கத்தின் மீது ஏதேனும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?





**மாண்புமிகு திரு. எஸ். ஆர். இராதா :** (அ) ஆம்.

(ஆ) திருச்சி கூட்டுறவு வீடு கட்டும் சங்கத்தின் நிர்வாகக் குழு தமிழ்நாடு கூட்டுறவு சட்டங்களுக்கும், விதிகளுக்கும், மற்றும் சங்கத்தின் துணை விதிகளுக்கும் புறம்பாக செயல்பட்டதால் மேற்படி சங்கத்தின் நிர்வாகக்குழு வீட்டு வசதி கூட்டுறவு சங்கங்களின் பதிவாளர் அவர்களால் கலைக்கப்பட்டு கூட்டுறவு சார்பதிவாளர் ஒருவர் தனி அலுவலராக நியமிக்கப்பட்டார். தனி அலுவலர் மேற்படி சங்கத்தில் 4-12-1982 அன்று பணியேற்றார். மேற்படி சங்கத்தின் முன்னாள் தலைவர் உயர் நீதிமன்றத்தில் கூட்டுறவு பதிவாளர் உத்தரவையும், தனி அலுவலர் மேற்படி சங்கத்தின் பணியேற்றத்தையும் நிறுத்தி வைக்கும்படி மேல் முறையீடு வழக்கு கொடுத்துள்ளார். வழக்கை விசாரித்த நீதிபதிகள் குழு, தனி அலுவலர், சங்கத் தலைவரின் கீழ் பணிபுரிய வேண்டும் என்று ஆணையிட்டுள்ளது. மேற்படி ஆணையானது தமிழ்நாடு கூட்டுறவு சங்கங்களின் சட்டப் பிரிவு 72-ன் கீழ் தனி அலுவலர் நியமனம் செய்யும் நோக்கத்தையே பாதிப்பதாக உள்ளதாலும், வழக்கு இன்னும் முடியாத நிலையில் உள்ளதாலும், அரசு மாநில அரசுத் தலைமை வழக்குரைஞர் அவர்களை இந்த வழக்கில் வாதாட ஆணையிட்டுள்ளது. வழக்கு இன்னும் முடியவில்லை.

**திரு. கே. சௌந்திரராசன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தனி அதிகாரிகள் என்று நியமிக்கிறபோது அவர்கள் தலைவருக்கு கீழே பணியாற்றுகின்ற சூழ்நிலை உருவாகி இருப்பது எந்த வகையில் சரியானதாக இருக்கும் என்று என்னால் புரிந்து கொள்ள முடியவில்லை. அந்த சங்கத்தின் இயக்குநர்கள் யார் யார் இருக்கிறார்கள். அவர்கள் மிகுந்த செல்வாக்கு படைத்தவர்கள், எதையும் செய்யும் வல்லமை படைத்தவர்கள் என்று சொல்லப்படுகிறது. அப்படி இருக்கிறவர்கள் எந்த அளவுக்கு அதிலே இந்த முறைகேடுகளுக்கு ஈடுபட்டு இருப்பார்கள், எவ்வளவு தொகை இதுவரையில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது ? இன்னும் கண்டுபிடிக்க வேண்டிய விவரங்கள் என்ன என்பதை அறிவிக்க இயலுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். ஆர். இராதா :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவர்கள் எவ்வளவு செல்வாக்கு பெற்றவர்களாக இருந்தாலும் தவறு செய்தவர்கள் யாராக இருந்தாலும் அரசைப் பொறுத்த வரையில் அவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படும். நடவடிக்கை என்று சொல்லுகிற வகையில் இன்றைக்கு அந்த சங்கத்தில் இருக்கிற நிர்வாகக் குழு மீது பல்வேறு குற்றச்சாட்டுகள் இருக்கின்றன. அதில் 9.48 இலட்சம் சங்கத்தில் இழப்பு ஏற்பட்டுள்ளது என்று அதிகாரிகளால் இது வரையில் கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது. இந்த இழப்புக்குரிய காரணத்திற்கு யாராக இருந்தாலும் அவர்களை கண்டுபிடித்து,

அவர்கள் எவ்வளவு பெரிய செல்வாக்கு உள்ளவர்களாக இருந் தாலும் நிச்சயமாக அவர்கள்மீது அரசு நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. கே. சௌந்திரராசன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் அறிந்து கொள்ள விரும்புவது அதில் இருக்கும் நிர்வாக இயக்குநர்கள் யார் யார்? அவர்கள் சாதாரண சாமான்ய மானவர்களாக இல்லாமல் மிகுந்த செல்வாக்கு உள்ள காரணத் தினால் அது துறை விசாரணையாக இருந்தாலும் நீதி மன்ற விசாரணையாக இருந்தாலும் அவர்கள் உள்ளே புகுந்து வெளியே வந்து விடுகிற நிலைமை இருக்கிறது. இதையும் மீறி அரசு எந்த வகையில் நடவடிக்கை எடுக்க இருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். ஆர். இராதா:** மாண்புமிகு பேர வைத் தலைவர் அவர்களே, அதிலே இப்போது கஸ்தூரிரங்கன் என்பவர் தலைவராக இருக்கிறார். மற்றும் 5 பேர் நிர்வாகக் குழு உறுப்பினர்களாக இருக்கிறார்கள். அவர்கள் எப்படிப்பட்ட செல்வாக்கு உள்ளவர்களாக இருந்தாலும, எந்த அரசியல் கட்சி யைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும் அவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படும் என்று உறுதி தருகிறேன்.

**கொல்லிமலைப் பகுதி மலைவாழ் மக்களுக்குக் கதர் வாரியத்தின் மூலம் வழங்கப்படும் கடன்கள்**

303—(*வினா எண். 21746)—**திரு. சீ. சிவப்பிரகாசம் :** மாண்புமிகு கதர்த் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கொல்லிமலைப் பகுதியில் மலைவாழ் மக்களுக்காகக் கதர் வாரியத்தின் மூலம் என்னென்ன கடன்கள் வழங்கப்படு கின்றன ?

(ஆ) கடன் வழங்குவதில் காலதாமதம் ஏற்படக் காரணம் என்ன ?

**மாண்புமிகு திருமதி விசயலட்சுமி பழனிச்சாமி :** (அ) கதர் கிராமத் தொழில் ஆணைக் குழுவின் ஒப்புக் கொள்ளப்பட்ட திட்டத்தின் கீழும் மற்றும் தமிழ்நாடு அரசின் மலைவாழ் மக்கள் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழும் கடன் உதவியும் மானிய உதவியும் வழங்கப்படுகின்றது.

(ஆ) வாரியம் தனிப்பட்ட நபர்களுக்கு ஒப்புக் கொள்ளப் பட்ட திட்டத்தின் கீழ் ( Agre d Programm ) கடன் வழங்குகிறது. இதன் பொருட்டு சம்பந்தப்பட்ட ஆவணங்களை பரிசீலித்து கடன் பத்திரம் பதிவு செய்ய வேண்டியுள்ளது.



ஒருங்கிணைந்த மலைவாழ் மக்கள் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் நிதியுதவி வழங்கும்போது, வங்கிகள் கடன் கொடுப்பதற்காக, ஜாமீன் பெறுவது போன்ற சில விதிமுறைகளை கடைப்பிடிக்க வேண்டியுள்ளது. இக்காரணங்களால் கடன் வழங்குவதில் தாமதங்கள் ஏற்படுகின்றன என்றாலும் கடன் வழங்குவதில் ஏற்படும் தாமதங்களை தவிர்க்க, தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியம் நடவடிக்கை எடுத்து வருகிறது.

**திரு. சீ. சிவப்பிரகாசம் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒருங்கிணைந்த மலைவாழ் மக்கள் மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் மற்றும் ஒப்புக் கொள்ளப்பட்ட திட்டத்தின்கீழ் 1982-83ல் மற்றும் 1983–84 ஆம் ஆண்டுகளில் எவ்வளவு தொகை கடனாகக் கொடுக்கப்பட்டது ? அதில் எவ்வளவு தொகை மானியமாக வழங்கப்பட்டுள்ளது என்பதை மாண்புமிகு அமைச் சர் அவர்கள் அறிவிப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திருமதி விசயலட்சுமி பழனிச்சாமி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒப்புக் கொள்ளப்பட்ட திட்டத் தின் கீழ் 1982–83 ஆம் ஆண்டில் 39 நபர்களுக்கு பல்வேறு தொழில்களுக்கு நிதி உதவி ரூ. 49,450 வழங்கப்பட்டுள்ளது' இதில் கடன் ரூ. 33,200-ம் மற்றும் மானியம் ரூ. 16,250-ம் ஆகும்.

1933–84 ஆம் ஆண்டிற்கு 44 நபர்களுக்கு பல்வேறு தொழில் களுக்கு ரூ. 77,550 வழங்கப்பட்டுள்ளது. இதில் கடன் தொகை யாக ரூ. 51,000 மற்றும் மானியம் ரூ. 26,550 வழங்கப்பட் டுள்ளது.

ஒருங்கிணைந்த மலைவாழ் மக்கள் மேம்பாட்டுத் திட்டத் தின் கீழ் 1982–83 ஆம் ஆண்டில் 40 நபர்களுக்கு தேன் கூடு களை ரூ. 68,000 செலவினத்தில் வழங்கப்பட்டுள்ளது. இத் தொகையில் 50 விழுக்காடு மானியமாகவும், 50 விழுக்காடு கடனாகவும் வழங்கப்பட்டுள்ளது.

மேலும் 1983–84 ஆம் ஆண்டில் 50 நபர்களுக்கு 500 தேன் கூடுகளை ரூ. 1.00 இலட்சம் செலவினத்தில் கொடுக்க நட வடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. இதில் 50 விழுக்காடு மானிய மாகவும், 50 விழுக்காடு கடனாகவும் வழங்கப்படும்.

**திரு. சீ. சிவப்பிரகாசம் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த கடன்கள் வழங்குகின்ற நேரத்தில் மலை வாழ் மக்களுக்கு கூட்டுறவு லேம்பு சங்கத்தின் மூலமாகவும் நில அடமான சங்கத்தின் மூலமும் வேறு கடன்கள் வழங்கப்பட்டு அவர்கள் கடன் பெற்று இருக்கிறார்கள். ஆனால் இந்தக் கடன்கள் வழங்குகின்ற நேரத்திலே இந்தக் கடன்கள் வாங்கப்படாதவர் கள் ஒரு சிலர் இருக்கிறார்களே தவிர இதில் ஜாமீன் பெற்றவர் களுக்கு மட்டும் கடன் வழங்க முடியாத நிலை இருக்கிறது.

(முற்பகல் 10-00)

இந்த விதிமுறைகள் இருப்பதால் அவர்களுக்குக் கடன் வழங்க முடியாத நிலை இருக்கிறது. ஆகவே, இந்த விதிமுறைகளை மாற்றியமைத்து அவர்களுக்குக் கடன் வழங்குவதற்கு அரசு பரிசீலிக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவையின் அனுமதியுடன் வினாக்கள்-விடைகள் நேரம் நீட்டிக்கப்பெறுகிறது.

**மாண்புமிகு திருமதி விசயலட்சுமி பழனிச்சாமி :** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இது போன்ற மலைவாழ் மக்கள் மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் செயற்படும் திட்டங்களுக்குக் கொடுக்கப்படும் நிதியுதவியைப் பெறும்பொழுது கால தாமதம் ஏற்படுகிறது என்று மாண்புமிகு உறுப்பினர் கூறினார்கள். அப்பொழுது ஏற்படுகின்ற காலதாமதத்திற்கு ஒரு சில காரணங்கள் இருக்கின்றன. அதாவது, லாம்ப் கூட்டுறவு சங்கத்தில் கடன் இல்லை என்ற அத்தாட்சி பெற வேண்டும். ஜாமீன் தாரருக்கு எந்தக் கடனும் இருக்கக் கூடாது ; ஒரு நபர், ஒரு கடன் பெறுபவருக்கு மேல் ஜாமீன்தாரராக இருக்கக் கூடாது ; விண்ணப்பதாரர் குடும்பத்தில் யாருக்காவது வங்கியில் கடன் இருந்தால் இவருக்குக் கடன் கிடையாது ; கடன் பெறுவோர் ஒருவருக்கொருவர் ஜாமீன்தாரராக இருக்கக் கூடாது ; வங்கியின் அருகாமையில் இருப்பவர்களும், வங்கிக்கு அறிமுகமானவர்களும் ஜாமீன்தாரர்களாக இருக்க வேண்டும் ; மேற்குறிப்பிட்டுள்ள ஆவணங்களை நிதியுதவி பெறும் நபர்கள் கொடுப்பதில் தாமதம் ஏற்படுகிறது. ஆவணங்கள் பெறப்பட்டவுடன் நிதியுதவி வழங்கப்படுகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

### உடன்குடி பனை வெல்லக் கூட்டுறவு சம்மேளனம்

304—(*வினா எண். 21811)—திரு. இரா. அமிர்தராஜ் : மாண்புமிகு கதர்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருச்செந்தூர் தொகுதி, உடன்குடி பனை வெல்லக் கூட்டுறவுச் சம்மேளனம் லாபத்தில் இயங்குகிறதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?



**மாண்புமிகு திருமதி விசயலட்சுமி பழனிச்சாமி :** (அ) உடன்குடியில் திருநெல்வேலி மாவட்ட பனை வெல்ல கூட்டுறவு சம்மேளனத்தின் கிளை நிலையம் ஒன்று உள்ளது இக்கிளை தற்போது இலாபத்தில் இயங்கிக் கொண்டிருக்கிறது.

(ஆ) கடந்த நான்காண்டுகளில் இக்கிளை ஈட்டிய இலாப நட்ட விவரம் பின்வருமாறு :—

| ஆண்டு. | இலாபம். | நட்டம். |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| | ரூ. | ரூ. |
| 1979—80 | 4,743.21 | .. |
| 1980—81 | 35,718.70 | .. |
| 1981—82 | .. | 32,230.17 |
| 1982—83 | 8,508.83* | .. |
| 1983—84 | 18,815.35 | .. |

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு.— ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறியிடப் பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரி பார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்].

## 2. கவன ஈர்ப்புகள்

### (அ) நெய்வேலி இரண்டாவது மின் நிலைய கட்டுமானப்பணித் தொழிலாளர்கள் விபத்துக்குள்ளாகி இருப்பது

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திருவாளர்கள் ரா. உமாநாத், கு. ரமணி, பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம், கே. ஆர். சுந்தரம், தி. கா. நல்லப்பன், மு. அப்பாத்துரை, என். ஏ. பூங்காவனம், செ. சிவசாமி, ஏ.டி. கருப்பையா ஆகியோர் ஒரே பொருள் குறித்து கவன ஈர்ப்புத் தீர்மானங்கள் கொடுத்துள்ளனர். அவர்களுள் ஒருவர் இதை மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருவார்.

திரு. ரா. உமாநாத் : தலைவர் அவர்களே, ''நெய்வேலி அனல் மின் நிலையத்தில் 16—2—1984 அன்று சிமினி சரிந்து விழுந்ததால் கட்டுமானப் பணியில் ஈடுபட்டிருந்த 6 தொழிலாளர்கள் உயிரிழந்ததும் 20 தொழிலாளர்கள் படுகாயமுற்றதும் குறித்த''. அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : பேரவைத் தலைவரவர்களே, பேரவை முன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்.

அறிக்கை.

நெய்வேலி இரண்டாவது மின் நிலையத்திற்காக கட்டப்பட்டு வரும் 170 மீட்டர் உயரமுள்ள மூன்று புகைப் போக்கிகளில் முதல் புகை போக்கியில் உட்புறமாக கட்டுமானப் பணி நடைபெற்றுக் கொண்டிருக்கும் போது 16—2—1984 அன்று பிற்பகல் சுமார் 1.25 மணியளவில் கட்டுமானப் பணிக்காக பயன்படுத்தப்பட்ட சாரம் சரிந்ததால் அப்போது வேலை செய்து கொண்டிருந்த 15 தொழிலாளர்கள் கீழே விழ நேர்ந்து சாரம் கம்பிகளுக்கிடையே சிக்கிக் கொண்டனர். தீயணைப்பு படையின் மீட்புப் பணியில் ஈடுபட்ட போது நான்கு தொழிலாளர்கள் இறந்த நிலையிலும் மற்ற தொழிலாளர்கள் உயிருடனும் மீட்கப்பட்டனர். விபத்தினால் காயமுற்ற சில தொழிலாளர்களில் இருவர் நெய்வேலி லிக்னைட் கார்ப்பரேஷனுக்குச் சொந்தமான மருத்துவமனையில் சிகிச்சை பயனளிக்காமல் இறந்ததினால் இறந்த தொழிலாளர்களின் எண்ணிக்கை ஆறாக உயர்ந்தது. மற்றொரு தொழிலாளியின் உடல் நிலை மிகவும் மோசமாக உள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. ஒரு தொழிலாளியினுடைய கால்கள் துண்டிக்கப்பட வேண்டியதாக ஆயிற்று. காயமுற்ற தொழிலாளர்கள் அனைவரும் மருத்துவ மனையில் தொடர்ந்து சிகிச்சை பெற்று வருகிறார்கள்.

2. உயர்ந்த புகை போக்கிகளை கட்டுவதில் தேர்ச்சி பெற்ற கேமன் இந்தியா லிமிடெட் (Gamman India Limited) என்ற நிறுவனம் மின் நிலையத்திற்காக அந்த புகைப் போக்கிக் கட்டுமானப் பணியை ஒப்பந்த அடிப்படையில் செய்து வருகிறது. இந்த ஒப்பந்தக்காரர்களின் கீழ் தான் விபத்தில் சிக்கிய தொழிலாளர்கள் பணி புரிந்து வந்தார்கள்.





3. விபத்திற்கான காரணத்தை நேரில் அறிந்து வர தொழிற்சாலை தலைமை ஆய்வர் (நலம் மற்றும் பாதுகாப்பு) அவர்கள் சென்று விசாரணை நடத்திய பின்பு தனது அறிக்கையில் கீழ்க்கண்டவாறு கூறியுள்ளார் :—

' 170 மீட்டர் உயர புகை போக்கியின் உட்புறத்தில் ஒவ்வொரு 7 மீட்டருக்கும் ஒரு சுற்றுப் பாதை போல் அமைக்கும் பணி 163, 156, 149, 142 மீட்டர் என்ற அடிப்படையில் அமைக்கும் பணி, விபத்து நடை பெற்றபோது நடை பெற்றுக் கொண்டிருந்தது. 142 மீட்டரில் பணி முடிவு பெறாத நிலையில் மதிய உணவு இடைவேளையிலும் (பிற்பகல் 1.25 மணி) தொடர்ந்து நடை பெற்று வந்தது. மற்ற மட்டங்களில் பணி புரிந்து வந்த தொழிலாளர்கள் உணவுக்காக கீழே இறங்கி விட்டார்கள். கட்டுமானப் பணிக்காக இரும்புக் குழாய்களைக் கொண்டு சாரங்கள் கட்டப்பட்டு இருந்தன. கீழேயிருந்து மேலே கட்டுமானப் பொருள்களை ஏற்றுவதற்காக வாளி போன்ற அமைப்புடைய தூக்கியை இழுப்பதற்கு புகைப்போக்கியின் மேல் மட்டத்தில், சாரத்தின் இரும்புக் குழாயில் இணைக்கப்பட்டு இருந்தது. விபத்து ஏற்படுவதற்கு முன் அரை டன் கான்க்ரீட் ஏற்றிக் கொண்டு வாளி மேலே சென்றபோது சாரத்தின் இரும்புக் குழாய் மீது அழுத்தம் (Pressure) அதிகமானதால் சாரம் உடைந்து விழுந்ததால் அந்த சாரத்தோடு இணைக்கப்பட்டிருந்த மற்ற இரும்புக் கம்பிகளின் இணைப்பு தளர்ந்ததால் சாரம் விழ நேர்ந்தது. அப்போது பணியில் ஈடுபட்டிருந்த 15 தொழிலாளர்கள் விபத்தில் சிக்கினார்கள். விபத்து ஏற்பட்ட சில நாட்களுக்கு முன்பு பெய்த மழையினால் புகை போக்கியின் உட்புறத்தில் தேங்கியிருந்த தண்ணீரும் கட்டுமானப் பணியினால் சிதறிக் கிடந்த பொருட்களும், தரையில் பொருத்தப்பட்டிருந்த சாரத்தின் அஸ்திவாரம் தளர்வதற்கு ஏதுவாக இருந்திருக்கக்கூடும்.

4. இந்த அறிக்கையுடன் இனி வருங்காலத்தில் இது போன்ற விபத்துக்களை தவிர்ப்பதற்கு என்ன முறைகளை கையாள வேண்டும் என்பதனை ஒப்பந்தக்காரருக்கும் நெய்வேலி மின்நிலைய நிர்வாகத்தினருக்கும் உத்தரவு வழங்கப்பட்டு உள்ளது.

5. பகல் உணவு இடைவேளைநேரமாக இருந்ததால் விபத்தில் சிக்கியவர்களின் எண்ணிக்கை மிகவும் குறைவாக இருந்தது. சற்று முன்போ அல்லது சற்று பின்போ விபத்து நிகழ்ந்திருந்தால் பாதிப்பு அதிகமாக இருந்திருக்கும்.

6. இந்த விபத்து தொழிற்சாலையில் நடந்த ஒன்று அல்ல. கட்டுமானப்பணியில் உள்ளபோது ஏற்பட்டது. அரசு கொண்டு வந்துள்ள கட்டிடத் தொழிலாளர் (கட்டுமானப் பணி) சட்ட முன் வடிவில் விபத்துக்களைத் தடுக்கத் தக்கவிதிகள் அமைக்க அரசு அதிகாரம் எடுத்துள்ளது.

திரு. ரா. உமாநாத் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த நிகழ்ச்சி உண்மையிலேயே ஜனங்கள் எல்லோருக்கும் அதிர்ச்சி தரக் கூடியதாக இருந்தது. சாப்பாட்டு நேரத்திற்கு சற்று முன்போ அல்லது சற்று பின்போ விபத்து நிகழ்ந்திருந்தால் பயங்கரமான நிகழ்ச்சியாக நடந்திருக்கும் என்பது அறிக்கையில் தெளிவாக்கப்பட்டிருக்கிறது. கேமன் இந்தியா லிமிடெட் என்ற நிறுவனத்தால் காண்ட்ராக்டர்களாக நியமிக்கப்பட்டிருக்கிறார்கள் என்று தெரிகிறது. இதிலிருந்து கம்பெனியினுடைய எஃபிசியன்சி என்பது அல்ல பிரச்னை. கம்பெனி அந்தத் தொழிலாளர்களை எப்படி நடத்துகிறார்கள், சேஃப்டி விஷயமாக என்பதுதான் பிரச்னை. அந்தக் கம்பெனியானது எல்லாச் சட்டங்களையும் தூக்கியெறிந்துவிட்டு, மிகவும் மோசமான நிலையில் பிச்சைக் கூலி கொடுத்து, தொழிலாளர்கள் சுரண்டப்பட்டு கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கான சேஃப்டி முறை அப்சர்வ் செய்யப்படவில்லை.

மாண்புமிகு அமைச்சரவர்கள் கூறியிருக்கின்ற அடிப்படையில் இரண்டு பாயிண்டுகள் வெளியே வருகின்றன. அதாவது, விபத்து ஏற்படுவதற்கு முன் அரை டன் கான்க்ரீட் ஏற்றிக் கொண்டு வாளி மேலே சென்றபோது சாரத்தின் இரும்புக் குழாய் மீது அழுத்தம் அதிகமானதால் என்று இருக்கிறது. அதாவது சாரத்தின் இரும்புக்குழாய் மீது அழுத்தம் அதிகமானதால் சாரம் உடைந்து விழுந்ததால் அந்த விபத்து ஏற்பட்டது என்று சொல்லப்பட்டிருக்கின்றது. அதேமாதிரி 'அந்த விபத்து ஏற்பட்ட சில நாட்களுக்கு முன்பு பெய்த மழையினால் புகைப்போக்கியின் உட்புறத்தில் தேங்கியிருந்த தண்ணீரும் கட்டுமானப் பணியினால் சிதறிக்கிடந்த பொருட்களும், தரையில் பொருத்தப்பட்டிருந்த சாரத்தின் அஸ்திவாரம் தளர்வதற்கு ஏதுவாக இருந்திருக்கக்கூடும்' என்று ஸ்டேட்மென்டிலே இருந்து How they have been responsible என்று தெரிகின்றது. நான் ப்ரீஃபேஸ் மட்டும் சொல்லி கேள்வி கேட்கிறேன். ஆகவே இந்த விபத்து எதிர்பாராமல் நடக்கவில்லை. இப்படிப்பட்ட அபாயம் ஏற்படும் என்று சொல்லி, அதாவது அபாயம் வரும் என்று தெரிந்தே அந்தத் தொழிலாளர்களுக்கு போதுமான பாதுகாப்பு நடவடிக்கை எடுக்கவேண்டும் என்றும் அதற்கான சாதனங்கள் தரவேண்டும் என்றும் கோரி வேலை நிறுத்தம் செய்தார்கள். அவ்வாறு தொழிலாளர்கள் வேலை நிறுத்தம் செய்தபோது அந்த நெய்வேலி நிறுவனமோ அல்லது மற்றவர்களோ அதைப்பற்றிக் கவலைப்படவில்லை. கான்ட்ராக்டர்ஸ் மீது நடவடிக்கை எடுக்கவில்லை. ஆனால் பாதுகாப்பு கேட்டு ஸ்டிரைக் பண்ணிய தொழிலாளர்களை டிஸ்மிஸ் செய்துவிட்டு நியூ ஓர்க்கர்ஸைக் கொண்டு அவசரம் அவசரமாக அந்த வேலை செய்யப்பட்டதன் விளைவு தான் இவ்வளவு பெரிய ஆக்ஸிடென்டிற்குக் காரணமாக இருந்திருக்கின்றது. ஆகவே அந்த கண்மூடித்தனமான கான்ட்ராக்டர்மீது கொலைக்குற்றம் என்ற வகையிலே உண்மையிலேயே கேஸ் போடவேண்டும். காரணம் So many People have died நெய்வேலி நிறுவனமோ அல்லது அரசோ இப்படிப்பட்ட பயங்கரமான கொலைகள் நடந்தும்—மேலும் ஒரு ஆளுக்குக் காலே போய் இருக்கின்றது—அந்த கான்ட்ராக்டர் மேலே நடவடிக்கை எடுப்பதற்கு ஏதாவது செய்திருக்கிறீர்களா ? எதிர்காலத்திலே இதுபோல் நடக்காமல் இருக்க கான்க்ரீட் மெஷர்ஸ் எடுக்க வேண்டும் என்ற வகையில் என்ன அட்வைஸ் பண்ணி இருக்கிறீர்கள் ?



மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் சென்டிமென்டோடு என்னுடைய சென்டிமென்டையும் நான் இணைத்துக் கொள்கிறேன். தொழிலாளர்கள் வேலை செய்யும் போது அநியாயமாக இறந்திருக்கிறார்கள். இது மிக மிக வேதனை தரக்கூடிய விஷயம். எனவே அதாரிட்டிஸ் ஓர்க்மென்ஸ் காம்பென்சேஷன் ஆக்டின் கீழ், நம்முடைய மாநில அரசு அதிகாரிகளுக்குச் சொல்லி அவர்கள் நோட்டீஸ் அனுப்பி இருக்கிறார்கள்.

அடுத்து இனி வருங்காலத்தில் இதுபோன்ற விபத்துக்களைத் தடுக்க என்னென்ன முறைகளைக் கையாள வேண்டும் என்று ஒப்பந்தக்காரர்களுக்கும் நெய்வேலி நிறுவனத்திற்கும்உத்தரவு வழங்கப்பட்டது. It may not be within our Province இருந்தாலும் எழுதி இருக்கிறோம். உத்தரவு போட்டிருக்கிறோம். அதாவது அதாரிட்டிஸ் ஓர்க்மேன்ஸ் காம்பென்சேஷன் ஆக்டின் கீழ் ஒரு நோட்டிஸை அதிகாரிகள் அனுப்பி இருக்கிறார்கள். மேலும் இம்மாதிரியான பிரச்சினைகள் இனி வருகின்றபோது என்னென்ன பாதுகாப்புகள் செய்ய வேண்டும் என்பது பற்றிய விதிமுறைகள் பில்டிங் அன்ட் கன்ஸ்ட்ரக்ஷன் ஓர்க்கர்ஸ் ஆக்ட் என்று வர இருக்கின்ற சட்டத்தில் போட்டிருக்கிறோம். ஆகவே அந்தச் சட்டத்திலே தொழிலாளர்களுக்கான சரியான பாதுகாப்பு விதிமுறைகளை உருவாக்குவதற்குரிய நடவடிக்கையை அரசு எடுத்திருக்கின்றது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. ரா. உமாநாத் : தலைவர் அவர்களே, நான் இந்தத் தீர்மானத்தின் மூவர் என்பதால் மேலும் ஒரு கேள்வியினைக் கேட்க எனக்கு வாய்ப்புத் தரவேண்டும்.

[1984 மார்ச் 13

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அவ்வாறு இரண்டு கேள்விகள் கேட்பதற்கு நேரம் இல்லை. அவ்வாறு நீங்கள் கேள்வி கேட்பதாக இருந்தால் உங்கள் கட்சியிலே இருந்து கேள்வி கேட்க இருக்கின்ற ஒருவருக்கு வாய்ப்பு இல்லாமல் போனால் பரவாயில்லை என்றால் நீங்கள் இப்போது கேள்வி கேளுங்கள்.

திரு. ரா. உமாநாத் : தலைவர் அவர்களே, கடந்த ஒன்றரை ஆண்டுகளில் கிட்டத்தட்ட பத்து விபத்துக்கள் நடந்து 17 பேர் இறந்து இருக்கிறார்கள் ; பலபேர் இதே இடத்திலே காயம் அடைந்திருக்கிறார்கள், நான்கரை மாதங்களுக்கு முன்பு அதாவது அக்டோபர் மாதம் மூன்றாம் தேதி இன்னொரு ஆக்ஸிடென்ட் ஏற்பட்டு இரண்டு பேர் செத்திருக்கிறார்கள். இப்படி வரிசையாக விபத்துக்கள் ஏற்படுகின்ற சூழ்நிலையில் ஃபேக்டரி இன்ஸ்பெக்டரேட் சேஃப்ட்டி நடவடிக்கை எடுத்ததாகத் தெரியவில்லை. ஆகவே அவ்வாறு நடவடிக்கை எடுக்காமல் இருந்ததற்கு யார் பொறுப்பானவர்கள் என்பதைக் கவனித்து நடவடிக்கை எடுக்கப்பட்டதா என்று கேட்க விரும்புகிறேன்.

(முற்பகல் 10-10)

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : தலைவர் அவர்களே, இது பேஃக்டரி சட்டத்திற்குள் வரவில்லை என்பதை முதலிலே நாம் தெரிந்து கொள்ளவேண்டும். அதையும் இதில் எழுதி இருக்கிறேன். இது வெளியே கட்டிடம் கட்டுகின்றபோது நடந்த ஒன்று. அப்படி இருந்துங்கூட நாம் அவர்களுக்கு வேண்டிய அறிவுரைகளை வழங்கி இருக்கிறோம். ஆனால் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கொடுத்த தகவலிலிருந்து அந்த நிறுவனத்தைப் பற்றி ஒரு 'ஸ்பெஷல் ஸ்டடி'யே செய்வது நல்லது என்று நான் கருதுகிறேன். நான் தொழிற்சாலை தலைமை ஆய்வர் (நலம் மற்றும் பாதுகாப்பு) அவர்களை நெய்வேலிக்கு அனுப்பி, அதைப் பற்றி அறிந்து ஒரு அறிக்கை அனுப்பும்படி சொல்கிறேன்.

திரு. கு. ரமணி : தலைவர் அவர்களே, இந்த நெய்வேலி விபத்து எவ்வளவு கோரம் என்பதுபற்றி, அமைச்சர் அவர்களே தன்னுடைய அனுதாபத்தை தெரிவிக்கிறார். இப்பொழுது 6 பேர்கள் செத்ததும் ஒருவருக்கு இரண்டு கால்கள் போனது மட்டுமல்ல, 17 பேர்கள் இவர்களோடு சேர்ந்து இரையாகியிருக்கிறார்கள். இது கான்ட்ராக்ட் தொழிலாளர்களுடைய அவல நிலையை அம்பலப்படுத்துவதாக இருக்கிறது. இந்த நிலையிலே அமைச்சர் கொடுத்திருக்கிற அறிக்கையின் 6-வது ஷரத்தில் 'இந்த விபத்து தொழிற்



சாலையில் நடந்த ஒன்று அல்ல. கட்டுமானப் பணியில் உள்ளபோது ஏற்பட்டது' என்று கூறுகின்றார். கிட்டத்தட்ட 'லீகலாக' அது எங்களுக்குச் சம்பந்தப்படாத ஒன்று என்ற மாதிரி நிலையை எடுக்கிறார். அது சரியல்ல என்று எடுத்துக் காட்டி. தொழிற்சாலைகளுடைய எந்த வேலையாக இருந்தாலும் டிபார்ட்மென்டுக்குள்ளே நேரடியாக நடத்தப்பட்டாலும், அல்லது அந்த வேலைகளை ஏஜண்டுகள் மூலமாகச் செய்ய அந்த நிறுவனம் ஏற்பாடு செய்தாலுங்கூட, அதைப் பற்றிய பொறுப்பு அரசாங்கத்திற்கு உண்டு என்பதைக் காட்ட, பாக்டரீஸ் ஆக்ட் 90-வது செக்ஷன்படி, ஒரு காம்பிடன்ட் பெர்சனை விசாரணை அதிகாரியாகப் போட்டு அதிலும் சட்ட நுணுக்கங்களைத் தெரிந்த ஒருவரை அவருக்கு உதவியாக ஏற்பாடு செய்து நடவடிக்கை எடுக்க அரசாங்கத்திற்கு உரிமை உண்டு. அப்படிப்பட்ட நடவடிக்கை எடுக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதா ? அந்த மாதிரி வைக்கக்கூடிய விசாரணை முடிவு இந்த அவையிலே எங்கள் முன்னால் வைக்கப்படுமா? ம்க்களுக்குத் தெரிவிக்கப்படுமா ? நடந்துள்ள உயிர்ச் சேதங்களுக்குநஷ்டஈடு கொடுப்பதற்கான ஏற்பாடுகள் என்ன செய்யப்பட்டுள்ளன என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சொன்ன கருத்தை நான் முழுமையாக ஏற்றுக்கொள்ள முடியவில்லையென்றாலும் இந்த அரசு நடவடிக்கை எடுத்திருக்கிறது, சட்டத்திற்கு உட்பட்டு. Authority on Workm n's Compensation அவரை விட்டு நோட்டீஸ் கொடுக்கச் சொல்லியிருக்கிறேன். தொழிற்சாலை தலைமை ஆய்வர் (நலம் மற்றும் பாதுகாப்பு) அந்த இடத்திற்கு சென்று விபத்திற்குக் காரணத்தை நேரில் ஆராய்ந்து வர அனுப்பப்பட்டார்கள். அவர்கள் சென்ற பின்பு தான் அறிக்கையை மூல அறிக்கையில் குறிப்பிட்டுள்ளவாறு கொடுத்துள்ளார்கள் என்று சொன்னேன். இருந்தாலும் மாண்புமிகு உறுப்பினர் திரு. ரா. உமாநாத் அவர்கள் பேசும்பொழுது 17 பேர்கள் இறந்தார்கள் ஓராண்டுக் காலத்திலே என்ற தகவலைத் தருகிற காரணத்தாலே, அது மீண்டும் ஒரு முறை விசாரிக்க வேண்டிய பிரச்னை என்று அரசு கருதுகிறது. மீண்டும் அவரை அங்கே அனுப்பி, விசாரிக்கச் சொல்கிறேன் என்கிறேன். It does not come und r the Act வெளியே நடந்தது. ஆனால் அதையும் கவர் பண்ணுவதற்குத் தான் Building and Construction Workers Act. என்று கொண்டு வருகிறோம். Th Workmen Comp nsation Act. cpplies for this ஆகையினாலே, அந்த அந்தாரிட்டியையே கடிதம் எழுதச் சொல்லி இருக்கிறோம். அவர்களுக்குப் பாதுகாப்பு தர இந்தச் சட்டமன்றத் தொடர் கூட்டத்திலேயே இந்தச் சட்டத்தை நிறைவேற்றுவோம். தொழிற்சாலை தலைமை ஆய்வர் (நலம் மற்றும் பாதுகாப்பு) அவர்கள் மீண்டும் அங்கே சென்று நேரில் ஆய்ந்து கொடுக்கும்

[திரு. எஸ். இராகவானந்தம்] [1984 மார்ச் 13

அறிக்கையின் அடிப்படையில் இந்த அரசு ஏதாவது நடவடிக்கை எடுக்க முடியுமா என்பதைப் பார்த்து அதற்கு ஆவன செய்ய இந்த அரசு முயற்சி எடுத்துக் கொள்ளும்.

திரு. தி. கா. நல்லப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அறிக்கையிலே கூறப்பட்டிருக்கிற கேமன் இந்தியா லிமிடெட் என்கிற கம்பெனி இந்தப் பணியிலே ஈடு பட்டிருக்கிறது. ஆகவே இறந்த தொழிலாளர்கள் 'இந்த ஒப்பந் தக்காரர்களின் கீழ் தான் விபத்தில் சிக்கிய தொழிலாளர்கள் பணிபுரிந்து வந்தார்கள்' என்று அறிக்கையிலே கூறப்பட்டிருக் கிறது. அப்படி கூறுகின்றபொழுது அரசு தன்னுடைய பொறுப் பிலே இருந்து நழுவி விடுவதற்குண்டான ஒரு சந்தர்ப்பம் இந்த அறிக்கையிலே இருக்கிறது. இறந்திருக்கக்கூடிய தொழிலாளர் கள் 6 பேர்கள்; ஒரு தொழிலாளியினுடைய கால்கள் துண்டிக்கப்பட்டன; இன்னும் ஒரு தொழிலாளி மருத்துவ மனையிலே சிகிச்சை பெற்று வருகிறார். ஆகவே இதில் அரசே, நடவடிக்கை எடுத்து அங்கே இறந்த தொழிலாளர்களுக்கும், மருத்துவ மனையில் இருக்கிற தொழிலாளர்களுக்கும், கால் துண்டிக்கப்பட்ட தொழிலாளர்களுக்கும் நஷ்டயீடு வழங்க முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதற்குத் தான் அத்தாரிட்டி ஆன் ஒர்க்மென் காம்பன்சேஷன் அவர்களை நோட்டீஸ் கொடுக்க சொல்லப்பட்டிருக்கிறது. இதில் தக்க நடவடிக்கை எடுத்துக் கொள்ளப்படும்.

## (ஆ) வியாசர்பாடி சத்தியமூர்த்தி நகர் குடிசைமாற்று வாரிய வீடுகளின் நிலைமை.

திரு. சு. பாலன் : தலைவர் அவர்களே, "வியாசர்பாடி சத்தியமூர்த்தி நகர் குடிசை மாற்று வாரியத்தின் மூலம் கட்டப் பட்டுள்ள சுமார் 1000 வீடுகளின் முன் முகப்பு இடிந்து விழுந்து ஒரு சிலர் இறந்ததும், கழிவுநீர் சரிவர வெளியேறாமலும் இருப்பது குறித்த" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஆர், இராதா : பேரவை முன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்.

அறிக்கை.

வியாசர்பாடி, குடிசைப் பகுதி மாற்று வாரியம் பராமரித்து வரும் பெரும் பகுதிகளில் ஒன்றாகும். இங்கு 2,070 குடும்பங்கள் மாடி குடியிருப்புகளிலும், 688 குடும்பங்கள் திறந்தவெளி மனை களிலும், 564 குடும்பங்கள் தீ பிடிக்காத வீடுகளிலும் உள்ளன,



1984 மார்ச் 13] [திரு. எஸ். ஆர். இராதா]

2. 16-8-1983 அன்று சத்தியமூர்த்தி நகரில் மாலை 2.30 மணியளவில் பிளாக் 71-க்கு அருகில் கரக ஆட்டம் நடைபெற்றது. அந்த கரக ஆட்டத்தை பிளாக் 71-ன் முதல் மாடிக் கைப்பிடிச் சுவரின் மீது சாய்ந்தபடி 15—20 நபர்கள் பார்த்துக் கொண் டிருந்த போது அத்தனை பேரின் பாரத்தையும் தாங்காமல் அந்த இடத்தில் உள்ள கைப்பிடிச் சுவர் சரிந்து விழுந்தது. இந்த விபத்தில் இரண்டு நபர்கள் அடிபட்டதாக தகவல் பெறப் பட்டது. அவர்களுக்கு ஸ்டான்லி மருத்துவ மனையில் சிகிச்சை அளிக்கப்பட்டது. அதில் ஒருவரான திரு. முத்து என்பவர் கடந்த 20-8-1983 அன்று காலமானதாக தெரிகிறது. இந்த விபத்து, அளவுக்கு அதிகமாக 15—20 நபர்கள் கைப்பிடிச் சுவற்றில் ஒரு இடத்தில் சாய்ந்து நின்றதால் நேர்ந்தது. கைப் பிடிச் சுவரும் பால்கனியும் 18-8-1983 அன்று சீரமைக்கப்பட்டு விட்டன.

3. சுமார் 1.7 ஹெக்டேர் நிலப் பரப்பில் விரிந்து கிடக்கும் இப்பகுதியை 19 துப்புரவாளர்களை வைத்து பராமரிப்பு செய்யப் பட்டு வருகிறது. இவ்வாறு குறைந்த அளவு பணியாளர்களை அமர்த்தி இருப்பதின் காரணம் நிதி பற்றாக்குறையே. இப் பற்றாக்குறைக்குக் காரணம் இவ்விடத்தில் வசூலாகும் லைசன்ஸ் தொகையில் உள்ள பெரும் நிலுவையே ஆகும். அதன் விபரங் கள் பின்வருமாறு :—

| | எண்ணிக்கை. | நிலுவை. |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| | | (ரூபாயில்.) |
| மாடி குடியிருப்புகள் .. .. | 2,070 | 11,60,647.40 |
| திறந்தவெளி மனைகள் .. | 688 | 2,980.00 |
| தீ பிடிக்காத வீடுகள் .. .. | 564 | 2,52,668.00 |
| | | 14,16,295.40 |

எனினும், மக்களின் தேவைகளை அறிந்து சுமார் ரூ. 3.79 இலட்சம் செலவில் சிறப்பு கட்டிட பராமரிப்பு வேலைகள் செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளது. மேலும், எருக்கஞ்சேரி பெரு வழி சாலையிலிருந்து சத்தியமூர்த்தி நகர் பேருந்து நிலையம் வரையில் உள்ள முக்கிய சாலையை பெருவழித் துறையின் தரத்திற்கேற்ப ரூ. 8.65 இலட்சம் செலவில் பேருந்துகளின் எளிதான போக்குவரத்திற்கு உகந்ததாக்கி அமைக்கப்பட இருக் கிறது.

[திரு. எஸ். ஆர். இராதா] [1984 மார்ச் 13

கட்டிடங்களின் மாடி குடியிருப்புக் கழிவுநீர் பொதுக் குழாய்களிலிருந்து தெருவில் உள்ள பொது கழிவுநீர் குழாய்கள் வரை குடிசை மாற்று வாரியம் பராமரித்து வருகிறது. குடியிருப்புகளிலுள்ள கழிவுநீர் குழாய்களை குடியிருப்போர் தகுந்த முறையில் உபயோகப்படுத்தாததால் அடிக்கடி அடைப்புகள் ஏற்படுகிறது. தரை மட்டத்திலுள்ள கழிவு நீர் குழாய்களில் மாடுகள் கட்டப்படுவதாலும், சில சமூக விரோதிகளால் உடைக்கப்படுவதாலும், இக்குழாய்கள் அடிக்கடி உடைந்து பழுதடைந்து விடுகின்றன. இத்தகைய நிலைமை இருந்தாலும், குடிசைப் பகுதி மாற்று வாரியம் ரூ. 35,350 செலவில் அடுத்த மூன்று மாத காலத்திற்குள் உடைந்த கழிவுநீர் குழாய்களை செப்பனிட உள்ளது. தெரு கழிவுநீர் குழாய்களின் அடைப்பு நீக்குவதற்கு சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீர் அகற்று வாரியத்திடம் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.

திரு. சு. பாலன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்கள் கொடுத்திருக்கிற அறிக்கையிலே, இந்த வியாசர்பாடி சத்தியமூர்த்தி நகர் பகுதியில் மட்டும் ஏறக்குறைய 3,322 குடியிருப்புகள் இருக்கின்றன என்றும், சுமார் 1.7 ஹெக்டேர் நிலப்பரப்பில் விரிந்து கிடக்கும் இப்பகுதியில் துப்புரவுப் பணிகளை மேற்கொள்வதற்கு 19 துப்புரவாளர்களை வைத்து பராமரிப்பு செய்யப்பட்டு வருகிறது என்றும் கூறி இருக்கிறார். ஆகவே இதுபோன்ற குடிசைப் பகுதிகளில் துப்புரவுப் பணிகளை மேற்கொள்வதற்கும், கழிவுநீரை அகற்றும் பணியை மேற்கொள்வதற்கும், மறறும் சுகாதாரப் பணிகளை மேற்கொள்வதற்கும் பாதுமான ஆட்கள் இல்லையென்று அறிக்கையில் கூறி இருப்பதற்கு நான் மிகவும் வருத்தப்படுகிறேன். இந்த மாமன்றத்தில் ட்டு வசதி வாரிய மானியக்கோரிக்கையில் நான் பேசுகிறபோது, சென்னை குடிசை மாற்று வாரியத்தால் பராமரிக்கப்படுகிற குடிசைப் பகுதிகளில் மக்கள் அன்றாடம் மிகவும் மோசமான சூழ்நிலையில் வாழ்ந்துக் கொண்டிருக்கிறார்கள். பெண்களும் மற்றவர்களும் கழிப்பிடங்களை சரியாக உபயோகிக்க முடியாத அளவிற்கு, மோசமான நிலையில், சரியாக பராமரிக்கப்படாமல் இருக்கின்றன என்று சொல்லி இருக்கிறேன். அதன்மீது எந்த விதமான நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. அறிக்கையில் சொல்லப்பட்டிருக்கிற இந்த இடத்தை மாண்புமிகு அமைச்சர் அவர்களும், குடிசை மாற்று வாரிய தலைவியார் அவர்களும், மற்ற அதிகாரிகளும் பல முறை வந்து பார்த்து இருக்கிறார்கள். பல்லாண்டுகளாக அந்த இடம் மிகவும் மோசமான சூழ்நிலையில் இருந்து கொண்டிருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கேள்வியைச் சுருக்கமாகக் கேளுங்கள்.



1984 மார்ச் 13]

திரு. சு. பாலன் : தலைவர் அவர்களே, அந்தப் பகுதியில் கழிவுநீர் சரியாக வெளியேறாமல் சாக்கடையாக தேங்கி நிற்கிறது. இவைகளை எல்லாம் சரிவர செய்வதற்கு ஏறக்குறைய 3.79 இலட்சம் ரூபாய் செலவில் கட்டிட பராமரிப்பு வேலைகள் செய்யவும், 8.65 இலட்சம் செலவில் பேருந்துகளின் போக்குவரத்திற்கு எளிதாக சாலைகள் அமைப்பதற்கும். 35,350 ரூபாய் செலவில் கழிவுநீர் குழாய்களை செப்பனிடவும் உத்தேசிக்கப்பட்டிருப்பதாக அறிக்கையில் சொல்லப்பட்டிருக்கிறது. இந்த எஸ்டிமேட் எப்போது போடப்பட்டது? இந்த வேலைகள் எப்போது ஆரம்பிக்கப்படும் என்று அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 10-20)

மாண்புமிகு திரு. எஸ். ஆர். இராதா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் பாலன் அவர்கள் என் கவனத்தைக் கவருவதற்காக நீண்ட ஒரு விரிவான மானியக் கோரிக்கை விவாதத்தில் பேசுவதுபோல் பேசி கருத்துக்களைக் குறிப்பிட்டார்கள். இங்கே அவைமுன் அளிக்கப்பட்டுள்ள விவர அறிக்கையிலே அத்தனையும் தரப்பட்டு இருக்கிறது. 1.7 ஹெக்டேர் நிலப்பரப்பில் கட்டப்பட்டு இருக்கும் அந்தக் குடியிருப்புகள் நீண்ட காலமாக குடியிருக்க லாயக்கற்றதாக இருக்கிறது என்ற குற்றச்சாட்டு இருந்ததால், சென்ற ஆண்டு அதற்காக தனி முயற்சி எடுத்து, 8.65 லட்ச ரூபாய் மதிப்பீட்டில் திட்டங்களைத் தயாரித்து, சுகாதாரப் பணிகளை அங்கே செய்வதற்காக நடவடிக்கைகளை எடுத்து வருகிறோம். அந்தப் பகுதியில் இருந்து வசூலாகவேண்டிய பாக்கித் தொகை ரூ. 14,16,295 என்ற அளவில் இருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் பாலன் அவர்கள் காட்டுகின்ற அக்கறையை, அந்தப் பகுதியில் இருந்து வரவேண்டிய பாக்கித் தொகையை வசூலித்துத்தர கொஞ்சம் அக்கறை காட்டுவார்களானால், அவர் அந்தப் பகுதியின் சட்டமன்ற உறுப்பினராகவும் இருக்கின்ற காரணத்தால், அவர் அதற்கான முயற்சிகளைச் செய்தால், இன்னும் நல்லமுறையில், வேகமான வகையில் அந்தப் பகுதியில் சுகாதார வசதிகளைச் செய்து தர வசதி வாய்ப்பாக இருக்கும். அதை மாண்புமிகு உறுப்பினர் திரு. பாலன் அவர்கள் செய்யவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

திரு. சு. பாலன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அங்கே வாடகை பாக்கி பல லட்ச ரூபாய்க்கு இருக்கிறது என்று சொன்னார்கள். அந்த வசூலிக்க நான் முயற்சிக்க வேண்டும் என்றும் கேட்டுக்கொண் டார்கள். நீங்கள் ஆட்சிப்பொறுப்பேற்ற பிறகுதான் அங்கே வாடகை அதிகரிக்கப்பட்டு, அங்கே மோசமான நிலையும் இருப்பதால், அங்கேயிருப்பவர்கள் வாடகைக் கட்ட தயங்கு கிறார்கள். நாம்கூட தனியார் வீட்டில் வாடகைக்கு குடியிருந்து, அவர்கள் அதிக வாடகை கேட்கிறபோது என்ன சொல்வோம் என்றால், " வசதி குறைவாக இருக்கிறது, வசதி செய்து கொடுங்கள், அதிக வாடகை தருகிறோம் என்று சொல்வோம். அந்த முறையில் அவர்களுக்கு நீங்கள் இந்த சுகாதார வசதிகளைச் செய்து கொடுத்தால் அவர்கள் வாடகை கட்டத் தயாராக இருக்கிறார்கள். அந்த நிலைமையை உருவாக்கினால் நிச்சயம் வாடகையைத் தருவார்கள் என்று சொல்லிக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஆர். இராதா : தலைவர் அவர்களே திரு. பாலன் அவர்கள் ஒரு குற்றச்சாட்டாகச் சொல்கிறார்கள், நாங்கள் ஆட்சிக்கு வந்தபின்புதான் வாடகை அதிகரிக்கப் பட்டது, அதனால் பாக்கி ஏற்பட்டது என்று சொன்னார்கள். அந்தக் குடியிருப்பு 1973-74ஆம் ஆண்டில் கட்டப்பட்டது. அப்போதிலிருந்தே அதிலே பல்வேறு விதமான வகையில் சுகாதார வசதிகள் இல்லாமல் இருந்து, அதைப் பற்றி அவர்கள் பல்வேறு முறை எடுத்துச் சொல்லியும் அது கவனிக்கப்படாமல், இந்த அரசு வந்தபின்னாலேதான் அதற்கான நடவடிக்கை களை எடுத்து இருக்கிறது. வாடகை அதிகம் என்று சொன்னார்கள் ரூ. 22 வாடகைக்கு ஒரு குடியிருப்பு இந்த சென்னை மாநகரத்தில் மிகவும் குறைவான வாடகைதான். (குறுக்கீடு) திரு. பாலன் அவர்கள் அந்த மக்கள் வாடகை தருவதற்கு தயாராக இருப்பதாகவும் இந்த வசதிகள் செய்து தரவேண்டும் என்றும் சொன்னார்கள். அந்த வசதிகள் செய்து தர நட் வடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அவர்கள் செலுத்த வேண்டிய பாக்கித் தொகையை ரூ. 35, 40, 45 என்ற அளவிலே கட்டி னால் போதும் என்று தவணை முறையில் கூட பெற்றுக் கொள் ளத் தயாராக இருக்கிறோம். ஆகவே, திரு. பாலன் அவர்கள் முயற்சி எடுத்து, அந்தப் பணத்தை வசூலித்துக் கொடுக்க நடவடிக்கை எடுப்பார்களானால், அந்தக் குடியிருப்புகளை அவர்களுக்கே சொந்தமாக்கித் தரவும், அங்கே சுகாதார வசதிகளைச் செய்து தரவும் விரைவான நடவடிக்கைகளை எடுக்க இயலும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.





## 3. வரவு-செலவுத் திட்டம் 1984-85—பொது விவாதம்—தொடர்ச்சி

திரு. ஜி. கே. சுப்பிரமணியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மாமன்றத்திலே கொண்டுவரப் பட்டுள்ள வரவு-செலவுத் திட்டத்தை வரவேற்றுப் பேசு கின்ற வாய்ப்பினை நல்கியமைக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

(மாண்புமிகு மாற்றுத் தலைவர் தலைமை)

இந்த வரவு-செலவுத் திட்டம் குறித்து மாண்புமிகு உறுப் பினர்கள் பேசுகையில் பல தரப்பட்ட கருத்துக்களை இங்கே எடுத்து வைத்தார்கள். இந்த வரவு-செலவுத் திட்டத்தைப் பொறுத்தவரையில், இன்றைக்கு நாட்டிலே மிக அத்தியா வசியமான, முக்கியமான, தேவையான தொழில் கல்விக்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டு இருக்கிறது என்பதால், அதற்காக என்னுடைய முழுமையான பாராட்டுக் களைத் தெரிவித்து, அதை நான் மனதார வரவேற்கக் கடமைப் பட்டு இருக்கிறேன். அதேபோல் விவசாயிகளுக்கு இன்ஷூ ரன்ஸ் பாதுகாப்பு, அரசு ஊழியர்களுக்கு பே கமிஷன் என்று இப்படி பல முறையிலும் இந்த பட்ஜெட் மிகச் சிறப்பாக அமைந்து இருக்கிறது. இங்கே மாண்புமிகு உறுப்பினர்கள் பேசுகையில் இதிலே எந்தவிதமான புரட்சியும் இல்லை, புதுமையும் இல்லை என்று சொன்னார்கள். அது மாத்திர மல்ல, மாண்புமிகு உறுப்பினர் சகோதரர் உமாநாத் அவர்கள் கூறுகிறபோது, இது மோடிமஸ்தான் பட்ஜெட் என்று குறிப் பிட்டார்கள். உண்மைதான். ஏனென்றால், மோடிமஸ்தான் தன்னுடைய வேலைகளைச் செய்கிறபோது கனவிலும் நினைத்துப் பார்க்காத காரியங்களைத்தான் அவன் செய்து காட்டுவான். ஒருவேளை அந்த அர்த்தத்திலே அவர்கள் குறிப் பிட்டுச் சொன்னார்களா என்பது எனக்குத் தெரியாது. அல்லது இதற்கு முன்பே இருந்த ஆட்சியாளர்கள் மோடிமஸ்தான் வேலை செய்து கொண்டிருந்திருப்பார்கள். நான் கொஞ்சம் நடைமுறை வழக்கிலே இதைச் சொல்ல வேண்டுமென்றால், தெருவிலே மோடிமஸ்தான் வேலை செய்வார்கள். மேலே பார், வானம் ; கீழே பார், பூமி என்று எதை எதையோ சொல்லி விட்டு, கீரி-பாம்பு சண்டை விடுகிறேன் பாருங்கள், சண்டை விடுகிறேன் பாருங்கள் என்று சொல்லிக் கொண்டே இருப்ப தோடு, காளி வா, கல்கத்தா காளி வா என்று சொல்லி, குடும் பத்தில் தகராறா, இதோ தாயத்தை வாங்கிக்கொள், தாயத்தை வாங்கி முண்டாசிலே கட்டு அல்லது அண்டாவிலே போடு ; எல்லாம் தீர்ந்து போகும் என்று சொல்லி தாயத்தை எல்லாம் விற்றுவிடுவார்கள். கீரிக்கும் பாம்புக்கும் சண்டை விடமாட்டார்கள். சண்டை விடாமலே, தாயத்தை விற்று விட்டு, மூட்டை கட்டிவிடுவார்கள். இதற்கு முன்னாலே இருந்தவர்கள் அந்த மாதிரிதான் சொன்னார்கள். திட்டத் தைச் சொன்னார்கள். ஆனால் வரவில்லை.

[திரு. ஜி. கே. சுப்பிரமணியன்] [1984 மார்ச் 13

நூறாண்டுக் காலமாகப் பேசப்பட்ட கிருஷ்ணா நதி நீர்த் திட்டம் இப்போதுதான் வந்திருக்கிறது. இதில் புதுமை இல்லையா? புரட்சி இல்லையா என்று நான் கேட்க ஆசைப் படுகிறேன்.

சத்துணவுத் திட்டம் பற்றிக்கூட குறிப்பிட்டார்கள். இன் றைக்கு உலகம் முழுவதும் சுற்றியிருக்கிற அன்னை தெரசா அவர்கள் ஏழை எளிய மக்களுக்கு சத்துணவு அளிப்பது அவசியம் என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். அன்னை தெரசா இன் றைக்கு காஷ்மீரில் பேசும்போது சத்துணவுத் திட்டம் மிகச் சிறப்பான திட்டம் என்று சொல்லியிருக்கிறார்கள். அண்மை மாநிலத்திலுள்ளவர்கள் எல்லாம் இந்த சத்துணவுத் திட்டம் ஒரு சத்தான திட்டம், எங்கள் மாநிலத்திலும் இத்திட்டத்தைச் செயல்படுத்த வேண்டும் என்று சொல்லி இதிலே ஆர்வம் காட்டு கிறார்கள். இப்போது நடப்பது ராமராஜியம். மாண்புமிகு புரட்சித் தலைவர் எம். ஜி. இராமச்சந்திரன் அவர்கள் ஆட்சி நடக்கிறது. ஆந்திரத்திலே என். டி. ராம ராவ் அவர்கள் ஆட்சி நடக்கிறது. அதைப்போல கர்நாடகத்தில் இராமகிருஷ்ண ஹெக்டே அவர்கள் ஆட்சி நடக்கிறது. ஆக இப்போது இங்கெல்லாம் ராமராஜியம் நடந்துகொண்டிருக் கிறது. இதற்கு முன்னாலே இருந்தவர்கள் எல்லாம் கிராமமக்கள் வாழ வேண்டும்; ஏழை எளிய மக்களுக்கு நன்மை செய்ய வேண்டும்; திட்டம் போடுகிறோம் என்று சொன்னார்கள். ஆனால் செய்யவில்லை. இதை எல்லாம் அரசியல் வாதிகள் அடுத்த 'ஜெனரல் எலெக்ஷனை' வைத்து சொல்வார்கள், திட்டங்களை அறிவிப்பார்கள். ஆனால் மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் அடுத்த 'ஜெனரேஷனை' வைத்து திட்டங் களைப் போடுகிறார்கள். அந்த அடிப்படையிலேதான் இந் தனை செய்து, இந்த பட்ஜெட்டை தாக்கல் செய்திருக்கிறார் கள். இதனுடைய பயனை 10, 15 ஆண்டுகளுக்குப் பின்னால் தான் கண்டுகொள்ள முடியும். இப்படிப்பட்ட ஒரு சிறப்பான பட்ஜெட்டை இன்றைய தினம் கொண்டு வந்திருக்கிறார்கள்.

இன்னும் சில உறுப்பினர்கள் இங்கே குறிப்பிட்டார்கள் கடன் வசூல் செய்வதில் கடுமை காட்டப்படுகிறது., ஜப்தி செய்கிறார்கள் என்று எல்லாம் சொன்னார்கள். எங்கே அப்படி கொடுமை நடக்கிறது, ஜப்தி நடக்கிறது என்பது எங்களுக்குத் தெரியவில்லை; எந்த மக்களைத் துன்புறுத்து கிறார்கள் என்று எங்களுக்குத் தெரியவில்லை. பாதிக்கப் பட்ட இடங்களில் பல கோடி ரூபாயை நம்முடைய அரசு ரத்து செய்திருக்கிறது.



1984 மார்ச் 13] [திரு. ஜி. கே. சுப்பிரமணியன்]

தாழ்த்தப்பட்ட மக்களுக்கு, பிற்பட்ட மக்களுக்கு இந்த அரசில் சிறப்பாக, முறையான பாதுகாப்பு இல்லை என்று சிலர் சொன்னார்கள். இதற்கு முன்பு இருந்தவர்கள் எப்படி பாதுகாப்பு கொடுத்தார்கள், இப்போது எப்படி கொடுக்கப்பட்டிருக்கிறது என்பதை உணர்ந்துதான், நாட்டு மக்கள் நன்றாகத் தெரிந்துதான் மீண்டும் ஆட்சிக் கட்டிலிலே புரட்சித் தலைவரைக் கொண்டு வந்து உட்கார வைத்திருக் கிறார்கள். இந்த பட்ஜெட் வாத்தியார் போட்ட பட்ஜெட். இதில் தப்பு இருக்காது. அதனால்தான் மீண்டும் ஆட்சிக் கட்டி லிலே அமர வைத்திருக்கிறார்கள்.

சுருக்கமாக ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். கோமணம் கட்டிக்கொண்டு திரிகிறவர்கள் ஊரிலே ஒருவன் வேட்டிக் கட்டிக்கொண்டு போனால் அவனை முட்டாள் என்று சொல் வார்கள். அதைப்போல இதற்கு முன்னாலே இருந்தவர்கள் பட்ஜெட் என்ற வெறும் மரத்தையும் பச்சை இலையையும் தான் காட்டினார்கள். ஆனால் இன்றைக்கு வந்திருககிற பட்ஜெட் மரம் அப்படிப்பட்டதல்ல. இதற்கு ஆணிவேர் ஜல்லி வேர், பக்கவேர் உண்டு, சுற்றிலும ஜீவநீர் உண்டு. ''எல்லோரும் எல்லாம் பெற்று, இல்லாமை இந்த நாட்டில் இல்லாமை வேண்டும்'' என்று தந்தை பெரியார் அவர்களும், பேரறிஞர் அண்ணா அவர்களும் கண்ட கனவை எல்லாம் நனவாக்கி, இன்றைக்கு மாண்புமிகு புரட்சித் தலைவரவர்கள் புதுமையான கருத்துக்களைச் சொல்லி, புதிய புதிய திட்டங் களைத் தீட்டி இந்த நாட்டு மக்களுக்காகப் பாடுபடுவதை அனைவரும் அறிவார்கள். அனைத்துக் கட்சி உறுப்பினர் களும் உள்ளுக்குள்ளே அப்படி நினைத்துப் பாராட்டினாலும் வெளியேசொல்ல மறுக்கிறார்கள். எதை எடுத்தாலும்எம். ஜீ. ஆர். செய்கிறார் தேவையான எல்லாவற்றையும் செய்கிறார் என்று பாராட்டும் மனப்பக்குவம் இருந்தாலும் வெளியே எப்படி இதைச் சொல்வது என்று நினைக்கிறார்கள். இப்படிப்பட்ட சூழ்நிலையில் தான் இன்றைக்கு இந்த ஆட்சியில் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு, பிற்பட்ட மக்களுக்கு பாதுகாப்பு இல்லை என்று சொல்கிறார்கள்.

நான் ஒவ்வொரு சட்டமன்றக் கூட்டத்திலும் சொல்வது வழக்கம். இந்தக் கூட்டத்திலும் சொல்கிறேன். மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் திரைப்பட நடிகராக இருந்த நேரத் தில் என்னென்ன கருத்துக்களை வலியுறுத்தினார்களோ அந்தக் கருத்துக்களைத்தான் இன்றைக்கு ஆட்சிக் கட்டிலிலே அமர்ந் திருந்து ஒவ்வொன்றாக நடைமுறைப்படுத்திக் கொண்டிருக்கி றார்கள். எனக்கு ஒரு காட்சி நினைவுக்கு வருகிறது. மதுரை வீரன் என்ற படத்தில் அந்தக் காட்சி வருகிறது. மதுரை வீரன் படத்தில் கதாநாயகி பொம்மி என்ற பாத்திரம் ஆற்றிலே விழுகிறமாதிரி ஒரு காட்சி.

[திரு. ஜி. கே. சுப்பிரமணியன்] [1984 மார்ச்! :

(முற்பகல் 10-30)

ஆற்றில் வீழ்ந்து அந்தக் கதாநாயகியை காப்பாற்றுகிற ஒரு
பாத்திரமாக, அந்தக் கதாநாயகன் பாத்திரத்திலே நம்முடைய
புரட்சித் தலைவர் பங்கேற்று இருப்பார். அப்படிக் காப்பாற்று
கிறபோது, நரசப்பன் என்ற ஒருவர் வருவார். அந்த நரசப்
பன் வந்து வீரனிடத்திலேபோய் சொல்வார். அந்த வீரன்
காப்பாற்றியதை அறிந்து அந்த நரசப்பன், அங்கு
இருந்தவர்கள் பேசுகிறபோது குறிப்பிடுவார்கள். ' டேய்
குலத்திலே சக்கிலியன் எப்படிடா நீ எங்கள் மன்னன்
மகளைத் தொடலாம் ' என்று கேட்பார். அங்கே வீரன்
வேடத்தில் இருக்கின்றவர் சொல்வார். ' நல்ல நியாயம்,
தொடாமல் எப்படி தூக்குவது ' என்று கேட்பார். உடனேயே
பக்கத்திலே இருக்கின்றவர் சொல்வார். ஏன் நாங்கள் எல்
லாம் எப்படி நின்று வேடிக்கை பார்க்கிறோமோ, அப்படி நீயும்
பார்க்க வேண்டியது தானே ' என்று சொல்வார். உடனே
பக்கத்திலே இருக்கின்றவர் சொல்வார்—ஐயய்யோ, இள
வரசியை நீச்சப் பையன் தொட்டுவிட்டாரே, மன்னன் மகளை
அரண்மனையிலே சேர்த்துக்கொள்ள மாட்டார்களே என்பார்.
அப்போது ஒருவர் சொல்வார்—உன் நிழல் பட்டாலே
தோஷம். தள்ளி நில்லுடா என்று சொல்வார். அப்போது
வீரன் வேடத்தில் இருக்கின்ற புரட்சித் தலைவர் குறிப்பிடுவார்.
நல்ல நியாயம் ஐயா, ஆபத்தில் சிக்கியவர்களைக் காப்பாற்ற
வக்கு இல்லை வகை இல்லை. தொட்டால் தோஷம், நிழல்
பட்டால், தீங்கு, காலம் தான் உங்களுடைய நிலைமையை மாற்
றிக் காட்டும். அந்தக் காலம் தான் அண்ணா திராவிட
முன்னேற்றக் கழக ஆட்சிக் காலம் என்பதை வலியுறுத்திச்
சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட மக்கள் எல்லாம்,
சேர்மனாக, தலைவர்களாக அவர் படத்திலே குறிப்பிட்
டதை இன்றைக்கு நடைமுறைப்படுத்திக்கொண்டிருக்கிறார்கள்.
இப்படி ஒவ்வொன்றாகச் எவ்வளவோ பொது
வுடமை கருத்துக்களைச் சொன்னார்கள். ஆனால் எதையும்
செய்யவில்லை முந்தைய அரசு. சொன்னதும், செய்ததும் இந்த
ஆட்சியில் தான் என்று சொல்லி மிகச் சிறப்பான பட்ஜெட்
இது என்று கூறி நான் வரவேற்கிறேன்.



1984 மார்ச் 13] [திரு. ஜி. கே. சுப்பிரமணியன்]

இந்தச் சூழ்நிலையில் பெரியார் மாவட்
டத்தில் பவானிசாகர் தொகுதியில் நீண்ட நாட்களாக
ஒரு கோரிக்கையை இந்த மன்றத்திலே வைத்தி
ருந்தேன். நான் கடந்த நான்கு ஆண்டுகளாகச் சொல்லிக்
கொண்டிருக்கிறேன். பவானிசாகர் ஆற்றின் குறுக்கே ஒரு அணை
யைக் கட்டவேண்டுமென்று, புஞ்சைப்புளியம்பட்டி, நம்பியூர்,
அவினாசி போன்ற வறட்சிப் பகுதிகளுக்கெல்லாம் நீர்ப்பாசன
வசதி செய்து கொடுப்பதற்காக அந்தக் கால்வாயை வெட்டி,
அந்தக் கால்வாய்க்கு அண்ணாவின் பெயரைச் சூட்டுகின்ற
வகையில் அண்ணா கால்வாய் என்ற பெயரை வைக்க
வேண்டுமென்று கேட்டு இருந்தேன். அந்தக் கால்வாய் ஆய்
விலே இருப்பதாக சம்பந்தப்பட்ட உறுப்பினர்களும், அமைச்ச
ரும் என்னிடத்தில் குறிப்பிட்டார்கள். 1954-லிருந்து ஆய்விலே
இருந்த அந்தக் கால்வாய் இன்றைக்கு மறு ஆய்வுக்கு எடுத்துக்
கொண்ட நிலையில் மழை, வெள்ளத்தால் கிடைக்கின்ற உபரி
நீரை தேக்கிவைத்து, கால்வாய்வெட்டி அந்தக் கால்வாய் மூலம்
ஏறக்குறைய 40கிலோ மீட்டருக்கு,36000 ஏக்கருக்கு நீர்பாசனம்
ஏற்படுத்தக்கூடிய அண்ணா கால்வாய் திட்டத்தை புரட்சித் தலை
வர் ஆட்சிக் காலத்தில் கொண்டுவர வேண்டுமென்று நான் இந்த
நேரத்திலே வேண்டி விரும்பிக் கேட்டுக்கொள்கிறேன்.

தொழிற்கல்வியில் மிகுந்த அக்கறை கொண்டிருக்கிறது இந்த
அரசு. பவானிசாகர், சத்தியமங்கலம் போன்ற இடங்களில்
மலை வாழ் பகுதி மக்கள் அதிகமாக இருக்கிறார்கள். அவர்
கள் எல்லாம் உயர்நிலைப் பள்ளியில் படிப்பதே மிக அதிசயம்.
அவர்கள் ஓரளவு உயர் தொழிற் கல்வியைக் கற்பதற்கு, கல்
லூரிக்குப் போவதற்கு வசதி இல்லாமல் போக்குவரத்து
இல்லாமல் மலைப்பகுதியாக இருக்கிறது. இயற்கைச் சூழ்நிலைகளில்
அந்தப் பகுதிகளில் பாலிடெக்னிக்குகளை, தொழிற்கல்லூரி
களை அமைத்திட வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ள
விரும்புகிறேன்.

பவானிசாகர் தொகுதி புஞ்சைப்புளியம்பட்டி நீண்ட நாட்க
ளாக நகராட்சியாக ஆக்கப்படுவது தாமதமாகிக் கொண்டிருக்
கிறது அதை விரைவாக நகராட்சியாக ஆக்கித்தர வேண்டுமென்று
கேட்டுக் கொள்கிறேன். இந்த பட்ஜெட்டிலே பேச வாய்ப்பு

கொடுத்திருக்கிறார்கள். இந்த நேரத்தில் முக்கியமான பொது
வான கருத்தைச் சொல்லக் கட்மைப்பட்டிருக்கிறேன். பெரியார்
மாவட்டத்தில் கூலிநெல் அறவைக்காரர்கள் 200-க்கும் மேற்
பட்ட அரிசி ஆலைச் சொந்தக்காரர்களுக்கு லைசன்ஸ் ரத்து
செய்யப்பட்டிருக்கிறது. லெவி வாங்குவதற்கு கடுமையாக இருக்
கிறது என்று சொல்லி லைசன்ஸ் ரத்து செய்யப்பட் டிருக்கிறது.
யாரோ ஒருவர் செய்த தவறுக்கு எல்லோரையும் தண்டிக்கின்ற
முறையில் ரத்துசெய்யப்பட்டிருக்கிறது. வருஷத்திற்கு இரண்டு
டன்னாவது லெவி கொடுக்கின்ற நிரந்தர உத்தரவை பிறப்
பித்து அவர்களுக்கு நிரந்தரமாக விடுதலை தரவேண்டுமென்று
கேட்டுக்கொள்கிறேன்.

அதே போன்று பத்திரிகையாளர்கள் இந்த மாமன்றத்திற்கும்
மக்களுக்கும் இணைப் பாலமாக இருக்கிறார்கள். ஆணி வேறாக
இருக்கிறார்கள். அவர்கள் எல்லோரும் ஒரு கோரிக்கை வைத்திருக்
கிறார்கள். அவர்கள் வாடகை வீட்டில் இருக்கிறார்கள்.
அவர்களுக்கு தவணை முறையில் அவர்கள் இருக்கிறவீட்டை
அவர்களுக்கே சொந்தமாக்கி கொடுத்திட வேண்டு
மென்று அனைத்து உறுப்பினர்கள் சார்பாக கேட்டுக்கொள்கி
றேன். சட்டமன்ற காவலர்களுக்கு ஏற்கனவே நவம்பர் மாதத்
திலிருந்து கிடைக்க வேண்டிய பில் இன்னும் கொடுக்கப்படாமல்
இருக்கிறது. அவர்களுக்கு யூனிபார்ம் கொடுக்க வேண்டுமென்ற
கோரிக்கை வைக்கப்பட்டிருக்கிறது. எனவே இவைகளை
எல்லாம் கவனித்து ஆவன செய்யவேண்டுமென்று கேட்டுக்
கொண்டு, இந்த பட்ஜெட்டிலே பேசுவதற்கு வாய்ப்பு
நல்கிய பேரவைத் தலைவர் அவர்களுக்கு நன்றியைக் கூறி விடை
பெறுகிறேன். வணக்கம்.

**திரு. அன்பில் தர்மலிங்கம் :** மாண்புமிகு மாற்றுத்
தலைவர் அவர்களே, நம்முடைய நிதி அமைச்சர் நாவலர் அவர்
களால் இங்கே 'வைக்கப்பட்டு இருக்கின்ற இந்த நிதி நிலை
அறிக்கையின் பக்கங்கள் வளர்ந்து வருவதைப் போல் பற்றாக்
குறையும் வளர்ந்து கொண்டே வருகிறது என்பதை நான் முத
லிலே சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்,



முதலாவதாக வந்த நிதி நிலை அறிக்கை, 1977-78 ஆம்
ஆண்டு மொத்த பற்றாக்குறை 13.92 கோடி ; 1978-79 ஆம்
ஆண்டு பற்றாக்குறை 34.5 கோடி ; 1981-82-ல் பற்றாக்குறை
111.49 கோடி ; 1982-83-ல் பற்றாக்குறை 135.44 கோடி.
இந்த ஆண்டு, 1984-85-ல் பற்றாக்குறை 201.50 கோடி. பற்
றாக்குறை என்று இந்த அறிக்கையிலே கூறியிருக்கிறார்கள். மது
விலக்கை ரத்துசெய்துவிட்டு கோடிக்கணக்கான ரூபாய்களை
வருமானமாகப் பெற்றதற்குப் பிறகு இந்த ஆண்டு கிட்டத்
தட்ட 200 கோடி ரூபாய்க்கு மேல் பற்றாக்குறை பட்ஜெட்
தாக்கல் செய்திருப்பது உண்மையிலே வேதனையான ஒன்
றாக கருதவேண்டியிருக்கிறது. இந்த மாநில அரசினுடைய
பட்ஜெ டில் 57 கோடி ரூபாய்க்கு மேல் மக்கள் கவலைப்படுகிற
அளவிற்கு இன்றையதினம் வரி விதிக்கப்பட்டு இருக்கிறது. இந்த
57 கோடி ரூபாய்க்கு வரி போட்டிருப்பதில் வேதனைக்குரிய
செய்தி என்னவென்றால், விவசாயிகளுக்கு மின்சாரம் கிடைக்
காத நேரத்தில் அதிகச் செலவானாலும் பரவாயில்லை, உற்
பத்தியைப் பெருக்க வேண்டும் என்ற நோக்கத்தோடு டீசல்
எண்ணெயைப் பயன்படுத்தி, மோட்டார்களைப் பொருத்தி,
விவசாயம் செய்து வருகின்ற இந்த சூழ்நிலையில் இது அனை
வருக்கும் தெரிந்ததுதான். இன்றைக்கு டீசலுக்கும் வரியை
உயர்த்தி இருப்பதன் மூலமாக விவசாயிகளுக்கு தொல்லை
கொடுக்கின்ற ஒரு நிகழ்ச்சியாக இது இருக்கிறது என்பதை
நான் சுட்டிக்காட்ட கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோல் நூலுக்கும் வரி விதிக்கப்பட்டு இருக்கிறது. நம்
முடைய நாவலர் அவர்கள் அநேகமாக அந்த நூலுக்குப் போட்ட
வரி ரத்து செய்துவிடுவோம் என்று சொன்னாலும் சொல்வார்கள்
என்று நம்புகிறேன். அதேபோல் விவசாயிகளுடைய நிலைமையை
நாம்சொல்லவேண்டும் என்று சொன்னால், ''பெய்தும் கெடுத்தது
பொய்த்தும் கெடுத்தது— பழமொழி சொல்வார்கள்— என்று
சொல்கிற வகையில், மழை பெய்யாத போது தமிழ் நாட்டிலே
வறட்சி நிலை ஏற்பட்டது. இப்போது வெள்ளம், புயல் ஏற்பட்டு
பெரும் வேதனைக்கும் சோதனைக்கும் 'விவசாயிகள் ஆளாக்கப்
பட்டு இருக்கிறர்கள். அவர்களுடைய துயரைத் துடைப்பதற்கு
எவ்வளவுதான் முயற்சி செய்தாலும், அவர்களுடைய துயர்
துடைக்கப்படாத ஒன்றாக ஆகிவிடும்போல் ஒரு சூழநிலை இருக்
கிறது.

[திரு. அன்பில் தர்மலிங்கம்] [1984 மார்ச் 13

சமீபத்தில் ஏற்பட்ட வெள்ளத்தினால், வயலிலே அறுத்தவைகளை கலத்திற்குக் கொண்டு வந்து சேர்க்க முடியாமலும், அப்படி கொண்டு வந்து சேர்த்தாலும் அவற்றை அடிக்க முடியாமலும், அப்படி அடித்தாலும், அத்தனையும் பதராக இருக்கக்கூடிய நிலமைகள் தான் இருந்தன. நான் ஒரு கணக்கைச் சொல்ல வேண்டும் என்று சொன்னால், 10 ஏக்கர் அவர்கள் சாகுபடி செய்கிறார்கள் என்றால் 50 கலம் நெல் கூட அவர்களுக்கு கிடைக்கமுடியாதபடி ஒரு சூழ்நிலை ஏற்பட்டு அவர்கள் பாதிக்கப்பட்டு இருக்கிறார்கள். அதே நேரத்தில் இன்றைய தினம் கரும்புக்கு நம்முடைய அரசு ஒரு கூடுதல் விலை கொடுக்கும் என்று எதிர்பார்த்து, அது கிடைக்காமல் இன்றையதினம் பம் வேறு அல்லல்களுக்கும் பல்வேறு இன்னல்களுக்கும் அவர்கள் ஆளாகியிருக்கிறார்கள். இன்றையதினம் கரும்புக்கு பல்வேறு இடங்களில் பல்வேறு விதமான விலைகளை நிர்ணயம் செய்திருக்கிறார்கள். 200 ரூபாயிலிருந்து 250 ரூபாய் வரை கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள். திருச்சி கொத்தாரி சர்க்கரை ஆலையில், சென்ற ஆண்டு கேட்டபோது, தொகையை கூட்டிக் கொடுக்காமல், அந்த தொகையை குறைத்திருக்கிறார்கள். தற்போது விலைவாசி நாளுக்குநாள் ஏறிக்கொண்டே போகிறது. உற்பத்திச் செலவும் நாளுக்குநாள் ஏறிக்கொண்டேயிருக்கிறது. அப்படிப்பட்ட சூழ்நிலையில் கரும்பினுடைய விலை குறைக்கப்பட்டிருக்கிறது. இதற்காக நிர்வாகத்தைச் சென்று கேட்டால் சக்தி சுகர்சில் 200க்கு மேல் கொடுக்கப்படுகிறது, பெரம்பலூரில் உள்ள சர்க்கரை ஆலையில் 209 ரூபாய் கொடுக்கப்படுகிறது என்றும், ஏன் கொத்தாரியில் மட்டும் இந்த விலை என்று கேட்டால் அவர்கள் ரெக்கவரி பேசிஸ் என்று சொல்கிறார்கள். விவசாயிகளுக்கு எந்த அளவிற்கு ரெக்கவரி பேசிஸ் வருகிறது என்பது கூட தெரியாது. ஆகையினால் ஒரு குறிப்பிட்ட நியாயமான விலையைக் கொடுப்பதற்கு அரசாங்கம் முன்வரவேண்டும் என்று நான் இந்த நேரத்தில் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டு இருக்கிறேன்.

(முற்பகல் 10—40)

இங்கே பேசிய மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லாம் அவர்களுடைய சாதனையைச் சொல்வதைவிட, இதற்கு முந்தியிருந்த அரசு, முந்தியிருந்த அரசு என்று சொல்லிக் கொண்டே வந்தார்கள். நான் கவனித்துக் கொண்டே இருந்தேன். முந்தியிருந்த அரசு என்றால் எது? கலைஞர் முதலமைச்சராக இருந்த அந்த அரசா, பேரறிஞர் அண்ணா அவர்கள் 2 ஆண்டுக் காலம் முதலமைச்சராக இருந்தார்களே அந்த அரசா அல்லது இரண்டு ஆண்டுக்காலம், இந்த அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி கலைப்பதற்கு முன்னால் இருந்ததே அந்த அரசா என்று என்னால் புரிந்துக் கொள்ள முடியவில்லை.



1984 மார்ச் 13] [திரு. அன்பில் தர்மலிங்கம்]

ஆனால் நம்முடைய நாவலர் அவர்கள் அடிக்கடி சொல்வார்கள். அது நினைவுக்கு வருகிறது. எதிர்க்கட்சி என்றால், ஆளும் கட்சியிலே இருக்கிற குற்றம் குறைகளை எடுத்துச் சொல்வதற்காகத்தான் இருக்கிறதே தவிர, அவர்களுக்கு 'லாலி பாடுவதற்காக எதிர்க்கட்சிகள் இங்கே வருவதில்லை என்று அடிக்கடிச் சொல்வார்கள். அதைப் போலவே, எதிர்க்கட்சிகள் என்பது மாட்டுக்கு மூக்கணாங்கயிறு போல—அவர்களுடைய பாஷை அது—குதிரைக்கு கடிவாளம் போல, வண்டிக்கு கடையாணி போல என்று சொல்வார்கள். அதுதான் எதிர்க்கட்சியினுடைய வேலை. இங்கே குற்றச்சாட்டுகளை நாங்கள் சொல்கிறோம் என்று சொன்னால், அது குறையை எடுத்துச் சொல்வதாக கருதாமல், அது நிவர்த்தி செய்யப்படவேண்டிய ஒன்று என்று அந்தப்பொருளிலே நினைப்பீர்களேயானால், அது மிக நன்றாக இருக்கும்.

நாங்கள் எதையுமே குறைச் சொல்கிறோம், என்று கூறுகிறார்கள். நாங்கள் எதையுமே குறைச் சொல்வது கிடையாது. தன்னிறைவுத் திட்டம் கொண்டு வந்தபோது முதன் முதலில் ஆதரித்தவன் நான். தன்னிறைவுத் திட்டத்தை எப்படிச் செயல்படுத்த வேண்டும் என்ற யோசனையை அப்பொழுது நான் சொன்னேன். காரணம் தன்னிறைவுத் திட்டம் கொண்டு வந்திருக்கும் அந்த நேரத்திலே மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட மக்கள் பிரதிநிதிகள் அங்கேயில்லை. அப்படி மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் இல்லாத காரணத்தால், அது அதிகாரிகளுடைய, அதிகார வர்க்கத்தினுடைய ஆட்சியாக அமைந்து விடும். அதிலே ஜாக்கிரதையாக இருக்க வேண்டும் என்று அப்பொழுதே சொன்னேன். ஆனால் அதை ஏதோ குறையாக எடுத்துக் கொண்டு கவனிக்காமல் விட்ட காரணத்தினால்தான், இன்றைய தினம் தன்னிறைவுத்திட்டத்திலே இவ்வளவு கோளாறுகள் ஏற்பட்டிருக்கின்றன.

நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கூட சென்ற தடவை பேசியபோது அண்ணா திராவிட முன்னேற்றக்காரர்கள் மட்டும் இதிலே தவறு செய்யவில்லை, எல்லாக் கட்சியைத் சேர்ந்தவர்களும் இதிலே தவறு செய்திருக்கிறார்கள் என்று அந்தப் பேச்சிலே சொன்னார்கள். மக்களுடைய வரிப்பணத்தை வீணாக்குவதில் எந்தக் கட்சியைச் சேர்ந்தவர்கள் ஈடுபட்டிருந்தாலும், அது குற்றம் குற்றமேதான், ஆகவே, யார் செய்திருந்தாலும் அதில் நீங்கள் கண்டிப்பாக இருந்திருக்க வேண்டும் என்பதுதான் என்னுடைய கருத்தே தவிர, அவர்கள் மாத்திரம் அல்ல, இவர்களும் செய்திருக்கிறார்கள் என்று சொல்வது சரியான சமாதானமாகாது என்பதை தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

தன்னிறைவுத் திட்டம் தமிழகத்தில் சரியாக செயல்பட
வில்லை என்று நாங்கள் சொல்கிற நேரத்தில், இதற்கு முந்தி
இருந்த ஆட்சியில் என்ன செய்து விட்டார்கள் என்று கேட்கிறார்
கள். முன்னால் இருந்த ஆட்சி. சரியாக செய்யாததினால் தான்
இப்பொழுது உங்களைக் கொண்டு வந்து வைத்திருக்கிறார்கள்.
நீங்களும் அதே குற்றத்தை செய்து வந்தால் நாளைக்கு யாரிடம்
போய் ஒப்படைப்பது? எங்களிடவோ அல்லது. வேறு யாரி
டத்திலுமோ என்று எனக்குத் தெரியவில்லை. ஆகவே, இங்கே
சொல்ல வேண்டியதை சொல்வதற்காகத்தான் எதிர்க்கட்சிகள்
இருக்கிறதே தவிர, அதைத் தவறாக எடுத்துக் கொள்ள வேண்
டிய அவசியம் இல்லை.

நாங்கள் சொல்வது உங்களுக்கு குற்றமாகப்படுகிறது. ஆனால்
ஆடிட்டர் ஜெனரல் அவர்களுடைய ரிப்போர்ட்டை நீங்கள் பார்ப்
பீர்களேயானால், அரசினுடைய கண்டின்ஜென்சி பண்ட் என்று
சொல்லப்படுகிற நிதி ஒன்று உண்டு. நிதிநிலை அறிக்கையில்
சொல்லப்படுவது ஏதோ ஒரு அவசர காலத்திட்டம் வரும்
போது, அவசரத்திற்கான அவசியம் ஏற்படும்போது, அந்த நிதி
யைப யன்படுத்துவார்கள். அரசின் கணக்குகளை தணிக்கைசெய்
யும், காம்ட்டிரோலர் அண்ட் ஆடிட்டர் ஜெனரல் ஆப் இந்தியா
கொடுத்திருக்கிற அறிக்கைபடி 1981-82 ஆம் ஆண்டில் கன
டின்ஜென்சி பண்டில் இருந்த 270 திட்டங்களுக்கு அனுமதி தரப்
பட்டிருப்பதாகவும், ஆரம்பத்தில் 30 கோடி ரூபாய் மட்டுமே
ஒதுக்கப்பட்ட இந்த நிதி, பின்னர் 110கோடி ரூபாயாகவும், அதன்
பின்னர், 160 கோடி ரூபாயாகவும் ஓராண்டில் உயர்த்தப்பட்
டிருப்பதாகவும், அதற்கு ஆடிட்டர் ஜெனரல் தமிழக அரசிடம்
விளக்கம் கேட்டதற்கு, பொருத்தமான பதில் இல்லை என்றும்
அறிக்கை கூறுகிறது.

'ஆன்லுக்கர்' என்ற ஒரு ஆங்கிலப் பத்திரிகையில் எழுதப்
பட்ட அந்தச் செய்தியில் தெரிவிக்கிறார்கள்.

'According to reliable sources in the Accountant-General's Office and Secretariat, almost the entire self-sufficiency scheme was misused, abused or under-used.'

அதாவது தணிக்கை அதிகாரி அலுவலகத்திலும் தலைமை செய
லகத்திலும் கிடைத்த உண்மையான தகவலின்படி, தன்னிறை
வுத் திட்டத்திற்காக ஒதுக்கப்பட்ட முழு தொகையும் தவறாக
வோ, மோசடியாகவோ. குறைத்தோ தான் செலவழிக்கப்பட்
டிருக்கிறது என்று கொடுத்திருக்கிறது. அதற்கு உதாரணமாக
வட ஆற்காடு மாவட்டத்திலே திருவானைமுகவரிசு என்பதை
யும் நான் குறிப்பிட விரும்புகிறேன். அதைப்போலவே ஆடிட்டர்
அறிக்கையில் பக்கம் 58 இல் வேறு ஒரு தகவல் தரப்பட்டிருக்
கிறது. தன்னிறைவுத் திட்டம் என்ற பெயரால் அரசின் நிதி
... தெரிவிக்கிறது.





'False bills were submitted on Rural Programme under self-sufficiency Scheme and in one case as per the records, a bill was claimed within a week after the construction of the road was finished. When audit demanded an explanation one official wrote back saying that the road has been washed away by floods.'

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை.)

அதாவது தன்னிறைவுத் திட்டத்தின் கீழ் போடப்பட்ட சாலை ஒன்று போட்டு முடிக்கப்பட்ட ஒரு வாரத்திற்குள்ளாகவே அந்த சாலை பழுது பார்க்கப்பட என்று ஒரு பில் போட்டு பணம் பெற்றிருக்கிறார்கள். ஆடிட்டர் இது குறித்து அதிகாரியை விளக்கம் கேட்ட போது அந்த சாலை வெள்ளத்தால் அடித்துச் செல்லப்பட்டுவிட்டதாக எழுதியிருக்கிறார். அந்தச் சாலை எதற்காகப் போடப்பட்டது தெரியுமா? வறட்சி நிவாரணப் பணியில் போடப்பட்ட சாலை அது. நேரில் கூறும் பொழுது அந்த அதிகாரி ஒரு அ. தி. மு. க. அரசியல்வாதியை திருப்தி செய்வதற்காக அந்த நிதி உபயோகப்பட்டதாகக் கூறியிருக்கிறார். இதை நான் சொல்லவில்லை. ஆடிட்டர் ஜெனரல் ரிப்போர்டிலிருந்து எடுக்கப்பட்டதாகும். தாழ்த்தப்பட்ட மக்களுக்கு இந்த அரசு ஏராளமாக உதவி செய்வதாக விளம்பரம் செய்கிறார்கள். உண்மை என்ன? Sp cial Compar m n al Plan விஷேச பல அம்சத் திட்டம் இப்போது தாழ்த்தப்பட்ட மக்களின் நல்வாழ்வுற்காக உள்ள திட்டம். இது மத்திய அரசு முன்னின்று ஊக்குவித்து நடத்தும் திட்டம். ஆனால் இதற்காக செலவு முழுவதும் மா.நில நிதியிலிருந்து தான் செய்ய வேண்டும். இந்தத் திட்டத்தை மத்திய அரசு ஆரம்பித்து 2 ஆண்டுகள் ஆகிறது. இதன்படி முதல் ஆண்டில் 73 கோடி ரூபாயும், இரண்டாவது ஆண்டில் 83 கோடி ரூபாயும் மத்திய அரசு செலவு செய்திருக்க வேண்டும். செய்தார்களா? தமிழக அரசின் சமூக நலத் துறை மத்திய அரசுக்கு அனுப்பிய அறிக்கையிலே இந்த இரண்டு ஆண்டுகளில் தமிழகத்தில் மாநிலத் திட்டங்களில் மொத்தமாக எவ்வளவு செலவழிக்கப்பட்டது என்று கூட்டி, தாழ்த்தப்பட்ட மக்கள் 18 சதவீதம் பேர்கள் இருப்பதால், மொத்தமாக தமிழ் நாட்டு மக்களுக்குச் செலவானதில் 18 சதவீதம் தாழ்த்தப்பட்ட மக்கள் பயன்பெற்றார்கள் என்பதால் மொத்தச் செலவில் 18 சதவீதம் இவ்வளவு என்று கணக்கிட்டு அதைக் குறிப்பிட்டு, இவ்வளவு தொகை தாழ்த்தப்பட்ட மக்களுக்குச் செலவு செய்திருக்கிறோம் என்று மத்திய அரசுக்கு அறிக்கை அனுப்பிவிட்டார்கள். சரியான அறிக்கையா அனுப்பப்பட்டிருக்கிறது? இதற்குக் காரணம் என்ன? விசேஷ பல அம்சத் திட்டத்தை ஒழுங்காக நடத்தினால் விசேஷ மத்திய உதவி Sp cial C ntral Assistant கொடுக்கப்படும் என்று மத்திய அரசு கூறியிருக்கிறது. அந்த உதவியைக் கேட்கத் தான் இந்த அறிக்கையை அனுப்பியிருக்கிறார்கள். 1980–81-ல் மத்திய அரசு அளித்த விசேஷ உதவி 9.56 கோடி. இதை

[திரு. அன்பில் தர்மலிங்கம்] [1984 மார்ச் 13

31–3–1981-க்குள் செலவழித்தாக வேண்டும். செலவழிக்கப் படாத மீதித் தொகைகளை மத்திய அரசுக்கே திருப்பித் தர வேண்டும். மார்ச் 1981 வரை தூங்கிவிட்டு, மார்ச் மாதத்திலே மாவட்ட ஊரக வளர்ச்சி புராஜக்ட் ஆபீசர்களுக்கு அனுப்பி விட்டு, தொகை முழுவதும் பயன்படுத்தப்பட்டு விட்டது என்று மத்திய அரசுக்கு தகவல் தந்துவிட்டார்கள். புராஜக்ட் ஆபீசர் கள் இதை என்ன செய்வது என்று தெரியாமல் வங்கிகளில் முன் வைப்பு உதவித் தொகை என்ற பெயரால் டெபாசிட் செய்து அரிசன மக்களுக்கு கடன் கேட்கிற போது நான்கில் ஒரு பகுதி தொகை அதிலிருந்து இனாமாகத் தரப்படும் என்று கூறினார்கள். ஆனால் வங்கிகளில் அந்த உதவி தரப்படவேயில்லை. அரிசனங் கள் உதவ கேட்டால் தட்டிக் கழித்து அனுப்பிவிடுகிறார்கள். இப்படிப்பட்ட சூழ்நிலை தான் இன்றைக்கும் இருந்து வருகிறது. அதைப் போல பல்வேறு பிரச்சினைகளைப் பற்றியும் நான் இங்கே சொல்ல முடியும். ஆனாலும் அத்தனையையும் சொல்ல விரும்பவில்லை.

அதைப் போலவே சத்துணவுத் திட்டத்தைக் குறை சொல்வ தாக இங்கே சிலர் சொன்னார்கள். நிச்சயமாக எங்களுடைய தலைவர் கலைஞர் ஆகட்டும், அல்லது நாங்கள் ஆகட்டும், முன்னேற்றக் கழகத்தில் யாரும் அதைப்பற்றி குறை சொன்னது கிடையாது. குறை சொல்லவும் மாட்டோம். ஆனால் இருக்கிற குறைகளை நிவர்த்தி செய்ய வேண்டுமென்று சொல்வது எங்களுடைய எண்ணம். அதிலே குறைகளே இல்லையா என்று கேட்கலாம், குறைகள் இருக்கின்றன. அது நம்முடைய முதல் அமைச்சர் அவர்களுக்கும் நன்கு தெரியும். ஆனால் என்ன காரணத்தினாலோ அவர்கள் முன்பு செய்ததைப் போல் இப் போது செய்ய முடியவில்லை.

(முற்பகல் 10-50)

மாண்புமிகு டாக்டர் எம். ஜி. இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, எதை எல்லாம் நான் தெரிந்து வைத்து இருக்கிறேன் என்பது பற்றி மிகத் தெளிவாக தெரிந்து வைத்து இருப்பதைப் போல பேசுகிறார்கள் நமது மாண்புமிகு அன்பில் தர்மலிங்கம் அவர்கள். எனக்குத் தெரிந் தது என்ன என்பது அவர்களுக்கு தெரிந்து இருப்பதால் எதை எல்லாம் நான் சொல்ல முடியாமல் இருக்கிறேன் என்பதை இங்கே தெரிவிப்பார்களானால், எனக்கு உதவியாக இருக்கும் என்று நான் நம்புகிறேன்.

திரு. அன்பில் தர்மலிங்கம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, எங்களுடைய மாவட்டத்தில் அந்தச் சத்துணவுத் திட்டத்திற்காகப் போடப்பட்டிருந்த அந்த உதவி



1984 மார்ச் 13] [திரு. அன்பில் தர்மலிங்கம்[

யாளர் தாக்கப்பட்டு, அவருக்கு துணையாக இருந்தார் என்பதற் காக ஆணையாளரும் தாக்கப்பட்டு, தாக்கப்பட்டது யாராலே என்பது தெரிந்து அந்த சட்டமன்ற உறுப்பினர் பெயரிலே நட வடிக்கை வேண்டும் என்று சர்வக்கட்சித் தோழர்களும் அங்கே உண்ணா விரதம் இருந்து, அதை மாண்புமிகு முதலமைச்சருக்கு அனுப்பி வைத்ததில், இன்று வரையில் விசாரித்ததாகத் தெரிய வில்லை. இது அவர்களுககு அனுப்பி வைக்கப்பட்டு இருக்கிறது.

மாண்புமிகு டாக்டர் எம். ஜி. இராமச்சந்திரன் : மாண்பு மிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்தச் செய்தி பத்திரிகையிலே வந்ததும் அதைப் பற்றி என்ன என்பது பற்றி பதிலும் சொல்லப்பட்டு இருக்கிறது. மேடையிலும் சொல்லப் பட்டு இருக்கிறது. அது அன்னியில் விசாரணையும் நடத்தப்பட்டு இருக்கிறது. வழக்கு பதிவு செய்யப்பட்டிருக்கிறது என்பது மாண்புமிகு அன்பில் தர்மலிங்கம் அவர்களுக்குத் தெரியும் என்று நம்புகிறேன்.

திரு. அன்பில் தர்மலிங்கம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, வழக்குப் பதிவு செய்யப்பட்டு இருக்கிறது என்றுதான் தெரிந்ததே தவிர அதன் மேல் எடுக்கப் பட்ட நடவடிக்கைக்கு இன்னும் தீர்ப்பு வரவில்லை. அந்தச் சட்ட மன்ற உறுப்பினருக்கும் இப்போது பதவி இல்லை என்பதைத் தான் நான் சொல்ல விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எம். ஜி. இராமச்சந்திரன் : மாண்பு மிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பதவியில் இருந் தாலும் இல்லாவிட்டாலும் தொடர்ந்த வழக்கு தொடரப்படும், அது விசாரிக்கப்படும்.

திரு. அன்பில் தர்மலிங்கம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நன்றி. அடுத்து சத்துணவு மையத் திட்டத்தைப் பற்றியும் அந்த அறிக்கையில் உள்ளது பற்றியும் நான் குறிப்பிட விரும்புகிறேன். சத்துணவு மையத்திற்கு கட்டப்பட்ட கட்டிடங்கள் சரியாக கட்டவில்லை என்றும் அது ஆளும் கட்சி காரர்களுக்கு ஒப்பந்தம் கொடுக்கப்பட்டதிலே கட்டி முடிக்கப்படாமல், கட்டி முடிக்கப்பட்டதிலும் பல சரியாக இல்லை என்பதையும் கவனத்திற்கு கொண்டு வந்து அந்த ஆடிட் ரிப்போர்ட்டிலும் குறிப்பிட்டு இருக்கிறார்கள். அதைப் போலவே அந்த சத்துணவுத் திட்டம் என்ற பெயராலே சத்துண வுக்கு அதிகமாக ஒதுக்கப்பட்டிருக்கிறது. வரவேற்கிறோம். ஆனால் நடைமுறையிலே செயற்படுத்த வேண்டிய காரியங்களுக்கு ஒதுக்கப் பட்ட நிதி மிகவும் குறைவாக இருக்கிறது. உதாரணமாகச் சொல்ல வேண்டும் என்றால், சென்ற ஆண்டு சிறு பாசனத்திற்கு ஒதுக்கிய நிதியை விட இந்த ஆண்டு குறைவாக ஒதுக்கப்பட்டு

(திரு. அன்பில் தர்மலிங்கம்) [1984 மார்ச் 13

இருக்கிறது. அதைப் போலவே கூட்டுறவுக்கு சென்ற ஆண்டு ஒதுக்கியதை விட இந்த ஆண்டு குறைவாக ஒதுக்கப்பட்டிருக்கிறது. அதைப் போலவே வீட்டு வசதிக்கு சென்ற ஆண்டு . . . .

**மாண்புமிகு டாக்டர் எம். ஜி. இராமச்சந்திரன் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஆடிட் ரிப்போர்ட்டில் சத்துணவுக் கூடங்கள் கட்டுவதற்கு அதிலே அ. இ. அ. தி. மு. க. வுக்கு கொடுத்து விட்டார்கள் என்று குறிப்பு இருக்கிறதாகச் சொல்கிறார்கள். தயவு செய்து கொடுத்தால் அது உதவியாக இருக்கும்.

**திரு. அன்பில் தர்மலிங்கம் :** மாண்புமிகு பேரவைத் துணை தலைவர் அவர்களே, அ.இ.அ.தி.மு.க. அரசு என்று குறிப்பிடவில்லை. நான் அதைக் கொடுக்கிறேன். அ.இ.அ.தி.மு. கழகத்தைச் சேர்ந்தவர்களுக்கு ஒப்பந்தம் கொடுக்கப்பட்டிருக்கிறது.

**மாண்புமிகு டாக்டர் எம். ஜி. இராமச்சந்திரன் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அ.இ.அ.தி.மு.க.-வுக்கு மட்டும் கொடுக்கப்பட்டு இருக்கிறதா? (குறுக்கீடு). கொஞ்சம் பேச விடுங்கள். இவ்வளவு பெரிய நல்ல காரியங்கள் சொல்லும்போது நாம் பேசினால் தான் புரியும். மற்ற கட்சிகளுக்கும் கொடுக்கப்பட்டிருக்கிறதா? இது எந்தக் கட்சிக்கு அதிகமாகக் கொடுக்கப்பட்டு சலுகை காட்டப்பட்டு இருப்பதாக ஏதாவது ஆடிட் ரிப்போர்ட்டில் இருக்கிறதா என்பதைச் சொன்னால் உதவியாக இருக்கும்.

**திரு. அன்பில் தர்மலிங்கம் ;** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இது பொது மக்களுடைய வரிப்பணம். எந்தக் கட்சிகாரர்களுக்குக் கொடுத்தாலும் தப்பு தப்பு தான். அதைப் பற்றி கவலைப்பட வேண்டாம்.

**மாண்புமிகு டாக்டர் எம். ஜி. இராமச்சந்திரன் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, எந்தக் கட்சிக்காரர்களுக்குக் கொடுத்தாலும் தவறு தவறு தான் என்றால் தயவு செய்து நம்மையே நாம் குறை சொல்லிக்கொள்ளக் கூடாது. கட்சியில் சேர்ந்தால் அவர்கள் தொழிலாளியாக இருக்கக் கூடாது, முதலாளியாக இருக்கக் கூடாது, தொழில் செய்யக் கூடாது என்று இல்லை. நேர்மையாகச் செய்கிறார்களா இல்லையா என்பதுதான் கேள்வியே தவிர, அவர்கள் அந்தப் பணிகளைச் செய்வதற்குத் தகுதியானவர்களானால் எல்லோருக்கும் அந்தவாய்ப்பைக் கொடுக்கலாம். அதற்காக எந்தக் கட்சி என்று பிரிக்கக் கூடாது. கட்சியில்லாமல் மக்கள் இல்லை.



1984 மார்ச் 13]

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** ஆடிட் ரிப்போர்ட்டிலே எப்படி கட்சி என்று போட முடியும்? பார்ட்டி என்று போட முடியாதே.

**திரு. அன்பில் தர்மலிங்கம் :** அதுதான் கொடுக்கிறேன் என்று சொல்லியிருக்கிறேனே.

சத்துணவுத் திட்டத்திற்காக ஒதுக்கப்பட்ட பணம் என்று பார்க்கும்பொழுது, அதனால் இப்பொழுது பல திட்டங்களுக்கு ஒதுக்கப்பட்ட தொகை இந்த ஆண்டு குறைக்கப்பட்டிருக்கிறது. அதிலே லோன்ஸ் பார் அக்ரிகல்சர் என்று எடுத்துக் கொண்டால் 89 இலட்சத்து 57 ஆயிரம் ரூபாய் கூட்டுறவுக் கடனாகக் கொடுப்பதாக இருந்தது. ஆனால் அதைப் பற்றி இந்த ஆண்டு பார்த்தால் 38 இலட்சத்து 97 ஆயிரம் ரூபாயாக ஆக்கப்பட்டிருக்கிறது.

அதைப்போலவே, கம்யூனிட்டி டெவலப்மென்ட் என்பதற்காக 1982-83 ஆம் ஆண்டுக்கு 12 கோடியே 94 இலட்சம் ஒதுக்கப்பட்டிருக்கிறது; ஆனால் 1984-85-ல் 5 இலட்சம் தான் இருக்கிறது. இது ஒருவேளை அச்சுப் பிழையாகக் கூட இருக்கலாமோ என்னவோ, அதைப்பற்றி நாவலர் அவர்கள் கவனித்துப் பார்க்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

சிறு பாசனத் திட்டம் என்று எடுத்துக் கொண்டால், இப்பொழுது அது எவ்வளவு அவசியம் என்பது அனைவருக்கும் தெரியும். அந்தச் சிறு பாசனத் திட்டத்திற்குச் சென்ற ஆண்டு மேஜர் ஒர்க் என்ற தலைப்பில் இரண்டு கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டு இப்பொழுது அது ஐந்து இலட்சம் ரூபாயாக ஆக்கப்பட்டு இருக்கிறது.

இப்படிப்பட்ட திட்டங்களுக்கு எல்லாம் குறைத்து சத்துணவுத் திட்டம் என்ற பெயராலே அதிகமாக ஒதுக்கியிருக்கிறார்கள். கிராமங்களிலே ஒரு பழமொழி உண்டு. "வயிற்றுப் பிள்ளையை நம்பி மாடு மேய்க்கிற பிள்ளையைக் கொன்றுவிடக் கூடாது" என்று. அப்படி வரப்போகின்ற பிள்ளைகளை நினைத்துக்கொண்டு அப்பன், பாட்டன்களைப் பட்டினி போட்டுக் கொல்வது சரியல்ல.

அதுமட்டுமல்லாமல், இந்தத் திட்டத்தின் மூலம் அவர்களுக்குச் சோறு போடுகிறோம் என்று சொல்லி, முறையாகச் செய்து கொடுக்கப்பட வேண்டிய சாலை வசதிகள் செய்து கொடுக்கப்படவில்லை; பாலங்கள் கட்டி முடிக்கப்படவில்லை; பல்வேறு வேலைத் திட்டங்கள் எடுத்துக் கொள்ளப்படவில்லை.

நம்முடைய முதலமைச்சரவர்கள் கூட நெல்லை மாவட்டத்
திலே சமீபத்தில் ஏற்பட்ட வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதி
களைச் சுற்றிப் பார்த்தபொழுது , பச்சையாறு திட்டத்திற்குக்
கருணாநிதி காலத்திலே அடிக்கல் நாட்டப்பட்டு, அது முடிக்கப்
படவில்லை என்று சொன்னதும், அதனாலே சர்ச்சைகள் ஏற்பட்ட
தும் தெரியும்.

நான் இன்னொன்றையும் சொல்ல விரும்புகிறேன். ஏதோ
திராவிட முன்னேற்றக் கழக அரசின் ஆட்சிக் காலத்திலே எதை
யுமே செய்யாததைப்போல இங்கே அங்கத்தினர்கள் எடுத்துச்
சொன்னார்கள். நான் அவர்களுக்குச் சொல்கிறேன். நம்முடைய
முதலமைச்சரவர்கள் நெல்லையிலே சொல்லியதைப்
போல, அப்பொழுது பாலம் கட்டியிருப்போமேயானால், அந்த
அணை கட்டியிருக்கப்படுமேயானால் இந்த வெள்ளச் சேதம் ஏற்
பட்டிருக்காது என்று சொன்னார்கள். நான் அதற்காகச் சொல்
கிறேன். இதைப்போலவே திருச்சி மாவட்டத்திலே வாய்த்
தலையில் ஒரு அணை கட்டப்பட்டிருக்கிறது. நேற்றுகூட
நம்முடைய அமைச்சரவர்கள் இங்கே குறிப்பிட்டார்கள். அதற்கு
அனுமதி வாங்காமல் அடிக்கல் நாட்டிவிட்டதாகச் சொன்னார்
கள். அதாவது பச்சையாறு திட்டத்திற்கு. வாய்த்தலையிலே
கட்டப்பட்டிருக்கின்ற அந்த அணைக்கட்டு பற்றி தினத்தந்தி
பத்திரிகையிலே, ஒரு குட்டி அணை என்று வந்தவுடனே,
மத்திய அரசு அதை நிறுத்தி விடும்படி கட்டளையிட்டது. அப்
பொழுது முதலமைச்சரவர்கள், சம்பந்தப்பட்ட அதிகாரிகளை
அழைத்து, மத்திய சர்க்காருடன் பேசி அனுமதி பெற வேண்டு
மென்று கேட்ட நேரத்தில், அது கொஞ்சம் தாமதமாயிற்று.
நான் அப்பொழுது முதலமைச்சரிடத்தில் கேட்டேன். ஏனென்
றால், அந்த வாய்த்தலை அணையைக் கட்டாததாலே பாதிக்கப்
பட்டவர்களில் நாங்களும் இருந்தோம். ஆகவே, அவர்களி
டத்தில் சொன்னேன், மத்திய சர்க்காருடைய அனுமதியைக்
கேட்டா கர்நாடக அரசு சரஸ்வதி, ஹேமாவதி போன்ற அணைக்
கட்டுகளைக் கட்டுகிறார்கள். அவர்களுடைய அனுமதியைப்
பெறாமல் கட்டுகிறபொழுது இங்கே மட்டும் கட்டினால் என்ன
கெட்டு விடும் என்று முதலமைச்சரவர்களிடத்திலும் மற்ற அதிகாரி
களிடத்திலும் பேசியபொழுது அப்பொழுது முதலமைச்சரவர்கள்,
அஸ்திவாரம் போட்டுவிடலாம், அனுமதி பெற்றுவிடலாம் என்று
சொல்லி, அதற்கு அடிக்கல்லே நாட்டினார்கள். நாவலர் அவர்
களும் வந்திருக்கிறார்கள். அவர்களுக்கும் தெரியும். அதற்குப்
பிறகுதான் வந்தது.

ஆகவேதான் சொல்கிறேன். அந்த அணைக்கட்டைக் கட்டிய
தற்குப் பிறகு, சென்ற வெள்ளத்தில் ஏற்பட்ட சேதத்தைப்
பார்க்க வந்த நிபுணர் குழுவினர் சொல்கிறார்கள், இந்த வாய்த்
தலை அணை மட்டும் கட்டப்படாமல் இருக்குமேயானால், கரி



காலன் கட்டிய அணைக்கு மேலே இருக்கின்ற பாகங்கள் அத்தனை
யும் இந்தப் பெரு வெள்ளத்தினால் அடித்துச் செல்லப்பட்டிருக்
கும், அவ்வளவு பெரிய வெள்ளம் என்று அறிக்கை தந்தார்கள்.

நான் இதைச் சொல்வதற்குக் காரணம், எதையுமே திராவிட
முன்னேற்றக் கழக ஆட்சியில் செய்யவில்லை என்று கூறக்கூடாது
என்பதற்காகத்தான். அங்கே இருந்தவர்களெல்லாம் திராவிட
முன்னேற்றக் கழக ஆட்சியில் இருந்தவர்கள்.

(முற்பகல் 11-00)

ஆகவே அவர்கள் காலத்திலே செய்யப்பட்டது பற்றி நீங்
களே குறை சொல்லக்கூடாது. அதைப் போன்று எதையுமே
செய்யவில்லை என்று இப்போது கூட சொன்னார்கள். எத்
தனை பாலங்கள் கட்டப்பட்டிருக்கின்றன என்பதை நாம் எண்
ணிப் பார்க்க வேண்டும். குளித்தலைக்கும்-முசிறிக்கும் இடை
யிலே காவிரியில் கட்டப்பட வேண்டிய பாலத்தைப் பற்றி
'கருணாநிதி அண்ணாச்சி, காவிரி பாலம் என்னாச்சி' என்று
கேட்டார்கள். ஆனால் பின்னர் காவிரி பாலம் கட்டி முடிக்கப்
பட்டது என்பது நாம் எல்லோருக்கும் தெரியும். அங்கே எல்
லோரும் போய்க் கொண்டுதான் இருக்கிறார்கள். கட்டி முடித்
தாகிவிட்டது. அதற்கப்புறம் தான் நீங்கள் திறந்தீர்கள்.

மாண்புமிகு டாக்டர் எம். ஜி. இராமச்சந்திரன் : மாண்பு
மிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நாங்கள் ஆட்சிக்கு
வந்து எத்தனை ஆண்டுக்காலம் அதற்காகக் கஷ்டப்பட்டோம்;
எத்தனை ஆண்டுக்காலம் அதற்காகப் பாடுபடவேண்டி இருந்தது
என்பதும் எல்லோருக்கும் தெரியும் என்பதைத் தெரிவித்துக்
கொள்கிறேன்.

திரு. அன்பில் தர்மலிங்கம் : துணைத் தலைவர் அவர்களே,
அதற்குப் பிறகு வந்தவர்கள் அதைச் செய்ய வேண்டியதுதானே.
அதாவது நீங்கள் வராமல் நாங்கள் வந்திருந்தாலும் கூட அதைச்
செய்திருப்போம். வேறு யார் வந்திருந்தாலும் அதைச் செய்
திருப்பார்கள்.

மாண்புமிகு டாக்டர் எம். ஜி. இராமச்சந்திரன் : துணைத்
தலைவர் அவர்களே, நான் குறுக்கிடுவதற்காக வருந்துகிறேன்.
ஆனால் உண்மையைச் சொல்ல வேண்டும். இந்தப் பாலம் எல்
லாம் கட்ட ஆரம்பிக்கப்பட்டு அப்படியே விடப்பட்டிருந்தது.
வேண்டுமானால் புள்ளிவிவரங்கள் தருகிறேன். இந்தச் சட்ட
சபையிலேதான் நான் இதைச் சொல்கிறேன். நாங்கள் வந்து
திட்டம் போட்டு மறுபடியும் எடுத்து முடித்து வைத்திருக்கிறோம்.
இதைப்பற்றி அந்தக் கட்டிடத்தைத் திறந்து வைக்கின்றபோதே
பேசப்பட்டிருக்கின்றது என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. அன்பில் தர்மலிங்கம்** : துணைத் தலைவர் அவர்களே
திட்டம் போடப்பட்டது. இடையிலே அது நிறுத்தப்பட்டதற்'
குக் காரணம், அந்த காண்ட்ராக்டருக்கு வேண்டிய, தள்ளுகின்ற
அந்த இயந்திரம் சரியாக இல்லாததன் காரணத்தால், பம்பாயி
லிருந்து தனியாக அந்த இயந்திரத்தை கொண்டு வரவேண்டி
யிருக்கின்றது என்று சொல்லப்பட்ட காரணத்தால் தான் அதிலே
தாமதம் ஏற்பட்டதே தவிர, வேறு எதுவும் இல்லை என்பதைத்
தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து காவிரிக்கு திருச்சியிலே பாலம் கட்டி இருக்கிறோம்.
அதில் என்ன கோளாறு? அது எங்கள் காலத்திலேதான் கட்டப்
பட்டது. திருமானூருக்கும், திருவையாறுக்கும் இடையிலே
விளாங்குடியில் ஒரு பாலம் கட்டப்பட்டிருக்கின்றது.
அந்தப் பாலம் பற்றி நேற்றையதினம் நம்முடைய மாண்புமிகு (குறுக்கீடு)
அமைச்சர் திரு. யூசுப் அவர்கள் சொன்னார்கள். அதை எல்
லாம் பெர்மிஷன் இல்லாமல் செய்தார்கள் என்று சொன்னார்கள்.
அந்தப் பாலத்திற்கு பெர்மிஷன் வாங்காமல் இருந்து, திரு. பக்த
வச்சலம் அவர்கள் கடைசியாக அதைக் கட்டுகிறேன் என்று
சொல்லி, திருமதி இந்திராகாந்தி அவர்களை அழைத்து வந்து
அஸ்திவாரம் போட்டு அப்படியே நின்றிருந்தது. முன்னேற்றக்
கழகத்தின் ஆட்சிக் காலத்திலே தான் அந்தப் பாலத்தைக்
கட்டுவதற்கான அனுமதியைப் பெற்று அந்தத் திருமானூர்-விளாங்
குடி பாலம் கட்டி முடிக்கப்பட்டது என்பது எல்லோருக்கும்
தெரியும்.

அதைப்போன்று பல்வேறு பாலங்கள் கட்டப்பட்டிருக்கின்றன.
அவற்றை எல்லாம் சொல்வதற்கு நேரம் இல்லை. மாண்புமிகு
நாவலர் அவர்களுக்குத் தெரியும். அவர்களே சொல்லலாம்.
எனவே பல பாலங்கள் கட்டப்பட்டிருக்கின்றன. பல திட்டங்
கள் நிறைவேற்றப்பட்டு இருக்கின்றன.

அடுத்து அவர்கள் காலத்திலே விவசாயத்திற்காக என்ன செய்
தார்கள் என்று கேட்டார்கள். எங்களால் பெருமையோடு
சொல்ல முடியும். முன்னேற்றக் கழகத்தின் ஆட்சியின் சார்பிலே
வேளாண்மைத் துறை அமைச்சராக நான் இருந்த போது அண்ணா
பண்ணை துவக்கப்பட்டு, அது மிகச் சிறப்பாக இப்போதும் நடை
பெற்று வருகின்றது. அதனை இந்தியாவிலே இருந்து மட்டு
மல்ல, அகில உலகத்திலே இருந்து வந்து பார்த்துப் பாராட்டிச்
செல்கிறார்கள். ஆகவே அது முன்னேற்றக் கழகத்தின் காலத்
திலே துவக்கப்பட்டது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**அடுத்து செங்கத்திலே முன்னேற்றக் கழகத்தின் ஆட்சியிலே
தான் விவசாயப்பண்ணை துவக்கப்பட்டு அது மத்திய அரசின்
உதவியால் நடைபெற்று வருகின்றது. அதைப் போன்று
பல பண்ணைகள் துவக்கப்பட்டு இருக்கின்றன.**



இப்போது கூட மாண்புமிகு உறுப்பினர், இங்கே பெண்களுக்
காக துவக்கப்பட்ட அன்னை தெரசா அவர்களின் பெயரால்
உள்ள பல்கலைக் கழகத்தைப் பற்றி இங்கே சொல்லி 'நீங்கள்
என்ன செய்தீர்கள்' என்று கேட்டார்கள். நான் அவர்களுக்குச்
சொல்ல விரும்புகிறேன் உங்கள் மூலமாக. வேளாண்மைப் பல்
கலைக் கழகம் கொண்டு வந்தது கலைஞர் அவர்களின் ஆட்சிக்
காலத்தில்தான். கோவையில் இருக்கின்ற வேளாண்மைப் பல்
கலைக் கழகத்தைக் கொண்டு வந்தது கலைஞர் ஆட்சிக் காலத்தில்
தான். எனவே அந்தப் பெருமை எங்களைச் சாரும். ஆகவே
அதை எல்லாம் சொல்லிவிட்டு, இதைச் சொன்னால் நன்றாக
இருந்திருக்கும். ஆனால் ஒன்றுமே செய்யவில்லை என்று **சொல்**
**வது சரியாக இருக்காது என்பதுதான் என்னுடைய தாழ்மையான**
**கருத்து.**

அடுத்து சாலைகள் போடவில்லை என்று சொல்கிறார்கள்
பாலங்கள் கட்டவில்லை என்று சொல்கிறார்கள். இங்கே சென்
னையிலே இருக்கின்ற அண்ணா மேம்பாலம் கட்டப்பட்டது
முன்னேற்றக் கழகத்தின் ஆட்சிக் காலத்தில்தான் என்பதைத்
தெரிவித்துக்கொள்கிறேன். திரு. வி.க. பாலம் கட்டப்பட்டது
திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக்காலத்திலேதான்.
மறைமலை அடிகள் பாலம் கட்டப்பட்டது எங்களுடைய ஆட்சிக்
காலத்திலேதான். பெரியார் பாலம் கட்டப்பட்டது எங்களு
டைய காலத்திலேதான். காயிதே மில்லத் பாலம் கட்டப்பட்டது
எங்களுடைய காலத்திலேதான். இப்படிப் பலவற்றைச்
சொல்ல முடியும். ஏன், கோவையிலே கட்டிய மேம்பாலம்
முன்னேற்றக் கழக ஆட்சிக்காலத்திலேதான், நெல்லையிலே
கட்டிய மேம்பாலம் முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்திலேதான்;
சென்னையிலே கட்டப்பட்டிருக்கிற பல்வேறு பாலங்கள் எங்களு
டைய காலத்தில்தான் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதைப்போலவே, இப்பொழுது 1,500 மக்களுக்கு மேற்
பட்ட கிராமங்களுக்கு இணைப்புச் சாலைகள் போடுவதாக
நாவலருடைய அறிக்கையிலே இருக்கிறது. ஏற்கனவே 1,500
மக்களுக்கு மேல் உள்ள கிராமங்களுக்கு இணைப்புச் சாலைகள்
வேலை துவக்கப்பட்டு முடிவு அடைந்திருக்கின்றன என்பது கூட
நாவலருக்குத் தெரியும். ஆனால் விடுபட்டதைச் செய்ய வேண்
டியது அவர்களுடைய பொறுப்பே தவிர நாங்கள், குறை
சொல்கிறோம் என்று கருதக் கூடாது. இதற்கு முன்னாலே
செய்யப்பட்டிருக்கிறது.

இங்கே இன்னும் கேட்கிறார்கள்; அன்றைக்குக் கூட மாண்பு
மிகு உறுப்பினர் அண்ணாதாசன் அவர்கள் ஒரு குற்றச்சாட்டைச்
சொன்னார்கள், பொன்மலைக்குத் தண்ணீர் கொடுக்கவில்லை
என்று. அவர்களுக்கு அப்பொழுது தெரிந்திருக்காது. நான்

உள்ளாட்சித் துறை அமைச்சராக இருந்தபொழுதுதான் திருவரும்
பூருக்கே— அவர் குடிப்பதற்கே தண்ணீர் கொடுத்தேன்—முன்
னேற்றக் கழக ஆட்சிக்காலத்தில் திருவரும்பூருக்கு
முன்பே கொடுத்துவிட்டோம். அதற்குப் பிறகுதான் இந்தத்
திட்டம் கொஞ்சம் கொஞ்சமாக விஸ்தரிக்கப்பட்டு இப்பொழுது
பொன்மலைக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது.

அதைப்போல் குடிநீர் வடிகால் வாரியத்தின் மூலம் 7 ஆண்டுக்
காலத்தில் தமிழ்நாட்டில் இருக்கிற எல்லா கிராமங்களுக்கும்
பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்க வேண்டுமென்ற திட்டம்
போடப்பட்டது—முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்திலேதான்.
குடிசை மாற்று வாரியம் யார் ஆட்சிக் காலத்தில் ஆரம்பிக்
கப்பட்டது? முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்தில்தான்.
அதைப் போலவே ஆதி திராவிடர்களுக்கு வீடு கட்டும் திட்டம்
போட்டது முன்னேற்றக் கழக ஆட்சிக்காலத்திலே தான். ஏறத்
தாழ ஒரே ஆண்டுக் காலத்தில் 45,000 வீடுகள் கட்டி
முடிக்கப்பட்டு தரப்பட்டதும் முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்
திலேதான் நான் இவற்றையெல்லாம் சொல்வதற்குக் காரணம்
எதுவுமே செய்யவில்லை என்ற குற்றச்சாட்டைச் சொல்பவர்
களுக்கு இது பதிலாக இருக்கும் என்று கருதுகிறேன்.

அதுபோலவே இன்னொன்றைச் சொன்னார்கள். வெள்ள
நிவாரணத்தைப் பற்றிச் சொல்லும்போது நம்முடைய மாண்பு
மிகு அமைச்சர் அவர்கள், அன்றையதினம் சொன்னார்கள்,
அதிலே எந்தவிதமான ஊழலுமே நடைபெறவில்லையென்று.
அன்றைக்கு அவரிடத்திலே சில குறிப்புகளைச் சொன்னேன்;
இன்று வரையிலே அதைப்பற்றி சொல்லவில்லை. முன்னேற்றக்
கழக ஆட்சிக் காலத்தில் வெள்ள நிவாரணப் பணிக்கு நான்
பொறுப்பேற்றிருந்தேன் அவரைப் போல. அந்த நேரத்தில் மேல்
சபையிலே காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த உறுப்பினர் மாண்புமிகு
இராமகிருஷ்ண தேவர் அவர்கள் பேசியது இன்னும் என்னுடைய
காதிலே ஒலித்துக் கொண்டிருக்கிறது. "மாண்புமிகு காமராஜர்
ஆட்சிக் காலத்திலே முடியாததை, காங்கிரஸ் ஆட்சிக் காலத்
திலே செய்ய முடியாததை, கருணாநிதி ஒரே நிமிடத்தில் எங்க
ளுக்குச் செய்து கொடுத்தார். அதாவது ராஜசிங்கமங்கலத்தி
னுடைய ஏரி நீண்ட நெடுங்காலமாக பழுதுபார்க்கப்படாமலே
இருந்து வந்தது அதை நாங்கள் முதலமைச்சர் அந்தப் பகுதிக்கு
வந்தபொழுது, அவரைக் கூட்டிப்போய் காண்பித்தோம். அந்த
இடத்திலே உத்தரவு போட்ட ஒரே ஒரு முதலமைச்சர் கலைஞர்
கருணாநிதிதான்" என்று அவர் பாராட்டியது இன்
னும் மேலவைக் குறிப்பிலே இருக்கும், சந்தேகப்படுபவர்கள்
பார்க்கலாம். அந்த அளவுக்கு வெள்ள நிவாரணப்பணியைச்
செய்தோம். வெள்ள நிவாரணப் பணிகளிலே காண்ட்ராக்ட்
முறையை ஒழித்தோம். அங்கேயிருக்கிற ஆயக்கட்டுக்காரர்கள்



10 பேர்களாகச் சேர்ந்து பிரித்து, அவர்களுக்குக் கொடுக்கப்பட்டு
அந்தந்த கிராம மக்களுக்கு பயன்படுத்தப்படும் வகையில் செடு
யப்பட்டதே தவிர, காண்ட்ராக்ட் கொடுக்கப்படவில்லை.

அதைப் போலவே பல்வேறு வேலைத் திட்டங்கள் கொடுக்கப்
பட்டன என்பதை நான் இந்த நேரத்திலே தெரிவித்துக்
கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

அதைப் போலவே பல்வேறு திட்டங்கள், ஏரிகள் பராமரிக்கப்
பட்டன. பேரறிஞர் அண்ணா அவர்கள் ஆட்சிப் பொறுப்புக்கு
வந்தவுடனேயே ஒன்றைச் சொன்னார்கள். 'பான்ட் ஸ்கீம்'—
குட்டை குளங்களை ஆழப்படுத்துங்கள். குட்டைகள் இல்லாத
இடங்களில் நாமாவது புறம்போக்கு நிலங்களில் குட்டைகளை
ஏற்படுத்த வேண்டும் என்று திட்டம் கொண்டு வந்து முதன்
முதலாக சேலம் மாவட்டத்திலே பரீட்சார்த்தமாக எடுத்துக்
கொள்ளப்பட்டு வெற்றிகரமாக நடத்தப்பட்டு வந்ததும் சேலம்
மாவட்டத்தைப் சேர்ந்த மாண்புமிகு நண்பர்களுக்கு நன்றாகத்
தெரியும்.

அதைப் போல அண்ணா அவர்கள் காலத்திற்குப்பின்பு
பல்வேறு திட்டங்கள்—ஏரி குளம் போன்றவைகளை ஆழப்
படுத்தும் திட்டங்கள் நிறைவேற்றப்பட்டன என்பதையும்
இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்
கிறேன்.

அதைப் போலவே இன்னும் பல்வேறு திட்டங்களைப் பற்றி
சொல்வதற்கு முடியும் என்றாலும் ஒன்றிரண்டு போதும் என்ற
காரணத்தாலே இந்த அளவோடு விட்டு விடுகிறேன்.

இந்த வரவு-செலவுத் திட்டத்தில் சேர்க்கப்பட்டிருக்கிற
காரியங்கள் பலவற்றை உடனடியாகச் செய்து கொடுக்கவேண்டு
மென்று கேட்டுக் கொள்வதோடு, இங்கே முதலமைச்சர் அவர்
கள் இருக்கிறார்கள், அதனாலே அவரையும் கேட்டுக்கொள்
கிறேன், தயவுசெய்து விவசாயிகளைப் பாதிக்கும் வரியை எடுத்து
விடுங்கள். விவசாயிகளுக்கான டீசலுக்கு வரியை 14 சதவீதமாக
உயர்த்தி இருக்கிறீர்கள். 3 சதவீதம் உயர்த்தி இருப்பது மிகவும்
அதிகமாக இருக்கிறது. ஆகவே அதை எடுத்து விட வேண்டும்.
அதைப்போலவே இன்றைக்கு நூலுக்கு வரி விதித்து இருக்கிறீர்கள்
அதில் அரசிற்கு வருவது 5 கோடி ரூபாய் தான்; இது ஒன்றும்
பெரிய தொகை இல்லை. இதனால் ஏழைகள் மிகவும் பாதிக்கப்
படுவார்கள். ஆகவே அந்த வரியையும் எடுத்து விட வேண்டு
மென்று கேட்டுக்கொண்டு அமர்கிறேன்.

[1984 மார்ச் 13

(முற்பகல் 11-10)

*திரு. ப. நெடுமாறன் : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, இந்த வரவு-செலவுத் திட்டம் பற்றிய விவாதத்திலே எங்கள் கட்சியின் சார்பாக சில கருத்துக்களை நான் இங்கே வைக்க விரும்புகிறேன். இந்த ஆண்டு எந்த ஆண்டையும் போல நம்முடைய நிதியமைச்சர் அவர்கள் பற்றாக்குறை பட்ஜெட்டை அளித்து இருக்கிறார்கள். நம்முடைய நிதியமைச்சர் அவர்களை குற்றம் சாட்டுவதில் எனக்கு ஆர்வமில்லை. ஏனென்றால் சட்டியிலே இருந்தால் தான் அகப்பையிலே வரும். அவர் எவ்வளவோ சாமர்த்தியங்களைச் செய்து பார்த்தும் கூட, நம்முடைய மாநில நிதிப் பற்றாக்குறை என்பது நிரந்தரமான ஒன்றாக இருக்கிற காரணத்தாலே, அவர்களால் எதுவும் செய்ய இயலாத நிலையிலே புதிய வரிகளை விதித்து இருக்கிறார்கள். புதிய வரிகள் ஒரு பக்கம் இருந்தாலும் கூட, மத்திய மாநில உறவுகளைப் பற்றி இந்த பட்ஜெட்டிலே அவர்கள் சில விஷயங்களை எடுத்துச் சொல்லி இருக்கிறார்கள். 'மாநிலத் திட்டங்களுக்கு மத்திய அரசு 20 சதவீதமே உதவித் தொகை அளிக்கிறது. இந்த சதவீதமும் முதல் திட்டத்திலிருந்து குறைந்து கொண்டே வருவது கவலை அளிக்கிறது' என்ற வாசகத்தை இந்த பட்ஜெட் உரையிலே அவர் சொல்லி இருக்கிறார். அடுத்து ''வலிவான இந்தியாவும் வளமான மாநிலங்களும் அமையவேண்டும். இந்தக் கொள்கையைத் தான் இந்த அரசு தொடர்ந்து வலியுறுத்தி வருகிறது'' என்று இன்னொரு இடத்திலே சொல்லி இருக்கிறார்கள். இந்த வாசங்களினாலே மட்டும் உங்களுக்கு திருப்தி ஏற்படலாமே தவிர, இதனால் தமிழ் நாட்டு மக்களுக்கு எந்தத் திருப்தியும் இல்லை என்பதை நான் இங்கே திட்டவட்டமாக தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். ஒவ்வொரு ஆண்டும் வரவு-செலவுத்திட்ட உரையில் மத்திய அரசைப்பற்றி இந்தக் குறைகளை எல்லாம் சொல்கிறீர்களே தவிர, இந்தக் குறைகளைப்போக்குவதில் என்ன நடவடிக்கை எடுக்கவேண்டுமோ அவற்றையெல்லாம் நீங்கள் எடுப்பதில்லை என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

இன்னொரு இடத்தில் 1981 மார்ச் வரையில் தமிழ்நாட்டில் மத்திய அரசு செய்திருக்கிற தொழில் முதலீடு என்பது ரூ.922.51 கோடி மட்டுமே என்று சொல்லி இருக்கிறார்கள். அப்படி சொல்லியிருக்கிற இடத்தில் உங்களுடைய ஆட்சிக்காலத்தில் மத்திய அரசை வற்புறுத்தி நீங்கள் எவ்வளவு கோடி ரூபாய் முதலீட்டிற்கான திட்டங்களை இந்த மாநிலத்திற்கு பெற்றிருக்கிறீர்கள் என்பதைச் சொல்லவில்லை. நீங்கள் சொல்ல முடியாது; ஏனென்றால் எதுவும் வரவில்லை. அதை நிதி அமைச்சர் அவர்கள் இன்னொரு இடத்தில் ஒப்புக்கொள்கிறார். ஆறாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் மத்திய அரசு தமிழ் நாட்டில் ஒரு முதலீட்டைச் செய்திருக்கிறது. எவ்வளவு கோடி



1984 மார்ச் 13] [திரு. ப. நெடுமாறன்]

ரூபாய்க்கு 1.06 கோடி ரூபாய் முதலீட்டிலே பிளாஸ்டிக் பொறியியல் கருவிகள் உற்பத்தி செய்ய தமிழ் நாட்டில் மத்திய அரசானது அந்த நிறுவனத்தை ஏற்படுத்தி இருக்கிறது என்று நிதியமைச்சர் அவர்களே ஒப்புக்கொள்கிறார்கள். ஆகவே சுமார் ஒரு கோடி ரூபாய் பெறுமானமுள்ள முதலீட்டைத் தான் ஆறாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் மத்திய அரசிடத்திலேயிருந்து உங்களாலே பெற முடிந்திருக்கிறது. வேறு எதுவுமே செய்ய முடியவில்லை. அதை அப்பட்டமாக நிதியமைச்சர் அவர்கள் அறிக்கையில் ஒப்புக் கொண்டுள்ளார்கள். மத்திய பட்ஜெட்டிலே இந்த ஆண்டு மாநிலங்களுக்கு என்னென்ன அநீதிகள் இழைக்கப்பட்டிருக்கிறதோ அவைகளையெல்லாம் இந்த அறிக்கையிலே நீங்கள் சுட்டிக்காட்டி இருக்க வேண்டும். ஆனால் அதை நீங்கள் செய்யவில்லை. மத்திய அரசு வசூலிக்கிற இன்கம்-டாக்ஸ், கஸ்டம்ஸ் டியூட்டி, எக்சைஸ் டியூட்டி போன்றவைகளிலிருந்து மாநிலங்களுக்கு உரிய பங்கு கொடுக்கப்பட வேண்டும். ஆனால் மத்திய அரசு தந்திரமாக இந்த வரிகளை குறைத்திருப்பதன் மூலமாக மாநிலங்களுக்கு வரி விதிப்பதால் நியாயமாக கிடைக்க வேண்டிய பங்குத் தொகை ஒவ்வொரு ஆண்டும் குறைந்துகொண்டே போகிறது. அதைப்பற்றி குறிப்பிட்டு எதுவும் இந்த வரவு-செலவுத் திட்டத்திலே ஏன் சொல்லவில்லை என்று கேட்க விரும்புகிறேன்.

இங்கே நான் ஒரு புள்ளி விவரத்தை வைக்க விரும்புகிறேன். மத்திய அரசின் வரிகளில் இருந்து மாநிலங்களுக்கு இந்த ஆண்டு எத்தனை சதவிகிதம் அவர்கள் ஒதுக்கியிருக்கிறார்கள் என்றால் நீங்கள் ஆச்சர்யப்படுவீர்கள். அதாவது 23,187 கோடி ரூபாயில் ஏறத்தாழ 25 சதவிகிதத்துக்கும் குறைவாக—சுமார் 5,680 கோடிதான் எல்லா மாநிலங்களுக்கும் சேர்த்து மத்திய அரசு ஒதுக்கீடு செய்து இருக்கிறது. இதை எதிர்த்துக் குரல் கொடுக்க நீங்கள் இதுவரையில் முன்வரவில்லை. அதைப்போலவே பல்வேறு இனங்களில் மாநில அரசுகள் வஞ்சிக்கப்படுவதை எதிர்த்து குரல் கொடுக்கவில்லை, ஒப்புக்காகக்கூட ஒரு எதிர்ப்புக் குரல் கொடுக்கவில்லை. நீங்கள் எங்களை ஏமாற்றப் பார்க்கிறீர்களா, அல்லது தமிழ்நாட்டு மக்களை ஏமாற்றுகிறீர்களா, அல்லது உங்களை நீங்களே ஏமாற்றிக் கொள்கிறீர்களா என்பது எனக்குப் புரியவில்லை.

மாண்புமிகு உறுப்பினர் விஸ்வநாதன் அவர்கள் இங்கே பேசும்போது எப்படியெல்லாம் மத்திய அரசு திட்டமிட்டு மாநிலங்களை நசுக்குகிறது என்பதைக் கோடிட்டும் காட்டி, பல்வேறு விஷயங்களைச் சுட்டிக்காட்டினார். மாண்புமிகு உறுப்பினர் விஸ்வநாதன் அவர்கள் ஆளும் கட்சி உறுப்பினராக இருந்தாலும், அவர்கள் தைரியமாக இதைச்சொன்னதற்காக என்னுடைய பாராட்டுக்களைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

[திரு. ப. நெடுமாறன்] [1984 மார்ச் 13

ஆனால் இந்தக் கருத்துக்கள் எங்கே சொல்லப்படவேண்டுமோ அந்த இடத்தில் சொல்லப்படவில்லை. உங்களுடைய நாடாளுமன்ற உறுப்பினர்கள், ராஜ்ய சபை உறுப்பினர்கள் அந்தந்தச் சபையில் இதைச் சொல்லவேண்டும். அப்படிச்சொல்லி இருக்கிறார்களா என்று நான் கேட்கவிரும்புகிறேன். அப்படிச் சொல்வபவர்களை நீங்கள் அங்கே தேர்ந்தெடுத்து அனுப்ப வேண்டும். அல்லது திரு. விஸ்வநாதன் போன்றவர்களை அங்கே அனுப்பவேண்டும். இந்த 5 ஆண்டுகாலம் மற்றும் அதற்கு முன்பு இரண்டாண்டு காலம் நீங்கள் தொடர்ந்து மத்திய அரசின் கொள்கைகளை ஆதரித்து வந்து இருக்கிறீர்கள். அது ஜனதா கட்சியாக இருந்தாலும், இந்திரா காங்கிரஸ் கட்சியாக இருந்தாலும் தொடர்ந்து ஆதரித்துக்கொண்டு இருக்கிறீர்கள். அங்கே ஆதரவு கொடுத்து விட்டு, இங்கே அதைப்பற்றி குறை சொல்வது என்ன ராஜதந்திரம் என்பது எனக்குத் தெரியவில்லை. இப்படிப்பட்ட ராஜ தந்திரத்தால் எந்தவிதமான பலனும் இல்லை என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். மத்திய நாடாளுமன்றத்தில் எதிர்க்கட்சிக்காரர்கள் ஒன்று சேர்ந்து மத்திய அரசை எதிர்த்துப் பல முறை குரல் கொடுத்த நேரத்தில் பலமுறை அவர்கள் தீர்மானத்தை எதிர்த்து வாக்களித்த நேரத்தில், பலமுறை அவர்கள் நடைமுறையைக்கண்டித்து வெளிநடப்பு செய்த நேரத்தில், Mor loyal to the King than th King என்று சொல்வார்கள், அதைப்போல ராஜாவைவிட மிகச் சிறந்த ராஜ விஸ்வாசியாக மாறி அந்த அரசுக்கு ஆதரவு கொடுத்து இருக்கிறீர்கள். ஆனால் இந்த பட்ஜெட் உரையிலே மத்திய அரசு அதைச் செய்யவில்லை, இதைச் செய்யவில்லை என்று முணுமுணுத்துக் கொண்டிருக்கிறீர்கள். இது எந்த வகையிலே நியாயம் என்று கேட்க விரும்புகிறேன்.

நீங்கள் அங்கே குரல் கொடுக்கவேண்டும். இந்தியப் பாராளுமன்றத்திலே இருக்கின்ற உங்களுடைய உறுப்பினர்கள் மூலம் அங்கே குரல் கொடுத்தால் நிச்சயம் அது நல்ல வகையில் எதிரொலிக்கும். அதை நீங்கள் இதுவரையில் செய்யவில்லை என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். உதாரணத்திற்கு ஒன்றைச் சொல்கிறேன். ஆந்திர மாநில முதலமைச்சர் என்.டி. இராமராவ் அவர்கள் டெல்லிக்குச் சென்று 25—2—1984-ம் தேதியன்று அந்த மாநிலத்தைச் சேர்ந்த மக்கள் சபை உறுப்பினர்கள், ராஜ்ய சபை உறுப்பினர்கள் மற்றும் மத்திய சர்க்கார் அமைச்சர்கள் ஆகியோரை. அழைத்து ஒரு கூட்டத்தைக் கூட்டினார்கள். திரு. என். டி. இராமராவ் அவர்கள் கட்சிக்கு அதிகமான உறுப்பினர்கள் மக்கள் சபையில் இல்லை என்பது உங்களுக்குத் தெரியும். ஒருவரோ இருவரோதான் இருக்கிறார்கள். மற்றவர்கள் எல்லாம் இந்திரா காங்கிரஸ் கட்சியையும் மற்ற கட்சியையும் சார்ந்தவர்கள். ஆனாலும் அவர்கள் எல்லோரும் அழைத்தவுடன் வருகிறார்கள். எதற்காக வருகிறார்கள் என்றால் ஆந்திர மாநில பிரச்சினைகள் குறித்து மத்திய அரசாங்கத்திடம்



1984 மார்ச் 13] [திரு. ப. நெடுமாறன்]

எடுத்துச் சொல்லவேண்டிய பிரச்சினைகளைப் பற்றி ஆலோசித்து முடிவெடுப்பதற்காக, மத்திய அரசாங்கத்திடம் எந்த வகையில் அவற்றை எடுத்துச் சொல்லவேண்டும் என்பதற்காக கூட்டப்பட்ட அந்தக் கூட்டத்திற்கு வருகிறார்கள். மத்திய அமைச்சர் சிவசங்கர் அவர்களும் திரு. நரசிம்மராவ் அவர்களும் கூடவந்து கலந்துகொண்டார்கள். அந்த மாநிலப் பிரச்சினைகளைப் பற்றி பேசி அதைத் தீர்ப்பதற்கான வழிவகைகளை அவர்கள் ஆராய்கிறார்கள். நான் நம்முடைய முதலமைச்சர் அவர்களை மிகப் பணிவுடன் கேட்டுக் கொள்கிறேன். நம்முடைய தமிழகத்திலே நம்மை எல்லாம் வாட்டி வதைத்துக் கொண்டிருக்கிற எத்தனையோ பிரச்சனைகள், குறிப்பாக காவிரி நீர்ப்பிரச்சினை, தமிழகத்தின் தொழில் வளர்ச்சி போன்றவற்றிற்கு மத்திய அரசு செய்ய வேண்டியவைகளைப் பற்றி பேசுவதற்காக நம்முடைய மாநிலத்தைச்சேர்ந்த மக்கள் சபை உறுப்பினர்கள், ராஜ்ய சபை உறுப்பினர்கள், மத்திய அரசாங்க அமைச்சர்கள் ஆகியவர்களை அழைத்துப் பேசி அவர்கள் அந்தந்தச் சபையிலே அந்தக் கருத்துக்களை எதிரொலிப்பதற்கான முயற்சிகளைச் செய்தார்களா என்றால் நிச்சயமாக இல்லை. இந்த முயற்சியை நம்முடைய முதலமைச்சர் எடுக்க வேண்டும். நீங்கள் கட்சிக்கு அப்பாற்பட்டு, எந்தக் கட்சியைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினராக இருந்தாலும், ராஜ்ய சபை உறுப்பினராக இருந்தாலும், டெல்லியிலே உட்கார்ந்து, அவர்களை எல்லாம் அழைத்துப் பேசி, தமிழ்நாடு எந்த எந்த துறைகளிலே புறக்கணிக்கப்படுகிறது, மத்திய அரசு என்னென்ன செய்ய வேண்டும் என்று சொல்லுங்கள். அவர்கள் அதை ஏற்று செயல்படாவிட்டால் இங்கே வந்து, தமிழக மக்களிடம் சொல்லுங்கள். அப்படிச் சொன்னால் அடுத்த தடவை தமிழக மக்கள் நாடாளுமன்றத்திற்கும், ராஜ்யசபைக்கும் அவர்களை நிச்சயமாக அனுப்ப மாட்டார்கள். ஆகவே, இதை நீங்கள் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

(முற்பகல் 11-20)

ஆனால் இன்றைக்கு இதைச் செய்வதிலே உங்களுக்கு தயக்கம் இருக்கிறது. நாம் எதற்காக மத்திய அரசை எதிர்த்து இந்தக் காரியத்தைச் செய்ய வேண்டும்? வேறு யாராவது செய்துவிட்டுப் போகட்டுமே என்று கருதி ஒப்புக்காக எதையோ சொல்கிறீர்கள்; சொல்ல வேண்டிய கருத்துக்களை நீங்கள் சொல்லவில்லை ; செய்ய வேண்டியதைச் செய்யவில்லை. ஆகவே, முதலமைச்சர் அவர்கள் தன்னுடைய பிரதான கடமையிலிருந்து தவறுகிறார்கள் என்று நான் எடுத்துக் காட்ட விரும்புகிறேன்.

[1984 மார்ச் 13

மாண்புமிகு டாக்டர் எம். ஜி. இராமச்சந்திரன் : மாண்புமிகு
துணைத் தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் நெடுமாறன்
அவர்கள் பேசும்போது நல்ல கருத்துக்களைச் சொல்வார்கள்
என்று எதிர்பார்த்தேன். சொல்வது குற்றச்சாட்டாக இருந்
தாலும், நேரடியாக, சரியாகச் சொல்ல வேண்டுமென்பதே என்
னுடைய வேண்டுகோள். எங்களுடைய கட்சியைச் சேர்ந்த
நாடாளுமன்ற உறுப்பினர்களும், ராஜ்யசபை உறுப்பினர்களும்
இதுவரையில் இந்தப் பணியில் பின்வாங்கவில்லை என்பதையும்
அவர்கள் அங்கே நல்ல முறையில் வாதாடியிருக்கிறார்கள் என்
பதையும் நான் நினைவுபடுத்த விரும்புகிறேன்.

அதே நேரத்தில், எந்த எந்த வகையில் பேச வேண்டுமோ
அந்தந்த வகையில் பேசுகிறோம். முதலமைச்சர்கள் மாநாட்டில்
பேசும்போது பிரதமரிடம் சொல்லியிருக்கிறோம். நாங்கள்
செய்ய வேண்டிய கடமைகளை மறக்கவில்லை. நான் ஆளுநர்
உரையின் மீதான விவாதத்திற்குப் பதில் சொல்லியது கூட நினை
வுக்கு வருமானால் நல்லது. அப்போது, எல்லோரையும் காக்காய்
பிடிக்க வேண்டுமா என்று கூறியது நினைவுக்கு வரும் என்று
கருதுகிறேன். கேட்க வேண்டிய முறையில், யாரைக் கேட்க
வேண்டுமோ அவர்களைக் கேட்கிறோம். வெள்ள நிவாரணம்
வேண்டுமென்று கேட்டோம். அதற்காக 41 கோடி ரூபாய் அனு
மதித்திருக்கிறார்கள். தந்திருக்கிறார்கள். ஆக, இப்படிப்பட்ட
நிலையில் அங்கிருந்து உதவியும் கிடைக்கிறது. ஆனால் தாமதம்
ஆகிறது. குறைவாகவும் இருக்கிறது. அதற்காக நாங்கள் எங்க
ளுடைய கடமையை விட்டுவிடவில்லை. முதலமைச்சர் என்
கின்ற முறையில் நான் தீவிரமாக இருக்கிறேன் என்பதை நீங்கள்
நம்ப வேண்டும். கட்டுக்கோப்பில் இருக்கிறார்கள் என்று நீங்கள்
கற்பனை செய்ய வேண்டாம். நீங்கள் கட்டுக்கோப்பில் இருப்
பதைப் போல நாங்கள் இல்லை.

திரு. ப. நெடுமாறன் : முதலமைச்சர் அவர்கள் தாங்கள்
எந்தக் கட்டுக்கோப்பிலும் இல்லை என்று சொன்னார்கள். அவர்
கள் இங்கே அப்படிச் சொன்னாலும் நாடாளுமன்றத்திலும்,
ராஜ்யசபையிலும் அவர்களுடைய கட்சி உறுப்பினர்களுடைய
நடவடிக்கைகளைப் பார்த்துதான் அது உண்மையா இல்லையா
என்பதை முடிவு செய்ய முடியும். எந்த ஒரு கட்டத்திலும் எதிர்க்
கட்சி உறுப்பினர்களையும் சேர்த்து நடவடிக்கை மேற்கொள்ளும்
முயற்சியில் நீங்கள் ஈடுபடவில்லை.

மாண்புமிகு டாக்டர் எம். ஜி. இராமச்சந்திரன் : துணைத்
தலைவரவர்களே, எங்களுடைய கட்சியின் கொள்கையைச் சொல்
வதற்கு என்று நாங்கள் முன்வரும்போது எதிர்க் கட்சிக்காரர்கள்
எங்களோடு ஒத்துழைக்கிறார்களா என்பது என்னுடைய கேள்வி.
எதிர்க் கட்சிகள் செய்கிறபோது தான், நாங்கள் ஒத்துழைக்க
வேண்டுமென்ற கடப்பாடு கிடையாது.



1984 மார்ச் 13]

திரு. ப. நெடுமாறன் : துணைத் தலைவரவர்களே, மன்னிக்க
வேண்டும் எதிர்க்கட்சிகள் செய்வதை எல்லாம் நீங்கள் ஆதரிக்க
வேண்டுமென்று எதிர்பார்க்கமுடியாது, யாரும் அதை ஆதரிக்க
முடியாது; ஆதரிக்கக்கூடாது. ஆனால் மக்களைப் பாதிக்கக்கூடிய
பிரச்சினைகளில் எல்லா எதிர்க் கட்சிகளும் எதிர்த்து வாக்க
ளிக்கும்போது, நீங்கள் ஏன் ஆதரித்து வாக்களிக்கிறீர்கள் ?
எல்லாக் கட்சிகளும் வெளிநடப்புச் செய்கிறபோது நீங்கள்
வெளிநடப்பு செய்திருக்கிறீர்களா? பல முக்கியமான பிரச்சினை
களில் கூட நீங்கள் அப்படிச் செய்யவில்லை.

உதாரணமாக, 'கரூர்-திண்டுக்கல் அகல இரயில் பாதை
வேண்டுமென்ற கோரிக்கையை நீண்ட நெடுங்காலமாக தமிழகம்
வலியுறுத்தி வருகிறது. அதுபற்றி சென்ற ஆண்டிலே இந்தச் சட்ட
மன்றத்திலே ஒரு தனி நபர் தீர்மானம் கொண்டு வரப்பட்டு,
ஒரு மணி நேரம் விவாதம் நடைபெற்றது. எல்லாக் கட்சி உறுப்
பினர்களும் - ஆளும் கட்சி உறுப்பினர்கள் உட்பட - ஆதரித்துப்
பேசி, நம்முடைய மனக் குமுறலை மத்திய அரசுக்குத் தெரிவித்
திருக்கிறோம். ஆனால் இந்த ஆண்டு நிலைமை என்ன ? இந்த
ஆண்டும் இரயில்வே பட்ஜெட்டில் அதற்குப் பணம் ஒதுக்கப்பட
வில்லை.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் எல்லா எதிர்க் கட்சி
களையும் ஒன்று சேர்த்து இந்தப் பிரச்சினைக்காக நாடாளு
மன்றத்திலே குரல் கொடுக்க வைத்திருக்க வேண்டும். இந்தச்
சட்டமன்றமே முழுமையாக இந்தப் பிரச்சினையில் ஆதரவு
கொடுத்த பின்னாலும், நாடாளுமன்றத்தில் இருக்கிற சகல
கட்சிகளையும் ஒன்று சேர்த்து, சகல கட்சிகளும் இந்தப் பிரச்
சனைக்கு குரல் கொடுத்திருக்க வேண்டும். அதுபோன்ற பல
சூழ்நிலைகளிலே நீங்கள் எடுக்க வேண்டிய நடவடிக்கைகளை
எடுக்கவில்லை என்பது தான் எங்களுடைய ஆதங்கம்.

மாண்புமிகு டாக்டர் எம். ஜி. இராமச்சந்திரன் : இதை நான்
சொல்வதற்காக மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தவறாகக்
கருதக் கூடாது. அங்கே இருக்கின்ற எங்களுடைய பிரதிநிதிகள்,
மற்றவர்களைச் சந்தித்து, அதைப்பற்றி பேசி இருக்கிறார்கள்
என்பதும், அதற்காக ஒரு முடிவு எடுக்க வேண்டுமென்று எங்க
ளுடைய உறுப்பினர் மாண்புமிகு மோகனரங்கம் அவர்கள் முயற்
சித்தார்கள் என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன். அங்கே
தமிழக அரசினுடைய பிரதிநிதி, சம்பந்தப்பட்ட அமைச்சர்
களையும், தகுந்த அதிகாரிகளையும் சந்தித்து அதைப் பற்றி
பேசியிருக்கிறார்கள். இந்த அரசும் கடிதம் எழுதியிருக்கிறது.
பிரதம அமைச்சருக்கும் கூட எழுதியிருக்கிறது. இரயில்வே
அமைச்சருக்கும் தெரிவித்திருக்கிறோம். ஆகவே, எந்தெந்த
முறையில் அதைச் செய்ய வேண்டுமோ அதைச் செய்கிறோம்.
அதற்காக மாநிலங்களோடு நாங்கள் ஒத்துழைக்கவில்லை என்று
சொல்வது குற்றச்சாட்டு.

திரு. ப. நெடுமாறன் : அத்தகைய நடவடிக்கைகள் எடுக்கப்
பட்டிருந்தால் அதற்காக என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்
கொள்கிறேன். ஆனால் இந்த இரயில்வே பட்ஜெட்டில் ஒரு
ரூபாய் கூட ஒதுக்கவில்லை என்பது வருந்தத்தக்கது என்பதைச்
சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அடுத்து, இன்னொன்றையும் சொல்லிக்கொள்ள விரும்பு
கிறேன். நம்முடைய நிதியமைச்சர் அவர்களுடைய உரையில்
ஒரு முக்கியமான கருத்தைச் சொல்லியிருக்கிறார்கள். "இன்
றைய சூழ்நிலையில் மைய-மாநில அரசின் உறவு நிலைகளும்,
உரிமை நிலைகளும் எப்படி அமைய வேண்டும் என்பதைத் தமிழக
அரசின் சார்பாக எடுத்துக் காட்டுவதற்கான கொள்கையை
வகுக்க, நீதிபதி இராமபிரசாத் ராவ் 'குழு, தமிழக அரசால்
அமைக்கப்பட்டுள்ளது,'' என்று சொல்லியிருக்கிறார்கள். இராம
பிரசாத் ராவ் கமிஷனானாலும் சரி, மத்திய அரசாங்கம் அமைத்
திருக்கிற சர்க்காரியா கமிஷனானாலும் சரி, இந்த இரண்டு கமிஷன்
களும் மத்திய மாநில உறவு பிரச்சினைகளைச் சரிவர தீர்க்கவே
முடியாது. இந்தப் பிரச்சினைக்கு பரிகாரம் என்பது, இந்தியா
சுதந்திரம் பெற்ற காலத்தில் வகுக்கப்பட்ட அரசியல் சட்டம்
இன்றைக்கு 37 ஆண்டுகளுக்குப் பின்னர், அதைச் செயல்படுத்து
கின்ற முறையிலே உருவாகியிருக்கக்கூடிய ஒரு சூழ்
நிலையில், எத்தனையோ மாற்றங்கள் ஏற்பட்டிருக்கின்றன.
அதற்கு ஏற்ற அரசுச் சட்டம் இல்லை என்பதுதான் இன்றைக்கு
இருக்கிற குறை. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கவ
னத்திற்கு நான் ஒன்றைகொண்டுவர விரும்புகிறேன்.

இந்த அரசியல்நிர்ணய சபை உருவாக்கப்பட்டது எப்படி?
1947 ஆம் ஆண்டு சுதந்திரம் பெற்ற காலத்தில்
உருவாக்கப்பட்ட அரசியல் நிர்ணயசபை, மக்களால்
தேர்ந்தெடுக்கப்பட்ட அரசியல் நிர்ணயசபை அல்ல. 1946
ஆம் ஆண்டு அன்றைக்கு இருந்த மாநில சட்ட
மன்றங்களில் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களால் அமைக்கப்
பட்டது. சுதேச சமஸ்தான மன்னர்கள் பிரதிநிதிகளை நிய
மித்தார்கள். ஆக மன்னர்களின் பிரதிநிதிகளும் சொத்துரிமை
படைத்தவர்களும் 'வாக்காளர்களாக இருந்து தேர்ந்தெடுக்கப்
பட்ட சட்டசபையின் பிரதிநிதிகளும் கொண்ட அரசியல் நிர்ணய
சபை, சட்டத்தை வகுத்தது. ஆனால் அது முறையல்ல. 37
ஆண்டுகளுக்குப் பின்னால், பல சங்கடங்களை மாநில அரசுகள்
அனுபவித்துக் கொண்டு வருகிறது. இந்தச் சூழ்நிலையில் புதிய
தாக அரசியல் நிர்ணயசபை, மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அர
சியல் சட்டசபையால் அமைக்கப்பட்டு, இந்த அரசியல் சட்டத்தை
முற்றிலுமாக திருத்தி அமைத்து, மாநிலங்களின் உரிமைகளை
பாதுகாக்கின்ற வகையில் ஒரு அரசியல் சட்டத்தை உருவாக்க
வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இப்போதைய சூழ்
நிலையில் மத்திய மாநில பிரச்சினைகள் என்றைக்குமே தீராது.



இதை நிறைவேற்றுகின்ற வகையிலே இந்த அரசு என்ன நட
வடிக்கைகள் எடுக்க வேண்டுமோ அந்த நடவடிக்கைகளை எடுக்க
வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். புதியதாக அரசியல்
நிர்ணய சபை அமைக்க முடியாத ஒரு சூழ்நிலையில், தமிழக
அரசு அமைத்த ராமபிரசாத்ராவ் கமிஷனானாலும் சரி, மத்திய
அரசாங்கம் அமைத்திருக்கின்ற சர்க்காரியா கமிஷனானலும் சரி,
அந்த உரிமைகள் பாதுகாக்கப்படுகின்ற பிரச்சினைகளுக்கு
ஒரு பரிகாரம் தராது. அந்த உரிமைகள் என்னவாகிக்
கொண்டிருக்கின்றன என்பது நமக்குத் தெரியும். எனவே
இந்தப் பிரச்சினையை நிரந்தரமாகத் தீர்ப்பதற்கு இது
உதவாது என்பதை நான் இங்கே சுட்டிக்காட்ட கடமைப்பட்டிருக்
கிறேன்.

(முற்பகல் 11-30).

இந்த பட்ஜெட்டிலே -நம்முடைய முதல் அமைச்சர் அவர்கள்
சொன்னார்கள் வெள்ள நிவாரணத்தைப் பற்றி மத்திய அரசாங்
கத்திற்கு எழுதியிருக்கிறோம் என்று சொன்னார்கள். மெத்த
நன்றி. நாம் ஏற்கெனவே வறட்சிக்காகக் கேட்ட தொகையில்
ஒரு கணிசமானத் தொகையைக் கூட மத்திய அரசாங்கம்
அளிக்கவில்லை. அதே போல் இன்றைக்கு வெள்ளத்தினால்
மதுரை, ராமநாதபுரம் போன்ற தமிழகத்தில் உள்ள பல்வேறு
பகுதிகள் கடுமையாக பாதிக்கப்பட்டு இருக்கின்றன. விவசாயிகள்
சொல்லொனா கஷ்டத்திற்கும், மக்கள் சொல்லமுடியாத
துயரத்திற்கும் ஆளாகியிருக்கிறார்கள். அவர்களுக்கு முழுவதும்
மாக உதவி செய்யும் கடமை மத்திய அரசுக்கும் உண்டு
மத்திய பட்ஜெட்டிலே ஆண்டுதோறும் வெள்ளம், புயல் போன்ற
வைகளுக்காக ஒரு கணிசமான தொகை ஒதுக்கப்படுகிறது.
அப்படி ஒதுக்கப்படுகிற தொகை முழுவதுமாக, மாநிலங்களில்,
ஏற்படும் அந்த வெள்ளம் போன்றவைகளுக்காக, மாநிலங்களுக்கு
அளிக்கப்படுவதில்லை. ஒதுக்கப்படுகிற தொகையிலே கணிசமான
அளவிலே, 50 சதவீதம் வரையில் தொகை மிச்சப்படுத்தப்பட்டு
மத்திய நிதித் தொகுப்பிலே சேர்க்கப்படுகிறது. இந்தக்
கொள்கையை மத்திய அரசு தவறாக அனுஷ்டிக்கிறது. நீங்கள்
200 கோடி வேண்டும் என்று சொன்னால் உங்களுக்கு 10 கோடி
கொடுக்கிறது. அல்லது 20 கோடி கொடுக்கிறது. அதற்கு
மேலே அளிப்பது இல்லை. எனவே இதற்கு ஒரு முற்றுப்புள்ளி
வைக்கவேண்டும். இதற்கு நம்முடைய முதல் அமைச்சர் அவர்
கள் தேசிய வளர்ச்சித் கவுன்சில் கூட்டம் நடைபெறுகிற நேரத்
தில் மத்திய அரசு ஆண்டுதோறும் மாநிலங்களில் ஏற்படுகின்ற
வெள்ள புயல் போன்ற இயற்கை இன்னல்களுக்காக ஒதுக்கப்
படுகின்ற தொகை, இந்தப் பணிகளுக்காக முற்றிலுமாக செல
விடப்பட வேண்டும், தேவையான அளவிற்கு மாநிலங்களுக்கு
பங்கிட்டுத் கொடுக்க வேண்டும். அதை மிச்சப்படுத்தக்

[திரு. ப. நெடுமாறன்] [1984 மார்ச் 13

கூடாது என்று வலியுறுத்திப் பேச வேண்டும். புயல் போன்றவை
களுக்காக ஒதுக்கப்பட்டு இருக்கிற தொகையை மாநிலங்களுக்கு
ஒதுக்கிடு செய்கிற வேலையை ஃபைனான்ஸ் கமிஷனிடம்
கொடுங்கள். இதிலே மத்திய அரசியல் குறுக்கிடுகிறது.
ஆகவே இதை பைனான்ஸ் கமிஷன் அல்லது வேறு பொது
அமைப்புகளுக்கு இந்தப் பங்கீடுகளைச் செய்கிற அதிகாரத்தை
அளிக்க வேண்டும் என்பதை நம்முடைய அரசு வலியுறுத்த
வேண்டும் என்பதை நான் இந்த நேரத்தில் சுட்டிக்காட்ட விரும்பு
கிறேன்.

அடுத்து இந்த பட்ஜெட்டிலே ஏழை மக்களுக்கும், நடுத்தர
மக்களுக்கும் ஒன்றும் இல்லை. ஏமாற்றம் அளிக்கிறது. தமிழ
கத்தின் தொழில் வளர்ச்சிக்கு மக்கள் ஊக்கம் அளிக்கும் வகை
யில் எந்தவிதமான சலுகையும் அறிவிக்கப்படவில்லை.
மொத்தத்தில் வார்த்தை ஜாலங்கள் நிறைந்த பட்ஜெட்டாக இது
அமைந்திருக்கிறது என்பதை நான் குறிப்பிட விரும்புகிறேன்.
மத்திய அரசு விட்டுவிட்ட பொருள்களுக்கு நம்முடைய
அரசு புதிய வரிகளை விதித்திருக்கிறது. குறிப்பாக பெட்
ரோலியப் பொருட்களுக்கு 25 கோடி ரூபாய்க்கு மேல் வரி
விதிப்பதின் மூலமாக நீங்கள் மக்களுக்குக் கொடுத்த வாக்குறுதி
களை மீறியிருக்கிறீர்கள் என்றுதான் சொல்லமுடியும். நம்மு
டைய போக்குவரத்து துறை அமைச்சர், அவர்கள் பஸ் கட்டணம்
சம்பந்தமாக முன்பொரு தடவை என்ன சொன்னார்கள் என்றால்
மத்தியஅரசாங்கம் பெட்ரோலியப் பொருட்களுக்குஅதிகவிலையை
விதிக்கிறது, ஆகவே எங்களுக்கு வேறுவழியில்லை என்று சொல்லி
விட்டு, நீங்கள் இப்போது பெட்ரோலியப் பொருட்களுகளுக்கு வரி
போட்டால் அவர்கள் செய்கிறார்கள், ஆகவே நாங்களும் செய்
கிறோம் என்று சொன்னால் அது தவறான முறையாகும் என்பதை
நான் சொல்ல விரும்புகிறேன். பெட்ரோலியப் பொருட்களுக்கும்
மற்றவைகளுக்கும் வரி போடுவதால் விலைவாசி உயரும். அதை
எண்ணிப் பார்க்காமல் இதை நீங்கள் செய்திருக்கிறீர்கள் என்பதை
நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அடுத்து இந்த 5 ஆண்டுக்காலமாக, பல ஆளுநர் உரைகளிலே
நீங்கள் அளித்த வாக்குறுதிகளை நிறைவேற்றுவதற்கான வழி
வகைகளை இந்த இறுதி பட்ஜெட்டிலே நீங்கள் அறிவித்திருக்
கிறீர்களா என்றால், இந்த இறுதி பட்ஜெட்டிலேயும் எதுவும்
இல்லை.

**மாண்புமிகு டாக்டர் எம். ஜி. இராமச்சந்திரன்** ; பேரவைத்
துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் நெடு
மாறன் அவர்கள், வெற்றி வாய்ப்பு எதிர்காலத்தில் இல்லை என்
பதைப் பற்றி சொல்லக் கூடாது, அவர்கள் மீண்டும் இங்கே வரு
வார்கள் என்று நம்புகிறேன். ஆகவே இது இறுதி பட்ஜட் அல்ல.
இன்னொரு முறை பட்ஜெட்டிலே பேசுவதற்கு வாய்ப்பு கிடைக்
கும் என்று நான் கருதுகிறேன்.



1984 மார்ச் 13]

**திரு. ப. நெடுமாறன்** : மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் இங்கே ஆளும் கட்சியாக மீண்டும் அவர்கள் வந்து இந்த பட்ஜெட்டை அளிப்பார்கள் என்றும் எதிர்க்கட்சியாக நீங்கள் வருவீர்கள் என்றும் அவர்கள் சொன்னார்கள். மிக்க நன்றி. யார் ஆளும் கட்சி, யார் எதிர்க்கட்சி என்பதல்ல பிரச்சினை. சட்டமன்றத்திலே இருக்கிறோமா இல்லையா என்பதல்ல பிரச்சினை. தேர்தல் வாக்குறுதிகளை நிறைவேற்றுகிறோமா இல்லையா என்பதுகூட வேறு. ஆளுநர் உரையில் இந்த 5 ஆண்டுக்காலமாக கொடுத்த வாக்குறுதிகள் பலவற்றை நிறைவேற்றவில்லை; இப்போது அளித்த இந்த ஆளுநர் உரையில் கூட சொல்லவில்லை என்று சுட்டிக்காட்டினேன். இந்தப் பட்ஜெட்டிலே அவற்றை நிறைவேற்றுவதற்கு நீங்கள் ஏதாவது செய்திருக்க வேண்டும். அதைச் செய்யவில்லை என்பதைத்தான் நான் இங்கே சுட்டிக்காட்டினேன்.

**மாண்புமிகு டாக்டர் எம். ஜி. இராமச்சந்திரன்** : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, எங்களுடைய ஆட்சி இங்கே மக்களால் அமைக்கப்பட்ட பிறகு, ஆளுநர் உரையில் சொன்னவைகளை நாங்கள் தொடர்ந்து செயல்படுத்திக் கொண்டு வருகிறோம் என்பதை நான் முன்பே குறிப்பிட்டுச் சொல்லியிருக்கிறேன். அப்போது மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அவையில் இல்லை. ஆகவே இந்தப் பிரச்சினையை அவர்கள் சந்தேகிக்க வேண்டாம். இன்னொரு முறை அதைப் படித்துப் பார்க்கட்டும், என்னுடைய பதிலை, விளக்கத்தை. தேவையானால் என்னுடைய டிமான்ட் வருகிறபோது அதைப் பற்றி நான் பதில் சொல்கிறேன்.

ஆனால் ஒன்று மட்டும் சொல்கிறேன். இறுதி பட்ஜெட் என்று நாம் வைத்துக் கொள்ளக்கூடாது. உங்களுக்கும் இது இறுதி அல்ல. மீண்டும் நீங்கள் பட்ஜெட்டிலே பேசக் கூடிய வாய்ப்பை பெறுவீர்கள் என்றுதான் சொன்னேன். நல்ல எண்ணத்தில் சொன்னதாக எடுத்து கொள்ளவேண்டுமே தவிர வேறு அல்ல. யார் வருகிறார்கள், யார் போகிறார்கள் என்றோ எதிர்க்கட்சியா, மாற்றுக்கட்சியா என்றோ பிரச்சினை அல்ல. எங்களைப் பொறுத்தவரையில் நாங்கள் நம்புகிறோம். உங்களைப் பொறுத்த வரையில் நீங்களும் நம்ப வேண்டும். இறுதி என்று நாங்கள் உங்களைச் சொல்ல மாட்டோம். உங்களை நாங்கள் எதிர்பார்க்கிறோம், மீண்டும் இங்கே.

**திரு. ப. நெடுமாறன்** : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, முதலமைச்சர் அவர்கள் அளித்த அந்த வாக்குறுதிக்கு நன்றி. இன்னொன்றையும் இறுதியாகச் சுட்டிக் காட்டி என்னுடைய உரையை முடிக்கிறேன்.

[திரு. ப. நெடுமாறன்] [1984 மார்ச் 13

இந்தப் பட்ஜெட்டினைப் பொறுத்த வரையில், தமிழ்நாட்டில் மறைமுக வரி என்று 93 சதவீதத்திற்கு ஏற்பட்டிருக்கிறது. தமிழக அரசின் பட்ஜெட்டிலே மறைமுக வரி இருக்கிறது என்பது ஒன்று; மறைமுக வரியோடு நிற்கவில்லை, அரசாங்கத்தின் பல்வேறு திட்டங்களுக்கு முதலமைச்சர் நிவாரண நிதி உட்பட, பல திட்டங்களுக்கு; அதிகாரிகள் செய்கிற கெடுபிடி வசூல் என்பது எந்த அளவுக்கு இருக்கிறது என்பதை இந்த அவையில் உள்ள பல உறுப்பினர்களும் சுட்டிக் காட்டினார்கள். 93 சதவீத மறைமுக வரிக்கு மேலே, அதிகாரிகளின் கெடுபிடி வசூல் வேறே அதிகமாகிக் கொண்டேயிருக்கிறது, அந்தப் போக்குக்கும் முற்றுப்புள்ளி வைக்க வேண்டும் என்று நான் வற்புறுத்த விரும்புகிறேன். இங்கே நம்முடைய நிதியமைச்சர் அவர்கள் அவருக்கே உரித்தான பாணியிலே ஒன்றைச் சொல்லியிருக்கிறார்கள். இந்த பட்ஜெட்டில் நம்முடைய நாவலர் அவர்களுடைய பங்கு என்பது ஒரே ஒரு பாராதான் என்று நான் எண்ணுகிறேன். மற்றவை எல்லாம் அவர்களுக்கு சம்பந்தம் இல்லாத அதிகாரவர்க்கம் உருவகப்படுத்தியிருக்கக் கூடிய பட்ஜெட் அது. அவர் தமிழ் கற்றவர் என்ற காரணத்தாலே, ஒரே ஒரு பராவை மட்டும் அதிலே எழுதியிருக்க வேண்டும் என்று நான் கருதுகிறேன்.

'ஆற்றொழுக்கு அரிமாநோக்கு தவளைபாய்ந்து பருந்து வீழ்வன்னது சூத்திர நிலை'

என்று நன்னூலிலே சொல்வது போல, அவைகளில் இது அரிமா நோக்கு உடைய பட்ஜெட் என்று அவர்கள் சொல்லி யிருக்கிறார்கள். அவர் எந்தச் சூத்திரத்திலிருந்து சொன்னார்களோ அந்த சூத்திரத்தில் உள்ள மற்ற பகுதிகள் தான், இந்த பட்ஜெட்டுக்கு ஒத்து வருகிறதே தவிர, இந்த அரிமாநோக்கு என்னும் வகையில், ஒத்து வரவில்லை என்பதைச் சுட்டிக் காட்ட விரும்புகிறேன். ஆகவே. வெறும் வார்த்தைகளை அடுக்குவதினால் பயன் இல்லை

'No New Tr st in the Budgt
No N w Scop in the Budget'

என்று, புதிய கோணத்தில், புதிய பரிமாணத்தில், புதிய பொருளாதாரப் பாதையை இந்த தமிழகத்திற்கு வகுத்துக் கொடுப்பதற்கு இந்த பட்ஜெட் முற்றிலுமாகத் தவறி விட்டது என்று சுட்டிக் காட்டி என்னுடைய உரையை முடிக்கிறேன்.

**திரு. ஆர். நவநீதகிருஷ்ண பாண்டியன் :** மாண்புமிகு சட்டப் பேரவை துணைத் தலைவர் அவர்களே, 1984-85 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்டத்தின் மீது காந்தி காமராஜ் தேசிய காங்கிரஸ் சார்பிலே என்னுடைய கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். கவர்னர் உரையிலே குறிப்பிடப்பட்ட மாவட்டங்களை பிரிப்பது தொடர்பாக, இந்த வரவு-செலவு மதிப்பீட்டில் ஒன்றுமே குறிப்பிடப்படவில்லை என்பதை இந்த நேரத்தில் சுட்டிக் காட்ட நான் கடமைப்பட்டுள்ளேன்.



1984 மார்ச் 13] [திரு. ஆர். நவநீதகிருஷ்ணபாண்டியன்]

அதேபோல இந்த வரவுசெலவு திட்டஅறிக்கை, மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களால் கொண்டு வரப்பட்ட ஒரு சாதாரண அறிக்கை போல இருக்கிறதே தவிர. நிதி நிலை அறிக்கை போல இல்லை.

இன்று வெள்ளத்தால்பாதிக்கப்பட்ட ஏழை மற்றும் நடுத்தர விவசாயிகளுக்கு, விதைகள், பூச்சிமருந்துகள் மட்டும் இலவசமாகக் கொடுத்தால் போதாது. அவர்கள் கூட்டுறவுச் சங்கங்களிலிருந்து வாங்கியிருக்கக்கூடிய கடன்களையும் முழுவதுமாக ரத்து செய்வதற்கான நடவடிக்கைகளில் ஈடுபட வேண்டும் என்று நான் இந்த நேரத்திலே நினைப்பூட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட இடங்களை பார்வையிட்ட அதிகாரிகள், மண்ணால் மூடப்பட்டிருக்கிற இடங்களுக்கு மட்டும் நிவாரணம் உண்டு. வெள்ளத்தால் பயிர்கள் மூழ்கி இருந்தால் இந்த நிவாரணம் கிடையாது என்று சொல்வதாக அறிகிறேன், வெள்ளத்தால்பாதிக்கப்பட்ட விவசாயிகள் மாட்டுத் தீவனம் கூட இல்லாமல், வைக்கோல்கள்இல்லாமல் கஷ்டப்படுகிறார்கள் வைக்கோல்கள் எல்லாம் குப்பை கூளங்களாக போய்விட்ட நிலையில், மாட்டுத்தீவனத்திற்குக் கூட விவசாயிகள் அவதிப் பட்டுக் கொண்டிருக்கிறார்கள். ஏகப்பட்ட கடன்களை வாங்கிய விவசாயிகள் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டதால், கால்மேனி அரைமேனிக் கூட மகசூல் கிடைக்காத நிலையில், வாங்கிய அந்தக் கடன்களைதிருப்பிஅடைக்க முடியாமல் கஷ்டப் பட்டுக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே, வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட எல்லா தரப்புமக்களையும், ஒன்று போல கருதி, அவர்கள் கூட்டுறவுச் சங்கங்களிலிருந்து வாங்கியிருக்கக்கூடிய கடன்களை ரத்து செய்ய வேண்டும்என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

(முற்பகல் 11-40)

அதேபோன்று நெல்லை மாவட்டத்திலே கால்நடை நோய் தகவல் சேகரிப்பு பிரிவு ஒன்று நடப்பு நிதியாண்டில் எற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

அதைப்போலவே நாள் ஒன்றுக்கு 50 ஆயிரம் லிட்டர் பாலை குளிர வைத்து பதப்படுத்தும் தொழிற்சாலை ஒன்று திருநெல்வேலியில் அமைப்பது குறித்து, பணி மேற் கொண்டிருப்பதாக இந்த நிதிநிலை அறிக்கையிலே கூறப்பட்டிருப்பது வரவேற்கப்பட வேண்டிய ஒன்றாகும். அதற்காக நான் நெல்லை மாவட்ட மக்களின் சார்பாக நன்றியைக் கூறிக் கொள்கிறேன்.

விவசாய இடுபொருள்களை வழங்குவதில் கூட்டுறவு நிறுவனங்களில் உள்ள தனி நபர்களின் ஆதிக்கம் ஒழிக்கப்பட வேண்டும். எல்லாத் தரப்பு மக்களுக்கும் சிரமமின்றி இப்பலன் கிடைக்க ஏற்ற நடவடிக்கைகளை எடுக்க வேண்டும்.

[திரு. ஆர். நவநீதகிருஷ்ண பாண்டியன்] [1984 மார்ச் 13

காட்டு வளம், மீன் வளம் ஆகிய துறைகளில் போதிய அபி விருத்தி இல்லை. ஆகவே இந்தத் துறைகளுக்கு கூடுதல் நிதி ஒதுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

சிறிய நீர்ப்பாசனத் திட்டம் சீராக்கப்பட்டு கூடுதல் நிலங் களுக்குப் பாசன வசதி செய்து தரப்பட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

(மாண்புமிகு மாற்றுத் தலைவர் தலைமை)

மின்சாரத் துறை நவீன மயமாக்கப்பட்டு, மின்சக்தி மேம்பாடு திட்டங்கள் மேற் கொள்ளப்பட்டு, மின் தட்டுப்பாடு அறவே நீக்கப்பட வேண்டும். கிராமங்களிலே ஷிப்டு முறையில் மின் சாரம் கொடுக்கப்படுகிற காரணத்தினால் இரவு நேரங்களிலே கூட 10 மணிக்கு மின்சாரத்தை அணைத்து விடுகிறார்கள். அது திருடர்களுக்கு சாதகமான நிலைமை தோற்றுவிக்கிறது. வெள் ளத்தினாலே இப்போது அணைகளிலே நீர் மட்டங்கள் உயர்ந் திருக்கின்றன. அனல் மின் உற்பத்தி பெருகியிருக்கிறது. எனவே இந்த ஷிப்டு முறையை மாற்றி மின்சாரம் கிடைப்பதற்கான வழி வகைகளைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

தொழில் வளர்ச்சியில் போதிய கவனம் செலுத்தப்படவில்லை. சுயவேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் பாரபட்சமற்ற முறையில் வழங்கப்பட வேண்டும்.

சாலை போக்குவரத்துக்கு ஒதுக்கப்பட்ட நிதி போதாது. வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட சாலைகளைப் பழுது பார்க்கத் தக்க நடவடிக்கைகளை போர்க்கால அடிப்படையில் எடுக்க வேண்டும்.

ஏற்கெனவே தன்னிறைவுத் திட்டத்தின் மூலமாகப் போடப் பட்ட சாலைகள் மோசமாக இருந்தாலும் இப்போது ஏற்பட்டு இருக்கிற வெள்ளத்தால் பாதிக்கப்பட்டு மிகவும் மோசமாக இருக்கின்ற நிலையில் அதற்காககூடுதல் நிதிஒதுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

எல்லாப் பேரூராட்சிகளின் தலைமையிடங்களிலும் ஆரம்ப சுகாதார நிலையங்கள் ஏற்படுத்தப்பட வேண்டும். இப்போது ஒவ்வொரு பேரூராட்சியிலும் ஆரம்ப சுகாதார நிலையம் இல்லை. எல்லா பேரூராட்சிகளிலும் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கு வதற்கான ஏற்பாடுகளைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். கீழப்பாவூர் பேரூராட்சியிலே 15 ஆண்டுகளுக்கு முன்னாலேயே ஆய்வுப் பணம் கட்டியும் இதுவரை குடிநீர்வசதி ஏற்படுத்திக் கொடுக்கப்படவில்லை. இரண்டு மாதங்களுக்கு



1984 மார்ச் 13] [திரு. ஆர். நவநீதகிருஷ்ண பாண்டியன்]

முன்னாலே அங்கே சர்வ கட்சியினர் சேர்ந்து அ.தி.மு.க. உட்பட உண்ணாவிரதம் இருந்தார்கள். அவர்களிடம் தலையிட்டு எப் படியும் இந்த நடப்பு ஆண்டில் இந்த குடிநீர் திட்டத்தை செயல் படுத்திவிடுவோம் என்ற உறுதியைக் கொடுத்து உண்ணா விரதத்தை நிறுத்தியிருக்கிறோம். ஆகவே கீழப்பாவூர் பேரூ ராட்சியிலே குடிநீர் வழங்குவதற்கான வழிவகைகளை செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

ஆதி திராவிடர், பிற்பட்ட வகுப்பினர் ஆகியோர் மேம்பாட் டிற்கு கூடுதல் நிதி ஒதுக்கி, அவர்களை வறுமைக் கோட்டைத் தாண்டிக் கொண்டுவர அரசு கூடுதல் நிதியை ஒதுக்க வேண்டு மென்று கேட்டுக் கொள்கிறேன்.

நிலமற்றவர்களுக்கு நிலம் வழங்குதல், வீட்டு மனைப்பட்டா வழங்குதல் ஆகியவற்றிற்கு துரித நடவடிக்கை எடுக்க வேண்டும்.

பேரூராட்சிகளின் தன்னிறைவுத் திட்டங்களுக்கு 1982-83 ஆம் ஆண்டிலே பேரூராட்சி ஒன்றுக்கு 3.72 இலட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டது. நடப்பு ஆண்டிற்கு அது 2.52 இலட்சம் ஆகக் குறைக்கப்பட்டது. அடுத்த நிதியாண்டில் மீதி உள்ள எல்லா பேரூராட்சிகளுக்கும் தன்னிறைவுத் திட்டத்தை நிறைவேற்றுவதற் காக கூடுதல் நிதி ஒதுக்கீடு செய்து அமல்படுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதே நேரத்தில் டீசல் எண்ணெய்க்கு வரி உயர்த்தப்பட் டுள்ளது. இதுஏழை மற்றும் நடுத்தர விவசாயிகளைப் பாதிக்கும். ஆகவே அதை கைவிட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

1982-83 ஆம் ஆண்டு வரவு செலவுத் திட்டத்தில் கிராமப் புறத்தில் வாழும் மகளிர்க்காக பொதுக் கழிப்பிடங்கள் கட்டு வதற்கு ரூபாய் 22.56 கோடி செலவில் தயாரிக்கப்பட்ட திட்டம் அடுத்த நிதி ஆண்டிற்குள்— இந்த நிதியாண்டிற்குள்—கட்டி முடிக் கப்படும் என்று போன தடவை சொல்லப்பட்டது. ஆனால் அப்படி கழிப்பிடங்களை இங்கே அதிகமாக கட்டவில்லை. சில ஊர்களில் கழிப்பிடங்கள் கட்டியிருக்கிறார்கள் ஆனால் அங்கே தண்ணீர் வசதி இல்லை. அவைகள் சரியாக செயல்படவில்லை. எப்போது கழிப்பிடங்கள் கட்டுகிறார்களோ அப்போதே அங்கே மேல்நிலை நீர்த் தேக்கத் தொட்டி கட்டி நிரந்தரமாக தண்ணீர் வசதி செய்தால்தான் கழிப்பிடங்கள் உபயோகமாக இருக்கும் என்பதை நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் கடந்த 2 ஆண்டுகளில் 16 ஆயிரம் கழிப்பிடங்கள் கட்டப்பட்டு இருக்கின்

றன. எல்லா ரெவின்யூ கிராமங்களிலும் கட்டப்பட்டு இருக்கின்றன. கழிப்பிடங்களுக்கு தண்ணீர் வசதி செய்து கொடுத்து தான் அவைகள் முடிக்கப்பட்டு இருக்கின்றன. ஆகவே ஏதாவது குறிப்பிட்ட ஒரு கிராமத்தில் அப்படி தண்ணீர் வசதி இல்லை என்று சொன்னால் தயவு செய்து என்னிடத்தில் குறிப்பைத் தர வேண்டும். நான் உடனடியாக பார்க்கிறேன். ஏன் என்றால் எல்லா வசதிகளும் செய்து கொடுக்க வேண்டும் என்று நம்முடைய தமிழக முதலமைச்சர் புரட்சித் தலைவர் அவர்கள் ஆணையிட்டு இருக்கிறார்கள். அதன்படி 16 ஆயிரம் கழிப்பிடங்கள் கட்டப்பட்டு இருக்கின்றன.

**திரு. ஆர். நவநீத கிருஷ்ண பாண்டியன் :** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, என்னுடைய தொகுதியில் எந்த எந்த இடங்களில் தண்ணீர் வசதி இல்லாமல் கழிப்பிடங்கள் கட்டியிருக்கிறார்கள் என்ற விவரத்தை மாண்புமிகு அமைச்சரிடம் கொடுக்கத் தயாராக இருக்கிறேன். பெருந் தலைவர் காமராஜர் அவர்கள் தமிழ்நாட்டில் முதலமைச்சராக இருந்த போது திருவள்ளூருக்கு அருகில் உள்ள திருநின்றவூரில் பாக்கம் செல்லும் பஸ் ரோட்டில் ஒரு மருத்துவமனையை திறந்து வைத்தார்கள். அந்த மருத்துவ மனையினால் அதைச் சுற்றியுள்ள கிட்டத்தட்ட 50 ஆயிரம் பேர் பயன் அடைந்து வந்தார்கள். இப்போது அந்த மருத்துவமனை நிரந்தரமாக மூடப்பட்டு இரவு நேரங்களில் அங்கே சூதாட்டம் போன்ற சமூக விரோத செயல்கள் நடைபெறுவது குறித்து, பல்வேறு புகார்கள் இன்றைக்கு வந்து கொண்டிருக்கின்றன. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அதைக் கருத்தில் கொண்டு அந்த மூடப்பட்ட திருநின்றவூர் மருத்துவ மனையில் தவறான காரியங்கள்நடை பெறாத வண்ணம் கண்காணிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அதுபோல என்.ஜீ.ஓக்களுக்கு 5 ஆயிரம் கொடுக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. 25 வருடம் சர்வீஸில் இருந்து திடீர் என்று அவர் உடல் பாதிக்கப்பட்டு, உடல் ஊனமுற்று வேலை வேண்டாம் என்று ராஜினாமா செய்தால் அவர்களுக்கு எந்தவிதமான பலனும் கிடைப்பதற்கு குறிப்புகள் இதில் இல்லை. அப்படி உடல் ஊனம் உற்று நிரந்தரமாக பணியை விட்டு விட்டு செல்லுகின்ற அந்த அரசு ஊழியர்களுக்கும் இந்த சலுகையை வழங்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

போலீசாருக்கு கொடுக்கப்பட்டு வந்த மலிவு விலை பண்டங்கள் இப்போது அறவே நிறுத்தப்பட்டு விட்டது. அவைகளை அவர்களுக்கு கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். போலீஸ் காவலில் கைதிகள் சாவது என்பது இப்போது சர்வ சாதாரணமாக இருக்கிறது. அதை கண்காணிக்க அந்தந்த பகுதியில் ஒரு நிரந்தர குழுவை அமைக்க வேண்டும் என்று கேட்டுக்



கொள்கிறேன். காவல் துறையினால் சில தவறான காரியங்கள் இன்றைக்கு நடப்பதால் பொதுமக்கள் அச்சப்படக்கூடிய ஒரு சூழ்நிலை இருக்கிறது. அந்தந்த பகுதியில் சர்வ கட்சி அடங்கிய ஒரு குழுவை காவல் நிலையங்களை கண்காணிக்கின்ற ஒரு குழுவை அமைக்க வேண்டும் என்று கேட்டு இந்த நிதிநிலை அறிக்கையின் மீதான உரையை முடித்து அமைகிறேன். நன்றி, வணக்கம்.

**திரு. பு. கோ. ஆனூர் ஜெகதீசன் :** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, மாண்புமிகு நிதியமைச்சர் டாக்டர் நாவலர் அவர்கள் வழங்கியிருக்கும் நிதிநிலை அறிக்கையை ஆதரித்து என்னுடைய கருத்துக்களை சொல்ல விழைகிறேன். இந்த நிதிநிலை அறிக்கை அரிமா நோக்கோடு கொண்டு வரப்பட்டது என்று குறிப்பிட்டு இருக்கிறார்கள். அதேபோல் தொடர்ந்து தான் சென்று கொண்டு இருக்கும் ஒரு சிங்கம் ஓர் இடத்தில் கம்பீரமாக நின்று தான் ஏறுநடை போட்டு வந்த தொலைவை திரும்பிப் பார்த்து பின்னால் தான் செல்ல வேண்டிய தொலைவை ஏறெடுத்துப் பார்த்து தன்னுடைய மதிப்பீட்டைக் கணக்கிடும் என்று சொல்வார்கள். இது தமிழ் இலக்கியங்களில் அரிமா நோக்கோடு என்று கூறப்பட்டுள்ளது. அது குறித்து நம்முடைய டாக்டர் நாவலர் அவர்கள் இந்த அறிக்கையை அரிமா நோக்கோடு தயாரித்து இருக்கிறார் என்று சொன்னால் அது மகிழ்ச்சி அளிக்கக்கூடிய ஒன்றாகும்.

என்னுடைய செங்கற்பட்டு மாவட்டத்தின் தலைநகரமாக இருந்து வந்த சைதாப்பேட்டையிலிருந்து 1968ஆம் ஆண்டில்பேரறிஞர் அண்ணா அவர்கள் காலத்தில் அது காஞ்சிபுரத்திற்கு மாற்றப்பட்டது. நானும் செங்கற்பட்டு பகுதியைச சேர்ந்த முக்கியஸ்தர்கள் சொளத்தூர் கோதண்டம் அவர்களும், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் திரு. சி. என். கிருஷ்ணன் போன்றவர்களும் பேரறிஞர் அண்ணா அவர்கள் இல்லத்திற்கு சென்று செங்கற்பட்டின் எதிர் காலத்தைப் பற்றிக் கேட்டோம். பேரறிஞர் அண்ணா அவர்கள் எங்களிடம் அப்போது சொன்னார்கள். செங்கற்பட்டு மாவட்டம் என்ற பெயர் எப்போதும் நீடிக்கும். மாறவே மாறாது. அதுபோல செங்கற்பட்டு நகரில் உள்ள மாவட்ட நீதி மன்றத்தையும் எந்தக் காரணத்தைக் கொண்டும் காஞ்சிபுரத்திற்கு மாற்ற மாட்டோம் என்று உறுதிமொழி கொடுத்தார்கள். அதுபோல ஒரு வாரம் கழித்து மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகம் காஞ்சிபுரத்தில் நிறுவப்பட்டது. அந்த விழாவில் பேசிய பேரறிஞர் அண்ணா அவர்கள் மேடையிலே பொதுமக்கள் மத்தியிலே அதே உறுதி மொழியை கொடுத்தார்கள். அவை எல்லாம் தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவர் அவர்களிடத்திலே நாங்கள் வேண்டுகோளாகத் தெரிவித்தோம். அந்த அடிப்படையிலே மாவட்டத் தலைநகரில் மாவட்ட அலுவலகங்கள் இருக்க வேண்டும் என்ற நியதி இருந்தாலும் கூட

[திரு. பு. கோ. ஆனூர் ஜெகதீசன்] [1984 மார்ச் 13

பேரறிஞர் அண்ணா அவர்களுடைய உறுதிமொழியை அமுலாக்க வேண்டும் என்ற அந்த உறுதிப்பாட்டையும் சீரிய கொள்கையையும் வைத்து இருக்கின்ற நம்முடைய முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவர் அவர்கள் செங்கற்பட்டு நகரத்திலே மாவட்ட நீதி மன்றத்திற்கான கட்டிடத்தையும், நீதிபதிகளுக்கான இல்லங்களையும், விருந்தினர் மாளிகையையும் கட்டிமுடிக்க சுமார் 94 இலட்சம் ரூபாயை நிதி ஒதுக்கீடு செய்து வழங்கி இருக்கிறார்கள்.

(முற்பகல் 11–50)

அந்தச் சிறப்புமிக்க அடிக்கல் நாட்டு விழா இம்மாதம் பத்தாம் தேதி நடந்தது. அந்த விழாவில் சட்டத்துறை அமைச்சரவர்களும், பொதுப் பணித்துறை அமைச்சரவர்களும், தலைமை நீதிபதி திரு. கோகுலகிருஷ்ணன் அவர்களும் கலந்து கொண்டு சிறப்பித்தார்கள். அப்படிப்பட்ட வரலாற்றுச் சிறப்புமிக்க இந்த நிகழ்ச்சிக்கு முக்கிய காரண கர்த்தாவாக இருந்த புரட்சித் தலைவரவர்களையும், டாக்டர் நாவலர் அவர்களையும் வணங்கி வாழ்த்தக் கடமைப்பட்டிருக்கிறேன்.

செங்கல்பட்டு மாவட்டத்தில் நகர ஈட்டுப்படி, வாடகைப்படி வழங்கப்படுகிறது. ஆனால், ஒரு சில ஊர்களில் பணியாற்றுகின்ற அரசு ஊழியர்களுக்கு இந்தச் சலுகைகள் கிடைப்பதில்லை. ஒரே பஞ்சாயத்து யூனியனில் உள்ள சில கிராமங்களில் வேலை பார்க்கின்ற ஊழியர்களுக்குக் கிடைக்கின்ற இந்தச் சலுகைகள் அதே பஞ்சாயத்து யூனியனில் உள்ள வேறு சில கிராமங்களில் வேலை பார்க்கின்ற ஊழியர்களுக்குக் கிடைப்பதில்லை. இந்தக் காரணத்தினால் ஒரே ஊராட்சி ஒன்றியத்தில் அல்லது வட்டத்தில் பணியாற்றுகின்ற அரசு ஊழியர்களை அதே ஊராட்சி ஒன்றியத்தில் அல்லது வட்டத்தில் உள்ள வேறு கிராமங்களுக்கு மாற்றும்பொழுது பெரிய சிக்கல்கள் ஏற்படுகின்றன. ஒரு இடத்தில் இருப்பவர்களை மற்றொரு இடத்திற்கு மாற்றும் பொழுது குறைந்தபட்சம் 130 ரூபாய் அளவிற்கு இழப்பு ஏற்படுகிறது. இதனால், அவர்களின் குடும்பம் மிகவும் பாதிக்கப்படுகிறது. இதனால், பொது வாழ்வில் உள்ள எங்களைப் போன்றவர்களுக்குத் தர்ம சங்கடமாக ஆகிவிடுகிறது. தற்பொழுது செங்கை நகரின் எல்லைக்கு 35 கிலோ மீட்டர் தொலைவு அளவிற்கு எச். ஆர். ஏ., மற்றும் சி. சி. ஏ., தரப்பட்டு வருகிறது. இப்பொழுது செங்கல்பட்டு வட்டம் என்று எடுத்துக் கொண்டால் அதில் சுமார் 80 கிராமங்களில் வேலை பார்ப்பவர்களுக்கு இந்தச் சலுகை கிடைக்கிறது; 20 கிராமங்களில் வேலை பார்ப்பவர்களுக்கு இந்தச் சலுகை கிடைப்பதில்லை. இப்படிச் சில கிராமங்கள் விடுபட்டுப்போய் இருக்கின்றன.



1984 மார்ச் 13] [திரு. பு. கோ. ஆனூர் ஜெகதீசன்]

இதைக் கவனத்தில்கொண்டு, வட்டார வாரியாக அல்லது தாலுக்கா வாரியாகப் பார்த்து, செங்கல்பட்டு நகரத்தையும், காஞ்சிபுரத்தையும் உள்ளடக்கிய வகையில், காஞ்சீபுரம் தாலுக்கா, செங்கல்பட்டு தாலுக்கா ஆகியவைகளில் முழுமையாக இந்தச் சலுகைகள் வழங்கப்பட வேண்டும். அவர்களுக்கு எச்.ஆர்.ஏ., சி.சி.ஏ., வழங்க வேண்டுமென்று மிகவும் பணிவன்போடு கேட்டுக் கொள்கிறேன். அரசு ஊழியர்களுக்கு எதிர்பாராத அளவிற்கு தாராளமாகச் சலுகைகளை வாரி வாரி வழங்கியிருக்கிறது. அப்படிப்பட்ட சலுகைகளை வழங்கியிருக்கின்ற இந்த அரசுக்கோ அல்லது டாக்டர் நாவலர் அவர்களுக்கோ அல்லது மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களுக்கோ இந்தச் சலுகைகளை வழங்குவது என்பது பெரிய விவகாரமாகத் தோன்றாது. அவர்கள் மனது வைத்தால் நிச்சயமாக மாவட்டத்திலுள்ள சில வட்டங்களுக்காவது முழுமையாக எச்.ஆர்.ஏ., மற்றும் சி.சி.ஏ., வழங்க முடியும் என்பதைச் சொல்லிக் கொள்கிறேன்.

இப்படி வசதியோடும், வளத்தோடும் வாழ்ந்து கொண்டிருந்த அரசு ஊழியர்கள் ஓய்வுபெற்ற பிறகு அவர்களுக்குத் தருகின்ற பணத்தை இரண்டாண்டுகளில் செலவழித்து விடுகிறார்கள். மகன் திருமணம, மகள் திருமணம் என்று எல்லாப் பணத்தையும் செலவழித்துவிட்ட பிறகு, ஓட்டாண்டிகளாக ஆகி, பெற்ற மக்களாலும் உதாசீனப்படுத்தும் அளவிற்கு சீரழிந்த நிலையில் பல ஓய்வு பெற்ற அரசு ஊழியர்கள் இருந்துகொண்டிருக்கிறார்கள். முதியோர் உதவித் தொகை பெறுகின்ற ஆதரவற்ற மக்களுக்குச் சத்துணவுத் திட்டத்தில் வழங்குவதைப் போல, இப்படிப்பட்ட ஓய்வு பெற்றிருக்கின்ற அரசு ஊழியர்களுக்கும் எந்த அளவிற்கு என்.ஜி.ஓ.-க்களுக்கு சலுகைகளை வழங்குகிறார்களோ அந்த அளவிற்குக் கொடுத்தால் வயது முதிர்ந்தவர்களுக்கு உதவியாக இருக்கும். எனவே, அவ்வாறு நல்ல சலுகைகளை ஓய்வு பெற்ற அரசு ஊழியர்களுக்கு வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

நம்முடைய ஆட்சியில் போக்குவரத்தைச் சீராகவும், சிறப்பாகவும் வழங்கிட வேண்டுமென்பதற்காக சின்னஞ்சிறு மாவட்டங்களுக்குக்கூடத் தனித்தனி போக்குவரத்து வசதி ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆனால், எங்கள் செங்கல்பட்டு மாவட்டத்தைப் பொறுத்த வரையில் பல்லவன் போக்குவரத்துக் கழகத்தின் மாவட்டப் பிரிவு இதுவரையில் இயங்கி வந்தது. என்ன காரணமோ தெரியவில்லை, எங்கள் மாவட்டத்தில் இருந்த பல்லவன் பிரிவை நீக்கிவிட்டு, மேற்குப் பகுதியில் உள்ள இடங்களை பட்டுக்கோட்டை அழகிரி போக்குவரத்துக் கழகத்தோடு இணைத்துவிட்டார்கள்; தென் பகுதியாகிய எங்கள் பகுதியைப் பெரியார் போக்குவரத்துக் கழகத்தோடு இணைத்துவிட்டார்கள். பெரியார் போக்குவரத்துக் கழகத்தோடு தொடர்பு கொள்ள வேண்டுமென்றால் நாங்கள் விழுப்புரத்திற்குச் செல்ல வேண்டும்

[திரு பு. கோ. ஆனூர் ஜெகதீசன்] [19 4 மார்ச் 13

அல்லது பட்டுக்கோட்டை அழகிரி போக்குவரத்துக் கழகத்துடன்
தொடர்புகொள்ள வேண்டுமென்றால் வேலூருக் நச் செல்ல
வேண்டும். இதன் காரணமாக எங்களுக்குத் தொ டர்ந்து விப
ரீதங்களும், தொல்லைகளும ஏற்பட்டுக் கொண் -ருக்கின்றன.
எல்லா மாவட்டங்களுக்கும் ஒரு நீதி, எங்கள் ம வட்டத்திற்கு
ஒரு நீதியா என்று கேட்கத்தான் தோன்றுகிறது. ,கவே, அருள்
கூர்ந்து எங்கள் மாவட்டத்தைத் தலைமையிடம நக் கொண்டு
தனி போக்குவரத்துக் கழகத்தை ஏற்படுத்தித் ர வேண்டும்
என்று கேட்டுக் கொள்கிறேன். அப்படிப்பட்ட ே ாக்குவரத்துக்
கழகத்திற்கு நம்முடைய புரட்சிக் கவி பாரதி -சன் அவர்க
ளுடைய பெயரை வைப்பதுதான் சாலச் சிறந்தத க இருக்கும்.

அடுத்து, ஆசியாக் கண்டத்திலே முதன் மு ாக தொழிற்
சங்கம கண்டவர் திரு.வி.க. அவர்கள்தான். ெ ாழிப் பற்றும்,
மொழி அறிவும் கொண்ட பலபேர் நம நாட்டி ல வாழ்ந்தார்
கள் என்றாலும் அவர்களுக்கு எல்லாம் மாறுப ட நிலையிலே
தமிழ் அறிஞர் ஒருவர் தொழிற்சங்கத்தை நிறு பினார் என்ற
நிலைமையில் தொழிற்சங்கத்தை நிறுவி, போ றிப் பராட்டி
சுயமாகத் தொழிற்சங்கத்தை நடத்தி வெ றி கண்டவர்
திரு.வி.க. அவர்கள். தன்னலம் கருதாது அவ ள் வாழ்ந்து
தனது குடும்பத்தையே அழித்துக் கொண்டார்கள். என்பது நம்
அத்தனை பேருக்கும் தெரியும். ஆகவே, ஆற்றல் மிக்க அந்தத்
தலைவரின் பெயரை கிண்டி தொழிப்பேட்டை கு வைத்து,
திரு.வி.க. தொழிற்பேட்டை என்று ஆக்க ே ண்டும் என்று
கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, சிம்சன் குரூப் தொழிலாளர்கள் பிர சினை சம்பந்த
மாக 12 ஆயிரம் தொழிலாளர்கள் வேலை இழக் ன்ற நிலைமை
ஏற்பட்டு சென்னை நகரமே ஸ்தம்பிக்கின்ற லைமை ஏற்
பட்டது என்பது நமக்குத் தெரியும். பெரிய ழப்பம் ஏற்பட்
டது என்பதும் நமக்குத் தெரியும். அந்தக் ழப்பத்தை நம்
முடைய மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை மைச்சர் அவர்
களும், மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களும் சீராகத் தீர்த்து
வைத்திருக்கிறார்கள். அப்படித் தீர்த்து வை தற்காக நம்மு
டைய மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்க நக்கு வணக்கத்
தையும் நன்றியையும் நான் தெரிவித்துக்கொள் றேன்.

அடுத்து, செங்கை மாவட்டத்திலும், பிற ம வட்டங்களிலும்
பாசன ஏரிகள் அனைத்தும ஆக்கிரமிக்கப்படு ன்றன. இதன்
காரணமாக முறைப்படி தண்ணீர் பாய வேண்டி நஞ்சை நிலங்
களுக்குக்கூட தண்ணீர் கிடைக்காமல் விவசாய பாதிக்கப்பட்
டிருக்கின்றது. சிற்சில இடங்களில் வனத்துறை தோட்ட வளர்ச்
சித் திட்டத்தின் கீழ் அனைத்து நீர்ப்பிடிப்பு பகுதிகளையும்
ஏற்றுக்கொண்டிருக்கிறார்கள். எல்லா ஏரிக ிலும் அந்தத்



1984 மார்ச் 13] [திரு ஆனூர் .பு கோ. ஜெகதீசன்]

தோட்டம் வளர்க்கின்ற திட்டத்தை விரிவாக்கி பாசன வளத்தைப் பெருக்கி, கிராமப் பஞ்சாயத்திற்கும் அதற்காக நிதி உதவி செய்து சிறந்த ஏற்பாடுகளை முழுமையாகச் செய்ய வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன். மேலும், ஆக்கிரமிப்புக்களை நீக்க வேண்டும் என்றும், அங்கெல்லாம் போதிய நீர் வசதியினைப் பெருக்க வேண்டும் என்றும் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, அன்னை தெரசா அவர்களின் பெயராலே மகளிர் பல்கலைக் கழகத்தைப் புரட்சித் தலைவர் அவர்கள் ஏற்படுத்தி இருக்கிறார்கள். அதற்காக மிகப் பணிவாக நான் என்னுடைய வணக்கத்தையும நன்றியையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து, அந்தக் காலத்தில் எல்லாம் மாதம் மும்மாரி மழை பொழியும. ஆனால், இப்பொழுதெல்லாம் மாதங்கள் மாறி, மாறி மழை பொழிந்துகொண்டிருக்கின்றது. அவ்வாறு மாதங்கள் மாறி, மாறி மழை பெய்கின்ற இந்த நேரத்தில் ஏராளமான சேதங்கள் ஏற்பட்டுக்கொண்டிருக்கின்றன. தண்ணீரையே பார்க்காத பாலாற்றிலேகூட இவ்வாண்டு இரண்டு கரைகளும் நிரம்பி வழிகின்ற ஒரு தன்மையை நாம் பார்த்தோம். அந்த அளவிற்கு இந்த முறை பாலாற்றிலே வெள்ளம் ஏற்பட்டதை நாம் பார்த்தோம். இப்படிப்பட்ட நிலைமையில் தண்ணீர் வீணாகப் போவதைத் தடுக்கின்ற வகையிலே சிறு சிறு அணைகள் கட்டி அந்த நீரைத் தேக்கினால் செங்கற்பட்டு மற்றும் வடாற்காடு ஆகிய இரண்டு மாவட்டங்களும் நல்ல பலனைப் பெறும என்பதைத் தெரிவித்துக் சொள்கிறேன். இதனைப் பெரிய திட்டமாகப் போட்டு பெரிய அணைகளைக் கட்ட வேண்டியதில்லை. ஓரிரு மாதங்கள் தண்ணீரைத் தேக்கி வைக்கின்ற அளவுக்கு, தண்ணீரைத் தடுத்து நிறுத்துகின்ற அளவுக்கு சிறு, சிறு அளவில் 6 அல்லது 7 இடங்களில் கட்டி ஓரளவுக்கு நீரைத் தேக்கினால் அது பாசனத்திற்கும் பயன்படும், நிலத்தடி நீரும் உயரும், இரண்டு மாவட்டங்களும் அதனால் பயன பெறும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து, கனிம வளத்தைப் பயன்படுத்துகின்ற வகையிலே கனிமவள நிறுவனம் என்ற ஒரு சிறப்பான நிறுவனம் இயங்கி வருகின்றது. இதன் மூலமாக 90 சதவீதம் அன்னியச் செலாவணி கிடைக்கின்றது. இவ்வாறு அன்னியச் செலாவணியைப் பெற்றுத் தருகின்ற இந்த நிறுவனம் இந்த ஆண்டு மட்டும் ஏறக்குறைய 100 இலட்சம் ரூபாய் இலாபம் பெற்றிருக்கின்றது. இந்த நிறுவனத்தை மேலும் விரிவாக்கி மணலியில் ரூபாய் 385 இலட்சம் செலவில் சிறப்பான ஒரு தொழிற் சாலையினை நிறுவுகின்ற வகையில் மூலதனம் செலவிடப்பட்டு இருக்கின்றது. சிவகங்கையில் ஒரு தொழிற்சாலையைத் துவங்கவும் அதற்சாக 30 இலட்சம் ரூபாய் அரசு முதலீடு செய்ய இருப்பதும் வரவேற்கத்

தக்கது. இந்த நிறுவனத்தைச் சிறப்பாக நடத்தி வரும் மாண்பு
மிகு டாக்டர் புரட்சித் தலைவர் அவர்களின் அரசுக்கும், இந்
நிறுவனத்தின் தலைவருக்கும் என்னுடைய நன்றியையும, பா
ராட்டையும் நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து, மேல்நிலைக் கல்வியின் மூலமாக கல்வியில் ஒரு
பெருத்த முன்னேற்றம் ஏற்பட்டிருப்பதை யாரும் மறுக்க முடி
யாது. ஆனால், தொடக்கக் காலத்தில் பல தனியார் பள்ளிகள்
இதை ஏற்கவில்லை. ஆகவே, கிராம மக்களின் அறியாமையைப்
போக்குகின்ற வகையில், அவர்களின் வேண்டுகோளுக்கிணங்க பல
உயர்நிலைப் பள்ளிகளில் ப்ளஸ் டூ கல்வி முறையினை நாம் நிர்ண
யித்திருக்கிறோம். பல பள்ளிகளில் போதிய மாணவர்கள்
இல்லை என்றும் போதிய தரம் இல்லை என்றும் கூறப்பட்டது.
காரணம் அங்கெல்லாம் தேவையில்லாத அளவுக்குப் புகுத்தப்
பட்டுவிட்டது. ஆகவே, அப்படிப்பட்ட நிலைமை இருந்தது.
ஆனால், இப்போது அந்த நிலைமை மாறி சில தனியார் பள்ளிக்
கூடங்களில், சிறப்பாக இயங்குகின்ற பள்ளிகளில் எல்லாம் ப்ளஸ்
டூ வேண்டும் என்று கேட்கிறார்கள். ஆகவே, அந்தப் பள்ளி
களில் எல்லாம் இந்தக் கல்வி முறையினை ஏற்படுத்த வேண்டும்
என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

(நண்பகல் 12-00)

அடுத்து, நெசவாளர் துயர் துடைக்கவும், வறட்சியால் பாதிக்
கப்பட்ட விவசாயக் குடிகளுக்கு உதவும் வகையிலும் இப்பொழுது
கிராமங்களிலும் நகரங்களிலும் புடவை, வேட்டிகள் தாராளமாக
வழங்கப்பட்டு வருகின்றன, இப்பொழுது முடியும் தருவாயிலும்
இருக்கின்றன. விவசாயக் குடிகளை நம்பி வாழும் சில கிராமத்
தொழிலாளர்களும் இருக்கிறார்கள். துணி வெளுப்போர், முடி
திருத்துவோர் தச்சர், குயவர், வில்லியர் போன்றவர்கள் ஆண்டு
பூராவும் வேலை செய்து அதற்குக் கூலியாக இரண்டு மூன்று
மரக்கால் நெல்லே பெறுகிற ஒரு சிறப்பான முறை இருந்து
வருகிறது. அப்படிப்பட்ட விவசாயக் கூலிகளாக இருக்கிற
அந்தத் தொழிலாளர்களுக்கும் அந்தப் புடவை, வேட்டி
வழங்குகின்ற நிலையைப் புரட்சித் தலைவருடைய அரசு
ஏற்படுத்த வேண்டுமென்று, கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வளவு நல்ல காரியங்களை, சமூக நலத் திட்டங்களைச்
செய்து வந்துங்கூட சில எதிர்க்கட்சிகளில் ஒருவர் கூட ஒரு
வார்த்தைகூட பாராட்டவில்லையே என்று மனம் சோர்ந்து.
போக வேண்டிய அவசியத்திலே யாரும் இருக்க வேண்டாம்
ஏனென்றால் நாட்டு மக்களிடத்திலே ஆளுங்கட்சியாக இருப்பவர்
கள் 25 விழுக்காடு இருப்பார்கள். எதிர்க்கட்சிகள் அனைத்தும்
சேர்த்தால் கூட 15 விழுக்காடுதான் இருக்கும். மீதமுள்ள 60





சதவீதம பொதுமக்கள். அந்தப் பொது மக்கள் நடுநிலையாளர்
கள், நல்லது எது, கெட்டது எது என்று சீர் தூக்கிப் பார்க்கக்
கூடியவர்கள். அவர்கள் அனைவரும் இந்த அரசையும் புரட்சித்
தலைவரையும் வாயார வாழ்த்துகிறார்கள் என்பதை யாரும்
மறந்துவிடக் கூடாது.

கடும். வறட்சி நிலவியபொழுதும் மைய அரசு போதிய
அரிசி தராத பொழுதும், வெள்ளம் அலைக் கழித்து வயல்களை
முழுமையாகப் பாதித்த போதும், அரிசி விலையை உயர்த்தாத,
அச்சப்படுத்தக்கூடிய எதுவும் செய்யாத, மின் கட்டணத்தை
உயர்த்தாத, மின் துண்டிப்பு செய்யாத, பஸ் கட்டணத்தை
ஏற்றாத, புரட்சித் தலைவர் அரசை வாழ்த்தி வணங்கி முடிக்
கிறேன். வணக்கம்.

திரு. இரா. கருப்பையா : மாண்புமிகு மாற்றுத்
தலைவர் அவர்களே, 1984—85 ஆம் ஆண்டின் நிதி நிலை
அறிக்கை சம்பந்தமாக இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாக
நான் கருத்துக்களைக் கூறுவதற்கு விரும்புகிறேன். இந்த
நிதிநிலை அறிக்கையானது தமிழ்நாட்டின் செல்வ ஆதாரங்களைப்
பெருக்குவதிலும் அடிப்படையான விவசாய உற்பத்தியைப்
பெருக்குவதிலும் இருக்கும் தொழில்களைப் பாதுகாத்து, தொழில்
வளர்ச்சிக்கும் மக்களின் அடிப்படையான தேவைகளைப்
பூர்த்தி செய்வதற்குமான கடமைகளை நிறைவேற்றவில்லை
என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். மாண்புமிகு
நிதி அமைச்சர் அவர்கள் சுவையான கருத்துக்களைக் கூறி
மக்கள்மீது சுமைகளை ஏற்றி உள்ளார்கள் என்பதைத் தெரி
வித்துக் கொள்கிறேன். தமிழகத்தைப் பற்றி ஒரு கவர்ச்சியான
படத்தை மக்களிடத்திலே காட்டுவதற்கு முற்பட்டுள்ளார்கள்
என்பதை நான் குறிப்பிட விரும்புகிறேன்.

எந்தப் பின்னணியில் நம்முடைய நிதி அமைச்சர் அவர்கள்
இந்த நிதிநிலை அறிக்கையைத் தயாரித்து இருக்கிறார்கள்
என்று உற்று நோக்கக்கூடிய நேரத்தில் இதற்கு ஆதாரமாக,
இதற்கு முன்னதாக மத்திய அரசு இந்த ஆண்டு சமர்ப்பித்
திருக்கின்ற நிதிநிலை அறிக்கையின் பின்னணியிலேதான்
இதுவும் தயாரிக்கப்பட்டு சமர்ப்பிக்கப்பட்டிருக்கிறது என்பதை
நான் குறிப்பிட விரும்புகிறேன்.

இன்றைய தினம் நாட்டிலே இருக்கக்கூடிய நிலை எல்லோரும்
அறிந்தது. மத்திய அரசாங்கம் தயாரித்திருக்கிற, சமர்ப்பித்
திருக்கிற நிதிநிலை அறிக்கையில் ஒட்டுமொத்தமாக, இந்தி
யாவினுடைய வரவு-செலவு என்று அவர்கள் குறிப்பிட்டிருக்கக்
கூடியது, ரூ. 4,050 கோடி வருமானம் என்றும், ரூ. 4,253
கோடி செலவினம் என்றும் ரூ. 203 கோடி துண்டு விழும்

[திரு. இரா. கருப்பையா]  [1984 மார்ச் 13

என்கின்ற முறையிலேதான் மத்திய நிதி அமைச்சர் அவர்கள்
தன்னுடைய நிதிநிலை அறிக்கையைக் கொடுத்திருக்கிறார்கள்.
அதைத் தொடர்ந்து இந்த நிதிப் பற்றாக்குறையைச் சமாளிப்
பதற்கு மத்திய அரசின் சார்பிலே ரூ. 309.20 கோடிக்குப்
புதிய வரிகளை விதிப்பதற்கான முறையிலே அதற்கான
பிரேரணைகளை பாராளுமன்றத்திலே சமர்ப்பித்திருக்கிறார்
கள். அதுவும் எந்தக் காலக் கட்டத்தில் என்று பார்க்கின்ற
நேரத்தில் மத்திய அரசு, துண்டு விழக்கூடிய பற்றாக்குறை
பட்ஜெட்டை அளித்திருக்கிறார்கள், அது ஒரு புறத்திலே
இருக்க இந்தியா முழுவதும் இருக்கிற மக்களின் நிலை, தமிழ
கத்திலே இருக்கிற மக்களின் நிலை என்று எடுத்துக் கொண்டு
பார்த்தால், விலைவாசி தினசரி உயர்ந்து கொண்டே வரு
கிறது என்பது அனைவரும் அறிந்திருக்கிற உண்மை, விலைவாசி
என்று கூறக்கூடிய நேரத்தில் 1984 ஜனவரி 14 வரையிலே
உள்ள குறிப்புப்படி 9.7 சதவீதம் உயர்ந்திருக்கிறது. இந்த
ஆண்டு மட்டிலும், மத்திய அரசு கொடுத்திருக்கின்ற அறிக்கை
கள்படி நம்முடைய நாட்டின் பண வீக்கம் 10.7
சதவீதமாக உயர்ந்து கொண்டே இருக்கிறது. ஆகவே
இந்த அடிப்படையிலே விலைவாசி ஏறுகிறது; பண
வீக்கம் அதிகமாகிறது. அதன் காரணமாக தமிழகத்திலே
இருக்கிற அனைத்து மக்கள், உழைக்கக்கூடிய மக்கள், சாதாரண
மக்கள், மத்தியதர மக்கள் அனைவரும் பாதிக்கப்படுகிற
நிலைமை ஏற்படுகிறது என்பதைச் சுட்டிக்காட்ட விரும்பு
கிறேன். நம்முடைய நாட்டிலே ஒரு பொருளாதாரத் தத்து
வத்தை எல்லோரும் உபதேசித்துக் கொண்டிருக்கிறார்கள்.
உற்பத்தி பெருகினால் விலைவாசி குறையும் என்று. ஆனால்
அது தத்துவமாக இருக்கிறதே தவிர நடைமுறையிலே உற்
பத்தி பெருகுகிறது. விலைவாசியும் உயர்ந்து கொண்டே போகி
றது. அந்த நிலை தான் நம்முடைய நாட்டிலே இருக்கிறது.
அதற்கு அடிப்படையான காரணம் என்ன என்பதை நாம்
அனைவரும் அறிவோம். நாட்டினுடைய பொருளாதார
அமைப்பு முதலாளித்துவ பொருளாதார அழைப்பை சார்ந்
திருக்கிறதால், அதை பாதுகாக்கக்கூடிய அமைப்பாக இருக்
கிறதால் உற்பத்தி பெருகினாலும், முதலாளிகளுடைய
இலாபத்தை அதிகரிக்க வேண்டுமென்ற நோக்கத்தோடு, நம்
முடைய பொருளாதாரம் அமைக்கப்பட்டிருக்கிறதால், உற்
பத்தி பெருகுகிற போது விலைவாசியும் உயர்கிறது. இரும்பு
உற்பத்தி 130.6 மிலியன் டன் உற்பத்தியாகி இருக்கிறது. பெட்
ரோலியப் பொருள்கள் 135.7 மிலியன் டன் உற்பத்தியாகி
இருக்கிறது. சிமென்ட் உற்பத்தி 28 மிலியன் டன் அதிகமாகி
இருக்கிறது. ஆனால் இந்தக் காலத்தில் சிமென்டினுடைய
விலை எந்த அளவிற்கு உயர்ந்திருக்கிறது என்பது நம் எல்லோ
ருக்கும் தெரியும். அதேபோல பெட்ரோலியப் பொருள்கள்.
குறிப்பாக சில பொருள்களை மட்டும் நான் இங்கே கூறி



1984 மார்ச் 13]  [திரு. இரா. கருப்பையா]

இருக்கிறேன். அனைத்துப் பொருள்களின் விலையும் இன்றைய
தினம் உயர்ந்து இருக்கிறது. இந்த நிலையில் தான் மத்திய
அரசு வரிகளை விதித்து இருக்கிறார்கள். அதன் மூலம்
விலைகளும் உயர்கின்றன. அதன்மூலம் சாமான்ய மக்களின்
முதுகை முறிக்கக்கூடிய முறையிலே மத்திய அரசினுடைய
பட்ஜெட் அமைந்து இருக்கிறது. அதைத் தொடர்ந்து தான்
நம்முடைய இந்த பட்ஜெட் அதற்கு வழி வகுத்திருக்கிறது
என்பதைச் சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை.)

நம்முடைய நாட்டிலே வேலை இல்லாதவர்களுடைய
எண்ணிக்கை அதிகரித்துக் கொண்டே இருக்கிறது. இந்தியா
வினுடைய எண்ணிக்கையை இதற்கு எடுத்துக் கொண்டால்
2½ கோடி; நம்முடைய தமிழகத்திலே வேலை இல்லாதவர்
களின் எண்ணிக்கை 13½ இலட்சம். ஒவ்வொரு ஆண்டும் 1½லட்சம்
இந்த எண்ணிக்கை உயர்ந்து கொண்டிருக்கிறது. விலைவாசி
உயர்வு புள்ளி 1980-ல் நம்முடைய அமைச்சரவை ஆட்சிப்
பொறுப்பை ஏற்றபோது 371 ஆக இருந்தது. இன்றைய தினம்
562 ஆக உயர்ந்திருக்கிறது. நான் இதற்கு முழுமையாக
இந்த அரசு மட்டும் காரணம் என்று பேச வில்லை. மத்தியிலே
இருக்கிற அரசு, பொருளாதாரம் என்று இவை எல்லாம் ஒரு
புறத்திலே இருந்தாலும், எந்த அளவிற்கு சாதாரண மக்கள்
பர்சேசிங் பவரை இழந்திருக்கிறார்கள் என்பதைத்தான்
குறிப்பிட விரும்புகிறேன். அவர்களுடைய வாழ்க்கைத் தரத்
தில் விலைவாசி உயர்வின் காரணமாக 50 சதவீதம் இன்றைய
தினம் வெட்டு ஏற்பட்டிருக்கிறது. நம்முடைய மாநில
நிதிநிலை அறிக்கையில் 2,757.68 கோடி ரூபாய் வரவு. செலவு
2,959.50 கோடி ரூபாய். புதிய வரிகள் ரூபாய் 57.25 கோடி.
இந்த அளவிற்கு நம்முடைய மாநில சர்க்கார் பட்ஜெட்டிலே
வரிகளை விதித்து இருக்கிறார்கள். மத்திய அரசின் பட்ஜெட்
300 கோடி ரூபாய் என்றால் அதிலே ஒரு மாநிலமாக இருக்கிற
நம்முடைய மாநிலத்தின் பங்கு 57 கோடி ரூபாய். நம்முடைய
பங்காக நிதியமைச்சர் அவர்கள் இதை உயர்த்தி இருக்கிறார்
கள். ஏதோ வரிகளை புதியதாக போட்டிருக்கிறார்கள்
என்று நான் குறிப்பிடவில்லை. 1984-85 ஆம் ஆண்டு நிதி நிலை
அறிக்கையில் மற்ற இனங்களில் அரசுக்கு கிடைக்கிற
வருவாயிலே உயர்வு ஏற்பட்டிருக்கிறது என்பதை நாம்
பார்க்க முடிகிறது. ஏற்கனவே சென்ற 1983-84 ஆம் ஆண்
டைக் காட்டிலும் இந்த ஆண்டு விற்பனை வரி 130 கோடி
ரூபாய் அதிகமாக வருகிறது. 811 கோடி ரூபாயாக உயர்ந்து
சென்ற ஆண்டைக் காட்டிலும் இது 130 கோடி ரூபாய்
அதிகமாக கிடைக்கிறது. அப்படியென்றால் அந்த விற்பனை
வரியை யார் கொடுத்திருக்கிறார்கள்? அதனுடைய பாரம்
பளு யார் தலையில் சுமக்கிறார்கள்? இன்றைய தினம் இது
அடிப்படையாக இருக்கிற பிரச்னை. அதேபோல ஆயத்தீர்வை

203 கோடி ரூபாயாக உயர்கிறது. சென்ற ஆண்டைக் காட்டிலும் 47 கோடி ரூபாய் ஆயத் தீர்வை உயர்கிறது. இந்த மாதிரியாக பல்வேறு நிலைகளில் சென்ற ஆண்டைக் காட்டிலும் வரிகள் உயர்ந்திருக்கின்றன. தமிழகத்திலே இருக்கிற 4 கோடியே 50 இலட்சம் மக்கள்தான் இந்த வரிகளைக் கொடுக்கிறார்கள்.

(பிற்பகல் 12-10)

ஆகவே இந்த அளவிற்கு வரிகளை உயர்த்திப் போடக்கூடிய நிலை ஏற்பட்டிருக்கிறது என்பதைக் குறிப்பிட விரும்பு கிறேன். ஆகவே அந்த அடிப்படையில் இன்று போடப் பட்டிருக்கும் இந்த வரி உயர்வு சாமானிய மக்களை பாதிக்கக் கூடியதாக இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். மேலும் பெட்ரோலியப் பொருள்கள் மீது, குறிப்பாக டீசல் மீது இன்றைய தினம் வரி உயர்த்தப்பட்டிருக்கிறது. இதன் காரணமாக போக்குவரத்துக் கட்டணங்கள் உயரும். மற்ற எரிபொருள்களின் செலவு அதிகமாகும். அதன் காரணமாக மின் கட்டணம் உயரும். இப்படி பல்வேறு விதமான சூழ் நிலைமைகளை இந்த வரி உயர்வு ஏற்படுத்தும் என்பதை நான் குறிப்பிட்டுக் காட்ட விரும்புகிறேன்.

அதேநேரத்தில் இதிலே அறிவித்திருக்கும் நிதிப்பற்றாக் குறையை சரிக்கட்டுவதற்கு எடுத்திருக்கின்ற முயற்சிகள் மக்களைப் பாதிக்கக் கூடிய முறையில் அமைந்திருக்கிறது என்பதை நான் குறிப்பிட்டுச் சொல்ல விரும்புகிறேன். அதே நேரத்தில், மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் இந்த நிதிநிலை அறிக்கையில் சுவையான வார்த்தைகளின் மூலம் நம்முடைய நிலைமைகளை குறிப்பிட்டுள்ளார். "பெருகக் கூடிய நிதிவாயில்கள் மத்திய அரசிடம் உள்ளது. மாநில மக்களைப் பாதுகாக்கும் பொறுப்பு மாநில அரசாங்கத்திற்கு இருக்கிறது. அபிவிருத்தித் திட்டங்களை, வறட்சி, வெள்ளம் இவற்றால் ஏற்படும் இழப்புகளை சமாளிக்கும் பெரும் பொறுப்பு மாநில அரசுக்கு இருக்கிறது.'' வறட்சிக்கு நாம் செலவு செய்தது ரூ. 114 கோடி. மத்திய அரசாங்கம் அனுமதித்தது ரூ. 77.54 கோடி. வெள்ள நிவாரணத்திற்கு நாம் கேட்டது 200 கோடி ரூபாய். நாம் செலவு செய்தது 37.54 கோடி ரூபாய். மத்திய அரசு இதுவரையில் கொடுத்து இருப்பது 15 கோடி ரூபாய். பொது விநியோகத்திற்காக நாம் கேட்ட அரிசியின் அளவு 80,000 டன். அவர்கள் கொடுத் தது 35,000 டன்தான். அதன் காரணமாக வெளி அங்காடியில் இருந்து நாம் வாங்குவதால் மாநில அரசுக்கு 100 கோடி ரூபாய் இழப்பு ஏற்படுகிறது. இவை எல்லாவற்றிற்கும் மேலாக, இன்றைய தினம் மத்திய அரசாங்கம் அறிவித்து இருக்கும் வரிகளால் ஏற்படும் விலையுயர்வு, அதனால் ஏற்படும் நிதிப் பற்றாக்குறை ஆகியவற்றையும் நாம் சமாளித்தாகவேண்டும் என்பதை நான் நிதியமைச்சர் அவர்களுக்குச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.



அது மட்டுமல்லாமல், மின்சாரத் திட்டங்கள் நமக்கு மிகமிகத் தேவை. அதற்கு நிச்சயமாக மத்திய அரசாங்கத்தின் நிதி உதவி தேவை. நிதியைத் தேட வேண்டிய கட்டாயம் நமக்கு இருக்கிறது என்றாலும், நமக்குத் தேவையான திட்டங் களுக்கு, அதை அமைப்பதற்கு, அதை நிறைவேற்றுவதற்கு அனுமதியைக் கேட்டாலும் காலத்தோடு தராமல் இருக் கிறார்கள் என்பதையும் நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். இந்த அவையில், கடந்த 3 ஆண்டுக் காலமாகச் சொல்லப்பட்டு வருகிற, மதுரை மாவட்டத்தில் ஒரு சிமென்ட் ஆலை ஆரம் பிக்கும் திட்டம் மத்திய அரசாங்கத்தின் அனுமதி பெறாமல் இருப்பதைப் பார்க்கிறோம். இன்றைய தினம் மத்திய அரசு அதற்கு அனுமதி தராத காரணத்தால், நம்முடைய தமிழ்நாட்டின் தொழில் வளர்ச்சி தடைப்பட்டு இருக்கிறது. ஆகவே, இன்றைய தினம் அரசு எடுக்கும் முயற்சிகளுக்கு, அரசு போடும் திட்டங்களை நிறைவேற்றுவதற்கு அனுமதியைப் பெறுவதற்கு தமிழக அரசின் கொள்கை என்ன, பார்வை என்ன என்பதை கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

தொழில் வளர்ச்சியைப் பொறுத்தவரையில், தமிழகத்தில் மத்திய அரசின் முதலீட்டில் ஆரம்பிக்கப்பட்ட தொழில் இந்த 6-வது ஐந்தாண்டுத் திட்டத்தில் என்ன என்று பார்த் தால், ஒரேயொரு தொழில்தான் 1.6 கோடி செலவில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. அதுதான் பிளாஸ்டிக் பொறியியல் உற்பத்தி நிறுவனம் என்கிற ஒரேயொரு தொழிலாகும். அதைத் தான் நம்முடைய நிதியமைச்சர் அவர்கள் குறிப்பிட்டு இருக் கிறார்கள்.

அடுத்தபடியாக, விவசாயிகள் உற்பத்தி செய்யும் பொருள்களுக்கு சரியான விலை நிர்ணயிக்கப்படவில்லை. மத்திய அரசாங்கம் இன்றைக்கு 115 ரூபாய் என்று நிர்ணயித்து இருந்தபோதிலும், ட்ரேட் அலவன்ஸ் என்ற பெயரால், வெள்ளம் பாதித்த பகுதிகளில் பயிர்செய்த காரணத்தால், 35 ரூபாய் விவசாயிகளுக்குக்கொடுத்து, நெல்லை கொள்முதல் செய்யும் நிலையேற்பட்டுள்ளது. அந்த உயர்வு கூட 15 நாளைக்கு ஒரு முறை தவணை கொடுத்துத்தான் நீடிக்க வேண்டியிருக்கிறது. ஒரு வேளை மத்திய அரசாங்கம் எங்கே அதைத் தரக்கூடாது என்று சொல்லிவிடுவார்களோ என்ற அச்சமும் உள்ளது. கோதுமைக்கு 151 ரூபாய் என்று நிர்ண யித்துவிட்டு, நெல்லுக்கு விலை 132 என்று நிர்ணயித்துள்ளார் கள். கரும்புக்கு விலை ஒரு டன்னுக்கு 13½ ரூபாய் உயர்த்தி யிருக்கிறார்கள். விலைவாசி கடந்த இரண்டு ஆண்டு களில் 46 சதவிகிதம் உயர்ந்து இருக்கிறது. அதேநேரத்தில் விவசாயிகள் உற்பத்தி செய்யக்கூடிய பொருள்களுக்கு விலையை எந்த அளவுக்கு உயர்த்தியிருக்கிறார்கள்என்றால் 10 சதவீதம் அல்லது 15 சதவீதம்தான். அந்த அளவுக்குத்தான் நிலைமை இருந்து கொண்டிருக்கிறது.

[திரு. இரா. கருப்பையா] [1984 மார்ச் 13

மற்ற விவரங்களைப் பார்த்தால், மத்திய சர்க்கார் இன்றைக்கு லெவி சர்க்கரை விலையை உயர்த்தியிருக்கிறது. ஆனால் கரும்புக்கு விலை இல்லை. லெவி சர்க்கரை ஒரு கிலோவிற்கு 25 பைசா வீதம், உயர்த்தி ஒரு குவிண்டால் சர்க்கரைக்கு 25 ரூபாய் உயர்த்தியிருக்கிறார்கள். அது யாரைப் பாதுகாப்பதற்கு? வாங்கிச் சாப்பிடக்கூடிய மக்களைப் பாதுகாக்கின்ற கொள்கையா இது? இல்லை. சர்க்கரை ஆலை முதலாளிகளைப் பாதுகாக்கின்ற கொள்கை இது. கரும்பு உற்பத்திச் செய்யக்கூடிய விவசாயிகளைப் பாதுகாக்காமல், சர்க்கரை ஆலை முதலாளிகளைப் பாதுகாக்க வேண்டும் என்பதால் சர்க்கரை விலையை உயர்த்தியிருக்கிறார்கள்.

அதேமாதிரி, ரிபேட் கொடுக்கிறார்கள். ப்ரீ மார்க்கெட் சர்க்கரைக்கு ஒரு குவிண்டாலுக்கு ரூ. 31.80 தள்ளுபடி கொடுத்திருக்கிறார்கள். லெவி சர்க்கரையில் குவிண்டாலுக்கு 19 ரூபாய் தள்ளுபடி செய்து கொடுத்திருக்கிறார்கள். ஆகவே, இது மக்களுக்கு பயனில்லை; உற்பத்திச் செய்கின்ற விவசாயிகளுக்குப் பயனில்லை. பெரும் முதலாளிகளுக்கு பயனளிக்கிறது; இந்திய அரசு முதலாளிகளுக்குப் பாதுகாப்பு கொடுக்கிறது என்று நான் குறிப்பிட விரும்புகிறேன். இந்தக் கொள்கையை மாற்ற வேண்டும. அதற்கு இந்த மாநில சர்க்கார் என்ன செய்யப் போகிறது? மத்திய அரசின் இப்படிப்பட்ட கொள்கையினால் மாநில மக்கள் பாதிக்கப்படுகிறார்கள்.

அதுமட்டுமல்ல. அரசாங்கம் இந்த நிதி நிலை அறிக்கையில் சொல்லியிருப்பதோடு நின்றுவிடாது, இன்னும் எத்தனை சப்ளிமென்டரி பட்ஜெட் போடப்போகிறார்கள் என்று தெரியாது. ஏனென்றால் விலைவாசி உயர்ந்துகொண்டே இருக்கிறது. இந்திய பொருளாதாரத்தின் ஏற்றத் தாழ்வுகளை நாம் அனுபவித்துத்தான் தீரவேண்டும் என்று நான் சொல்லவில்லை; நிதி அமைச்சர் சுட்டிக்காட்டியிருக்கிறார்.

நிலக்கரி விலையைப் பொறுத்தவரையில் இப்போது 25 சதவீதம் உயர்த்தியிருக்கிறார்கள். நம்முடைய மாநிலத்தில் அமைக்கப்பட்டிருக்கிற தூத்துக்குடி அனல் மின் நிலையத்திற்கும் பேசின்பிரிட்ஜ் அனல் மின்நிலையத்திற்கும தேவையான நிலக்கரி ஏற்கனவே கிடைக்கவில்லை. தற்போது விலையையும் உயர்த்தி இருக்கிறார்கள். அதன் காரணமாக நம்மை என்ன நிலைமைக்குக் கொண்டுபோய் விடுமோ என்பது நம்முடைய கேள்வி. இந்த நிலையில் இப்படிப்பட்ட கொள்கையில் ஒரு மாற்றம் இல்லாமல் தமிழக மக்களைப் பாதுகாக்க முடியும் என்று சொல்லுவது ஒரு ஏமாற்றுவித்தை என்று நான் குறிப்பிட விருமபுகிறேன்.



1984 மார்ச் 13] [திரு. இரா. கருப்பையா]

நம்முடைய மாநிலத்தின் தேவையை எடுத்துச் சொல்லி,
அதைப் பெறுவதற்கு, தமிழகத்திற்கு உரிய பங்கைப் பெறுவதற்கு
தொடர்ந்து வலியுறுத்திக்கொண்டு வருகிறோம் என்று சொல்
கிறார்கள். இப்படி வற்புறுத்திக்கொண்டே இருப்பதன் மூலம் நாம்
வற்புறுத்திக்கொண்டிருக்கலாம பாடிக்கொண்டிருக்கலாம், ஆடிக்
கொண்டும் இருக்கலாம்; ஆனால் மக்களைப் பாதுகாக்க முடியாது
ஆனால் நிதி அமைச்சரும் முதலமைச்சரும் என்ன நினைக்கிறார்
கள் என்று தெரியவில்லை. ஒரு வேளை மெஸ்மரிசம் ஏதாவது
செய்து, மத்திய சர்க்காரின் போக்கை, கொள்கையை மாற்ற
ஏதாவது வழிமுறைகளை உருவாக்கப் போகிறார்களா என்பது
நமக்குத் தெரியாது. அந்த அடிப்படையில் இன்றையதினம்
இந்த நிதிநிலை அறிக்கை என்பது-இந்த நாட்டினுடைய முதலாளி
கள் பொருளாதாரத்தைப் பாதுகாப்பதன் மூலம், அதற்கான
வழிமுறைகளைப் பின்பற்றுவதன் மூலம அவர்களைப் பாதுகாக்க
வேண்டுமென்ற கொள்கையில் இருக்கிற மத்திய சர்க்காரின்
கொள்கைகளுக்கு, இந்திராகாந்தி அம்மையாரின் கொள்கை
களுக்கு துணையாக இருப்பதன் மூலம் இந்த நாட்டு மக்களை
பாதுகாக்க முடியாது என்ற நிலைமையை தெளிவாகப் புரிந்து
கொண்டு, அதற்கு ஒரு மாற்று வழி காணும் நிலைமை இந்த
நிதி நிலை அறிக்கையிலே இல்லை என்பதைச் சுட்டிக்காட்ட
விரும்புகிறேன்.

அடுத்து, இந்த நிதி நிலை அறிக்கையிலே கூறியிருக்கும் கருத்துகளைப் பார்க்கும்போது, தமிழ்நாட்டில் அடிப்படையான தொழில்களைப் பெருக்குவதற்கு, விவசாய உற்பத்தியை அதிகரிப்பதற்கு ஏதாவது திட்டம் இருக்கிறதா என்பதைப் பார்க்க வேண்டும்.

நம்முடைய திட்டக் குழு தெள்ளிவாகக் கொள்கைகளை
வரையறுத்துக் கூறியிருக்கிறார்கள். தொழில் விவசாய உற்பத்தி
யைப் பெருக்குவதால் தான் செல்வத்தைப் பெருக்க முடியும்.
செல்வம் பெருகினால் இல்லாமையைப் போக்கமுடியும். ஆகவே
அந்த அடிப்படையில் இல்லாமையைப் போக்குவதற்கு இந்த
நிதிநிலை அறிக்கை உருவாயிருக்கிறது என்பதைப் பார்க்க
முடியுமா? திட்டத்திலே நிதிநிலை ஒதுக்கீட்டில் விவசாய
உற்பத்தியை அபிவிருத்தி செய்வதற்கான முயற்சி, சமுதாய
செல்வத்தை அதிகரிக்கின்ற முறையில் இல்லை என்பதை
நான் குறிப்பிட விரும்புகிறேன். விவசாய உற்பத்தியை அதிகரிக்க
திட்டங்களில் விவசாயிகளுக்கு ஊக்கம் அளிக்கும் முறையில்
நிலைமைகள் இல்லை. ஏற்கனவே விவசாயிகள் கடன்
பெற்றிருப்பதைப்பற்றி பல்வேறு சந்தர்ப்பங்களில் இந்த
மாமன்றத்திலே விவாதித்திருக்கிறோம். நம்முடைய மாண்புமிகு
முதல்வர் அவர்கள் கூட 1982 ஆம் ஆண்டு ஆளுநர் உரையின்
போது ரூ. 78 கோடிக்குக் கடனை அன்றைக்கு தள்ளுபடி செய்து

அறிவித்த நேரத்தில், சிறு விவசாயிகள் பெற்ற முழுக் கடனையையும் தள்ளுபடி செய்ய வேண்டுமென்று அனைத்துக் கட்சிகளும் கூறிய நேரத்தில் முதல்வர் அவர்கள் ஒன்றை அறிவித்தார்கள். இது முதலாண்டு, இன்னும் 5 ஆண்டுகள் இருக்கின்றன. இந்த ஐந்து ஆண்டுக் காலத்திற்குள் விவசாயிகள் பெற்ற ரூ. 240 கோடியையும் நாங்கள் படிப்படியாக தள்ளுபடி செய்வோம் என்று அறிவித்தார்கள். அந்த ஆண்டுக்குப் பிறகு எந்த அறிவிப்புகளும் கொடுக்கவில்லை என்பது வேதனைக்குரிய விஷயமாகும்.

**(பிற்பகல் 12·20)**

அதுமட்டுமல்ல, விவசாயிகளின் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்காக விவசாய உச்ச மட்டக் குழு ஒன்று அமைக்கப்பட்டது. அப்போது அந்தக் குழு இரண்டு வருட காலத்தில் எல்லா இடங்களுக்கும் சென்று, பல்வேறு மாவட்ட நிலைமைகளை ஆராய்ந்து பரிந்துரைகளை அனுப்பியிருக்கிறார்கள். விவசாயக் கடன்களை தீர்க்க 'மாஸ்டர் பார்முலா' என்ற முறையில் 4-ல் ஒரு பங்கை, கடனை செலுத்திவிட்டால் வட்டி, அபராத வட்டி ஆகியவைகளை தள்ளுபடி செய்து ஒரு குறிப்பிட்ட நேரத்தில் கடனை செலுத்தும் முறையில் செய்தார்கள். சிறு விவசாயிகளுக்கு நிவாரணம் கொடுக்க வேண்டுமென்று பல்வேறு பரிந்துரைகளை அவர்கள் கூறினார்கள். அவைகள் அனைத்தும் நிறைவேற்றப்பட்ட நிலையில் இன்று இல்லை. விவசாயிகள் உற்பத்தி செய்த பொருள்களுக்கான விலை பற்றியும் ஏற்கனவே குறிப்பிடப்பட்டிருக்கிறது. அந்த விவசாயிகளை அதிலிருந்து பாதுகாக்கவும், மீட்கவும், விவசாய உற்பத்தியில் ஊக்கம் கொடுப்பதற்காகவும் ஒன்று அவர்கள் பெற்றிருந்த கடனைத் தள்ளுபடி செய்தும், இரண்டு உற்பத்தி செய்கின்ற பொருள்களுக்கு கட்டுப்படியாகக் கூடிய விலையும் கொடுக்க வேண்டும். ஆக இரண்டு காரியங்களையும் நிறைவேற்ற அரசாங்கம் இன்று தவறியிருக்கிறது. மூன்றாவதாக நீர்ப்பாசன வசதிகள், இரண்டு ஆண்டு வறட்சியும், இந்த ஆண்டு வெள்ளமும். தொடர்ச்சியாக காலத்தில் மழை பெய்யவில்லை. அதன் காரணமாக காலம் தவறி விளைவிக்கப்பட்டது. காலம் தவறி பெய்த மழையும், வெள்ளமும், அவைகளை அழித்துவிட்டது. ஆகவே அந்த முறையில் இன்று மிகப் பெரிய சேதங்களுக்கும் கொடுமைகளுக்கும் ஆளாகியிருக்கிறார்கள் தமிழக விவசாயிகள். அவர்களைப் பாதுகாக்க வேண்டுமென்பது ஒரு புறம், நம்முடைய அடிப்படைக் கடமை. பயிர் செய்வதற்கு ஊக்கம் அளிக்கும் விதத்தில் திட்டங்கள் இல்லை. சாகுபடி செய்வது, 50 இலட்சம் டன் நெல் உற்பத்தி என்றும், அடுத்த ஆண்டு 92 இலட்சம் என்றும் திட்டம் இடப்பட்டிருக்கிறது. எப்படி நிறைவேற்றப் போகிறீர்கள் என்பது தான் என்னுடைய கேள்வி. வெள்ளம் வருவதைப் பற்றிச் சொல்கிறார்கள் வெள்ளம் வந்துவிட்டது என்பதற்காக எல்லோரும் வேதனைப்



படுகிறோம். அதன் காரணமாக ஏற்படுகின்ற கொடுமைகள் சேதங்கள் யாராக இருந்தாலும் சரி, அவர்கள் இன்றையதினம் ரத்தக் கண்ணீர் வடித்துக் கொண்டிருக்கிறார்கள். 2 ஆண்டுகளுக்கு ஒரு முறை, 3 ஆண்டுகளுக்கு ஒரு முறை வருகிறது என்பது அமைச்சர்களுக்கும், அதிகாரிகளுக்கும், அரசியல்வாதிகளுக்கும் தெரியும், ஆனால் இந்த வெள்ளம் வந்ததற்குப் பிறகு ரூ. 200 வைத்துக்கொள், இந்தா வேட்டி சேலை வைத்துக்கொள் வேறு ஏதாவது நிவாரணம் வைத்துக்கொள் என்று சொல்கின்ற வழக்கம் இருக்கிறது. அது மட்டும் விவசாயத்தை பாதுகாக்க முடியுமா? வெள்ளம் வருகின்றபோது, அடிப்படையான கண்மாய்கள் பல நூற்றுக்கணக்கான ஆண்டுகளாக பழுதுபார்க்கப்படாமல் இடிந்து இருக்கிறது. கரைகள் உடைந்துபோய் இருக்கிறது. வாய்க்கால்கள் மணல் மேடிட்டு இருக்கிறது அவைகள் சரியாக பராமரிக்கப்படாமல் இருக்கிறது. அனைத்தையும் சீர்படுத்துவதற்காக 'மாஸ்டர் பிளான்' என்ற மாதிரி ஒரு திட்டத்தை தமிழகத்திலே உருவாக்க வேண்டும். அதைப் பற்றி 77-லே பேசினார்கள். பிறகு 84 வந்த பிறகு இன்னும் கொஞ்சம் பேசினோம். இன்னும் 15 நாட்கள் கழித்து மறந்து விடுவோம். நம்மிடத்திலே பட்ஜெட்டிலே ஒதுக்குவதற்குப் பணம் கிடையாது. இருந்தால்தானே அதைப்போய் செய்ய முடியும். இதைச் செய்ய முடியும். இருப்பதற்குள்ளே செய்ய வேண்டும். திரும்பி 2, 3 ஆண்டுக்காலம் கழித்து மீண்டும் வெள்ளம் வந்ததற்குப் பிறகு நாம் ஏதாவது செய்வோம். எனவே ஒவ்வொரு ஆண்டும் பட்ஜெட்டிலே 10 கோடி அல்லது 15 கோடி என்று பணம் ஒதுக்கீடு செய்து இந்தமாதிரியான வெள்ளத் தடுப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். கண்மாய்களைப் பழுதுபார்ப்பது வடிகால்களை செப்பனிடுவது போன்றவைகளைச் செய்யவும் அவைகளை முறையாக அமைப்பதற்கும் வேண்டிய முறையில் வெள்ளம் வருகின்ற காலங்களில் தண்ணீரை முறைப்படுத்தி அனுப்பக்கூடிய முறையில் அதற்குத் தேவையான வழிவகைகளை உருவாக்குகிற முறையில் ஒரு மாஸ்டர் பிளான் உருவாக்க வேண்டும். இதை உருவாக்குவதற்கு நம்மிடம் அதிகாரிகள் இல்லையா? நம்மிடம் திறமையான அதிகாரிகள் இருக்கிறார்கள். ஏற்கனவே காவிரி பேசின் தஞ்சாவூர் சம்பந்தமாக 1921 ஆம் ஆண்டு ஒரு கமிட்டிப் போட்டு தஞ்சாவூர் ஜில்லாவிலே வரக்கூடிய நீரை தடுப்பதற்கு என்னென்ன முறைகளை நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்பது சமபந்தமாக ஒரு ரிப்போர்ட் கொடுக்கப்பட்டு இருக்கிறது. அது இன்னும் அப்படியே அறையிலே இருக்கிறது. அதை இன்றைக்காவது அமைச்சர் அவர்கள் எடுத்துப் பார்க்க வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன். அந்த அடிப்படையில் அதற்கான அடிப்படையான நடவடிக்கைகளை எடுப்பதற்கு இந்த பட்ஜெட்டிலே ஒரு 20 கோடி ரூபாய் நீங்கள் ஒதுக்கியிருந்தால் நிச்சயமாக நாம் பெருமைப்

படமுடியும். எதிர்காலத்தில் தமிழக மக்களை இந்த வெள்ளக் கொடுமைகளில் இருந்து பாதுகாப்பதற்கும், விவசாயிகளை பாதுகாப்பதற்கும உணவு உற்பத்தியைப் பாதுகாப்பதற்கும் நாம் நடவடிக்கைகளை எடுத்திருந்தால் பெருமைப்படமுடியும். ஆனால் அதற்கான முறையிலே எந்தவிதமான ஒதுக்கீடும் செய்யப்படவில்லை என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அடுத்து இந்த உணவு உற்பத்தியைப் பெருக்குவது சம்பந்தமாக 95 லட்சம் டன் என்ற அளவில் வைத்திருக்கிறார்கள். இதை எப்படி நிறைவேற்றப்போகிறோம்? நான் கேட்கிறேன். இந்த வருஷம் முழுமையாகப் போய்விட்டது. அடுத்து ஆண்டு இதை நிறைவேற்றுவதற்கு இந்த பட்ஜெட்டிலே என்ன நிதி ஒதுக்கி வைத்திருக்கிறார்கள் என்று நான் கேட்க விரும்புகிறேன். அரசாங்கம் சொல்லியிருப்பது என்னவென்றால் விதை கொடுப்பது, விதைப் பண்ணை, உழவர் பயிற்சி நிர்ணயம் என்று சொல்லி, இதற்கேல்லாம் மொத்தமாகப் பார்த்தால் 57 லட்சம் ரூபாய் ஒதுக்கியிருக்கிறார்கள். இதன் மூலமாக 95 லட்சம டன் உணவு உற்பத்தியை பெருக்குவோம் என்றால் அது மந்திரத்தால்கூட நடக்காது என்பதைத்தான் நான் குறிப்பிட விரும்புகிறேன். ஆகவே எப்படியோ இருக்கிறது, எப்படியோ வளர்கிறது, எப்படியோ கணக்குக் காட்டுகிறீர்கள், எப்படியோ நடக்கிறது என்ற முறையிலேதான் இவைகள் இருக்கின்றன என்பதை நான் குறிப்பிட விரும்புகிறேன்.

அடுத்து நான் சொல்ல விரும்புவது, தொழில் உற்பத்தி சம்பந்தமாக இன்றையதினம் நம்முடைய அரசாங்கம் தொழில் வளர்ச்சிக்காக ஒதுக்கியிருக்கக்கூடிய புதிய திட்டங்கள் எதுவும இல்லை. 1981 ஆம் ஆண்டு அறிவிக்கப்பட்ட புகளூர் காகித தொழிற்சாலை, 1982 ஆம் ஆண்டு அறிவிக்கப்பட்ட மாயனூர் தொழிற்சாலை, அதற்குப் பிறகு வேறு எதுவும் கிடையாது. மத்திய அரசாங்கமும் செய்யாது நமக்கு இருக்கிற நிதி ஆதாரத்தை வைத்துக்கொண்டு ஓரளவிற்கு இந்தத் திட்டத்திலே ஏதாவது தொழிற்சாலைகளை நாம் உருவாக்கலாம என்றால், அதற்கான வழியும் இல்லை. புதிய தொழிற்சாலைகள் இல்லை என்றாலும், இருக்கின்ற தொழிற்சாலைகளை மூடுகின்ற நிலைமையை நாம் பார்க்கிறோம. கோயம்புத்தூரிலே 6 பஞ்சாலைகள் மூடிக்கிடக்கின்றன. சென்னையிலே பல்வேறு தொழிற்சாலைகள் இன்றைய தினம் மூடிக்கிடக்கின்றன. அரசாங்கம் பின்தங்கிய ஜில்லா என்று அறிவிக்கிறார்கள், தொழில் துறையிலே. அதனுடைய நோக்கம் என்ன என்றால், முதலாளிகள் கொள்ளை அடிப்பதற்குத்தான். இங்கே இருக்கக்கூடிய தொழிற்சாலைகளை மூடுகிறான். அசோக் லேலன்டை மூடிவிட்டு, அங்கே போய் தர்மபுரியிலே போய்



வைக்கிறான். எதற்கு? அதனால் சர்க்கார் அவர்களுக்குக் கொடுக்கக் கூடிய மானியம், கடன் உதவி போன்றவைகளை பெற்று அவர்கள் லாபம் பெறுகிறார்கள். இங்கே கொடுக்கிற சம்பளம் கூட அந்தத் தொழிலாளர்களுக்கு கொடுக்க வேண்டாம். ஆகவே இது தொழிலாளர்களை சுரண்ட சர்க்காரை ஏமாற்றி, இந்த ஆதாயங்களைப் பெற்று தங்களுடைய கொள்ளை லாபத்தை பெருக்கிக்கொள்வதற்கான முறையிலே, இன்றைய தினம் நிலைமைகள் இருக்கின்றன. சென்னையிலே மூடப்பட்டு இருக்கக்கூடிய தொழிற்சாலைகள், உதாரணமாக 'எல்போ' போன்ற தொழிற்சாலைகள் என்ஜினியரிங் தொழிற்சாலைகள் மூடப்பட்டு இருக்கின்றன, என்பதை நான் குறிப்பிட விரும்புகிறேன். ஈரோட்டிலே தொழில் தாவாக்களைத் தீர்ப்பது சம்பந்தமாக அரசாங்கத்தினுடைய கொள்கை என்ன? சிம்சனிலே ஏதோ பேசினார்கள் பி அண்ட் சி மில் இன்றைக்கு அப்படியே இருக்கிறது. ஈரோடு கந்தசாமி தொழிற்சாலை, கரூரிலே இருக்கக்கூடிய நூற்பாலை. 2 மாதங்களாக 60-ஆம் நாள் வேலை நிறுத்தம் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது இட்படி பல்வேறு போராட்டங்கள் நடைபெற்று வருகின்றன. ஆகவே இந்த அரசாங்கம் எந்தத் தொழிற்தகராறையும் தீர்க்கவில்லை. வேலை நிறுத்தம செய்தால் அரசாங்கத்தைக் கவிழ்க்கப் பார்க்கிறார்கள் என்று பேசுகிறார்கள். ஒரு தொழிலாளி வேலை நிறுத்தம் செய்து இந்த அரசாங்கம் கவிழ்ந்து போய்விடும் என்றால், அதைப்பற்றி என்ன நினைப்பது என்பது தான் என்னால் புரிந்துகொள்ள முடியவில்லை. ஒரு தொழிற்சாலையிலே வேலை நிறுத்தம் என்றால், போச்சு போச்சு என்ற முறையிலே அவைகளை உடைப்பது வேலை நிறுத்தப் போராட்டங்களைத் தடுப்பது போன்ற கொள்கையை இன்றைய தினம் கையாள்கிறார்கள். மாதவரத்தில் பால் பண்ணை தொழிற்சாலை. இன்றையதினம் சென்னை உயர் நீதி மன்றம் ஒரு தீர்ப்பு கொடுத்திருக்கிறது. அதை நம்முடைய தொழில அமைச்சர் அவர்கள் வாங்கி பத்திரமாக வைத்துக்கொண்டு இருக்கிறார்கள். அரசாங்கத்திற்கு இருக்கக்கூடிய அதிகாரத்தைக் கொண்டு இன்றையதினம் உயர்நீதிமன்றத்தினுடைய தீர்ப்பைக் கூட மதித்து நடப்பதற்கான நிலையில் இல்லை என்பதைக் குறிப்பிட விரும்புகிறேன்.

(பிற்பகல் 12-30.)

அடுத்து நீங்கள் அறிவித்திருக்கக்கூடிய திட்டம் பயிர்—இன்ஷ்யூரன்ஸ் திட்டம், உழவுத் தொழிலாளர்கள் பாதுகாப்புத் திட்டம்—நான் கேட்கிறேன், இதிலே வார்த்தைகளிலே பார்த்தால் மிக அழகாக இருக்கிறது. உழவுத் தொழிலிலே இருப்பவர்கள், மாவட்ட ஆட்சித் தலைவரிடத்தில் பதிந்துக்கொண்டு, அதற்குப் பிறகு அவர்களுக்கு, இயற்கையின் இடர் பாடுகள்

காரணமாக இழப்பு ஏற்பட்டால் உதவி செய்யப்படும்; வேலை நேரத்தில் செத்தால், அரசு உதவித் தொகை என்று இப்படி அறிவித்திருக்கிறீர்களே. இதுபயன் தருமா, விவசாயத் தொழிலாளிகளில் வயல்காட்டில் சாகிறவர்கள் எவ்வளவு பேர்கள் இருப்பார்கள்? ஆகவே, இப்படிப்பட்ட இழப்புகளை ஈடுசெய்வதற்கு இந்த திட்டம் என்கிற முறையிலே அழகான முறைகளிலே வார்த்தைகளை சேர்த்து கோர்த்து அமைத்திருக்கிறீர்கள்.

பயிர் பாதுகாப்புத் திட்டம என்று சென்ற ஆண்டே அறிவித்து அமல் செய்யப்பட்டிருக்கிறதே, அந்த பயிர் பாதுகாப்புத் திட்டம எந்த அளவுக்கு விவசாயிகளுக்கு நன்மை செய்திருக்கின்றது என்று பார்க்க வேண்டாமா? கிடைத்துள்ள நன்மைகளை அறிவிக்க வேண்டாமா?

அதேபோல தமிழ்நாட்டில் முதியோர் உதவித் திட்டம அமலில் இருக்கிறது. தமிழ்நாட்டிலே தொடர்ச்சியாக 3 ஆண்டுகாலமாக ஒரே ஒரு புள்ளி விவரம் மாறாமல் அப்படியே இருக்கிறது. அது இந்த முதியோர் உதவித் திட்டம் தான். ஒரு லட்சத்து 99 ஆயிரம் பேர்களுக்கு இந்த முதியோர் உதவி திட்டம் கொடுக்கப்படுவதாகச் சொல்லப்படுகிறது. இதில் யார் இருக்கிறார்கள்? விவசாயத் தொழிலாளிதான் இருக்கிறார். அரிசன குடிமகன்தான் இருக்கிறார். தமிழ்நாட்டில் இருக்கக் கூடிய விவசாயத் தொழிலாளர்களின் எண்ணிக்கையை எடுத்துக் கொண்டால் 28 லட்சம் பேர் இருக்கிறார்கள். இந்த முதியோர் உதவித் திட்டத்திலே ஆண்டுக்கு ஒரு லட்சம் பேரை அதிகமாக்கினால் கூட, அவர்கள் நல்ல முறையிலே, நிம்மதியான முறையிலே தன்னுடைய வயதான காலத்திலே, உழைப்பதற்கு சக்தியற்ற காலத்திலே, அவர்கள் வாழ்க்கையை நடத்த முடியும. ஆனால் அதைக் கூடச் செய்வதற்கு இன்றையதினம் அரசாங்கம் முன் வராமல் இருக்கிறது. (மணியடிக்கப்பட்டது)

அடுத்து தமிழ்நாட்டில் இப்போது சத்துணவுத் திட்டம் அமலில் இருக்கிறது. சத்துணவு போடுவதைப் பற்றி குறையாக பேசுவதாக தயவுசெய்து, யாரும் நினைக்க வேண்டாம். இன்றைக்கு அது நம்முடைய நாட்டிலே இருக்கக்கூடிய அடிப்படையான வறுமையை போக்கிடும் என்று சொன்னால், எல்லோருக்குமே கூட வைத்து நடத்துங்கள் என்று சொல்வேன். ஆனால், கிராமப்புறங்களில் இருக்கிற ஏழை எளிய மக்கள், தங்களுடைய குழந்தைகளுக்கு பாதுகாப்பான உணவளித்து, பள்ளிக்கூடத்திற்கு அனுப்புவதற்கு ஏற்ற சூழ்நிலையில் இல்லாமல் இருக்கிறார்கள் என்ற காரணத்தாலே, பள்ளிக்கூடத்தில் பிள்ளைகளுக்கு சத்துணவு போட்டால், பள்ளிக்கூடங்களுக்குப் போகிற பிள்ளைகளின் எண்ணிக்கை அதிகமாகிறது என்ற முறையிலே, இந்த திட்டப் கொண்டு வரப்பட்டதாகச் சொல்கிறோம்



அப்படி என்றால் கிராமப்புற விவசாயிகளுடைய அடிப்படையான பொருளாதார நிலையை மாற்றாமல், எத்தனை நாளைக்கு, சத்துணவு போட்டுக் கொண்டிருக்க முடியும்? என்று நான் கேட்க விரும்புகிறேன்? சென்ற ஆண்டு 130 கோடி, இந்த ஆண்டு 150 கோடி அடுத்த ஆண்டு 200 கோடி என்று போனால்; இதற்காக நிதி ஆதாரத்தை தேடுவதற்கு எங்கே போவது, எப்படி பார்ப்பது, என்ன ஏற்பாடு செய்வது என்றெல்லாம் வரும். ஏற்கனவே பேரறிஞர் அண்ணா அவர்கள் காலத்தில், ஒரு ரூபாய்க்கு ஒரு படி அரிசி திட்டம அறிவிக்கப்பட்டது. பிறகு என்ன ஆயிற்று? அவரை நான் குறைவாக சொல்வதற்காக சொல்லவில்லை. சில திட்டங்கள் அப்படி நிறைவேற்ற முடியாதவை. அதைப்போல நிறைவேற்ற முடியாத திட்டம் என்பதைத்தான் குறிப்பிட விரும்புகிறேன். இருக்கிற விலைவாசி ஏற்றத்தில், இது எப்படி தொடர்ந்து நீடிக்க முடியும்? எண்ணிப் பார்க்க வேண்டும்.

மத்திய அரசாங்கம் 20 சதவீதம் விலையை அரிசிக்கு உயர்த்தியிருக்கிறார்கள். அதற்காக, நியாய விலைக்கடைகளில் அரிசி கிடைக்க வேண்டும் என்பதற்காக, 100 கோடி ரூபாயை நாம் நம்முடைய மாநிலத்தினுடைய நிதியிலிருந்து, இதனால் ஈடு செய்து கொடுக்க வேண்டிய நிலை ஏற்பட்டிருக்கிறது. எப்படி கொடுப்பது? அதற்கு நிதி ஆதாரத்தை எப்படி பெறுவது என்பதெல்லாம் தொடர்ச்சியாக வரக்கூடிய வேறு பிரச்னைகள்.

ஆகவேதான், அடிப்படையாக கிராமப்புறங்களில் இருக்கிற விவசாயத் தொழிலாளர்களுடைய வாழ்க்கையில் மறுமலர்ச்சி ஏற்படுத்துவதற்கான, தொழில்களை ஊக்குவிப்பதற்கான, திட்டங்களை உருவாக்குவதன் மூலமாக, ஒரு சரியான பயனை, பொருளாதார மாற்றத்தை ஏற்படுத்த முடியும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து கைத்தறி சம்பந்தமாக ஒன்றைச் சொல்வதற்கு முன்
னால், கிராமங்களிலே சத்துணவு போடுகிறோம்; ஏற்கெனவே
நியாய விலைக் கடைகளில் 20 கிலோ அரிசி கொடுத்து வந்தீர்
கள். அதை கடந்த ஒரு ஆண்டுக்காலமாக 5 கிலோவாக
குறைத்திருக்கிறீர்கள். 15 கிலோ அரிசியை பகிரங்க மார்க்
கெட்டிலே வாங்க வேண்டியிருக்கிறது. அது மட்டும் அல்ல,
1 கிலோ அரிசிக்கு 3 ரூபாய் அதிகமாக கொடுக்க வேண்டிய
நிலையும் இருக்கிறது. ஒரு கோடியே 9 லட்சம் நியாய விலைக்
கடைகள் இருக்கின்றன. 15 கிலோ அரிசியை பகிரங்க மார்க்
கெட்டிலே வாங்குவதன் மூலமாக 45 ரூபாய் இழப்பு ஏற்படுகிறது
மாதம் ஒன்றுக்கு. ஒரு குடும்பத்திலே இரண்டு குழந்தைகள்
இருக்கிறார்கள் என்றால் 45 பைசாவுக்கு சத்துணவைக் கொடுத்து

விட்டால் அது ஒரு பெரிய நிவாரணம் என்ற பெயரால் நாம் பேசிக்கோண்டிருக்கிறோம். ஆனால் நியாயவிலைக் கடைகளிலே 'அரிசியை முழுமையாகக் கொடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

கைத்தறித் துணிகள் தேங்கிக் கிடக்கிற காரணத்தினால் இன் றைக்கு பிரதய சங்கங்கள் மூடப்பட்டு அவர்களுக்குப் பணம் கொடுக்கப்படாமல் கைத்தறித் தொழிலாளர்கள் மிகவும் பாதிக் கப்பட்டிருக்கிறார்கள். அதைப் பற்றி கவனித்து நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

ஆகவே இன்னும் பல்வேறு பிரச்சினைகள் பல்வேறு பகுதி களிலே தொழிலாளர்கள், உழைக்கக்கூடிய மக்களுடைய நலன் பாதிக்கப்படக்கூடிய முறையிலே அரசாங்கத்தின் கொள்கை இருக்கிறது. இந்த நிதிநிலை அறிக்கையை இங்கே வைக்கக் கூடிய நேரத்திலே சென்ற ஆண்டு நம்முடைய மாநிலத்தினுடைய உற்பத்தி எந்த அளவுக்கு இருந்தது, மக்களுடைய வாங்கும் சக்தி எந்த அளவுக்கு இருந்தது, அதை மேலும் பெருக்கக்கூடிய முறையிலே விவசாய உற்பத்தியைப் பெருக்குவதற்காக, தொழில் உற்பத்தியைப் பெருக்குவதற்காக வேலையில்லாத் திண்டாட் டத்தைப் போக்குவதற்காக விலைவாசிகளைக் கட்டுப் படுத்துவதற்காக இவற்றிற்கு அடிப்படையான ஊற்றாக காரணமாக இருக்கக்கூடிய மத்திய அரசாங்கத்தின் கொள் கையை மாற்றக்கூடிய வகையிலே ஒரு நிலைமையை உரு வாக்குவதற்கான முறையிலே இன்றையதினம் இந்தியா முழுமை யும் இருக்கக்கூடிய பல்வேறு மாநிலங்களிலே இருக்கக்கூடியவர் கள், மேற்குவங்கம், ஆந்திரம், காஷ்மீர் போன்ற மாநிலங் களில் இருக்கிற முதலமைச்சர்களும் அங்கே இருக்கிற எதிர்க் கட்சிகளும் சேர்ந்து ஒரு சரியான கொள்கையை மத்திய அரசாங்கம் கடைப்பிடிக்கக்கூடிய முறையிலே மக்களைத் திரட்டி எடுத்துள்ள நடவடிக்கைகளை ஒட்டி செல்லாமல் மாநிலத்திலே மக்களைப் பாதுகாக்கின்ற நிலையில் இருக்கின்ற இந்த அரசு தடம்புரண்டு சென்றதன் காரணமாக இந்த நிலைமை ஏற்பட்டிருக்கிறது. மக்களைப் பாதுகாப்பதற்காக சரியான நடவடிக்கைகளை இந்த அரசு எடுக்க வேண்டும் என்றும் இந்த பட்ஜெட்டிலே உயர்த்தியிருக்கிற 'வரிகளைக் கைவிட வேண்டுமென்றும் கேட்டுக்கொண்டு என்னுடைய உரையை டித்துக்மு கொள்கிறேன், வணக்கம்.



## 4. அறிவிப்பு.

### பேரவை அலுவல்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு. இன்று (13-3-1984) கூடிய அலுவல் ஆய்வுக் குழுவில் எடுக்கப்பட்ட 'முடிவுகளுக்கு இணங்கப் பேரவையின் நிகழ்ச்சிகளில் கீழ்க்கண்ட மாறுதல்கள் செய்யப்பட்டுள்ளன என்பதைப் பேரவைக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

| | |
|---|---|
| 17-3-1984 (சனிக்கிழமை) | 1—நில்வரித்துறை.<br>41—இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு.<br>46—இழப்பீடுகளும் ஒதுக்கீடுகளும்.<br>11—மாவட்ட நிர்வாகம். |
| 19-3-1984 (திங்கட்கிழமை) | 4—பொது விற்பனைவரியும் ஏனைய வரிகளும் தீர்வைகளும்.<br>நிர்வாகம். |
| 20-3-1984 (செவ்வாய்க்கிழமை) | காலை—ஏற்கெனவே அறிவித்தபடி<br>மாலை 4-00 மணி-வெள்ளத்தால் ஏற்பட்ட பாதிப்புகள் பற்றிய அறிக்கைகள் மீதான விவாதம். |
| 21-3-1984 (புதன்கிழமை) | 1. ஏற்கெனவே அறிவித்தபடி.<br>2. ஏற்கெனவே அறிவித்தபடி.<br>3. ஏற்கெனவே அறிவித்த மானியக் கோரிக்கைகளுக்குப் பதிலாகக் கீழ்க்கண்ட மானியக் கோரிக்கைகள் எடுத்துக் கொள்ளப்படும்.<br>22—கால்நடை வளர்ப்பு<br>30—சமூக நலன். |

ஏற்கெனவே அறிவிக்கப்பட்ட மற்ற மானியக் கோரிக்கைகளில் மாற்றம் இல்லை.

## 3. வரவு-செலவுத் திட்டம் 1984-85 பொது விவாதம்—தொடர்ச்சி

திரு. என். சங்கரய்யா : துணைத் தலைவர் அவர்களே, 1984-85 ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்டம் குறித்து மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் ஏற்கனவே எங்களுடைய உறுப்பினர்கள் பல்வேறு அம்சங்களைப்பற்றி தங்களுடைய கருத்துக்களைத் தெரிவித்து இருக்கிறார்கள், அதையொட்டி இந்த வரவு-செலவுத் திட்டம் குறித்து என்னுடைய கருத்துக்களையும் தெரிவிக்க விரும்புகிறேன்.

(மாண்புமிகு மாற்றுத் தலைவர் தலைமை.)

அதற்கு முன்னால் ஒரு அவசரமான பிரச்சினையைப்பற்றி
யும் இங்கே நான் முதலிலே குறிப்பிட விரும்புகிறேன். நேற்
றைய தினம் மதுரை நகரத்திலே வெள்ளம் பாதிக்கப்பட்ட
இடங்களை நான் சுற்றிப்பார்த்து அங்கே உள்ள மக்களின்
மத்தியில் பிரச்சினைகளைப் பேசிக்கொண்டிருந்த நேரத்திலே
அங்கே பல பள்ளிக்கூடங்களிலே ஏராளமானவர்கள் அகதிகளாக
வைக்கப்பட்டிருக்கிறார்கள். அவர்களுக்கு மேற்கொண்டும் தேவை
யான நாட்களுக்கு உணவு முதலியவற்றை வழங்குவதற்கு,
அரசாங்கம் உத்திரவிட வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்
கிறேன். ரெவின்யூ அதிகாரிகளின் மூலம் கணக்கெடுக்கப்பட்டு
அவர்களுடைய இழப்பீடுகளை அறிந்து அவர்களுக்குக் கொடுக்க
வேண்டிய ஈட்டுத் தொகையை உடனடியாகக் கொடுப்
பதற்கும் அரசு நடவடிக்கைஎடுக்கவேண்டுமென்று நான் கேட்டுக்
கொள்கிறேன்.

(பிற்பகல் 12-40)

இதே நேரத்திலே நேற்றையதினம் அங்கே இருக்கும் போதே
போலீஸ் அதிகாரிகள் மூலம் மக்களுக்கு என்ன விளம்பரப்படுத்தப்
பட்டது. என்றால் மறுபடியும் வைகை அணையிலிருந்து தண்
ணீர் திறந்து விடப்பட இருக்கிற காரணத்தினால் 6 அடி உயரத்
திற்கு மேல் புதிதாக வைகையிலிருந்து தண்ணீர் வரும் ஆகவே
மக்கள் ஜாக்கிரதையாக இருங்கள் என்று அங்கே மக்கள் மத்தியில்
விளம்பரம் செய்யப்பட்டது. இப்படிப்பட்ட நிலைமை தொடர்ந்து
ஏற்பட்டு இருக்கும் காரணத்தினால் கடந்த பல ஆண்டுகளாக
இங்கே நானும் மற்றும் பல உறுப்பினர்களும் மதுரை
யினுடைய நகரத்தின் இரு புறங்களிலும் வைகை
ஆற்றின் பக்கம் ஒருதடுப்புச் சுவர் எழுப்பப்பட்டால்
இன்றைக்கு தொடர்ந்து பல வெள்ளக் காலங்களிலே பல
லட்சக்கணக்கான மக்கள் வாழக்கூடிய வீடுகளும்,
குடிசைகளும் பாதிக்கப்படுவதை தடுத்து நிறுத்த முடியும்.
அதை பொதுப்பணித்துறை மூலமாக ஒரு அவசரமான ஒரு





முடிவாக அரசு எடுத்து அங்கே மதுரை நகரத்தினுடைய மக்களை
பாதுகாக்கவேண்டும் என்று நான் இந்த நேரத்தில் கேட்டுக்கொள்ள
விரும்புகிறேன். அது பெரிய அளவில் செலவுஆகாது. ஆனால்
அவ்வாறு செலவு செய்யக்கூடிய தொகை மீண்டும்மீண்டும் மதுரை
நகரத்திலுள்ள லட்சக்கணக்கான மக்கள் வைகை ஆற்றின் இரு
புறங்களிலும் வாழக் கூடியவர்கள் அவர்களுக்கு இந்தத் தொல்லை
கள் ஏற்படுத்தப்பட்டு அரசாங்கத்திற்கு தொடர்ச்சியாக செலவு
ஏற்படுத்தப்பட்டு அதை தடுக்கக்கூடிய முறையில் இது வகை
செய்யும் என்ற காரணத்தினால் அதற்கு ஒரு முக்கியத்துவம்
கொடுத்து அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்
கொள்ள விரும்புகிறேன்.

அதே நேரத்திலே அங்கு இன்னும் ஒரு முக்கியமான பிரச்
சினை. அரசினுடைய பணம் செலவழிக்கப்பட்டு மதுரை வட
கரையில் ஒரு கழிவு நீர் ஏற்று நிலையம் அங்கு ஏற்பாடு செய்யப்
பட்டு அதற்கான இயந்திரங்களும் வாங்கப்பட்டு எல்லாவிதமான
ஏற்பாடுகளும் பூர்த்தி ஆகிவிட்டன. ஒரு மாதக் காலத்திற்கு
டிரையல் என்ற முறையில் பரிட்சார்த்தமாக அது சோதித்துப்
பார்க்கப்பட்டது. அதை நிர்வகிப்பதற்கு அதிகாரிகளும் ஊழியர்
களும் நியமிக்காத காரணத்தால் பல இலட்சக்கணக்கான மக்க
ளுக்கு கழிவு நீர் ஏற்ற வசதி கொடுக்கக் கூடிய அந்தத் திட்டம்
செயல் படாமல் இருக்கிறது. இதன் காரணமாக அங்கு ஏராள
மான தொல்லைகள் ஏற்படுகின்றன. மிக பிரமாண்டமான
அளவுக்கு கொசு உபத்திரவத்தினால் மதுரையில் உள்ள இலட்சக்
கணக்கான மக்கள் கஷ்டப்படுகிறார்கள். எனவே இது சம்பந்த
மாக திட்டத்தை நிறைவேற்றிவிட்டு அதை நிர்வகிப்பதற்கு
ஊழியர்களை நியமிக்காத காரணத்தால் தூங்கி இருக்கும் அந்தத்
திட்டத்திற்கு உயிர்கொண்டு வருவதற்கு உடனடியாக அரசு
நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

இதை கூறியதற்கு பிறகு இன்று இந்த வரவு-செலவுத்
திட்டம் பற்றி பல்வேறு தரப்பிலிருந்து பல கருத்துக்கள் இங்கே
கூறப்பட்டு இருக்கின்றன. நான் இங்கே முதலில் கூற விரும்பு
வது தமிழகம் இந்தியாவினுடன் ஒரு இணைக்கப்பட்ட ஒரு பகுதி
யாக நாம் வாழ்கிறோம். இந்த இந்திய தேசம் நீண்ட காலத்
திற்கு அடிமைப்பட்டு இருந்தது. வெள்ளைக்காரன் ஆட்சிக்
கிட்டே மாபெரும் போராட்டம் நடத்தி தன்னுடைய சுதந்திரத்
தைப் பெற்றது. ஆனால் இன்று அந்த சுதந்திரத்திற்கும்
அதனுடைய பொருளாதார வளர்ச்சிக்கும் ஏகாதிபத்தியத்
தினால் ஏற்படுத்தப்பட்டு இருக்கக் கூடிய ஆபத்தை நாம் தெளி
வாக உணர வேண்டும். அந்த ஏகாதிபத்தியத்தின் நெருக்கடி
யின் காரணமாக இந்தியாவுக்கு தெற்கே டிகோகாஷியா தீவிலே
அயல் நாட்டு ராணுவ தளம் அமைக்கக்கூடிய முயற்சியின் காரண
மாக இந்தியாவினுடைய சுதந்திரத்தை அதே நேரத்திலே

[திரு என். சங்கரய்யா] [1984 மார்ச் 13

இந்தியாவினுடைய மக்கள் நல வாழ்வுக்காக செலவழிக்க வேண்டிய ஆயிரக் கணக்கான ரூபாய்கள் தற்காப்பு வசதிகளுக்கு பயன்படுத்த வேண்டிய நிர்பந்தத்தை ஏகாதிபத்திய நாடுகள் இந்த நாட்டில் ஏற்படுத்திக் கொண்டு இருக்கிறார்கள். இந்த ஒரு சூழ்நிலை மட்டும் அல்ல. எங்களுடைய கட்சி உறுப்பினர்கள் ஏற்கனவே இங்கே வற்புறுத்தியதைப் போல உலக முதலாளித்துவ நெருக்கடியால் இந்தியா பாதிக்கிறது. இந்தியாவிலிருந்து ஏற்றுமதி செய்யக்கூடிய சரக்குகளுக்கு '' பிரைமரி கர்மாடிடிஸ் '' க்கு விவசாய விலை பொருட்களுக்கும் வெளி மார்க்கெட்டில் வேண்டும் என்றே விலையை குறைக்கிறார்கள். ஆகவே எவ்வளவு தான் ஏற்றுமதி செய்தாலும் அந்த அளவுக்கு அயல் நாட்டு நாணய செலாவணி நமக்கு கூடுதலாக கிடைக்காது அதே நேரத்தில் இந்தியாவுக்கு மேற்கத்திய நாடுகளிலிருந்து இறக்குமதி செய்யக் கூடிய இயந்திரங்களின் விலையை அவர்கள் உயர்த்தி விட்டார்கள். இதன் காரணமாக இந்தியப் பொருளாதாரம் பெருத்த நெருக்கடியில் சிக்கி இருக்கிறது.

அது மட்டும் அல்ல, இன்று ஏகாதிப்பத்தியம் இந்தியா போன்ற வளம் உள்ள நாடுகள் தொழில் வளர்ச்சி அடைந்தால் அவைகள் விவசாய வளர்ச்சிப் பெற்றால் இன்றைக்கு அதனால் தங்களுடைய ஆதிக்கத்திற்கு ஆபத்து ஏற்படும் என்ற காரணத்தினால் இந்தியா போன்ற நாடுகளின் பொருளாதார வளர்ச்சியை சீர்குலைக்க முயற்சிக்கிறார்கள். இப்படிப்பட்ட ஒரு பின்னணியில் அதனுடைய பாகமாக இருக்கக் கூடிய தமிழகத்தினுடைய வரவு செலவுத் திட்டத்தை நாம் பார்க்க வேண்டிய நிலைமை இருக்கிறது. இது மட்டும் அல்ல. இந்த பின்னனியில் தான் நம் உலக பொருளாதார நெருக்கடியையும் ஏகாதிபத்தியத்தினுடைய சதிகளையும் எதிர்த்து போராடுவதன் மூலமாக ஒரு உலக சமாதானத்தை பாதுகாப்பதன் மூலமாகத்தான் நம்முடைய நாட்டினுடைய சுதந்திரத்தையும், நம்முடைய நாட்டினுடைய சுயேச்சையான பொருளாதாரத்தையும் நாம் பாதுகாத்துக்கொள்ளக் கூடிய நிலையில் இருக்கிறோம். இதை நாம் கவனத்தில் வைத்துக்கொள்ள வேண்டும். இன்றைக்கு இந்த நாட்டில் பஞ்சாப் போன்ற மாநிலங்களில் மதத்தின் அடிப்படையாலே சிலர் வெறியை ஊட்டிய காரணத்தால் இந்த நாட்டு மக்களுக்கு ஏற்பட்டிருக்கிற அபாயத்தை பார்க்காமல் இருக்க முடியாது.

அதைப் போலவே, அஸ்ஸாமில் ஏற்பட்டிருக்கின்ற அந்த வெறி பிடித்த இயக்கங்களைப் பற்றியும் நாம் கவனிக்காமல் இருக்க முடியாது.

இதிலிருந்து நமக்கு ஏற்படுகின்ற படிப்பினை என்னவென்று பார்க்கும்பொழுது, தமிழ்நாடு அரசாங்கமானது இன்றைக்கு இந்த மாநிலத்தில் ஜாதி வெறியோ அல்லது மத வெறியோ



1984 மார்ச் 13] [திரு. என். சங்கரய்யா]

மக்களைக் கவ்விப் பிடிக்காத வகையில் பாதுகாக்க வேண்டிய பொறுப்பு இருக்கிறது ; அந்தப் பொறுப்பு இங்கே இருக்கின்ற அரசியல் கட்சிகளுக்கும் இருக்கிறது. ஏனென்றால், தேசத்தின் ஒற்றுமையைப் பாதுகாப்பதன் மூலம் தான் மக்களின் கவனத்தை உண்மையான பிரச்னைகளின் மீது திருப்ப முடியும். மத வெறியின் மூலமோ, ஜாதி வெறியின் மூலமோ உள் நாட்டுக் கலகங்களை ஏற்படுத்தி, நம் நாட்டின் ஜனநாயகத்தைச் சீர் குலைப்பதற்கு இன்றைக்கு ஏகாதிபத்திய சக்திகளும், இந்த நாட்டிலே உள்ள பிற்போக்கு சக்திகளும் முயற்சிக்கின்றன என்பதைக் கவனத்திற் கொண்டு நம் நாட்டின் இன்றைய அரசியல், பொருளாதார நிலைமைகளைப் பற்றி மதிப்பீடு செய்ய வேண்டிய சூழ்நிலையில் இருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அப்படிப் பார்க்கின்றபொழுது, எனக்கு முன்னால் பேசிய பல உறுப்பினர்கள் கூறியதைப்போனறு, மத்திய அரசாங்கத்தினுடைய கொள்கைகள் இன்றைக்கு இந்த நாட்டின் பெருளாதாரத்தை அடிப்படையிலே தீர்மானிக்கின்றன என்பதை நாம் கவனிக்க வேண்டும். இங்கே மாண்புமிகு நிதியமைச்சரவர்களுடைய உரையிலே அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள். அதிலே பார்த்தால், இந்த வறட்சி நிவாரணத்தைப் பொறுத்தவரையில் மட்டும் மாநில அரசாங்கம் 36.74 கோடி ரூபாய்களைக் கூடுதலாகச் செலவழித்திருக்கிறது. அதை மத்திய அரசாங்கம் ஈடு செய்யவில்லை. ஏன்? அதை இன்றைக்கு மாநிலத்தின் நிதியமைச்சரவர்கள் கடுமையான கேள்விக் கணையாகக் கேட்டிருக்க வேண்டாமா? 114.28 கோடி ரூபாய்களைச் செலவு செய்துவிட்டு அதில் 77.51 கோடி ரூபாய்களை மட்டும் இன்றைக்குக் கொடுத்து மீதியுள்ள 36.74 கோடி ரூபாய்களை மாநில அரசாங்கம் செலவழிக்க வேண்டிய நிலைமை ஏற்பட்டிருக்கிறது. இது எவ்வளவு பெரிய கடும் பளுவைச் சுமத்துகின்றது என்பதை நாம் பார்க்க வேண்டும்.

இந்த நிதி நிலை அறிக்கையிலே கொடுத்திருக்கின்ற விவரங்களின்படி பார்த்தால், இந்த வெள்ளச்சேதத்தின் பொழுது மாநில அரசாங்கமானது, மத்திய அரசாங்கம் கொடுத்ததைக் காட்டிலும் 22.54 கோடி ரூபாய்களைக் கூடுதலாகச் செலவழிக்க வேண்டிய சூழ்நிலை ஏற்படுகிறது.

ஆகவே, வறட்சியானாலும், வெள்ளமானாலும, மாநில அரசாங்கம் தன்னுடைய சொந்தப் பொறுப்பிலேதான் இதைச் சமாளிக்க வேண்டிய நிலைமை ஏற்படுகிறதே என்பதை எண்ணிப் பார்க்கும் பொழுது இது மிகவும் வருத்தப்படக் கூடியதாக இருக்கிறது. அதுமட்டுமல்ல, இது கண்டிக்கப்பட வேண்டியதுமாகும்.

[திரு. என். சங்கரய்யா] [1984 மார்ச் 13

இதன் காரணமாக, கல்கத்தாவில் கூடிய கட்சி மாநாட்டில் தெளிவான ஒரு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. இயற்கையின் சீற்றங்களினால், வறட்சியினால், வெள்ளத்தினால் ஏற்படும் பாதிப்பு களை முழுமையாக ஈடு செய்ய வேண்டிய பொறுப்பு மத்திய அர சாங்கத்திற்கு மட்டும்தான் உண்டு என்று அந்தத் தீர்மானத்தை நிறைவேற்றியிருக்கிறது. இந்த மாநில அரசாங்கமானது அந்தக் கூட்டத்தில் கலந்து கொள்வதற்கு ஆள் அனுப்பியிருந்தால் இன் றைக்கு நிதியமைச்சரவர்கள் தன்னுடைய உரையிலே 4-வது பாராவிலிருந்து 9-வது பாரா வரைக்கும் மாநில மத்திய உறவு களைப் பற்றிக் குறிப்பிட்டிருக்கிறார்களே, அந்தப் பாராக்களுக்கு புது வலு ஏற்பட்டிருக்கும்.

மாண்புமிகு நிதியமைச்சரவர்கள், திரு. நெடுமாறன் அவர்கள் பேசியபொழுது குறிப்பிட்டார்கள். நாங்களும், அந்தக் கொள் கையோடு இருக்கிறோம் என்று கூறினார்கள். நாங்கள் முதலி லேயே கேட்டோம். இந்த நாட்டிலுள்ள ஐந்து காங்கிரஸ் அல்லாத மாநில அரசுகள் கல்கத்தாவிலே நிறைவேற்றப்பட்ட பிரகடனத்தை ஆதரித்திருக்கின்றன. அவை அனைத்தும், வெள் ளம், வறட்சி ஆகியவற்றால் ஏற்படும் பாதிப்புகளைத் தங்க ளால் தாங்க முடியவில்லை, மத்திய அரசாங்கம்தான் பூரண மாக அதற்குப் பொறுப்பேற்க வேண்டுமென்று கூறின. ஆனால், தமிழ்நாடு அரசாங்கம் மட்டும், அந்த மாநாட்டிலே கலந்துக் கொள்ளவில்லை. அதற்கு என்ன காரணம்? இன் றைக்கிருக்கின்ற மத்திய மாநில உறவுகள் என்ற அடிப்படை யிலே பார்த்தால் நீங்கள் அதிலே பங்கெடுத்துக் கொண்டிருக்க வேண்டும். ஆனால் அவ்வாறு நீங்கள் அதில் பங்கெடுத்துக் கொள்ளாத காரணத்தால், இன்றைக்கு இந்தியாவிலேயே இந்த வலுவான கோரிக்கையை ஆதரிக்காத ஒரேயொரு காங்கிரஸ் அல்லாத அரசு தமிழ்நாட்டில் உள்ள இந்த அரசுதான் என்று குறிப்பிடும்பொழுது நான் மிகுந்த வேதனைப்படுகிறேன்.

மாண்புமிகு நிதியமைச்சரவர்கள் தன்னுடைய உரையிலே 5-வது பாராவிலே குறிப்பிட்டிருக்கிறார்கள். என்ன குறிப்பிட் டிருக்கிறார்கள் என்றால் "இந்தியாவை எல்லாவகைகளிலும் பாதுகாக்கின்ற பொறுப்பு மைய அரசையும், மக்களை எல்லா நிலைகளிலும் வாழ வைக்கின்ற பொறுப்பு மாநில அரசுகளை யும் சார்ந்தனவாக ஆகின்றன." என்று குறிப்பிட்டிருக்கிறார் கள். இது மிகத் தவறான அறிக்கை என்பது எங்கள் அபிப் பிராயம். அதன் மூலம், தமிழ்நாட்டிலுள்ள மக்களை எல்லா நிலைகளிலும் வாழ வைக்கின்ற பொறுப்பை ஒரு மாநில அரசாலே நிறைவேற்ற முடியாது. அதை நீங்கள் ஏற்று கொண்டீர்கள் என்றால் அது தாங்குதலுக்குள்ளாகும் ஒரு கூற்றாகும்.



1984 மார்ச் 13] [திரு. என். சங்கரய்யா]

(பிற்பகல் 12-50)

எப்படி அன்றைக்கு மாநில அரசால் மக்களை எல்லா வகையிலும் வாழ வைக்க முடியும்? ஆகவே நிதியமைச்சர் அவர்களின் உரையிலே குறிப்பிடப்பட்டிருப்பது உண்மை அல்ல என்று தெரிகின்றது. விலைவாசிகளைத் தீர்மானிப்பது நாம் அல்ல. மாநிலம் போடுகின்ற ஒரு திட்டம் 20 கோடிக்குப் போடப்படுகின்றது என்றால் 6 மாத காலத்திற்குள்ளாக விலை வாசி உயர்ந்து அத்திட்டத்தின் செலவு 25 கோடி உயருகின்றது என்று சொன்னால் எவ்வாறு மாநில அரசு தான் சொல்லக்கூடிய காரியங்களை நிறவேற்ற முடியும்.

எனவே இங்கே சில நண்பர்கள் குறிப்பிட்டது போல் நீங்கள் மென்மையான முறையில் மத்திய அரசின் மனம் புண்படாத வகை யில் அதாவது திரு. நெடுமாறன் அவர்கள் குறிப்பிட்டது போல் ஒரு முணுமுணுப்பு என்ற அளவுக்கு தான் பாராக்களை நீங்கள் எழுதி இருக்கிறீர்கள். அதுபற்றி உரத்த குரலில், இது பாதிக் கப்பட்ட மாநிலம் என்ற முறையில் மத்திய அரசு இதைச் செய்யவேண்டும் என்றும், அவ்வாறு செய்ய வேண்டியது அவர் களுடைய கடமை என்றும், கேட்பது நமது உரிமை என்றும் நீங்கள் சொல்லவில்லை. ஆகவே அது உங்களுக்கு மிகுந்த பலஹீனம் இருக்கிறது என்பதைத்தான் காட்டுகின்றது, ஆகவே உங்களுடைய இந்த நிர்ணயம் எவ்வளவு அபாயகரமானது என்பதை நாம் பார்க்க முடிகின்றது.

மார்க்ஸிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியைப் பொறுத்தவரையில் நான் ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். இந்தியாவின் எந்த ஒரு மாநில அரசாலும் இன்று விலைவாசியை கட்டுப்படுத்த முடியாது. எந்த ஒரு மாநில அரசாலும் இன்றைக்கு நாட்டில் இருக்கக்கூடிய மக்களுக்கு வேலைவாய்ப்பை முழுவதுமாக அளிக்க முடியாது. ஏனென்றால் அந்த அதி காரங்கள் மத்திய அரசிடம் குவிந்து கிடக்கின்றது. சர்வ தேச நிதி நிறுவனத்திடம் இருந்து கடன் வாங்குவது யார்? அந்த நிறுவனத்திடமிருந்து கடனை வாங்கி அந்தக் கடன்களுக்கு ஆயிரக்கணக்கான, கோடிக்கணக்கான பணத்தை வட்டியாகக் கொடுக்கவேண்டிய அளவுக்கு மாநில அரசுகளை சிக்க வைப் பது யார்? இந்திய மக்களின் தலையில் அந்தச் சுமையைத் தூக்கி வைப்பது யார்? மத்திய அரசு தான் சர்வதேச நிதி நிறு வனத்திடமிருந்து கடனை வாங்குகிறது. இரயில்வே துறைக் காக அவர்களிடமிருந்து கடன் வாங்குகின்றபோது இரயில்வே கட்டணத்தையும் குட்ஸ் கட்டணத்தையும் உயர்த்த வேண் டும் என்று அவர்கள் நிபந்தனை போடுகிறார்கள். அதே போன்று நீங்கள் எங்களிடத்திலே கடன் வாங்கும் போது உங் களுடைய நாட்டிலே உள்ள நியாய விலைக்கடைகளில் மக்களுக்கு

[திரு. என். சங்கரய்யா] [1984 மார்ச் 13

மானியம் கொடுக்கக்கூடாது. என்ன விலையில் கொள்முதல்
செய்கிறீர்களோ, அதற்கு மேல் என்ன செலவானாலும் அவற்றை
எல்லாம் மக்களிடத்திலிருந்து தான் நீங்கள் வசூலிக்க
வேண்டும் என்று சர்வதேச நிதி நிறுவனம் நிபந்தனைகளை
விதிக்கிறது. அதே மாதிரி கூட்டுறவுக் கடன்களை எல்லாம
ரத்து செய்யக்கூடாது என்றும் நிபந்தனை விதிக்கிறார்கள்
அவர்கள். இப்படிப்பட்ட நிலைமைகளுக்கு மத்திய அரசு
ஆளாகிறது. அதன் காரணத்தால் பொருட்களின் விலை உயர்
கின்றது. அட்மினிஸ்டர்ட் ப்ரைஸ் என்று சொல்லப்படுகிறது.
அது எவ்வளவு பயங்கரமான வார்த்தை தெரியுமா? அதாவது
நிர்ணயிக்கப்பட்ட விலைகள். இங்கே மாண்புமிகு மின் துறை
அமைச்சர் அவர்கள் நிலக்கரி உயர்வு காரணமாக மின்சார
உற்பத்தி பாதிக்கப்பட்டிருக்கின்றது என்று பெரிய அளவிலே
கவலைப்பட்டார்கள். ஆகவே நீங்கள் ஒரு ப்ளான் போடு
கிறீர்கள், அப்படி ப்ளான் போட்ட உடனே விலைகள் எல்லாம்
உயர்ந்து விடுகின்றன. நிலைமை என்ன? போட்ட திட்டம் தீர்ந்தது.
இப்படிப்பட்ட நிலைமைதான் இருக்கின்றது. 100 கோடி ரூபாய்க்கு
ஒரு திட்டம் போடப்படுகின்றது என்றால் விலைவாசி உயர்ந்து
விடுவதன் காரணத்தால் அதற்குக் கூடுதலாக 25 கோடி ரூபாய்
செலவு செய்ய வேண்டி இருக்கின்றது.

ஆகவே இதற்கெல்லாம் மூக்கணாங்கயிறு யாரிடத்திலே இருக்
கின்றது? அந்த அடிப்படையான நிலைமையை மாற்ற வேண்
டாமா? அப்படி மாற்றுவதற்காகத்தான் இந்த நாட்டிலே உள்ள
ஜனநாயக சக்திகளோடு சேர்ந்து இந்த மாநில அரசு போராட
வேண்டும். அப்படிச் செய்யவில்லை என்றால் மாண்புமிகு நிதி
யமைச்சர் அவர்களின் உரையில் 3,4,9 ஆகிய பாராக்களில்
குறிப்பிடப்பட்ட விஷயங்களை எல்லாம் நிறைவேற்ற முடியாமல்
போகும் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன். இன்றைக்கு
இந்தியாவை எல்லா வகைகளிலும் பாதுக்காக்கின்ற பொறுப்பு
மைய அரசையும், மக்களை எல்லா நிலைகளிலும் வாழவைக்கின்ற
பொறுப்பு, மாநில அரசுகளையும் சார்ந்தனவாக
ஆகின்றன என்று குறிப்பிடப்பட்டிருக்கின்றது. ஆனால்
இவர்கள் மக்களை வாழ வைக்கிறார்களா? அதுமட்டுமல்ல.
முதலாளிகள் மக்களைக் கொள்ளை அடிக்கிறார்களே அதைப்
பற்றிய கவலை இருக்கின்றதா?.........................

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு
மாற்றுத் தலைவர் அவர்களே, நான் விளக்கம் கூறுவதைப்
பொறுத்தவரையிலே இறுதியிலே வைத்துக் கொள்ளலாம் என்று
கருதினேன். ஆகவே இப்போது இடைமறித்து நான் விளக்கம்
சொல்வதைப் பொறுத்தருள வேண்டும் என்று கேட்டுக் கொள்
கிறேன். இதிலே குறிப்பிடப்பட்டிருப்பது ஒரு இலச்சணம் தான்.
இன்றைக்கு இருக்கின்ற நிலைமைகள் முழுவதும் மாறவேண்டும்



1984 மார்ச் 13] [டாக்டர் இரா. நெடுஞ்செழியன்]

என்றும் ஒரு கூட்டாட்சித் தன்மை அமைய வேண்டும் என்றும்
மாநிலத்தில் சுயாட்சித் தன்மை பற்றியும் அடுத்த பாராக்களில்
சொல்கின்றபோது ஒரு இலக்கணத்தைத்தான் சொன்னேன்.
ஆகவே இன்றைய நிலையில் முழுப் பொறுப்பையும் நம்மால்
ஏற்றுக் கொள்ள முடியும் என்றும் பாதுகாப்பை மட்டும் மத்திய
அரசு எடுத்துக் கொண்டால் போதும் என்றும் சொல்லவில்லை.
இந்த நிலை மாறவேண்டும், அந்த அளவுக்கு இலக்கணங்கள்
வரவேண்டும் என்பதைத்தான் கூட்டாட்சி பற்றிச் சொல்கிறவர்
கள் சொல்கிறார்கள். மற்ற பல நாடுகளில் இந்த அளவில்
தான் இருக்கின்றது என்று அந்த இலக்கணத்தைத்தான் நான்
எடுத்துச் சொன்னேன். இன்றைக்கு இருக்கின்ற அரசு அப்படி
இருக்கின்றது என்று சொல்லவில்லை.

திரு. என். சங்கரய்யா : நான் என்ன சொல்ல வரு
கிறேன் என்றால் நீங்கள் கூறியிருக்கின்ற இந்தக் கருத்துக்களில்
பூரணமாக எங்களுக்கு உடன்பாடு உண்டு. நாங்கள் மேற்
கொண்டு பல யோசனைகளைச் சொல்வதாக இருந்தாலும் இந்த
அளவுக்கு நீங்கள் மாநில, மத்திய அரசின் உறவுகள் பற்றிக்
குறிப்பிட்டதில் எங்களுக்கு ஆட்சேபணை இல்லை. ஆனால்
நீங்கள் ஏன் ஸ்ரீநகர் மாநாட்டில் கலந்துகொள்ளவில்லை. நீங்கள்
சொன்ன அதே கருத்தைத்தான் அந்த மாநாட்டிலே அந்த
அரசியல் கட்சிகள் கொண்டு வந்தன. காங்கிரஸ் அல்லாத
5 மாநிலங்களின் முதலமைச்சர்கள் இந்தக் கருத்தைத்தான்
அங்கே முன் வைத்தார்கள். அப்போது மத்திய சர்க்கார் இதைப்
பற்றி என்ன சொன்னது ? இது ஒரு சீர்குலைவு இயக்கம் என்று
சொன்னது. உங்களை அவர்கள் சொல்கிறார்களோ, இல்
லையோ, வேறு விஷயம். ஆனால் நான் கேட்க விரும்புகிறேன்,
நீங்கள் இந்த பாராவிலே சொல்லி இருக்கக்கூடிய விஷயத்தை
மத்திய சர்க்கார் ஏற்றுக் கொள்கிறதா ? மத்திய சர்க்கார் பின்
பற்றப் போகிறதா ? நீங்கள் சொல்கிறீர்கள், தருணம் வந்து
விட்டது, சட்ட ரீதியிலே அரசியல் அமைப்புச் சட்டத்திலே
தேவையான மாற்றங்களை செய்ய, அதற்கான தருணம் வந்து
விட்டது என்று. மத்திய சர்க்கார் ஏற்றுக் கொள்கிறார்களா ?
அவர்கள் சொல்கிறார்கள், இன்று அரசியலமைப்புச் சட்டத்திலே
எந்த விதமான திருத்தமும் தேவையில்லை, இன்றைக்கு மக்
களுக்கு இருக்கக்கூடிய அதிகாரங்களே போதும். சொல்லப்
போனால் அது கூடுதலாக இருக்கிறது என்று. அதனால் அவர்கள்
என்ன சொல்கிறார்கள்? இன்றைக்கு விற்பனை வரி போடப்
பட்டிருக்கிற 5 பொருள்கள்மீது மாநில அரசாங்கத்திற்கு உரிமை
வேண்டாம், அதை மத்திய சர்க்கார எக்சைஸ் வரியின் கீழ்
கொண்டு வருகிறது என்று சொல்கிறார்களே என்ன அர்த்தம்?
ஒரே அர்த்தம்தான். மாநில அரசுக்கு இருக்கிற கொஞ்ச நஞ்சம்
அதிகாரங்களைப் படிப்படியாக அவர்கள் எடுத்துக் கொண்டு
வருகிறார்கள்.

[திரு. என். சங்கரய்யா] [1984 மார்ச் 13

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

ஆகையினால் கூறுகிறேன், ஸ்ரீநகர் தீர்மானமும் கல்கத்தா விலே அரசியல் கட்சிகள் நிறைவேற்றிய தீர்மானமும்— கராச்சி காங்கிரஸ் மாநாட்டிலே, மக்களுடைய உரிமைகளைப் பற்றி நிறை வேற்றப்பட்ட தீர்மானம் எந்த அளவு முக்கியத்துவம் வாய்ந்ததாக இருந்ததோ அந்த அளவு இன்றுள்ள அரசியல் பொருளாதார சூழ்நிலையிலே முக்கியத்துவம் வாய்ந்ததாக இருக்கிறது ஆகையினாலேதான் மத்திய சர்க்காரைச் சேர்ந்தவர்கள் அதைக் கடுமையாகச் சாடுகிறார்கள். ஆனால் இந்த அரசாங்கத்தைப் பொறுத்தவரைக்கும் நாங்கள் எதிர்பார்க்கிறோம். ஆழ்ந்து அவர் கள் சிந்தனை செய்வார்களானால் இந்தியாவிலே இருக்கக் கூடிய பிரதானமான மெயின் ஸ்டீம்-அந்த நீரோட்டம்-இன்றைக்கு என்னவென்றால், மாநிலங்களுக்கு அதிக அதிகாரங்களைப் பெற வேண்டுமென்பது. மத்திய சர்க்காரிடத்திலே குவிந்திருக்கிற அதிகாரங்களை மாநிலங்களோடு பகிர்ந்துகொண்டு அதன் மூல மாகத்தான் மாநில மக்களுக்குச் சேவை செய்ய முடியும். இன் றைய சூழ்நிலையிலே அது சாத்தியம் இல்லை என்று அரசியல் முடிவுக்கு நீங்கள் வருவீர்களா? அப்படி அரசியல் முடிவுக்கு நீங்கள் வந்தால், மத்திய சர்க்கார் இன்றைக்குப் பின்பற்றக்கூடிய அந்தக் கொள்கைக்கு நேர் எதிராக நீங்கள் போராட வேண்டும், அந்தக் கொள்கைக்கு நேர் எதிராக நீங்கள் நிற்க வேண்டும். அந்தக் கொள்கைக்கு நேர் எதிராக மக்களை நீங்கள் திரட்ட வேண்டும். அதை நீங்கள் திரட்டாமல் போனால் அவர்களுடைய கொள்கைதான் வெற்றி பெறும் என்ற நிலைமையைத்தான் இன்று கூற விரும்புகிறேன்.

அது மட்டுமல்ல, கல்கத்தாவினுடைய தீர்மானத்திலே மற் றும் ஒன்றைக் கூற விரும்புகிறேன். கூறுவது இந்த அரசுக்கு எவ்வளவு உபயோகம் என்று பாருங்கள். அந்தத் தீர்மானத் திலே கூறியிருக்கிறோம், மக்களுக்குத் தேவையான அத்தியாவசிய பண்டங்களைக் கொள்முதல் செய்து நியாய விலைக் கடைகளிலே விற்பனை செய்வதற்கு உத்தரவாதம் கொடுக்கக்கூடிய பெரிய பொறுப்பு மத்திய சர்க்காரைச் சேர்ந்தது என்று கூறியிருக்கிறோம். ஏனென்றால், எங்களுக்குத் தெரியும், விவசாயிகளிடத்திலே நியாயமான விலையிலே கொள்முதல் செய்ய வேண்டுமென்றால், கூடுதல் விலை கொடுத்து கொள்முதல் செய்ய வேண்டும். அதை நியாய விலைக் கடையிலே மக்களுக்கு ஓரளவு மலிவு விலையிலே விற்க வேண்டுமென்றால் அதற்கிடையிலே ஏற்படக்கூடிய நட் டத்தை ஈடுகட்ட வேண்டும். அதை ஒரு மாநில சர்க்காரால் நிறைவேற்ற முடியாது என்று தான் நாங்கள் கூறுகிறோம். ஒரு மாநில சர்க்காரால் அந்த நஷ்ட ஈட்டைத் தர முடியாது. ஆகவே தான் இந்தியா பூராவுக்கும் ஓரே சீரான விலையிலே, கோதுமை யையும் நெல்லையும் கொள்முதல் செய்து, இந்தியாவில் இருக்கிற எல்லா மாநிலங்களிலும் மாநில சர்க்கார்களுடைய உதவியோடு



1984 மார்ச் 13] [திரு. என். சங்கரய்யா].

ஓரே சீரான ஓரே ரீட்டெயில்பிரைசில் அவற்றை விற்க வேண்டும். இன்றைக்கு அவர்கள் என்ன செய்கிறார்கள்? அதற்குப் பதிலாக ரீடெயில் பிரைசை உயர்த்தச் சொல்லி உங்களை வற்புறுத்து கிறார்கள் அவர்களும் உயர்த்துகிறார்கள். ஆகவேதான் நான் கூறுகிறேன் மாநிலங்களில் இருக்கக்கூடிய அம்சங்கள் பூராவையும் ஒன்றன் பின் ஒன்றாக மாநிலங்களுடைய கட்டுப்பாட்டிலே இருந்து அவர்கள் அகற்றிக் கொண்டு வருகிறார்கள். ஆகையி னாலே அத்தியாவசியமான பண்டங்களை சப்ளை செய்ய வேண்டிய பெரும் பொறுப்பு மத்திய சர்க்காரைச் சேர்ந்தது என்ற கொள்கையில் உள்ள இந்தக் கல்கத்தா தீர்மானம் கோடிக்கணக் கான மக்களின் நலனைப் பாதுகாக்க வல்லது என்பதை நான் உங்கள் கவனத்திற்கு இங்கே கொண்டு வர விரும்புகிறேன்.

நீங்கள் கூறியிருக்கிறீர்கள், வேலை உரிமையைப் பற்றி. வேலை உரிமை என்பது அரசியல் சட்டத்திலே சேர்க்கப்பட வேண்டு மென்று கல்கத்தா தீர்மானம் கூறுகிறது. இன்றைக்கு இந்தி யாவிலே பிறந்த ஒரு மகள் அல்லது ஒரு மகன் தக்க வயது வந்த வுடன் வேலை பார்ப்பதற்கான உரிமை இந்திய அரசியலமைப்புச் சட்டத்தாலே ஏற்றுக்கொள்ளப்படவில்லை. ஆகவே, அவர்கள் கேட்டால் சொல்வார்கள், இந்திய அரசியலமைப்புச் சட்டம் உங்களுக்கு வேலை கொடுப்பதற்கு உத்தரவாதப்படுத்து என்று சொல்லவில்லை. அதுதான் இன்றைய நிலை. ஆனால் நாம் கூறுகிறோம், 70 கோடி மக்களைக் கொண்ட ஒரு நாட்டில், வளர்ந்து வரக் கூடிய வேலை இல்லா திண்டாட்டத்திலே ஈடுபட்டிருக்கக்கூடிய மக்களைக் கொண்ட ஒரு நாட்டில், வேலை கொடுக்க வேண்டிய பொறுப்பு அரசாங்கத்தைச் சேர்ந்தது. அது அரசியலமைப்பிலே இருக்கிற மூலாதாரமான உரிமைகளுக்கு உட்படுத்தப்பட வேண்டுமென்று இன்றைக்கு நாம் கூறுகிறோம். இன்று உங்களுடைய நிதிநிலை அறிக்கையிலே இந்தக் கோரிக்கை இல்லாமல் இருப்பது கண்டு நான் வருந்து கிறேன். ஏனென்றால் ஒரு மாநில அரசாங்கத்தினாலே மட்டும் தமிழகத்திலே இருக்கக்கூடிய வேலையில்லா பிரச்சினையைத் தீர்க்க முடியாது என்று நான் திட்டவட்டமாகக் கூற விரும்பு கிறேன். அதைச் சரிக்கட்டுவதற்கு என்ன செய்ய முடியுமோ அதைத்தான் மாநில சர்க்கார் செய்ய முடியும். அந்த வேலை யில்லாத் திண்டாட்டத்தில் ஈடுபட்டிருக்கக்கூடியவர்களுக்கு ஓரளவு நிவாரணம் கொடுப்பதற்கான நடவடிக்கைகளை அவர்கள் செய்ய முடியும். ஆனால் இந்த நாட்டினுடைய அடிப்படையான காரியங்களைச் செய்வதற்கு மத்திய சர்க்காருக்கு இருக்கக் கூடிய பொறுப்பு, அவர்களுடைய ஆதாரங்கள், மாநில சர்க்கா ருக்கு இருப்பதைவிடப் பல மடங்கு அதிகம். மாநில சர்க் கார் வரவு-செலவுத் திட்டத்தைப்போல, பல மடங்கு கொண்ட திட்டம் மத்திய சர்க்காருடைய வரவுச்செலவுத் திட்டம். நாம் செலவழிக்கக் கூடிய மொத்தத் தொகையும் மத்திய சர்க்கா

[திரு. என். சங்கரய்யா] [1984 மார்ச் 13

ருடைய ஒன்றிரண்டு இலாக்காக்களுக்கே போதாது. அப்படிப்பட்ட நிலைமையில் இருக்கக்கூடிய நாம் அப்படிப்பட்ட ஆதாரங்கள் வைத்திருக்கிற அவர்கள் செய்ய வேண்டும் என்று கூறுகிறோம்.

(பிற்பகல் 1-00)

மாநில சர்க்காருடைய பொறுப்பைப் பற்றி நான் கூற விரும்புகிறேன். மாநில சர்க்காருடைய அதிகாரங்களுக்கு உள்ளிட்ட காரியங்களைப் பொறுத்தவரையில், உங்களுடைய அறிக்கையில் கூறி இருக்கிறீர்கள். இந்த அறிக்கையிலே கூறி இருப்பதைப் பார்த்தால் ஒரு நிலைமைத் தோன்றும். தமிழ் நாட்டிலே எல்லாம் சரியாக இருக்கிறது. மாதம் மும்மாரி மழை பெய்கிறது. அதைவிட ஜாஸ்தியாகவே பெய்கிறது. மக்கள் சுகமாக வாழ்கிறார்கள். பிரச்னையே இல்லை. இங்கே அதற்காக பல காரியங்களை நீங்கள் குறிப்பிட்டு இருக்கிறீர்கள். ஆனால் நான் குறிப்பிட விரும்புவது, வறுமைக் கோட்டிற்குக் கீழே இருக்கிற மக்கள் அதிகமாக வாழக் கூடிய மாநிலங்களில் ஒன்று தமிழகம். இந்த உண்மையை இந்த அரசாங்கம் மறுக்கிறதா? 55 சதவீதம் முதல் 60 சதவீதம் வரையில் வறுமைக் கோட்டிற்கு கீழே மக்கள் வாழக்கூடிய மாநிலம் தமிழகம் என்று இந்தியாவிலே இருக்கிற பல்வேறு பொருளாதார நிபுணர்களால் மதிப்பிடக்கூடிய ஒரு மாநிலத்தில் நாம் வாழ்கிறோம். இப்படிப்பட்ட மாநிலத்தில் நீங்கள் மதிய உணவுத் திட்டத்தைக் கூறலாம்; தேசிய கிராமப்புற வேலை வாய்ப்புத் திட்டத்தைக் கூறலாம்; அல்லது இணைக்கப்பட்ட கிராமப்புற வளர்ச்சித் திட்டத்தைக் கூறலாம். அதைப்பற்றி கூறவேண்டிய கருத்துக்களை நான் பின்னாலே கூறுகிறேன். ஆனால் அடிப்படையான பிரச்சினை என்ன? பல கோடிக்கணக்கான விவசாயிகள் வாழக்கூடிய இந்த மாநிலத்தில் நிலப் பிரச்னைப் பற்றி ஒரு மாநில சர்க்காரால் எடுக்க வேண்டிய நிலைமைகளை எடுக்காமல் நீங்கள் கிராமப்புற வறுமையை ஒருக்காலும் போக்க முடியாது என்பது நான் ஜனநாயக இயக்கம் இந்த மாநிலத்தில், இந்த நாட்டில் வற்புறுத்தி வரக்கூடிய கோரிக்கையாகும். தமிழகத்தில் என்ன நிலைமை? நீங்கள் கூறி இருக்கிறீர்கள், 96-வது பாராவில் இந்த அறிக்கையில். 1983-ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 30-ஆம் நாளன்று உள்ளவாறு 4 லட்சத்து 39 ஆயிரத்து 464 பேர்கள்தான் குத்தகைதாரர்கள். இவர்களிடத்தில் இருப்பது 5 லட்சத்து 36 ஆயிரத்து 513 ஏக்கர்கள் தான். இது உண்மைக்குப் புறம்பானது. தமிழகத்தில் வாஸ்தவத்தில் விவசாயத்தில் ஈடுபட்டிருக்கிற குத்தகைதாரர்கள் 15 லட்சம் பேர்கள் இருக்கிறார்கள். அவர்கள் பதிவு செய்யப்படவில்லை. ஆனால் நடைமுறையில் அவர்கள் நிலத்தை உழுது கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கு எந்த பாதுகாப்பும் இல்லை. குத்தகைதாரர்களைப் பதிவு செய்கிற சட்டம், நிலப்பிரபுக்களுடைய கொடுமையாலும், குத்தகைதாரர்கள் பதிவு செய்யப்படாமல் தடுப்பதன் மூலமாகவும் அவர்கள் இன்றைக்கு உரிமை மறுக்கப்பட்டிருக்கிறார்கள். ஆகவே நாங்கள் கூறுகிறோம், அதற்காக போடப்பட்டிருக்கிற கமிட்டிகள், தாலுக்கா ரீதியிலே ஆலோசனைகளைக் கூறுவதற்காக போடப்பட்ட கமிட்டிகள் இன்றைக்கு சரிவர அமைக்கப்படவில்லை. அவைகள் சரிவர வேலை செய்யவில்லை. ஆகவே உண்மையான குத்தகைதாரர்கள் அனைவரும் இன்றைக்கு அதிலே பதிவு செய்யப்படவில்லை. அதுமட்டுமல்லாமல் $1\frac{1}{2}$ கோடி ஏக்கர் நிலம் தமிழகத்திலே சாகுபடியிலே இருக்கிறது. ஆனால் இன்றைக்கு நீங்கள் பெருமையாக கூறிக்கொள்கிறீர்கள். அதாவது 1983-ஆம் ஆண்டு டிசம்பர் வரையில் 9.029.42 ஏக்கர் பரப்புள்ள உபரி நிலம் விநியோகம் செய்திருக்கிறோம் என்று நான் கேட்க விரும்புகிறேன், தமிழகத்தில் இத்தனை ஆட்சிகள் காலத்திற்கு பிறகும், 150 லட்சம் ஏக்கர் நிலம் இருக்கிற தமிழகத்திலே, 80 ஆயிரம் ஏக்கர் தான் நில உடைமைக்கு வரம்பு கட்டியதற்கு பிறகு மிச்ச நிலமாக எடுக்கப்பட்டு விநியோகிக்கப்பட்டிருக்கிறது; இதைச் சிந்தனை செய்து பாருங்கள். பிரச்சினையின் ஆரம்பத்தையாவது தொட்டிருக்கிறதா? நிலப்பிரபுக்கள் கொடுமை முறியடிக்கப்பட்டிருக்கிறதா? விவசாயிகளுக்கு நிலம் கிடைக்கிறதா? எத்தனையோ நிலச்சட்டங்களைச் சொல்கிறோம். ஆனால் பயன் இதுதான். 150 லட்சம் ஏக்கர் இருக்கிற மாநிலத்தில் 80 ஆயிரம் ஏக்கர் தான், 25, 30 ஆண்டுகளாக நில உடைமைக்கு வரம்புக் கட்டக்கூடிய சட்டங்கள் அமலுக்கு வந்த பிறகு கொடுக்கப்பட்டிருக்கிறது என்றால் என்ன அர்த்தம்? பினாமியாக வைத்திருக்கிறார்கள். ஏராளமான பினாமி மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் அவர்களால் ஒரு குறுகிய காலத்தில் பினாமியை கண்டு பிடிப்பதற்காக கொண்டு வரப்பட்ட சட்டத்தை மத்திய அரசு ஏற்றுக்கொள்ளவில்லை. திரும்பவும் கொண்டு வருவோம் என்று அரசாங்கத்தினுடைய தரப்பிலே கூறினீர்களே; அதுபற்றி ஒரு வார்த்தை உண்டா இதிலே? பினாமி நிலச்சீர்திருத்தச் சட்டத்தை மறுபடியும் கொண்டு வருவோம் என்று சொன்னது ஏன் கைவிடப்பட்டது? மத்திய அரசிடத்திலே பயமா? அவர்கள் ஏற்கெனவே அனுமதி கொடுக்கவில்லை, கொண்டு வர வேண்டாம் என்று விட்டு விட்டீர்களா? அந்தச் சட்டம் அமலுக்கு வந்தால் நீங்களே பினாமியாக 2 லட்சம் ஏக்கர் கிடைக்கும் என்று சொன்னீர்கள். இப்போது மறுபடியும் இந்தச் சட்டசபைக்கு முன்னாலே கொண்டு வந்து, மக்களுடைய அபிப்ராயத்தைத் திரட்டி அங்கீகாரம் பெறுவதற்கு நீங்கள் ஏன் நடவடிக்கை எடுக்கவில்லை?





அது மட்டுமல்ல, இன்றைக்கு நாங்கள் கூறுகிறோம்: தமிழகத்திலுள்ள விவசாய இயக்கத்தைச் சேர்ந்தவர்கள், தற்போது அரசாங்கம் நிர்ணயித்துள்ள 15 ஸ்டான்டர்ட் ஏக்கர் என்ற நில உச்சவரம்பை, இந்திய அரசியல் சட்டத்திற்குட்பட்டு இயற்றப்பட்ட அந்த நில உச்சவரம்புச் சட்டம், கறாராக அமல் நடத்தப்

[திரு. என். சங்கரய்யா] [1984 மார்ச் 13

பட்டால், அதைவிட சிறந்த நிலச்சீர்திருத்தம் வேறு இல்லை என்றும், அப்படி அது செய்யப்பட்டால் குறைந்தபட்சம் 20 லட்சம் ஏக்கர் நிலங்கள் தமிழ் நாட்டில் எடுக்க முடியும் என்றும், அதன் காரணமாக 20 முதல் 25 லட்சம் நிலமற்ற ஏழை விவசாயிகள் நிலம்பெற வாய்ப்பு வசதி இருக்கும் என்றும் சொல்கிறார்கள். நீங்கள் ஆட்சிக்கு 1977 ஆம் ஆண்டில் வந்தீர்கள். அப்போது முதல் இதைச் செய்வதற்கு ஏன் நடவடிக்கை எடுக்கவில்லை? இந்த நிலச் சீர்திருத்தச் சட்டம் என்பது மாநில அரசின் அதிகார வரம்பிற்குட்பட்டு வருவதால் இந்தப் பிரச்சினையில் நீங்கள் கவனம் செலுத்தத் தவறி விட்டீர்கள் என்று நான் குற்றம்சாட்ட விரும்புகிறேன்.

ஒரு காலத்தில் சொல்லப்பட்டது, இங்கே கோவில், மடங்கள் ஆகியவற்றில் உள்ள நிலங்களில் பயிர் செய்யும் உழவர்கள் ஓரளவிற்குப் பாதுகாப்பாக இருக்கிறார்கள் என்று. ஆனால் இன்றைக்கு அதிலே இருந்து கூட வெளியேற்றம் செய்யப்படுகின்ற முறையில் நடவடிக்கை எடுக்கப்பட்டது. அதை விவசாயிகள் கடுமையாக எதிர்த்தார்கள். மேற்கு வங்கத்திலும் காஷ்மீரிலும் நீண்டநாட்களுக்கு முன்பே அவர்கள் ஒரு நிலச்சீர்திருத்தச் சட்டத்தைக்கொண்டு வந்தார்கள். அதன் அடிப்படையில், இன்றைக்கு தமிழகத்தில் இருப்பதைப்போல் விவசாயிகளுக்குக் கொடுக்கும் நிலத்திற்காக அவர்களிடமிருந்து நஷ்டஈடு வாங்குவது இல்லை. மாநில அரசாங்கமே அந்த நஷ்டஈட்டை கொடுத்து அதை வாங்கி, விவசாயிகளுக்கு அதை இலவசமாகக் கொடுக்கிறது. இரண்டு மாநிலங்களிலும் இப்படி அரசியல் சட்ட வரம்புக்குட்பட்ட நிலச் சீர்திருத்தச் சட்டத்தைக் கொண்டு வந்திருக்கின்ற போது, அதைப் பின்பற்றி ஏன் இந்த மாநில அரசு செய்யக்கூடாது என்று நான் கேட்க விரும்புகிறேன். கேரளத்தில் ஏற்கனவே அங்கே நம்பூதிரிபாட் அரசாங்கம் இருந்தபோது கோவில் நிலங்களையும் மடங்கள் நிலங்களையும் எடுத்துக்கொண்டு, அதை விவசாயிகளுக்குக் கொடுத்து விட்டு, இவர்களுடைய வருமானத்தைப் பாதுகாப்பதற்காக தஸ்திக் அலவன்சு கொடுக்கப்பட்டது. உண்மையிலேயே இந்த அரசாங்கம் நிலச் சீர்திருத்தத்திலே அக்கறை உள்ளதாக இருக்குமானால், அது யாருடைய நிலமாக இருந்தாலும் சரி — கோயில் நிலமாக இருந்தாலும், மடத்தின் நிலமாக இருந்தாலும், எந்த நிலப் பிரபுவின் நிலமாக இருந்தாலும், அதை எடுத்துக்கொண்டு, அந்த விவசாயிகளுக்கு பாதுகாப்பு கொடுக்க வேண்டும். அப்படிப் பட்ட ஒரு பாதுகாப்பு கொடுக்க இந்த அரசு [illegible]ரா என்று நான் கேட்க விரும்புகிறேன். அப்படிப்பட்ட ஒரு முறையில் ஒரு நிலச் சீர்திருத்தச் சட்டத்தை இந்த அரசாங்கம் கொண்டு வருமா என்று கேட்க விரும்புகிறேன்.



1984 மார்ச் 13] [திரு. என். சங்கரய்யா]

இன்றைக்கு ஏராளமாக விதிவிலக்குக் கொடுக்கப்பட்டு இருக்கிறது. இன்று கூட கொடைக்கானல் மலையிலும், நீலகிரி மலையிலும், மற்றும் பல இடங்களிலும் நூற்றுக்கணக்கான நிலப் பிரபுக்கள் இருக்கின்றனர். ஒரே குடும்பத்தில் உள்ளவர்கள் அந்த நிலங்களை பல்வேறு கூறுகளாக்கி, தங்கள் குடும்பத்தில் உள்ளவர்கள் பெயருக்கே அதை எழுதி வைத்துக்கொண்டு, பட்டா செய்துகொண்டு, வைத்துக் கொண்டு இருக்கிறார்கள். அதன் காரணமாக அங்கே ஒரு பெரிய நிலக்குவியலே இருக்கிறது. அதனுடைய பலன் யாருக்குப் போகிறது? விவசாயிகளுக்கே போகவில்லை. உழைக்கக்கூடிய வர்க்கத்திற்கு அது போய்ச் சேராத வரையில், விவசாய உற்பத்தியைக் கூடுதாகச் செய்ய முடியாது இந்த மாநிலத்தில் என்பதை நான் சொல்லிக் கொள்கிறேன்.

மார்க்கெட் எக்ஸ்பேன்ஷன் வேண்டுமென்று சொல்கிறார்கள். மார்க்கெட் விஸ்தரிக்கப்பட வேண்டும் என்பதுதான் தொழிலாளர்களின் விருப்பமும் ஆகும். உற்பத்தியைப் பெருக்க வேண்டும் என்று சொல்கிறோம். அதை எப்படி உருவாக்க முடியும்? ஒரு குறைந்த பட்ச கூலிச் சட்டத்தை அறிவித்தீர்கள். அது அமல்படுத்தப்படுகிறதா? 10-ல் ஒரு பங்கு இடத்தில் தான் அது அமலில் இருக்கிறது. அதைச் சரியான முறையில் அமல்படுத்த என்ன நடவடிக்கை எடுத்து இருக்கிறார்கள் என்பதை நான் கேட்க விரும்புகிறேன். ஒரு போர்க் கால நடவடிக்கையை அரசு எடுக்க முன்வந்தால் தான் நிச்சயமாக அந்த குறைந்த பட்சக் கூலிச் சட்டத்தை நடைமுறைப்படுத்த முடியும். அதுதான் சரியான முறையில் விவசாயிகளுக்கு வசதியை ஏற்படுத்தித் தரும். அதை அமல்படுத்த நடவடிக்கை எடுக்காமல் இருப்பதால் இன்றைக்கு அந்தத் தொழிலாளர்கள் பஞ்சை பறாரிகளாக, 2 ரூ, 3 ரூ. கூலிக்கு வேலை செய்கிறார்கள். இந்தச் சட்டம் சரியான முறையில் அமல்படுத்தப்பட வேண்டும் என்றால் மேற்கு வங்கத்தில் உள்ளதுபோல், பிர்காவிற்கு பிர்கா ஒரு லேபர் இன்ஸ்பெக்டரைப் போட்டு, பஞ்சாயத்து தலைவர்கள், யூனியன் தலைவர்கள் உதவியோடு இந்தக் கூலிச் சட்டத்தை அமல்படுத்த நடவடிக்கை எடுக்கவேண்டும்.

(பிற்பகல் 1-10)

கிழக்குத் தஞ்சை மாவட்டத்தில் நியாயக் கூலிச் சட்டம் (ஃபேர் வேஜஸ் ஆக்ட்) கொண்டு வரப்பட்டது. அது ஏற்கெனவே அவர்கள் போராடிப் பெற்றிருக்கிற குறைந்த பட்சக் கூலியைவிட் குறைவாக இருக்கிறது. எத்தனையோ தடவை இதைப் பற்றி சொல்லிவிட்டோம். நியாயக் கூலிச் சட்டம் என்றால் குறைந்த பட்சக் கூலியைவிட உயர்வாக இருக்க வேண்டும். அப்படி இல்லை. ஆகவே, நியாயக் கூலி குறைந்த

[திரு. என். சங்கரய்யா] [1984 மார்ச் 13

பட்சக் கூலியைவிட அதிகமாக இருக்கின்ற வகையில் நியாய கூலிச் சட்டத்தைத் திருத்துங்கள் என்று சொன்னோம். ஆனால் அதைச் செய்வதற்கு மறுக்கிறார்கள் என்பதை இங்கே குறிப் பிட விரும்புகிறேன்.

அடுத்து, அரிசியை எடுத்துக் கொள்ளுங்கள். தமிழ் நாடு சர்க்காருக்கு 80,000 டன் அரிசி தேவை என்று மத்திய சர்க் காரைக் கேட்கிறார்கள். தமிழ் நாட்டின் தேவை ஒரு ஆண்டுக்கு 9,60,000 டன் அரிசி. பொது விநியோகத்திற்கு 80,000 டன் வேண்டும். மத்திய அரசு ஒப்புக்கொண்டிருப்பதோ மிக மிக குறைந்த அளவுக்குத்தான். நம்முடைய தேவை மிக அதிகம். 5.40 இலட்சம் டன் கூடுதலாகத் தேவைப்படுகிறது. எனவே, தேவையைப் பூர்த்தி செய்ய என்ன வழி செய்யப் போகிறீர்கள் ? ஒன்றும் தெரியவில்லை.

அடுத்தபடியாக சம்பாப் பயிர் அறுவடை மோசமாகிவிட்டது. குறுவையில் ஒரு இலட்சம் டன் கொள்முதல் செய்ய முடிந்தது ஏகபோக கொள்முதல் இருந்த காரணத்தால். இப்போது என்ன செய்யப் போகிறீர்கள் ? ஆகவே, எதிர்காலத்தில் மத்திய சர்க்கார் இந்த மாநிலத்தின் பொது விநியோகத்திற்குத் தேவைப் படும் அரிசியை கொடுக்க வேண்டுமென்ற கோரிக்கை மிக முக்கிய மான, பிரதானமான கோரிக்கையாக இருக்க வேண்டும். தேவையானால் இந்த மாநில மக்கள் திரண்ட ஒரு கோரிக்கை யாக இதை ஆக்க வேண்டும். இல்லாவிட்டால் இந்தப் பிரச்சனை தீராது என்று குறிப்பிட விரும்புகிறேன்.

அடுத்தபடியாக இன்னொரு பிரச்சனையைக் குறிப்பிட விரும்புகிறேன். உலக வங்கி கடன் பற்றியது இந்தப் பிரச்சனை. உதாரணத்திற்கு எடுத்துக் கொண்டால் பெரியாறு-வைகைப் பாசனத்தில் இரண்டு நிலைகள் உள்ளன. முதல் நிலை 44.50 கோடி ரூபாய்ச் செலவிலும், இரண்டாவது நிலை 59 கோடி ரூபாய்ச் செலவிலும், ஆக மொத்தம் 103.50 கோடி ரூபாய் செலவில் பெரியாறு-வைகைப் பாசனத்தை நவீனப்படுத்துவதாக இருக்கிறோம். நான் அரசாங்கத்தைக் கேட்க விரும்புகிறேன். மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் பதில் சொல்லும்போது விளக்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

உலக வங்கியிலிருந்து கடன் பெறுகின்ற நீங்கள் என்ன வட்டி கொடுக்கிறீர்கள் ? 103 கோடி ரூபாய்க்கு வட்டி என்ன ? நாளை இந்தத் திட்டம் முடிந்த பிறகு அது யார் தலையில் போய் விழும் ? முழுச் சுமையும் விவசாயிகள் தலையில்தானே விழும் ? ஆக, உலக வங்கியிலிருந்து கடன் வாங்குவது என்பது ஏதோ சுலபமான, குறுக்குவழி என்று நீங்கள் கருத வேண்டாம். அதன் விளைவு மிக மோசமாக இருக்கும். நான் பலமுறை



1984 மார்ச் 13] [திரு. என். சங்கரய்யா]

பார்த்திருக்கிறேன். வைகை பாசனப் பகுதியை நவீனப் படுத்தும் பொறுப்பிலே இருக்கிற எஞ்சினியர்கள் எம்.எல்.ஏக் களுக்கு தங்களுடைய டூர் புரோகிராமை அனுப்புகிறார்கள். அதைப் பார்க்கும்போது அவர்கள் எல்லாம் அடிக்கடி விமானம் மூலமாக டெல்லிக்குச் சென்று ரிப்போர்ட் செய்ய வேண்டி யிருப்பது தெரிகிறது. இதெல்லாம் ஓவர் ஹெட்சார்ஜ், நிர்வாகச் செலவு என்பதிலே அடங்கும்.

இந்த 103 கோடி ரூபாய் செலவிலே நவீனப்படுத்தப்படும் பாசனப் பகுதி சுமார் இரண்டு இலட்சம் ஏக்கர்தான். இந்த இரண்டு இலட்சம் ஏக்கர் நிலத்தில் சாகுபடி செய்யக்கூடிய விவசாயிகள் மீது 103 கோடி ரூபாய் பளு ஏற்படுகிறது. அது மட்டுமல்லாமல் ஏற்கெனவே இருக்கிற நில வரி, தண்ணீர் வரி ஒரு பக்கம் இருக்கிறது. அப்படியானால் எவ்வளவு பெரும் எதிர்ப்பு பின்னால் வரும் என்பதை நீங்கள் எண்ணிப்பார்க்க வேண்டும்.

இன்றைக்கு மின்சாரத்தைப் பற்றிக் கூறும்போது, மேட்டூர் திட்டம் ஒன்றுக்குத்தான் மத்திய சர்க்கார் சம்மதித்திருக்கிறது. தூத்துக்குடி விஸ்தரிப்புத் திட்டத்திற்கு, வடசென்னை அனல் மின் நிலையத்திற்கு ஒப்புதல் அளிக்கவில்லை. அதுதானே உண்மை. அந்த இரண்டு திட்டங்களுக்கும் மத்திய சர்க்காரின் அனுமதி கிடைக்கவில்லை என்றால் மின்சாரத்தில் தமிழ் நாடு மிகவும் மோசமான ஒரு நிலையை அடைந்து விடும். இந்த உண்மையை உணர்ந்து, இந்த சர்க்கார் மத்திய சர்க்காரை வலியுறுத்தி அனுமதியைப் பெற முயற்சி எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அது மட்டுமல்ல, தொழில் வளர்ச்சி பற்றிய விமரிசனத்தில் நீங்கள் கையாண்டிருக்கிற உபாயம் என்னவென்றால் இந்தியா வில் இருக்கக்கூடிய நிதி நிறுவனங்களிலிருந்து கடன் வாங்குவதில் 1,280 கோடி பெற்று, தமிழ்நாடு இந்த வகையில் மூன்றாவது நிலையில் இருக்கிறது என்று சொல்லியிருக்கிறீர்கள். ஆகவே, இந்தியாவிலே மூன்றாவது நிலையிலே இருக்கிற ஒரு மாகாணத் தில் தொழில் முதலீடு பெருமளவுக்கு நடந்திருக்க வேண்டும், நடந்திருக்கும் என்று நீங்கள் கூறுகிறீர்கள். இந்த முதலீடு ஏற்பட்டதன் விளைவாக 83 சதவீதம் தொழில் வளர்ச்சி ஏற் பட்டிருக்கிறது என்று சொல்கிறீர்கள். இது மிகைப்படுத்திப் போடப்பட்ட ஒன்று அல்லவா ? எந்த அளவிற்கு இன்றைக்கு அதன் மூலமாக வேலை வாய்ப்பை அதிகரித்திருக்கிறது என்பதை நாம் எண்ணிப் பார்க்க வேண்டும்.

அதுமட்டுமல்லாமல், திறமையை வளர்த்து தொழில்களைப் பெருக்கி என்று சொல்லி சம்பந்தமில்லாமல் இன்னொன்றையும் கொண்டு வந்திருக்கிறீர்கள். பாரா 43-லே திறமையை வளர்த்து

தொழில்களைப் பெருக்கி, அதன் மூலம் இம்மாநிலத்
தில் தொழில் வளர்ச்சியைப் பெருக்க, முக்கியத்துவம் அளிக்கப்பட
வேண்டுமென்பதையே மேற்சொன்ன ஆய்வு காட்டுகிறது. இந்
நோக்கத்தை எய்த, தனியார் பல்தொழில் பயிற்சிப் பயிலகங்
களையும், பொறியியல் கல்லூரிகளையும், தொடங்க அரசு
அனுமதி வழங்கியுள்ளது என்று சொல்லியிருக்கிறார்கள்.
எங்கே கொண்டுவந்திருக்கிறார்கள் பாருங்கள். மற்ற பல
மாநிலங்களில் இந்த தனியார் இன்ஜினியரிங் கல்லூரிகளில் அவர்
கள். ஏராளமான ரூபாய்களை லஞ்சமாகப் பெறுகிறார்கள்
என்று சொல்லி அங்கே இருக்கக் கூடிய இன்ஜினியரிங் கல்லூரி
களை அரசே எடுக்கிறது. ஆனால் நம்முடைய தமிழகத்திலே
பல புதிய இன்ஜினியரிங் கல்லூரிகளையும், பாலிடெக்னிக்கு
களையும் தனியார் வசம் ஒப்படைக்க போகிறோம் என்று சொல்
கிறார்கள். இது ஒரு பெரிய சறுக்கல். அரசாங்கத்தினுடைய
அறிவிக்கப்பட்ட கொள்கையிலிருந்து இந்த மாநிலத்தில்
ஏற்கெனவே ஆசிரியர்களும், மாணவர்களும், எல்லா கல்வி
நிலையங்களும், அரசாங்கத்தினுடைய உரிமையாக்கப்பட
வேண்டும் என்ற கோரிக்கையை எழுப்புகின்ற நேரத்தில், தனிப்
பட்ட மேனேஜ்மெண்ட் நிறுவனத்திலே நடைபெறக்கூடிய ஊழல்
கள் எவ்வளவு என்று தெரிந்து இருக்கக்கூடிய நேரத்தில்—
இங்கே நீங்களே பச்சையப்பன் அறக்கட்டளைக்காக அரசாங்கக்
குழுவைப் போட்டு, பகிரங்கமாக ஒப்புக்கொள்ளக் கூடிய
நேரத்தில் புதிய என்ஜினியரிங் கல்லூரிகளையும்.
புதிய பாலிடெக்னிக்குகளையும் தனியார்களிடத்திலே ஒப்படைப்
பதை நான் கேள்விப்பட்டேன். மதுரையிலே புதியதாக துவங்கப்
பட்ட ஒரு பாலிடெக்னிக்கிலே ஒரு மாணவனைச் சேர்க்க
ரூபாய் 10,000, 15,000 கேட்கிறார்களாம். அது அந்த ஏழை
மாணவனுக்கு எப்படிப் பயன்படும ? சிந்தித்துப் பாருங்கள்.
அரசாங்கத்திற்கு ஏதாவது அதிலே அந்த மாணவனை தேர்ந்
தெடுக்கும் உரிமை இருக்கிறதா ? அந்த உரிமை மிகக் குறைவாக
இருக்கிறது. ஆகவே பெரிய பணக்காரர்கள், பொதுவாக மற்ற
மாணவர்களுடன் போட்டி போட முடியாதவர்கள், ரூபாயைக்
கொடுத்து இடம் பிடிக்கிறாாகள். நான் கேட்கிறேன். இதே
இன்ஜினியரிங் கல்லூரிகளையும், பாலிடெக்னிக்குகளையும்
அரசாங்கத்தின் சார்பிலே எடுத்துக் கொண்டிருந்தால்தான்,
அங்கே மார்க்குகள் அடிப்படையில், அந்த ஏழை மாணவர்கள்
வந்திருப்பார்கள். அவர்களுக்கு அந்த வாய்ப்பு இப்போது மறுக்
கப்படும் இல்லையா ? ஆகவே, புதிய இன்ஜினியரிங் கல்லூரி
களையும், பாலிடெக்னிக்குகளையும தனியார் வசம் ஒப்படைப்
பதை ஒரு பின் நோக்கிச் செல்கின்ற கொள்கை என்று இந்த
நேரத்திலே நான் கூறவிரும்புகின்றேன். அடுத்து நாங்கள்
தொடர்ந்து அச்சப்படக் கூடிய விஷயம், இங்கே தவறாக மொழி
பெயர்த்திருக்கின்றார்கள். ஜாயிண்ட் செக்டார் என்பதற்கு நமது
நிதியமைச்சர் அவர்கள் அதை மொழி பெயர்க்கும்போது
கூட்டுறவுத் துறை என்று போட்டிருக்கிறார்கள். அதாவது



கோ ஆப்ரேடிவ் செக்டார் என்று. ஆனால் இங்கே அவர்கள்
குறிப்பிடுவது, கூட்டுத்துறை ஜாயிண்ட் செக்டார். ஆகவே அதை
இப்படி மொழி பெயர்த்திருக்கிறார்கள். தவறான வியாக்யானம்
ஏற்படும். நீங்கள் சொன்ன கருத்தைச் சொல்கிறேன். தூத்துக்குடி
பெட்ரோலியம் கெமிக்கல்ஸ் காம்பிளக்ஸ் முன்பு ஒரு பெரிய
தமிழகத்தினுடைய முதலாளி— அவர் ஒரு சிறிய மூலதனத்தைப்
போட்டு மேனேஜிங் டைரக்டர் ஆனார். இப்போது நீங்கள்
சொல்வீர்கள், அரசு ரூபாய் 60 கோடி போட்டது என்று. பொதுத்
துறையிலே 7 கூட்டுத்துறையிலே 17 உருவாக்கத் திட்ட
மிட்டு இருக்கிறார்கள். அரசாங்கத்தினுடைய பணத்தை ஏராள
மாகப் போட்டு அவர்கள் அதைத் கொள்ளையடிப்பதற்காக—
ஏன் அந்த 17 திட்டங்களையும் கூட பொதுத்துறையிலே
கொண்டு வரமுடியாதா ? கூட்டுத்துறை என்றால் என்ன
தெரியுமா ? அரசாங்கம் அரிசி கொண்டுவரவேண்டும். முதலாளி
கள் உமியைக் கொண்டு வாருங்கள். இரண்டு பேரும் சேர்ந்து
ஊதி ஊதி அரிசியை சாப்பிடுவார்கள். அதாவது முதலாளிகள்
அரசாங்கத்தினுடைய அரிசியை சாப்பிடுவார்கள். அவர்கள்ஒன்றும்
கொண்டு வரமாட்டார்கள். அவர்கள் போட்டது ரூபாய் 1 கோடி
ரூபாய் 45 கோடியை அரசாங்கம் போட்டு, அவர் எம். டி.
ஆனார். இது எப்படி சோஷலிசம் ? எப்படி இந்த தமிழ்நாட்டி
லுள்ள 5 கோடி மக்களுக்கு அது பயன்படும் ? வேறு பாஷையிலே
சொல்லவேண்டுமென்றால், அவர்கள் போடக் கூடிய தொழிலை
தனியார் துறையிலே விட்டுவிடுங்கள். அரசாங்கம் போடவேண்
டியதை பொதுத்துறையிலே போடுங்கள். இந்த கூட்டுத்துறை
என்பது அவர்கள் புழங்குவதற்காக ஒரு ஏற்பாடு. இது இன்
றைக்குத் தேவையில்லை என்பதைக் கூற விரும்புகிறேன்.

கனிம வள நிறுவனம் கொண்டுவந்தீர்கள். அதேபோல,
தமிழ்நாடு மேக்னசைட்டீஸ் புதிய வெப்பம் தாங்கிக்
கற்கள் உற்பத்தி செய்ய திட்டம் இட்டு இருக்கிறீர்கள். இது
பொதுத்துறையிலே சரியாக நடைபெறவில்லையா ? பொதுத்
துறையிலே இருந்தால் வேலை நடக்காது, தனிப்பட்ட முதலாளி
களின் நிர்வாகத்திலே விட்டால்தான் உற்பத்தி நடக்கும் என்பது
பிற்போக்கான வாதம். அதற்கு நாம் இரையாக வேண்டுமா ?
அதே போல இன்னொன்றையும் குறிப்பிட விரும்புகின்றேன்.
கைத்தறித் துறையைப் பொறுத்த வரவயில் இன்றுள்ள
5 56 இலட்சம் தறிகளில் 3.47 இலட்சம் தறிகளில் இன்று
கூட்டுத்துறையிலே உறுப்பினர்களாகி இருக்கிறார்கள்.
2.90 இலட்சம் நெசவாளர்கள் தனியார் தொழிலில்
இருக்கிறார்கள். அவர்களுக்கு என்ன பாதுகாப்பு ?
அவர்களையும் தீவிரமாக இந்தக் கூட்டுறவு இயக்கத்திலேகொண்டு
வருவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்கவேண்டும். எல்லா
வற்றுக்கும் மேலாக, இந்த அரசாங்கமே நியமித்த நெசவுத்
தொழிலாளர்களுக்கு என்று ஒரு கொள்கை விளக்க குறைந்த

பட்சக் கூலிச் சட்டம் அமலில் இருக்கிறது. ஆனால் இந்தக்
கூலிச்சட்டம் தமிழ்நாட்டில் எங்கேயாவது முழுமையாக அமுலாகி
யிருக்கிறதா ? மதுரையில் கைநெசவுத் தொழிலாளர்கள்
போராடினார்கள். ஆரணியிலே கைநெசவுத் தொழிலாளர்கள்
போராடினார்கள். கரூரிலே உள்ள கைநெசவுத் தொழிலாளர்கள்
போராடினார்கள். இதிலே அரசாங்கம் என்ன செய்தது என்றால்,
தானே ஒரு கூலிச் சட்டத்தைச் சொல்லி, அதைக்காட்டிலும்
குறைவாக வாங்கிக் கொள்ளும்படி, கைநெசவுத் தொழிலாளர்
களுக்கு யோசனை கூறி முடிக்கிறார்கள் என்றால் என்ன மோச
மான நிலைமை இது. நாமே குறைந்தபட்சம் என்று சொல்கி
றோம். அதற்குக் கீழே ஒரு நெசவாளி வாழமுடியாது என்று
சொல்கிறோம். அவன் தொழிற் தகராறை கிளப்பினால், அதற்
குக் குறைவான கூலியை வாங்குங்கள் என்று அரசாங்கமே உப
தேசம் பண்ணுகிறது. ஆகவே இது சரியில்லை.

(பிற்பகல் 1-20)

அடுத்து தமிழ்க் கலையைப் பற்றி நீங்கள் கூறியிருப்பதைப்
பற்றி நான் மகிழ்ச்சி அடைகிறேன். பாரதியாருடைய நூல்களை
3 தொகுதிகளாக, அதுவும் தஞ்சையில் உள்ள பல்கலைக் கழகத்
தின் மூலமாக வெளியிடுவது என்று சொல்லியிருப்பதை நான்
வரவேற்கிறேன். அதே நேரத்தில் நான் ஒரு யோசனை கூற
விரும்புகிறேன். தேசிய ஒருமைப்பாடு என்பது இருவகைப்பட்டது.
மேற்கு வங்க முதலமைச்சர் ஜோதி பாசு அவர்கள் பாரதி
யாருடைய சிலையை தமிழகத்திலேயிருந்து பெற்று, கல்கத்தா
விலே பாரதி சாலை என்று ஒரு சாலையை ஏற்படுத்தி, அந்தச்
சாலையும் திறக்கப்பட்டது. அதுபோல இந்தியாவினுடைய
தேசிய இயக்கத்திலே முக்கியமான பங்காற்றிய கவிஞர் ரவீந்திர
நாத் தாகூர் அவர்களுக்குச் சென்னையிலே ஒரு சிலை எழுப்ப
வேண்டாமா ? அப்போதுதானே தேசிய ஒருமைப்பாட்டிற்கு
முழுமையான அர்த்தம் ஏற்படும்.

இங்கே கல்வியைப் பற்றி கூறும்போது, சத்துணவுத் திட்டத்
தைப் பற்றி மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி சார்பிலே நாங்கள்
சொல்லி இருக்கிறோம். எந்த அளவிற்காவது மக்களுக்கு ஏதா
வது நிவாரணம் கிடைத்தால் அதை நாங்கள் வரவேற்கிறோம்.
ஆகவே இப்போது இலட்சக்கணக்கான மாணவர்களும், மாணவி
யர்களும் பயன் அடைகின்ற மதிய உணவிலே ஊழல் உள்ளது.
குறைபாடுகள் இருக்கின்றன என்பதை நாங்கள் சுட்டிக் காட்டி
யிருக்கிறோம். நேற்றுகூட நான் மதுரையிலே ஒரு தனியார
பள்ளியைச் சேர்ந்த ஒரு சமையற் கூடத்தைச் சென்று பார்த்த
போது ஒன்றைக் கூறினார்கள். அரசாங்கம் அதை விசாரித்துப்
பார்க்கட்டும். ஏன் சொல்கிறேன் என்றால், நீங்கள் சொல்லி
யிருக்கிறீர்கள், இந்த மதிய உணவு திட்டத்தாலே புதிதாக
1½ இலட்சம் மாணவர்களுக்கு மேல் சேர்ந்திருக்கிறார்கள்



என்று. ஆனால் பள்ளிக்கூடத்திலே உள்ள நிர்வாகிகள் சொல்
கிறார்கள். ஒரு வருடத்திலே ஜூன் மாதத்திலே எத்தனை
பிள்ளைகள் இருக்கிறார்களோ, அதைக் கணக்கிட்டுத்தான்
எங்களுக்கு அரிசி வழங்கப்படுகிறதே தவிர, அதற்குப் பின்
னாலே உயருகின்ற தொகையை கணக்கில் எடுத்துக் கொள்வது
இல்லை என்று கூறினார்கள். எது உண்மை என்பதை நீங்கள்
தான் குறிப்பிடவேண்டும். ஒரு வருடத்திலே ஜூன் மாதத்திலே
என்ன எண்ணிக்கை இருக்கின்றதோ, அதைக் கணக்கிட்டுத்தான்
கொடுக்கிறார்களே தவிர, அது கூடுதலாகிவிட்டால், அந்த
மாறுதலை எல்லாம் அவர்கள் கணக்கிடுவது இல்லை என்று அவர்
கள் சொல்கிறார்கள். இதிலே எது உண்மை என்பதை
அரசாங்கம்தான் தெளிவுபடுத்த வேண்டும்.

அது மட்டுமல்லாமல், இந்த மருத்துவமனையைப் பற்றி
ஒன்று கூற விரும்புகிறேன். இந்த கரப்ஷன். சென்னை ஜெனரல்
ஆஸ்பத்திரியிலே இருக்கக் கூடிய பல பெரிய நிபுணர்கள்,
டாக்டர்கள் அவர்கள் சொந்தத்திலே செய்து கொண்டிருக்கி
றார்கள். ஆனால் எங்களுடைய கொள்கை அரசாங்க டாக்டர்கள்
தனிப்பட்ட முறையிலே அவர்கள் மருத்துவம் செய்வதற்கு
அனுமதிக்கக்கூடாது என்பதுதான். அந்த மருத்துவ மனைக்கு
சிகிச்சைக்காக வருபவர்கள் ஏராளமான பணம் கொடுத்தால்
ஒழிய அவர்களுக்கு அந்த சிகிச்சை அளிக்கப்படமாட்டாது என்று
அவர்கள் ஆட்கள் மூலம் சொல்கிறார்கள். இந்தக் கொடுமையை
எங்கே போய்ச் சொல்வது? அது மட்டுமல்ல. அவசரமாக ஒருவர்
பொது மருத்துவ மனைக்குச் சென்றால், அங்கேயிருந்து ஒரு
குறிப்பிட்ட நர்சிங் ஹோமிங்குக்குக் கொண்டு போய்ச் சேருங்கள்,
அங்கே வந்து நாங்கள் பார்த்துக் கொள்கிறோம் என்று சொல்கி
றார்கள். இப்படி இருந்தால் இந்த மாநிலத்தில் உள்ள மக்களுக்கு
எப்படிப்பட்ட பாதுகாப்பைக் கொடுக்க முடியும் என்பதை
சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

அடுத்து, இங்கே நீங்கள் கூறியிருப்பதிலே ஒன்று. சித்த
மருத்துவத்தையும், அலோபதியையும், யுனானி முறைகளை
யும் இன்று பல துறைகளாகக் கருதி, அதன் மூலமாக நிவாரணம்
மக்களுக்குக் கிடைக்க வேண்டும் என்று நாங்கள் சொல்லிக்
கொண்டு வருகிறோம். இப்போது நீங்கள் அதற்காகக்
கொண்டு வந்து இருக்கக்கூடிய ஆலோசனைக் குழுவையும் மற்ற
ஏற்பாடுகளையும் வரவேற்கிறேன். ஆனால் ஒன்று கேட்க
விரும்புகிறேன். கடந்த 3, 4 வருஷங்களாகக் கூறுகிறோம்.
சித்த மருந்துகளை கடைகளிலே கிடைக்கக்கூடிய வகையிலே—
தலைவலிக்கு, சாதாரண காய்ச்சலுக்கு என்று—நீங்கள் மக்
களுக்கு கிடைக்கச் செய்தால் நல்லது. அதற்காக அரசாங்கம்
இதுவரையில் நடவடிக்கை எடுக்கவில்லை. அவைகள் எங்
கேயோ அடங்கிக் கிடக்கின்றன. சாதாரணமாக கேப்சில்,

மெடிசின்ஸ் போல் இது எல்லாக் கடைகளிலேயும் இந்த சித்த
மருந்துகள் கிடைக்க ஏற்பாடுகள் செய்ய வேண்டும். தமிழ
கத்தில் உள்ள மக்கள் சித்த மருத்துவத்திற்குப் பழக்கப்பட்ட
வர்கள். ஆனால் அவர்களுக்கு எப்படி யாரை நம்புவது?
இந்த சித்த வைத்தியத்திலே தேர்ச்சி பெற்றவர்கள் என்று
யாரை நம்புவது என்று தான் தெரியவில்லை. எனவே சித்த
மருந்துகள் ஏராளமாக விற்பனையானால் அவர்களுக்கு
நன்மை பயப்பதாக இருக்கும்.

அதுமட்டுமல்லாமல், நீங்கள் மறுபடியும் இந்தக் குடிநீர்
வழங்கப்படுவதற்காக உலக வங்கியிடத்திலே 149.42 கோடி
ரூபாய் கடனாக வாங்க பேச்சு வார்த்தை முடிந்து விட்டது
என்று கூறுகிறீர்கள். எனக்குப் பயமாக இருக்கிறது.

கோயம்புத்தூர், சேலம், மதுரை இவைகளில் குடிநீர் வழங்கு
வதற்காக 149.42 கோடி ரூபாயை உலக வங்கியிலிருந்து கடன்
வாங்கினால் என்ன வட்டி? அது பூராவையும் அந்த நகரத்தில்
வாழக்கூடிய சாதாரண மக்கள் சுமக்க வேண்டுமா? அது நீதி
அல்ல. ஆலோசனைக்குரியது. ஆகவே நான் அரசாங்கத்தை
எச்சரிக்கை செய்ய விரும்புகிறேன், பல்வேறு திட்டங்களுக்கும்
உலக வங்கியிடமிருந்து கடன், உலக வங்கியிடமிருந்து கடன்
என்று ஒரு சுருக்கமான பாதையை நீங்கள் எழுப்பினால்,
அது மக்களுடைய கழுத்திலே சுருக்குக் கயிராக மாறக்கூடிய
அபாயம் இருக்கிறது என்பதை இந்த நேரத்திலே நான்
கூற விரும்புகிறேன்.

அடுத்து, ஒன்றிரண்டு விஷயங்களை மட்டும் நான் கூறி,
முடிக்கலாம் என்று கருதுகிறேன். ஏராளமான மத்திய தர
மக்கள் வீட்டு வாடகை உயர்வினால் பாதிக்கப்பட்டிருக்கிறார்
கள். அவர்களுக்கு பாதுகாப்பு இல்லை. ஆகவே, அரசாங்
கம் ஒரு வீட்டு வாடகை கண்டிரோல் சட்டத்தை கொண்டு வந்து
தீவிரமாக அமல் படுத்த வேண்டும். வேறு பல மாநிலங்களில்
உபரியாக இருக்கக்கூடிய வீடுகளை அரசாங்கம் தன்னுடைய
பொறுப்பிலே வைத்து, அதை வாடகைக்கு கேட்பவர்களுக்கு
அலாட் செய்யக்கூடிய வழக்கம் இருக்கிறது, வாடகைக்
காக. அந்த வாடகை அந்த வீட்டுக்காரர்களுக்கே சொந்த
மாகும்.

இன்று தமிழகத்தில் உள்ள பல லட்சக்கணக்கான மத்திய
தர மக்கள், மத்திய தர மக்களைக் காட்டிலும் குறைந்த வரு
மானம் உள்ளவர்கள், வீடு கிடைக்காமல் நகரங்களிலே அல்லல்
படுகிறார்கள். ஆனால் கார்ப்பொரேஷனுக்கோ, முனிசிபாலிட்
டிக்கோ அவர்கள் சரியாக வீட்டு வரி செலுத்துவதில்லை. கேட்
டால் வீட்டு வாடகையைக் குறைத்துச் சொல்லும்படி சொல்லு
கிறார்கள். ஆனால் உயர்ந்த விதமாக வசூலிக்கிறார்கள். இத





னால் அரசாங்கத்தை இரண்டு வகைகளிலே பாதிக்கிறது.
ஆகவே மக்களுக்கு அந்த நிவாரணம் கிடைக்க ஏற்பாடு
செய்ய வேண்டும் என்று நான் கேட்க விரும்புகிறேன்.

மாநில அரசு ஊழியர்களுக்கு போனஸ் என்ற பிரச்னை பற்றி
அரசாங்கம் கூறியது. ஆனால் அது பற்றி அறிவிப்பு எதுவும்
வரவில்லை. மத்திய சர்க்கார் அது பற்றி அறிவிப்பு வெளி
யிட்டிருக்கிறார்கள். அதேபோல இன்று வேலை வாய்ப்பு இல்
லாமல் பாதிக்கக்கூடிய மக்களுக்கு ஓரளவிற்கு நிவாரணம்,
ஒரு மாநில சர்க்கார் என்ற அளவிலே, முடிந்த அளவுக்கு
நீங்கள் செய்ய வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்ள
விரும்புகிறேன். வேறு சில மாநிலங்களிலே அது அமலுக்கு
இருக்கிறது. இடதுசாரி முன்னணி ஆட்சியிலிருக்கிற மேற்கு
வங்காளத்திலும், ஆட்சி நடத்திய கேரளாவிலும், அது அம
லுக்கு கொண்டு வரப்பட்டது. அது போல லட்சக்கணக்கான
விவசாய தொழிலாளிக்கு பென்ஷன் திட்டம் அமலுக்கு கொண்டு
வரப்பட்டது. ஆகவே இன்றைக்கு இருக்கிற சிக்கலான சூழ்
நிலையிலே அதையும் நீங்கள் ஏற்பாடு செய்ய வேண்டும் என்று
கேட்டு, இறுதியாக தொழில் வளர்ச்சியைப் பற்றி நான் குறி
பிடக் கூடிய நேரத்திலே, இதே சென்னையை சுற்றி, பல்லா
வரம் பிரதேசத்தில் இருக்கும் பம்மல் பிராந்தியத்தில் 4 தொழிற்
சாலைகள் மூடியிருக்கின்றன: எல்போர்ஜ், புரோடல் கேஸ்
டிங்க்ஸ், லெட் லெதர், கார்த்திக் கார்ட்டன் கம்பெனி என்று
இவைகளிலே 700 பேர்கள் வேலை செய்யக் கூடிய நிலை.
அந்தக் கம்பெனிகள் மூடப்பட்டிருக்கின்றன. அதிலே அந்த
எல்போர்ஜ் என்பவன் என்ன செய்கிறான் தெரியுமா, ஹோசூரிலே
கொண்டு போய் வேறு கம்பெனியை ஆரம்பித்து விட்டு, இங்கே
மூடியிருக்கிறான். இது ஏன்? இதற்கு ஏன் அரசாங்கம் அனு
மதிக்க வேண்டும்? இங்கே உள்ள தொழிலாளர்களின் வேலை
வாய்ப்பை நசுக்கிவிட்டு, அவர்கள் தப்பித்துக் கொள்வதற்காக
அங்கே போய், புதியதாக ஒரு பேக்டரியை ஆரம்பித்து விட்டு,
இதை மூடியிருக்கிறான்.

அவர்கள் எல்லாம் மிகுந்த சிரமப்படுகிறார்கள். ஆகவே,
இந்த 4 தொழிற்சாலைகளை மீண்டும் திறப்பதற்கும், அந்த
தொழிலாளர்களுக்கு வேலை வாய்ப்பு கொடுப்பதற்கும் அர
சாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டு,
கடைசியாக, மாணவர்கள் இன்றைக்கு கூறுகிறார்கள், அர
சாங்கத்திடமிருந்து விளக்கம் பெற விரும்புகிறேன். சென்னை
சர்வகலாசாலை மாணவர்களுடைய பரீட்சை தாள்களில் மார்க்
குகள் தவறான முறையிலே போடுகிறார்கள் என்று சொல்கி
றார்கள். அது பற்றி ஒரு கிளர்ச்சி நடந்து கொண்டு வருகி
றது. இது யாருடைய கோளாறு என்று அரசாங்கம் பார்க்க
வேண்டும்.

## உள்ளடக்கம்.

பக்கங்கள்

14—3—1984


1. வினாக்கள்—விடைகள்

உடுக்குறியிட்ட வினாக்கள் .. .. 489—523

2. தகவல் கோரல் :

(அ) தென் மாவட்டங்களில், வெள்ளத்தால் சீர்குலைந்த மின்சார விநியோகத்தைச் சீர்செய்தல் 523—525

(ஆ) தமிழகத்திற்கு மத்திய இருப்பில் இருந்து கிடைக்கும் அரிசி உதவி .. .. .. .. 525

(இ) எண்ணூர் அனல் மின் நிலையத்திற்கு சிங்கரேணியிலிருந்து கிடைக்கும் நிலக்கரி .. .. 525—526

(ஈ) பேரவை அலுவல், மேலவைத் தேர்தலை முன்னிட்டு ஒருநாள் தள்ளிவைக்கப்பெறுவது .. 548—549

3. கவன ஈர்ப்பு :

மாணவர்கள் பயன்படுத்தும் குறிப்பேடுகளின் விலை .. .. .. .. .. 526—529

4 வரவு-செலவுத் திட்டம் 1984–85 பொது விவாதம் : (தொடர்ச்சி) 529—578

திரு. கே. எஸ். ஜி. ஹாஜா செரீப் .. .. 529—548

மாண்புமிகு டாக்டர் எம். ஜி. இராமச்சந்திரன் 540, 542—545, 576,

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் 549—578

5. பேரவை முன் வைக்கப்பெற்ற ஏடுகள் .. .. 579

அதுமட்டும் அல்ல. சென்னை சர்வகலாசாலை மாணவர்களுக்கு மார்க்லிஸ்ட் கொடுப்பதற்கு காலதாமதம் ஏற்படுவதினால் அவர்கள் பட்ட மேற்படிப்புக்கு செல்ல முடியாமல் பாதிக்கப்படுகிறார்கள் என்று புகார்கள் வந்து கொண்டிருப்பதையும் அரசாங்கத்தினுடைய கவனத்திற்குக் கொண்டு வந்து, எதிர்க்கட்சிகள் சொல்லியிருக்கக்கூடிய, அந்த விமர்சனங்களின் அடிப்படையிலே வரவு செலவுத் திட்டத்திலே, கொள்கை ரீதியிலே தேவையான மாற்றங்களைச் செய்து, தமிழகத்திலே உள்ள 5 கோடிக்கும் அதிகமான மக்களுக்கு ஒரு மாநில அரசாங்கத்தினுடைய அதிகாரத்திற்கு உட்பட்டு, தேவையான நன்மைகளைச் செய்வதற்கு இந்த அரசாங்கம் முன் வரவேண்டும் என்று வற்புறுத்தி, அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவையின் இன்றைய அலுவல்களை இத்துடன் முடிவுற்று, 14-3-1984 காலை 9-00 மணிக்குப் பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை பிற்பகல் 1-28 மணிக்கு ஒத்தி வைக்கப் பெற்றது.

## 5. பேரவை முன் வைக்கப்பெற்ற ஏடுகள்.

எதுவுமில்லை:

---

(ஆ) சென்னைப் பல்கலைக் கழகத்தில் தேர்வு முடிவுகளை வெளியிடுவதிலான தாமதத்தைத் தவிர்க்க மைய மதிப்பீட்டு முறை அமுலாக்கப்பட்டுள்ளது. இம் மைய மதிப்பீட்டு முறையினால் தேர்வு முடிவுகள் காலதாமதம் ஆகாது என பல்கலைக் கழகம் தெரிவித்துள்ளது.

**திரு. என். பழனிவேல் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கல்லூரி மாணவர்களுடைய தேர்வு முடிவுகள் வெளி யாவது சென்னைப் பல்கலைக் கழகத்திலே தாமதமானதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அதற்குக் காரணம் என்ன என்பதை அறிய விரும்புவதோடு இம்மாதிரி தேர்வு முடிவுகள் வெளியாவதில் காலதாமதம் ஆவதாலே மாணவர்களுடைய மேற்படிப்பு மற்ற விஷயங்கள் பாதிக்கப் படுகின்றன என்பதை அரசு அறியுமா ?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** தலைவர் அவர்களே, இந்தத் தேர்வு முடிவுகளைத் தாமதமாக வெளியிட்டதற்குக் காரணம் சில சந்தர்ப்பங்களில் தேர்வுகளைத் தள்ளிப்போட்டது ஒன்று. இன்னொன்று, தேர்வுகள் முடிந்ததற்குப் பிறகு விடைத் தாள்களை ஆசிரியர்களுக்கு அனுப்புகிறார்கள். ஆசிரியர்கள் அவைகளைத் திருத்தியனுப்புவதிலே காலதாமதம் ஆகிறது. அதற் குப் பிறகு அவைகளையெல்லாம் பல்கலைக் கழக அலுவலகத் திலே எழுதி மறுபடியும் தேர்வு முடிவுகளை வெளியிடுவதில் கால தாமதம் ஏற்பட்டு வந்தது. இப்பொழுது அந்தக் காலதாமதத் தைத் தவிர்ப்பதற்காக " மைய மதிப்பீட்டு முறை " என்ற முறையை—மற்ற பல்கலைக் கழகங்களிலே இருக்கின்ற முறையைப் போல்—கொண்டுவந்திருக்கிறார்கள். அது வந்ததற்குப் பிறகு ஓரளவுக்குக் காலதாமதம் குறைந்து சென்ற ஆண்டிலிருந்து முறை யாக அவ்வளவு காலதாமதம் ஆகாமல் முடிவுகள் இப்போது வெளியிடப்படுகின்றன. காலதாமதமானால் மாணவர்கள் பாதிக் கப்படுகிறார்கள் என்பது உண்மைதான். அதனால்தான் அரசு அதிலே அக்கறை எடுத்துக் கொண்டு காலதாமதம் ஆகாமல் செய்வதற்கு நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிறது.

**திரு. என். பழனிவேல் :** தலைவர் அவர்களே, இந்த ஆண்டு கூட டிசம்பரில் எழுதிய பரிட்சைகளின் ரிசல்ட் இப்போதுதான் வெளியிடப்பட்டதாகச் சொல்கிறார்கள். இதனால் பெயிலான மாணவர்கள் மேற்கொண்டு தேர்வு எழுதுவதற்கும் பாடங்களைத் தயார் செய்வதற்கும் முடியாமல் போய் சிக்கல் ஏற்பட்டு விடுகிறது. ஆகவே அவர்களுடைய எதிர்காலம் பாதிக்கப் படுவதாலே இதிலே கொஞ்சம் கறாராக இருந்து பல்கலைக் கழகத்தோடு தொடர்பு கொண்டு பரிட்சை முடிவுகளை ஒரு வார காலத்திற்குள்ளாக வெளியிட ஆணை பிறப்பிக்கப் படுமா ?





**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** தலைவர் அவர் களே, அது அந்தப் பல்கலைக் கழகத்தினுடைய வரம்பிற்குட் பட்டது. இந்த மாதிரி இதிலே காலதாமதம் ஏற்படக்கூடாது என்று நாம் சொல்லலாம். ஆனால் அதற்கு மேலே அரசு நட வடிக்கை எடுத்திருக்கிறது. இதற்காக ஒரு குழுவை நாம் அமைத்தி ருக்கிறோம. அதற்கான காரணங்கள் என்ன என்பதை எல்லாம் ஆராய்ந்து யோசனை சொல்ல வேண்டுமென்ற முறையிலே கேட்டு இருக்கிறோம். மதுரை காமராஜ் பல்கலைக் கழகத்தின் துணை வேந்தராக இருக்கும் திரு. இராமச்சந்திரன் அவர்கள் அந்தக் குழு விற்குத் தலைவராக இருக்கிறார். அண்ணா பல்கலைக் கழகத் தின் துணைவேந்தராக இருக்கும் திரு. வி. சி. குழந்தைசாமி அவர்கள், பாரதிதாசன் பல்கலைக் கழகத் துணை வேந்தர் திரு. மணிசுந்தரம் ஆகியவர்கள் அதிலே உறுப்பினர்களாக இருக்கிறார் கள். அதிலே சென்னைப் பல்கலைக் கழகத்தினுடைய பிரதிநிதி ஒருவரும் இருப்பார். அதைப்பற்றி ஆராய்ந்து யோசனை சொல் லும்படி அரசு கேட்டிருக்கிறது.

**திரு. ரா. கிருஷ்ணன் :** தலைவர் அவர்களே, மைய மதிப் முறையில்—சென்ட்ரல் வேல்யுவேஷன்—சென்னைப் பல்கலைக் கழகத்திலே சில குறைபாடுகளும் முறைகேடுகளும் ஏற்பட்டதாக 2 நாட்களுக்கு முன்னதாக 'ஹிந்து' பத்திரிகையிலே செய்தி வந்ததே, அதைப் பற்றி அரசு அறியுமா ? அதைப் பற்றிய தகவல் தெரிவிப்பார்களா ?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** தலைவர் அவர்களே, அதனுடைய விவரங்கள் இல்லை. அதைப் பற்றி மாண்புமிகு உறுப்பினர் கேட்டிருக்கிறார் என்று கருதுகிறேன். (குறுக்கீடு) அது வரும்போது அந்தப் பதிலைத் தருகிறேன். மைய மதிப்பீட்டு முறையில் ஒவ்வொரு வருடமும் திருத்துகிற ஆசிரியர்களைக் கேட்டு இருக்கிற குறைபாடுகளையெல்லாம் அவ்வப்போது நாம் களைந்து வருகிறோம்.

**திரு. இரா. தாமரைக்கனி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது மே-ஏப்ரல் மாதங்களில் மாணவர் களுக்குப் பரிட்சைகள் வர இருக்கின்றன. இந் நேரத்தில் தமிழ கத்தில் வெள்ளம ஏற்பட்டு இருக்கிற காரணத்தால் மாணவர் களுடைய புத்தகங்கள் எல்லாம் வெள்ளத்தினால் அடித்துச் செல்லப்பட்டு இருக்கின்றன. இதனால் பரிட்சைகள் தள்ளி வைக்கப்படுமா? இப்படிப் புத்தகங்கள் வெள்ளத்தினால் அடித் துச் செல்லப்பட்ட மாணவர்களுக்கு இலவசமாக கொடுக்க அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாணவர்களுக்கு அப்படி ஒரு நஷ்டம் ஏற்பட்டதாக சேதம் ஏற்பட்டதாக இப்போது என்னிடத்தில் விவரங்கள் இல்லை. அதனால் இதுபற்றி பதில் கூறமுடியாத நிலையில் இருக்கிறேன். தனியாக கேள்விப் போட்டால் பதில் தரப்படும்.

**திரு. பெ. சு. திருவேங்கடம் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுபோன்று கல்லூரி மாணவர்கள் பரீட்சை எழுதி ரிசல்டு காலத்தில் வருவதில்லை. உறிய காலத்தில் வந்தால் சில மாணவர்கள் சில பாடங்களில் வெற்றி பெறாமல் இருப்பார்களானால் அந்தப் பாடத்தைச் சேர்த்து எழுவதற்குப் பணம் செலுத்த அவர்களுக்கு வசதியாக இருக்கும். ஆனால் இப்போது அனைத்துப் பாடங்களுக்கும் பணம் செலுத்தவேண்டும் என்று கல்லூரியில் வற்புறுத்துகிறார்கள். எந்தப் பாடத்தில் பெயில் ஆனோம் என்று அவர்களுக்கு விரைவாகத் தெரியாத காரணத்தால் சில மாணவர்கள் எல்லாப் பாடத்திற்கும் பணம் கட்ட வேண்டிய சூழ்நிலை இருக்கிறது. • இதைப் போக்க அரசு ஏதாவது நடவடிக்கை எடுக்குமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்ற ஆண்டு இதுபோன்று ஒரு பிரச்சினை வந்தது. அதற்குச் சில உதவிகளைச் செய்ததாக என்னுடைய நினைவு. இந்த ஆண்டு இப்படி ஒரு பிரச்சினை இருப்பதாக என்னுடைய கவனத்திற்கு வரவில்லை. வந்தால் அதைப்பற்றி ஆலோசிக்குமாறு பல்கலைக்கழகத்தை நாம கேட்டுக்கொள்ளலாம்.

### அமைச்சுப் பணியிலுள்ள தகுதிபெற்ற எழுத்தர்களுக்கு ஆசிரியர் பதவி அளிக்கும் திட்டம்.

306—(*வினா எண். 20379)—**திரு. செ. இராமலிங்கம் :** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

கல்வித் துறையில் அமைச்சுப் பணியில் உள்ள ஆசிரியர் தகுதிபெற்ற எழுத்தர்களுக்கு ஆசிரியர் பதவி அளிக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?





**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** தமிழ்நாடு அமைச்சுப் பணி உட்பட இதர பணிகளில் உள்ள முழுத்தகுதி பெற்றவர்கள் பட்டதாரி ஆசிரியர்களாகவும், மேல் நிலைத் தமிழாசிரியர்களாகவும். மேல்நிலைக் கல்விப் பணியில் முதுநிலை பட்டதாரி ஆசிரியர்களாகவும், மொழியாசிரியர்களாகவும் நியமனம் பெற தமிழ்நாடு கல்வி சார்நிலைப் பணி சிறப்பு விதிகள் மற்றும் தமிழ்நாடு மேல்நிலைக் கல்விப் பணி விதி 2(a) (ii)ன்படி வகை செய்யப்பட்டுள்ளன. மேற் குறித்த பதவிகளில் நியமனம் பெறத் தகுதிபெற்ற ஆசிரியர்கள் எவரும் இல்லாதபொழுது தகுதி பெற்ற அமைச்சுப் பணியாளர்களுக்கு இப் பதவிகளில் பதவி உயர்வு அளிக்கப்படுகிறது.

### திண்டுக்கல்-விளையாட்டுத் திடல் அமைக்கும் திட்டம்.

307—(*வினா எண். 20429)—**திரு. வேடசந்தூர் வி. பி. பால சுப்பிரமணியன் :** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

திண்டுக்கல் நகரில் 'விளையாட்டுத் திடல்' அமைப்பதில் காலதாமதம் ஏற்படக் காரணம் என்ன?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** ஓர் விவர அறிக்கை * அவை முன் வைக்கப்பட்டுள்ளது.

**திரு. என். வரதராஜன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திண்டுக்கல்லில் இந்த விளையாட்டுத் திடல் கட்டுவதற்கு அரசு பணம் ஒதுக்கியும், அதற்கான வரைபடங்களை ஏற்றுக்கொண்டும், காண்டிராக்ட் ஒப்பந்தம் முடித்தும், வேலைகள் துவங்குகிறபோது பக்கத்துல் கோயில் என்ற பெயராலே வைத்துக் கொண்டு, திண்டுக்கல் நகர மக்களுக்குப் புறம்பாக, அரசு கொள்கைக்குப் புறம்பாக, அரசு திட்டங்களுக்குப் புறம்பாக சில சமூகவிரோதிகள் உபயோகித்து வருகிற அந்தக் கட்டிடத்தைத் தகர்த்து எறிவதற்கு அதன் மீது அதிகாரிகள் சரியான நடவடிக்கை எடுக்காமல் இருக்கிறார்கள். அதைத் தடுத்து நிறுத்தி இந்தத் திட்டத்தைத் துரிதமாக அமுல் நடத்துவதற்கு அரசு முயற்சிக்குமா என்று அறிய விருமபுகிறேன்.

---

*579—580-ம் பக்கங்களில் இணைப்பு I ஆக அச்சிடப்பெற்றுள்ளது.

## தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை.

**புதன்கிழமை 1984, மார்ச் 14.**

**பங்குனி 1, ருத்ரோத்காரி—திருவள்ளுவர் ஆண்டு 2015.**

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9—00 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. க. இராசாராம் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :**

*" முகம்நோக்கி நிற்க அமையும் அகம்நோக்கி*
*உற்றது உணர்வார்ப் பெறின் ".*

ஒருவனுடைய உள்ளத்தைக் குறிப்பால் அறிந்து அவனுக்கு உற்றதை உணரக் கூடியவரைப் பெற்றால், அவன் அவர் முகம் நோக்கி நிற்றல் ஒன்றே போதும். வாயினாலோ, செய்கையினாலோ வேறு எத்தகைய குறிப்பினாலோ அவருக்குத் தன் நிலையை அவன் தெரிவிக்க வேண்டியதே இல்லை.

### 1. வினாக்கள்—விடைகள்.

### உடுக்குறியிட்ட வினாக்கள்.

**கல்லூரி மாணவர்களின் தேர்வு முடிவுகளை வெளியிடுவதில் ஏற்படும் தாமதத்தைத் தவிர்க்கும் திட்டம்.**

*305—(* வினா எண். 16890)*—திரு. என். பழனிவேல் மற்றும் திரு. எஸ். இராகாராமன் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் கல்லூரி மாணவர்களின் தேர்வு முடிவுகள் வெளியிடப்படுவதில் காலதாமதம் ஏற்படுவதை அரசு அறியுமா ?

(ஆ) ஆம் எனில், இதைத் தவிர்க்க மைய மதிப்பீட்டு முறையை (Central Valuation) அமுல் படுத்த பல்கலைக் கழகங்களுக்கு அரசு பரிந்துரை செய்யுமா ?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** (அ) கல்லூரி மாணவர்களின் தேர்வு முடிவுகளை வெளியிடுவதில், சென்னைப் பல்கலைக் கழகத்தில் தாமதம் இருந்து வந்துள்ளது. சென்னையைத் தவிர மற்ற பல்கலைக் கழகங்களின் தேர்வு முடிவுகள் பெரும்பாலும் குறித்த காலத்தில் வெளியிடப்பட்டுள்ளன.

[1984 மார்ச் 14

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்** : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னிடத்தில் தரப்பட்டு இருக்கிற குறிப்பில் ஐயப்ப பக்தர்கள் கோயில் கட்ட அந்த இடத்தை ஆக்கிரமிப்பு செய்து இருக்கிறார்கள் என்று இருக்கிறது. சமூக விரோதிகள் என்று இதில் தரப்படவில்லை. ஆனால் ஐயப்ப பக்தர்கள் என்ற பெயரில் ஒன்றைச் செய்து இருக்கிறார்கள். அதன் மீது அரசு நடவடிக்கை எடுப்பதற்கு முடியாது என்ற காரணம் அல்ல. நடவடிக்கை எடுத்தால் மத அடிப்படையில் பொதுமக்களிடமிருந்து அதற்கு எதிர்ப்பு ஏற்பட்டு விடும் என்ற காரணத்தால் இப்படி ஒரு முடிவை நாம் எடுத்து இருக்கிறோம்.

(முற்பகல் 9-10)

**திரு. தி. கா. நல்லப்பன்** : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த இடத்தைப் பொறுத்தவரையிலும் 1976 ஆம் ஆண்டு முதல் தொடர்ந்து முயற்சி செய்து பல்வேறு இடர்பாடுகளுக்குப் பின்பு 1983 ஆம் ஆண்டு மே மாதமே நிதி ஒதுக்கப்பட்டிருக்கிறது. ஆனால், 1983 ஆம் ஆண்டு மே மாதத்தில் நிதி ஒதுக்கியதிலிருந்து இன்றுவரையில் வரைபடம் போட்டு வேலை செய்யக்கூடிய நிலை இல்லாமல் இருக்கிறது. ஆகவே, இந்தக் காலதாமதத்தால் வேறுவிதமான அசம்பாவிதங்கள் அல்லது ஆக்கிரமிப்புகள் ஏற்படுகின்ற நிலையைப் போக்குவதற்கு அரசு துரித நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்** : மாண்புமிகு தலைவர் அவர்களே, இப்பொழுது வேலி போட்டுக் கொண்டிருக்கிறார்கள். புதிய மதிப்பீடுகளை அரசு பரிசீலித்துத் தக்க முடிவை எடுக்கும்.

**திரு. ரா. உமாநாத்** : மாண்புமிகு தலைவரவர்களே, பக்தர்களுடைய மனத்தைப் புண்படுத்தக்கூடிய ஒரு செய்கையிலே சர்க்கார் இறங்கினால் எதிர்ப்பு வரும் என்ற வாதத்தை மாண்புமிகு அமைச்சரவர்கள் முன் வைத்தார்கள். நான் கேட்க விரும்புவது, விளையாட்டு மைதானத்திற்கு என்று ஒதுக்கப்பட்ட பிறகு என்க்ரோச்மெண்ட் நடக்கின்ற நேரத்திலே அங்கேயிருக்கின்ற அதிகாரிகள் நடவடிக்கை எடுக்கவில்லை. இப்படி நடவடிக்கை எடுக்கவில்லையென்றால். இன்றைக்குக் கோயில், கோயில் என்று வசூலிக்க ஏற்பாடு செய்து கொண்டிருக்கிறார்கள். அரசாங்கம் பொதுமக்களின் நலன்களுக்காகச் செய்யக்கூடிய இப்படிப்பட்ட திட்டங்களில் ''என்க்ரோச்மெண்ட்'' மேலும் நடக்கும். அதற்கு என்ன செய்யப்படுகிறது ?



1984 மார்ச் 14]

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்** : மாண்புமிகு தலைவர் அவர்களே, அதிகாரிகள் எச்சரிக்கையாக இருக்க வேண்டுமென்பதை நானும் ஒத்துக்கொள்கிறேன். ஆனால் பொதுமக்கள் பக்தி என்ற அடிப்படையிலே கோயில் கட்டுவது என்ற அடிப்படையில் பொது நன்மைக்கான இடத்தில் இப்படிப் போய்ச் செய்வது சரியானது அல்ல என்று குறிப்பாகச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். ஆனால், நாம் தலையிடுகின்ற நேரத்தில் எதிர்ப்பைக் கிளப்புகிறார்கள். அப்பொழுது யார் எதிர்க்கிறார்கள் என்பது அல்ல. ஒரு மத அடிப்படையிலே அந்தப் பிரச்னை கிளம்புகின்றபொழுது அரசுக்குச் சங்கடமான நிலை ஏற்பட்டு விடுகிறது. பொது மக்கள் கொஞ்சம் விழிப்பாகவும், இது போன்ற நிலைமைகளிலே கொஞ்சம் எச்சரிக்கையோடும் இருக்க வேண்டுமென்று நான் இந்த நேரத்தில் கேட்டுக் கொள்கிறேன். இப்படிப்பட்ட கோயில் கட்டுவது போன்றவைகளை முறைப்படுத்தி, எங்கே கட்டுவது என்பதை எல்லாம் கொஞ்சம் சிந்தித்துச் செய்ய வேண்டுமென்று நான் பக்தர்களைக் கேட்டுக்கொள்ள வேண்டியவனாக இருக்கிறேன். நினைத்த இடங்களில், ரோடு போன்ற இடங்களில் கட்டிக் கொண்டிருக்கிறார்கள். அப்படிக் கட்டுவது ஆண்டவனைக்கூட மதிப்பதாகத் தெரியவில்லை. நல்ல முறையில் கடவுள் மீது நம்பிக்கை கொண்டவர்கள், ஆண்டவன் மீது நம்பிக்கை கொண்டவர்கள் இப்படிச் செய்வார்களா என்ற சந்தேகம் கூட நமக்கு ஏற்படுகிறது. ஆகவே, நல்ல மரியாதை செய்ய வேண்டுமென்றால், ஆண்டவனை வழிபாடு செய்கின்ற விதத்தில் கோயில்களைக் கட்டுவார்களேயானால் அதை யாரும் ஆட்சேபிக்க மாட்டார்கள். எல்லாப் பொது மக்களுக்கும் நன்மையாக இருக்கும் இடத்தை ஒதுக்கிய பிறகு அதில் கோயில் கட்டுவது என்பது—நாம் இடத்தை ஒதுக்கித் தந்துவிட்டாலும், அந்தச் செயல் கண்டிக்கத் தக்கது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்** : திண்டுக்கல் நகரில் ''விளையாட்டுத் திடல்'' அமைப்பதில் கால தாமதம் ஏற்படக் காரணம் என்ன என்பது மூலக் கேள்வி. அது சம்பந்தமாகக் கேள்வி கேட்க வேண்டும். கோயில்களைப் பற்றிய கேள்வியாகப் போய்க் கொண்டிருப்பது போல் இருக்கிறது.

**திரு. இரா. கருப்பையா** : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விளையாட்டுகளுக்காக விளையாட்டு மைதானத்திற்கு என்று ஒதுக்கப்பட்ட இடத்தில் இந்தக் கோயிலைக் கட்டி உள்ளார்கள். அமைச்சவரவர்கள் கூறுவதைப் பார்த்தால் இது ஏதோ திடீரென்று ஒரு நாளிலே உருவாக்கப்பட்டுவிட்டதாக இந்தப் பதிலிலிருந்து தெரியவில்லை. முறையாக, பெரிய கட்டிடமாக இந்தக் கோயிலைக் கட்டியிருக்கிறார்கள். 4,000 சதுர அடி பரப்பிலே கட்டியிருக்கிறார்கள் என்பது இருக்கின்ற

தகவல். இது திண்டுக்கல் நகராட்சி எல்லைக்குள்ளே இருக்கின்ற பகுதி. நகராட்சி எல்லைக்குள்ளே இந்தக் கட்டிடத்தைக் கட்டுவது என்றால், நகராட்சியின் அனுமதியைப் பெற்றுதான் கட்ட வேண்டும். பில்டிங் ரெகுலேஷன்கள் இருக்கின்றன. கட்டிடம் கட்டுவதற்கு வரைபடம் கொடுத்து, அதற்கான அனுமதியைப் பெற்றுதான் கட்ட வேண்டுமென்று அரசு விதியிருக்கிறது. ஆனால் அந்தக் கோயிலைக் கட்ட அனுமதி கொடுத்த அதிகாரிகள் யார்? அம் மாதிரி கட்டுவதற்கு எவ்வளவு காலம் பிடித்திருக்கும் என்பது தெரியும். அந்த அளவிற்கு அரசு எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்காமல் அதிகாரிகள் மௌனமாக இதை விட்டுவைத்ததன் நோக்கம் என்ன? காரணம் என்ன? அவர்கள் மீது நடவடிக்கை எடுப்பார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: மாண்புமிகு தலைவர் அவர்களே, குடிசைகள் போட்டிருக்கிறார்கள். அந்தக் குடிசைகளைப் போடுகின்றபொழுது அந்தக் கோயிலும் வந்து இருக்கிறது. குடிசைகளை அகற்றிவிட்டார்கள். தனிப்பட்டவர்கள் என்ற காரணத்தால் குடிசைகளை அகற்றிவிட்டார்கள். ஆனால் கோயில் என்று வரும்பொழுது நடவடிக்கை எடுப்பதற்கு அஞ்சுவதற்குக் காரணம் கடவுளைக் கண்டு பயந்துகூட இருக்கலாம். ஆகவே இதிலே ஏதாவது செய்தால் நமக்கு ஏதாவது ஏற்பட்டு விடுமோ என்ற பயத்தின் காரணமாக ஒரு வேளை அவர்கள் செய்யாமல் இருக்கலாம். எப்படியோ ஒருவிதத்தில் அந்தக் கோயில் இருக்கின்றது. அதற்கு இடத்தை ஒதுக்கி விட்டோம். எனவே இப்போது பிரச்சினை இல்லை. இப்போது விளையாட்டு அரங்கம் கட்டுவதற்குத் தேவையான நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

தர்மபுரியில் விளையாட்டு அரங்கம் கட்டும் திட்டம்.

308—(*வினா எண். 20601)—திரு. சி. கணேசன்: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தர்மபுரியில் ஸ்டேடியம் கட்டும் திட்டம் பற்றிய அரசின் செயற்குறிப்பு தற்போது எந் நிலையில் உள்ளது?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: தலைவர் அவர்களே, தர்மபுரியில் விளையாட்டு அரங்கம் கட்டுமானப் பணிகள் முடிவடைந்து அது துவக்கப்பட்டு விட்டது என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்,





திரு. சி. கணேசன்: தலைவர் அவர்களே, பொதுவாகவே தமிழகத்தில் செங்கற்பட்டு நகராட்சி மாதிரி ஸ்டேடியமே இல்லாத நகராட்சிகள் இருக்கின்றன. அப்படிப்பட்ட நகராட்சிகளுக்கு முக்கியத்துவம் கொடுத்து ஸ்டேடியம் கட்டித்தர ஏதாவது செயற் குறிப்பு இருக்கின்றதா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: தலைவர் அவர்களே, நாங்கள் இப்போது தஞ்சாவூர், தர்மபுரி, புதுக்கோட்டை ஆகிய மாவட்டங்களுக்கு அனுமதி வழங்கி இருக்கிறோம். அடுத்து நீலகிரி, பெரியார் மாவட்டங்களில் கட்டுவதற்கான கருத்துரு அரசின் பரிசீலனையில் இருக்கின்றது. அதற்கடுத்த ஆண்டு வருகின்றபோது செங்கற்பட்டு பற்றி நாம் பரிசீலிக்கலாம்.

திரு. இல. பலராமன்: தலைவர் அவர்களே, மாவட்டத் தலைமை இடங்களில் இது போன்ற விளையாட்டு மைதானங்களை அரசு கட்டியுள்ளது. இது வரை எத்தனை கட்டப்பட்டு இருக்கின்றன? மேலும் எத்தனை கட்ட வேண்டிய திட்டங்களை வரையறுத்திருக்கின்றது? தாலுக்கா தலைநகரங்களிலும் இது போன்று கட்ட வேண்டும் என்ற வேண்டுகோள்கள் பற்றி அரசுக்குத் தெரிந்திருக்கும் என்று நினைக்கிறேன். அதற்கான நடவடிக்கை எடுப்பதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் வாக்குறுதி தந்திருக்கிறார்கள். அது எந்த நிலையில் இப்போது இருக்கின்றது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: தலைவர் அவர்களே, இது வரையிலும் நாகர்கோவில், மதுரை, கோயம்புத்தூர், சேலம், கடலூர் காஞ்சிபுரம், செங்கற்பட்டு மாவட்டத்திற்கு காஞ்சிபுரத்திலே கட்டப்பட்டிருக்கின்றது—பாளையங்கோட்டை, திருச்சிராப்பள்ளி, வேலூர் ஆகிய இடங்களில் கட்டப்பட்டிருக்கின்றன. இப்போது தஞ்சாவூர், தர்மபுரி, புதுக்கோட்டை ஆகிய இடங்களில் கட்டப்பட்டு வருகின்றன. தர்மபுரியில் கட்டி முடிக்கப்பட்டுவிட்டது. அதன் திறப்பு விழாவிலே நான் கலந்து கொண்டேன். நீலகிரி, பெரியார் மாவட்டங்களில் கட்டுவது பற்றிய கருத்துரு அரசின் பரிசீலனையில் இருக்கின்றது. மீதி மாவட்டங்களுக்கும் நாம் கட்ட வேண்டி இருக்கின்றது. பொதுவாக இந்த விளையாட்டு அரங்கங்களைப் பொறுத்த வரையில் அவற்றைக் கட்டுவதில் தவறு இல்லை. ஆனால் அவற்றை முழுமையாகப் பயன்படுத்தக் கூடிய அளவுக்கு விளையாட்டு ஆர்வம் எல்லா பகுதிகளிலும் இல்லை என்பதை நான் குறிப்பிட விரும்புகிறேன். ஆகவே பணத்தைச் செலவழித்து விளையாட்டு அரங்கத்தைக் கட்டியதற்குப் பிறகு வருடத்திலே நான்கு ஐந்து நாட்கள்தான் அவற்றைப் பயன்படுத்துகிறார்கள் என்ற நிலைமைகள் இருக்கின்றன. ஆகவே அவற்றைக் கட்டுவதைப் பொறுத்த வரையில் நாம் சிந்திக்க வேண்டியது இருக்கின்றது.

ஆகவே விளையாட்டு அரங்கம் தேவை ; ஆனால் அவற்றை உபயோகப்படுத்துகின்ற அளவுக்கு அந்தந்தப் பகுதிகளில் விளையாட்டு ஆர்வம் தூண்டப்பட வேண்டும். இப்போது அதைத்தான் நாம் செய்து கொண்டிருக்கிறோம். ஆகவே விளையாட்டு அரங்கம் கட்டுவது என்பது அரசு ஒத்துக் கொண்ட ஒரு கொள்கை தான். ஆனால் இப்படிப்பட்ட நிலைமைகளுக்கேற்ப நாம் அவற்றைக் கட்டி வருகிறோம்.

டாக்டர் கே. சமரசம் : தலைவர் அவர்களே, தர்மபுரியில் நீண்ட நாள் கோரிக்கையாக இருந்து வந்த ஸ்டேடியம் கட்டுவது என்பது முடிக்கப்பட்டு அதிலே மாநில அளவுக்கு விளையாட்டுப் போட்டிகள் நடந்து முடிந்திருக்கின்றன. அதற்காக அந்த மாவட்ட மக்களின் சார்பாக நான் நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்தத் தர்மபுரி ஸ்டேடியம் கட்டுவதற்கு எவ்வளவு தொகை செலவிடப்பட்டுள்ளது ? என்னென்ன விளையாட்டுக்களை அங்கே விளையாடுவதற்குரிய வசதிகள் செய்யப்பட்டிருக்கின்றன ? நீச்சல் குளம் அமைக்கப்பட வேண்டும் என்ற அந்தச் செயல் முறைத் திட்டம் உருவாக்கப்பட்டு விட்டதா ? அது தயாரிக்கப்பட்டு அவ்வாறு கட்டுகிறார்களா என்ற விவரங்களை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவர் அவர்களே, தர்மபுரி விளையாட்டரங்கம் கட்டுவதற்கு ரூபாய் 5 இலட்சத்திற்கு நிர்வாக ஒப்புதல் வழங்கும் கருத்துரு அரசின் பரிசீலனையில் உள்ளது என்ற விவரம் தான் தரப்பட்டிருக்கின்றது. ஆகவே நீச்சல் குளத்தைப் பற்றிய விவரம் இங்கே இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

### இளையான்குடி யூனியனில் 1982-83-ஆம் ஆண்டுக்கான N.R.E.P. திட்டத்தில் ஒதுக்கப்பட்டுள்ள தொகை.

249—(*வினா எண் 17379)—திரு. செ. சிவசாமி : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இளையான்குடி யூனியனில் 1982-83 ஆம் ஆண்டுக்கு NREP திட்டத்தில் எவ்வளவு தொகை ஒதுக்கப்பட்டுள்ளது ?

(ஆ) அதிகத் தொகை ஒதுக்க அரசு முன்வருமா ?





மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவர் அவர்களே, (அ) ரூ. 5,55,520 தொகையாகவும் 40 மெ. டன்கள் அரிசியாகவும் ஒதுக்கப்பட்டுள்ளது.

(ஆ) தேசிய ஊரக வேலைவாய்ப்புத் திட்டத்தின் கீழ் ஒன்றிய அளவிலான மக்கள் குழுவின் மூலமாக தேவையான நிதி ஒதுக்கப்படும்.

### சமூக கிணறுகள் வெட்டும் திட்டம்.

250—(*வினா எண் 17862)-திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் - மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சமூகக் கிணறுகள் வெட்டும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில் எங்காவது அவ்வேலை ஆரம்பிக்கப்பட்டுள்ளதா ?

(இ) அதற்கு மத்திய அரசின் பங்கு எவ்வளவு ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : (அ) ஆம், நடைமுறையில் உள்ளது.

(ஆ) தமிழ்நாட்டில் நீலகிரி மாவட்டம் தவிர மற்றும் எல்லா மாவட்டங்களிலும் சமுதாயக் கிணறுகள் அமைக்கப்பட்டுள்ளன. மேலும் நிதி நிலை குறைவாக இருக்கும் ஊராட்சி ஒன்றியங்களுக்கு அரசு சமுதாயக் கிணறுகள் அமைக்க முன்பணம் கொடுக்கின்றது. இத்திட்டத்தின் கீழ் பத்து ஊராட்சி ஒன்றியங்களுக்குத் தலா ரூ. 40,000 வீதம் முன்பணம் அனுமதித்து சில வேலைகள் முடிந்தும், சில வேலைகள் முடியாமலும் இருக்கின்றன.

(இ) இதற்கு மத்திய அரசின் பங்கு எதுவும் இல்லை.

(முற்பகல் 9-20)

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீலகிரியைத் தவிர பாக்கி உள்ள அத்தனை மாவட்டங்களிலும் இந்தக் கிணறுகள் வெட்டப்பட்டிருக்கின்றன என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். இந்தச் சமுதாயக் கிணறுகளுக்கு நாம் எவ்வளவு அதிகமாகப் பணம் போட முடியுமோ அந்த அளவு போட்டு, பெரிய கிணறுகளை வெட்டி, பம்ப் செட் பொருத்தி ஏதாவது 20 ஏக்கர், 30 ஏக்கர் நிலங்களுக்கு பாசன வசதி அளிக்க முடியுமா ? அப்படியென்றால் அதன் விவரம் என்ன ?

[1984 மார்ச் 14

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு :** மாண்புமிகு தலைவர் அவர்களே, தமிழகத்தைப் பொறுத்த அளவில் நீலகிரியைத் தவிர எல்லா மாவட்டங்களிலும் 1308 சமுதாயக் கிணறுகள் வெட்டப்பட்டிருக்கின்றன. ஏறத்தாழ 55 இலட்சம் அதற்காக செலவழிக்கப்பட்டிருக்கின்றது. குறிப்பாக சமுதாயக் கிணறுகள் போடுவதன் நோக்கம் எல்லாம் அந்தப் பகுதியிலே இருக்கிற குடிநீர் பிரச்னை என்றாலும், பாசன வசதி என்றாலும், உடனடியாக சரி செய்ய வேண்டுமென்ற முறையிலேதான் தோண்டப்படுகின்றன. மதுரை மாவட்டத்தைப் பொறுத்த அளவில் 182 சமுதாயக் கிணறுகள் போடப்பட்டிருக்கின்றன. அவை தவிர 10 கிணறுகள் நிலுவையில் இருக்கின்றன. சில கிணறுகள் முடிக்கப்பட்டிருக்கின்றன. சில முடியாமல் இருக்கின்றன. அவற்றிற்கெல்லாம் ஆல்டர்னேட் அரேஞ்ச்மெனட்ஸ் என்ற முறையிலே தக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

**திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சருடைய பதிலில் சொன்னமாதிரி கிணறுகள் வெட்டப் பட்டிருக்கின்றன என்பது உண்மை, அது எல்லோருக்கும் தெரிகின்றது. ஆனால் அந்தக் கிணறுகளால் எந்தவிதமான பயனும் இல்லாமல் எங்கோ வெட்டப்பட்டிருக்கின்றன. அப்படி வெட்டியிருந்தும்கூட குடிநீருக்கும் பயன்படாமல் விவசாயத்திற்கும் பயன்படாமல் இருக்கின்றனவே என்றுதான் இந்தக் கேள்வியே போடப்பட்டிருக்கிறது. ஆகவே குடிநீருக்கும் பயன்படும் வகையிலும், விவசாயத்திற்கும் பயன்படும் வகையிலும் பம்ப் செட் வைத்து, தண்ணீர் எடுத்து இனிமேலாவது விநியோகம் செய்ய முடியுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு :** மாண்புமிகு தலைவர் அவர்களே, மூலக் கேள்வி சமூகக் கிணறுகள் வெட்டும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா என்பது. அதில் அடுத்த கேள்வி ஆம் எனில் எங்காவது அவ்வேலை ஆரம்பிக்கப்பட்டுள்ளதா என்பது. அடுத்த கேள்வி இதற்கு மத்திய அரசின் பங்கு எவ்வளவு என்பது. இவைதான் மூலக் கேள்விகள். நான் பதிலாக விவரங்களைக் கொடுத்திருக்கிறேன். மேலும் விவரங்கள் தேவை என்றால் தனிக் கேள்வி போடவும்.

**திரு. எஸ். ஆண்டித்தேவர் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சமூகக் கிணறுகள் மாநிலம் முழுவதும வெட்டப்பட்டிருக்கின்றன. மதுரை மாவட்டத்தில் மட்டும் ஏறத்தாழ 180 கிணறுகள் வெட்டப்பட்டிருக்கின்றன என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அதிகமான பணத்தைச் செலவழித்து கண்மாய் பிடிப்பிலே கிணறுகளை வெட்டுகிறார்கள். சமுதாயத்



1984 மார்ச் 14]

திற்குப் பயன்படும் அளவில் இல்லாமல், நீர் பிடிப்புகளிலே, வாய்க்கால் ஓரங்களிலே வெட்டுகிறார்கள், அப்படியில்லாமல், இனிமேலாவது, வெட்டும் கிணறுகளை, சமுதாயத்திற்குப் பயன்படும் வகையில் வெட்ட அரசு முன்வருமா என்பதோடு மைய அரசிடம் ஏன் நிதி கொடுக்கவில்லை என்று இந்த அரசு கோரியிருக்கிறதா என்பதையும் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு :** குறிப்பாக, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்வதைப் போல, எந்த எந்தப் பகுதியிலே அதிகமாக தண்ணீர் வரத்து இருக்கிறதோ, அங்கே பார்த்துதான் சமுதாயக் கிணறுகளைத் தோண்டிக் கொண்டிருக்கிறோம். ஆகவே சமுதாயக் கிணறு என்பது அந்தப் பகுதியிலே இருக்கிற கிராம மக்களுக்கு உபயோகமாக இருக்க வேண்டுமென்ற அடிப்படையிலேதான் நடவடிக்கைகளை எடுத்து வருகிறோம். இந்தத் திட்டம் நல்லமுறையிலே நடைபெறுகிறது என்பதுதான் எங்களுக்குக் கிடைத்திருக்கிற தகவல்கள். எங்காவது சமுதாயக் கிணறுகள் சரியாக நடைபெறவில்லையென்று சொன்னால், குறிப்பாக சொன்னால் உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படும்.

மைய அரசு பங்கு குறிப்பாக இதிலே இல்லை. ஆனால் பல்வேறு திட்டங்கள் மூலமாக மைய அரசு அவர்கள் பங்கைக் கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள். 'மாசிவ் புரோகிராம்' (Massrve Programme) என்ற முறையிலே பம்ப் செட் வாங்குவதற்கு, ஆயில் இஞ்ஜின் வாங்க தனியாக பணம் ஒதுக்கீடு செய்திருக்கிறார்கள். இதற்கென்று தனியாக ஒதுக்கவில்லையே தவிர, பல்வேறு திட்டங்களின் மூலமாக இதற்கென்று உதவி கிடைக்கிறது.

**திரு. இல. பலராமன் :** மாண்புமிகு தலைவர் அவர்களே, இந்த வறட்சியின் பொழுது இது போன்று 1200-க்கு மேற்பட்ட கிணறுகளை வெட்டியிருப்பதாக அமைச்சர் அவர்கள் கூறினார்கள். வறட்சியின்பொழுது வெட்டப்பட்ட கிணறுகள் பொதுப் பணித் துறையால் வெட்டப் பட்டன. (குறுக்கீடு) சமுதாயக் கிணறுகள் என்ற பெயரால் வறட்சியின்பொழுதும் வெட்டப்பட்டிருக்கின்றன. அந்தத் கிணறுகளை எல்லாம் உள்ளாட்சித் துறை மேற்கொண்டு, பொதுப் பணித் துறையின் மூலமாக, நல்லமுறையில் குடிநீருக்கோ, மற்ற வசதிகளுக்கோ பயன்படுத்த அரசு ஏதாவது திட்டம் வைத்திருக்கிறதா? அமைச்சர் அவர்கள் அதைப்பற்றி ஆலோசிப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்,

[1984 மார்ச் 14

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவர் அவர்களே, இது வறட்சி நிவாரணத்திட்டத்தின் அடிப்படையில் செய்வது அல்ல. இந்தத்திட்டம் It is a regular Scheme ஆகவே. சமுதாயக் கிணறுகள் தோண்டுவது என்பது அந்தந்தப் பகுதியில் இருக்கக்கூடிய ஊராட்சி ஒன்றியங்களுடைய கடமை, ஆகவே அந்தக் கடமையின் அடிப்படையில்தான் இவை செய்யப் பட்டு வருகின்றன. இதை பொதுப்பணித்துறைக்கு விடவேண்டிய அவசியமில்லை.

திரு. சு. பாரமலை : தலைவர் அவர்களே. இந்த சமுதாயக் கிணறுகள் திட்டம் என் பகுதியில் சிறப்பாக செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. அந்தப் பலன்களை கண்ட மக்கள் ஒவ்வொரு ஊருக்கும் வேண்டுமென்று கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். ஏறக் குறைய என் திருபுவனம் மானாமதுரை வட்டாரத்தில் ஐம்பது கிணறுகள் வேண்டுமென்று கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். வறட்சிக் காலங்களில் அவை உதவிகரமாக இருப்பதால் 1984-85 ஆம் ஆண்டில் நிதி உதவி செய்து இப்படிப்பட்ட சமுதாயக் கிணறுகள் வெட்டுவதற்கு அரசு ஏற்பாடு செய்யுமா ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவர் அவர்களே, எந்தெந்த ஊராட்சி ஒன்றியங்களில் பொது நிதி இருக்கிறதோ அந்தப் பொது நிதியை வைத்து சமுதாயக் கிணறுகள் தோண்ட லாம். பொது நிதி இல்லை என்றால் அரசாங்கத்தின் மூலம் மானியம் அல்லது கடன் பெற்று சமுதாயக் கிணறுகள் தோண்ட லாம். வறட்சி காரணமாக பல்வேறு பகுதிகளில் இதுபோன்ற நிலை இருந்தால் கண்டிப்பாக அரசு உதவி செய்யும். ஆகவே அதற்குரிய நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

நெல்லை நகர் வழியே செல்லும் தேசிய நெடுஞ்சாலையில் புறவழிச் சாலை அமைக்கும் திட்டம்.

251—*வினா எண் 19217 —திரு. மு. அப்பாதுரை : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடை யளிப்பாரா—

நெல்லை நகர் வழியாகச் செல்லும் தேசிய நெடுஞ்சாலை யில் புறவழிச் சாலை அமைக்க நில ஆர்ஜிதம் செய்யப்பட்டும் இன்னும் பணி முடிக்கப்படாமல் இருப்பதற்குக் காரணம் என்ன?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தேசிய நெடுஞ் சாலைப் பிரிவில் முதல் நேர்ப்பாடு (Original alignment) வழியாக திருநெல்வேலி புறவழிச்சாலை அமைப்பதற்குத் தேவையான நிலம் ஆர்ஜிதம் செய்யும் மதிப்பீடு மத்திய அரசின் ஒப்புதல் பெறப்பட்டு மேற்படி வேலை ரூ. 12.40 இலட்சம்



1984 மார்ச் 14]

செலவில் முடிக்கப்பட்டது. இந்த நேர்ப்பாடு நஞ்சை மற்றும் நகராட்சி பரப்பில் செல்வதால் புறச்சாலைக்கு ஏற்ற நேர்ப்பாடு இல்லையென்ற காரணத்தால் மாற்று நேர்ப்பாடு (Alternative alignment) அமைக்கப்பட்டது. மாற்று நேர்ப்பாட் டிற்குத் தேவையான நிலத்தை மாநில அரசு ஆர்ஜிதம் செய்து மத்திய அரசிடம் திருநெல்வேலி புறச்சாலை அமைக்க ஒப்படைக் கவும், முந்திய நேர்ப்பாட்டில் ஆர்ஜிதம் செய்த நிலத்தை மாநில அரசு எடுத்துக் கொள்ளவும் மத்திய அரசுக்கு சம்மதம் தெரிவிக்கப்பட்டது. இப்பணிக்காக. ரூ. 346 இலட்சம் தேவை யாக இருக்கிறது. அந்த வேலைகளை இரண்டு கட்டத்தில் எடுத்துச் செய்ய வேண்டியுள்ளது. பரிசீலனை நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

திரு. ரா. கிருஷ்ணன் : தலைவர் அவர்களே, இப்போது இருக்கக்கூடிய புறவழிச்சாலை நன்செய் நிலத்தில் வருவதாக ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது என்ற கருத்து கூறப்பட்டது. நெல்லையைப் பொறுத்த வரையில் எந்த புறவழிச்சாலைக்கு ஏற்பாடு செய்யும் போதும் நன்செய் தவிர வேறு வழியே கிடை யாது. வேறு இடம் கிடையாது. இதை அரசு அறியுமா ? மாற்று நேர்ப்பாடு என்று சொல்லக்கூடிய அந்த வழித்தடம் எங்கே என்று அறிவிக்க இயலுமா ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவர் அவர்களே, திருநெல்வேலியைப் பொறுத்த வரையிலே மாண்புமிகு உறுப் பினர் அவர்கள் சொல்வது போல் எந்த வழியில் நாம் போனாலும் நன்செய்யை கடந்துதான் போக வேண்டியிருக்கிறது. வேறு நிலம் கிடைக்காததால் நன்செய் நிலத்தை எடுத்தாக வேண்டும் என்ற சூழ்நிலையில் நில ஆர்ஜித நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின் றன. அதைச் சீக்கிரம் இரண்டு கட்டங்களில் செய்ய ரூ. 346 இலட்சம் தேவை என்று மதிப்பீடு செய்யப்பட்டிருக்கிறது. இது, மத்திய அரசின் திட்டம். இதில் மாநில அரசின் பங்கு இல்லை. தேசிய நெடுஞ்சாலை என்று சொன்னாலே முழுவதும் மத்திய அரசே நமக்குக் கொடுக்கிறது. ஆகவே, இரண்டு கட்டங்களாக முதலில் ரூ. 200 இலட்சம், அடுத்தாற்போல் 146 இலட்சம் ரூபாய் என்ற முறையில் ரூ. 346 இலட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டு வருகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

வடாற்காடு மாவட்டத்தில் அமுல்படுத்தப்படும் தன்னிறைவுத் திட்டம்.

252—(*வினா எண் 21275)—திரு. பெ. சு. திருவேங்கடம்: மாண்பு மிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வடாற்காடு மாவட்டத்தில் தன்னிறைவுத் திட்டம் எத்தனை நகர சபைகளில் அமுல்படுத்தப்படும் ?

(ஆ) அதற்காகும் செலவு எவ்வளவு ?

(இ) எந்தெந்த பணிகள் எடுத்துக் கொள்ளப்படும் ?

(ஈ) இதற்காகத் தனி அலுவலர்கள் நியமிக்கப்படுவார்களா ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு :

| | | | |
|---|---|---|---|
| (அ) | 1982-83 ஆம் ஆண்டில் | .. | 2 |
| | 1983-84 ஆம் ஆண்டில் | .. | 6 |
| | மொத்தம் | .. | 8 |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | 1982-83 ஆம் ஆண்டில் | .. | ரூ. 50 இலட்சம். |
| | 1983-84 ஆம் ஆண்டில் | .. | ரூ. 96 இலட்சம். |
| | மொத்தம் | .. | ரூ. 146 இலட்சம். |

(இ) 1. குடிநீர் வழங்குதல்.

2. சாலைகள் அமைத்தல்.

3. குறுக்கு பாலங்களும் மழைநீர் வடிகால்களும் அமைத்தல்.

4. ஆதி திராவிடர் குடியிருப்புகளுக்கும், இடுகாடுகளுக்கும் பாதைகள் அமைத்தல்.

5. பள்ளிக் கட்டிடம் கட்டுதல்.

6. மருந்தகங்கள் மற்றும் தாய்-சேய் நல மையங்களுக்குக் கட்டிடங்கள் கட்டுதல்.

7. பொதுச் சுகாதாரம் (ஆர். சி. ஏ. பி. கழிவறைகள் கட்டுதல்).

8. தெரு விளக்குகள் அமைத்தல்.

9. துப்புரவுப் பணியாளர்களுக்கு வீட்டு வசதி செய்து கொடுத்தல்.

(ஈ) ஆம், வட ஆற்காடு மாவட்டத்தில் 2 தனி அலுவலர்கள் இராணிப்பேட்டை மற்றும் வாணியம்பாடி ஆகிய இடங்களைத் தலைமை இடமாகக் கொண்டு பணியாற்றி வருகின்றனர்.



திரு பெ. சு. திருவேங்கடம் : பேரவைத் தலைவர் அவர்களே, நான் கேள்வி கேட்ட நேரத்திற்கும், இப்போது மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அதற்கு பதிலளிக்கின்ற கால கட்டத்திற்கும் இடையே இந்த வேலைகள் செய்யப்பட்டு முடித்திருக்கலாம். ஆனால், நான் மாண்புமிகு அமைச்சர் அவர்களிடமிருந்து தெரிந்து கொள்ள விரும்புவ்து, உதாரணத்திற்கு, திருவண்ணாமலை நகராட்சி இந்தத் தன்னிறைவுத் திட்டத்தில் சேர்க்கப்பட்டிருப்பதாக அறிகிறேன். இதிலே ஊர் பெயர் சொல்லவில்லை. திருவண்ணாமலை நகராட்சியில் எந்தெந்த வேலைகள் எடுத்துக் கொள்ளப்பட்டன என்ற தகவல் உள்ளதா ? அப்படி எடுத்துக்கொள்ளப்பட்ட வேலைகளில் எந்தெந்த வேலைகள் முடிவுற்றன என்பதைப் பற்றி அறிவிக்க இயலுமா என்பதை அறிய விரும்புகிறேன் ?

(முற்பகல் 9.30)

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : மாண்புமிகு தலைவர் அவர்களே, தனியாக ஒவ்வொரு நகராட்சியிலும் என்னென்ன வேலைகள் எடுக்கப்பட்டன என்ற குறிப்பு இல்லை. ஆனால், நீங்கள் கேட்ட கேள்வி, வட ஆற்காடு மாவட்டத்தில் எத்தனை நகராட்சிகள் தன்னிறைவு திட்டத்தில் எடுக்கப்பட்டிருக்கின்றன என்றுதான் கேட்டிருக்கிறீர்கள். ஆகவே, அதற்குரிய பதிலைக் கொடுத்திருக்கிறேன். ஆனால், திருவண்ணாமலை நகராட்சியில் என்னென்ன வேலைகள் எடுக்கப்பட்டிருக்கின்றன.? அதிலே என்னென்ன வேலைகள் முடித்திருக்கின்றன என்று தனியாகக் கேள்வி கேட்டால், கண்டிப்பாக அதற்குப் பதில் சொல்கிறேன்.

திரு. பெ. சு. திருவேங்கடம் : பேரவைத் தலைவர் அவர்களே; 6 நகராட்சிகள் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொன்னார்கள். எந்தெந்த நகராட்சிகள் என்று அறிவிக்க இயலுமா ? 96 இலட்சம் ரூபாய் செலவாகியிருப்பதாக அறிவித்திருக்கிறார்களே, அந்தத் தொகை எந்தெந்த வேலைகளுக்கு ஒதுக்கப்பட்டது ? அதிலே எந்தெந்த வேலைகள் முடிவுற்றன என்பதை அறிவிக்க இயலுமா ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : மாண்புமிகு தலைவர் அவர்களே, வட ஆற்காடு மாவட்டத்தில், ஆம்பூர், ஆற்காடு, இராணிப்பேட்டை, திருவண்ணாமலை, ஆரணி, திருவத்திபுரம் ஆகிய 6 நகராட்சிகள் ஆகும். அதற்கு ஒதுக்கப்பட்ட தொகை ரூ. 96 இலட்சம். வேலைகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

[1984 மார்ச் 14

**திரு. தி. அன்பழகன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நகரசபைகள் என்று சொன்னால், வருவாய் குறைவாக வரக்கூடிய நகராட்சிகளும், பெரிய நகரசபைகளும் இருக்கின்றன. வருவாய் குறைவாக உள்ள நகரசபைகளுக்கு அதிக நிதி ஒதுக்க அரசு முன்னுரிமை வழங்க முன்வருமா? அந்த அடிப்படையில் திருப்பத்தூர் நகராட்சிக்கு முன்னுரிமை வழங்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்?

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு :** மாண்புமிகு தலைவர் அவர்களே, தமிழகத்தைப் பொறுத்த வரையில் 106 நகராட்சிகள், நகரியங்கள் மொத்தமாக இருக்கின்றன. அதிலே ஏறத்தாழ 70 பலவீனமாக, பணமில்லாதவையாக இருக்கின்றன. பெரியது, சிறியது என்று பார்க்காமல் மக்கள் தொகையை கணக்கில் எடுத்துக் கொண்டு, நாம் அதன் அடிப்படையில் நிர்ணயம் செய்ய வேண்டும். ஆனால், குறிப்பாக சில நகரசபைகள் பாதிக்கப்பட்ட நிலையில் இருப்பதால், அதற்கு ஒரு விதியை வைத்து, அதன்மூலம் இன்று தன்னிறைவுத் திட்டத்தை நடைமுறைப் படுத்திக் கொண்டிருக்கிறோம். 1984-85 ஆம் ஆண்டு தன்னிறைவு திட்டத்தின்கீழ் திருப்பத்தூர் நகராட்சியை தேர்ந்தெடுப்பதுக் குறித்து ஆராய்ந்து தகுந்த நிதி ஒதுக்கப்பட நடவடிக்கை எடுக்கப்படும்.

### திருச்சி நகரில் ஜாதியின் பெயரில் உள்ள தெருக்கள்.

253—(*வினா எண் 22336)—திரு. கே. சௌந்திரராசன் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருச்சி நகரில் ஜாதியின் பெயரால் தெருக்கள் உள்ளனவா?

(ஆ) ஆம் எனில், எத்தனை தெருக்கள் உள்ளன? அவை எவையெவை?

(இ) ஜாதியின் பெயரால் உள்ள பெயர்களை நீக்குவதற்கு எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன?

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு :** (அ) ஆம்.

(ஆ) 134 தெருக்கள். விவரப் பட்டியல் ** அவை முன் வைக்கப்பட்டுள்ளது.

(இ) தெருக்களின் பெயரோடு உள்ள சாதிப் பெயர்களை நீக்கவும் முழுமையாக சாதிப் பெயரிலுள்ள தெருக்களுக்கு புதிய பெயர் சூட்டுவது குறித்தும் தமிழ் வளர்ச்சி இயக்குநருடன் திருச்சிராப்பள்ளி நகராட்சி கலந்தாலோசித்து வருகிறது.

---

** 580-582ம் பக்கங்களில் இணைப்பு II ஆக வெளியிடப் பெற்றுள்ளது.



1984 மார்ச் 14]

**திரு. கே. சௌந்திரராசன் :** பேரவைத் தலைவர் அவர்களே, 1967 ஆம் ஆண்டு பேரறிஞர் அண்ணா அவர்கள் தலைமையில் ஆட்சி உருவாகிய நேரத்தில், பேரறிஞர் அண்ணா அவர்கள் சட்டமன்றத்திலே சொன்னார்கள். இந்த அரசு தந்தை பெரியாருக்கு காணிக்கையாக இருக்கிறது என்று சொன்னார்கள். அப்படி தந்தை பெரியார் அவர்கள் வழியில் வந்த அரசு, இன்றைய தினம் 17 ஆண்டு காலம் ஆனாலும்கூட, நேரடியாக ஜாதிகளின் பெயரை மட்டுமே குறிப்பிடுகின்ற நிலைமை இருக்கிறது. குறிப்பாக, திருச்சியிலே, தமிழகத்தின் மையப் பகுதியாக இருந்தும், அந்த நகரத்திலே அந்த ஜாதியின் பெயர்கள் அகற்றப்படாமல் இருப்பதற்குக் காரணம் என்ன? அதற்குரிய நடவடிக்கைகளை யார் யார் எடுத்திருக்கிறார்கள். அதன் மீது அரசு இன்றைய தினம் என்ன நடவடிக்கை எடுக்க இருக்கிறது என்று அறிய விரும்புகிறேன்?

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு :** மாண்புமிகு தலைவர் அவர்களே, நம்முடைய பகுத்தறிவு பகலவன் பெரியார் அவர்களுக்கு காணிக்கையாக ஜாதியின் பெயர்களை நீக்கவேண்டுமென்ற முறையிலே அனைத்திந்திய அண்ணா தி.மு. கழக அரசு கடந்த 3—10—1978 ஆம் நாளன்று ஒரு ஆணையைப் போட்டு, அதன் மூலமாக பெரியார் அவர்களின் நூற்றாண்டு நினைவாக இருக்கக்கூடிய முறையில், ஜாதியின் பெயர்களை நீக்கவேண்டுமென்ற முறையிலே நடவடிக்கை எடுத்திருக்கிறோம். ஆனாலும் கூட, பல்வேறு பகுதிகளில் இன்றும் ஜாதியின் பெயர்களை எடுக்க முடியவில்லை. அதற்குக் காரணம், உதாரணமாகச் சொல்கிறேன். செட்டிமார் தெரு என்றிருக்கிறது. வன்னியர் தெரு என்று இருக்கிறது. வெள்ளாளர் தெரு; முதலியார் சந்து போன்ற தெருக்கள் இருக்கின்றன. ஆகவே, இவைகளிலே அந்த ஜாதியின் பெயர்களை எடுத்துவிட்டால், வெறும் தெரு என்று தான் இருக்கும். அதுபோல், "முதலியார் சந்து" என்பதில், முதலியாரை எடுத்து விட்டால், சந்து மட்டும் தான் இருக்கும். இப்படிப்பட்ட நிலைமைகள் இருக்கின்றன. ஆகவே, இவைகளையெல்லாம் உடனடியாக முழுப் பெயர்களையும் எடுத்துவிட்டு, அதற்கு தலைவர்கள், அறிஞர்கள் பெயர்களை சூட்ட வேண்டும் என்று கேட்டுக் கொண்டிருக்கிறோம்.

**திரு. கே. சௌந்திரராசன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் குறிப்பிட விரும்புவது சட்டப்படி ஒரு பெயரை குறிப்பிடுவது அது தண்டனைக்குரியது என்ற அளவில் நாட்டில் நிலைமைகள் இருக்கிறபோது, ஒரு தெருவினுடைய பெயர் பறத் தெரு, சக்கிலியத் தெரு, குசத் தெரு என்பதாக இருக்கின்றதென்று சொன்னால் இவைகளை நீக்குவதற்கு இந்த அளவிற்கு மெத்தனம் தேவைதானா என்பது தான் என்னுடைய கேள்வியின்

முக்கியமான நோக்கம். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இதில் அறிக்கை பெறுவதற்கு பதிலாக, ஆலோசனைகளைப் பெறுவதற்கு பதிலாக அந்தப் பெயர்களை நீக்குவதற்கு நடவடிக்கைகளை உடனடியாக எடுக்க முன் வருவார்களா என்பதை அறிய விரும்புகிறேன்,

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதற்கான நடவடிக்கைகளைத்தான நம்முடைய அரசு 3—10—1978 ஆம் தேதி எடுத்திருக்கிறது. முந்தைய அரசு ஏன் செய்யவில்லை என்பதை அவர்களிடத்தில் தான் கேட்க வேண்டும். தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா அவர்களின் வழிவந்த அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் உரிய நடவடிக்கைகளை எடுத்திருக்கிறது. குறிப்பாக சொல்ல வேண்டுமென்றால் இங்கே கூட சட்ட மன்ற உறுப்பினர்களின் ஒரு சிலர் ஜாதிப் பெயர்களை வைத்துக்கொண்டிருக்கிறார்கள். அவர்களை ஏன் நீக்கவில்லை என்று நாம் கேட்க முடியாது. அது அவர்களுடைய விருப்பம். அப்படிப்பட்ட நிலைமைகளில் தான் நடவடிக்கைகள் எடுக்க வேண்டியிருக்கிறது. வேண்டிய இடங்களில் புதிய பெயர்கள் சூட்டப்படும். (குறுக்கீடு)

**திரு. இரா. தாமரைக்கனி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருச்சியில் மட்டும் ஜாதிப் பெயரிலே தெருக்கள் இல்லை. தமிழ்நாடு முழுவதும் இப்படிப்பட்ட பெயர்களில் தெருக்கள் இருக்கின்றன. அவற்றை நீக்குவதற்கு ஒரு அவசரச் சட்டம் போட்டு, தமிழ் நாட்டிலே இருக்கிற எல்லா தெருக்களிலும் ஜாதிப் பெயர்களை நீக்குகிற அளவிற்கு நடவடிக்கை எடுக்க அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**திரு. ரா. உமாநாத் :** தலைவர் அவர்களே, கேள்வியே இல்லீகல். சட்ட மன்றம் நடக்கிறபோது அவசரச் சட்டம் போட முடியாது.

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு :** மாண்புமிகு தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் மிகவும் அவசரக்காரர் என்பதை அவருடைய கேள்வியே புலப்படுத்துகிறது. ஆனாலும் கூட இந்தப் பெயர்களுக்கெல்லாம் புதிய பெயர்களைச் சூட்ட வேண்டுமென்றால், கொஞ்சம் காலந்தாழ்த்தினாலும் பரவாயில்லை. நல்ல முறையில் இருக்கவேண்டும என்பதுதான் இந்த அரசினுடைய நோக்கம்.



**திரு. ஜே. எஸ். இராசு :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஜாதிப் பெயர்கள் இருக்கக்கூடாது என்று கருதப்படுகிற அதே நேரத்தில் அதைவிட இழிவாக சிலப் பெயர்கள் இருக்கின்றன. சான்றாகச் சொல்ல வேண்டுமென்றால் சிதம்பரத்தில் இழிவாக * * தெரு என்ற பெயரில் ஒரு தெருவே இருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** : இழிவாக என்பது வரையில் மட்டும் வைத்துக் கொள்ளலாம் வேறு பொருள் வந்து விடக் கூடாது என்றால் அந்தப் பெயர் அவைக் குறிப்பில் இருந்து நீக்கப்படுகிறது.

**திரு. தி. கா. நல்லப்பன்:** மாண்புமிகு பேரவைத்தலைவர் அவர்களே, ஜாதிகளுடைய பெயர்களை எடுக்கிறபோது, குறிப்பாக சொல்ல வேண்டுமானால் கருப்பண்ண கவுண்டர் தெரு என்று இருக்கிற சாலையிலே கவுண்டரை எடுக்கிறபோது கருப்பண்ண சாலை என்று எழுதி விடுகிறார்கள். அதேபோல பாளையம் நாயக்கர் தெரு என்று இருப்பதில் உள்ள நாயக்கர் என்பதை எடுத்து விட்ட பிறகு வருகிற பெயரில் வேறு மாதிரியான ஒரு அர்த்தம் அதில் தொனிக்கிறது. ஆகவே ஜாதிகளின் பெயரால் இருக்கிற தெருக்களின் பெயர்களை நீக்கிவிடுகிறபோது இது போன்ற அர்த்தம் தொனிக்காமல் வேறு புதிய பெயர்களை வைப்பதற்கு அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே சென்னையிலும், கூட " கிருஷ்ணமாச்சாரி தெரு " என்று இருந்தது " ஆச்சாரி " என்பது அவர்களுடைய ஜாதிப் பெயர் என்கிற முறையிலே "ஆச்சாரியை எடுத்துவிட்டு " கிருஷ்ணமா " தெரு என்று போட்டு விட்டார்கள். ஆகவே " கிருஷ்ணமா' " என்றால் ஆணா, பெண்ணா என்று தெரியாத அளவிற்கு அந்த சாலை போய் விட்டது. ஆகவே அதை இப்போது " டி.டி.கே. சாலை " என்று பெயர் மாற்ற வேண்டுமென்று ஆணைகளை பிறப்பித்து இருக்கிறோம். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதைப் போல சில இடங்களில் ஜாதிப் பெயர்களை எடுக்கிறபோது நமக்கு வேறு ஞாபகங்கள் வருகிற அளவிற்கு பெயர்கள் வந்து விடுகின்றன. ஆகவே அவைகளை கவனத்தில் கொண்டு உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படும்.

---

* மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க நீக்கப்பெற்றது.

[1984 மார்ச் 14

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள் எண்கள் 309 மற்றும் 310 மாண்புமிகு அமைச்சர் அவர்களின் வேண்டுகோளுக்கிணங்க தள்ளி வைக்கப்படுகின்றன.

## தனியார் துறை நிறுவனங்களில் தாழ்த்தப்பட்டோருக்கு இட ஒதுக்கீடு செய்யும் திட்டம்.

311—(* வினா எண். 12545)— திரு. இரா. தாமரைக்கனி, திரு. என். பழனிவேல் : மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தமிழ்நாட்டில் தனியார் துறையில் உள்ள தொழிற்சாலைகளில் தாழ்த்தப்பட்டோருக்கு இட ஒதுக்கீடு செய்வது குறித்து அரசு பரிசீலித்து வருகிறதா ?

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி : தமிழ் நாட்டில் தனியார் துறை நிறுவனங்களில் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினருக்கு இட ஒதுக்கீடு செய்வது பற்றிய கருத்துரு ஒன்று அரசின் பரிசீலனையில் உள்ளது.

திரு: இரா. தாமரைக்கனி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொல்கிறபோது அரசின் பரிசீலனையில் இருப்பதாகச் சொல்கிறார்கள். இதற்கு மத்திய அரசினுடைய அனுமதி வாங்க வேண்டியிருக்கிறதா ? அப்படி வாங்க வேண்டுமென்றால் மாண்புமிகு அமைச்சர் அவர்களே நேரடியாக டெல்லிக்குச் சென்று மத்திய அரசின் அனுமதியை வாங்கி வருவார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மாநிலத்தைப் பொறுத்த வரையில் தனியார் துறையிலுள்ள தொழிற்சாலைகளில் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் இட ஒதுக்கீடு செய்ய அவசியமான நடவடிக்கைகளை எடுக்கலாம் என்று தமிழகத்தில் மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவர் அவர்கள் பொறுப்பை ஏற்றதற்கு பிறகு அமைச்சரவைக் கூட்டத்தில் இதற்கான முடிவுகள் எடுக்கப்பட்டு, நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கின்றன. மத்திய அரசினுடைய உத்தரவுகளை சோருகிற அளவிற்கு தமிழக முதல்வர் அவர்கள் பாரத பிரதமர் அவர்களிடத்தில் குறிப்புகளை நேரில் கொடுத்திருக்கிறார்கள். இப் பொருள் பற்றி மத்திய அரசு தற்போது நடவடிக்கைகளை எடுத்துக் கொண்டிருக்கிறது. மத்திய அரசின் கருத்துக்கள் இதுவரையில் தமிழக அரசிற்கு கிடைக்கவில்லை. கிடைத்த பிறகு அதன்மீது விரைவாக, வேகமான நடவடிக்கைகளை நாம் எடுக்கலாம்.



1984 மார்ச் 14]

திரு. இரா. தாமரைக்கனி : பேரவைத் தலைவர் அவர்களே, அரிசனங்கள் முன்னேற வேண்டும் என்று இந்த அரசு விரும்புகிறது. ஆகவே, தனியார் தொழிற்சாலைகளில் ஆதித் திராவிடர்கள் பழங்குடியினர் இத்தனை குறிப்பிட்ட இடங்களில் நியமிக்கப்படவேண்டும் என்று அரசு உத்தரவு போடுமா ? அப்படிச் செய்தால், அவர்கள் நல்ல முறையில் வேலை வாய்ப்பு பெற முடியும். அது மட்டுமல்லாமல், புதிய தொழிற்சாலைகள் ஆரம்பிக்க லைசென்சு கேட்கிறபோது இவ்வளவு ஆதித் திராவிடர் மற்றும் பழங் குடியினருக்காக இத்தனை இடங்களை ஒதுக்க வேண்டும் என்று ஏதேனும் ஆலோசனை கூறுவதற்கு அரசு முன்வருமா ?

(முற்பகல் 9-40)

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி : தலைவர் அவர்களே, தமிழகத்தில் இருக்கும் தனியார் தொழிற்சாலைகளில் ஆதித் திராவிடர்கள் மற்றும் பழங் குடியினர் ஆகியோருக்கு வேலை வாய்ப்பு அளிக்க இட ஒதுக்கீடு கொடுக்க வேண்டும் என்ற எண்ணத்தை அரசு கொண்டு இருக்கின்ற காரணத்தால், அரசு மட்டத்தில் அதற்காக முடிவு எடுக்கப்பட்டுள்ளது. சட்ட ரீதியாகப் பார்க்கிறபோது தனியார் நிறுவனங்களில் ஆதி திராவிடர்களுக்கும், பழங்குடியினருக்கும் இட ஒதுக்கீடு செய்ய இயலாது என்றும் அது பற்றிய பரிசீலனை மேற் கொள்ளப்பட்டுள்ளதாகவும், பாராளுமன்றத்தில் ஒரு ஊடுக்குறியிடாத வினாவுக்கு பதில் அளித்திருப்பதைப் பார்க்கிறபோது, நம்முடைய தமிழக அரசு மூலம் அது குறித்து நடவடிக்கை எடுக்க இயலாது.

திரு. என். பழனிவேல் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தனியார் துறையில் ஆதி திராவிடர்களுக்கு விகிதாச்சார முறையில் இட ஒதுக்கீடு செய்வதற்கு சட்டத்திலே இடம் இல்லை என்றும், அரசு இது சம்பந்தமாக பரிசீலித்துக் கொண்டிருப்பதாகவும மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். பரிசீலனை என்றால் எவ்வளவு காலம் ஆகும், இதற்கு ஒரு முடிவு கட்ட அரசு ஏதாவது திட்டவட்டமான, கறாரான திட்டம் வைத்து இருக்கிறதா ?

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மத்திய அரசு சட்ட ரீதியான முறையில் தனியார் தொழில் நிறுவனங்களில் இட ஒதுக்கீடு ஆதித் திராவிடர் மற்றும் பழங்குடி மக்களுக்கு செய்ய முடியாது என்று பாராளுமன்றத்தில் சொல்லியிருப்பதை நான் இங்கே தெரிவித்தேன். தமிழக அரசைப் பொறுத்தவரை இது குறித்து நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதற்காக தமிழக முதலமைச்சர் அவர்களே நேரில் நம்முடைய பாரதப் பிரதமர் அவர்களைச் சந்தித்து

கடிதத்தைக் கொடுத்திருக்கிறார்கள். அவர்களும் நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிறார்கள். அந்த அடிப்படையில் தமிழக அரசைப் பொறுத்த வரையில் குறிப்பாக இந்தத் துறை நிறுவனங்களில் ஆதித் திராவிடர் மற்றும் பழங்குடியினருக்கு இட ஒதுக்கீடு இருக்க வேண்டுமென்ற உணர்வைக் கொண்டிருக்கிறது. அந்த அடிப்படையில் விரைவாக எந்த வகையில் நடவடிக்கை எடுக்க முடியுமோ அதை எடுக்கத் தயாராக இருக்கிறது.

திரு. என். பழனிவேல்: தலைவர் அவர்களே, தமிழக அரசைப் பொறுத்த அளவில் இந்த இட ஒதுக்கீடு சம்பந்தமாக மிக அனுதாபமாக வேலை செய்வதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். அதை நான் வரவேற்கிறேன். இன்றைக்கு தனியார் துறையில் கல்வித் துறையாக இருந்தாலும் சரி, அல்லது வேலை வாய்ப்புத் துறையாக இருந்தாலும் சரி, எந்தெந்தத் துறையில் எத்தனை சதவீதம் இவர்களுக்கு இட ஒதுக்கீடு செய்யப்பட்டு கொடுக்கப்பட்டுள்ளது? இன்னும் எந்தெந்தத் துறையில் கொடுக்க முடியாமல் இருக்கிறது என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவிக்க இயலுமா?

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தனியார் துறையைப் பொறுத்த வரையில் அதுபற்றிய குறிப்புகள் தற்போது இல்லை என்றாலும் அரசு துறையிலே அரசுத் துறை நிறுவனங்களிலே சுமார் 13 சதவீதம் தாழ்த்தப்பட்டோர், ஆதி திராவிடர் மற்றும் பழங் குடியினருக்கு வாய்ப்பு அளிக்கப்பட்டு, அவர்கள் தற்போது பணியில் இருக்கிறார்கள்.

திரு. ஜி. மூர்த்தி: தலைவர் அவர்களே, தாழ்த்தப்பட்ட மற்றும் ஆதி திராவிட பழங்குடி மக்களுக்கு தனியார் துறையில் வேலை வாய்ப்பு குறிப்பிட்ட சதவீதம் தர வேண்டும் என்று ஏற்படுத்தித் தருகிற வகையில், சட்டத் திருத்தம் கொண்டு வர வேண்டும் என்று மைய அரசை வலியுறுத்தி, இங்கே தீர்மானம் கொண்டு வர அரசு முன் வருமா?

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி: தலைவர் அவர்களே, தீர்மானம் நிறைவேற்ற முடியாது. என்றாலும் கூட, மாநில அரசு இதிலே எவ்வளவு அக்கறை கொண்டுள்ளதோ அந்த அளவிற்கு மைய அரசு அக்கறை எடுத்துக் கொள்கிற வகையில் மத்திய அரசை இந்த அரசு வலியுறுத்தும்.



திரு. பொ. உத்திராபதி: தலைவர் அவர்களே, தாழ்த்தப்பட்ட, ஆதி திராவிட பழங்குடி மக்களுக்கு இட ஒதுக்கீடு தனியார் துறையில் செய்வதற்கு மத்திய சர்க்கார் பரிசீலனை செய்து கொண்டு இருப்பதாகச் சொன்னார்கள். நான் கேட்டுக் கொள்வது எல்லாம், தமிழகத்தைப் பொறுத்த வரையில், பஞ்சாயத்துத் தேர்தலுக்கு, ஒன்றியத் தேர்தலுக்கு இட ஒதுக்கீடு செய்து, சட்டத்தை நிறைவேற்றி, அதை நீதிமன்றத்தில் தடுத்து இருக்கிறார்கள். அதைப் போலவே இதற்கும் இந்த அரசு ஒரு சட்டத்தை இங்கே கொண்டு வந்து, அதை ஏகமனதாக நிறைவேற்றி, அதை நீதிமன்றத்தில் தடுத்து நிறுத்தினாலும் பரவாயில்லை, அதற்கு வழிவகை செய்யும் வகையில், அப்படிப்பட்ட ஒரு சட்டத்தைக் கொண்டு வர தமிழக அரசு முன் வருமா?

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி: தலைவர் அவர்களே, இது பற்றி சட்டத் துறையின் மூலமாகத்தான் பரிசீலனை செய்ய முடியும்.

### சிறு தொழில் துவங்க ஆதி திராவிடர் மற்றும் பழங்குடி மக்களுக்கு அளிக்கப்படும் சலுகைகள்.

312—(*வினா எண் 13944)—திரு. சி. சிவப்பிரகாசம்: மாண்புமிகு ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) தமிழகத்தில் சிறு தொழில் துவங்க ஆதி திராவிடர் மற்றும் பழங்குடி மக்களுக்கு அளிக்கப்படும் சலுகைகள் யாவை?

(ஆ) 28-2-1982 முடிய எத்தனை ஆதி திராவிட மக்களும் பழங்குடியினரும் சலுகைகளைப் பெற்றுள்ளனர்?

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி:—(அ) ஆதி திராவிடர்களுக்கு தொழில் தொடங்க வட்டியில்லாக் கடன் அளிக்கும் திட்டத்தின் கீழ் வழங்கும் அதிக அளவு கடன் தொகை ரூ. 15,000 குறைந்த அளவு கடன் தொகை ரூ. 125. அரசால் ஏற்கப்பட்டுள்ள 31 வகையான தொழில்களுக்கு கடன் அளிக்கப்படுகிறது. மானியம் அளிக்கப்படுவதில்லை.

(ஆ) இத் திட்டத்தின் கீழ் 28-2-1982 முடிய கடனுதவி பெற்றவர்கள் எண்ணிக்கை—

| | | |
|---|---|---|
| ஆதி திராவிடர்கள் | .. | 16,256 |
| பழங்குடியினர் .. | .. | 111 |
| மொத்தம் | .. | 16,367 |

திரு. சி. சிவப்பிரகாசம் : தலைவரவர்களே, ஆதி திராவிடர்களுக்கு சிறு தொழில் தொடங்க கடன் உதவி அளிக்கும் திட்டத்தை, கொல்லிமலையில் ஏழு கிராமங்கள் அடங்கிய தாலுக்கா தொழில் துறையில் பின்தங்கிய பகுதி என்று அறிவிக்கப்பட்டிருப்பதால், அந்தப் பகுதியிலே ஒரு புதிய தொழில் அமைப்பை ஏற்படுத்த அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி : தலைவரவர்களே, தனியாக கொல்லிமலைப் பகுதியை இந்தத் திட்டத்தின் கீழ் கொண்டு வர முடியாது. மாநிலம் முழுவதுமாகப் பார்த்து எந்த எந்த மாவட்டத்திற்கு இந்த உதவி தேவைப்படுகிறது என்று பார்த்து, கடன் உதவி வழங்கப்படுகிறது. அந்த அடிப்படையில்தான் மேலும் வழங்கப்படும்.

திரு. சி. சிவப்பிரகாசம் : தலைவரவர்களே, தமிழ்நாட்டில் இதுவரை ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினருக்கு எவ்வளவு தொகை கடன் கொடுக்கப்பட்டுள்ளது ? அதில் எத்தனை பேர் கடனைத் திருப்பிச் செலுத்தியுள்ளார்கள் என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி : தலைவரவர்களே, 1982-83 ஆம் ஆண்டு வரையில் கொடுக்கப்பட்டிருக்கக்கூடிய சிறுதொழில் கடன் ஏறத்தாழ 1,42,33,805 ரூபாய். இதுவரை வசூலாகி இருப்பது 12,51,426 ரூபாய். நிலுவையில் இருக்கக் கூடிய தொகை 1,29, 82,378 ரூபாய். இதனால் பயனடைந்திருப்பவர்கள் 18,260 பேர்கள்.

திரு. ஜே. எஸ். இராசு : தலைவரவர்களே, தாழ்த்தப்பட்ட மக்களுக்கு வட்டி இல்லாக் கடன் என்ற தலைப்பில் ஆண்டு தோறும் ஒதுக்கப்படுகிற நிதி மிகக் குறைவாக இருக்கிறது. சான்றாக கடந்த ஆண்டு ஏறத்தாழ 10 இலட்சம் ரூபாய்தான் ஆதி திராவிடர்களுக்கும் பழங்குடியினருக்கும் ஒதுக்கப்பட்டிருக்கிறது. ஆனால் அதிகமான அளவுக்கு தமிழ்நாடு முழுவதும் உள்ள தாழ்த்தப்பட்ட மக்களிடமிருந்து கடன் கோரி விண்ணப்பங்கள் வந்து கொண்டிருக்கின்றன. ஆகவே இந்த 10 இலட்சம் ரூபாய் போதாது என்பதை உணர்ந்து, மக்கள் தொகையைக் கணக்கிட்டுப் பார்த்தாலும் சரி, பொருளாதார சிறுபான்மையை கணக்கிட்டுப் பார்த்தாலும் சரி, ஆண்டுதோறும் குறைந்தது ஒரு கோடி ரூபாயாவது ஒதுக்கீடு செய்து, இந்த மக்களை வாழவைக்க அரசு முன்வருமா ?



மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி : தலைவரவர்களே, ஆண்டுதோறும் இந்தத் திட்டத்தைப் பொறுத்தவரையில் ஆதி திராவிடர்களுக்கு என்று 10 இலட்ச ரூபாயும், கிறிஸ்துவ மதத்தைச் சேர்ந்த ஆதி திராவிடர்களுக்கு ஒரு இலட்ச ரூபாயும், பழங்குடி மக்களுக்கு 50 ஆயிரம் ரூபாயுமாக 11,50,000 ரூபாய் ஒதுக்கப்படுகிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதைப்போல அதிகமான அளவுக்கு ஆதி திராவிட மக்களும் பழங்குடி மக்களும் இந்தத் திட்டத்தின் பயனைப் பெற வேண்டுமென்ற எண்ணம் கொண்டிருப்பதை இந்த அரசு அறிந்துக் கொண்டிருக்கிற காரணத்தால், இத்திட்டத்தைச் செயல்படுத்துவதன் மூலம் இதிலிருந்து கடன் உதவி பெறுகின்றவர்கள் கடனைத் திருப்பிச் செலுத்துவது முறையாக இல்லாத காரணத்தால், இதை மாற்றி, தற்போது தமிழ்நாடு முழுவதும் தாட்கோ (தமிழ்நாடு ஆதி திராவிடர் வீட்டு வளர்ச்சி நிறுவனம்) மூலம் மேற்கொள்ளப்பட்டிருக்கக்கூடிய பொருளாதார மேம்பாட்டுத் திட்டத்தின் மூலம் வழங்கப்படுகின்ற சிறுதொழில் மானியம் மற்றும் கடன் உதவித் திட்டத்தின் கீழ் இதையும் சேர்க்கலாம் என்று முடிவு எடுத்திருக்கிறோம். அந்த வகையில் இனிமேல் இந்த திட்டத்தின் கீழ் வழங்கும்போது முழுக் கடன் தொகையில் 25 சதவீதம் மானியமாகவும், "தாட்கோ" மூலம் இது பொருளாதார முன்னேற்ற வளர்ச்சிக்காக 25 சதவீதம் குறியீட்டு கடனாகவும் (மார்ஜினல் மணி) வழங்கவும், தேசியமயமாக்கப்பட்ட வங்கிகள் மூலம் கடன் வழங்கவும் அவர்களுக்கு வசூல் செய்யப்படுகிற கடன் உதவிக்காக 4 சதவீதம் வட்டி கொடுக்க வேண்டுமென்றும் தற்போது இருக்கின்ற முறையை இந்தத் திட்டத்தில் மாற்றிக் கொள்ளலாம் என்றும் அரசு கருதிக் கொண்டிருக்கிறது. இதன் மூலம் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதைப் போல் அதிகமான ஆதி திராவிட மக்களும் பழங்குடி மக்களும் பயன் பெறுவார்கள் என்று கருதுகிறேன்.

### திண்டிவனம் நகரத்தில் பிற்படுத்தப்பட்டோர் பள்ளி மாணவர்களுக்கு விடுதி கட்டும் திட்டம்.

313—(*வினா எண் 18986)—திரு. கே. எம். தங்கமணி : மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திண்டிவனம் நகரத்தில் பிற்படுத்தப்பட்ட பள்ளி மாணவர்களுக்கு விடுதி கட்டப்படாமல் இருப்பதற்குக் காரணம் யாது ?

(ஆ) எப்போது இப்பணி தொடங்கப்படும் ?

மாண்புமிகு திரு. எம். ஆர். கோவேந்தன் : (அ) மற்றும் (ஆ) திண்டிவனம் நகரத்தில் பிற்பட்டோர் வகுப்புத் துறையால் நடத்தப்படும் பிற்படுத்தப்பட்டோர் பள்ளி மாணவர் விடுதி தற்போது இல்லை. எனவே, கேள்விக்கு இடமில்லை.

(முற்பகல் 9-50)

திருக்காட்டுப்பள்ளியில் பிற்படுத்தப்பட்ட மாணவிகளுக்கான விடுதி ஏற்படுத்தும் திட்டம்.

314—*வினா எண் 19398—திரு. மா. சுப்பிரமணியன் : மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சை மாவட்டம் திருக்காட்டுப்பள்ளியில் பிற்படுத்தப்பட்ட மாணவிகளுக்கு விடுதி ( Hostel ) ஏற்படுத்த அரசிடம் கோரிக்கை ஏதேனும் வந்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில், என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது ?

மாண்புமிகு திரு. எம். ஆர். கோவேந்தன் : (அ) இல்லை.

(ஆ) இக் கேள்விக்கு இடமில்லை.

செண்பகவல்லி அணையைப் பழுதுபார்க்கும் திட்டம்.

259—(*வினா எண். 18061)—திரு. ரா. கிருஷ்ணன் : மாண்புமிகு நீர்ப்பாசனத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நெல்லை மாவட்டம் வாசுதேவநல்லூருக்கு மேற்கே உடைந்துள்ள செண்பகவல்லி அணையைக் கட்டுவதற்கு அரசிடம் செயற் குறிப்புள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அது எப்போது கட்டப்படும் ?

மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப் : (அ) மற்றும் (ஆ) செண்பகவல்லி அணை மற்றும் கன்யாமதுகு கால்வாயைப் பழுது பார்க்கும் பணிக்காக கேரள அரசு அனுப்பியுள்ள திருத்திய மதிப்பீட்டுக்கு தமிழக அரசு ஒப்புதல் வழங்கியுள்ளது. பணிகளை உடனே மேற்கொள்ளுமாறு கேரள அரசு கேட்டுக்கொள்ளப் பட்டுள்ளது.



திரு. ரா. கிருஷ்ணன் : தலைவர் அவர்களே, இந்த உடைந்துபோன செண்பகவல்லி அணையினுடைய தண்ணீர் வீணாக கேரளாவை நோக்கி மேற்கே போய்க்கொண்டிருக்கிறது. இதிலே 1978-இல் ரூ. 5.55 இலட்சத்திற்கு ஒரு மதிப்பீடு தயாரிக்கப்பட்டு, பிறகு திருத்திய மதிப்பீடு ரூ. 7,52,117-க்கு ஒரு மதிப்பீடு தயாரிக்கப்பட்டு, தற்போது மீண்டும் ஒரு திருத்திய மதிப்பீடு ரூ. 10.29,233-க்கு தயாரிக்கப்பட்டிருக்கிறது. ஆக, காலதாமதத்தின் காரணமாகத்தான் இப்படி மதிப்பீடுகள் திருத்தப்பட வேண்டியிருக்கிறது. ஏற்கெனவே ஒரு ஜி. ஓ. இருக்கிறது. இந்த விலையேற்றத்தின் காரணமாக மதிப்பீடுகள் திருத்தப்படுகிறபோது, அதை அரசினுடைய அனுமதி இல்லாமலேயே துறையைச் சார்ந்தவர்களே, செலவு செய்து கொள்ளலாம் என்ற ஒரு ஸ்டேண்டிங் ஜி. ஓ. இருந்தும்கூட், காலதாமதமாகிக் கொண்டே இருக்கின்ற காரணத்தால், இப்படிப்பட்ட குறைபாட்டை அரசு உடனடியாகத் தவிர்க்க நடவடிக்கை எடுக்குமா என்பதையும், இந்தப் பணியை எவ்வளவு காலத்திற்குள் மேற்கொள்ள முடியும் என்பதையும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவிக்க இயலுமா ?

மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப் : தலைவர் அவர்களே, இந்தப் பணியைப் பொறுத்தமட்டில், பணியை மேற்கொள்ள வேண்டியது கேரள அரசு அலுவலர்கள் என்பதையும், பணிக்கான செலவை ஏற்றுக்கொள்வது தமிழக அரசு என்பதையும் நான் இங்கே சுட்டிக்காட்ட விரும்புகிறேன். அந்த வகையில் ஏற்கெனவே தயாரிக்கப்பட்டிருக்கின்ற திட்ட மதிப்பீடுகள் அவ்வப்போது கேரள அரசு அலுவலர்களால் திருத்தப்படுவதன் காரணமாக தமிழக அரசின் அனுமதிக்காக அனுப்பப்பட்டு வந்துகொண்டிருக்கிறது. அந்த முறையில் தான் இந்த மதிப்பீடுகள் இரண்டுமுறை திருத்தப்பட்டு, மூன்றாவது முறையாக, நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதுபோல், ஏறத்தாழ ரூ. 10 இலட்சத்திற்கும் மேற்பட்டு வந்திருக்கிறது. அந்தத் தொகைக்கான அனுமதியை வழங்குவதற்காக அரசு ஆய்வு செய்து கொண்டிருக்கிறது. இது இரண்டு மாநிலங்களைப் பொறுத்த ஒரு விஷயமாக இருப்பதால், தமிழக அரசு தன்னிச்சையாக ஒரு முடிவை எடுக்க முடியாது என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

திரு. ரா. கிருஷ்ணன் : இந்தப் பணிக்காக தமிழக அரசு தான் பணத்தை ஒதுக்கீடு செய்ய வேண்டியிருக்கிறது. அதனால் தான் காலதாமதம். இதை ஒரு குறிப்பிட்ட காலத்திற்குள் செய்யலாம். மழைக்காலம் முடிந்தவுடனேயே தான் இத்தகைய பணிகளைத் துவங்குவதற்கு ஒரு சரியான சந்தர்ப்பமாகும். ஆகையால் உடனடியாக இதற்காக தனியாக ஒரு செயற் பொறியாளரை பணிகளை மேற்கொள்ளுவதற்காக ஏற்பாடு செய்ய முடியுமா ? அதைக் காலாகாலத்தில் செய்வதற்கு அரசு தக்க நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப் : இந்தப் பிரச்சினையைப் பொறுத்த மட்டிலும், ஏற்கெனவே, திருநெல்வேலி செயற்பொறியாளர் அவர்கள் கேரளத்திலே உள்ள செயற் பொறியாளருடன் தொடர்பு கொண்டு இந்தப் பணி விஷயமாக உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ள நம்முடைய தலைமை பொறியாளர் (பாசனம்) அவர்களால் அறிவுறுத்தப்பட்டுள்ளார். அந்த வகையில் இயன்ற அளவிற்கு இந்தப் பணிகளை மேற்கொள்ள தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்பதை நான் இங்கே சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

திரு. க. பாலசுப்பிரமணியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொல்லும்போது அந்தப் பணிக்கான தொகையை தமிழக அரசு ஏற்றுக்கொள்கிறது என்றும் அந்தப் பணியைச் செய்பவர்கள் கேரளத்தைச் சேர்ந்த அதிகாரிகளும், அலுவலர்களும் என்று சொன்னார்கள். ஆகவே, அந்தப் பணி முறையாக அந்த அதிகாரிகளால் செய்யப்படுகிறதா? இல்லையா? என்பதை கண்காணிக்க தமிழக அரசினுடைய அலுவலர்கள் அல்லது பொறியாளர்கள் நியமிக்கப்பட்டு இருக்கிறார்களா? இல்லை என்றால், அப்படி ஒரு குழுவை அமைத்து, ஆவன செய்ய தமிழக அரசு முன் வருமா என நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப் : தலைவர் அவர்களே, பணி நடைபெற வேண்டிய இடம் கேரள எல்லையில் இருக்கிறது. ஆனால், பயன் கிடைப்பதோ, தமிழகத்தைச் சேர்ந்த பகுதிகள். அந்த முறையில் கேரள அரசின் அலுவலர்களை வைத்துத்தான் அந்தப் பணியை மேற்கொள்ள வேண்டி இருக்கிறது. கேரளாவிலும் அரசு அங்கே நடந்துகொண்டிருக்கிறது—நமக்கு எவ்வளவு பொறுப்பு இருக்கிறதோ, அதே அளவிற்கு பொறுப்பு கேரள அரசுக்கு இருக்கின்ற காரணத்தால், கேரள அரசின் கட்டுப்பாட்டின் கீழ் உள்ள அலுவலர்களை நம்பித்தான் இந்தத் திட்டம் மேற்கொள்ளப்பட்டு இருக்கிற காரணத்தால், மாண்புமிகு உறுப்பினர் சொல்லும் கருத்து அவ்வளவு சரியானதாக இல்லை என்று அரசு கருதுகிறது.

## சித்தார் அணை கட்டும் திட்டம்.

260—(*வினா 18478)—திரு. பி. ஜி நாராயணன் : மாண்புமிகு நீர்ப்பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—



பெரியார் மாவட்டம் பவானி தொகுதியில் உள்ள வறட்சிப் பகுதிகள் பயன் பெறுகிற வகையில் அட்டவணைப் புதூரில் சித்தார் அணை அமைக்கும திட்டம் எந்த நிலையில் உள்ளது?

மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப் : தலைமைப் பொறியாளர் (ஆய்வு) அவர்களின் விரிவான ஆய்வில் உள்ளது.

திரு. பி. ஜி. நாராயணன்: தலைவர் அவர்களே, இந்தத் திட்டத்தினால் எத்தனை ஏக்கர் நிலங்கள் பயன் பெற இருக்கிறது? இதற்கு எவ்வளவு ரூபாய் செலவிடப்படும் என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா?

மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப் : தலைவர் அவர்களே, ஏறக்குறைய பவானி வட்டத்தில் 2,055 ஏக்கர் புஞ்சை நிலமும், 131 ஏக்கர் நஞ்சை நிலமும் பாசன வசதிபெறும் என்று கருதப்பட்டு இருக்கிறது. இந்தத் திட்டத்திற்கு ஏறத்தாழ 200 லட்சம் ரூபாய் செலவாகும என்று இப்போது உத்தேசிக்கப்பட்டு இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

## வராக நதி நீர்ப்பாசனத் திட்டம்.

261 (*வினா 19592)—திரு. செஞ்சி ந. இராமச்சந்திரன் : மாண்புமிகு நீர்ப்பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தென்னாற்காடு மாவட்டத்தில் வராகநதி நீர்ப்பாசனத் திட்டத்திற்கு செய்யப்பட்ட செலவு எவ்வளவு?

(ஆ) அத்திட்டம் சரிவர நீர்ப்பாசனத்திற்குப் பயன்படவில்லை என்பது உண்மையா?

(இ) ஆம் எனில், அக்குறைகளைச் சீர் செய்ய அரசு எடுத்த நடவடிக்கையென்ன?

மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப் : (அ) ரூபாய் 24,53,284.

(ஆ) இல்லை. இத்திட்டத்தினால் ஏற்படும் பயன் வராக நதியின் நீர்ப்பிடிப்பு பகுதியில் பெய்யும் மழையளவை பொருத்திருக்கிறது. நன்றாக மழை பெய்யும்பொழுது நன்மை கிடைத்திருக்கிறது.

(இ) இக் கேள்விக்கு இடமில்லை.

**சின்னவாடம்பட்டியில் ஏரி அமைக்கும் திட்டம்.**

315—(*வினா 18358)—**திரு. கு. ரமணி :** மாண்புமிகு நீர்ப்பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவை மாவட்டம், கோவை தாலுகா, சர்க்கார் சாமக்குளம் யூனியனுக்குட்பட்ட சின்னவாடம்பட்டியில் கட்டப்படுகிற பெரிய ஏரியின் வேலை எப்பொழுது முடிவடையும் ?

(ஆ) இதனால் பாசன வசதி கிடைக்கும் நிலங்கள் எவ்வளவு ?

**மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப் :** (அ) இத்திட்டம் குறித்த அறிக்கை அரசின் பரிசீலனையில் உள்ளது. திட்டம் நன்மை தருமென்று கருதப்பட்டு அரசு அனுமதித்தால் திட்ட வேலைகள் துவங்கப்படும்.

(ஆ) 560 ஏக்கர் புன்செய் நிலங்களுக்கு பாசன வசதி கிடைக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

**திரு. கு. ரமணி :** பேரவைத் தலைவர் அவர்களே, இந்த திட்டம் 1967-க்கு முன்னால் காங்கிரஸ் ஆட்சி இருந்த நேரத்திலிருந்து கேட்கப்பட்டு வந்த திட்டம். ஆனால் இதுநாள் வரைக்கும் இந்த திட்டத்தை நிறைவேற்றுவதற்கு துரிதமாக நடவடிக்கை எந்த அரசாங்கத்தாலும எடுக்கப்படாததால், இந்த திட்டம் நின்றுபோய் இருக்கிறது. தற்போது இருக்கும் மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு முன்னால் இருந்த அமைச்சர் அவர்களை அந்த இடத்திற்கு நாங்கள் அழைத்துச் சென்று, அந்த இடத்தை எல்லாம் பார்வையிட்ட பிறகு, இந்த திட்டத்தை அமுலுக்குக் கொண்டு வருவதற்கு ஏற்பாடு செய்கிறோம் என்று அமைச்சர் அவர்கள் இதே சபையில் தெரிவித்தார்கள். ஆனால் இதுவரையிலும் அந்தத் திட்டம் துவக்கப்படாமல் இருப்பதற்கு என்ன காரணம? அதைக் கைவிடும் உத்தேசம் அரசுக்கு இருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.





**மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப் :** பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் திட்டத்தைப் பொறுத்தமட்டிலும், பயன் செலவு விகிதத்தைக் கணக்கிட்டு பார்த்தால் இந்தத் திட்டம் ஏற்றுக்கொள்ளக்கூடிய திட்டமாக அமையவில்லை. இருந்தாலும் அந்தப் பகுதி மக்களின் நன்மையைக் கருதி, இந்தத் திட்டத்தை மேற்கொள்ளலாமா என்ற வகையில் அரசு நடவடிக்கை எடுத்துக் கொண்டு இருக்கிறது. கோவை மாவட்ட ஆட்சித் தலைவர் இதற்கு ஒப்புதல் தெரிவித்திருக்கிறார்கள். அவ்வாறு ஒப்புதல் தெரிவிக்கிற நேரத்தில் நிலங்களைக் கையகப்படுத்துவதற்காக தற்போது ஒதுக்கீடு செய்த தொகை போதாது என்ற கருத்தையும் அவர்கள் தெரிவித்து இருக்கிறார்கள். அதற்காக கூடுதலாக தொகை ஒதுக்க வேண்டும் என்று தெரிவித்திருக்கிறார்கள். அந்த அடிப்படையிலே அந்தக் கருத்து ஏற்றுக்கொள்ளப்பட்டு, நம்முடைய தலைமைப் பொறியாளர் அவர்கள் திருத்திய மதிப்பீடு ஒன்றை அரசின் பரிசீலனைக்கு அனுப்பியிருக்கிறார்கள். தற்போது இந்தத் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளது என்பதை தெரிவித்துக்கொள்கிறேன்.

(முற்பகல் 10-00)

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** வினாக்கள்-விடைகள் நேரம் நீட்டிக்கப் பெறுகிறது.

**திரு. கு. ரமணி :** தலைவர் அவர்களே, இந்த திட்டம் மாவட்ட ஆட்சித் தலைவரால் ஒத்துக்கொள்ளப்பட வேண்டும் என்று பரிந்துரை அனுப்பியதற்கு பிறகும், இன்னும் தாமதிக்க வேண்டிய அவசியம் என்ன என்பதை தெரிந்துக் கொள்ள முடியவில்லை. தொடர்ந்து பரிசீலனையில் இருக்கிறது, பரிசீலனையில் இருக்கிறது என்று பல தடவை சொல்லப்பட்டது. 50 கிராமங்களுக்கு குடி தண்ணீர் கிடைக்கும். 560 ஏக்கர் புஞ்சை நிலத்திற்கு நீர்ப்பாசனம் கிடைக்கும். புஞ்சை, நஞ்சையாக வரக்கூடிய நிலம். அங்கு இருக்கக் கூடிய பூமியைக் கூட விவசாயிகள் இலவசமாகவே தருவதாகச் சொல்லியும்கூட, நடைமுறைக்கு வரவில்லை என்றால், அந்த திட்டத்தை தடுப்பதற்காக, வேறு ஏதாவது "எக்ஸ்டெர்னல் போர்ஸ்சஸ்" என்று 'external forces) என்று சொல்லப்படுகிற அப்பாற்பட்ட சக்திகள் ஏதாவது வேலை செய்கிறதா? திட்டவட்டமாக இது நடக்கும், இன்ன சமயத்தில் ஆரம்பிக்கப்படும் என்று. ஏதாவது நிர்ணயம் செய்து, நமது புதிய அமைச்சர் அவர்கள் அறிவிப்பாரா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களுடைய அனுமதியை பெறுவது என்பது எல்லாத் திட்டங்களிலும் கடைப்பிடிக்கப்படுகிற, ஒரு நடைமுறை வழக்கம். அது ஒரு பார்ட் ஆப் தி ஃபைல் என்பது மாண்புமிகு உறுப்பினர்

அவர்களுக்கு நன்றாகத் தெரியும். அந்த வகையில்தான் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் அனுமதி வழங்கியிருக்கிறார்கள். நான் முன்பே சொன்னது போல, மாவட்ட ஆட்சித் தலைவர் அனுமதி வழங்கிய நேரத்தில், நிலம் கையகப்படுத்துவதற்காக ஒதுக்கிய தொகை போதாது என்றும், குறைவாக ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது என்றும், குறிப்பிட்டு இன்ன தொகையை அதற்கு ஒதுக்கீடு செய்ய வேண்டும் என்றும் கருத்து தெரிவித்திருக்கிறார்கள். அந்த வகையில்தான் திருத்திய மதிப்பீடு தயாரிக்க வேண்டியிருக்கிறதே தவிர, வேறு எந்தவிதமான மாற்றங்களைக் கொடுக்கவோ, அல்லது வேறு யாரையாவது பாதுகாக்க வேண்டும் என்றோ, இதில் எதுவும் செய்யப்படவில்லை. மாவட்ட ஆட்சித் தலைவரின் கருத்தின்படி திருத்திய மதிப்பீடு தயாரிக்கப்பட்டிருக்கிறது. அதற்குரிய ஏற்பாடுகள் முடிந்த பின்பு ஏற்கும் வகையில், இந்தத் திட்டம் இருக்குமானால், உடனடியாக நடவடிக்கை எடுக்க அரசு முன் வரும்.

திரு. மா. சின்னராசு : இந்தத் திட்டம் அந்தப் பகுதிக்கு நீர்ப்பாசனம் கொடுப்பது மட்டும் அல்லாமல், கோவை மாநகரத்திற்கு ஏற்படுகிற வெள்ளத்தை தடுக்கிற திட்டமாகவும் பரிசீலிக்கப்பட்டிருக்கிறது. ஆரம்பக் காலத்திலேயே கோவை மாநகராட்சி இந்த திட்டத்திற்காக நிதி உதவி அளிப்பதாக ஒத்துக்கொண்டிருக்கிறது. ஆகவே, அதையும் கருத்தில் கொண்டு, பி.சி. ரேஷியோ, பைனான்ஸ் டிபார்ட்மெண்ட் வலியுறுத்தினால், வெள்ளத்தடுப்பு பணி நிவாரணத் திட்டம் என்ற வகையில் இந்த திட்டத்தை அமலாக்குவதற்கு, இந்த ஆண்டே அமலாக்குவதற்கு, உத்திரவாதம் அளிக்கும் வகையில், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா ?

மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப் : பேரவைத் தலைவர் அவர்களே, பி.சி. ரேஷியோவை பைனான்ஸ் வலியுறுத்துகிறார்களா இல்லையா என்ற விவரங்கள் இந்த அரசுக்கு வரவில்லை. தொகை போதாது என்ற காரணத்தால், திருத்திய மதிப்பீடுக்கு வந்திருக்கிறதே தவிர வேறு அல்ல. அந்த திருத்திய மதிப்பீட்டைப் பெற்று, அதற்குரிய ஆய்வுகளை நடத்தி கோப்பு சம்பந்தப்பட்ட அமைச்சருக்கு வந்தபிறகுதான், அரசு நடவடிக்கை எடுக்கும். இந்த நேரத்தில் இந்த கேள்விக்கு பதில் அளிக்க முடியாத நிலையில் இருக்கிறேன் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

## தொழில்துறை மூலம் பொட்டாசியம் குளோரைட் தொழிற்சாலை துவக்கும் திட்டம்.

38—(*வினா எண். 10157)— திரு. ரா. கு. பெருமாள் : மாண்புமிகு ஊரகத் தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தொழில் துறை மூலம் பொட்டாசியம் குளோரைட் தொழிற்சாலை துவங்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?



(ஆ) ஆம் எனில், அதன் மதிப்பீடு எவ்வளவு ?

(இ) எப்பொழுது எந்த இடத்தில் ஆரம்பிக்கப்படும் ?

மாண்புமிகு திரு. இரா. அருணாசலம் : (அ) ஆம்.

(ஆ) இதன் மதிப்பீடு ரூ. 38.00 இலட்சம் ஆகும். இது நாளொன்றுக்கு 1 டன் பொட்டாசியம் குளோரைட் உற்பத்தி செய்யும்.

(இ) இந்த தொழிற்சாலை இராமநாதபுரம் மாவட்டத்திலுள்ள குன்றக்குடியில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. தொழிற்சாலைக்கு அடிக்கல் 23-2-1982 அன்று நாட்டப்பட்டது. 1983-84 நிதி ஆண்டு இறுதிக்குள் உற்பத்தி துவங்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு : ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறியிடப் பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்.]

(முற்பகல் 10-00)

## 2. தகவல் கோரல்.

(அ) தென் மாவட்டங்களில் வெள்ளத்தால் சீர்குலைந்த மின்சார விநியோகத்தை சீர் செய்தல்.

திரு. எஸ். ஆண்டித்தேவர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்ற 7ஆம் தேதியன்று பெய்த பெருமழையின் காரணமாக மதுரை, இராமநாதபுரம், திருநெல்வேலி மாவட்டங்களில் பல உயிர் சேதங்களும், பொருள் சேதங்களும், பயிர்களுக்கும் சேதங்கள் ஏற்பட்டதையும், மக்களுக்கு வழங்கப்பட்ட பல்வேறு உதவிகளைப் பற்றியும் முதலமைச்சர் அவர்கள் 12ஆம் தேதியன்று வெள்ளை அறிக்கை வைத்து சொல்லியிருக்கிறார்கள். அவர்கள் ஹெலிகாப்டரில் போய் பார்த்ததாகச் சொல்லியிருக்கிறார்கள்....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அது பற்றிய விவாதம் 20 ஆம் தேதியன்று வைக்கப்பட்டிருக்கிறது. அது பற்றி, நீங்கள் பார்த்தது கண்டது போன்ற விளக்கங்கள் எல்லாம் வேண்டாம். அந்த விவாதத்திற்கு முன்னாலே ஏதாவது முக்கியமான பிரச்னை வந்திருந்தால் சொல்லலாம்.

[1984 மார்ச் 14

திரு. எஸ். ஆண்டித்தேவர் : பேரவைத் தலைவர் அவர்களே, முதலமைச்சர் அவர்கள் கொடுத்த அந்த அறிக்கைக்குள் நான் போக விருப்பவில்லை. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் நிவாரண நடவடிக்கைகள் எடுத்ததைப் பற்றிச் சொல்லியிருக்கிறார்கள். அந்த வேலைகள் எல்லாம் நடந்துக் கொண்டிருக்கின்றன. ஆனால் மதுரை மாவட்டம், ஆண்டிப்பட்டி பகுதியிலே கடலைக்குண்டு, வருஷநாடு, ஆகிய பகுதிகளிலே—முதலமைச்சர் அவர்கள் பார்க்கமுடியாத நிலையில் ஹெலிகாப்டரில் சென்று பார்த்திருக்கிறார்கள்—நான் 2 நாட்களாக நடந்தே 20 கிலோ மீட்டர் சென்று பார்த்துவிட்டு வந்திருக்கிறேன். அங்கே நிவாரண வேலைகள் நடந்து கொண்டிருக்கின்றன. இன்னொரு பேராபத்து இருக்கிறது. இயற்கையின் சீற்றத்தால் பல்லாயிரக்கணக்கான தென்னை மரங்கள் பாதிக்கப்பட்டிருக்கின்றன. அது மட்டுமல்ல, பருத்தி விவசாயம் ஆயிரக்கணக்கான ஏக்கரில் பாதிக்கப்பட்டிருக்கின்றது. அந்தப் பகுதியிலே மின்சார இணைப்பை வைத்துத்தான் அவர்கள் விவசாயம் செய்துவருகிறார்கள். மின்சாரக் கம்பங்கள் நொறுக்கப்பட்டிருக்கின்றன. மின்சாரம் இப்போது இல்லை. இன்னும் ஆயிரக்கணக்கான ஏக்கர் பருத்தி இன்னும் நான்கு தினங்களுக்குள் அழிந்துவிடுகிற ஆபத்தான நிலைமை இருக்கிறது. மற்றவர்கள் வேலை செய்கிறார்கள். ஆனால் மின்சாரத் துறையைச் சேர்ந்தவர்கள் அங்கே வேலை செய்யவில்லை. இயற்கையின் சீற்றத்தால் அழிந்தது தவிர இப்போது இருக்கிற பயிர்களும்கூட அழியும் ஆபத்து இருக்கிறது. ஆகவே உடனடியாக தனியாக மின்சாரத் துறையினரை அங்கே அனுப்பி, 2, 3 நாட்களுக்குள்ளாக மின்சாரம் அவர்களுக்குக் கிடைக்கச் செய்து பாதிப்பை போக்கக்கூடிய நடவடிக்கையை அரசு எடுக்குமா ?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திடீரென்று ஒரு பிரச்சினையை எழுப்பினால் எப்படி அரசுத் தரப்பிலே பதில் சொல்ல முடியும்? இதற்குத்தான் முதலிலேயே அதைப்பற்றி எழுதிக்கொடுக்கவேண்டுமென்றுச் சொல்கிறோம். (குறுக்கீடு) நிவாரணம் முக்கியமானதுதான். நான் முக்கியத்துவத்தைக் குறைத்து மதிப்பிடவில்லை. 20ஆம் தேதி அதைப்பற்றி விவாதம் வருகிறது. அப்போது முழு விவரமும் கேட்கலாம், அரசு தரப்பிலும் பதில் சொல்ல வாய்ப்பு உள்ளது.

திரு. ஜே. எஸ். இராசு : சட்டப் பேரவைத் தலைவர் அவர்களே, அண்மையில் ஏற்பட்டுள்ள வெள்ள விபத்தின் காரணமாக நம்முடைய வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் இங்கே அறிக்கையை வைத்தார்கள். தென் மாவட்டங்களிலே ஏற்பட்டதைப்பற்றிய குறிப்புகள் தான் அதிலே இருக்கின்றன. திருச்சி மாவட்டத்திலே ஏற்பட்ட வெள்ள விபத்தால் பெரம்பலூரில் காமாட்சி அம்மாள் என்ப



வரும், சுப்பிரமணியம், மகேசுவரி ஆகிய குழந்தைகளும் அடித்துச் செல்லப்பட்டிருக்கிறார்கள். ஆயிரக் கணக்கான ஏக்கர் நிலங்கள் மண்ணடித்துப் போய் இருக்கின்றன. அதைப்பற்றிய குறிப்பு அறிக்கையிலே இல்லை, எந்தத் தகவலும் இங்கே தெரிவிக்கப்படவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : 20 ஆம் தேதி அதுபற்றி விவாதம் நடைபெற இருக்கிறது. அன்றைய தினம் திரு இராசு இது குறித்து வேண்டுமானால் பேசலாம்.

### (ஆ) தமிழகத்திற்கு மத்திய இருப்பில் இருந்து கிடைக்கும் அரிசி உதவி.

திரு. என். வரதராஜன் : தலைவர் அவர்களே, முக்கியமான ஒரு பிரச்சினையை நான் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன். காலம் தாழ்ந்த பெய்த மழையின் காரணமாக தமிழ்நாட்டிலே உள்ள மக்கள் விவசாயிகளும் மற்றவர்களும் பெரிதும் பாதிக்கப்பட்டு தவித்துக் கொண்டிருக்கிறார்கள். இந்த நிலையில் அறுவடைக்கு லாயக்கான நெல் மணிகள் அழிந்துக் கொண்டிருக்கின்றன. அந்த அழிவின் காரணமாக ஏற்கெனவே வேதனைப்பட்டுக் கொண்டிருக்கின்ற மக்களை மேலும் வேதனைக்குள்ளாக்குகின்ற வகையிலே இன்றைக்கு அகில இந்திய வானொலியிலே ஒரு செய்தி காலையிலே வருகிறது, அந்தச் செய்தியைக் கேட்டவுடனே நான் அதிர்ச்சியடைந்தேன், இந்தச் சபையே அதிர்ச்சியடையக்கூடியச் செய்தி. ஏற்கெனவே நமக்கு மாதம் ஒன்றுக்கு இலட்சம் டன் அரிசி கொடுக்கவேண்டுமென்று நாம் கேட்டுக்கொண்டே இருக்கிறோம். ஆனால், 40 ஆயிரம் டன்கள் கொடுக்கிறோம் என்று அவர்கள் சொல்கிறார்கள். காலையிலே சொன்ன செய்தியிலே இந்த மாதம் 35 ஆயிரம் டன்னும், அடுத்த மாதம் 25 ஆயிரம் டன்னும் கொடுப்போம் என்று அதிகாரப்பூர்வமாக ரேடியோவிலே அறிவித்தார்கள். தமிழ்நாட்டில் வேதனைப்பட்டுக் கொண்டிருக்கின்ற மக்களை மேலும் வேதனையில் ஆழ்த்துகின்ற முறையிலே அவர்கள் மேல் பாய்ச்சலை செய்வதைப்போல் மத்திய அரசு செய்து கொண்டிருக்கிறது. இதற்கு மாநில அரசு எடுத்துக் கொள்கின்ற நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அரிசியைக் குறைத்திருக்கிறார்கள். திரும்பவும் இவர்கள் எழுதுவார்கள் (குறுக்கீடு) அந்தக் கஷ்டம் தெரிகிறது. ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுங்கள், நாளைக்கு எடுத்துக் கொள்ளலாம்.

[1984 மார்ச் 14

(இ) எண்ணூர் அனல் மின் நிலையத்திற்கு சிங்கரேணி யிலிருந்து கிடைக்கும் நிலக்கரி.

திரு. ப. நெடுமாறன் : தலைவர் அவர்களே, மிக முக்கியமான விஷயத்தை நான் தங்களுடைய கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன். எண்ணூரிலே உள்ள அனல் மின் நிலையத்திற்கு நிலக்கரி அனுப்புவதை சிங்கரேணி சுரங்க அதிகாரிகள் நிறுத்தி விட்டார்கள், காரணம் தமிழ்நாடு அரசு பணம் கட்டவில்லை எனவே .. ..

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அதைப்பற்றி ஒத்திவைப்புத் தீர்மானமோ கவன ஈர்ப்போ கொண்டுவாருங்கள். அரசாங்கம் அக்கறை எடுத்துக் கொள்ளும். பெரிய தலைவர்களே இப்படிச் செய்தால் என்ன செய்வது ?

(முற்பகல் 10.10)

3. கவன ஈர்ப்பு.

மாணவர்கள் பயன்படுத்தும் குறிப்பேடுகளின் விலை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திருவாளர்கள் பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம், இரா. தாமரைக்கனி ஆகியோர் ஒரே பொருள் குறித்து கவன ஈர்ப்புத் தீர்மானங்கள் கொடுத்துள்ளனர். அவர்களுள் ஒருவர் இதை மாண்புமிகு கல்வி அமைச்சரின கவனத்திற்கு கொண்டு வருவார்.

திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, " தமிழ்நாட்டில் நோட்டு புத்தக விலை உயர்வு காரணமாக மாணவர்கள் பெற்றோர்களிடையே நிலவும் கவலைக் குறித்து " அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு கல்வி அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரவை முன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்.

அறிக்கை.

இந்திய அரசினால் ஒதுக்கப்படும் சலுகை விலைத் தாளைப் பயன்படுத்திக் குறிப்பேடுகள் தயாரித்து அவற்றை வழங்கும் பணி 1—10—1979 முதல் தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனத்திடம் ஒப்படைக்கப்பட்டது. சலுகை விலைத் தாளைப் பயன்படுத்தித் தயாரிக்கப்படும் குறிப்பேடுகள் ஒவ்வொரு வகையின் உச்சபட்ச விற்பனை விலையையும் இந்திய அரசே நிர்ணயித்திருக்கிறது. அவ்வப்போது விலைத்தாளின் விலை மாற்றப்படும்போது குறிப்பேடுகளின் விலையும் மாற்றப்பட்டு வருகிறது.



1984 மார்ச் 14] [திரு. செ. அரங்கநாயகம்]

1979-80, 1980-81, 1981-82 ஆகிய ஆண்டுகளில் இந்திய அரசினால் ஒதுக்கீடு செய்யப்பட்டதற்கிணங்கப் போதிய அளவு சலுகை விலைத் தாள் தமிழ் நாட்டுப் பாடநூல் நிறுவனத்திற்குக் கிடைத்து வந்தது. இவ்வாறு பெறப்பட்ட தாள குறிப்பேடுகளாகத் தயாரிக்கப்பட்டு அவ்வப்போது இந்திய அரசினால் நிர்ணயிக்கப்படும் விலைகளில் கூட்டுறவு நிறுவனங்கள் வாயிலாக மாணவர்களுக்கு வழங்கப்பட்டு வந்தது. அப்போது நியாய விலையில் மாணவர்கள் போதிய அளவு குறிப்பேடுகள் பெற்று வந்தார்கள்.

1982ஆம் ஆண்டில் தொடக்கத்தில் சில ஆலைகள் நீதிமன்றம் சென்று தாள் வழங்கலுக்கு எதிராக இடைக்காலத் தடையினைப் பெற்றன. எனவே, 1-7-1982 முதற்கொண்டு குறிப்பேடுகளுக்காகத் தாள் ஒதுக்கீடு செய்யப்படுவது நிறுத்தப்பட்டு விட்டது. எனவே, தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனத்தால் குறிப்பேடுகள் தயாரிக்கவும், அவற்றை மாணவர்களுக்கு வழங்கவும் இயலவில்லை.

1983-84 ஆம் ஆண்டில் ஏறத்தாழ ரூபாய் 1.5 கோடி பெறுமானமுள்ள குறிப்பேடுகள் கையிருப்பில் இருந்தன. இவை மாணவர்களுக்கு வழங்கப்பட்டன. 1—4—1983 முதல் இந்திய அரசு தாளின் விலையை மாற்றியமைத்திருக்கிறது. 1—4—83-லிருந்து தொடங்கும் காலாண்டிலிருந்து சலுகைத் தாள் ஒதுக்கீடு மீண்டும் தொடங்கியிருக்கிறது. குறிப்பேடுகள் தயாரிப்புக்கான ஒழுங்கான தாள் ஒதுக்கீடு இந்திய அரசினால் செய்யப்பட்டபோதிலும் ஆலைகள் தங்களுக்கான ஒதுக்கீட்டு ஆணைக்கிணங்கத் தாள் வழங்காது மறுத்து வருகின்றன. குறைந்த அளவில் ஒதுக்கீட்டு ஆணை பெற்ற சில குறிப்பிட்ட ஆலைகள் தாள் வழங்கின.

இப்பொழுது தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம் ரூபாய் 1.54 கோடி பெறுமானமுள்ள குறிப்பேடுகளைக் கையிருப்பில் வைத்துள்ளது. இத்துடன் கையிலுள்ள சிறு அளவு தாளையும் கணக்கில் கொண்டால் ரூபாய் 1.80 கோடி மதிப்புள்ள குறிப்பேடுகள் இருக்கும். பள்ளிகள் மீண்டும் திறந்தவுடனேயே கையிருப்பில் உள்ள இந்தக் குறிப்பேடுகள் கூட்டுறவு நிறுவனங்கள் வாயிலாகப் பள்ளிகளுக்கு வழங்கப்படும். தமிழ்நாட்டு பாடநூல் நிறுவனம் மைய அரசால் நிர்ணயித்த விலையிலேயேகுறிப்பேடுகளை விற்கிறது

திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கொடுத்து இருக்கிற அறிக்கையில் 1982ஆம் ஆண்டின் தொடக்கத்தில் சில ஆலைகள் நீதிமன்றம் சென்று தாள் வழங்கலுக்கு எதிராக இடைக்காலத் தடையினைப் பெற்ற காரணத்தினால் நோட்டுப் புத்தகங்

களின் விலை ஏறி இருக்கின்றன என்று கூறியிருக்கிறார்கள். இந்த விலை மாணவர்களுக்கு கட்டுப்படியாகாது. அதனால் ஏறியிருக்கிற விலையை அரசே ஏற்றுக்கொண்டு கல்வித்துறை மூலமாக மானிய விலையில் மாணவர்களுக்கு நோட்டுப் புத்தகங்கள் வழங்குமா என்று அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சலுகை விலையில் நமக்குத் தாள்கள் கிடைத்தால் அதிலே நோட்டுப் புத்தகங்கள் தயாரித்து மலிவு விலையில் நாம் விற்றுக்கொண்டு வருகிறோம். அந்த மலிவு விலையில் தாள் தருவதற்குதான் உத்தரவை மத்திய அரசு பிறப்பித்து இருந்தபோதிலும் அந்த பேப்பர் மில்லைச் சேர்ந்தவர்கள் அந்த உத்தரவுக்கு கட்டுப்பட மறுத்து நீதி மன்றம் சென்று இருக்கிறார்கள். ஆகவே நமக்கு போதுமான தாள் கிடைக்காத காரணத்தினால் தமிழ்நாடு பாடநூல் நிறுவனம் நோட்டுப் புத்தகங்கள் தயாரிக்க முடியாத ஒரு சிரமமான நிலையில் இருக்கிறது என்பது உண்மைதான், என்றாலும் நாம் இதுவரைக்கும் கிடைத்த அந்த தாள் மூலம் செய்யப்பட்ட நோட்டுப் புத்தகங்களை மத்திய அரசு என்ன விலை நிர்ணயித்து இருக்கிறதோ அந்த விலைக்கு விற்றுக்கொண்டு இருக்கிறோம், வருகின்ற ஆண்டுக்கு தேவையான அளவுக்கு நோட்டுப் புத்தகங்கள் தயாரிக்கப்பட்டு வைத்து இருக்கிறார்கள். ஆகவே இந்த பிரச்சினையை நாம் மத்திய அரசின் கவனத்திற்கு கொண்டு வந்து எதிர் காலத்தில் நோட்டுப் புத்தகங்கள் கிடைக்காமல் இருக்கக் கூடாது என்ற காரணத்தினால் இந்த மலிவு விலை தாள் கிடைப்பதற்கு அரசு தக்க நடவடிக்கை எடுக்கும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பள்ளிகள், மீண்டும் திறந்தவுடன் கையிருப்பில் உள்ள நோட்டுப் புத்தகங்கள் கூட்டுறவு நிறுவனங்கள் மூலமாக பிள்ளைகளுக்கு வழங்கப்படும் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவித்து இருக்கிறார்கள். கிராமப்புறங்களில் உள்ள நியாய விலைக் கடைகள் மூலமாக இந்த நோட்டுப் புத்தகங்களை கொடுக்க அரசு ஆவன செய்யுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாம் இப்போது அவைகளை கூட்டுறவு நிறுவனம் மூலமாக விற்பனைச் செய்கிறோம். ஆக அந்தப் பள்ளிகளைச் சேர்ந்தவர்கள் அங்கே வந்து தங்கள் தேவைக்கு ஏற்ப வாங்கிச் சென்று கொண்டு இருக்கிறார்கள். நியாய விலைக் கடைகள் மூலம் கொடுக்க ஆரம்பித்தால் பொது



வான வியாபாரமாக மாறி இந்த மலிவு விலையில் விற்கின்ற நோட்டுப் புத்தகங்கள் மாணவர்களுக்குக் கிடைக்காமல் வேறு விதமான உபயோகத்திற்குப் போகக்கூடிய நிலைமை ஏற்பட்டு விடும்.

4. வரவு-செலவுத் திட்டம் 1984-85—பொது விவாதம் —தொடர்ச்சி.

திரு. கே. எஸ். ஜி. ஹாஜாஷெரீப் : மாண்புமிகு சபாநாயகர் அவர்களே, நிதி அமைச்சர் அவர்கள் இந்த சபையில் வைத்த நிதிநிலை அறிக்கையின் பேரில் என்னுடைய கருத்துக்களை சொல்ல நான் ஆசைப்படுகிறேன். முதலிலே வறட்சி நிவாரணம் அதற்கு அடுத்தாற்போல் வெள்ள நிவாரணம் இவைகளைப்பற்றி விவரமாக அறிக்கையில் கூறியிருக்கிறார்கள். துரதிர்ஷ்டவசமாக நம்முடைய மாநிலத்தில் 3 வருடமாக வறட்சியும், வெள்ளமும் சேர்ந்து நம்மை வாட்டிக்கொண்டு வருகிறது. வறட்சியால் மிகுந்த கஷ்டப்பட்டோம். மிகுதியான டிஸ்ட்ரிக்டுகள் இதிலே சிக்கிக் கொண்டு பெரும் அளவுக்கு சேதம் அடைந்தது. அதிலே அரசு நல்ல நிவாரண வேலைகளை செய்து வைத்துள்ளார்கள் அதற்காக நான் ஆளுநர் உரையிலே பேசும்போது கூட சொன்னேன். அதற்கு பின்னால் அதிக மழை பெய்ததன் காரணமாக பெரிய வெள்ளம் வந்ததன் காரணமாக பெரிய தீங்குகள் நமக்கு ஏற்பட்டன. லட்சக்கணக்கான குடிசைகள் மற்றும் லட்சக்கணக்கான மக்கள் பாதிக்கப்பட்டு இருக்கிறார்கள். லட்சக்கணக்கான ஏக்கர் நிலங்கள் வீணாகி போய்விட்டன. இவைகளின் காரணமாக நமக்கு 'புரொடக்ஷன்' மிகவும் பாதிக்கப்பட்டது.

இதற்கு சென்ட்ரல் கவர்ன்மென்ட் கூடுமானவரையில் உதவி செய்தார்கள். நம்முடைய அரசாங்கமும் இதில் மிகுந்த விழிப்புடன் வேலை செய்திருக்கிறது. முதலமைச்சரவர்களே முன்னின்று இந்த நிவாரண வேலைகளைத் துரிதமாகச் செய்ததற்காக அவருக்கு என்னுடைய மகிழ்ச்சியையும், நன்றியையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஆனால் இங்கே பேசும்பொழுது அங்கத்தினர்கள் முக்கியமாக எதிர்க்கட்சி அங்கத்தினர்கள் சொல்லிக்கொண்டு வந்தார்கள். சென்ட்ரல் கவர்ன்மென்ட் கொடுக்கவே இல்லை. அவர்கள் எந்தவிதமான உதவியையும் உங்களுக்குத் தரவில்லை, நீங்கள், கேட்ட தொகையைக் கொடுக்கவில்லை என்றெல்லாம் குற்றஞ் சாட்டினார்கள். அவர்கள் சொல்வதை நான் புரிந்துகொள்ள முடியும். காரணம், அவர்கள் எப்பொழுதுமே,

[திரு. கே. எஸ். ஜி. ஹாஜாசெரீப்] [1984 மார்ச் 14

" Particularly my comrades on my left "

அவர்கள் சென்ட்ரல் கவர்ன்மென்டின் மீது பாவம் பழியைச் சுமத்துவதில் கண்ணும் கருத்துமாக இருக்கிறார்கள்.

ஆனாலும் நிதிநிலை அறிக்கையைப் பார்த்தால் சென்ட்ரல் கவர்ன்மென்ட் நமக்கு 103.11 கோடி ரூபாயை இன்கம்டாக்சிலிருந்து நம்முடைய ஷேராகக் கொடுக்கிறார்கள்.

| | |
|---|---|
| Sales tax due to States | 1.50 இலட்சமும், |
| Grants in aid | 207.84 இலட்சமும், |
| Our State share of Union Excise duty | 322.35 இலட்சமும், |

கொடுக்கிறார்கள். இப்படிப் பார்க்கும்பொழுது இந்த வருஷம் 634.35 இலட்சம் ரூபாய் அவர்கள் கொடுத்ததாக இந்த பட்ஜெட்டில் குறிக்கப்பட்டிருக்கிறது. நம்முடைய ஸ்டேட் வருவாய் 1430 கோடி ரூபாய். ஆகமொத்தம் 2064.35 கோடி ரூபாய் நமக்கு வருவாய் வருகிறது. ஆகவே, இதில் யாரும் குறை சொல்ல முடியாது.

சென்ட்ரல் கவர்ன்மென்ட் கொடுக்கவில்லை என்றால் நாம் அவர்களுக்கு ப்ரூவ் செய்து, இவ்வளவுதான் வருகிறது. இது கம்மியாக இருக்கிறது, இதற்குமேல் ஜாஸ்தியாகக் கொடுக்க வேண்டும் இன்கம்டாக்ஸ், எக்சைஸ் டியூட்டி ஆகியவைகளை நீங்கள் நிறைய வசூலிக்கிறீர்கள். அதற்குத் தகுந்த மாதிரி எங்களுக்கு வரவில்லை என்று நாம் ப்ரூப் செய்து புள்ளிவிவரங்களோடு எடுத்துக்காட்டினால் அவசியம் அதைக் கவனிப்பார்கள் என்பதில் நமக்குச் சந்தேகம் இருக்க முடியாது.

ஏதாவது கஷ்டம் ஏற்பட்டால், இயற்கையின் கோளாறுகள் ஏற்பட்டு கஷ்டங்கள் ஏற்பட்டால், அதற்கு நிவாரணம் ஏதாவது கேட்டால், உடனடியாக நமக்கு அவர்கள் கூடுமானவரையில் உதவிகளைச் செய்து வருகிறார்கள். இப்படியிருக்கும்போழுது இவர்கள் மட்டும் சென்ட்ரல் கவர்ன்மென்டின்மீது பாவம் பழியைப் போட்டு, இந்த அரசாங்கத்தை அவர்களுக்கு எதிராகத் தூண்டிவிட்டு, அவர்கள்மேல் கோபப் பார்வையை வைத்து ஏதாவது பேசும்படியாகவும், செய்யும்படியாகவும், சொல்வது வருந்தத்தக்கது. இந்த மனப்பான்மையை விட்டுவிட வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

இதுமட்டுமல்லாமல், நம்முடைய அரசாங்கம் 1213 கோடி ரூபாய்களை சென்ட்ரல் கவர்ன்மென்டிலிருந்து கடன் வாங்கியிருக்கிறது. மார்க்கட் லோன் 332 கோடி ரூபாய். ஆக 1545 கோடி ரூபாய்களைக் கடன் வாங்கியிருக்கிறது. இதற்காகத்தான் பட்ஜெட்டில் 127.54 கோடி ரூபாய் வட்டிக்காக மட்டும் நாம்



1984 மார்ச் 14] [திரு. கே. எஸ். ஜி. ஹாஜாசெரீப்]

ஒதுக்கி இருக்கிறோம். இதற்காக நமது அரசாங்கம் வருஷா வருஷம் எவ்வளவு திரும்பப் கொடுக்கிறார்கள். வட்டிக்கு எவ்வளவு கொடுக்கிறார்கள். அல்லது வாங்கிய முதலுக்கு எவ்வளவு திருப்பிக் கொடுக்கிறார்கள். என்பதுபற்றியெல்லாம் கணக்குகளை கொண்டு ஒரு பாராகிராபைச் சேர்த்திருந்தால் அது மிகவும் நன்மையாக இருந்திருக்கும் என்று சொல்லிக்கொள்கிறேன். எனவே, இனிமேலாவது வரும் பட்ஜெட்டில் அம்மாதிரி பாராகிராபைச் சேர்க்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

இந்த வறட்சியின் காரணமாகச் செய்யப்பட்ட வேலைகளின் மூலமாக நம்முடைய மாநிலத்தில் நிலையான வசதிகள் ஏற்பட்டிருக்கின்றன.

I can even say that these catast ophics have proved as "blessing in disguise.

குடிதண்ணீர் வசதி, பாசன வசதி, சாலைப் போக்குவரத்து வசதி, இன்னும் பல வசதிகள் இதனால் ஏற்பட்டிருக்கின்றன. இதன் காரணமாக மக்களுக்கு நிறைய வேலைவாய்ப்பு ஏற்பட்டிருக்கிறது.

இருந்தாலும், ''பர் கேபிடா இன்கம்'' உயரவில்லை என்பது தான் வருத்தமாக இருக்கிறது. பர் கேபிடா இன்கம் எப்பொழுது உயரும்? நிறைய இன்டஸ்ட்டிரியல் ஆக்டிவிட்டீஸ் இருந்தால் தான் பர் கேபிடா இன்கம் விரைவாக உயரும். அப்படியில்லாமல் இருந்தால், எந்தக் காரணத்தைக் கொண்டும் பர் கேபிடா இன்கம் உயராது என்பதை நான் தெரிவித்துக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

இப்பொழுது இன்டஸ்ட்டிரியல் டெவலப்மென்ட் பற்றிச் சொல்ல வேண்டுமென்றால், சுவையான சங்கதிகளை இந்த நிதி நிலை அறிக்கையில் நான் பார்க்கிறேன்.

(முற்பகல் 10.20)

அடுத்து தொழில் வளர்ச்சியைப் பொறுத்தவரையில் ஆதார மற்ற கருத்து நிலவி வருகின்றது; எனினும், மத்திய நிதி நிறுவனங்களிடமிருந்து, மொத்தக் கடன் உதவி ரூ. 1289 கோடி பெற்ற தமிழ்நாடு, இந்தியத் தொழில் வளர்ச்சி வங்கி, இந்திய தொழில் கடன் முதலீட்டு நிறுவனம், இந்திய தொழில் நிதி நிறுவனம் ஆகிய நிறுவனங்களின் மூலம் மிகுந்த தொழில் வளர்ச்சி நடைப் பெற்றுக்கொண்டு வருகின்றது என்று இதிலே குறிப்பிட்டிருக்கிறார்கள். ஆனால் ஆதாரமான கருத்து இங்கே சொல்லவில்லை.

[திரு. கே. எஸ். ஜி. ஹாஜாசெரீப்] [1984 மார்ச் 14

Particularly I have been saying that there have been very poor industrially development and progress in our State.

நம்முடைய ஸ்டேட்டிலே எந்த இயற்கை பொருட்கள் இல்லை? நிலக்கரி வேண்டுமானால் இல்லை என்று சொல்லலாம். மற்றபடி நிறைய வளம் இருக்கின்றது. அந்த வளங்களை எல்லாம் நாம் பயன்படுத்தி அதிகமான அளவிலே தொழில்களை ஏற்படுத்துவதற்குரிய வழிவகைகளைச் செய்யலாம். செய்ய முடியும். ஆனால் அந்த முறையில் அரசாங்கம் கவனம் செலுத்தவில்லை.

ஆனால் நீங்கள் சொல்லி இருக்கிறீர்கள். சிறு தொழில் பிரிவுகளில் விரிவான வளர்ச்சி அடைந்திருப்பதாகச் சொல்லி இருக்கிறீர்கள். 31—3—79 அன்று 22,254 சிறு தொழில் பிரிவுகள் பதிவு செய்யப்பட்டிருக்க 31—3—83 அன்று 40,925 சிறு தொழில் பிரிவுகள் பதிவு செய்யப்பட்டிருக்கின்றன என்று சொல்லி இருக்கிறீர்கள். அவ்வாறு பதிவு செய்யப்பட்டிருக்கின்றது என்றால் அவற்றில் எவ்வளவு ஆக்சுவலாக ஒர்க்கிங் கண்டிஷனில் இருக்கின்றன ?

What is the paid up capital ?

அதை வைத்துத்தான் கணக்குப் பார்க்கவேண்டும். 40 ஆயிரம். அல்லது 50 ஆயிரம் சிறு தொழில்களைப் பதிவு செய்திருக்கிறோம் என்று சொன்னால் அவற்றிலே எத்தனை ஆயிரம் தொழில்கள் இன்று நடைமுறையில் இருந்து அவை நல்லவிதமாக வேலை செய்கின்றன என்பதைச் சொல்லவேண்டும். அதன் காரணமாக எவ்வளவு உற்பத்தி, எவ்வளவு நபர்களுக்கு வேலை வாய்ப்பு கிடைக்கின்றது என்ற கணக்கையும் அரசாங்கம் கொடுக்குமானால் அது மிகவும் போற்றக் கூடிய ஒன்றாகும். விட்டுவிட்டு அதை இவ்வளவு நாங்கள் பதிவு செய்து இருக்கிறோம் என்று சொன்னால் அது

I should say, it is a very misleading information even to the Government.

என்றுதான் சொல்லவேண்டும். இப்பொழுது நமக்கு ஒரு புது இன்டஸ்ட்ரிஸ் மினிஸ்டர் வந்திருக்கிறார்.

I know Mr. Ponnaiyan. He is a very active person, very knowledgeable and very Industrious. We only want a person of his dynamism and calibre.

அவர் அந்தத் துறையினை எடுத்துக்கொண்ட ஒரு வாரத்திற்குள்ளாக தொழில் அதிபர்கள் எல்லோரையும் ஒரு இடத்திலே பார்த்தார்கள். அப்போது குறைந்தது 60,70 தொழில் அதிபர்கள் இருந்தார்கள். நானும் அங்கே இருந்தேன். அப்போது அவர்கள் மனம் விட்டுப் பேசினார்கள். ஆமாம், நம்முடைய



1984 மார்ச் 14] [திரு. கே. எஸ். ஜி. ஹாஜாசெரீப்]

மாநிலத்தில் வரவேண்டிய தொழிற்சாலைகள் வரவில்லை; இப்போது இருப்பதைவிட பன்மடங்கு தொழில் அபிவிருத்தியினை ஏற்படுத்தி இருக்கலாம்; அது முடியவில்லை. எனவே உங்களுடைய ஒத்துழைப்பு எல்லாம் எங்களுக்கு வேண்டும் என்று சொன்னார்கள்.

That means, he wants to create a climatic condition for the development of industrial activity.

அப்போது சில தொழில் அதிபர்களும் மனம் விட்டுப் பேசினார்கள். அவர்கள் ஒன்றைக் கேட்டார்கள். இந்த மாதிரி எங்களிடம் மனம் விட்டு எந்தத் தொழில் அமைச்சரும் பேசவில்லை என்பதை நாங்கள் ஒப்புக் கொள்கிறோம்; ஆனால் ஒரே ஒரு கேள்வியை மட்டும் கேட்க விரும்புகிறோம்; நீங்கள் கேட்கலாம் என்று சொன்னால் கேட்கிறோம் என்று சொன்னார்கள். உடனே அவர்கள்

Yes, go ahead

என்று சொன்னார்கள். ''எங்களுக்கு எப்போதாவது கஷ்டம் ஏற்பட்டால் அல்லது நஷ்டம் ஏற்படும் என்ற ஒரு அபாயம் இருந்தால் உங்களை வந்து நாங்கள் பார்க்க முடியுமா? சீக்கிரத்தில் நீங்கள் பேட்டி கொடுப்பீர்களா? உங்களுடைய முதலமைச்சர் அவர்களும் பேட்டி கொடுப்பார்களா? அதற்கு நீங்கள் உத்தரவாதம் கொடுப்பீர்களா'' என்றெல்லாம் கேட்டார்கள்.

My house is open for 24 hours.

என்று சொன்னார்கள். நீங்கள் கேட்டுக்கொண்டும் வரலாம். கேட்காமலும் வரலாம். ஆனால் கேட்டுக்கொண்டு வந்தால் உடனே பார்க்கலாம்; கேட்காமல் வந்தால் தாமதம் ஆகக் கூடும் என்று சொன்னார்கள்.

It is a very frank statement.

எல்லா விஷயங்களையும் அவர்கள் பேசினார்கள். அதிலிருந்து நிறைய இன்டஸ்ட்ரியல் ஆக்டிவிட்டீஸ் வரும் என்று எதிர்பார்க்கிறேன். கமிட்டியைப் பற்றிக் கூடப் பேசினோம். பெரிய கமிட்டி போட்டு விட்டார்கள். அது கமிட்டி அல்ல;

It is a Council or Assembly.

அதைத் திருத்தி அமைத்து சிறு கவுன்சிலாகப் போடுங்கள் என்றும் சொன்னார்கள், நல்ல கருத்துக்களையும் சொன்னார்கள். எந்த, எந்த ஆட்களைப் போட்டால், எந்த ஒரு தொழிற்சாலையிலும் ஏற்படக்கூடிய கஷ்டத்திற்கு அந்தக் கமிட்டி

உதவும் என்று சொன்னார்கள். அதே மாதிரி போடுகிறேன் என்று இவர் சொன்னார், ஒரு வாரத்தில் அவைக்குத் தெரியப்படுத்துகிறேன் என்று சொன்னார். இதுவரையில் போடாமல் இருந்தால் அதைத் துரிதப்படுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இம்மாதிரி எல்லாம் நாம் தொழில் வளர்ச்சியை ஏற்படுத்தினோமானால் இலட்சக்கணக்கான சிறிய தொழிற்சாலைகள் வரும். ரிஜிஸ்டர் பண்ணினால் மட்டும் போதாது. ரிஜிஸ்டர் பண்ணி அவர்களுக்கு என்ன, என்ன உதவி வேண்டுமோ, அந்த உதவிகளை எல்லாம் அரசாங்கம் தாமதம் இல்லாமல் கொடுத்து, அவர்களுக்கு ஊக்கமும் கொடுத்தாலொழிய தொழில்கள் வளராது.

அப்படிச் செய்தால்தான் இலட்சக்கணக்கான மக்களுக்கு வேலை வாய்ப்பு ஏற்படும். வருஷா வருஷம் இலட்சக்கணக்கான இளைஞர்கள் காலேஜிலிருந்து பாஸாகி வெளியே வருகிறார்கள். டிப்ளமோ கோர்ஸ் படித்தவர்கள் வெளி வருகிறார்கள். பிளஸ் டூ படித்தவர்கள் வெளி வருகிறார்கள், எஸ்.எஸ்.எல்.சி. படித்தவர்கள் வெளி வருகிறார்கள். அவர்களுக்கெல்லாம் வேலை வாய்ப்பு உடனே வராது. விவசாயத்தை நம்பினால் உடனே வேலை வாய்ப்பு வராது, மற்ற எதிலும் வராது. இம்மாதிரி பெரிய தொழிற்சாலைகளை ஏற்படுத்துவதன் மூலமாகத்தான் வேலையில்லாத் திண்டாட்டத்தை நாம் தீர்க்க முடியும்.

Mr. Speaker, Sir, I want to bring to your attention and to the attention of the Government about the labour unrest.

3 மாதத்திற்கு மேலாக பெரிய தொழிற்சாலையான சிம்சன் அண்ட் கம்பெனி மூடப்பட்டிருந்தது. அப்படி மூடப்பட்டதால், நாள் ஒன்றுக்கு ரூ. 1 கோடி அளவில் நஷ்டம் அடைந்துவிட்டார்கள். முதலமைச்சர் அவர்கள் தலையிட்டு, இப்பொழுது தொழிலாளர்கள் வேலைக்குப் போய்க் கொண்டிருக்கிறார்கள்; 3 மாதத்திற்குள் அவர்கள் தீர்ப்பு கொடுக்க வேண்டுமென்று கூறியதன் பேரில் வேலைக்குப் போயிருக்கிறார்கள். பி.அண்ட்.சி. மில்லை இன்னும் திறக்கவில்லை. அதே மாதிரி இரண்டு மூன்று பிரைவேட் குரூப்பில் ஒரு தொழிற்சாலை மூடப்பட்டிருந்தது. பாரி அண்ட் கம்பெனி சம்பந்தப்பட்ட தொழிற்சாலை மூடப்பட்டிருந்தது. இம்மாதிரி மாதக் கணக்கில் தொழிற்சாலைகள் மூடப்பட்டிருந்தால் யாருக்கு நஷ்டம் என்பதை அரசாங்கம் ஆராயும் என்று நம்புகிறேன். மூடியிருக்கும் வரை தொழிலாளர்களுக்குக் கஷ்டம், அவர்களுக்கு ஊதியம் கிடையாது. தொழில் அதிபர்களுக்கு நஷ்டம். மாநில அரசுக்கும் நஷ்டம். உற்பத்தி



இழப்பு. மைய அரசுக்கு நஷ்டம். இம்மாதிரியான நிலைமை தொடர்ந்து இருந்து கொண்டே இருக்குமானால் தொழில் வளர்ச்சி—முன்பே குறைந்துள்ளது—இன்னும் குறைந்தால் நஷ்டம் யாருக்கு, அதனால் வருந்தக்கூடியவர்கள் யார் என்பதை அரசாங்கம் உணர வேண்டுமென்று தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். ஆகவே, அரசு உடனே இப்பிரச்னையைத் தீர்த்தாக வேண்டும். சிம்சன் பிரச்சினையில் முதலமைச்சர் அவர்கள் கடைசியாகத் தலையிட்டு தீர்த்துவைத்தார்கள். அவர்கள் இதில் கண்ணும் கருத்துமாக இருக்க வேண்டும். இதை வளரவிட்டால் ஏதேனும் ஒரு குரூப் மார்ச் பண்ணிக் கொண்டே போவார்கள். அதைத் தடுக்க வேண்டும். இப்பொழுது என்ன, என்ன மூடி இருக்கின்றனவோ அவற்றைத் திறக்க அவர்கள் சுமுகமாகத் தீர்க்க வேண்டுமென்று கேட்டுக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன். பி. அண்ட் சி. மில்லுக்கு ரூ. 40 அல்லது ரூ. 50 கோடி கடன் கொடுத்து மீண்டும் திறந்தார்கள். நல்ல முறையில் வேலை செய்து வந்தார்கள். அதற்கிடையில் பெரிய கஷ்டம் ஏற்பட்டு, அதன் காரணமாக அது வேலை செய்யவில்லை. அதன் கதி என்ன ஆகும் என்பதை அரசாங்கம் எண்ணிப்பார்க்க வேண்டும். அதற்குத் தகுந்த நடவடிக்கையை அரசாங்கம் உடனடியாக எடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

எனக்கு ஒரு யோசனை தோன்றுகிறது. இப்போது அரசாங்கத்திற்கு கட்டுப்பட்டு வரமாட்டேன் என்கிறார்கள். தொழில் அதிபர்களும், யூனியன் பிரசிடெண்ட், காரியதரிசி போன்றவர்களும் கட்டுப்படமாட்டேன் என்கிறார்கள். இதற்கு வழி காண்கிறவகையில் ஸ்டாசுட்டரியாக ஒரு கமிட்டி போட்டு ஒரு ஆர்பிட்ரேஷன் கமிட்டி என்று ஏற்படுத்தி

**4 or 5 persons from the employers, 4 or 5 persons from the Union and one or two Members of the Government—The Government should provide the Secretarial and various other facilities. Any dispute should be resolved within a maximum period of about a fortnight.**

என்று அந்தமாதிரியாகத் திட்டமிட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அப்படிச் செய்தால் இதனுடைய விளைவு என்ன? இதனுடைய சவுகரியம் என்ன என்பதை நம்முடைய இண்டஸ்ட்ரீஸ் மினிஸ்ட்டர் பார்க்க வேண்டும்.

[திரு. கே. எஸ். ஜி. ஹாஜாசெரீப்] [1984 மார்ச் 14

(முற்பகல் 10-30)

The Hon. Industries Minister, wh is also the Law Minister should examine this very carefully and give his immediate attention.

அப்படி ஒரு கமிட்டியை ஏற்படுத்தி எந்தத் தொழிற்சாலை மூடப்படுவதாக இருந்தாலும் கூட அந்தக் கமிட்டியினுடைய உத்தரவைப் பெற்றுத்தான் மூட வேண்டும்; இந்தக் கமிட்டியின் உத்தரவுகளுக்கு அவர்கள் கீழ்படிந்து நடக்க வேண்டுமென்ற அளவிற்கு ஒரு கொள்கையைக் கொண்டு வரவேண்டுமென்று கேட்டுக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

இப்போது மகாராஷ்டிரா, பஞ்சாப், குஜராத் போன்ற மாநிலங்களைப் பார்த்தால் அங்கே யெல்லாம் தொழில் வளர்ச்சியில் எவ்வளவு முன்னேற்றம் ஏற்பட்டிருக்கிறது! அதையெல்லாம் நீங்கள் ஆராய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். நம்முடைய நிலையைப் பொறுத்தவரைக்கும் இண்டிபெண்டன்ஸ் வருகிறபோது நாம் என்ன நிலையில் இருந்தோம் இப்போது என்ன நிலையில் இருக்கிறோம்? இண்டிபெண்டன்ஸ் கிடைத்தபோது நாம் எல்லாப் பொருள்களையும் வெளி தேசங்களிலிருந்து தான் வரவழைத்துக் கொண்டிருந்தோம். இப்போது எல்லாப் பொருள்களையும் நாம் இங்கேயே உற்பத்தி செய்கிறோம். வெளி நாடுகளுக்கும் நாம் ஏற்றுமதி செய்கிறோம். இந்த அளவில் நம்மிடத்தில் மிகுந்த பரபரப்பும், முன்னேற்றமும் இருக்கிற நிலையில் நாம் இதை இம்ப்ருவ்மெண்ட் செய்ய வில்லை யென்றால் நமக்குத் தான் கஷ்டம் ஏற்படுமே தவிர வேறு யாருக்கும் இல்லை.

இப்போது கூட பவர் ஜெனரேஷனைப் பொறுத்தவரையில் நம்முடைய மாநிலத்தில் திருப்திகரமான நிலை இருந்து கொண்டிருக்கிறது. தூத்துக்குடியிலும், எண்ணூரிலும் அளவிற்கு மேலே பவர் ஜெனரேஷன் இருந்துக் கொண்டிருக்கிறது. நெய்வேலியை எடுத்துக் கொண்டால் அங்கும் ஜெனரேஷன் நல்லமுறையில் இருக்கிறது. கல்பாக்கத்தில் வேறு இப்போது நமக்கு அவர்கள் பவரைக் கொடுக்கிறார்கள்.

இந் நிலையில் இருக்கிற சவுகரியங்களை உத்தேசித்து தொழில் வளர்ச்சிக்கான போதுமான பாலிசியை தொழில் அமைச்சர் அவர்கள் தீட்ட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அதற்காக எந்தவிதமான புரவிஷனும் இந்த பட்ஜெட்டிலே செய்யப்படாததைக் குறித்து நான் மிகவும் வருத்தப்படுகிறேன். சாதாரணமாகத் தான் இதற்கு ஒதுக்கி இருக்கிறார்கள். ஒரு டைனமிக் பாலிசியாக இன்னென்ன செய்யப் போகிறோம், இன்னென்ன சுமூகமான சூழ்நிலைகளை உருவாக்கப் போகிறோம் என்று எதையும் இதில் நீங்கள் சொல்லவில்லை



1984 மார்ச் 14] [திரு. கே. எஸ். ஜி. ஹாஜாசெரீப்]

யார் தொழில் நடத்துவதற்கு முன் வந்தாலும், அந்த தொழில் முனைவோர்கள் முதலில் பார்ப்பது அரசாங்கம் அவர்களுக்கு உதவி செய்வார்களா? மற்ற தொழில் உதவி செய்கிற நிறுவனங்கள் அவர்களுக்கு உதவி செய்யுமா? நாம் கஷ்டத்தில் இருக்கிற போது அவர்கள் நல்ல உதவியை கொடுப்பார்களா? என்றெல்லாம் பார்த்து தான் வருவார்கள். இப்போது தொழில் செய்வதற்காக வெளி மாகாணங்களிலிருந்து இங்கு வருகிறவர்கள் மிகவும் பயப்படுகிறார்கள். இங்கே ஒரு மந்தமான நிலை ஏற்பட்டிருக்கிறது. இதில் சிக்கிக் கொள்ளக் கூடாது என்று தான் அவர்கள் பேசிக் கொள்கிறார்கள். பல தடவை இது பற்றி பேசியிருக்கிறேன். இப்போது ஒசூரை எடுத்துக் கொள்ளுங்கள்: எவ்வளவு தொழிற் பேட்டைகள் அங்கே வந்திருக்கின்றன. அது மிகவும் அழகான இண்டஸ்ட்ரியல் எஸ்டேட். கிளைமேட்டிக் கண்டிஷன்கள் மிகவும் நல்ல முறையில் இருக்கின்றன. ஆனால் அங்கே நிலைமைகள் மூன்று வருடங்களுக்கு முன்னால் எப்படி இருந்ததோ, இப்போது அப்படியே எந்தவிதமான முன்னேற்றமும் இல்லாமல் இருந்து வருகின்றன. ஆளுநர் உரையில் பேசுகிற போதே நான் சொன்னேன். தொழில் நடத்தப் போகிறோம் என்று நிலத்தை எடுத்துக் கொண்டவர்கள் அதை செய்யாமல் இருக்கிறார்கள். அரசாங்கம் அவர்களை உடனடியாகக் கூப்பிட்டு ஏன் செய்யவில்லை என்று கேட்கவில்லை. அவர்களால் செய்ய முடியவில்லை என்றால் நிலத்தைக் கொடுத்துவிடுங்கள் என்று சொல்லி அதன் மீது அவர்கள் முடிவு செய்வார்களானால் அங்கே தொழில் வளர்ச்சி ஏற்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து ''கோல் டிரான்ஸ்போர்ட்டை'' பொறுத்த வரையில் இந்த நிதி நிலை அறிக்கையில் சொல்லி இருக்கிறார்கள். ஹைடல் பவரைப் பொறுத்த வரையில் நாம் பூராவும் உபயோகப்படுத்தி விட்டோம். இனிமேல் எந்தவிதமான பலனும் அதில் வராது.

தெர்மல் ஸ்டேஷனைத்தான் நாம் இனிமேல் டெவலப் செய்ய முடியும். இதற்குத் தேவையான ரா மெட்டீரியல் கோல் தான். தூத்துக்குடிக்கு மட்டும் 2½ லட்சம் டன்னுக்குக் குறைவு இல்லாமல் கோல் வேண்டும் என்று சொல்லப்படுகிறது. அதே மாதிரி எண்ணூர் மின் நிலையத்திற்கு 1 இலட்சம் டன் கோல் தேவைப்படுகிறது என்று தெரிகிறது. தற்போதுள்ள நிலைமையில் கோல் உற்பத்தி அளவுக்கு மீறி செய்யப்பட்டு, தேக்கம் ஏற்பட்டு இருக்கிறது என்ற நிலையை நாம் அறிகிறோம். அப்படியானால் இதிலே என்ன கஷ்டம். டிரான்ஸபோர்ட்டில் பாட்டல்நெக் வருகிறது என்று சொன்னால் எப்படி அது வருகிறது என்று தெரியவில்லை. அதைச் சிந்தித்துப் பார்த்து அதைத் தவிர்க்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

[திரு. கே. எஸ். ஜி. ஹாஜா செரீப்] [1984 மார்ச் 14

They should handle the transport of coal in a very practical manner. I am very positive Sir, that we can certainly keep a stock of coal which would last for about 3 or 4 months.

இன்றைக்குப் பேப்பரில் பார்த்தேன். பெரிதாகப் போட்டு இருக்கிறார்கள். சிங்கரேணியில் இருந்து நமக்கு வரவேண்டிய கோல், மின்சார வாரியம் அவர்களுக்குச் செலுத்த வேண்டிய பணத்தைக் கொடுக்காததால் வராது என்று சொல்லியிருக்கிறார்கள். மின்சார வாரியத்தைக் கேட்டால் அவர்கள் எங்களிடத்தில் பணம் இல்லை. அதனால் கொடுக்கவில்லை என்று சொல்கிறார்கள். அளவுக்கு மீறி செலவு செய்யப்படுவதால் இந்த நிலைமை வருகிறது. தொடர்ந்து இந்த மாதிரி நிலைமை இருக்கிறது. இதைப் பற்றி ஆராய ஒரு கமிட்டி நியமித்தால் நல்லது. அப்படிச் செய்தால் இதிலே கட்டாயமாக ஒரு சுமுகமான சூழ்நிலையை ஏற்படுத்தலாம் என்று நினைக்கிறேன்.

தூத்துக்குடிக்கு வரவேண்டிய கோல் கல்கத்தாவில் இருந்து ஹால்டியா போர்டில் இருந்து வந்தது. இப்போது ஒரிஸ்ஸாவிலுள்ள பிரதீப் போர்டில் இருந்து வரும் என்று தெரிகிறது. அங்கே எவ்வளவு கோல் வேண்டுமானாலும் அங்கே ஏற்றலாம். ஆகவே, ஒரு டெட் ஸ்டாக் 5 இலட்சம் அல்லது 6 இலட்சம் டன் நம்முடைய அரசு வைத்துக்கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

டிரான்ஸ்போர்ட் டெவலப்மென்ட்டைப் பொறுத்த வரையில், இங்கே 9—10 டிரான்ஸ்போர்ட் கார்ப்பரேஷன்கள் இருக்கின்றன. இதிலே இந்த வருஷம் மட்டும் 9 கோடி ரூபாய் நஷ்டம் என்று நான் அறிகிறேன். இதிலே க்யுமுலேடிவ் லாஸ் இது வரையில் பார்த்தால் 54 கோடி ரூபாய் ஆகிறது. எந்தக் காரணத்தால் இப்படி நஷ்டம் ஏற்படுகிறது என்பது எனக்குப் புரியவில்லை. பிரைவேட் செக்டாரில் ஓரிரு பஸ்கள், 5—10 பஸ்கள் வைத்து இருப்பவர்கள் நல்ல இலாபம் சம்பாதிக்கிறார்கள் என்று தெரிகிறது. ஆனால் அரசாங்கம் நடத்துகிற போது ஆயிரக் கணக்கான பஸ்களை வைத்து நடத்துகிற போது அவர்களுக்கு, குறைந்தபட்சம் கோடிக்கணக்கான ரூபாய் நஷ்டம் வருகிறது என்று தெரிகிறது.

The Hon. Transport Minister himself is a very good transport operator. I am sure he is running his fleet in a successful manner. Then why should he face any loss in the department, which he is in charge.



1984 மார்ச் 14] [திரு. கே. எஸ். ஜி. ஹாஜா செரீப்]

எந்த மாதிரி காரணங்களால் இந்த நஷ்டம் ஏற்படுகிறது' பிரைவட் ஆப்பரேட்டர்கள் கொடுகிற சம்பளத்திற்கும் அதிகமாக நாம் கொடுக்கிறோமா ? எதனால் இப்படி நஷ்டம் ஏற்படுகிறது என்ற கருத்தை அவர்கள் தெரிவிப்பார்களானால் நன்மையாக இருக்கும். இந்த மாதிரி வருஷா வருஷம் நஷ்டம் வந்தால், 10 ஆண்டுக் காலத்தில் க்யுமுலேடிவ் லாஸ் கோடிக் கணக்கில் வந்து விடும். இது இதற்கு கிராண்ட் கொடுத்தோம் அதனால் வந்தது என்று சொல்லிவிடலாம். எதற்கு எல்லாமே தானம் தருமங்கள் செய்கிறோம் என்று சொல்லி விடலாம்.

It is a fact that the Transport Corporation are going on accumulating loss. The figures of accumalated loss upto 1983-84 is about Rs. 54 crores. It is expected to go upto Rs. 65 crores in 1984-85. It is not a correct way of budgeting. I wish that people who are responsible for preparing the budget should take note of this.

(முற்பகல் 10-40).

வருஷா வருஷம் நான் கணக்கு வைத்துப் பார்க்கிறேன். வருஷா வருஷம் 9 இலட்சம், 10 இலட்சம், 11 இலட்சம் வருகிறது. ஆனால் இந்த வரவு ட்ரான்ஸ்போர்ட்டில் 90 கோடியாக இருக்கிறது. ஆப்பரேட்டிவ் காஸ்ட், மேற்கொண்டு நஷ்டம் 10 கோடி. க்யூமுலேட்டிவ் நஷ்டம் இப்போது 54 கோடி ரூபாயாக இருககிறது.

Sir, I am extremely happy the Government is doing very well on the 20 Point Programme. Every one of the programme is dealing with the development of the poor people. They are being done very well and for this my compliments to the Government.

அதே மாதிரி 6-வது ஐந்தாண்டுத் திட்டத்திலே அவர்கள் நிறைய செய்திருப்பதாக, செய்து கொண்டிருப்பதாகச் சொல்லி இருக்கிறார்கள். இதற்கெல்லாம் விவரமான அறிக்கை ஒன்றை தனியாக வைத்தால் நல்லது. இந்த வருஷத்தில் இவ்வளவு ஒதுக்கி; இன்னின்ன செய்திருக்கிறோம் ; இன்னின்ன பலனை அடைந்திருக்கிறார்கள். இரண்டாவது வருஷத்தில் இவ்வளவு தொகை ஒதுக்கி, இன்னின்ன செய்தோம் ; இன்னின்ன பலன்கள் ஏற்பட்டுள்ளன என்று ஒரு புஸ்தகமாக கொடுத்தால் நன்றாக இருக்கும். பெரிய புஸ்தகமாகக் கொடுக்க வேண்டுமென்றில்லை; பாயின்ட்ஸ் மட்டும் கொடுத்தால் கூட போதுமானது. அப்படிச் செய்தால் மிகவும் நன்றாக இருக்கும் என்று சொல்லிக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

[திரு. கே. எஸ். ஜி. ஹாஜா செரீப்] [1984 மார்ச் 14

I want the result You may spend money. But spending money will not give you result, unless the concentration is made on he purpose that money is utilised well and for the purpose of the amelioration of th people.

அதே மாதிரி, முதலமைச்சர் சத்துணவுத் திட்டம், அதை எக்ஸ்டன்ட் பண்ணியிருக்கிறார்கள்; வரவேற்கத்தக்கது. நான் பல தடவை இதைப் பற்றி பேசியிருக்கிறேன். பொது மேடைகளிலே கூட பேசியிருக்கிறேன். இது மிக நல்ல திட்டம்; வரவேற்கத்தக்கது. மற்ற மாநிலங்களிலும் இதை "ஃபாலோ" செய்ய வேண்டுமென்று சொல்லியிருக்கிறேன்.

காவேரி நதி நீர் பிரச்சனைப் பற்றி நாம் திட்டவட்டமாக ஒன்றும் செய்யவில்லை. அதே நேரத்தில் ஒன்றுமே செய்யவில்லை என்று சொல்லமாட்டேன்.

It is for tactful reasons, we are not forging ahead.

இதில் ஏதாவது ஒரு முடிவுக்கு வரவேண்டும்.

You must take it to the maximum and try to see what we can do in the matter.

மாண்புமிகு டாக்டர் எம். ஜி. இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே. காவேரி நதி நீர் பிரச்சனைப் பற்றி பேசிக் கொண்டிருக்கிறோம். விரைவில் மறுபடியும் பேச இருக்கிறோம்.

திரு. கே. எஸ். ஜி. ஹாஜா செரீப்: மகிழ்ச்சி. ஹ்ரான்ட்லூமைப் பொறுத்தவரையில் கைத்தறி துணி நிறைய தேக்கம் இருக்கிறது என்று நான் கேள்விப்படுகிறேன். 140 கோடி ரூபாய்களுக்கு மேல் மதிப்புள்ள கைத்தறித் துணி தேங்கியிருக்கிறது. ரிபேட் கொடுத்தும் இந்த சரக்கு நாம் எதிர்பார்க்கிற அளவுக்கு மூவாகவில்லை என்று கேள்விப்படுகிறேன். அதற்கு என்ன காரணம்? இதுபற்றி அரசாங்கம் கவனிக்க வேண்டும், கைத்தறித் தொழிலில் இலட்சக்கணக்கானவர்கள் ஈடுபட்டிருக்கிறார்கள். சரக்கு தேக்கமாக இருந்தால் மறுபடியும் ப்ரொடக்ஷன் செய்ய முடியாது. ப்ரொடக்ஷன் ஆகவில்லை என்றால் அவர்களுக்கு மேலும் கஷ்டம் வரும். அதனால் கைத்தறித் தொழிலாளர்களை நம்பி இருக்கக்கூடிய குடும்பத்தில் வாழ்க்கை என்ன ஆகும் என்பதை அரசாங்கம் எண்ணிப்பார்க்க வேண்டும். ஏன் இந்தத் தேக்கம் என்பதை கண்டறிந்து, அதற்கு தகுந்த நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்ள ஆசைப்படுகிறேன்.



1984 மார்ச் 14] [திரு. கே. எஸ். ஜி. ஹாஜா செரீப்]

மக்கள் தேவைக்கு தகுந்த மாதிரியான உற்பத்தி இல்லை என்றால் டிசைன் முறையை மாற்றலாம். டெல்லி, மற்ற மாநிலங்களிலிருந்து இங்கே வந்து பெருமளவுக்கு கைத்தறித் துணியை வாங்கிச் சென்று, ஈரோடு, கரூர், சேலம் போன்ற இடங்களுக்கு வந்து கைத்தறித் துணிகளை வாங்கிச் சென்று ரெடிமேட் பேபிரிக்ஸ் செய்து விற்பனை செய்கிறார்கள். ஏற்றுமதி செய்கிறார்கள். அதேமாதிரி ஏன் இங்கே செய்யக்கூடாது? ஷர்ட், புஷ் ஷர்ட், போன்றவைகளைச் செய்து, தேவையானவைகளை உணர்ந்து அதற்கேற்ப தயாரித்து ஏற்றுமதி செய்யலாம் மற்றவர்கள் இங்கே வந்து வாங்கி, ஆடை தயாரித்து அனுப்புகிறமாதிரி நாமே செய்து அனுப்பலாம்.

சென்னை வீட்டுவசதி எம். எம். டி. ஏ., உலக வங்கி, மூலமாக குடிசைப் பகுதிகளை 'இம்ப்ரூவ்மெண்ட்' பண்ணுவதற்காக நிறைய பணத்தை நாங்கள் செலவு பண்ணுகிறோம். உலக வங்கியும் கொடுக்கப் போகிறார்கள் என்று சொல்லியிருக்கிறார்கள்.

I am glad the Hon. Chief Minister is before me. On many occasions I have said here that the City improvement and development is not consistent with the po ulation of the City.

40 இலட்சம் மக்களைக் கொண்டிருக்கின்ற தலைநகரம். வெளிதேசத்திலிருந்து வருகின்றவர்கள் எல்லோரும் இங்கே வந்து பார்வையிடுகிறார்கள். சார், ஏற்கெனவே ஆளுநர் உரையில் பேசும்போது சொல்லியது போல—பீச்சை மட்டும் நீங்கள் துப்புரவாகவும், அழகாகவும் செய்து வைத்திருந்தால் போதாது. அதிலிருந்து ஒரு கிலோ மீட்டர் தூரத்திற்கு உள்ளே போகின்ற நிலைமையில் சில சங்கடங்கள் இருக்கின்றன. அதையெல்லாம் நான் இங்கே சொல்லக் கூடாது. அதை இன்னும் பாராமுகமாக அரசாங்கம் இருப்பது எனக்கு மிகவும் வேதனையாக இருக்கிறது.

I have requested the Hon. Chief Minister to come with me to my constituency and similarly to go to other constituencies also.

இப்போது ஏற்பட்டுள்ள மழையில் அவர்கள் சென்று சுற்றிப் பார்த்தார்கள். வெள்ளப் பகுதிகளையெல்லாம் அவர்கள் போய் பார்த்தார்கள். தண்ணீரில் போய் அவர்கள் பார்த்தார்கள் என்பதை நான் போட்டோ மூலமாக அறிந்தேன். வெள்ளம் வந்ததற்குப் பின்னால் போவதைவிட, வராமல் இருக்கும்போது முன்னமேயே அணை போடுவது என்பது மிகவும் உசிதமான காரியம் என்பதைச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். முன்னமேயே அவர்கள் இதையெல்லாம் சுற்றிப் பார்த்திருந்தால்.... (குறுக்கீடு).

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** ஒரு குறிப்பை மட்டும் மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவருக்கு குறிப்பிட நான் விரும்புகிறேன். இந்தச் சென்னை நகரத்தை மேலும் மேம்படுத்தி வசதி வாய்ப்புகளை உடையதாக இருக்க வேண்டுமென்றும், 40 இலட்சம் மக்களை தகுதி படைத்தவர்களாக ஆக்க வேண்டுமென்ற அடிப்படையிலும் தான் நாம் அறிவித்தபோது, உலக வங்கியின் உதவியின் மூலமாக பல்வேறு திட்டங்களை நிறைவேற்றுவதற்கு ஏற்பாடுகளை எடுத்துக் கொண்டிருக்கிறோம். இந்த முன்னமேயே குறிப்பிடுவதாக இருந்தேன். 8-வது நிதி கமிஷனிலே—எடுத்துச் சொல்லும் போதுகூட, இந்தச் சென்னை நகரத்தின் சுற்றுப்புறப் பகுதிகளை வசதி வாய்ப்புகள் உடையதாகச் செய்வதற்கு ஏற்கெனவே ரூ. 500 கோடி ஒதுக்க வேண்டுமென்றும், அதற்கான அளவிற்கு திட்டம் தீட்ட வேண்டுமென்றும், மத்திய அரசிற்கு 8-வது நிதிக் கமிஷன் சார்பாகக் கேட்டிருக்கிறோம் என்பதைக் குறிப்பிட விரும்புகிறேன்.

**திரு. கே. எஸ். ஜி. ஹாஜாசெரீப்:** சார், சென்ற தடவை பேசும்போது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொன்னார்கள். இதிலே ரூ. 30 கோடிக்கு வருவாய் வருகிறது. ரூ. 28 கோடி செலவு போக ரூ. 2 கோடி மீதி இருக்கிறது என்று சொன்னார்கள்.

Taxes on Vehicles வருவாய் 1983-84-ல் நாம் எதிர்பார்த்துக் கொண்டிருப்பது ரூ. 93,25,00,000 என்றும் 1984–85-ல் நாம் எதிர்பார்ப்பது ரூ. 91,60,00,000 என்றும் சொன்னார்கள். இதில் ரூ. 2 கோடி துண்டு விழுந்திருக்கிறது. என்ன காரணம் என்று தெரியவில்லை. உங்களுடைய பஸ்கள் இந்த சென்னை நகர ரோடுகளை உபயோகப்படுத்தவில்லையா? எத்தனை ஆயிரக்கணக்கான பஸ்கள் வான்கள், மற்றைய வண்டிகள் எல்லாம் உபயோபடுத்துகின்றன.

Why don't you give to the Corporation quarterly tax or half yearly tax, whether it is, for maintaining the roads, developing the roads and keeping the roads in regular order;

**மாண்புமிகு டாக்டர் எம். ஜி. இராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே அந்த சந்தேகத்திற்கு விளக்கம் கேட்க விரும்புகிறேன். இந்த லாரி, பஸ், வண்டிகள் எல்லாம் வருகிறதே, அதற்காக தனியாக ஒரு வரி விதித்து, அதை மாநகராட்சியுனுடைய மேம்பாட்டிற்காக நாம் செலவு செய்யலாம் என்ற யோசனைகளை மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் சொல்கிறார்கள்; அதை ஏற்றுக்கொள்கிறார்களா?





**திரு. கே. எஸ். ஜி. ஹாஜா செரீப்:** நான் சொல்வதெல்லாம் இந்த நகரத்திலுள்ள ரோடுகளிலெல்லாம் லாரிகள், பஸ்கள், எல்லாம் ஓரளவிற்குப் போகின்றன. அவைகள் நமக்கு வரி செலுத்துகின்றன. காலாண்டிற்கு, அரை வருடத்திற்கு, ஒரு வருடத்திற்கு என்று வரியைச் செலுத்துகின்றன. அந்த வருவாய் ரூ. 90 கோடி. கார்ப்பொரேஷன் வருவாய் இப்போது இல்லாததால், எந்தவிதமான நிவாரண வேலையையும் செய்ய முடியவில்லை என்று நீங்களே சொன்னீர்கள். இவ்வளவு வண்டிகள் போய் யூஸ் பண்ணியதன் காரணமாகதான் ரோடுகள் மிகவும்

(முற்பகல் 10–50)

தேய்ந்துக் கொண்டு வருகின்றன. இவைகளைச் செப்பனிட வருவாயிலேயிருந்து ஒரு போர்ஷனைக் கொடுக்கலாமே?

At least one-third of the Motor vehicles taxes, that is Rs. 30 crores you can give to the Corporation for maintenance of good roads.

**மாண்புமிகு டாக்டர் எம். ஜி. இராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் பதில் சொல்ல இருக்கிறார்கள். இருந்தாலும் ஒரு விளக்கம் சொல்ல விரும்புகிறேன். நிதிக்காக இப்படியெல்லாம் வரி வசூல் செய்தும் கூட இது பற்றாக்குறை பட்ஜெட் என்பதை மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் நினைவில் வைத்துக் கொள்ள வேண்டும். இந்த பற்றாக்குறை பட்ஜெட்டிலே இன்னும் இவைகளை சேர்க்கவேண்டும் என்றால், மேற்கொண்டு வரி விதிக்காமல் முடியுமா என்பதைஅவர்கள் யோசிக்கவேண்டும்.

**திரு. கே. எஸ். ஜி. ஹாஜா செரீப்:** சார், இந்தப் போக்குவரத்து வாகனங்கள் மூலம் நீங்கள் 90 கோடி ரூபாய் வசூல் செய்கிறீர்கள். பற்றாக்குறை இருப்பது எனக்குத் தெரியும். என்ன காரணத்தால் பற்றாக்குறை என்பதும் எனக்குத் தெரியும் அதன் காரணமாக இந்த ரோடுகளை எல்லாம் நீங்கள் இப்படியே விட்டுவிடப் போகிறீர்களா? இதனால் ஷாக் ஆப்சார்பர் அடிக்கடி உடைந்து போகிறது. நிறைய உடைந்து போகின்றன. கார்ப்பரேசன் கவுன்சிலும் இல்லை. கவுன்சில் இருந்தாலும் கூட பரவாயில்லை. எலக்ஷன் வரப்போகிறது என்று சொல்லியிருக்கிறார்கள். அவசியம் வரும் என்று நான் எதிர்பார்க்கிறேன். வராமல் இருக்கக்கூடாது. ஏதாவது காரணத்தால் அது நின்றுவிடக்கூடாது. இதுவும் ரொம்ப முக்கியம். இவைகளை செய்வதற்கு 30 கோடி கூட வேண்டியதில்லை 15 கோடி ரூபாய் கொடுங்கள். ஒன்றுமே கொடுக்கவில்லை என்றால் எப்படி?

**மாண்புமிகு டாக்டர் எம். ஜி. இராமச்சந்திரன் :** பேரவைத் தலைவர் யிருக்கிறது என்பதை தாங்கள் தயவுசெய்து நினைவில் வைத்துக் கொள்ள அவர்களே, இந்த அரசு மாநகராட்சிக்காகக் கடன் கொடுத்துக் கொண்டே வேண்டும்.

**திரு. கே. எஸ். ஜி. ஹாஜா செரிப் :** Sir, I am aware of this. நான் எதற்காக இவ்வளவு காரணமாகச் சொல்கிறேன் என்றால் மோசமாக அவைகள் இருக்கின்றன. திருவல்லிக்கேணி ஹைரோடு, இன்னும் உள்ள மற்ற ஹைரோடுகளை எடுத்துக் கொண்டால், அவைகள் மிக மோசமான நிலைமையில் இருக்கின்றன. இந்த மாதிரி நிலை வேறு எங்கேயாவது இருக்கின்றதா என்பதை நீங்கள் கவனிக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, 40, 50, 60 வருஷமாக கோயில் நிலங்கள், வக்ப் போர்டு, சர்ச்சுக்கு குடிசைகளுக்கு இடையில் ஒரு ஆள் கூட செல்ல முடியாத அளவிற்கு அவைகள் இருக்கின்றன. ஏதாவது ஆபத்து ஏற்பட்டால் கூட அதிலிருந்து தப்ப முடியாத அளவிற்கு அவைகள் இருக்கின்றன. சென்ற தடவை கூட நான் இதைப்பற்றி சொன்னேன். என்னுடைய திருவல்லிக்கேணி தொகுதியில் 200 குடிசைகள் எரிந்து சாம்பலாகி அதனால் கிட்டத்தட்ட 1,000 பேர்கள் பாதிக்கப்பட்டார்கள். அவர்களுக்கு எந்தவிதமான நிவாரணமும் இல்லை. அதை கவனிக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, 40, 50, 60 வருஷமாக கோயில் நிலங்கள், வக்ப் போர்டு சர்ச்சுக்கு சொந்தமான நிலங்களில் கூட அவர்கள் குடிசைகளைப் போட்டுக் கொண்டிருக்கிறார்கள். எங்களுக்கே அந்த இடத்தைக் கொடுத்து விட்டால் நாங்கள் வீடு கட்டிக் கொள்வோம் என்று அவர்கள் சொல்கிறார்கள். எனவே இதையும் கவனித்து அந்த குடிசைவாழ் மக்களுக்கு ஆவன செய்ய வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை).

**மாண்புமிகு டாக்டர் எம். ஜி. இராமச்சந்திரன் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இங்கே வக்ப் போர்டு, கிருஸ்தவர்கள் நிலங்களைப் பற்றியும், இந்துக் கோயில் நிலங்களைப் பற்றியும் சொன்னார்கள். இங்கே அவர்கள் எளிதாகச் சொல்லி விடுகிறார்கள், இந்த அரசு ஏதாவது முயற்சி செய்தால், உடனே மதம் குறுக்கிடுகிறது. ஏதோ ஒரு மதத்தின் மீது யார் மேலோ இருக்கிற கோபத்தை எப்படியோ பயன்படுத்துகிறார்கள் என்று சொல்கிறார்கள். குடிசை மாற்று வாரியம் நடவடிக்கை எடுக்க ஆரம்பித்





தால்; அதற்காக குடிசையைப் பிரிக்க வேண்டும் என்று சொன்னால், உடனே அது அரசியல் ஆக்கப்படுகிறது. இதற்கெல்லாம் நாங்கள் உடந்தையாக இருக்க மாட்டோம் என்று இங்கே இருக்கின்ற மாண்புமிகு உறுப்பினர்கள் உத்தரவாதம் தந்தால் அதை நாங்கள் செய்கிறோம்.

**திரு. கே. எஸ். ஜி. ஹாஜா செரிப் :** Sir, I am not attributing any reasons. The whole Ministry is aware that I am a person who does not speak with any intention in my mind, I want things to be done for the good of the common people,

இன்றுவரையிலும் லட்சக்கணக்கான மக்கள் வசதியில்லாமல் வாழ்ந்துகொண்டிருக்கிறார்கள். எத்தனையோ ஆயிரம் குடிசைகள் தமிழ்நாட்டில் இருந்து கொண்டு இருக்கின்றன. இவைகளை எல்லாம் சீர்திருத்தம் செய்யவேண்டும். அங்கே லைட் இல்லை, தண்ணீர் ரோடு சுகாதாரம் எதுவும் இல்லை. நீங்கள் எவ்வளவு சீக்கிரம் அவர்களுக்கு வசதிகள் செய்து தர முடியுமோ அவ்வளவு விரைவில் அதைச் செய்துதர வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

The Hon. Chief Minister is a past master in the art. He knows where to pump money when to pump money and how to pump money I only want tho Hon. Chief Minister to give consideration for the City of Madras also.'

மின்சாரத்திற்கு புதிய திட்டங்களை நீங்கள் திட்டியிருக்கிறீர்கள். அவசியம் அந்த திட்டங்களில் கண்ணும் கருத்துமாக இருந்து தெர்மல் ஸ்டேஷன்களை எவ்வளவு சீக்கிரம் கொண்டு வர ஏற்பாடு செய்ய வேண்டுமோ, அவ்வளவு சீக்கிரம் கொண்டு வருவதற்கு நீங்கள் ஏற்பாடு பண்ணவேண்டும் என்று கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். தொழில் அதிபர்களுடன் பேசும்போது மாண்புமிகு பொன்னையன் அவர்கள் சொன்னார்கள். மின்சாரத்தை பிரைவேட் செக்டாரில் டெவலப் பண்ணுவதற்குக் கூட எங்களுக்கு ஆட்சேபம் இல்லை என்று சொன்னார்கள்.

Certainly the private sector will try to take this over. They would like to have a guarantee from the Government that the Government will not nationalise them. The Government should give a clean guarantee to them when they are participating in developing programmes of power generation.. The Government should give a guarantee that

under no circumstances, the Government will take over what they have developed and they should also abide by the rules and regulations created by the Government.

அந்த மாதிரி திருத்தமாக நீங்கள் சொன்னால், அவசியம் அதற்கு பல தனியார்கள் தயாராக வருவார்கள் என்பதில் எனக்கு எந்த விதமான ஆட்சேபமும் இல்லை.

அடுத்து மைனர் போர்ட்ஸ் (துறைமுகங்கள்) பற்றிச் சொல்லியிருக்கிறீர்கள். ரொம்ப நல்லதுதான். பலதடவை நான் அதைப் பற்றி இந்த மாமன்றத்தில் பேசியிருக்கிறேன். நம்முடைய ஸ்டேட்டில் மெட்ராஸை விட்டால் அடுத்து மேஜர் போர்ட் தூத்துக்குடி, நடுவில் இருப்பது கடலூர், நாகப்பட்டினம். இன்னும் 2, 3போர்ட்டுகள் இருக்கின்றன. அவைகளில் டெவலப்மென்ட் இல்லாமல் போய்விட்டது. அவைகளை டெவலப் பண்ண வேண்டும். நான் ஒரு யோசனையைக் கூடச் சொல்கிறேன். எண்ணூரில் ஒரு மைனர் போர்ட் ஏற்படுத்த வேண்டும் என்று

'Madras Port is one of the biggest ports in our country.'

லட்சம் டன்கள் கணக்கில் கோல் அங்கே வந்திறங்குகிறது. அங்கேயிருந்து இன்னும் 10 மைல் 15 மைல் போக வேண்டியிருக்கிறது. ஆகவே, எண்ணூரில் ஒரு மைனர் போர்ட் ஏற்படுத்தினால், அங்கேயிருந்து 5, 6 மைல் தூரம் மட்டும் கொண்டு வந்து, பிறகு டிஸ்டிரிபியூட் பண்ணுவதற்கு சௌரியமாக இருக்கும். இதுபற்றி 30 வருஷத்திற்கு முன்னாலேயே எக்ஸாமினேஷன் பண்ணியிருக்கிறோம். எங்கள் கப்பல் கேப்டன் மூலமாக எக்ஸாமின் பண்ணியிருக்கிறோம். அப்படிச் செய்ய வேண்டும். செய்ய வேண்டியது அவசியம், அதனால் பயன் உண்டு என்றெல்லாம் அவர்கள் ஒரு கருத்தைக் கொடுத்திருக்கிறார்கள்.

I am sorry the Hon. Minister for Minor Ports is not here. I want to bring to his attention that he must try to study this problem of developing Minor Port in Ennore which would be very useful not only to the people of Ennore but also to the industries situated at Ennore.

அதன் காரணமாக இந்தத் துறைமுகத்திற்கு இருக்கக்கூடிய பிரஷர் கூட குறையும் என்று நான் சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

அடுத்து, இது கருணையுள்ள அரசாங்கம், ஆனால் ஏதோ ஒரு விதமாக அதை அகற்றிக் கொண்டு, பெட்ரோலுக்கு டாக்ஸ் போட்டு விட்டார்கள். ஒவர் நைட் 17 காசு ஒரு லிட்டருக்கு ஏறியிருக்கிறது. எப்படி என்று எனக்கே தெரியவில்லை. இதன்





காரணமாக வருவாய் 20 கோடி ரூபாய் வரும் என்று எதிர்பார்க்கப்படுவதாகச் சொல்லியிருக்கிறார்கள். பெட்ரோலுக்கு டாக்ஸ் போட்டால் என்ன ஆகும். எத்தனை நூற்றுக்கணக்கான பொருள்களுடைய விலைகள் ஏறும்.

There will be increase in bus passenger fares.

எப்படி இதை கவனிக்காமல் போட்டார்கள் என்பது எனக்கே ஆச்சரியமாக இருக்கிறது.

சென்டிரல் கவர்ன்மெண்ட் போட்டு விட்டால் உடனே கூக்குரல்,

My comrades on my left will talk and try to brtng the roof down.

இங்கே போட்டு விட்டால், ''நீங்கள் போட்டு விட்டீர்கள் அதை குறைக்க வேண்டும்'' என்று ஒரு சாப்ட் டோனில் சொல்லுகிறார்கள். u

Why soft tone? Why don't you talk in the same manner as yo re talking here ?;

அவசியம் அதைக் கைவிட வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். நான் ஏற்கெனவே சொல்லியிருக்கிறேன். நம்முடைய பட்ஜெட் சொந்த வரவு செலவு, கவர்ன்மெண்ட் ஆப் இந்தியா பங்கு கொடுத்தது, இங்கே கடன் வாங்கியது எல்லாம் சேர்த்து ஏறத்தாழ 2600 கோடி ரூபாய்க்கு இருக்கிறது.

(முற்பகல் 11-00)

அதில் நீங்கள் 50 கோடியை சரிசெய்ய முடியாதா? இதற்கு இவ்வளவு வரிகள் போட்டு ஏன் கஷ்டப்படவேண்டும். அதை அவசியம் நீக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

அது மட்டுமல்ல, எல்லா ஆயில்களுக்கும் டாக்ஸ் போட்டு இருக்கிறீர்கள்.

On high-speed and various other oils you have levied tax This is not a welcome feature and I would like the Hon. Minister of Finance to look into it.

மறுபரிசீலனை செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஏற்கெனவே நான் சொல்லியிருக்கிறேன், பருத்தி நூல் ரொம்ப தேக்கமாக இருக்கிறது என்று,

[திரு. கே. எஸ். ஜி. ஹாஜா செரீப்] [1984 மார்ச் 14

All the Textile Mills are in very difficult circumstances.

இந்த நிலையில் அந்த பருத்தி நூலுக்கு டாக்ஸ் போட்டீர்கள் என்றால் அது வருந்தத்தக்கது. ஆனால் ஒன்று

Hire purchase, packing materials

இவைகளுக்கு டாக்ஸ் போட்டிருக்கிறீர்கள். இதனால் வரக்கூடியது 5 கோடி ரூபாய்தான். இம்மாதிரி பொருட்களுக்கு டாக்ஸ் போடலாம். Packing materials க்கு போடலாம். இப்படி ஸ்டடி பண்ணிப் போடலாம். அப்படியில்லாமல் அன்றாடம் வாழ்க்கைக்கு சிறு குழந்தை முதல் பெரியவர்கள் வரையில் வாங்கக்கூடிய பொருட்களுக்கு டாக்ஸ் போடுவதால் அதனால் வசதியுள்ளவர்களும், வசதியில்லாதவர்களும் எல்லோரும்தான் பாதிக்கப்படுகிறார்கள். ஆகவே இந்த டாக்ஸ்களை கைவிடவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். 53 கோடி ரூபாய்க்கு வரிப் போட்டிருக்கிறீர்கள். இந்த 2400, 2500 கோடி ரூபாய் அளவுக்கு உள்ள வரவுசெலவுத் திட்டத்திலே அதை நீங்கள் கண்காணித்து நல்லவிதமாக சரிக்கட்ட முடியும். இதனால் எற்படுகிற கஷ்டத்தை நீங்கள் தடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொண்டு என்னுடைய பேச்சை முடித்துக் கொள்கிறேன்.

## 2. தகவல் கோரல்.

(ஈ) பேரவை அலுவல் மேலவைத் தேர்தலை முன்னிட்டு ஒருநாள் தள்ளிவைக்கப்பெறுவது.

**திரு. எஸ். ஆண்டித்தேவர்:** தலைவர் அவர்களே, வருகிற 18 ஆம் தேதி ஆசிரியர் தொகுதி தேர்தல், பட்டதாரி தொகுதி தேர்தல் நடக்க இருக்கிறது. தென் பட்டதாரிகள் தொகுதித் தேர்தலும் நடக்க இருக்கிறது. எங்களைப்போன்ற அரசியல் வாதிகள் இங்கே இருக்கிறோம். அரசியல் ரீதியாக வேலை செய்யவேண்டிய நிலை இருக்கிற காரணத்தினால் வருகிற 16 ஆம் தேதி சட்டமன்றப் பேரவையை ஒத்திவைக்கவேண்டுமென்று நான் தங்கள் மூலமாக கேட்டுக் கொள்கிறேன்.

**திரு. ரா. உமாநாத்:** தலைவர் அவர்களே, 17 ஆம் தேதி அன்றைக்கு 18 ஆம் தேதி நடக்கக்கூடிய தேர்தலை முன்னிட்டு—விடுமுறை சபைக்கு விடவேண்டுமென்று ஏற்கெனவே புரப்போசல் வந்தது. அதற்கு சம்மதம் ஒரு மணிநேரத்திற்கு முன்னாலேயே தெரிவித்து விட்டார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.



1984 மார்ச் 14]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர்களும், மாண்புமிகு பேரவை முன்னவரும் ஏற்றுக்கொண்டதால், 17—3—1984 அன்று பேரவைக் கூட்டம் இருக்காது. அன்று எடுத்துக் கொள்ளப்பட வேண்டிய மானியக் கோரிக்கைகள் பின்னர் ஒரு நாள் எடுத்துக் கொள்ளப்படும் என்று எடுத்துக் கொள்ளப்பட வேண்டும் என்பதை அலுவல் ஆய்வுக் குழுவில் முடிவு செய்யலாம்.

மேலும் 19—3—1984 அன்று பேரவைக் கூட்டத்தை காலை 10 மணிக்குத் துவக்கலாம் என்றும் அன்று வினாக்கள்-விடைகள் நேரம் இல்லாமல் மானியக் கோரிக்கைகள் மீதான விவாதத்தைத் துவக்கலாம் என்றும் தெரிவித்துக் கொள்கிறேன்.

## 4. வரவு செலவுத் திட்டம் 1984-85—பொது விவாதம் தொடர்ச்சி.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1983-84 ஆம் ஆண்டு திருத்த மதிப்பீடுகள், 1984-85 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகள் ஆகியவற்றின் மீது நடைபெற்ற விவாதத்தில் கலந்து கொண்ட மாண்புமிகு உறுப்பினர்கள் தங்கள் தங்கள் இயல்பு கண்ணோட்டம் கொள்கை மனப்போக்கு செயல் போக்கு ஆகியவற்றுக்கு ஏற்ப கருத்துக்களை வழங்கியிருக்கிறார்கள். 48 உறுப்பினர்கள் மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களையும் சேர்த்து இந்தப் பொது விவாதத்தில் கலந்து கொண்டு தங்கள் கருத்துக்களை வழங்கியிருக்கிறார்கள். விவாதத்தில் கலந்து கொண்டு உரை நிகழ்த்தியிருக்கிறார்கள். நிதிநிலை அறிக்கையில் குறிப்பிட்டுள்ள கருத்துக்களுக்கு ஆதரவு காட்டி முழு ஒத்துழைப்பு தொடர்ந்து நல்க முன்வந்த உறுப்பினர்கள் அனைவருக்கும் என்னுடைய பெரும் மகிழ்ச்சியையும் உளம் கனிந்த நன்றியையும் தெரிவித்துக் கொள்கிறேன். நல்ல உள்ளத்தோடும நிலைமை மேலும் சீர்பட வேண்டும் என்ற நல்ல நோக்கத்தோடும் சில பல குறைகளைச் சுட்டிக் காட்டி அந்த குறைகள் நீக்கப்பட வேண்டும என்பதையும் எடுத்துச் சொல்லி சீரிய பரிந்துரைகளை செய்துள்ள உறுப்பினர்களுக்கு என்னுடைய உளம் கனிந்த உள்மார்ந்த பாராட்டுதலைத் தெரிவித்துக் கொள்கிறேன். இந்த வரவு செலவுத் திட்டத்தில் எதுவும் இல்லை என்று சொல்லிவிட்டு ஏதேதோ எடுத்துச் சொல்லி எல்லாவற்றையும எதிர்க்கும போக்கோடு திருவாய் மலர்ந்தருளி சொற்களை உதிர்த்துள்ள சில எதிர்க் கட்சி உறுப்பினர்களுக்கு எதைச் சொல்லி என்ன பயன் ஏற்பட முடியும என்பதை நானே எண்ணி, ஆக அவர்கள் நிலை கண்டு இரங்கி அவர்களுக்கு எனது ஆழ்ந்த பரிவைத் தெரிவிப்பதைத் தவிர வேறு எந்த வழியும் எனக்குப் புலப்படவில்லை. ஆனாலும் இந்த வரவு-செலவுத் திட்டத்தை எதிர்த் தரப்பினர் பாராட்டுவார்கள் என்றோ அல்லது போற்றுவார்கள், வரவேற்

பார்கள், வாழ்த்துவார்கள் என்றோ நான் எதிர்பார்க்கவில்லை. எதிர்பார்க்கவும் மாட்டேன். எதிர்பார்க்கவும இயலாது, எதிர் பார்க்கவும் கூடாது. ஆனால் நாட்டின் நலன் கருதியும மக்களின் நல்வாழ்வு கருதியும் இந்த அரசுக்கு உதவியாகவும, உறுதுணையாகவும் இருக்கக் கூடிய உறுப்பினர்களின் பாராட்டுரைகளையும் கேட்டேன். இந்த ஆட்சி எப்பொழுது அகலுமோ என்று ஏக்கத்தோடு எதிர் பார்த்துக் கொண்டு இருக்கும் எதிர்த்தரப்பு உறுப்பினர்கள் சிலருடைய பழிப்புரைகளையும் கேட்டேன்.

எதிர்த்தரப்பு உறுப்பினர்கள் சிலர் இந்த வரவு செலவுத் திட்டம் தங்களுக்கு ஏமாற்றம் அளிப்பதாகக் கூறினார்கள். அது இயல்பான ஒன்று தான். எதிர் தரப்பினரின் கொள்கை-கோட்பாடு-நோக்கம் திட்டம் ஆகியவற்றிற்கு ஏற்ப, அவர்களைத் திருப்திப்படுத்த வேண்டும் என்ற நோக்கத்தோடு இந்தப் பட்ஜெட் தீட்டப் படவில்லை தான். ஆனால், எங்களுடைய கொள்கை, கோட்பாடு ஆகியவற்றிற்கு ஏற்ப மக்களின் நலன் கருதி மக்களை திருப்திப்படுத்த தீட்டப்பட்டதாகும். மக்கள் இதனை வரவேற்பார்கள், வரவேற்கிறார்கள், போற்றுகிறார்கள், அதில் நாங்கள் மன நிறைவு கொள்கிறோம்.

பொது விவாதத்தைத் துவக்கி வைத்து உரையாற்றிய மாண்புமிகு உறுப்பினர் திரு. துரைமுருகன் அவர்கள் இந்த நிதிநிலை அறிக்கையில் அந்தாதி ஆற்றுப்படை போன்ற இலக்கிய நயங்களும், பல்லவி, அனுபல்லவி சரணம் போன்ற இசை நயங்களும் நிரம்பி இருப்பதாகக் குறிப்பிட்டார்கள். இன்னும் ஒன்றை அவரே குறிப்பிட்டார்கள். என்னை குருவாகவும் பாவித்து தன்னை சீடராகவும் பாவித்து அந்த அடிப்படையில் இருப்பதன் காரணத்தினால் தான் நான் கூறிய கருத்துக்களில் இருக்கிற உள்ளுரை நயங்களை உணருகின்ற அளவுக்கு அவர் அந்த நயப்பாட்டினை எல்லாம் எடுத்துச்சொல்லியிருக்கிறார்கள் என்று நான் கருதுகிறேன். அதை உணருகின்ற அளவுக்காவது அவர் கெட்டுப் போகாமல் இருக்கிறாரே என்பதில் எனக்கு ஒரு பெரு மகிழ்ச்சி தான். மேலும், இந்த நிதிநிலை அறிக்கையை பிடி முறிந்த, முனை மழுங்கிய வாள் என்றும், அதை எடுத்துக் கொண்டு தான் அடுத்து வரும் தேர்தலுக்கு போக இருக்கிறோம் என்று மாண்புமிகு உறுப்பினர் துரைமுருகன் அவர்கள் வேறு ஒரு இடத்தில் குறிப்பிட்டார்கள். பேரறிஞர் அண்ணா வழியில் வந்த எங்களைப் போன்றவர்கள் ஜனநாயகத்தை வளர்க்க எப்பொழுதுமே வாளை நம்புவதில்லை, ஜனநாயகத்தில் வாள் எப்போதும் பயன்படாது. நாங்கள் சிந்தை வலிவையும பேனா வலிவையும், நாவன்மையையும் நம்பித்தான் அரசியலை தொடர்ந்து நடத்தி வருகிறோம். ''வாளினும வலிது போர்'' என்பது வால்டேர் கூறிய பொன்மொழி ஆகும்.





'' நாநலம் என்னும் நலனுடைமை அந்நலம்
யாநலத்துள் ளதூஉம் அன்று ''

என்பது வள்ளுவர் பெருந்தகை வாக்கு. அறிஞர் அண்ணா அவர்கள் ஜனநாயகத்தில் ''கத்தியைத் தீட்டாதே புத்தியைத் தீட்டு'' என்று எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். ஆகவே, தான் நாங்கள் கத்தியை நம்பி அல்ல ஜனநாயகத்தை நடத்துவது, புத்தியை நம்பித்தான் நாங்கள் ஜனநாயகத்தை நடத்த வேண்டியவர்களாக இருக்கிறோம். கோட்டை போனாலும், கொத்தளம் போனாலும், கொற்றகுடை போனாலும் செங்கோல் போனாலும், கையில் ஏந்தியுள்ள வாளை யாரும் பறித்துவிட முடியாது என்று அரசியலில் அலைந்து திரிபவர்கள் அல்லர் நாங்கள், அடுத்து எதிர்பார்க்கப்படும் தேர்தலில் நாங்கள் வெற்றி பெற. சென்ற ஆண்டுகளில் தீட்டி நிறைவேற்றப்பட்ட திட்டங்களும் இந்த ஆண்டு நிதிநிலை அறிக்கையின் மூலம் நிறைவேற்றப்பட இருக்கும் திட்டங்களுமே எங்களுக்கு போதுமானவை ஆகும். ஆகையால் இதை வைத்துக் கொண்டு தேர்தல் அறிக்கை என்று சில நண்பர்கள் குறிப்பிட்டார்கள். ஆனால் இந்த அறிக்கையின் மூலம் ஏற்படுகின்ற பலன்கள் நிச்சயம் தேர்தல் வந்தால் மக்களுக்கு எடுத்துச் சொல்லத்தான் செய்வோம். மக்கள் நம்பிக்கையையும் நன்மதிப்பையும் பெறுவதற்கான பெரு முயற்சிகளில் நாங்கள் ஈடுபடுவதற்கு தான் செய்வோம்.

அ.இ.தி.மு.க. அரசின் இறுதி பட்ஜெட் இந்தப் பட்ஜெட் என்று மாண்புமிகு உறுப்பினர் திரு. துரைமுருகன் அவர்கள் குறிப்பிட்டார்கள். அ.இ.தி.மு.க, அரசின் மூலம் சில எதிர்க்கட்சிகளுக்கு இறுதியை ஏற்படுத்தும் பட்ஜெட் என்பதுதான் உண்மையே தவிர, இந்த பட்ஜெட் இறுதி பட்ஜெட் அல்ல. மாண்புமிகு உறுப்பினர் திரு. துரைமுருகன் அவர்களின் கூற்றை இரண்டாம் வேற்றுமை உருபும் பயனும் உடன்தொக்கத் தொகையின் படி பார்த்தால் சில எதிர்கட்சிகளுக்கு இறுதியை ஏற்படுத்தும் பட்ஜெட் என்று தான் பொருள்பட முடியும்.

பொது மக்களின் நம்பிக்கையையும், நன்மதிப்பையும் பெற்று ஆட்சிக்கு வந்துள்ள நாங்கள் மக்களிடத்தில் முழு நம்பிக்கையை வைத்துள்ளோம். அவர்களும் எங்களிடத்தில் பெரு நம்பிக்கையை வைத்து இருக்கிறார்கள். அந்த நம்பிக்கையின் அடிப்படையில் நாங்கள் பணிகளை ஆற்றி வருகிறோம்.

'' வினைவலியும் தன்வலியும் மாற்றான் வலியும்
துணை வலியும் தூக்கிச் செயல் ''

என்று வள்ளுவப் பெருந்தகை கூறியுள்ளார். அந்த வகையில் பார்க்கும் போது மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களின் சீரிய தலைமையின் கீழ் உள்ள அ.இ.தி.மு.கழகம் வருகின்ற பொதுத் தேர்தலில் தொடர்ந்து வெற்றி பெற முடியும் என்கின்ற உறுதிப்பாட்டோடு தான் நாங்கள் பணியாற்றி வருகிறோம்.

(முற்பகல் 11-10)

ஆகவே, எந்தவிதமான பலவீனமான தன்மையினுடைய அடிப்படையிலேயோ, அச்சத்தினுடைய அடிப்படையிலேயோ இல்லை. இந்த நிதி நிலை அறிக்கையை ஆராய்ந்து பார்த்து, மதிப்பிடுகின்ற அறிவுத் திறனோ, ஆற்றல் திறனோ எதிர் தரப்பினருக்கு இல்லை என்று நான் கூறவே மாட்டேன். அதற்கான அறிவுத் திறன், ஆற்றல் திறன் இவைகளெல்லாம் எதிர்த்தரப்பிலே இருக்கின்ற அத்தனை பேர்களுக்கும் உண்டு. ஆனால், அதற்கான மனம் மட்டும் அவர்களுக்கு இல்லை. அதற்கு என்ன காரணம் என்று சொன்னால், இந்தக் கட்சியின் மீதும், ஆட்சியின் மீதும் அவர்களுக்குள்ள வெறுப்புணர்ச்சி அவர்களுடைய உள்ளத்தை ஆட்டிப் படைக்கிறது என்றுதான் நான் சொல்வேன்.

அந்த வகையில்தான் என்னுடைய அருமை நண்பர் மாண்புமிகு உறுப்பினர் திரு. உமாநாத் அவர்கள்கூட மோடி மஸ்தான் செப்பிடு வித்தை பட்ஜெட் என்று சொன்னார்கள். அதை அவர்கள் வேடிக்கையாகவும் கூறினார்கள். அத்துடன் அதிலே அவர்கள் வினயம் வைத்தும் கூறினார்கள். மற்றும் சில உறுப்பினர்களும் இதே அடிப்படையிலே ஊதுகாமாலை பட்ஜெட் என்றும், உப்பு சப்பில்லாத பட்ஜெட் என்றும், ஏமாற்றும் பட்ஜெட் என்றும், எதுவுமே இல்லாத பட்ஜெட் என்றும் தங்கள் தங்களுக்குத் தோன்றியதை, தாங்கள் தாங்கள் உணர்ந்ததை எடுத்துச் சொன்னார்கள்.

இந்த வாய்ப்பில்தான் பேரறிஞர் அண்ணா அவர்களுடைய கூற்று எனக்கு நினைவிற்கு வருகிறது. அவர்கள் சொன்னார்கள், ரோஜா மலரை எந்தப் பெயரிட்டு அழைத்தாலும் மணக்கும் என்று குறிப்பிட்டார்கள். இந்த நிதி நிலை அறிக்கையை யார் எந்தப் பெயரை வைத்து அழைத்தாலும், இந்த நிதி நிலை அறிக்கை கருத்து மணம் கமழவே செய்யும் என்பதோடு மட்டுமல்லாமல் இது மக்கள் எல்லோருடைய அன்பையும் பெறும். அவரவர்கள் இதற்குத் தனித்தனிப் பெயர்களை வைத்திருக்கிறார்கள். ஆனால் நான் வைத்த நிதி நிலை அறிக்கை ஒன்றுதான் என்றாலும், அவரவர்கள் விரும்பிய, அவரவர்கள் தகுதிக்கேற்ப அவரவர்கள் பெயர் வைக்கிறார்கள் என்பதுதான் அதற்குப் பொருளே தவிர வேறொன்றுமில்லை.



இங்கே பல்வேறு பிரச்சினைகளைப் பற்றி மாண்புமிகு உறுப்பினர்கள் எடுத்துச் சொல்லியதற்கு நான் பொதுவான கருத்துக்களை எடுத்துச் சொல்கிறேன் என்றாலும், சில நிலைமைகளில் பல்வேறு துறைகளைப் பற்றித் தங்களுடைய நுணுக்கமான தன்மைகளின் அடிப்படையில் கருத்துக்களையும், பல விளக்கங்களையும், பல வினாக்களையும் எழுப்புகின்ற அளவிற்கு மாண்புமிகு உறுப்பினர்கள் எழுப்பியிருக்கிறார்கள். அவற்றையெல்லாம் அந்தந்த மானியக் கோரிக்கைகள் வருகின்றபொழுது விரிவாக எடுத்துச் சொல்லலாம்.

என்றாலும்கூட, வறட்சி, வெள்ளம் ஆகியவற்றைப் பற்றியெல்லாம் எடுத்துச் சொல்லியிருக்கின்ற அத்தகைய நிலையில் மாண்புமிகு உறுப்பினர்கள் அத்தனை பேரும் நன்கு அறிவார்கள். அவ்வப்பொழுது இந்த அரசு எடுக்கின்ற முயற்சிகளுக்கும் எல்லாத் தரப்பினரும்கூட தங்களுடைய முழு ஒத்துழைப்பைத் தந்து, வறட்சியைக் கடப்பதற்கும், வெள்ளம் போன்ற பாதிப்புகளையும், பெரும் சோதனைகளையும் கடந்து செல்வதற்கும் எந்தெந்த வகைகளிலே உறுதுணையாக இருக்க வேண்டுமென்று நாம் கேட்ட பொழுதெல்லாம்கூட, எல்லாத் தரப்பினரும் தங்களுடைய முழு ஒத்துழைப்பையும் தந்திருக்கிறார்கள்.

ஆங்காங்கு நிகழ்கின்ற சில குறைபாடுகளையும், மற்றவைகளையும் சுட்டிக் காட்டி இவை நிவர்த்திக்கப்பட வேண்டுமென்றும் எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். அதையெல்லாம் அரசு கவனத்திலே கொண்டு அதை நீக்குவதற்கு முயற்சிகளை மேற்கொள்ளும். அண்மையிலே ஏற்பட்ட அந்த வெள்ளத்தின் காரணமாக மதுரை மாவட்டம், இராமநாதபுரம் மாவட்டம், திருநெல்வேலி மாவட்டம், புதுக்கோட்டை மாவட்டத்தினுடைய ஒரு பகுதி இவைகளெல்லாம் பாதிக்கப்பட்டிருக்கின்ற சூழ்நிலையை ஒட்டி, ஓரளவுக்கு மாண்புமிகு முதல்வர் அவர்கள் விரிவானதொரு அறிக்கையை, அவர்கள் கண்டறிந்த அளவிற்கு எடுத்து வைத்தார்கள். அதற்குப் பிறகு, இருபதாம் தேதி ஒரு விவாதம் இருப்பதன் காரணமாக, அதற்குள்ளாக அந்தந்த தொகுதிகளைச் சார்ந்த உறுப்பினர்கள் நிலைமைகளைத் தெளிவாகப் புரிந்துகொண்டு அவர்கள் இங்கே எடுத்துச் சொல்வதன் பேரிலேயும், அதற்குப் பிறகு வருவாய்த்துறை அமைச்சரவர்கள் அதுபற்றி எடுத்துக் கொண்டிருக்கின்ற நடவடிக்கைகளோடு சேர்ந்து எடுக்கப்படுகின்ற நடவடிக்கைகளையும் அவர்கள் குறிப்பிட்டுக் கூறுவார்கள்.

வறட்சியைப் பொறுத்தவரையிலேயும் நாம் எடுத்துச் சொல்லி இருக்கிறோம். சென்ற இரண்டு மூன்று ஆண்டுக் காலமாக மிகவும் கொடுமையான, கடுமையான வறட்சி நம்முடைய மாநிலத்தைப் பாதித்தது. சென்ற எழுபத்தைந்து

ஆண்டுக் கால வரலாற்றை நாம் புரட்டிப் பார்த்தோமேயானால் 41 ஆண்டுக் காலம் விட்டுவிட்டு வறட்சிகள் வந்திருக்கின்றன. ஆனால் கடுமையான, கொடுமையான வறட்சி பல மாவட்டங்களைப் பாதிக்கிற அளவிற்கு வந்தது 13 ஆண்டுக் காலம் வந்திருக்கிறது. மற்றைய ஆண்டுகளில் சில பல பகுதிகள், சில பல தாலுக்காக்கள், சில பல மாவட்டங்கள் மட்டும் பாதிக்கின்ற அளவிற்கு இருந்திருக்கின்றன. ஆனால் இந்தக் கடுமையான வறட்சியை கிட்டத்தட்ட 110 கோடி ரூபாய்க்கு மேல் செலவழித்துச் சமாளிக்க வேண்டிய கட்டத்திற்கு நாம் வந்தோம் என்பதையும் அறிவோம். ஆனால் அதற்குப் பிறகு நாம் எதிர்பாராத வெள்ளம், பெருமழை பெய்து, தஞ்சை மாவட்ட, திருச்சி மாவட்ட பகுதிகள் மட்டுமல்லாமல், சென்னையும் பெரும் வெள்ளத்திற்கு வெள்ளப் பாதிப்பிற்கு, மழை பாதிப்பிற்கு ஆளாக வேண்டிய ஒரு நிலை ஏற்பட்டதன் காரணமாக அவற்றையும் நாம் அறிவோம். அவற்றையெல்லாம் அறிந்து, அதற்கான உதவிகளைச் செய்யவேண்டுமென்று கூட நாம் மத்திய அரசைக் கேட்டுக்கொண்டோம். அவர்கள் ஒரு குழுவினரை அனுப்பி வைத்தார்கள். அந்தக் குழுவினரும் வந்துவிட்டுச் சென்றார்கள் அப்பொழுது. அதற்குப் பிறகு இரண்டாவதாகத்தான் இப்பொழுது பாதிக்கப்பட்டிருக்கின்ற ஒரு சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. அந்தச் சூழ்நிலையைப் பொறுத்தவரையிலும் புள்ளி விவரங்கள், மற்றவைகளையெல்லாம் நாம் திரட்டிக் கொண்டு வருகிறோம். ஆக, இப்படிப் பலத்த பாதிப்பு ஏற்பட்டிருக்கிறது. பயிர்ச் சேதம் ஏற்பட்டிருக்கிறது; உயிர்ச் சேதம் ஏற்பட்டிருக்கிறது; குடிசைகள் பாழாக்கப்பட்டிருக்கின்றன: பல பேர் வீடுகள் பாதிக்கப்பட்ட நிலையில் தவிக்கின்ற சூழ்நிலை ஏற்பட்டிருக்கின்றது. ஒட்டு மொத்தமாக, மேலெழுந்தவாரியாக, மத்திய அரசாங்கத்திற்கு நாம் தெரிவித்திருக்கிறோம் என்றாலும், இன்னின்ன வகைகளிலே இந்தந்த அளவிற்குப் பாதிப்பு ஏற்பட்டிருக்கிறது என்று திட்டவட்டமாகவும், தெளிவாகவும் இந்தக் குறிப்புகளெல்லாம் மாவட்ட ஆட்சித் தலைவர்களாலும், பிற அதிகாரிகளாலும் எடுக்கப்பட்டு வருகின்றன. மாண்புமிகு உறுப்பினர்கள் எடுத்துச் சொல்கின்ற கருத்துக்களின் அடிப்படையிலும் 20-ஆம் தேதி நடைபெறுகின்ற விவாதத்தின் அடிப்படையிலும் நாம் முழுமையான மற்றும் தெளிவான ஒரு அறிக்கையை உருவாக்கி மத்திய அரசுக்கு அனுப்பி அதன்பேரில் உதவி தர வேண்டும் என்று கேட்க இருக்கின்றோம்.

வறட்சிக் காலத்திலே நாம் உதவி இரு நூற்றுச் சில்லரை கோடிக்குக் கேட்டாலும் கூட மத்திய அரசு எடுத்துச் சொன்ன வகையில் முதலிலே 68 கோடி ரூபாய் அளவுக்கு அனுமதி அளித்தார்கள். அதற்குப் பிறகு வறட்சி பற்றிக் கேட்டபோது மேற்கொண்டு 9 கோடி கொடுத்தார்கள். ஆகவே 77 கோடி ரூபாய் வறட்சி என்ற அளவில் வந்தது.





இப்போது அண்மையில் தஞ்சை மாவட்டம், திருச்சி மாவட்டம் ஆகிய இடங்களில் ஏற்பட்ட பெரும் மழை காரணமாக ஏற்பட்ட பாதிப்பிற்குத் தொகை அனுப்ப வேண்டும், உதவி செய்ய வேண்டும் என்று கேட்ட வகையில் நேற்றைக்கு முன் தினம் மத்திய அரசு 41 கோடி 18 இலட்சம் ரூபாய் அனுமதி அளித்தார்கள். அந்த 41 கோடியே 18 இலட்சம் ரூபாயில் 75 சதவீதம் மத்திய அரசின் பங்கும், 25 சதவீதம் மாநில அரசின் பங்குமாகும் என்று வரையறுத்து இருக்கிறார்கள். ஆனால் இந்தக் கணக்குப்படி அவர்கள் அனுமதிப்பதற்கு முன்பு முதல் தவணை 5 கோடி ரூபாய், பிறகு 10 கோடி ரூபாய் என்று தந்தார்கள். அதைத்தான் நான் நிதிநிலை அறிக்கையில் குறிப்பிட்டிருக்கிறேன். ஆக, இந்த 15 கோடி ரூபாயை அவர்கள் தரக்கூடிய 30 கோடி சில்லரையில் கழித்துக் கொள்வார்கள். இருந்தாலும் இதிலே அவர்களுடைய பங்கு 75 சதவீதம் நம்முடைய பங்கு 25 சதவீதம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். இருந்தாலும் நாம் அந்த உதவியினை எதிர்பார்த்திருக்கின்ற வகையிலே, ஏற்படுகின்ற செலவுக்காக இது வரையில் 37½ கோடி ரூபாயை மாநில அரசின் சார்பாக ஒதுக்கீடு செய்து இந்தப் பணிகளை எல்லாம் நிறைவேற்ற வேண்டும் என்று கேட்டுக்கொண்டு இருக்கிறோம். அதற்கான சூழ்நிலைகளில் அது பெறப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து இப்போது ஏற்பட்டுள்ள வெள்ள பாதிப்பைப் பொறுத்த வரையில் மத்திய அரசு குழுவினை அனுப்பி, பின்னர், தக்க உதவி செய்யும் என்று நாம் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறோம்.

அடுத்து, மத்திய, மாநில உறவு நிலைமை உரிமை நிலைமைகளை பற்றி இங்கே மாண்புமிகு உறுப்பினர்கள் பலரும் பல கருத்துகளை எடுத்துத் தெரிவித்தார்கள். அது பற்றி விரிவாகவும் விளக்கமாகவும், நிதி நிலை அறிக்கையில் இந்த ஆண்டும், சென்ற ஆண்டும் நாங்கள் குறிப்பிட்டிருக்கிறோம். மாநில அரசு, மத்திய அரசு ஆகியவற்றின் நிலை. போதிய நிதியாதாரங்கள் நமக்கு இல்லாததன் காரணத்தால் நாம் ஏற்றுக்கொண்டிருக்கின்ற பொறுப்புக்களைச் செய்ய முடியாமல் கஷ்டங்கள் மற்றவைகள் எல்லாம் இருக்கின்றன என்பதையும் எல்லாம் விளக்கி இருக்கிறோம். ஆகவே தான் மாநிலங்களுக்கு அதிக அதிகாரங்கள் கிடைத்தால், நிதியாதாரங்கள் கிடைத்தால் நான் எண்ணுகின்ற செயல்களைச் சிறப்பாகச் செய்ய முடியும், எனவே உரிமைகளையும் மற்றவைகளையும் வழங்கவேண்டும் என்ற கருத்துக்களை பலரும் எடுத்துத் தெரிவித்தார்கள். மாண்புமிகு மார்க்ஸிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினர் திரு. உமாநாத் அவர்களும், மாண்புமிகு உறுப்பினர் திரு. சங்கரய்யா அவர்களும், மற்றைய கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினர்களும், திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்தவர்களும் மற்றவர்களும் தங்களுடைய கருத்துக்களை எடுத்துத் தெரிவித்தார்கள்.

மாநிலங்கள் தன்னாட்சி பெறவேண்டும்; மத்தியில் கூட்டாட்சி தன்மை பெறவேண்டும்; அவர்களுக்கென்று ஒரு குறிப்பிட்ட சிலபல பொறுப்புக்கள் தான் இருக்கவேண்டும்; மற்ற பெரும்பாலான பொறுப்புக்கள் மக்களை வாழ வைக்கின்ற தன்மைகளை ஏற்றுக்கொண்டிருக்கின்ற மாநிலங்களுக்குப் பகிர்ந்தளிக்கப்பட வேண்டும்; அப்படிப்பட்ட கொள்கைகள் நிலைநாட்டப்படவேண்டும் என்று இங்கே சொல்லப்பட்டிருக்கின்றது. ஆகவே அரசியல் கட்சிகளுக்கிடையே இதிலே கொள்கை வேறுபாடு எதுவும் இல்லை. வேண்டுமானால் காங்கிரஸ் கட்சிக்கு மட்டும் கொஞ்சம் மாறுபாடு அல்லது வேறுபாடு அல்லது வேறு பல நிலைமைகள் இருக்ககூடும். இதுபற்றிய முழு தன்மைகளையும் விளக்கித் தனியாகக் கேட்டால் அவர்களும் தான் ஒப்புக்கொள்வார்கள், ஆகவே ஒரு கட்டுப்பாட்டின் காரணமாக அவர்களால் சொல்ல முடியாமல் இருக்கக்கூடும். ஆனால் கருத்துக்களைப் பொறுத்த வரையில் அதாவது திரு. உமாநாத் அவர்களும், திரு சங்கரய்யா அவர்களும் சொன்ன கருத்துக்களுக்கும் இந்த அரசுக்கும் வேறுபாடு எதுவும் இல்லை. அவர்களுடைய கருத்துக்களை நாங்கள் ஏற்றுக்கொள்கிறோம். வேண்டுமென்றால் அவற்றை அணுகுகின்ற முறையில் கட்சிக்கு கட்சி வேறுபாடு இருக்கலாம். கொஞ்சம் வேகமாக சிலர் சொல்லக்கூடும். கொஞ்சம் நிதானமாகச் செல்லலாம் என்று நாம் கருதக்கூடும். ஆகவே அவர்கள் கடைப்பிடிக்கின்ற முறை வெற்றி தருகின்ற சூழ்நிலை ஏற்பட்டால் வேண்டுமானால் நாமும் அதிலே உந்தி, ஒன்றிக்கொண்டு நிற்கிறோம். ஆனால் நாம் கடைப்பிடிக்கின்ற முறை வெற்றி தருகின்ற சூழ்நிலை ஏற்பட்டால் நீங்களும் எங்களோடு ஒன்றி நின்று செயல்படுங்கள். ஆகவே கொள்கையில் நாம் ஒன்றாகத்தான் இருக்கிறோம்.

திரு. ரா. உமாநாத்: தலைவர் அவர்களே, இந்தப் பிரச்சினை சர்க்காரியா கமிஷனுக்கு விடப்பட்டதற்குப் பிறகும் கூட ப்ரைம் மினிஸ்டர் அவர்கள், தற்போது அரசியல் சட்டத்தில் இருக்கக்கூடிய அதிகாரமே போதுமானது என்றும் கான்ஸ்டிட்யூஷனல சேஞ்சஸ் எதுவும் தேவையில்லை என்றும் சொல்லி கேன்வாஸ் பண்ணிக்கொண்டு வருகிறார்கள். ஆகவே மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் சொல்வது மாதிரி காங்கிரசுக்கு (சற்று) வித்தியாசம் இல்லை. பேசிக் வித்தியாசம் இருக்கின்றது. ஆகவே அப்படி இருக்கக்கூடிய ஒரு சக்தியிலே இருந்து இந்த உரிமைகளைப் பெற வேண்டும் என்றால் இந்தியாவில் இருக்கக்கூடிய மக்களை எல்லாம் ஒன்று திரட்ட வேண்டாமா? அந்த முயற்சியிலே ஒன்று சேரவேண்டாமா?

(முற்பகல் 11-20)

திரு. கே. எஸ். ஜி. ஹாஜா செரீப்: பிரைம் மினிஸ்டர் கான்வாஸ் பண்ணிக்கொண்டிருக்கிறார்கள் என்று சொல்வது ரொம்பத் தவறு என்று நான் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.



It is her own private view. It is not the view of the Government of India. அப்படி இருந்தால் அவர்கள் சர்க்காரியா கமிஷனை ஏற்படுத்தி இருக்க மாட்டார்கள். அதை நீங்கள் அவைக் குறிப்பிலிருந்து எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இரண்டு அபிப்பிராயங்கள், அது குறிப்பிலே இருக்கட்டும்.

DR. K. SOURIRAJAN: Sir, it is unparliamentary to speak about the Hon. Prime Minister like this. I move that those expressions should be removed from the records. Mr. Umanath is casting aspersions on the Hon. Prime Minister. He is attributing motive to the speech of the Hon. Prime Minister. What does he meen by canvasing?

MR. SPEAKER: It is not a motive. அது அவருடைய கருத்து.

Thiru N. SANKARAIAH: An Advocate is canvasing a view என்று சொன்னால், கோர்ட்டில் அதற்குச் சாதகமாக ஆர்கியூ செய்கிறார் என்று பொருள். ஆகவே, பிரைம் மினிஸ்டர் அந்த வியூவை வற்புறுத்தி வருகிறார் என்று அர்த்தமே தவிர வேறில்லை. அதற்காக மாண்புமிகு உறுப்பினர் கோபப்பட வேண்டியதில்லை.

DR. K. SOURIRAJAN: An Advocate is not in power. But she is the Prime Minister of the country. She has also appointed the Sarkaria Commission.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மத்திய மாநில உறவு பற்றி ஆராய்ந்து அறிந்து ஒரு அறிக்கை அளிக்க வேண்டிய முழு உரிமையையும் சர்க்காரியா கமிஷனிடத்திலே தந்திருக்கிறார்கள். அதே நேரத்தில் ஒவ்வொரு கட்சியும் தங்கள், தங்கள் கருத்துக்களை எடுத்துத் தெரிவித்து வருகிறார்கள். அந்த வகையிலே மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியும், கம்யூனிஸ்ட் கட்சியும் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகமும் தங்களுடைய கட்சிக் கருத்துக்களை எடுத்துச் சொல்கிறார்கள். அதே வகையிலேதான் இந்திரா காந்தியும் தங்களுடைய கருத்தை எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள் என்று நாம் கொள்ள வேண்டியிருக்கிறது. மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் எடுத்துச் சொன்ன மாதிரி அது தவறாக அமைய வேண்டுமென்பதுதான் எல்லோருடைய எண்ணமும். அவர்கள் கருத்துச் சொல்லலாம்; முடிவு செய்ய வேண்டியது சர்க்காரியா. காங்கிரஸ் கட்சியைக் கூப்பிட்டுக் கேட்டால் அவர்கள் கருத்துக் சொல்லலாம். திருமதி இந்திரா காந்தியைக் கூப்பிட்டு சாட்சி சொல்லச் சொல்வார்களானால் அவர்கள் என்ன கருத்துச் சொல்வார்கள் என்றால், மாண்புமிகு

திரு. உமாநாத் அவர்கள் சொன்னது போல் சொல்லவும் கூடும் ஆனால் அவர்கள் சொன்னது மாதிரி நம் கருத்துக்கு மக்களைத் திரட்ட வேண்டும். மக்களுடைய சக்தியை ஒன்று திரட்ட வேண்டுமென்பதிலே எங்களுக்குக் கருத்து வேறுபாடு ஒன்றும் இல்லை. அந்த வகையிலே கர்நாடக மாநிலத்திலே பெங்களூரிலே நடைபெற்ற மாநாட்டிலே மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கலந்து கொண்டார்கள். விஜயவாடா மாநாட்டிலே கலந்துக் கொண்டார்கள். மாண்புமிகு உறுப்பினர் காஷ்மீர், கல்கத்தா பற்றி இங்கே குறிப்பிட்டார்கள். அதற்கு முன்பே மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், கொள்கை வேறுபாடு காரணமாக அல்ல, சிலபல விளக்கங்கள் கேட்டோம: அந்த விளக்கங்கள் தெளிவாக எனக்குக்கிடைக்கவில்லை. அவர்கள் சரியாக வரவில்லை, ஆகவே கலந்து கொள்ளவில்லை என்று எடுத்துச் சொன்னார்கள். ஆனால் கொள்கைகளைப் பொறுத்தும் மற்றவைகளைப் பொறுத்தும் ஆதரவு திரட்ட வேண்டும். ஆதரவு திரட்டி மக்களை அதற்குப் பின்னால் வைக்க வேண்டும். அந்த வகையிலேதான் எதிர் காலத்திலே வெற்றி பெற முடியும். அதற்கான சூழ்நிலையைப் பொறுத்தவரையில் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் எப்பொழுதும் ஆதரவு தருகிறது என்பதை இந்த வாய்ப்பிலே நான் கூறிக் கொள்ள விரும்புகிறேன்.

திரு. ப. நெடுமாறன்: நிதியமைச்சர் பேச்சிலே குறுக்கிடுவதற்காக மன்னிக்க வேண்டும். இங்கே எழுப்பப்பட்டுள்ள பிரச்சினை என்பது—சர்க்காரியா கமிஷன் இப்பொழுதுள்ள அரசியல் சட்ட வரம்பிற்கு உட்பட்டு மாநிலங்களுக்கு அதிக அதிகாரங்கள் வழங்குவதா, இல்லையா என்பது பரிசீலனை செய்யப்படும் என்று பிரதமர் இந்திரா காந்தி அவர்கள் அறிவித்து இருக்கிறார்கள். அது அவருடைய கருத்து. அதை நான் ஆட்சேபிக்கவில்லை. ஆனால், இப்பொழுதுள்ள சட்ட வரம்பிற்கு உட்பட்டு மாநிலங்களுக்கு அதிக அதிகாரங்கள் அளிக்க முடியாது. ஆகவே, புதிய அரசியல் சட்டம். புதிய சூழ்நிலையில் மாநிலங்களுக்கு அதிக அதிகாரங்கள் அளிக்க வேண்டுமென்ற ஒரு அரசியல் சட்டம் வகுக்கப்பட்டால்தான் மாநிலங்களுக்கு உண்மையிலேயே அதிக அதிகாரம் கிடைக்கும் என்ற எண்ணம் எங்களைப் போன்றவர்களுக்கு இருக்கிறது. அதைப் பற்றி இந்த அரசாங்கம் என்ன கருதுகிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு நெடுமாறன் கூறிய கருத்தின் அடிப்படையிலேதான் நாங்களும் இருக்கிறோம். இப்பொழுதிருக்கிற அரசியல் அமைப்புச் சட்டத்தின் கீழே நாம் பெற வேண்டிய அதிகாரங்களை, பெற வேண்டிய ஆதாயங்களைப் பெற முடியாது என்பதற்காகத்தான் இது மாற்றி அமைக்கப்பட வேண்டுமென்று சொல்கிறோம். இப்பொழுதிருக்கின்ற அதிகாரத்திற்குள்ளே எதை, எதைப் பகிர்ந்து தரலாம் என்ற அளவுக்கு





நாம் வருவோமானால் எதிர்பார்க்கிற பலன்கள் கிடைக்காது. ஆகவே, சர்க்காரியா கமிஷனிடத்திலே இந்தக் கருத்துக்களை அவரவர்கள் எடுத்துச் சொல்லலாம் என்று அவர்கள் எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். ஆகவேதான் அவர்களிடத்தில் எடுத்துச் சொல்லி அதைச் செய்ய (குறுக்கீடு) முதலிலே சர்க்காரியா தலைமையிலே கமிஷன் அமைக்கும்போது இப்பொழுதிருக்கிற அரசியலமைப்புச் சட்டத்தின் கீழே என்று சொன்னார்கள். அதற்குப் பிறகு பாராளுமன்றத்திலும் நாடெங்கும் பல்வேறு சட்டமன்றப் பேரவைகளிலும் எடுத்துச் சொன்ன பிறகு அதிலே தேவைப்பட்டால் சர்க்காரியா அவர்கள் சிபாரிசு செய்வார்களானால் சில பல விதிகளை மாற்றம் செய்யலாம் என்று சொன்னார்கள். அது எந்த அளவு நடைபெறும், எந்த அளவுக்கு மனப்பான்மை கொண்டிருப்பார்கள் என்பது வேறு என்றாலும், அவரவர்கள் தங்கள், தங்கள் கடமையைச் செய்யும்போது நாமும் நம்முடைய கடமையைச் செய்ய வேண்டியிருக்கும். அந்த வகையிலேதான் மக்கள் சக்தியைத் திரட்ட வேண்டுமென்ற அடிப்படையிலே, கருத்திலே மாறுபாடு கிடையாது என்பதை நான் கூறிக் கொள்ள விரும்புகிறேன்.

அதுமட்டுமல்லாமல் இந்த வரவு-செலவுத் திட்டத்தைப் பொறுத்தவரையில் மாண்புமிகு உறுப்பினர்கள் பலரும் எடுத்துத் தெரிவித்ததற்கிணங்க இன்றைக்கு இருக்கிற சூழ்நிலையிலே பெரும்பாலாக கட்டுப்பட்டு இருக்கிற நிலைமைகள் டெல்லியிலே இருக்கிறதாலே வருவாயைப் பெருக்குவதற்கான வாய்ப்பு, வசதிகள் இருந்தாலும் கூட, என்ன நினைத்தாலும் கூட நாம் நினைக்கிற அளவிற்கு செய்ய முடியாது என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் பலரும் சுட்டிக் காட்டினார்கள். அது உண்மைதான். இருந்தாலும் நமக்கு இருக்கிற அதிகாரத்தை, இருக்கிற உரிமைகளை, இருக்கிற வாய்ப்பு வசதிகளை வைத்து எந்த அளவிற்கு செய்ய முடியுமென்ற அடிப்படையிலேதான் பல்வேறு பணிகளை நாம் இயன்ற அளவிற்கு ஆற்றிக் கொண்டு வருகிறோம். ஒன்றுமே இல்லை, எதுவுமே செய்யவில்லை என்பது இல்லை. ஆண்டிற்காண்டு எந்தெந்தத் துறைகளில் முக்கியத்துவம் செலுத்த வேண்டுமோ அந்தந்தத் துறைகளில் முக்கியத்துவம் செலுத்தி, அதை விரிவு படுத்துவதிலே, மேம்பாடு அடையச் செய்வதிலே, அந்தந்தத் துறைகளின் மூலமாக மக்களுக்கு கிடைக்க வேண்டிய நலன்கள், பலன்கள் சிறப்பாக கிடைக்க வேண்டுமென்று அக்கறை கொண்டு, ஆர்வத்தோடு பணியாற்றி வருகிறோம் என்பதற்குப் பல்வேறு காரணங்களை எடுத்துச் சொல்லலாம். அந்த வகையிலே 1977-78 ஆம் ஆண்டு ஆட்சிப் பொறுப்பை அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசு ஏற்றுக் கொண்டபோது கல்வித் துறையை வளர்க்க 162 கோடி ரூபாய் நாம் செலவழித்து வந்தோம். இப்போது 404 கோடியே 16 இலட்சம் ரூபாய் செலவழிக்கிற அளவிற்கு வளர்ந்திருக்கிறோம். இதை கல்வித் துறையின் நலம் கருதி நாம் செய்திருக்கிறோம். அதேபோல மருத்துவத் துறை

[டாக்டர் இரா. நெடுஞ்செழியன்] [1984 மார்ச் 14

யிலே 1977-78 இல் 50.43 கோடி ரூபாய் செலவழித்து வந்தோம். இப்போது அந்தத் துறை நன்றாக பராமரிக்கப்பட்டு, நன்றாக வளர்ந்து இப்போது கிட்டத்தட்ட 112 கோடியே 95 இலட்சம் ரூபாய் செலவழிக்கிற அளவிற்கு அதைக் கொண்டு சேர்த்திருக் கிறோம். பொதுநலம் என்பதைத் தனியாகப் பிரித்தாலும் 1977-78 இல் 13 கோடியே 82 இலட்சம் ரூபாய் செலவழித்தோம். இப்போது 137 கோடியே 90 இலட்சம் ரூபாய். அதேபோல வேளாண்மைக்கு 1977-78 இல் 30 கோடியே 6 இலட்சம் என் றால், அதனுடைய தேவையைக் கருதி, அதனுடைய அவசியத் தைக் கருதி இப்போது 86 கோடியே 7 இலட்சம் ரூபாய். சென்ற ஆண்டை விட இப்போது சிலபல துறைகளில் குறைந்திருக்கிறது என்று சொன்னார்கள். அதற்குக்காரணம் ஓரளவிற்கு ஒதுக்க வேண்டியதில் ஒரு பகுதியைத்தான் பார்ட் 2 ஸ்கீம் என்கிற வகையிலே ஒதுக்கி இருக்கிறோமே தவிர, மறுபடியும் ஜூலையில் ஸ்டான்டிங் பினான்ஸ கமிட்டி கூடுகிறபோது அந்தத் துறை யினுடைய தேவைகளை எண்ணி கூடுதலாக்கக்கூடும். அதையும் சேர்த்து இப்போது ஒதுக்கினால் பற்றாக்குறையினுடைய அளவு இன்னமும் அதிகமாகும் என்பதாலே வருவாயினுடைய இனத்தை எட்டாவது நிதிக் கமிஷன் கூறுகின்ற சிபார்சுகளுடைய அடிப் படையில் நமக்கு வருகிற நிதியாதாரம், மற்றவைகளை வைத் துக் கொண்டு தீர்மானிக்கலாம் என்று வைத்திருக்கிறோம். இப்படி ஒவ்வொரு துறையாக எடுத்து பார்ப்போமேயானால் அதிலிருக்கிற சூழ்நிலைகளுக்கேற்ப நாம் நன்மைகளைப் பெற முடியும். அதுமட்டுமல்லாமல் இதை யாரும் பாராட்டவில்லை போற்றவில்லை, வரவேற்கவில்லை என்றார்கள். நான் முதலில் சொன்னதைப் போல அவரவர்களின் மனப்பான்மைக்கேற்பத் தான் கருத்துக்களைச் சொல்வார்கள்.

The Tam l Nad. Budg.t is re listic and basically p opl , oriented. Its thrust is, on benefiting .h. vast norganised masses who do not hav. h l ng power to r ise dem nds

என்ற அளவிற்கு எடுத்துச் சொல்லி இருக்கிறார்கள். "தமிழ் நாட்டின் வரவு-செலவுத் திட்டமானது உண்மை நிலையாக்கம் கொண்டதும், மக்களுக்கு நலம் பயக்கும் நோக்கத்தை அடிப்படை யாகக் கொண்டதாகும். தங்களுடைய கோரிக்கைகளுக்காகப் பெருங்குரல் எழுப்ப முடியாத, அமைப்புகளில் அமையாத, பெரு வாரியான பாமர மக்களுக்கு நலம் பயப்பதை, அழுத்தமான கொள்கையாகக் கொண்டதாகும்.", என்று எடுத்துச் சொல்லி யிருக்கிற பாங்குகளையும் நாம் காணலாம். இதை நான் ஏன் சொல்கிறேன் என்றால், வரி விதிப்பு முறைகள் மற்றவைகளை நாம் பார்க்கிறபோது, இப்போது மாண்புமிகு உறுப்பினர்கள் பலரும் எடுத்துத் தெரிவித்ததற்கிணங்க எந்த ஒரு மாநிலமும் பற்றாக்குறை இல்லாமல் சமாளிக்கிற அளவிற்குச் சூழ்நிலை இல்லை என்பதைத் தான் இந்த ஆண்டு வரவு-செலவுத் திட்டங் கள் எல்லா மாநிலங்களிலும் எடுத்துச் சொல்லி இருக்கின்றன. எல்லா மாநிலங்களிலும் இப்போது பற்றாக்குறையை நிமிர்த்து



1984 மார்ச் 14] [டாக்டர் இரா. நெடுஞ்செழியன்]

வது எப்படி, சரிக்கட்டுவது எப்படி என்று சங்கடப்பட்டுக் கொண்டு ஓரளவிற்கு சூழ்நிலைகளை வகுத்துக்கொண்டு வருகிற பாங்கினைக் காண்கிறோம். தமிழ் நாட்டைப் பொறுத்த வரை யில் 167 கோடி ரூபாய் பற்றாக்குறை வருகிறது என்றால் உத்தர பிரதேசத்தில் 273 கோடி ரூபாய் பற்றாக்குறை விழுகிறது. மத்திய பிரதேசத்தில் 31 கோடியும், மேற்கு வங்கத்தில் 23 கோடியும், ஆந்திராவில் 113 கோடியே 53 இலட்சம் பற்றாக் குறை விழுகிறது. இவை அத்தனைக்கும் காரணம் என்னவென்று கேட்டால் ஐந்தாறு ஆண்டுகளாகவே பார்ப்போமேயானால், மாண்புமிகு உறுப்பினர்கள் எடுத்துத் தெரிவித்ததைப் போல. மத்திய அரசினுடைய பற்றாக்குறை 2,000 கோடி, 3,000 கோடி என்று ஆகி அதை அவர்கள் சரிக்கட்டுவதற்கும் பல்வேறு வழி முறைகள் இருக்கின்றன. நாணயச் செலாவணியை வெளியிடு கிற தொகுப்பும், மற்றவைகளும் அவர்களிடத்திலே இருக்கிற தாலே அதன் மூலம் சரிக்கட்டுகிறார்கள். இந்த ஆண்டு மத்திய அரசு 1,762 கோடி ரூபாய் பற்றாக்குறை வைத்திருக்கிறார்கள்,

(முற்பகல் 11–30)

ஆகவேதான் வரிகளின் மூலமாக தங்களுடைய ஆதாயத்தை ஈடு கட்ட வேண்டிய அவசியத்திற்கு பல்வேறு மாநிலங்கள் ஆளாகி யிருக்கின்றன. இப்போது மேற்கு வங்கம் 75 கோடி ரூபாய்க்கு புதிய வரிகளைப் போட்டு இருக்கிறது. புதிய வரிகளைப்போடு வது தவறு என்று நான் சொல்லவில்லை. இருக்கின்ற நிலைமை களில் போடாமல் இருந்தாலும் நல்லது தான். போட்டால் கொஞ்சம் அளவுக்கு நம் நிதிநிலைமைகளைச் சீர்படுத்திக்கொள்ள லாம். இதனால் விலையேறும், உண்மை. ஆனால், அப்படிச் செய்யாமல் இருந்தால் எப்படி மாநில மக்களுக்கு மாநில அரசு கள் நன்மை செய்ய முடியும் என்பதை எண்ணிப்பார்க்கிறபோது, இப்படிப்பட்ட வரிவிதிப்புகள் தவிர்க்க முடியாதது ஆகிவிடுகின் றது. புதிய வரிவிதிப்பைப் பொறுத்த வரையில் மேற்கு வங் கத்தில் 75 கோடி ரூபாய்க்கு போட்டு இருக்கிறார்கள். கரு நாடகத்தில் 87 கோடிக்குப் போட்டு இருக்கிறார்கள். மத்திய அரசில் 273 கோடிக்குப் போட்டு இருக்கிறார்கள். ஆனால், தமிழகத்தைப் பொறுத்தவரையில் 57.25 கோடி அளவிற்குத் தான் நாம் போட்டு இருக்கிறோம்.

டாக்ஸ் ஸ்ட்ரக்சரைப் பொறுத்த வரையில் தமிழகத்தில் அன்று முதல் இன்று வரை ஓரளவிற்கு நிதானமாகவே நாம் இருந்துவரும் சூழ்நிலை இருக்கிறது. தமிழகத்தைப் பொறுத்த வரைக்கும், மாநிலத்தின் மொத்த வருவாயில் வரி விகிதத்தின் சதவிகிதம் 1980-81-இல் 49.5 ஆகும். மகாராட்டிரத்தில் 55 சதவிகிதம் என்றும், குஜராத்தில் 53.1 சதவிகிதம் என்றும், மேற்கு வங்கத்தில் 51 சதவிகிதம் என்றும் இருக்கின்றன. இதை எதற் சாக நான் சொல்ல வருகிறேன் என்றால் வரிவிகிதத்தின் அளவை

நாம் காப்பாற்றி வருகிறோம். தமிழகத்தில் வரிவிதிப்பு முறைகளை கூடுமான வரையில் இருக்கின்ற சூழ்நிலைகளை அனுசரித்து நாம் செய்ய வேண்டியவர்களாக இருக்கிறோம். பொருளாதார வல்லுநராக விளங்கும் டாக்டர் நடராஜன் அவர்கள்

Institute for Techno Economic Studies

சார்பில்

Incidence of Taxation and Public Expenditure.

என்ற ஒரு ஆய்வை நடத்தி ஒரு புத்தகத்தை வெளியிட்டிருக்கிறார்கள். அதிலே தெளிவாக எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள்

The Tamil Nadu State Government has had a fair measure of success in mobilsing an increasing portion of income created in the state.

On the whole Tamil Nadu Government has ne a good job of it in tax mobilisation.

என்றுதான் குறிப்பிட்டிருக்கிறார்கள். ஆகவே பொருளாதார நிபுணர்கள்—'' தமிழ்நாடு மாநில அரசு வருவாயைப் பெருக்கித் திரட்டிக் காட்டுவதில், சிறப்பிற்குரிய வெற்றியைப், பெற்றிருக்கிறது. மொத்தத்தில் தமிழ்நாடு அரசு, வரிகளை ஒருமுகப்படுத்தித் திரட்டுவதில், நல்ல பணியை ஆற்றியிருக்கிறது.'' என எடுத்துக்கூறியிருக்கிறார்கள்.

இதனால் நான் திருப்தி அடைந்து விட்டேன் என்று சொல்லவில்லை. எந்த அளவிற்கு நாம் நிலைமைகளைச் சமாளித்து வருகிறோம் எந்த அளவிற்கு வசதி வாய்ப்புகளைப் பெருக்கியிருக்கிறோம் என்பதற்காகத்தான் சொல்ல வருகிறேன்.

டாக்டர் திம்மையா என்கிற பொருளாதார வல்லுநர் கர்நாடக மாநிலத்தைச் சேர்ந்தவர்

Revenue Potential and Revenue Efforts of Southern States (Page 77)

(தென்னக மாநிலங்களுடைய வருவாய்த் திறன் மற்றும் தன்மையை மதிப்பிடுவதற்கான ஆய்வு) என்ற புத்தகத்தில் 77-ஆவது பக்கத்தில் மிகத் தெளிவாகச் சொல்லியிருக்கிறார்கள்.

The Revenue efforts of Tamil Nadu can be placed at the top compared to other Southern States.

'' வருவாய்ப் பெருக்கிடும் முயற்சிகளில் மற்ற தென்னக மாநிலங்களோடு ஒப்பிடும்போது, தமிழ்நாடு முதலிடத்தில் வைக்கக்கூடியதாக இருக்கிறது ''.





இதை நான் ஏன் சொல்கிறேன் என்றால் மாண்புமிகு உறுப்
பினர்கள் இங்கே எடுத்துத் தெரிவித்ததற்கிணங்க இங்கே நாம்
வரி போட்டு வருமானத்தைப் பெருக்க வேண்டியவர்களாக இருக்
கிறோம். 1957-58 முதல் 1982-83 வரை கணக்கிட்டுப் பார்த்
தால் மாநில விற்பனை வரி 44 மடங்குதான் ஏறியிருக்கிறது.
ஆனால், 1982-83-ல் ஆயத்தீர்வையை எடுத்துக் கொண்டால்
மத்திய அரசு மூன்று பொருள்களை எடுத்துக் கொண்டதன் மூலம்
மட்டும் 11 மடங்கு ஏறியிருக்கிறது. இந்த மூன்று பொருள்கள்
மாநில அரசிடம் இருந்திருந்தால் 127 கோடி ரூபாய் நமக்குக்
கிடைத்திருக்கும். ஆனால், நமக்குக் கிடைத்திருப்பது 32.11
கோடி மட்டுமே. இதைத்தான் மேற்கு வங்கம், திரிபுரா, தமிழ்
நாடு போன்ற சில மாநிலங்கள் மற்றும் காங்கிரஸ் (ஐ) ஆளுகின்ற
சில பல மாநில முதல்வர்கள் கூட தெளிவாக எடுத்துச் சொன்னதா
லும் வேறு சிலர் அரைகுறையாக எடுத்துச் சொன்னதாலும்
அதற்காக குழு போடலாம் என்று சொல்லி, சில பல முதலமைச்
சர்களைக் கொண்ட ஒரு குழு போட்டு ஆராயலாம் என்று அவர்
களிடத்தில் அதை விட்டிருக்கிறார்கள். ஆக, அந்த மூன்று
பொருள்களைப் பொறுத்த அளவில் 1982-83-ல் ரூ. 127
கோடி வரவேண்டிய இடத்தில் நமக்கு ரூ. 32.17 கோடிதான்
ஆயத்தீர்வை மூலமாக வந்திருக்கிறது.

மேற்கொண்டு வனஸ்பதி, மருந்து வகைகள், சிமெண்ட்,
காகிதம்—காகிதப் பொருள்கள், பெட்ரோலியம் வகைகள் ஆகிய
வற்றை அவர்கள் ஆயத்தீர்வைக்கு எடுத்துக் கொண்டால் தமிழக
அரசுக்கு ஆண்டு ஒன்றுக்கு ரூ. 160 கோடி நஷ்டம் ஏற்படும்
என்பதை அந்த மாநாட்டில் எடுத்துச் சொல்லியிருக்கிறோம்.
மேற்கு வங்காளம் மிக அழுத்தம் திருத்தமாகத் தெரிவித்திருக்
கிறது. திரிபுராவும் அழுத்தம் திருத்தமாகத் தெரிவித்திருக்கிறது.
இன்னும் வேறு சில காங்கிரஸ் ஆளும் மாநிலங்கள் கூட ஆயத்
தீர்வையை மத்திய அரசு எடுக்கக்கூடாது என்று சொல்லியிருக்
கின்றன. மாநில அரசு இந்த விற்பனை வரி ஒன்றை நம்பித்
தான் நடக்கக்கூடிய அளவுக்கு இருக்கிறது என்று சொல்லியிருக்
கிறார்கள். ஆகவேதான் மத்திய அரசு பிடிப்பை இந்தவகையில்
ஓரளவுக்கு தளர்த்துகின்ற வகையில் நடவடிக்கைகளை எடுத்து
மாநில அரசுக்கு உதவ வேண்டும் என்று சொல்லியிருக்கிறோம்.

இங்கே வரி போட வேண்டிய அவசியம் ஏற்படும்போது
சாதாரண மக்களைப் பாதிக்காத அளவுக்குப் போட முயற்சி செய்
கிறோம். அந்த வகையிலேதான் நுழைவு வரியைக் கொண்டு
வந்தபோது, அதை நிறுத்த வேண்டும்; அதிலே பல சங்கடங்கள்
வரும்; வியாபாரிகளுக்கும் சங்கடம் ஏற்படும்; வசூல் செய்கின்ற
அதிகாரிகளுக்கும் சங்கடம் ஏற்படும், தொல்லைகள் ஏற்படும்
என்று சொன்ன காரணத்தால் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்
அதற்கு ஒரு குழு அமைத்து, வியாபாரிகள் பிரதிநிதிகள் மற்றும்
அரசு பிரதிநிதிகள் கொண்ட ஒரு குழுவை அமைத்து, யோசனை

[டாக்டர் இரா. நெடுஞ்செழியன்] [7984 மார்ச் 14

சொல்லுங்கள் என்று சொன்னார்கள். அதைத்தான் நிதிநிலை அறிக்கையிலும் குறிப்பிட்டிருக்கிறோம். அந்தவகையில் அவர்கள் சொன்ன ஆலோசனைகளின் அடிப்படையில் சிலபல முடிவுகளை எடுத்திருக்கிறோம்.

அந்த வகையில் பார்க்கும்போது, மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் திரு. ஹாஜாசெரீப் அவர்கள் குறிப்பிடும்போது பெட்ரோல் வரியை அதிகமாக உயர்த்தியிருக்கிறீர்கள்; அது மக்களைப் பாதிக்கும் என்று சொன்னார்கள். ஓரளவுக்கு வரி விதிப்பு செய்யும்போது, அந்த அளவுக்கு அதிகவிலை கொடுத்துதான் வாங்க வேண்டும். ஆனால் அதை சமாளிக்கக்கூடிய அளவுக்குதான் உயர்த்தியிருக்கிறோம் என்பதை அவர்கள் கவனிக்க வேண்டும். இந்த வரி உயர்வுக்கு முன்னால், அதாவது 3—3—1984-க்கு முன்னால் தமிழ்நாட்டில் பெட்ரோலுக்கு 11 சதவீதம் வரி போடப்பட்டிருந்தது ; கேரளத்தில் 15 சதவீதம், கர்நாடகத்தில் 12.5 சதவீதம், ஆந்திராவில் 12 சதவீதம் வரி பெட்ரோலுக்கு போடப்பட்டிருந்தது. 3—3—1984-க்குப் பின்னால் இந்த வரி உயர்த்தப்பட்ட பிறகு தமிழ்நாட்டில் பெட்ரோலுக்கு வரி 14 சதவீதமாக இருக்கிறது. இந்த வரி கேரளத்தில் 15 சதவீதம் இருக்கிறது. கர்நாடகத்தில் இப்போது மாற்றியிருக்கிறார்கள். அதனால் அங்கே 15 சதவீதம் இருக்கிறது. ஆந்திராவில் மட்டும் 12 சதவீதம்; முன்பு இருந்தது அப்படியே இருக்கிறது.

அதைப்போன்று உயர்வேக டீசல் எண்ணெய் வரியை எடுத்துக் கொண்டால், 3—3—1984-க்கு முன்னால் தமிழ்நாட்டில் 11 சதவீதம் இருந்தது. கேரளத்தில் 20 சதவீதம், கர்நாடகத்தில் 14 சதவீதம், ஆந்திராவில் 11 சதவீதம் இருந்தது. 3—3—1984-க்குப் பின்னால் இந்த வரி தமிழ்நாட்டில் 14 சதவீதம், கேரளத்தில் 20 சதவீதம், கர்நாடகத்தில் 14 சதவீதம் இருக்கிறது. ஆந்திராவில் மட்டும் 11 சதவீதமாக இருக்கிறது.

இந்த மாதிரி மாற்றங்களைக் கணக்கிடும்போது ஓரளவுக்கு பிற மாநிலங்களோடு ஒப்பிட்டுப்பார்த்து, அந்த அளவுக்கு நம்முடைய மாநிலத்திலும் செய்து, சரிக்கட்டலாம் என்ற முடிவுக்கு வருகிறோம். வரி விதிப்பினால் இப்போது விலை கூடியிருப்பதாகச் சொன்னார்கள். பெட்ரோல் விலையை எடுத்துக்கொண்டால் 3—3—1984-க்கு முன்னால் சென்னையில் ஒரு லிட்டர் ரூ. 6.27 ; இப்போது இந்த வரியை கூட்டிய பின்னால் ரூ. 6.44 ஆகிறது. ஆக, 17 காசு கூடுதலாகிறது. அதேமாதிரி உயர்வேக டீசல் விலையை எடுத்துக்கொண்டால் இங்கே லிட்டர் ஒன்றுக்கு 3 ரூபாய் 26 காசு என்று இருந்தது இப்போது 3 ரூபாய் 34 காசாகிறது, ஆக, 8 காசு கூடுதல் வருகிறது.



1984 மார்ச் 14] [டாக்டர் இரா. நெடுஞ்செழியன்]

பெட்ரோல் விலையைப் பொறுத்தவரையில் நாம் வரி போட்ட பின்னால் ஒரு லிட்டருக்கு 6 ரூபாய் 44 காசு ஆகிறது. முன்னால் இருந்ததைவிட 17 காசு கூடுதலாக வருகிறது. நம்முடைய மாநிலத்தில் வரி போட்ட பிறகுதான் 6 ரூபாய் 44 காசு. ஆனால் இப்போது பெங்களூரில் 6 ரூபாய் 63 காசு ; ஐதராபாத்தில் 6 ரூபாய் 83 காசு ; கொச்சியில் 6 ரூபாய் 65 காசு என்ற அளவுக்கு இருக்கிறது. ஆக, நாம் வரி போட்ட பிறகும் அந்த மாநிலங்களுக்குக் கீழேதான் இருக்கிறது என்பதை திரு. ஹாஜாசெரீப் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். இதைக் குறைத்தால் நல்லது இல்லையா என்றால் நல்லதுதான். முழுமையாக எடுத்துவிட்டால் இன்னும் நல்லதுதான். ஆனால் எடுத்து விட்டு எதையும் செய்ய முடியாது என்பதால் ஓரளவுக்கு, நியாயமான அடிப்படையில் வைத்திருக்கிறோம்.

**திரு. கே. எஸ். ஜி. ஹாஜாசெரீப் :** சார், நான் சொன்னதெல்லாம் ஒரு லிட்டருக்கு உங்களுடைய வரி விதிப்பின் காரணமாக 17 காசு கூடியிருக்கிறது. இது லாரி; பஸ் எல்லாவற்றுக்கும் பொருந்தும் ; போக்குவரத்து எல்லாவற்றையும் பாதிக்கும். அதன் காரணமாக எவ்வளவு தூரம் சாதாரண மக்களுடைய பயணக் கட்டணம் அதிகமாகும் என்பதை அரசாங்கம் கவனிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். எல்லாம் இப்போது மாட்டுவண்டி, கை வண்டிகளில் வருவதில்லை.

95 percent of the goods is being transported only by Lorries But people mostly travel by buses on இவர்கள் எல்லாம் பாதிக்கப்படுவார்கள். 15 பைசா நீங்கள் ஏற்றினால் அவர்கள் 30 பைசாவுக்கு மேல் ஏற்றிவிடுவார்கள். அதனால் தேவையான பொருள்கள், அத்தியாவசியமான பொருள்கள் விலை எவ்வளவு தூரம் அதிகமாகும் ? அதனால் மக்கள் எவ்வளவு கஷ்டப்படுவார்கள் ? ஏதாவது வரி அல்லது ஏதாவது சர்சார்ஜ் விதிப்பதாக இருந்தால் அதனால் விலை ஏற்றம் ஏற்பட்டு சாதாரண மக்கள்தான் பாதிக்கப்படுவார்கள் என்று நான் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

[முற்பகல் 11-40]

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** மாண்புமிகு உறுப்பினர் எதிர்க்கட்சித் தலைவர் ஹாஜா செரீப் அவர்கள் இந்த வரி ஓரளவிற்கு ஏறும் என்றார். நான் ஏறாது என்று சொல்லவில்லை. லாரிகள், மற்றவைகளுக்கும் வாடகை ஏறும் என்று சொன்னார்கள். நான் ஏறாது என்று சொல்லவில்லை. ஆனால் இருக்கின்ற நிலைமைகளைச் சமாளிப்பதற்கு வியாபாரிகள், மற்றைய விவசாயப் பிரதிநிதிகள் அத்தனை பேரும் சொல்லி, ஆறு நாட்களாக உட்கார்ந்து யோசித்து, அதனுடைய தலையில் வைக்காமல் வேறு எவனுடைய தலையிலே வைக்க

வேண்டுமென்று கேட்டபோது, அவர்களே பார்த்து வேறு யார் தலையிலேயும் வைக்க வேண்டாம், அதனுடைய தலையிலேயே வையுங்கள் என்று சொன்னார்கள். இல்லாவிட்டால், இதன் மூலம் எதிர்பார்க்கக்கூடிய ரூ. 20,22 கோடியைச் சிறு சிறு பண்டங்களுக்கு நாம் வைப்போமேயானால், இந்த ரூ. 20 கோடியை ஈட்டுவது என்பது மிகமிகக் கடினம். ஆக சிறு சிறு பண்டங்களுக்கு வெந்தயம், துவரம்பருப்பு, மிளகாய், புளி போன்ற கடைகளிலே விற்கிற சாமான்களுக்கு வைப்போமேயானால், நேரடியாக அவைகள் அதிகமாக பாதிக்கப்படும். ஆனால் இப்போதும் பாதிப்பு உண்டு. ஆனால் அதிக பாதிப்பு இல்லாத அளவிற்கு, குறைந்த அளவிலே பாதிப்பு ஏற்படும். குறைந்த அளவு பாதிப்பு எது என்று கண்டறிந்த பிறகுதான் இந்த வரி வந்தது.

மற்றொன்று. அதே போன்று, பருத்தி நூல் — இதற்கு கர்நாடகத்திலே 4 சதவீதமாக இருந்தது. கேரளாவிலே 3 சதவீதம். நம்முடைய மாநிலத்தில் 3 சதவீதமாகத்தான் இருந்தது. கர்நாடகத்தில் 4 சதவீதம் என்று இருந்த காரணத்தினால் தான் இந்த மாநிலத்திலும் ஒரு சதவீதத்தைக் கூட்டலாம் என்று கூட்டினோம். கூட்டினால் அதிக பாதிப்பு ஏற்படாது என்று கருதி, 3 சதவீதத்திலிருந்து நாம் 4 சதவீதமாக பருத்தி நூலைப் பொருத்தவரையிலும் ஆக்கினோம்.

திரு. ரா. உமாநாத் : பருத்தி நூலைப்பற்றி மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். பிரத்யேகமாக இன்றைக்கு தமிழ்நாட்டிலே இருக்கின்ற நிலைமையில், அவர்களிடத்திலே எக்கச்சக்கமாக ஸ்டாக் இருந்து, பலருக்கும் வேலை இல்லாத ஒரு நிலை இருக்கிறது. அவர்கள் இந்த நூலை உபயோகப்படுத்துகிறபோது, இந்த நேரத்திலே வரியைப் போட்டால் அவர்கள் பாதிப்புக்கு உள்ளாக மாட்டார்களா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : கர்நாடகத்திலே 4 சதவீதம் இருப்பதன் காரணமாக, ஓரளவிற்கு இங்கேயும் வரலாம் என்று கருதி, நாம் 3 சதவீதத்திலிருந்து 4 சதவீதமாக ஆக்கினோம். அப்படிப் பார்க்கின்றபோது, விற்பனை வரியைக் கணக்கிட்டு, ரூ. 5 கோடி வரும் என்று கருதி, அதை எதிர்பார்த்துப் போட்டோம். அதற்குப் பிறகு மாண்புமிகு உறுப்பினர் உமாநாத் கூறுவது போல், இந்தப் பிரச்சினை பற்றி எங்களிடத்திலே கோ-ஆப்டெக்ஸ் நிறுவனத்தைச் சார்ந்தவர்களும், மற்றவர்களும் விவாதித்து, நிலைமைகளை எடுத்துச் சொன்னார்கள். அவர்கள் சொன்ன விளக்கத்தை நான் ஏற்றுக்கொண்டதற்குக் காரணம் என்னவென்று கேட்டால், இப்போது 3 சதவீதத்தை 4 சதவீதமாக ஏற்றுவதால், அரசிற்கு அதிகமான அளவில், எதிர்பார்த்த அளவிற்கு வரி வராது என்று சொன்னார்கள். 4 சதவீதத்திற்கு மேல் டெக்ஸ்டைல்ஸ்-லே போடக்கூடாது என்ற நிலை இருக்கிறது. கர்நாடகத்திலே கூடுதல்



வரி சர்சார்ஜ் இல்லை. இங்கே கூடுதல் வரி இருப்பதன் காரணமாக ஒரு சதவீதம் போடலாம். ஒரு சதவீதம் கூடுவதால் கிட்டத்தட்ட 2, 3 சதவீதம் கிடைக்கும், ஒரு சதவீதம் கிடைக்காது என்று அந்த புள்ளிவிவரங்களைச் சொன்னதற்குப் பிறகு, நியாயம் இருக்கிறது என்று தெரிந்து கொண்டதற்குப் பிறகு தான், மாண்புமிகு உறுப்பினர் சொல்வது போன்று, இதிலே கிடைப்பது 2, 3 சதவீதம் என்ற அளவிலே இருப்பதனாலும், அவர்கள் செலுத்த வேண்டி வராமல் இதை நூலின் மேலே வைத்து கைத்தறியாளர்களைப் பாதிக்கும் என்பதைத் தெளிவுபடுத்தியதற்குப் பின்னர், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கருத்தை அறிந்து, ஆகவே அந்த முறையில் வரியை எடுத்து விடுவது, முதலிலேயே இருந்த 3 சதவீதத்தைப் போடுவது என்ற முடிவிற்கு வந்திருக்கிறோம். ரூ. 5 கோடி நஷ்டம் வருகிறது என்றாலும், 57¼ கோடி, 62 கோடியாகும் என்றாலும் கூட, வேறு வகையிலே சமாளிக்கலாம் என்று சொல்லி, ஆக இப்போது இந்தக் கஷ்டத்தை ஏற்படுத்த வேண்டாம் என்று கருதி, இந்த வரியை எடுத்துவிடுவது — அந்த ஒரு சதவீதத்தை மட்டும் — ஏற்கனவே இருந்த 3 சதவீதமாக ஆக்குவது என்று சொன்னார்கள். இன்னொரு காரணம் சொன்னார்கள். கர்நாடகத்தில் கைத்தறிக்காக வாங்குகிற நூலினுடைய அளவு மிக மிகக் குறைவு என்றும், அதிகமான அளவிற்கு, இன்னும் சொல்லப்போனால், ஆந்திராவைவிட, அதிகமான அளவிற்கு நூல் வாங்குகிற இடம் தமிழகம் தான் என்றும், இதை நம்பி வாழ்கிறவர்கள் இங்கே இருக்கிறார்கள் என்றும் சொன்னதன் காரணமாக அவர்களை காப்பாற்ற வேண்டி இருக்கின்ற காரணத்தாலே, இந்தத் திருத்தம் செய்யப்படுகிறது என்பதை நான் இப்போது கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

THIRU K. S. G. HAJA SHAREEF. Sir, I would request the Hon. Minister to be good enough to concede to the request of reducing the taxes on petrol and oil atleast by 2 per cent. On account of the power shortage, people have resorted to use the diesel engines, generating sets. They will also be affected very much. If it is reduced by 2 per cent. I am sure that will be a good compromise and you will certainly be yielding to the presure of members.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே. இவ்வளவு தூரம் நான் பற்றாக்குறையைச் சொல்லி, இதிலே ரூ. 5 கோடி போகும் என்று நான் சொல்லிக் கொண்டிருக்கும்போது, இன்னும் போவதற்கு வழியை ஹாஜா செரீப் அவர்கள் எடுத்துச் சொல்வார்கள் என்றால், இதை வந்து அதிலே போடலாமா என்று யோசிக்காமல் இருக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டால் கூட நல்லது. ஆனாலும்கூட இப்போது இருக்கிற சூழ்நிலையில் வேறு எதிலேயும் மாற்றம் செய்கிற சூழ்நிலை இல்லை. இது மிகவும் பாதிக்கப்படுகிற சூழ்நிலை இருப்பதன் காரணமாக இந்தப் பருத்திக்கு மட்டும்தான் போட்ட வரி திரும்பப் பெறப்படுகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

[டாக்டர் இரா. நெடுஞ்செழியன்] [1984 மார்ச் 14

நிதி நிர்வாகத்தை செவ்விய முறையில் வைத்து வருகின்ற
மாநிலங்களுக்கு உதவுவதற்காக இப்போது மத்திய அரசு கூட
தன்னுடைய வரவு-செலவு திட்டத்தில் 500 கோடி ரூபாய் ஒதுக்கி
யிருக்கிறது. பற்றாக்குறையைப் பற்றி இங்கே எடுத்துச் சொன்
னார்கள். ஓரளவிற்கு எல்லா மாநிலங்களும் எடுத்துச் சொல்லி.
இவ்வளவையும் மாநில அரசாங்கங்கள் தாங்க முடியாது என்றும்,
ஓரளவிற்கு இந்தப் பற்றாக்குறையை கடனாக மாற்றுகின்ற
அளவிற்கு முயற்சிகள் செய்ய வேண்டும் என்றும் கேட்டுக் கொண்
டதற்கு இணங்க அவர்கள் ஒரு கணக்கைச் சொல்லியிருக்
கிறார்கள். இந்த மார்ச் 31-ஆம் தேதிக்குள்ளாக குறிப்பிட்ட
அளவிற்கு இருக்கிற பற்றாக்குறையை, அதிகமாக இருக்கிற
மிகைப்பற்றைக் குறைத்துவிட்டால் அதாவது இப்போது
இருக்கின்ற ஓவர் டிராப்டை ஓரளவிற்குக் குறைத்துக்கொண்டு
வந்து நிறுத்துவார்களேயானால், மத்திய அரசு உதவி செய்
வதைப் பற்றி யோசிக்கும் என்று சொல்லியிருக்கிறார்கள்.
அந்த வகையில் இப்போது இருக்கிற நம்முடைய ஓவர் டிராப்டை,
113 கோடி ரூபாய் என்று இருக்கிற அந்த அளவை, இந்த
மாதம் 31-ஆம் தேதிக்குள்ளாக 60 கோடி ரூபாய் அளவிற்குக்
கொண்டு வந்து சேர்த்தால், அவர்கள் உதவி செய்வதாகக்
கூறியிருக்கிறார்கள். இப்போது மத்திய அரசினுடைய பட்
ஜெட்டிலே 500 கோடி ரூபாய் ஒதுக்கியிருப்பதன் காரணமாக,
அந்த அடிப்படையிலேதான் மற்ற மாநிலங்கள், மேற்கு
வங்காளம், பீகார், இன்னும் இருக்கின்ற சில மாநிலங்கள்
ஓவர் டிராப்டைக் கட்டுப் படுத்திக் கொண்டால், அவர்கள் உதவி
செய்வதாகச் சொல்லியிருக்கிறார்கள். அந்த வகையில் நமக்கு
60 கோடிக்கு ஓவர் டிராப்ட் வருமானால், நம்முடைய பட்
ஜெட்டில், பற்றாக்குறை ஓரவிற்கு கீழே இறங்கக்கூடும்.
அது கடனாக இருக்கும். பல ஆண்டுகளிலே திருப்பிச் செலுத்து
கின்ற ஒன்றாக அது அமையும்.

அடுத்து தொழில் வளர்ச்சியைப் பொறுத்தவரையில் மாண்பு
மிகு எதிர்க் கட்சித் தலைவர் ஹாஜா செரீப் அவர்கள் குறிப்
பிட்டார்கள். பல்வேறு வகைகளிலே, தொழில் வளர்ச்சிக்கு
ஊக்கமும் ஆக்கமும் தருகின்ற முயற்சிகளிலே இந்த அரசு
நடவடிக்கை எடுத்துக்கொண்டு இருக்கின்றது என்பதைப்
பற்றி தொழில் மானியக் கோரிக்கைகள் வருகின்றபோது
மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விரிவாக எடுத்து விளக்கு
வார்கள். ஆனால் நாளுக்குநாள், உதவி செய்து வருகின்றதை,
அந்தக் காலம் தொட்டு, இந்தக் காலம் வரையில், இந்த
பட்ஜெட்டை நீங்கள் பார்த்தால், தொழிற்துறையை ஊக்கப்
படுத்துகின்ற அளவிற்கு நிதி ஒதுக்கீடு செய்கின்ற வகையில்தான்
இது இருக்கிறது என்பது மட்டுமல்ல, வங்கிகளின் மூலமாகவும்,
நிதி நிறுவனங்களின் மூலமாகவும், சிப்காட் மற்றும், டி.ஐ.ஐ.சி.
மூலமாகவும், மற்றும் பல்வேறு நிதி நிறுவனங்களின் மூலமாக
வும், புதிதாக நாம் துவக்கியிருக்கின்ற இன்ஸ்ட்டிடியூசனல்
ஃபைனான்ஸ் என்றுள்ள பொறுப்புள்ள நிறுவனங்கள்



1984 மார்ச் 14] [டாக்டர் இரா. நெடுஞ்செழியன்]

மூலமாகவும், எவ்வளவுக்கெவ்வளவு ஆக்கமும், ஊக்கமும் தர
இயலுமோ, அந்த அளவிற்கு நாம் தந்து கொண்டிருக்கிறோம்.
அப்படி பெரும் தொழில்கள் ஓரளவிற்கு வருவதற்கு மத்திய
அரசும் உதவி செய்யவேண்டும் என்று சொல்லிக்கொண்டு வரு
கிறோம். இதிலே கூட நாம் குறிப்பிட்டு இருக்கிறோம். கிட்டத்
தட்ட 23 ஆயிரத்துச் சில்லரை கோடி ரூபாய் பங்கிலே, மத்திய
அரசு ஒதுக்கிய வகையிலே நம்முடைய மாநிலத்திற்கு தொள்ளா
யிரத்துச் சில்லரை கோடி தான் வந்திருக்கிறது. நம்முடைய
மக்களுடைய எண்ணிக்கையைப் பார்ப்போமானால்,
நம்முடைய மாநிலத்தைப் பொறுத்தவரையிலும்,
கிட்டத்தட்ட பதினான்கிலே ஒரு பங்கு இருக்
கிறார்கள். என்றாலும் நமக்கு மத்திய
அரசினுடைய உதவி, 23-ல் ஒரு பங்குதான் கிடைத்
திருக்கிறது. ஆகவேதான் அதிகமாகக் கேட்க நியாயம் இருக்
கிறது என்று சொல்கிறோம். அவர்கள் என்ன சொல்கி
றார்கள் என்றால், ரா-மெட்டீரியல்ஸ், நிலக்கரி எங்கே இருக்
கிறதோ, இரும்பு எங்கே இருக்கிறதோ, மற்றப் பொருட்கள்
எங்கே இருக்கிறதோ, அங்கேதான் தொழிற்சாலைகளை ஆரம்
பிக்கவேண்டும் என்று சொல்கிறார்கள். அது ஓரளவிற்கு
உண்மைதான். நான் ஒத்துக்கொள்கிறேன். நிலக்கரி, இரும்பு,
லிக்னைட், போன்றவைகள் இருக்கின்ற இடத்திலே தொழிற்
சாலை ஆரம்பிக்கவேண்டும் என்றார்கள். ஆனால் இப்போது
உலகத்திலே உள்ள பல்வேறு நாடுகள், அமெரிக்கா, ரஷ்யா,
ஜப்பான், மேற்கு ஜெர்மனி போன்ற நாடுகள் எல்லாம், வளர்ந்
திருக்கின்ற தன்மையைப் பார்த்தால், ரா-மெடிரியல்ஸ்
தேவையில்லாமல், பல கோடிக்கணக்கான ரூபாய் முதலீடு
செய்து, எலக்ட்ரானிக் குட்ஸ், பார்மசூடிகல், குட்ஸ்,
டிரக்ஸ் போன்றவைகள் எல்லாம் துவங்குவதற்கு, அங்கேயே
ரா-மெட்டிரியல்ஸ் கிடைக்கவேண்டியதில்லை என்று அவர்கள்
இருக்கிறார்கள். எனவே, அப்படிப்பட்ட வகையிலே இந்த
மாநிலத்திற்கு அதிகமாக நிதி ஒதுக்கித் தருவார்களானால்,
அதன் மூலம் தொழில் வளர்ச்சி அதிகமாக வருவதற்கு வாய்ப்
பிருக்கிறது. இருந்தாலும்கூட, ஓரளவிற்கு வெள்ளைக்காரன்
ஆண்ட காலந்திலேயிருந்து, கல்கத்தாவும், பம்பாயும் முத
லிடம் இரண்டாவது இடத்தைப் பெற்று, நாம், மூன்றாவது,
நான்காவது இடத்தைப் பெறுகின்ற அளவிலே இருந்து, இதே
நிலைதான் இப்போதும் கூட, குஜராத் தனியாகப் பிரிந்
தாலும் கூட, இது மகாராஷ்டிராவின் ஒரு பகுதியாக
இருந்து வளர்ந்ததன் காரணமாக, அதுவும், இரண்டாம்
இடம், மூன்றாம் இடம், நான்காம் இடம் என்ற அளவிற்கு
வருகிறது. ஆகவே, மகாராஷ்டிரம், மேற்கு வங்காளம்,
தமிழ்நாடு, குஜராத் இந்த 4 மாநிலங்களிலேதான், மூன்
றாவது இடம், நான்காவது இடம், ஐந்தாவது இடம் என்ற
அளவிற்கு வருகின்ற சூழ்நிலை இருக்கிறது. இருந்தாலும் நம
மால் முடிந்த வரையிலும் காப்பாற்றி வருகிறோம் என்பதற்கு

Dr, C. Thangamuthu, Department of Economics, Bharathi dasan University, Tiruchi appalli அவர்கள் 'Industrial structure and change in Tamil Nadu'

என்கிற ஆராய்ச்சிக் கட்டுரையிலே குறிப்பிட்டிருக்கிறார்கள். இதை எதற்குச் சொல்ல வருகிறேன் என்றால்,

'Tamil Nadu remains one of the industrially advanced States in the Indian Union.'

என்று அவர்கள் கூறியிருக்கிறார்கள். ஓரளவிற்கு
இந்த நிலைமைகளை நாம் காப்பாற்றி வருகிறோம்.
மேலும் வளர்ப்பதற்கு உண்டான திட்டங்களையும், முயற்சி
களையும் நாம் எடுத்துக் கொண்டிருக்கிறோம். என்றாலும்,
அதற்கான சூழ்நிலைகளைப் பெருக்க வேண்டியவர்களாக இருக்
கிறோம்.

(முற்பகல் 11-50).

மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் எடுத்துச்
சொன்ன மாதிரி, நம்முடைய மாநிலத்தில் இருக்கிற பெரிய
குறைபாடு மின்சாரத் தட்டுப்பாடு. மின்சாரப் தட்டுப் பாட்டி
னுடைய அளவு ஓரளவிற்கு நமக்கு பாதகம் ஏற்படுத்துகிற
அளவுக்கு இருக்கிறது. எவ்வளவு மின்சாரம் வந்தாலும் நாம்
பயன்படுத்துகிற ஒரு சூழ்நிலையைத்தான் நம்முடைய மாநிலத்
தைப் பொறுத்த வரையில் நாம் பெற்றிருக்கிறோம். அந்த
முழு நிலையை பெறவேண்டும் என்ற தன்மையினுடைய அடிப்
படையிலே காணுகிறபோது, நாம் மின்சாரத்தைப் பெருக்குவதற்
காக பல்வேறு திட்டங்களைத் தீட்டி மத்திய அரசுக்கு அனுப்பி
யிருக்கிறோம். அதைத்தான் சொன்னேன். இரண்டாவது
அணுமின் நிலையம் ஒன்று ஏற்படுத்த வேண்டும்; மூன்றாவது
தெர்மல் ஸ்டேஷன் அனல் மின்நிலையம் ஒன்று தூத்துக்குடியில்
ஏற்படுத்த வேண்டும் என்று.

அது மட்டும் அல்லாமல், நெய்வேலியில் ஏற்படுத்துகின்ற
இரண்டாவது கட்டின் மூலமாக, இன்னொரு அனல் மின்
நிலையப் பிரிவு ஏற்படுத்துவதன் மூலமாக, அதிகமான அளவுக்கு
மின்சாரம் வருமேயானால், கொஞ்சம் அதிகமாக வெளி ஊர்



களில் இருப்பவர்களை, வெளி மாநிலங்களில் இருப்பவர்களை
ஈர்ப்பதற்கு வேண்டிய வாய்ப்பு ஏற்படக் கூடும். அந்த நிலையை
எய்துவதற்கு இந்த அரசு சூழ்நிலையை மேற்கொண்டு வருகிறது.

தென்னகத்தில் 4 மாநிலங்களை எடுத்துக் கொண்டால்,
அதிகமான அளவுக்கு மூவாயிரத்து முன்னூற்றுச் சில்லரை
மெகாவாட் யூனிட் மின்சாரம் உற்பத்தி ஆவது தமிழகத்தில்
தான். இப்பொழுது 235 மெகாவாட் கல்பாக்கத்தில் உற்பத்தி
செய்கிறார்கள். இது முழுவதும் நமக்குத்தான் வேண்டுமே
தவிர, வேறு ஒருவருக்கும் போக முடியாது. அதுவும் போக
மேற்கொண்டும் கேரளத்தில் இருந்து வாங்கவேண்டியிருக்கிறது.
சிலசமயம் ஆந்திரத்தில் இருந்தும், கர்நாடகத்தில் இருந்தும்
மின்சாரம் கடன் வாங்கிக்கொண்டிருக்கிறோம். தொழில்கள்
தமிழகத்தில் வளர்வதற்கு இது ஒரு தடுப்பாக இருக்கிறது.

மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் பல்வேறு
தொழில்கள் வரவேண்டும் என்ற விருப்பத்தைச் சொல்லியிருக்
கிறார்கள். தொழிற்சாலைகள் தொடங்க வருபவர்களுக்கு
நாம் இடம் ஒதுக்கி தர முடிகிறது. நீர் ஒதுக்கி தர முடிகிறது.
மின்சாரத்தை ஒதுக்கிக் கொடுப்பதில் காரண்டி தருவீர்களா
என்று கேட்கிறபோது தான் கணக்கு பார்க்க வேண்டியிருக்கிறது.
கட்டுப்பாட்டின் அடிப்படையில் தரவேண்டிய நிலை இருப்பதன்
காரணமாக தொழில்கள் தயங்க வேண்டியிருக்கிறது. இல்லா
விட்டால் போடும் திட்டங்கள் அனைத்தையும் விரைவிலே நிறை
வேற்றித் தருகிற வாய்ப்பை மத்திய அரசு தருமானால், எவ்வளவு
மின்சாரத்தை வேண்டுமானாலும் வைத்துக் கொண்டு மாநில
அரசு செய்யலாம் என்ற நிலை வருமானால், தமிழகத்தை
நல்லதொரு வகையில் தொழில் துறையில் சீரமைக்க முடியும்.
ஒன்றை மட்டும் கூறவிரும்புகிறேன். டெக்னிஷியன்களைப்
பொறுத்த வரையில், சிறந்த முறையில் பணியாற்றி சிறந்த
புரொடெக்ஷன் அண்ட் புரொடெக்டிவிட்டியை உருவாக்கு
கிற நிலைமை நம்முடைய மாநிலத்தில் சிறப்பாக இருக்கிறது
என்பதைக் குறிப்பிட விரும்புகிறேன்.

மின்சார உற்பத்தியைப் பொறுத்தவரையில் தமிழகத்தில்
3,139 மெகாவாட். ஆந்திராவில் 2,793 மெகாவாட், கர்நாடகத்
தில் 1,874 மெகாவாட், கேரளம் 1,011.5 மெகாவாட் மின்
சாரத்தை உற்பத்தி, செய்கிறது. இப்போது கல்பாக்கத்தில்
235 மெகாவாட், கல்பாக்கத்தையும் சேர்த்தால் மொத்தம்
3,374 மெகாவாட் மின்சாரம் தமிழகத்தில் உற்பத்தியாகிறது.
அதை ஆண்டுக்காண்டு கூடுதலாக்கி செய்து வந்தால்தான்
நல்லது. இதையெல்லாம் கூடுதலாக்குவதற்கான வாய்ப்பு
இருக்கிறது. தேவையிருக்கிறது. அதைத்தான் நாங்கள் மீண்டும்
மீண்டும் வற்புறுத்தி வருகிறோம்.

[டாக்டர் இரா. நெடுஞ்செழியன்] [1984 மார்ச் 14

மற்றொன்று சத்துணவுத் திட்டம். சத்துணவுத் திட்டத்தைப்
பற்றி மாண்புமிகு உறுப்பினர்கள் எடுத்துச் சொன்னார்கள்.
கொடுப்பதற் ாக நாங்கள் ஆதரிக்கிறோம். ஆனால் அதில் நடக்கிற
பல்வேறு சோளாறுகளையும், சிலபல கேடுற்ற தன்மைகளையும்
நீக்க வேண்டும், அதற்கான முயற்சிகளை மேற்கொள்ள வேண்
டும் என்று எடுத்துச் சொன்னார்கள். அதை நாங்களே கூட
உணர்கிறோம். ஆனால் கிட்டத்தட்ட 60 ஆயிரம் இடங்களில்
சமையல் கூடங்கள் வைத்து நடத்த வேண்டியிருக்கிறது. கிட்டத்
தட்ட 65 லட்சம் சிறார்கள் இதனால் பயன்பெறுகின்றனர்.
இப்பொழுது மேற்கொண்டும் 16, 17 லட்சம் பேருக்கு இது
பயன் அளிக்கும் என்று எதிர் பார்க்கப்பெறுகிறது. இப்போது
15 வயது வரையில் இதனை நீட்டித்திருப்பதன் காரணமாக.
60 ஆயிரம் இடங்களையும் கண்காணிப்பதற்கு, பல கண்காணிப்பு
அதிகாரிகளை அந்தத் துறையிலே நாங்கள் வைத்திருக்கிறோம்.

இருந்தாலும் கூட பொதுமக்களுடைய விழிப்புணர்ச்சியும்,
மற்றவைகளும், இதனோடு கூட இருக்க வேண்டும். அதற்கு
என்ன முறையைக் கையாளலாம் என்று யோசனைகளை நாங்கள்
ஆங்காங்கே கேட்டுக் கொண்டு வருகிறோம். யாராவது, அந்தந்த
ஊர்களில் இருப்பவர்கள், பொதுத் தொண்டு புரிபவர்கள்,
பொறுப்பு உணர்ச்சி மிக்கவர்கள் இருப்பார்களேயானால் —
அவர்களுக்கு வேண்டுமானால் சில பல அதிகாரத்தை ஒப்ப
டைத்து விடலாம் — அவர்கள் எவ்வளவு பேர் வந்தார்கள்,
எவ்வளவு பேர் சாப்பிட்டார்கள் என்று சூப்பர்வைசிங்
செய்கிற அளவுக்கு, சூப்பர்வைசிங் பவர் அளித்து நிலைமைகளை
சரி செய்கிற நிலை இருக்குமானால் நல்லதாக இருக்கும். இல்லா
விட்டால், கண்காணாத இடங்களில் — யாரும் அடிக்கடி போக
முடியாத இடங்களில் இருப்பவர்கள் தினமும் 98 மாணவர்கள்
வந்தார்கள் என்று கணக்கு எழுதிக் கொண்டிருக்கும் நிலை
ஏற்படும். ஆனால் உண்மையில் வருபவர்கள் 12 பேர்கள் 15
பேர்கள்தாம் இருப்பார்கள். அங்கேதான் மாண்புமிகு உறுப்பினர்
எடுத்துச் சொல்கிற குறைபாடுகள் வரும். அந்தக் குறைகள்
நிகழாமல் இருக்க வேண்டும் என்பதுதான் இந்த அரசுக்கும்
அக்கறை. அதற்கு சிறந்த வழிமுறையை ஏற்படுத்தி, இந்தத்
திட்டத்தை சிறப்பாக நிறைவேற்ற வேண்டும் என்பதுதான்
அரசினுடைய நோக்கம்.

ஓய்வு பெறும் பணியாளர்களின் உதவித் தொகை பற்றி
பல உறுப்பினர்கள் விரிவாக எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள்.
ஒன்றை மட்டும் குறிப்பிட விரும்புகிறேன். அதற்கு அவர்கள்
12 ஆண்டு, 4 திங்கள் வரையில் 20 ரூபாய் செலுத்திக் கொண்டு
வந்துவிடுவார்களேயானால், அதுவே போதுமானது. 12 ஆண்டு
கள் 4 திங்களில் 2,960 ரூபாய் செலுத்தி விடுவார்களேயானால்,
ரூ. 10,021 அவர்கள ஓய்வு பெறுகிற போது கிடைக்கும்.
அதுவரையில் அவர்கள் செலுத்தியது எவ்வளவு குறைவாக இருந்



1984 மார்ச் 14] [டாக்டர் இரா. நெடுஞ்செழியன்]

தாலும் நாம் கொடுக்கிற ஐயாயிரம் ரூபாய், அவர்கள் செலுத்து
கிற பணம், அதற்கு வட்டியும் சேர்த்து தரப்படும் இத்திட்டத்
தின் கீழ் பணியாளர்கள் தொடர்ந்து 17 ஆண்டுகள் 4 திங்களுக்கு
பணியாற்றியிருந்தால் அவர்களுக்கு 12,725 ரூபாய் கிடைக்கும்.
22 ஆண்டுகள் 4 திங்கள்கள் பணியாற்றியிருந்தால் அவர்களுக்கு
16,885 ரூபாய் கிடைக்கும். 27 ஆண்டுகள் 4 திங்களுக்குப்
பணியாற்றியிருந்தால் 23,287 ரூபாய் கிடைக்கும். 32 ஆண்டுகள்
4 திங்கள்கள் பணியாற்றியிருந்தால் 33,137 ரூபாய் அவர்கள்
ஓய்வு பெறும்போது பெறுவார்கள். இதிலே இன்னொரு
கருத்து தெரிவிக்கப்பட்டது. இங்கே சொல்லவில்லை, மேலவை
யிலே சொன்னார்கள். இங்கே விளக்கம் தருவது நல்லது என்று
கருதுகிறேன். அதே தொகையை வங்கியிலே போட்டு வந்தால்
இதைவிட அதிகமாக வருமானம் கிடைக்குமே என்று சொனனார்
கள்.

இதனுடைய நோக்கங்கள் இரண்டு. ஒன்று, 8 அல்லது
8½ லட்சம் அலுவலர்களிடமும் சேமிப்புப் பழக்கத்தைக் கட்டாய
மாக உருவாக்க வேண்டும். இன்னொன்று நாம் கொடுக்கிற
போது வட்டி, முதல் இவைகளை சேர்த்து 23 ஆயிரம் அல்லது
33 ஆயிரம் தருகிறபோது அரசாங்கத்தினுடைய கணக்கிலே
கொண்டு வந்து அதனை ஒரளவுக்குக் கருணைத் தொகை என்று
மாற்றி ஒரு பெயர் தருவதன் காரணமாக இதற்கு இன்கம்
டாக்ஸ் வராது. பேங்கிலே போட்டு எடுப்பார்களானால் 8
ஆயிரம் 9 ஆயிரம் ரூபாய் அவர்களுடைய கடைசிக் காலத்திலே
இன்கம்டாக்ஸ்க்கு செலவிடவேண்டிய கட்டாயம் அவர்களுடைய
வருமானத்தைப் பொறுத்து அமையும். அரசாங்கம் இதற்கு
8 வட்டி தருகிறது என்று சொன்னால் அரசாங்கம் ஒரு வியாபார
ஸ்தலமாக அந்தப் பணத்தை வைத்துக்கொண்டு சம்பாதிக்க
வில்லை. பேங்கிலே பணத்தைப் போட்டால் 10, 12 வட்டிக்குப்
போடுகிறபோது பேங்குக்காரர்கள் 18, 20 வட்டிக்குக் கொடுத்து
லாபம் சம்பாதிக்கிற நோக்கம் இருப்பதால் போடுகிறார்கள்.
அரசாங்கம் இதைச் செலவழிக்கிறது என்று சொனனால் அரசாங்
கத்தினுடைய நன்மைகள் போகிற அளவுக்கு இருக்குமே தவிர
அதை வைத்து வட்டி வசூலித்து மேற்கொண்டு அரசாங்கத்திற்கு
வருமானத்தைப் பெருக்குகிற சூழ்நிலை ஏற்படாது. ஒட்டு மொத்த
மாக பார்ப்பார்களானால் பாங்கிலே போடுவதால 25, 30 ஆண்டு
களுக்குமேல் பணியாற்றி ஓய்வு பெறுகிறவர்களுக்கு வேண்டு
மானால் சிறிது நன்மையாக இருக்குமே தவிர இருக்கிறவர்கள்
அத்தனை பேர்களுக்கும் நல்ல பாதுகாப்பும் வசதியும் அளிக்காது.

[டாக்டர் இரா. நெடுஞ்செழியன்] [1984 மார்ச் 14

அடுத்து, இம்மாநிலத்திலுள்ள பெரிய மாவட்டங்கள் சிலவற்றை பிரிப்பதற்கு ஆளுநர் உரையில் தெரிவிக்கப்பட்ட ஏறு புதிய மாவட்டங்களில் இடம்பெற வேண்டிய பகுதிகள், அவற்றில் இருக்கவேண்டிய வட்டங்கள், அவற்றிற்கு செய்யவேண்டிய வெவ்வேறு அடிப்படை வசதிகள் முதலியவை குறித்து அரசுக்குப் பரிந்துரை செய்ய வல்லுநர் குழு ஒன்று அமைக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டது. அந்தக் குழு அமைந்து அவர்கள் ஆராய்ந்து அந்தக் குழுவினுடைய அறிக்கை வந்ததற்குப் பின்னர் அந்த அடிப்படையில்—நிதி நிலை அறிக்கையில் ஒதுக்கீடு செய்யப்படாவிட்டாலுங்கூட—இடையில் வருகிற இண்டரிம் பட்ஜெட் என்று வருகிறபோது அதிலே ஒதுக்கீடு செய்துக் கொள்ளலாம். அல்லது ஒதுக்கீடு செய்துவிட்ட பிறகு இடைநிலை அறிக்கைகள் வருகிறபோது இந்த அவையினுடைய முழு ஆதரவையும் நாம் பெறலாம். ஆகவே, இதில் ஒதுக்கவில்லை என்பதால் முயற்சிகள் கைவிடப்படும் என்றோ அல்லது நிறுத்திவைக்கப்படும் என்றோ நிலைமைகள் இல்லை என்பதை நான் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

சிற்றூர்களில் வீடுகட்டும் திட்டத்தைப்பற்றி திரு. ப. பொன்னுரங்கம் குறிப்பிட்டார் என்று கருதுகிறேன். அந்த வகையிலே இதுவரையிலும் ஆண்டொன்றுக்கு 40 ஆயிரம் வீடுகள் வீதம் கட்டித்தருவதாக முடிவு எடுத்தோம், 1983-84 முடிய 1,41,202 வீடுகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. அதிலே 1,17,747 வீடுகள் ஆதி திராவிடர்களுக்கு மட்டுமே கட்டப்பட்டவையாகும். 18,711 வீடுகள் பல்வேறு நிலைகளில் கட்டப்பட்டு வருகின்றன. ஆக மொத்தம் 1,59,913 வீடுகள் சென்ற ஆண்டு கணக்குப்படி கட்டப்பட்டன.

இந்த ஆண்டிலேகூட கட்டப்படவேண்டிய வீடுகள் வருகிற ஆண்டிலே 40,087, ஆகவே, ஆண்டிற்கு நாற்பதாயிரம் வீடுகள் என்ற திட்டத்தின் அடிப்படையில் இந்தத் திட்டம் நிறைவேற்றி வைக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. உமாநாத் அவர்கள் ஒரு பிரச்சினையைக் கிளப்பினார்கள். ஆளுநர் உரை விவாதத்தின்போது 20—2—1984 ஆம் நாளன்றும் நிதிநிலை அறிக்கையின் மீதான பொது விவாதத்தின் மீது 12—3—1984 அன்றும் பேசுகின்றபோது குறிப்பிட்டார்கள். வெளிநாடுகளில் வேலைவாய்ப்பு வாரியத்தில் இலஞ்சம் போன்ற ஊழல்கள் நிலவுவதாகக் குறிப்பிட்டார்கள். வெளிநாட்டிலிருந்து ஒருவர் எழுதிய கடிதத்தின் மூலம் வாரியத்தின் ஓட்டுநரும் அவரோடு தொடர்புடைய சிலரும் இலஞ்சம் பெற்றதாகத் தெரியவருகிறது என்று தெரிவித்து அரசு இதுபற்றி விசாரித்து, உண்மையை அறிந்து சட்டப்படி நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென்று தெரிவித்தார்கள். அவர்கள் கொடுத்த கடிதம் மற்றவைகளையெல்லாம் ஆராய்ந்து உரிய 12—3—1984 அன்றே இந்தப் பிரச்சினையை விஜிலென்ஸ் கமிஷனுக்கு விடுவது என்று அரசு முடிவெடுத்திருக்கிறது. அது மட்டுமல்லாமல்



1984 மார்ச் 14] [டாக்டர் இரா. நெடுஞ்செழியன்]

விஜிலன்ஸ் கமிஷன் அறிக்கை வந்தவுடன் அதன் பேரில் சட்டப்படி தக்க நடவடிக்கை எடுக்க அரசு முயற்சிகளை மேற்கொள்ளும். மேலும் விசாரணைக்குக் குந்தகம் ஏற்படாமல் விசாரணை முறைப்படி நடைபெற குறிப்பிட்ட ஓட்டுநரை அந்த வாரியத்திலிருந்து அகற்றி வேறு துறைக்கு மாற்றம் செய்யும்படியாக அதனுடைய நிர்வாக இயக்குநர் கேட்டுக் கொள்ளப்பட்டிருக்கிறார்.

ஏனென்றால் விசாரணை நடத்துகிறபோது அங்கேயே இருந்தால் ஏதாவது இன்புளுவன்ஸ் நடைபெறுமோ என்ற அச்சம் இருக்கும் என்பதற்காக வேறு இடத்திற்கு அவரையும் மாற்ற வேண்டுமென்று உத்தரவிடப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

சோழன் போக்குவரத்துக் கழகம் பற்றி இங்கே குறிப்பிட்டார்கள். சோழன் போக்குவரத்துக் கழக நிர்வாக இயக்குநர் 1983 ஆம் ஆண்டு நவம்பர் திங்களில் திரு. எம். ராஜகோபால் முதுநிலை உதவியாளர் (காசாளர்) கழக பணத்தை கையாடல் செய்ததுபற்றி அரசுக்கு அறிக்கை அனுப்பியிருந்தார். சோழன் போக்குவரத்துக் கழகம் மற்றும் பாண்டியன் போக்குவரத்துக் கழக நிர்வாக இயக்குநர்கள் மற்றும் முதன்மை கணக்கு அலுவலர்கள் அடங்கிய ஒரு குழு கும்பகோணம் சென்று இந்தக் கையாடல் எப்படி நடந்தது, அதற்கு யார் யார் காரணம் ஆனவர்கள் என்று கண்டறியவும் மேற்கொண்டு இத்தவறுகள் ஏற்படா வண்ணம் என்ன என்ன வழிமுறைகள் கைக்கொள்ளலாம் என்பது பற்றியும் அரசுக்கு உடன் பரிந்துரைக்குமாறு கேட்டுக் கொள்ளப்பட்டது. இக்குழு 18—11—1983 அன்று மேலே கூறப்பட்ட கையாடல்பற்றி கும்பகோணத்தில் தீவிர ஆய்வு நடத்தியது. திரு. எம். ராஜகோபால் என்பவரே இந்தக் கையாடலுக்கு முழுப் பொறுப்பாவார் என்று இக்குழு அரசுக்கு அறிக்கை சமர்ப்பித்துள்ளது. 1979 ஆம் ஆண்டு முதல் அக்டோபர் 1983 வரை சுமார் 55 இலட்சம் வரை திரு. எம். ராஜகோபால் கையாடல் செய்திருப்பதாகக் குழு தெரிவித்துள்ளது. திரு. எம். ராஜகோபால் கைது செய்யப்பட்டு 24—11—1983 அன்று வரையறையுடன் கூடிய பிணையில் விடுவிக்கப்பட்டு திருச்சியில் இருக்குமாறு செய்யப்பட்டுள்ளது. இவர் பினாமி பெயரிலும், உறவினர்கள் பெயரிலும் சொத்துக்களையும் கனரா வங்கி மூலம் லாரிகளை வாங்கியிருப்பதாக தெரியவருகிறது. திரு. எம். ராஜகோபாலின் சொத்துக்களையும் அவரது பினாமி சொத்துக்களையும் யாரும் வாங்க வேண்டாம் என்று பொதுமக்களுக்கு பத்திரிகை மூலம் சோழன் போக்குவரத்துக் கழக நிர்வாக இயக்குநர் ஓர் அறிக்கை வெளியிட்டுள்ளார். இதன் தொடர்பாக தங்கள் கடமையைச் சரிவரச் செய்யாததால் கீழ்க்கண்டவர்கள் தற்காலிக வேலை நீக்கம் செய்யப்பட்டனர். திரு. எம். இராஜகோபாலன், காசாளர் திரு. எம். இராஜு, துணை மேலாளர் (கணக்கு), திரு. ஆர். நடராஜன், முதுநிலை கண்காணிப்பாளர் (கணக்கு), திரு. டி.

நீதிவிளங்கன், இளநிலை கண்காணிப்பாளர் (கணக்கு), திரு. இராமச்சந்திரன் எழுத்தர், (காசோலை), திரு. வி. இராமநாதன், முதன்மை கணக்கு அலுவலர் மற்றும் செயலாளர் (பொறுப்பு) ஆகியவர்கள் தற்காலிக வேலை நீக்கம் செய்யப்பட்டனர். தலைமை போலீஸ் அதிகாரிக்கு குற்ற பிரிவில் மேற்படி புகாரை புலனாய்வு செய்யுமாறு அரசு கேட்டுக் கொண்டுள்ளது. மொத்தம் எவ்வளவு பணம் கையாடல் செய்யப் பட்டுள்ளது என்பதை மிகவும் விரைவாகக் கண்டுபிடிக்குமாறு சோழன் போக்குவரத்துக் கழக இயக்குநரை அரசு கேட்டுக் கொண்டுள்ளது. இக்கழகத்தின் வரவு—செலவுக் கணக்குகளை தணிக்கை செய்த தணிக்கையாளர்கள் இது குறித்து ஏதும் கண்டு பிடிக்காத காரணத்தினால் அவர்கள் மீதும் நடவடிக்கை எடுக்க இந்திய பட்டயக் கணக்கர் நிலையம், இன்ஸ்டிட்யூட் ஆப் சார்ட்டர்ட் அக்கவுண்ட்ஸ் ஆப் இந்தியா மற்றும் காம்ப்ட்ரோலர் அன்ட் ஆடிட்டர் ஜெனரல் ஆப் இந்தியா ஆகியோர்கள் கேட்டுக் கொள்ளப்பட்டிருக்கிறார்கள். இதற்கு மேல் முழு விவரங்கள் விசாரணையின் மூலம் வந்ததற்குப் பிறகு தக்க நடவடிக்கை எடுத்து தண்டிக்கப்படுவார்கள்.

[நண்பகல் 12-00]

**திரு. ரா. உமாநாத் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குற்றப் புலனாய்வுத்துறை

Vigilance and Anti-corruption.

என்பது இந்தமாதிரி ஆஸ்பேக்டிலே இன்னும் டீப்பராக போகக் கூடிய ஒரு ஸ்தாபனம். ஆகவே அதற்கு விடுவதில் என்ன ஆட்சேபணை.

Vigilance and Anti-Corruption department

இடத்திலே இந்த விசாரணைப் பொறுப்பை ஒப்படைப்பதிலே என்ன ஆட்சேபணை என்று தான் நான் கோருகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் எம். ஜி. இராமச்சந்திரன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குற்றப்புலனாய்வுத் துறையின் விரிவான அறிக்கை கிடைத்தவுடன் அதற்கு ஏற்ப அந்த விசாரணையும் தொடங்கப்படும்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. இந்தக் குழுவினர் பிரைமாபேசி கேஸ் இருப்பதையும் மற்றதையும் கண்டுபிடித்து விட்டதன் காரணமாக அதற்கு அவசியம் இல்லை என்று கருது கிறோம். அப்படி மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறுவது போன்று அந்த அறிக்கை வந்ததற்குப் பிறகு மேலும் கண்டு பிடிக்கவேண்டிய ஒரு அவசியம் தேவைப்படுமானால் அதைப்பற்றி மாண்புமிகு முதல்வர் சொல்லியபடி நாம் யோசிக்கலாம்.





திட்டச் செலவு திருப்பிக் கொடுக்கப்பட்டது என்று மாண்பு
மிகு உறுப்பினர் திரு. துரைமுருகன் அவர்கள் அந்த ஆடிட்
ரிப்போர்ட்டில் ஒரு பகுதியை எடுத்துச் சொன்னார்கள். ஆகவே
தனித்தனியாக வரும்போது ஒவ்வொரு 'அக்கவுண்டெண்டு
ஜெனரலும்' அதுபற்றி குறிப்புகள் எழுதுவதும் பிறகு அந்த அந்த
துறைகளை எடுத்துக் கொண்டு அவர்களுக்கு பதில் விளக்கம்
தருவதும் மற்றும் பப்ளிக் அக்கவுண்ட்ஸ் கமிட்டி அதற்கு விளக்கம்
கேட்டு ஏன் கூடுதலாக செலவாகியிருக்கிறது ஏன் குறைவாக
செலவாகி இருக்கிறது என்று கேட்டு அதன் அடிப்படையில் அந்தக்
குழு ஏற்றுக் கொண்டு பிறகு அவைக்கு வருவதும்.
அவை பரிசீலனை செய்து முடிவு கட்டுவது என்று இருக்கும்.
ஆனால் ஒவ்வொரு துறையையும் பார்க்கின்றபொழுது அதிலே
இருக்கின்ற நிலைமைகளை அவர்கள் ஆடிட் செய்கின்ற
பொழுது எழுதிக்கொண்டுதான் வருவார்கள்.

ஒட்டுமொத்தமாக மொத்தத்திலே பார்க்கின்றபொழுது
தான் எல்லாவற்றையும் சேர்த்து சிலயிடங்களிலே செலவழிக்
காதபோது நாம் மறுபடியும் அனுமதி பெற்று, செலவழிக்
காத பணத்தைச் செலவழிக்கக் கூடிய ஒன்றுக்கு மறுபடியும்
மாற்றுவோம். மாற்றி, பற்றாக்குறையாக இருப்பதற்குச் செல
வழிப்பதும், கூடுதலாக மிச்சப்படுவதை எடுக்கின்ற அளவிற்கு,
மார்ச் 31 ஆம் தேதி வரையில் எந்த அளவிற்குச் செய்ய முடி
யுமோ செய்து ஒட்டுமொத்தமாகக் கடைசியிலே காண்பிக்கிற
பொழுது, இதில் திட்டத்திற்கு ஒதுக்கப்பட்ட பணம் குறைக்கப்
படவில்லை என்பதும், 408 கோடியே சில்லறை ரூபாய் திட்டத்
திற்கு அனுமதிக்கப்பட்டது; ஆனால் பொதுவாக நாம்
கடைசியிலே கணக்கெடுத்துப் பார்ப்போமேயானால், எல்லா
வகையிலேயும் சேர்த்து 456 கோடியே 46 இலட்சம் ரூபாய்
மொத்தத்திலே நாம் செலவழித்திருக்கிறோம்.

ஒவ்வொரு துறையையும் பார்த்தால் ஓரளவுக்குக் கூடுத
லாகத்தான் இருக்கும். சில துறைகளிலே செலவழிக்க
விடுபட்டிருப்பதை அவர்கள் சுட்டிக்காட்டும்பொழுது, அதை
இன்னொரு துறைக்கு நாம் அவர்களுடைய அனுமதியின்
பேரிலே மாற்றுகிறோம். கடைசியிலே இது பரிசீலனைக்கு
வருகின்றபொழுது அதனுடைய முழு விவரமும் தெரியும். அத
னாலே, இந்தத் திட்டத்திற்கு ஒதுக்கப்பட்ட செலவு எந்த வகை
யிலேயும் குறைக்கப்படவில்லை என்பதும், 408 கோடியே 48
இலட்சம் ரூபாய் திட்டத்திற்கு அனுமதித்திருந்தாலும் கடைசி
யிலே நாம் செலவழித்தது 456 கோடியே 46 இலட்சம் ரூபாய்
என்ற விளக்கத்தையும் குறிப்பிட விரும்புகிறேன்.

[1984 மார்ச் 14

வரை பிரதிவாதியாக்கி வழக்குத் தொடர்ந்து விளையாட்டு அரங்கம் கட்டுவதற்கு தடையுத்தரவு பெறப்பட்டது. இந்த வழக்கு 1982 ஆம் ஆண்டு இறுதியில் தள்ளுபடி செய்யப்பட்டது. இதனிடையே நில நிர்வாக ஆணையர் அவர்களின் ஆலோசனைப் படி, ஐயப்பகோன்வில் கட்டியுள்ள இடத்தின் பரப்பளவு 6000 சதுர அடிகளை மட்டும், ஏற்கனவே விளையாட்டு அரங்கம் கட்டுவதற்கென ஒதுக்கீடு செய்யப்பட்ட நிலப்பரப்பிலிருந்து நீக்கி, எஞ்சியுள்ள நிலப்பரப்பில் விளையாட்டு அரங்கம் நிர்மானம் செய்யலாம் என்று வருவாய்த் துறை, மே 1983-ல் அனுமதி அளித்ததன் அடிப்படையில், இந்நிலத்தை சுற்றி வேலியாக்கும் பொருட்டு திண்டுக்கல் நிர்வாகப் பொறியாளரிடம், தமிழ் நாடு மாநில விளையாட்டு மன்ற நிதியிலிருந்து ரூ. 37,000 மும் மதுரை மாவட்ட விளையாட்டு மன்ற நிதியிலிருந்து ரூ. 7,500-ம் வழங்கப்பட்டுள்ளது. வேலி அமைக்கும் பணியும், நிலத்தை சமப்படுத்தும் பணியும் தொடங்கப்படவுள்ளன. விளையாட்டு அரங்கததிற்கான வரைபடம் மற்றும் மதிப் பீடுகளை திண்டுக்கல் பொதுப் பணித் துறை நிர்வாகப் பொறியாளர் தயாரித்து வருகிறார். இந்த வரை படங்கள் மற்றும் மதிப்பீடுகளை அரசில் பெறப்பட்டவுடன் திண்டுக்கல் விளையாட்டு அரங்க கட்டுமான வேலைக்கான நிர்வாக ஒப்புதல் வழங்குவது குறித்து பரிசிலிக்கப்படும். வேலிக்கான கான்கிரீட் தூண்கள் நடப்படும் வேலை எடுத்துக் கொள்ளப்பட்டு விட்டது.

## இணைப்பு II.

506 (18-ம் பக்கத்திள்ள உடுக்குறியிட்ட வினா என். 253 க்கான விடையைக் காண்க.)

### திருச்சி நகரில் ஜாதியின் பெயரில் உள்ள தெருக்களின் பட்டியல்.

(1) சங்கரம்பிள்ளை சத்திரம் ரோடு, (2) சங்கிலிசோனார் சந்து, (3) பாண்டியம்பிள்ளை சந்து, (4) நரசுப்பிள்ளை சந்து, (5) வசந்தராயப்பிள்ளை சந்து, (6) மகாவித்வான் மீனாட்சி சுந்தரம் பிள்ளைத் தெரு, (7) குருநாதப்பிள்ளைத் தெரு (8) நரசிம்மலு நாயுடுத் தெரு, (9) கோபாலகிருஷ்ணம் பிள்ளைத் தெரு, (10) நடு முத்தழகுப்பிள்ளைத் தெரு, (11) மாப்பிள்ளை நாயக்கன் தெரு, (12) சௌந்தரப்பாண்டியன் பிள்ளைத் தெரு, (13) காசியாப்பிள்ளை சந்து, (14) காசியாப்பிள்ளை சந்து, (15) மல்லிசாகிப் தெரு, (16) முத்தழகுப் பிள்ளைத் தெரு, (17) மாரியப்ப முதலியார் சந்து, (18) சஞ்சீவிராவ் சந்து,



1984 மார்ச் 14]

(19) புகழியபிள்ளைத் தெரு, (20) கிருஷ்ணாபுரம் முகம்மதியத் தெரு, (21) மன்னார் பிள்ளைத் தெரு, (22) ரெங்கசாமி செட்டி யார் தெரு; (23) துலுக்கமேட்டுத் தெரு, (24) மைக்கேல பிள்ளைத் தெரு, (25) சைதா முகமுதுராவுத்தர் ரோடு.

(26) அந்தோணியார் கோவில் சக்கிலியத்,தெரு (27) தேவர் புதுத் தெரு, (28) தென்னூர் பாபு செட்டித் தெரு, (29) பட்டா பிராமப் பிள்ளைத் தெரு, (30) போலீஸ் ரெங்கசாமி நாயுடு தெரு, (31) விஸ்வபரத் தெரு, (32) விஸ்வப்ப நாயக்கன் பேட்டை, (33) காசுக்கார செட்டித் தெரு, (34) ராஜரெத்தினம் பிள்ளைத் தெரு, (35) தேவதானம் பள்ளத் தெரு, (36) முதலி யார் சந்து, (37) சின்ன செட்டித் தெரு, (38) பெரிய செட்டித் தெரு, (39) சின்னக்கம்மாளத் தெரு, (40) பெரியகம்மாளத் தெரு, (41) சொல்லவடுகர் தெரு, (42) சின்ன சௌராஷ்டி ராத் தெரு; (43) பெரிய சௌராஷ்டிராத் தெரு, (44) கிழக்கு சௌராஷ்டிராத் தெரு, (45) இந்து மருத்துவர் தெரு, (46) வடக்கு சௌராஷ்டிராத் தெரு, (47) தெற்கு சௌராஷ்டிராத் தெரு, (48) கள்ளத் தெரு. (49) சொல்ல வடுகர் தெரு, (50) தாராநல்லூர் பள்ளத் தெரு.

(51) உள்ளை மாநகர், (52) சின்ன ஒட்டத் தெரு, (53) வரகநேரி முகமதியர் தெரு, (54) கிழக்கு படையாச்சித் தெரு, (55) படையாச்சித் தெரு, (56) இருதயபுரம் ஒட்டத் தெரு, (57) தர்மநாதபுரம் சக்கிலியத் தெரு, (58) வடமேற்கு யாதவத் தெரு, (59) தென்மேற்கு யாதவத் தெரு, (60) ராஜாப்பேட்டை சக்கிலியர் தெரு, (61) முதலியார் சத்திரம், (62) அலியார் பாளையம், (63) பெரிய மிளகுப்பாறை கள்ளத் தெரு, (64) ஆதிதிராவிடர் தெரு, (65) தெற்கு யாதவத் தெரு (66) நேமத்தான் சேரி, (67) கீழக்கொசத் தெரு, (68) மேலக் கொசத் தெரு, (69) சக்கிலியர் தெரு, (70) யாதவர் தெரு, (71) ரெட்டித் தெரு, (72) பள்ளத் தெரு, (73) கீழப்பள்ளத் தெரு, (74) தெற்கு முத்துராஜாத் தெரு, (75) வண்ணாரப் பேட்டை.

(76) சின்ன சௌராஷ்டிராத் தெரு, (77) வாமடம் பள்ளத் தெரு, (78) தென்னூர் வெள்ளாளத் தெரு, (79) வடக்கு யாதவத் தெரு, (80) தெற்கு யாதவத் தெரு, (81) வடவூர் பள்ளத தெரு, (82) திருத்தாந்தோணி பரத்,தெரு, (83) சின்னச் செட்டித் தெரு, (84) தெலுங்குச் செட்டித் தெரு, (85) கீழ வாணியச் செட்டித் தெரு, (86) வாணியச் செட்டித் தெரு, (87) உறையூர் வெள்ளாளத் தெரு, (88) கீழச் செட்டித் தெரு, (89) செட்டிப்பேட்டைத் தெரு, (90) பெரிய சௌராஷ்டிராத் தெரு, (91) விருப்பாட்சிபுரம் கம்மாளத் தெரு, (92) பெரிய செட்டித் தெரு, (93) வடக்கு முத்துராஜாத் தெரு, (94) பணிக் கர் தெரு, (95) பாண்டமங்கலம் வெள்ளாளத் தெரு, (96)

[டாக்டர் இரா. நெடுஞ்செழியன்] [1984 மார்ச் 14

மற்றும் பல்வேறு பிரச்னைகளையும், மற்றவைகளையும் பற்றியும், தனித்தனியே பிரச்னைகளையும், வேளாண்மைத் துறை, சுகாதாரத் துறை, மற்றவைகளைப் பற்றியும் எல்லாம் எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். அந்தந்த மானியக் கோரிக்கைகள் வருகின்றபொழுது அந்தந்த உரிமை படைத்த பொறுப்புள்ள அமைச்சர்கள் தக்க விளக்கங்களை விரிவாகவும், விளக்கமாகவும் தருவார்கள். பொதுவாக, மேலெழுந்தவாரியாக இருக்கிறன் பொதுத் தன்மையைத்தான் நான் விளக்கிக் காட்ட முடியும் என்றாலும்கூட, மாண்புமிகு உறுப்பினர்கள் இப்படிப்பட்ட கருத்துக்களை எடுத்துச் சொல்வதன் மூலமாகத்தான், எதிர்க் கட்சியிலே இருப்பவர்கள் பல்வேறு குற்றங்களையும், குறைகளையும் எடுத்துச் சொல்வதன் மூலமாகத்தான், நான் அடிக்கடி எடுத்துச் சொல்வதைப்போன்று, அரசு தக்க நடவடிக்கைகளை எடுப்பதற்கும், என்ன நடைபெறுகிறது என்று அரசு புரிந்து கொள்வதற்கும், செய்பவர்கள் அச்சத்தோடு எதிர்காலத்தில் விளங்குவதற்கும் காரணமாய் இருக்கின்ற காரணத்தினால் குற்றம் கூறுவதையோ, குறை சொல்வதையோ எக்காரணம் கொண்டும் நாங்கள் தடுக்கவில்லை.

ஆனால், இல்லாத குற்றத்தைச் சொல்லாதீர்கள் என்பது தான் நான் சொல்ல விரும்புவது, இல்லாத குறைபாடுகளைச் சுமத்தி, அதன் மூலமாகப் பழித்தன்மையை ஏற்படுத்த வேண்டாம் என்பதுதானே தவிர, இருக்கின்ற குற்றங்களை எடுத்துச் சொல்லத்தான் வேண்டும். இங்கே சொல்லாவிட்டால் வேறு எங்கும் சொல்வதற்கு வழியில்லை. இங்கே நீங்கள் சொல்லி நாங்கள் நடவடிக்கை எடுக்கத் தான் வேண்டும். அந்த வகையிலே மாண்புமிகு உறுப்பினர்கள் பலபேரும் பல வகைகளிலே கருத்துக்களை வழங்கியிருப்பதற்காக அத்தனைபேர்களுக்கும் என்னுடைய நன்றியையும் வணக்கத்தையும் நான் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இந்த நிதிநிலை அறிக்கையை உருவாக்குவதற்குக் காரணமாக இருந்த நிதித் துறைச் செயலாளர், மற்றும் பல்வேறு துறைகளைச் சார்ந்த அதிகாரிகள், அலுவலாளர்கள் ஆகிய அத்தனைபேர்களுக்கும் இந்த வாய்ப்பிலே நன்றியையும், வணக்கத்தையும் தெரிவித்து நிறுத்திக் கொள்கிறேன். வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, 15–3–1984 காலை 9–00 மணிக்குப் பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை பிற்பகல் 12-08 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது.



1984 மார்ச் 14]

## 5. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்.

### (அ) சட்டப்படிக்கான விதிகளும் ஆணைகளும்.

121. பொது (காவல்) துறையின் 20-11-1975 ஆம் நாளிட்ட 173 ஆம் எண் அறிவிக்கையில் திருத்தமொன்று செய்வது குறித்து வணிக வரிகள் சமய அறக் கட்டளைகள் துறையின் 5-11-1983 ஆம் நாளிட்ட 1286 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [தமிழ்நாடு 1935 ஆம் ஆண்டு பந்தய வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 20/1935)] 10(4) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது.

122. தமிழ்நாடு 1939 ஆம் ஆண்டு கேளிக்கை வரி விதிகளில் திருத்தமொன்று செய்வது குறித்து வணிகவரிகள் சமய அறக் கட்டளைகள் துறையின் 4-9-1983 ஆம் நாளிட்ட 874 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [தமிழ்நாடு 1939 ஆம் ஆண்டு கேளிக்கை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 10/1939)] 16(4) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது.

### (ஆ) அறிக்கைகள் அறிவிப்புகள், ஏனைய தாள்கள்.

இணைப்பு I.

ஏதுவுமில்லை.

493 (5-ம் பக்கத்திலுள்ள உடுக்குறியிட்ட வினா எண். 307-க்கான விடையைக் காண்க).

திண்டுக்கல் நகரத்தில் நில அளவை எண். 4/1-ல் உள்ள 4 ஏக்கர் 1854 சதுர அடி நிலத்தினை விளையாட்டு அரங்கம் கட்டுவதற்கு வருவாய்த் துறை 1976-ல் ஒதுக்கீடு செய்தது. இந்நிலத்தில் விளையாட்டு அரங்கம் கட்ட முனைந்த சமயத்தில், 1977-ம் ஆண்டில் ஏற்பட்ட வேடசந்தூர் வெள்ளத்தினால் இம்முயற்சியில் தடங்கல் ஏற்பட்டது. இந்த சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி விளையாட்டு அரங்கத்திற்கென ஒதுக்கப்பட்ட நிலத்தில் ஆக்கிரமிப்புகள் தோன்றத் தொடங்கின. அவைகள் அவ்வப்போது அகற்றப்பட்டன என்றாலும் மைதானத்தின் மேல்புறத்தில் உருவாக்கப்பட்ட ஐயப்பன் கோயிலுக்கான ஆக்கிரமிப்பை அகற்ற முடியாத நிலை ஏற்பட்டது. இந்த கோயில் திண்டுக்கல் நகர ஐயப்ப பக்தர்கள் சங்கத்தாரால் உருவாக்கப்பட்டது. மதவழிபாடு எண்ணமுடைய மக்களின் மத உணர்வை புண்படுத்த விரும்பாததால், அம்மாவட்ட ஆட்சியர், சட்ட ரீதியான நடவடிக்கைகளை மேற்கொள்ளவில்லை. எனினும் திண்டுக்கல் நகர ஐயப்ப பக்தர்கள் சார்பில் நீதிமன்றத்தில் மாவட்ட ஆட்சித் தலை

[1984 மார்ச் 14

பாண்டமங்கலம செட்டித் தெரு, (97) பாண்டமங்கலம் முகமதியர் தெரு, (98) பாண்டமங்கலம் வடக்கு வெள்ளாளத், தெரு, (99) பாண்டமங்கலம் தெற்கு வெள்ளாளத் தெரு, (100) பாண்டமங்கலம வெள்ளாளத் தெரு.

(101) பாண்டமங்கலம் சக்கிலியர் தெரு. (102) பாண்டமங்கலம் ஓட்டத் தெரு. (103) புத்தூர் பள்ளத் தெரு, (104) புத்தூர் பரத் தெரு. (105) பெரிய சௌராஷ்டிராத் தெரு, (106) கம்மாளத் தெரு. (107) சின்ன சௌராஷ்டிரத் தெரு, (108) திருத்தாந்தோனி முதலியார் தெரு, (109) திருத்தாந்தோணி வெள்ளாளர் தெரு, (110) உறையூர் பள்ளத் தெரு. (111) கொசமேட்டுத் தெரு, (112) சிந்தாமனி கொசமேட்டுத் தெரு. (113) மேல சிந்தாமணி கொசமேட்டுத் தெரு. (114) சிந்தாமணி செட்டியார் தெரு 1. (115) சிந்தாமணி செட்டியார் தெரு, 2. (116) ராஜாபேட்டை பள்ளத் தெரு, (117) திருத்தாந்தோணி பள்ளத் தெரு, (118) தாராநல்லுர் அக்ரஹாரம் (119) எடத் தெரு, (120) வரகநேரி அக்ரஹாரம், (121) எட தெரு, (122) எடத் தெரு, (123) நடுநெய்யக்கார எடத் தெரு, (124) கிழக்கு நெய்க்கார எடத் தெரு, (125) சர்க்கார் பாளையம் எடத் தெரு, (126) ரயில்வே தோட்டிகள் காலனி, (127) புத்தூர் அக்ரஹாரம், (128) ராமராயர் அக்ரஹாரம், (129) தொன்னுர் காவல்காரத் தெரு, (130) விருப்பாட்சிபுரம் அக்ரஹாரம் (131) காவல்காரத் தெரு, (132) பாண்டமங்கலம் அக்ரஹாரம், (133) நாச்சியார் கோவில் அக்ரஹாரம், (134) மேலசிந்தாமணி அக்ரஹாரம்.

ஆவணக்காப்பக
136229
சென்னை-600 008
D
V211,31 N84